215179
to
215190

2-15179

21979
சென்னை-600 002

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஹு பங்குனி-மீ 19௳ 1937-ஹு ஏப்ரல்-மீ 1௳ | ஸ 13

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

காங்கிரஸ் மந்திரிஸபை கிடையாது.

உறுதிமொழியளிக்க மறுப்பு.

25, 26, 27௳களில் சென்னையில் ஸ்ரீமான் ஸி. ரா. ஆசாரியாரும் கவர்னரும் 3 தடவை ஸந்தித்துப்பேசியதில் ஸ்ரீமான் ஆசாரியார் அ. இ. காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானப்படி உறுதியளித்தால் மந்திரிஸபை அமைக்க இசைவதாகச்சொன்னார். ஆனால் கவர்னர் அவ்வாறு உறுதிமொழியளிக்கச் சட்டப்படி இடமில்லையென்றும், காங்கிரஸ் மந்திரிஸபையுடன் தாம் கூடியவரையில் ஒத்துழைப்பதாக மட்டும் உறுதி கூறுவதாயும், காங்கிரஸ் கேட்கும்மாதிரி விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பதில்லையென்று உறுதிமொழியளிக்க முடியாதென்றும் கூறிவிட்டார். இதனால் சென்னையில் காங்கிரஸ் மந்திரிஸபை ஏற்படாதென்று தெரிகிறது. ஆனால் மீண்டும் புனராலோசனைசெய்ய இடமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. வேறு கக்ஷியாரைக் கொண்டு தற்காலமாக மந்திரிஸபை அமைக்க கவர்னர் உத்தேசித்திருப்பதாயும் தெரிகிறது. பம்பாய் முதலிய விடங்களிலும் இந்த நிலைமையே ஏற்பட்டிருக்கிறது.

ஹிந்தி ஸம்மேளனம்.

சென்னையில் 26௳ முதல் ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனம் நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவில் காந்திஜி தலைமைவகித்தார். ஸம்மேளனத்தில் ஸ்ரீமான் ஜமுனாலால் பஜாஜ் அக்ராஸனாதிபதியாயிருந்தார். ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி ஹிந்திக் கல்விக் கண்காக்ஷியைத் திறந்துவைத்தார். ஸ்ரீமான் புருஷோத்தம் தாஸ் தண்டன் முதலிய பலர் வடஇந்தியாவிலிருந்து சென்னை வந்திருக்கிறார்கள்.

திருவாங்கூர் தர்பார் விநோதங்கள்.

ஆலயப்ரவேச விளம்பரத்தை யொட்டி திருவாங்கூரில் மேல்மேலும் விஷயங்கள் அதிகரிக்கின்றன. இனிமேல் அந்த ராஜ்யத்தில் தாழ்த்தப்பட்டவர் என்ற ஜாதியே கிடையா [illegible] அந்தமாதிரி வியவஹாரமே இருக்கக் கூடாதென்றும், சிலரைப் படிப்புக் குறைவு காரணமாக பிற்போக்கு வகுப்பினர் என்று மட்டும் வியவஹரிக்கப்படுமென்றும் ஒரு புதிய உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்!

திருவாங்கூர் உத்ஸவம்.

தீண்டாதாரே அதிகம் வருகின்றனர்.

திருவனந்தபுரத்தில் ஸ்ரீ பத்மநாபஸ்வாமிக்கு பிரமோத்ஸவம் நடைபெறுகிறது. இதில் பெரும்பாலும் தீண்டாதாரே யாத்ரிகர்களாக வருகிறார்களாம். ஜாதி ஹிந்துக்களின் கூட்டம் குறைந்திருப்பதாகத் தெரிகிறது. மஹாராஜாவே உத்ஸவத்தை நேரில் மேற்பார்வை செய்வாராம்.

கல்கத்தாவில் தடை.

ஏப்ரல் 1௳யன்று காங்கிரஸ்காரர் நடத்த உத்தேசிக்கும் ஹர்த்தாலைப்பற்றிக் கல்கத்தாவில் தடை உத்திரவு போடப்பட்டிருக்கிறது. ஒருவார காலத்திற்கு எவ்விதக்கூட்டமோ, ஊர்வலமோ, கடையடைப்போ ஒன்றும் செய்யக்கூடாதென்று அந்த உத்திரவில் சொல்லப்பட்டிருக்கிறது. காசியிலும் இம்மாதிரி உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பள்ளிக்கூட பஹிஷ்காரம்.

தீண்டாதாரை சேர்த்தது காரணம்.

பம்பாய் மாகாணம் பீரோச் ஜில்லாவைச் சேர்ந்த அட்யார் என்ற கிராமத்தில் இருக்கும் பள்ளிக்கூடத்தில் தீண்டாதார் பிள்ளைகளைச் சேர்த்த காரணமாக ஜாதி ஹிந்துக்கள் அந்தப் பள்ளிக்கூடத்தை பஹிஷ்காரம் செய்துவிட்டார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளை அங்கு அனுப்புவதில்லை. ஜாதி ஹிந்துக்களுக்குச் சொந்தமான மேய்ச்சல் தரைகளில் தீண்டாதாருடைய கால்நடைகளை விடக்கூடாதென்றும் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம். இன்னொரு கிராமத்திலும் தீண்டாதாரை ஜாதி ஹிந்துக்கள் எல்லாவழியிலும் பஹிஷ்கரித்து விட்டார்களாம்.

ஸமஷ்டி கோர்ட்டுக்கு ஜட்ஜ் நியமனம்.

ஜயகருக்குப் பதவி.

புதிதாக ஏற்படப்போகிற ஸமஷ்டி கோர்ட்டுக்கு ஸர். ஸுலைமான் என்பவரும், ஸ்ரீமான் ஜயகரும் ஜட்ஜாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சென்னைவாஸி யொருவருக்கு இது கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.
மேலான T. T. M. A. மிஸ்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

பிராஹ்மண தர்மம்.

(P. R. திருமலை அய்யங்கார்.)

தர்மங்களுக்கும், ஆசாரங்களுக்கும், வேதங்களுக்கும், மந்த்ரங்களுக்கும். மற்றும் உள்ள ஜகத் க்ஷேமகரங்களான எல்லா நற்செய்கைகளுக்கும் நிதிகளாகப்பரம புருஷனால் ஏற்படுத்தப்பட்டவர் பிராஹ்மணர்கள். 'பிராஹ்மணனுடைய சரீரமானது இவ்வுலகத்தில் சுகாநுபவத்துக்கு ஏற்பட்டதல்ல. ச்ரௌத ஸ்மார்த்த கர்மாநுஷ்டானங்களாலும், தபஸ்ஸினாலும் யாகாதி வைதிக கர்மங்களாலும், உபவாஸாதிகளாலும், க்லேசத்திற்கே ஜநித்திருக்கிறது. இவ்வுலகில் மிக்கக்லேசத்துடன் செய்யப்படுகிற கர்மாக்களின் பயனாக மறுமையில் பிராம்மணர்கள் ஸ்வர்க்கம் முதலிய போகஸ்தானங்களையும், உபாஸனை முதலியவற்றின் பயனாக ஸம்ஸாரமார்க்கத்தில் புநராவிருத்தி இல்லாத மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் சுகத்தையும் அடைகிறார்கள். இவர்களுக்கு யாகம் செய்தல், வேதாத்யயனம், தானம் இம்மூன்று கர்மாக்களும் ச்ரேயஸ் ஸாதனங்கள், யாகம் செய்வித்தல், வேதத்தை பிறருக்கு உபதேசித்தல், அநிஷித்தமான த்ரவ்யத்தை பிரதிக்ரஹித்தல், இம்மூன்றும் வ்ருத்திக்கே ஏற்பட்டிருக்கின்றன. மேலும் தினந்தோறும் இவர்களுக்கு அவர்ஜநீயங்களான ஆறுகர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன ஸந்த்யாவந்தனத்துக்கு அங்கமாக பஞ்சபஞ்சோஷ:காலஸ்நானம், காயத்ரீ முதலிய மந்த்ரங்களின் ஜபம், ஔபாஸனம் அல்லது அக்னிஹோத்ரம், தேவதாராதனம், வைச்வதேவம், அதிதிஸத்காரம் ஆகியவைகளே.

களங்கமற்ற முத்தீயையும், எண்காணும் விருத்தி செய்பவரும், ஐந்தென்று சொல்லப்பட்ட உயிர்களை வருத்துகின்ற புலன்களை அடக்கின மேலாரும், நல்லோனாகிய திருமாலினது செந்நிறம் பொருந்திய மணமுள்ள திருநாபிகமலமானது ஈன்ற உலகத்துக்குத் தலைவனாகிய பிரமனையே ஒத்த பரிசுத்தராகிய ஆறுதொழிலாளராகிய வேதியர்களுடைய தெருக்கள் அவ்விடத்தில் அனேகமாக விளங்கும் என்பர் குசேலோபாக்யான ஆசிரியர். ஆகவநீயம், தக்ஷிணாக்னி, காருகபத்தியம் என்பன முத்தீயாகும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. ஆறு தொழில்களாவன, ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன. பிராஹ்மணச்சேரியின் சிறப்பைக் கூறுமிடத்து இந்நூலாசிரியர் அருமையாகிய வேதமுழக்கமும், வினைகளை அழித்தற்குரிய யாகாக்னியின் கண் ஓதப்படுகிற சிறந்த மந்திர முழக்கமும், பெருமை நிறைந்த தேவரைக் கூவி அவிர்ப்பாகங்கொடுக்கிற பெரியமுழக்கமும், அவர்கள் ஏற்றுக் கோடலினுண்டாகிற பேர் மிகு முழக்கமும் அவியையுண்டபிறகு யாக கர்த்தாவுக்கு ஆசிகள் கூறுகின்ற முழக்கமும் ஒன்றுபட்டு கடலினது முழக்கம் மேவிடாவண்ணம் அடக்கிவிடும் என்றும், தர்ப்பையை அறுப்பவரும், சமிதை தேடுவோரும், செழித்தமாவிலையைப் பறிப்போரும், விருப்பத்தோடு சிறந்த பசுக்களின் பஞ்சத்ரவியங்களையும் சேர்ப்போரும், பெருமையுள்ள பவித்திரத்தை முடிவோரும், அரும்புகளையும் மெல்லிய மலர்களையும், நந்தவனத்தை அடைந்து எடுப்போரும், சாஸ்திரங்களை ஆராய்ந்த அழகு மிகுந்த மேலோருக்கு உபசாரம் செய்வோரும் நெருங்க அந்தச் சேரியானது பிரகாசிக்கும் என்றும் கூறினார். மேலும் சரியை செய்பவர் ஒரு பக்கத்திலும், கிரியை செய்பவர் ஒரு பக்கத்திலும், யோகத்தை அனுஷ்டிப்பவர் ஒருபக்கத்திலும் பெரிதாகிய ஞான நிலையில் நிற்பவர்கள் ஒரு பக்கத்திலும், அன்போடு போதிப்பவர்கள் ஒரு பக்கத்திலும் மெய்ப்பொருள்களும் பொய்ப்பொருள்களுமாகிய இரண்டையும் அறிய விசாரிப்பவர்கள் ஒரு பக்கத்திலும் விளங்க அச்சேரி பொலியுமாம்.

பிராஹ்மணர்க்குரிய உத்தம குணங்களாவன:— அடக்கம், பொறை, கருணை, நண்பு அழுக்காரின்மை, தவம் முதலியன. அடக்கமாவது மனமொழி மெய்கள், தீவழியிற்செல்லாதிருத்தல், பொறையாவது ஒருவன் அறியாமையாலேனும், ஒரு காரணத்தாலேனும் தீமை செய்தால், அதைத் தாமும் செய்யாது பொறுத்திருத்தல், கருணையாவது:- எல்லா உயிர்களிடத்துமுள்ள இரக்கம். நண்பாவது சிநேக குணம். அழுக்கறுத்தலாவது, பிறர் செல்வம் கண்டவிடத்துப் பொறாமை. அஃதில்லாதிருத்தல், அழுக்காரின்மை. தவமாவது:- மனம் பொறிகளின் வழியிற் செல்லாது நிற்கும்பொருட்டு விரதங்களால் உணவு குறைத்தலும், கோடைகாலத்தில் வெளியிலிருத்தலும், மாரி பனிகாலங்களில் நீரில் நிற்றலும், முதலியசெயல்களை மேற்கொண்டு அவற்றால் தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களைக் காத்தல்.

சுருதிகளாலும், ஸ்மிருதிகளாலும் விதிக்கப்பட்டிருக்கிற நித்ய, நைமித்திக, காம்ய கர்மாக்களை விஹிதகாலங்களில், பல ஸங்க கர்த்ருத்வ தியாகத்தை முன்னிட்டுப் பகவத் முகோல்லாஸார்த்தமாகக் செய்தால் பிராஹ்மணன் நிச்ரேயஸ் சுகத்தைப் பெறுகிறான். எக்கர்மாவைச் செய்தாலும் அவற்றில் ஸத்ய புத்தியும், சிரத்தையும், இவர்களால் பாராட்டத்தக்கன. தார்மிக ராஜாக்கள் இவர்களை நன்கு கவனித்து வந்ததின் பயனாக இவர்கள் கவலையற்றவர்களாக இருந்துகொண்டு வர்ணாச்ரம தர்மங்களை வழுவாமல் அனுஷ்டித்து வந்ததுடன் வேதாத்யயனம், அத்யாத்மசாஸ்த்ர விசாரம், தர்மவ்யவசாயம், சாமான்ய சாஸ்திர சர்ச்சை இவற்றை ஒழிவற்றுச் செய்து கொண்டு, குலபதிகள்போலிருந்து, சிஷ்யப்ரசிஷ்ய பரம்பரையாக வித்யைகளை உத்தரோத்தரம் தழைக்கச் செய்து பரம சுகிகளாக இருந்துவந்தார்கள். காலமோ கலிகாலம். பிராஹ்மணர்களிடத்து ஏனையோருக்கு நிஷ்காரணமான வைரம் ஏற்பட்டுள்ளது. இத்தருணத்தில் பிராஹ்மணர்கள் தங்கள் கௌரவத்தைச் சந்தியுள்ள வகையில் பாதுகாத்துக்கொண்டு ஒதுங்கிவசிப்பதுதான் நலம். ஆபத்தர்மத்தை ஆச்ரயித்து ஜீவிப்பது இக்காலத்துக்குப் பொருத்தமுடையதே.

"ஒழுக்கம் விழுப்பந்தரலானொழுக்க, முயிரினுமோம்பப்படும்" (ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பினைத் தருதலால் அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும்) என்பர் செந்நாப்போதார். ஒழுக்கமுடையாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஒகப்பட்ட ஒழுக்கத்தினையுடையாதல். ஒருவனிடத்து ஆசாரம் குறைந்தால் அவனது சாதி கெடும். ஆசாரமில்லாதவனுக்கு மேன்மையில்லை. ஆசாரத்தினுயர்வும், அஃதில்லாமையினிழிவும் உண்டாம். ஞானம், அநுட்டானம் ஆகிய இவற்றை நன்றாகவே உடையவனான குருவை அடைந்து அவன் சொற்படிகேட்டு நடந்தால் வரும் நன்மைக்குக் கணக்கில்லை. ஒவ்வொரு பிராஹ்மணனும் தனக்குரிய நெறியில் நின்றொழுகினால் நாடெங்கும் செழிக்கும். நன்மை பலவாம்: தீயதெல்லாம் அழிந்துவிடும்: பகவந்நாமவே சூழ்ந்திருக்கும்: நன்மை [illegible] ஸ்ரீசய: நிச்சலும் [illegible] நெறி நில். நான் பொருள் நாசா: [illegible] பல கல். நெறி தவறேல்: நேர்மையோடிரு. நைச்சியமே நலம். நொய்ய உரையேல். நோன்புகள் ஆற்று. மங்களம் மல்கும்.

முஸ்லீம்கள் ஹர்த்தால் செய்யக்கூடாது.

ஜின்னாவின் உபதேசம்.

ஜனாப்ஜின்னா வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், ஏப்ரல் 1உ யன்று காங்கிரஸ்காரர்கள் புதிய அரசியலை எதிர்த்துச் செய்யப்போகும் ஹர்த்தாலில் மஹம்மதியர்கள் கலந்துகொள்ளக்கூடாதென்றும் அரசியல் சட்டத்தை உபயோகித்துக்கொள்ளுவதே முஸ்லீம்களின் தீர்மானமென்றும், ஆகையால் அன்று நடக்கும் கடையடைப்பு முதலிய ஆர்ப்பாட்டங்களில் மஹம்மதியர்கள் ஸம்பந்தப்படக்கூடாதென்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

கும்பகோணம் முனிஸிபாலிடி.

பெற்றோர்களின் வேண்டுகோள்.

முனிஸிபல் பாடசாலை மாணவர்கள் பெரும்பாலும் 7 வயதுள்ளவர்களே. நகரில் வெயில் கடுமையாயிருக்கிறது. ஹைஸ்கூல்கள் விடுமுறை அளிக்கப்படுகின்றது. ஆகவே நாது எலிமெண்டிரி பள்ளிக்கூடச் சிறுவர்க்குபடிக்கும் நேரம்10-30 மணிக்குச் சென்று 1-0 மணிக்குதிரும்பி 2 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றது 1 மணிக்கு வெயிலில் வாடி திரும்பி வருவதால் மிகவும் துன்பமடைகின்றார்கள். இத்துன்பத்தைநிவர்த்திசெய்ய கோடைகால வழக்கப்படி ஏப்ரல்-மீ 1உ முதல் காலை 8 மணிக்குப் பள்ளிக்கூடங்களை நடத்தும்படி செய்து குழந்தைகளின் நன்மைகளை கவனிக்கும்படி முனிஸிபல் கமிஷனர் அவர்களை மேலக்காவேரி பெற்றோர்கள் வேண்டிக்கொண்டிருக்கிறார்களென்று அறிகிறேன்.

ஒரு நிருபர்.

புதுச்சேரி.

உபன்யாஸம். இவ்வூர் வரதராஜப்பெருமாள் ஸந்நிதியில், நிகழும் மார்ச்சு-மீ 24, 25 தேதிகளில் இரவு 8-மணிமுதல் 11½மணி வரையில் காஞ்சிபுரம் வித்வான் ஸ்ரீ-உ P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளால் முறையே, பக்தியின் தத்வம், தொண்டர்களின் பெருமை என்கிற இரண்டு உபந்யாஸங்கள் நடத்தப்பட்டன. சுமார் 1000 பக்தர்கள் கூடியிருந்து கேட்டு ச்ரவணானந்தமடைந்தனர். இத்தகைய உபந்யாஸங்கள் இங்கு அடிக்கடி நடைபெறுமாறு ஸ்ரீமான் R. A. அருணாசல ஐயர், நன்னைய பாகவதர், ஜெயராமு செட்டியார் முதலான பிரமுகர்கள் முயற்சிசெய்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது.

ஒரு நிருபர்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு, திருகுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்தரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprietor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(25—3—37 தொடர்ச்சி.)

1. அம்பிகையினுடைய ஸ்வரூபமானது இம்மாதிரிதானிருக்கிறதென்பதாக ஒருவராலும் சொல்லமுடியாது என்று இங்கு சொல்லப்பட்டது. இதேமாதிரி 'ஏவமித்யாகமாபோத்யா,' 'ஏதத் தத் இத்யனிர்தேச்யா' என்பதாக ஸ்ரீலலிதாத்ரிசதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

29. ஸ்மய்மான முகம் காஞ்சீ—
மயமானம் கமபி தேவதாபேதம் |
தயமானம் வீக்ஷ்ய முஹுர்
வயம் ஆனந்தாம்ருதாம்புதௌ மக்னா: ||

ஸ்மயமானமுகம் - சிரித்த முகத்தையுடையதும், காஞ்சீமயமானம் - காஞ்சீபுரியை வியாபித்து விளங்குவதும், தயமானம்-கருணையோடுகூடியதுமான, கமபி தேவதாபேதம் - ஒரு தேவதையை, முஹுர் வீக்ஷ்ய - அடிக்கடி பார்த்து, வயம் - நாம், ஆனந்தாம்ருதாம்புதௌ - ஆனந்தமென்ற அம்ருத ஸமுத்ரத்தில், மக்னா: - மூழ்கியிருக்கிறோம்.

30. குதுகஜுஷி காஞ்சிதேசே
குமுத தபோராசி பாக சேகரிதே |
குருதே ஜனோ மனோயம்
குலகிரி பரிவ்ருட குலைக மணிதீபே ||

காஞ்சிதேசே - காஞ்சீபுரியில், குதுகஜுஷி - உத்ஸாஹத்தோடு வஸிப்பதும், குமுத - நீலோத்பலங்களின், தபோராசி பாக — தபஸ்ஸின் பரிபாகமான சந்த்ரனை, சேகரிதே - சிரோ பூஷணமாய் உடையதும், குலகிரி பரிவ்ருட - குலபர்வதங்களுக்குத் தலைவனான ஹிமவானுடைய, குலைகமணி தீபே - குலத்திற்கு ஒரே ஒரு (முக்யமான) ரத்ன தீபமாய் விளங்கும் ஒரு ரூபத்தில், அயம் ஜன: - இந்த ஜனமானவன், மன: குருதே - மனதைச் செலுத்துகிறான்.

1. அதாவது, தான் அவ்விதமாக த்யானம் செய்வதை 'அயம் ஜன: மன: குருதே' என்று சொல்லுகிறார்.

2. அம்பிகையானவள் தன் பிதாவான ஹிமவானுடைய குலத்திற்கு ரத்ன தீபமாய், குன்றுவிளக்காய், இருப்பதை நமது ஆசாரியாளும் 'ருபாதிகா சிகரி பூபாலவம்சமணிதீபாயிதா பகவதி' என்பதாக 'அம்பாஷ்டக'த்தில் வர்ணித்திருக்கிறார்கள்.

31. விசேஷமஹி காஞ்சிபுரே
விபுல ஸ்தனகலச கரிம பாவரிதம் |
வித்ரும ஸஹசர தேஹம்
விப்ரம ஸமவாய ஸார ஸன்னாஹம் ||

விபுல ஸ்தனபார கரிம - பருத்ததான ஸ்தனபாரங்களின் கனத்தினால், பாவரிதம் - மிகவும் குனிந்ததாயும், வித்ரும ஸஹசர தேஹம் - பவழம் போன்றதான சரீரத்தையுடையதும், விப்ரம ஸமவாய ஸார ஸன்னாஹம் - காமகேளிகளின் சேர்க்கையின் ஸாரமாகிற (யுக்த) கோலத்தோடுகூடியதுமான ஒரு மூர்த்தியை, காஞ்சிபுரே - காஞ்சீபுரியில், விசேஷமஹி - பார்க்கிறோம்.

32. குருவிந்த கோத்ர காத்ரம்
கூலசரம் கமபி நௌமி கம்பாயா: |
கூலங்கஷ குசகும்பம்
குஸுமாயுத வீர்ய ஸார ஸம்ரம்பம் ||

குருவிந்த கோத்ர காத்ரம் - சிகப்பு ரத்னத்தினுண்டானது போன்ற சரீரத்தையுடையதும், கம்பாயா: கூலசரம் - கம்பாநதியின் கரையில் ஸஞ்சரிப்பதும், கூலங்கஷ குசகும்பம் - (ரவிக்கையாகிற) கரையைக் கிழித்தான ஸ்தனங்களையுடையதும், குஸுமாயுத - மன்மதனுடைய, வீர்ய ஸார ஸம்ரம்பம் - வீர்யத்தின் ஸாரமாகிய வேகத்தோடு கூடியதுமான, கமபி - ஒரு (வர்ணிக்க முடியாத) மூர்த்தியை, நௌமி - நமஸ்கரிக்கிறேன்.

1. அம்பாளுடைய வக்ஷ: ப்ரதேசத்தை இதேமாதிரி ஆசாரியாளும்,

'குசௌ ஸத்ய: ஸ்வித்யத் தடகடித கூர்பாஸ பிதுரௌ
கஷந்தௌ தோர்மூலே கனக கலசாபௌ கலயதா |

என்பதாக 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

இவ்விதம் ஸ்தனங்களை வர்ணிப்பதானது அம்பாளுடைய ஸௌந்தர்யத்தைக்காட்டுவது தவிர, ஜனன்மாதாவான அம்பாளுடைய மஹோத்க்ருஷ்டமான மாத்ருத்வத்தைக் காட்டுவதற்காக இம்மாதிரி அடிக்கடி சொல்லப்படுகிறது.

33. குட்மலித குச கிசோரை:
குர்வாணை: காஞ்சிதேச ஸௌஹார்தம் |
குங்கும சோணைர் நிசிதம்
குசல பதம் சம்புஸுக்ருத ஸம்பாரை: ||

குட்மலித குச கிசோரை: - கொஞ்சம் மலர்ந்ததுபோன்ற இளம் ஸ்தனங்களையுடையதும், காஞ்சிதேச - காஞ்சிதேசத்தில், ஸௌஹார்தம் குர்வாணை: - பற்றுதலை செய்வதும் (உடையதும்), குங்குமசோணை:- குங்குமப் பூவைப்போல் (அல்லது, குங்குமத்தைப் போல்) சிகப்புநிறமுடையதும், சம்பு ஸுக்ருத ஸம்பாரை: - பரமசிவனுடைய ஸுக்ருதங்களின் சேர்க்கையாயிருப்பதுமான ஒரு மூர்த்தியால், குசல பதம் - (பக்தர்களுடைய) க்ஷேமமார்க்கமானது, நிசிதம் - போடப்பட்டிருக்கிறது (ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.)

34. அங்கித கசேன கேனசித்
அந்தம்கரணௌஷதேன கமலானாம் |
அந்த: புரேண சம்போ:
அலங்க்ரியா காபி கல்ப்யதே காஞ்ச்யாம் ||

கமலானாம் - தாமரை புஷ்பங்களுக்கு, கேனசித் - ஏதோ ஒரு, அந்தம்கரணௌஷதேன - இருட்டைச் செய்யும் மருந்தினால் (அதாவது, அவற்றை மூடச்செய்யும் சந்த்ரனால்), அங்கித கசேன - அலங்கரிக்கப்பட்ட கேசங்களையுடையவளும், சம்போ:- பரமசிவனுடைய, அந்த:புரேண - பத்னியால், காஞ்ச்யாம் - காஞ்சீபுரியில் (காஞ்சீபுரிக்கு), காபி அலங்க்ரியா - ஒரு (வர்ணனையிலடங்காத) அழகானது, கல்ப்யதே - ஏற்படுத்தப்படுகிறது.

35. ஊரீகரோமி ஸந்ததம்
ஊஷ்மல பாலேன லாலிதம் பும்ஸா |
உபகம்பம் உசிதகேலனம்
உர்வீதர வம்ச ஸம்பத் உன்மேஷம் ||

ஊஷ்மல பாலேன - சுடுகிற நெற்றியையுடைய (அதாவது, அக்னியை நேத்ரமாக உடைய), பும்ஸா - புருஷனால் (அதாவது பரமசிவனால்), லாலிதம் - சீராட்டப்படுகிறதும், உபகம்பம் - கம்பா நதியின் ஸமீபத்தில், உசிதகேலனம் - விளையாடுவதில் ப்ரியத்தோடு (அல்லது, பழக்கத்தோடு) கூடியதும், உர்வீதர வம்ச - ஹிமவானுடைய வம்சத்தின், ஸம்பத் உன்மேஷம் - ஸம்பத்தை விளங்கச் செய்வதுமான ஒரு மூர்த்தியை, ஸந்ததம் - எப்போதும், ஊரீகரோமி - த்யானித்துக்கொண்டிருக்கிறேன்.

36. அங்குரித ஸ்தனகோரகம்
அங்காலங்காரம் ஏக சூதபதே: |
ஆலோகேமஹி கோமளம்
ஆகம ஸம்லாப ஸார யாதார்த்யம் ||

அங்குரித ஸ்தனகோரகம் - மொட்டுக்கள் போன்ற ஸ்தனங்களையுடையதும், கோமளம் - ம்ருதுவானதும், ஆகம ஸம்லாப - வேதவாக்குகளின், ஸார யாதார்த்யம் - ஸாரமான தாத்பர்யமாய் இருப்பதும், ஏக சூதபதே: - ஏகாம்பரநாதருடைய, அங்காலங்காரம் - மடியின் அலங்காரமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியை, ஆலோகேமஹி - பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

37. புஞ்ஜித கருணம் உதஞ்சித
சிஞ்ஜித மணி காஞ்சி கிமபி காஞ்சிபுரே |
மஞ்ஜரித ம்ருதுள ஹாஸம்
பிஞ்ஜர தனுருசி பினாகி மூலதனம் ||

புஞ்ஜித கருணம் - கருணை நிறைந்ததும், உதஞ்சித சிஞ்ஜித மணிகாஞ்சி - ரத்னமயமான ஒட்டியாணத்தின் சலங்கைகளின் சப்தத்தை வெளிப்படுத்துவதும், மஞ்ஜரித ம்ருதுள ஹாஸம் - மந்த ஹாஸம் நிறைந்ததும், பிஞ்ஜரதனுருசி - பொன்போன்ற தேஹகாந்தியுடையதும், பினாகி மூலதனம் - பரமசிவனுக்கு மூலதனமாயிருப்பதுமான, கிமபி - ஏதோ ஒரு மூர்த்தியானது, காஞ்சிபுரே - காஞ்சிபுரியில் (விளங்குகிறது).

[குறிப்பு:—மூலத்திலிருக்கும் ஒவ்வொரு பதத்திற்கும் தனித் தனியாக அர்த்தம் சொல்லி அந்த பதத்தினால் ச்லோகத்தில் என்ன அர்த்தம் ஏற்படுகிறது என்று காட்டுவதாயிருந்தால் ஒவ்வொரு ச்லோகத்திற்கும் விசாலமான இடம் வேண்டும். ஆகவே இந்த ஸ்தோத்ரத்தின் மொழி பெயர்ப்பில் பதங்களின் சேர்க்கைக்கு ஏதுவாமான பாவமோ அதுமட்டும் காட்டப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.]

38. லோல ஹ்ருதயோஸ்மி சம்போ:
லோசன யுகளேன லேஹ்யமானாயாம் |
லாலித பரமசிவாயாம்
லாவண்யாம்ருத தரங்க மாலாயாம் ||

சம்போ: - பரமசிவனுடைய, லோசனயுகளேன - இரு கண்களாலும், லேஹ்யமானாயாம்-ஆசையோடு அனுபவிக்கப்படுவதும், லாலித பரமசிவாயாம் - பரமசிவனை மோஹிக்கச் செய்ததும், லாவண்யாம்ருத தரங்க மாலாயாம் - ஸௌந்தர்யமாகிற அம்ருத ஸமுத்ரத்தின் அலைகளின் கூட்டம்போலிருப்பதுமான ஒரு மூர்த்தியினிடத்தில், லோலஹ்ருதயோஸ்மி - சஞ்சலமுடைய (அல்லது, ஆசையோடு கூடிய) மனதோடிருக்கிறேன்.

ஆலயப்பிரவேச சர்ச்சை

புதுக்கோட்டையில் நடந்த விபரம்.

வைதிகவர்த்தினீ ஸபை.

இச்சமஸ்தானத்திலுள்ள சில முக்கிய அதிகாரிகளுக்கும், இன்னும் மற்றவர்களுக்கும் இவ்விஷயமாக சாஸ்திரீயவிசாரம் ஒன்று ஏற்பட வேண்டுமென்ற அவா இருந்தமையால், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இச்சபையின் ஆதரவில் இந்த சர்ச்சை ஏற்படுத்தப்பட்டது. இவ்விஷயத்தை மூன்று விஷயங்களாகப் பிரித்துக்கொண்டு, இம்மாதம் 19-உயன்று "ஜாதிதத்வநிரூபணம்," 20உயன்று "ஆலய மஹிமை," 21உயன்று "அர்ச்சை ஸேவிக்கும் பிரகாரம்" என்ற மூன்று உபன்யாஸங்கள் செய்யப்பட்டன. ஷை விஷயங்களை வாகூர் பிரும்மஸ்ரீ பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதிபூஷண V. S. வெங்கட்ராம சாஸ்திரிகள் அவர்கள் பற்பல ச்ருதி, ஸ்மிருதி, ஆகமம், இதிஹாஸம், புராணம், யுக்தி, பிரமாணங்களுடன் வெகு அழகாக உபந்யஸித்தார்கள். இவ்வுபந்யாசங்களுக்கு முக்யமாக இச்சமஸ்தான உதவி அட்மினிஸ்ட்ரேடர் மகா-ள-ஸ்ரீ ராவ்ஸாஹேப் R. கிருஷ்ணமாச்சாரியார் B.A. அவர்களும், இன்னும் பல உத்யோக ப்ரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

இதற்காக பிரசுரம் செய்யப்பட்ட ஹாண்டு பிரசுரத்தில், இந்த சர்ச்சையில் ஆலயப்ரவேச சம்பந்தமான ஆக்ஷேப வாதங்களையும்கேட்டு பைசல் செய்யவேண்டுமென்று கண்டிருந்தபோதிலும், அதில் கண்டபடி ஆக்ஷேபணை செய்ய யாரும் முன் வரவில்லை.

19-3-37உ நடைபெற்ற "ஜாதிதத்வநிரூபணம்" என்ற உபந்யாஸத்தின் சாராம்சம் அடியில் வருமாறு:—

பாரதகண்டத்தில் தொன்றுதொட்டு வசித்துவரும் ஆஸ்திகர்களான நமக்கு வேதமே மூலப்ரமாணம். ஜகத்ஸிருஷ்டிகாலத்திலிருந்து சாதுர்வர்ண்யம் முதலிய 18-ஜாதிகளும் தொடர்ந்து இருந்தே வருகின்றன. ச்ருதிகளில் ஜகத்ச்ருஷ்டியைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் இடங்களில் ஆகாயம், வாயு, அக்னி முதலிய பூதங்களைப் பற்றி முதலில் பிரஸ்தாபித்து, பஞ்சீகரணத்தை ஸவிஸ்தாரம் வர்ணித்து ஸ்தாவர ஜங்கமாத்மகமாக ஸகலமும் ஸிருஷ்டிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறதோ, அதேவிதமாக பிராம்மணாதி நான்கு ஜாதிகளும் சுத்தமாயும், அநுலோமாதி பதினான்கு சங்கர ஜாதிகளும் உண்டாக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்று வரை வேதத்தை நம்பி சிரத்தையுடன் சகல கர்மங்களையும் அநுஷ்டித்து வருகிறோம். வேதப்ராமாண்யம் ஸம்சயிக்கப்பட இடமில்லை. புருஷமதி வேறு. மூலமந்திரத்தை அபேக்ஷிக்கும் அதீந்திரிய விஷயத்தில் நிரபேக்ஷயாக இருப்பதால் தான் அர்த்தத்தில் வேதம் ஸாக்ஷாத்தாகவே பிரமாணமாகிறது. ஸாங்க்யாதி மதங்களில் புருஷார்த்த விஷயமான மோக்ஷத்தில் அபிப்ராய பேதம் சொல்லிய போதிலும், வைதிக மதரக்ஷண நிமித்தமே யுக்தி அநுமானாதிகளுக்கு ப்ராமாண்யத்தை கொடுத்ததுபோல் பாவனை செய்தபோதிலும் ஜாதிவிஷயத்தை ஒப்புக்கொண்டேயிருக்கிறார்கள். ஜாதி நிர்ணயத்திற்குப் பிறகு ஜாதி தர்மங்கள், ஆச்ரம தர்மங்கள், கர்மானுஷ்டானங்கள், வகையரா விவரமாகச் சொல்லப்பட்டன. 18-ஜாதிகளும் உண்டென்பதை நமது சுருதிகளில் சாந்தோக்யம், பிருஹதாரண்யகம், தைத்திரீயம், முதலியவைகளில் சொல்லப்பட்டன. ஸிருஷ்டி அனாதியானபடியால் ஜாதியும் அனாதியாம். ஜாதிபேதங்கள் இல்லாத காலமே கிடையாது. எப்பொழுதும் ஸ்திரீ புருஷ வ்யக்தி உண்டாகிறதோ, அப்பொழுதே பிராம்மணாதி வர்ணபேதங்களும் ஏற்படுகின்றன. ஜாதி என்பது ஜன்மாவினாலேதான், கர்மாவினாலே இல்லை என்பது சுருதிகள், சூதஸம்ஹிதை, மன்வாதி ஸ்மிருதிகளிலும் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கப்பட்டிருக்கிறது. தகப்பன் ஐவேஜிக்கு புத்திரன் எப்படி பிறப்புரிமை கொண்டாடுகிறானோ, அதேவிதம் பிறப்பாலேயே ஜாதி ஏற்படுகிறது. கர்மாவலே ஜாதி ஏற்படுகிறதென்றால், இது நிலைக்காது. ஒருவன் சில காலம் க்ஷத்ரியகர்மா, சில காலம் வைச்யகர்மா, செய்கிறான் என்றால், அந்த காலத்தில் ஜாதி மாறிக்கொண்டே வந்தால், ஜகத் வ்யவஹாரங்கள் அசந்தர்ப்பமாகவும், குழப்பமாகவும் முடிய நேரிடும். பகவத்கீதையில் சாதுர்வர்ண்யம் என்றவிடத்தில் எல்லா ஜாதிகளையுமே குறிக்கிறார். கீதையிலேயே சுவபாக சப்தத்தாலே சண்டாளனைக்குறித்திருக்கிறது. சிலர் சண்டாள ஜாதியே கிடையாது என்று சொல்வது சுருதியை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டு பேசுகிறவர்களல்ல. தைத்திரீயம், சாந்தோக்யம், ஜாபாலம், பிருஹதாரண்யகம் முதலான இடங்களில் சண்டாள சப்தங்கள் பிரயோகிக்கப்பட்டும், பாப ஜென்மா என்றும் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. பாஷ்யக்காரர்கள் இதை விஸ்தாரமாக எடுத்து நிரூபித்திருக்கிறார்கள். கலியில் பிரமாணமானது பாராசர ஸ்மிருதி, கலியில் பாபத்தின் அதிகத்தால் அனேக கர்மாக்களை விலக்கினார்கள். ஆனால் சண்டாளஸ் சம்பந்தமான தோஷங்கள் ஏற்படாதென்று சொல்லி விலக்கவில்லை. வியவஹார தசையில பஞ்சமன் மற்ற ஜாதிகளுடன் சமமாகக்கலந்துகொள்ளலாமென்று சொல்லப்படவில்லை. இதைக்கொண்டு நாம் த்வேஷிக்கவில்லை. இதுவரை ஆதரவுடன் ரக்ஷித்திருக்கிறோம். அவர்களும் விசுவாஸமாக இருந்துவந்திருக்கிறார்கள். சமீபகாலத்தில் சிலருடைய விருப்பத்தகாத பிரசாரத்தாலேயே பிராம்மணாதிகள் பஞ்சமர்களைத் தாழ்த்திவிட்டதாக இந்த வியவகாரங்கள் உண்டாகியிருக்கின்றன.

சிலர் ஆதியில் பிராம்மணாதி ஜாதிகளில்லை என்றும், இவர்கள் தான் இந்நாட்டவர்களென்றும், இவர்களுக்கு ஆதித்ராவிடர் என்றும் பெயரையும் கொடுத்தார்கள். இப்பொழுது அதையும் விட்டு 'ஹரிஜன்' என்று ஒரு புதிய நாமகரணம் செய்யப்பட்டிருக்கிறது. இதெல்லாம் அர்த்தமில்லாத வீண் வார்த்தை. ராமாயணாதி கிரந்தங்களில் தண்டகாரண்யத்தில் அகஸ்த்யாச்ரமத்தையும், ஆயிரக்கணக்கான ரிஷிகளையும் கூறின வால்மீகிக்கு இந்த ஆதித்ராவிடர் காணப்படவில்லைபோலும்.

சகல ஜாதிகளுக்கும் தொழில்கள் விஸ்தாரமாக கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஜாதிகள் சாங்கர்யம் கூடாதென்று பகவானேபயப்பட்டு வர்ணாச்ரம வியவஸ்தைகளை மாற்றமுடியவில்லை. பகவத் அம்சபூதரான வ்யாஸாசார்யாளும், ஜகத் ச்ருஷ்ட்யாதி வியாபாரங்களில் முக்தனுக்கே சட்டதிட்டங்களை மாற்ற அதிகாரம் கிடையாது என்று சூத்திரத்தில் சொல்லியிருக்கிறார். அல்ப ஆயுஸ், அல்ப சக்தி, அல்ப வீர்யம், அல்ப வித்யை முதலானவைகளோடுகூடிய நாம சாஸ்த்ரங்களை மாற்ற யத்தனிப்பது? காலவேகத்தினால் போய்விடும் என்று சொல்வதைக்கொண்டு நாம் பயப்படக்கூடாது. காலம் அநாதி. இதுவரை எவ்வளவோ மஹாப்ரளயங்களும், மஹாசிருஷ்டிகளும், ஆகியிருக்கின்றன. நம்முடைய சாஸ்திரக்காரர்கள் ப்ரதிகல்பங்களிலும், ஜகத்வியாபாரங்களான ஸ்ருஷ்ட்யாதிகள், தர்மங்கள், முதலானவை பூர்வம் ஏற்பட்டதுபோலவே யுண்டாகியிருக்கின்றன. காலவேகத்தால் தர்மம் அதர்மமாகவோ, அதர்மம் தர்மமாகவோ மாறமுடியாது. வைதிக மதத்தில் பிறந்த நாம் நம்முடைய பிரமாணமான வேத சாஸ்திரங்களை உணர்ந்து, அவைகளின்படி முடிந்தவரை நடந்து, நாமும் க்ஷேமத்தையடைந்து, ஸர்வலோகமும் க்ஷேமத்தை அடையவேண்டும் என்று ஸர்வேச்வரனைப் பிரார்த்திக்கிறோம்.

ஜி. மலையப்பசாஸ்திரிகள்,

(தொடரும்)

ஸநாதனிகளின் தீவிரப் பிரசாரம்.

குடந்தையில் யோஜனை.

ஆங்காங்கு மீட்டிங்குகளையும் மாநாடுகளையும்கூட்டி பேபர்தீர்மானங்கள் மாத்திரம் நிறைவேற்றப்படுகிறதே ஒழிய உண்மையான பிரசாரம் பிறகு நடைபெறுவதில்லை என்பதில் கவலைகொண்டவரும் ஸநாதன தர்மத்தை மேலோங்கி வளரச்செய்வதில் கங்கண பத்தருமான ஸ்ரீமான் தேசபூஷணம் ஆர். கே பிரஸன்ன வெங்கடேச ராவ் அவர்கள் சுயகலத்தையும் அசௌகரியத்தையும் சற்றேனும் கருதாது 28—3—1937 பானு வாரம் ஸ்ரீரங்கத்திலிருந்து நேராக கும்பகோணத்திற்குத் தமது மோட்டார்காரில் வந்து நமது நகர் ஸநாதனிகளில் சில முக்கியஸ்தர்களைக்கண்டு சர்ச்சை செய்தார். இதில் கலந்துகொண்டவர்களில் மகாமஹோபாத்தியாய ரா. வி. கிருஷ்ணமாசாரியார், தக்ஷிண ஹோத்திரம் நாத தேசிகாசாரியார், கோபாலதேசிகாசாரியார் ஆரியதர்மம் பத்திரிகை ஆசிரியர், பாகவத ரங்கனாதாசாரியார் மாத்வமித்திரன் பத்திரிகை ஆசிரியர், எம். ராமராவ், மாத்வ கலேஜானச் சங்க காரியதரிசி ஆவார்கள். சுமார் 2 மணிநேரம் ஆலோசனை நடந்தது. ஸ்ரீமான் ராயவர்களின் விஸ்தாரமான பிரச்னைகளுக்குப் பல வழிகள் தேடப்பட்டன. ஸ்ரீமான் கோபால தேசிகாசாரியார் அவர்கள் நமதுநகரில் கூடிய சீக்கிரம் பிராம்மண மகாசபையின் மாநாடொன்று கூட்டப்பட்டு பிரசாரகர்களைத் தேர்தெடுத்து அவர்களில் இரண்டு பிரிவினராப்பிரித்துத் தகுந்த பிரசாரவேலைகளை ஏற்படுத்த முயற்சிகள் எடுத்து வரப்படுகின்றனவென்றும் அப்போது ராயவர்களுக்கும் தெரிவித்து அவருடைய உதவியையும்நாடி உண்மையான பிரசாரம் செய்யப்படும் என்றும் கூறினர். இவ்விஷயத்தில் ராயவர்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த பக்தியையும் முயற்சியையும் அனைவரும் போற்றினார்கள். மேலும் சமீபத்தில் சென்னையில் நடந்த ஸநாதன தர்ம மகாநாட்டில் நடந்த தீர்மானங்களையும் மிக அழகாக எழுதப்பட்டிருக்கும் ஸ்ரீமான் என். நடேசய்யர் அவர்களின் அக்கிராஸனப் பிரசங்கத்தையும் ஸ்ரீமான் ராயவர்கள் தமது சொந்தசெலவில் தமிழிலும் இங்கிலீஷிலும் ஸ்ரீமத் அனந்த பத்மநாப ஸ்வாமியின் அழகிய போட்டோபடத்துடன் பதிப்பித்து எல்லோருக்கும் இனாமாக வழங்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். இப்பிரதிகள் வேண்டுவோர் ஸ்ரீமான் பாகவத ரங்கநாதாசாரியார், மாத்வமித்திரன் பத்திராதிபர் கும்பகோணம் என்ற விலாசத்துக்கு எழுதிக்கொண்டு இனாமாகப்பெறலாம் என்று எம். ராமராவ் எழுதுகிறார்.

"முக்தி மார்க்கானு சிந்தனம்"

[ஸமீபகாலத்தில் ஸித்தி யடைந்த ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் எழுதப்பெற்றது. காபிகள் கிடைக்குமிடம்— Mr. R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், அட்வகேட், திருநெல்வேலி, அல்லது மானேஜர், மெட்ராஸ் லா ஜர்னல் பிரஸ், மைலாப்பூர். விலை ரூ 2—0—0]

இக்கிரந்தமானது தக்ஷிண தேசத்தில் திருநெல்வேலியில் வசித்துவந்தவரும் ஆஸ்திக தர்மபிரசாரகரும்நியாயவாதியும் பூர்வாசிரமத்தில் ராமசந்திரய்யர் என்று பெயர் கொண்டு ஸர்வஜனபிரஸித்தராயுமிருந்து பிறகு பூர்வ புண்ணியவசத்தாலும் பரபக்திவைராக்யத்தாலும் ஸந்யாஸத்திலாசைக்கொண்டு சிருங்கேரி சென்று லோககுருவான ந்ருஸிம்மபாரதீ ஸ்வாமிகள் அவர்கள் மூலமாய் ஸ்ரீ சாரதாம்பிகையின் ஆக்ஞானுஸாரமாக அவ்விடத்தில் ஒரு கர்மவாஸமிருந்து பிறகு ஸந்யாஸத்தை யடைந்து ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ என்று தீக்ஷாநாமம் வகித்தவரான ஒரு மகானால் அவருடைய ஆத்மவிசாரத்தாலுண்டான நித்தியாநந்த அகண்ட ஸ்வரூபமான ஆத்மானுபவத்தைப்பற்றி லோக க்ஷேமார்த்தமாக எழுதப்பட்டது. இம்மகான் ஏற்கனவே சிஷ்யஜன வேண்டுகோளின்படி தமிழிலும் இங்கிலீஷிலும் அநேக கிரந்தங்களை இயற்றியதுடன் இன்னும் பலருடைய வேண்டுகோளின்படி அநேக சாஸ்திரங்கள் கற்றறிந்த மகாபண்டிதர்களுக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதும் உபனிஷத்துகளுடைய ஹிருதயமான அம்சத்தை ஸம்ஸ்கிருத பாஷையில் பத்ய ரூபமாயும் சிலவற்றிற்கு அதின் விவரண வாக்கிய ரூபமாயும் இக்கிரந்தமியற்றி இருக்கிறார்.

இக்கிரந்தமானது ஸத்யோ முக்திமார்க்க ஸூசகமென்றும், கிரமமுக்தி விலாஸமென்றும் இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. பூர்வ பாகத்தில் இரண்டு கண்டங்கள். முதல்கண்டத்தில் ஐந்து ஐந்து ச்லோகங்களாய் பிரிந்து 9 பாகங்கள் இருக்கின்றன.

முதல் பஞ்சகத்தில் யாருடைய அனுக்கிரகத்தால் ஸந்யாஸம் அடையப்பட்டதோ அந்த ஆசார்யாளான ஸ்ரீ ந்ருஸிம்ம பாரதீந்திராளுடைய வந்தனாதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது பஞ்சகத்தில் குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு முதலிய ஐந்து குருமண்டலங்களுடைய வந்தனங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

மூன்றாவது பஞ்சகத்தில் ஸந்யாஸிகளுக்கு நிர்குண பிரும்மஞானமானது அவசியமானாலும் அதை அடைவதற்கும் முக்கிய காரணமான ஸகுண பிரும்மஞானம் அவசியமானதால் ஞான ஸ்வரூபிணியும் லோகமாதாவுமான ஸ்ரீ சாரதாம்பிகையைப்பற்றி ஸ்தோத்திரம் செய்து ஞானத்தைக்கொடுத்து ஜீவன் முக்தியையும் தான் அடைய பிரார்த்திக்கப்பட்டிருக்கிறது,

4-வது தண்டபாணி பஞ்சகம். இதில் தேவகிரியில் பிரதிஷ்டிதரான ஸ்ரீ ஸுப்பிரமணிய ஸ்வாமியைப் பற்றி ஸ்தோத்திரம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வைந்து ச்லோகத்திற்கும் வியாக்கியானமும் சேர்ந்திருக்கிறது. இந்த ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ குகனை தன் ஸஹோதரனாகவும் அம்பாளை தன் தாயாகவும் பரமேசுவரனை பிதாவாகவும் பாவித்து தன் பிருதாவைப் பார்த்து தாய் தந்தை இருவர்களும் தனக்கு மிகவும் அனுகூலமாக இருப்பதாலும் தன்னை தயவுசெய்து ஸகுண பிரும்மலோகமான கைலாசத்திற்கு அழைத்துப் போகும்படி பிரார்த்திக்கப்பட்டிருக்கிறது. அதில் கவி தன்னை தோஷியான ஜீவஸ்வரூபமாயும் ஸ்ரீகுகனை நிர்தோஷ பிரத்யக் ஸ்வரூபமாயும் ஸாக்ஷாத் பரமேசுவரனை அகண்ட பிரம்மமாயும் ஸ்ரீகைலாசத்தை கைவல்யமோக்ஷஸ்தானமாயும் பாவித்து தன்னை அங்கு அடைவிப்பதானது தன்னுடைய ஜீவஸ்வபாவத்தைப்போக்கி ஸ்வரூபானந்தத்தை கொடுக்கவேண்டுமென்று தத்வார்த்தமும் செய்திருக்கிறார்,

5-வது மானஸோபதேச பஞ்சகம் இதில் மனதை ஸம்போதனம் செய்து ஏ மனதே! நீ க்ஷேமத்தையடைவதற்காக எங்கேயும் திரிந்தும் ஒரு பலனையும் அடையவில்லை. ஆத்ம பின்னமான ஸகலவஸ்துக்களும் நசுவரமானது, துச்சஸ்வரூபமானது. ஆகையால் நீசாந்தியடையவேண்டுமானால் பிரணவத்தை யனுஸந்தானம் செய்து ஆத்மஸ்வரூபத்திலீடுபட்டிருந்தால் க்ஷேமத்தை யடையலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

6-வது ஆத்மபஞ்சகம் கீழ் மானஸ பஞ்சகத்தில் அனாத்ம வஸ்துக்களைத் தள்ளி ஆத்மவஸ்துவிலேயே ஈடுபடவேண்டுமென்று சொல்லப்பட்டது. அதில் ஆத்மா, அனாத்மா இதுகளுடைய பேதத்தை காட்டுவதற்காக இந்த பஞ்சகம் ஆரம்பிக்கப்படுகிறது. பாஹ்யஸர்வவஸ்துக்களும் அனாத்ம வர்க்கத்தைச் சேர்ந்தவை. ஆந்திரத்திலும் ஆத்மாவை, கிரியாத்மா, மானஸாத்மா, ஞானாத்மா, மகாத்மா, சாந்தாத்மா என்று ஐந்துவிதமாக விபாகம் செய்து வாகாதி இந்திரியங்களில் அபிமானமுள்ளவனும் கர்த்ருத்வ போக்த்ருத்துவமுள்ளவனும் விஷயானுபவமுள்ளவனை (விசுவனை) கிரியாத்மா என்றும், இந்திரியாதிகளடங்கியும் அந்தக்கரணம் சுத்தமாயும் கேவல மனதுமாத்திரம் உள்ளவனுமான ஆத்மாவை (தைஜஸனை) மானஸாத்மா என்றும் பிரதிபலத்தால் மனதிலும் அபிமானமில்லாமல் ஞான மாத்திரமாக இருக்கிற ஆத்மாவை ஞானாத்மா என்றும் நிர்குணத்திலாஸக்தி யிருந்தும் அகமபிமானத்தினால் ஸகுணத்திலீடுபட்டிருக்கிற ஆத்மாவை மகாத்மாவென்றும் நித்திய நிரதிசய அகண்ட ஸச்சிதானந்த பரமாத்மாவாக இருப்பதை சாந்தாத்மா என்றும் அந்த ஆத்மஸ்வரூபமாகவே ஆகவேணுமாயும் பிரார்த்திக்கப்படுகிறது

7-வது குடலித்தாந்த பஞ்சகம். இதில் தத்துவ ஞானிகளுடைய அனுபவம் மிகவும் விசதமாகவும் விஸ்தாரமாகவும் வியாக்கியானத்துடனும் எழுதப்பட்டிருக்கிறது

ஞானிகளுடைய அனுபவமாவது- ஜாக்கிரத் பிரபஞ்சமும் சிப்பியில் வெள்ளிபோலவும் ஸ்வப்னம் போலவும் மித்யைதான். ஸ்வப்னத்தை யனுபவிப்பவன் பிராதிபாஸிகஜீவன். ஜாக்கிரத் பதார்த்தத்தை யனுபவிப்பவன் வியாவஹாரிக ஜீவன். இவன் சிதாபாஸனென்றும் சொல்லப்படுகிறான். எப்படி ஜாக்கிர ஜீவனுடைய ஸம்பந்தமில்லாமல் ஸ்வப்ன ஜீவன் இருக்கமுடியாதோ அதேமாதிரி சுத்தாத்ம ஸம்பந்தமில்லாமல் இந்த சிதாபாஸனால் இருக்கமுடியாது. இந்த சைதன்யத்திற்கும் அந்தக்கரணாதி உபாதிகளால் ஆபாஸத்துவம் கல்பிதமானது. ஞானத்தால் அவித்தியாநாசம் ஏற்பட்டால் உபாதி நாசத்தால் அந்த சிதாபாஸனே நித்திய சுத்த வியாபக ஆத்துமாவாகஆகிறான். ஆத்துமா நிர்குணன் நிஷ்கிரியன், வியாபகன், நித்திய ஸுகஸ்வரூபன், ஸர்வ கல்பனைக்கும் அதிஷ்டானமாக இருக்கிறான். ஒருவிதத்திலும் அவனுக்கு கெடுதல் உண்டாகாது. அப்பேற்பட்ட ஆத்துமாவே தாமாகவே இருக்கிறோம் என்று பகவான் கீதை 2-வது அத்தியாயத்தில் சொல்லிய ஸ்திதப்ரக்ஞலக்ஷணம்முழுவதும் அந்த பஞ்சகத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆத்துமஞானம் ஆசார்யோபதேசத்தாலும் ஈசுவர பக்தியாலும் த்ருடப்பட்டு அபரோக்ஷமானால் ஜீவன் முக்தியை அடைந்து பிராரப்த அனுபவத்திற்குப் பிறகு விதேக முக்தியை யடையலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

8-வது ஸமுச்சய பஞ்சகம்- இதில் கீழ்சொன்ன விஷயங்களில் மறுபடியும் மன்னுர்த்தமாக குருவந்தனம் முதல் வரிசையாக எல்லாவிஷயங்களையும் ஸங்கிரகமாக சொல்லி ஜீவன் முக்தியில் ஸமாப்தி செய்யப்பட்டிருக்கிறது.

9-வது ஸர்வமங்களபஞ்சகம். இதில் குருபக்தியும் ஈசுவரபக்தியும் ஞானத்துவாரா மோக்ஷஸாதனமென்றும் அனாத்மவஸ்துவில் மனதை செலுத்தக்கூடாதென்றும் த்ரிகாலத்திலும் நித்தியமான ஆத்மாவை எப்போதும் விசாரிக்கவேண்டுமென்றும் விசாரித்து நிர்தாரணம் செய்து அபரோக்ஷஞானத்தால் ஸமஸ்தஜனங்களும் சிரேயஸ் அடையவேணுமாய் பிரார்த்திக்கப்படுகிறது. இதோடு பூர்வ பாகத்தில் முதற்கண்டம் முடிந்தது.

பூர்வபாகம் இரண்டாவது கண்டத்தில் நிருச்யாவகட்டனம் என்றும் ஸ்வரூபானுபூதி விலாஸமென்றும் இரண்டு பிரகரணங்களிருக்கின்றன. நிருச்யாவகட்டனமாவது பிரத்யகபின்னவியாபக ஆத்மஞானத்தால் ஆத்மவ்யதிரிக்த ஸகல பதார்த்தங்களையும் பொய்யென்று அறிந்து விலக்குவது. அதைத் தெரிவிக்கிறார்.

2-வது சுவரூபாநுபூதிவிலாசம்- இதில் கவியானவர் ஒரு பரமஹம்ஸரை உதாஹரணமாக எடுத்துக்கொண்டு ஸர்வஜனஉத்தாரணத்திற்கும் மனச்சாந்திக்கும் திருடதர வைராக்கியத்திற்கும் காரணமான பரமஹம்சருடைய அனுபவத்தை விவரிக்கிறார்.

உத்திரபாகம்.

இதற்கு க்ரம முக்திவிலாசமென்று பெயர், இதற்குச் சிறிய ஓர் டிப்பணீயும் இருக்கிறது. இந்த உத்திரபாகமானது எட்டு அத்தியாயங்கள் கொண்டது.

அபரோக்ஷ பிரும்மஞானமடைந்தவர்களுக்கு ஜீவன்முக்தி மூலமாக விதேகமுக்தி ஏற்படுகிறது அவர்களால் மோக்ஷானந்தமும் அனுபவிக்கப்படுகிறது அவர்களுடைய மோக்ஷத்திற்கு லோகாந்திரகமனம் முதலிய யாதொன்றுமில்லை. அப்பேற்பட்ட முக்யாதிகாரிகளைத் தவிற மற்ற பரோக்ஷஞானிகள் தியாகபலத்தாலோ பக்தியாலோ ஸகுணோபாஸனபலத்தினாலோ கைலாஸம் வைகுண்டம் முதலிய லோகங்களுக்குச் சென்று அந்த லோகாதிபதிகள் மூலமாக நிர்குண ஆத்மவிசாரம் செய்து நிர்குண ஸ்வரூபத்தையறிந்து அங்கிருந்து விதேகமுக்தி அடைகிறார்கள். இதை கிரமமுக்திமார்க்கமென்று சொல்லப்படுகிறது. அங்கு லோகாந்திரத்தில் அவர்கள் போகாதிகளையனுபவித்துக் கொண்டு நிர்குணவிசாரம் செய்யாமலிருந்து ஆத்மஸாக்ஷாத்காரத்தையடையாது போனால் அவர்களுக்கு மறுபடியும் இந்த லோகத்தில் புனராவ்ருத்தியுண்டு என்பதில் ஸந்தேகமில்லை. ஆகையால் கிரமமுக்திமார்க்கத்திலும் வைகுண்டாதிலோகங்களில் சென்று ஆத்மவிசாரம் அவசியம் செய்ய வேணுமென்று சொல்லப்படுகிறது.

முதல் அத்தியாயத்தில் கைலாஸபிராப்தி என்னும் விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. கைலாஸமானது ஸகல பிரும்மாண்டங்களுக்கும் ஹ்ருதயஸ்தானமாயும் அத்தியந்தமுக்தியின் பொருட்டு ஈஷணாத்திரயங்களை விட்டவர்களால் அடையக்கூடியதாயும் ஸத்தியானந்த ஸ்வரூபமாயும் ஸம்ஸாரத்திற்கு வெளிப்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.

தாது-ஹு பங்குனி-மீ 19உ

மஹாஜனங்களின் ஏமாற்றம்.

சென்ற 15-வருஷங்களுக்கு மேலாகப்பல வழிகளிலும் கஷ்டமடைந்து வந்த சென்னை மாகாணத்திய மஹாஜனங்கள், முக்கியமாக ஏழைகள் புதிய ராஜீயச் சீர்திருத்தத்தின் மூலம் ஏதோ நன்மைபெறலாமென்றும், தங்களது பொருளாதார நிலைமைக்கு ஏதாவது விமோசனம் ஏற்படுமென்றும் எதிர்பார்த்து நின்றார்கள். பழைய கக்ஷியாரின் நிர்வாகத்தை நிவிர்த்தி செய்துகொள்ளவும், காங்கிரஸ் மூலம் நன்மை பெறலாமென்றும் எண்ணியுமே அவர்கள் இந்த எலெக்ஷனில் விசேஷ சிரத்தைகாட்டிக் காங்கிரஸை ஆதரிக்க முன்வந்தார்கள்.

ஆயினும் தற்போது சென்னையில் நிகழ்ந்து வரும் ராஜீயக் குழப்ப ஸம்பவங்களைப் பார்க்கும்போது நமது துரதிர்ஷ்டம் பிடித்த ஜனங்களுக்கு இன்னும் நல்ல விடிவுகாலம் வாய்க்கவில்லையென்பதும், அது எப்போதாவது வருமா என்ற ஏக்கம் உண்டாகியிருப்பதும் நன்கு விளங்கும்.

காங்கிரஸ்கக்ஷித் தலைவரான ஸ்ரீமான் ஆசாரியருக்கும், கவர்னருக்கும் நடந்த ஸம்பாஷணை முறிந்து காங்கிரஸ் மந்திரிஸபை ஏற்படக் கூடாத நிலைமை உண்டாகிவிட்டது. ஜனநாயகக் கொள்கையின்படி சட்டஸபையில் மெஜாரிடிக் கக்ஷியார் நிர்வாஹத்தை நடத்தவேண்டியது நியாயமாயிருந்தும் காங்கிரஸ் வாதிகள் வீணாகத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். காங்கிரஸ்வாதிகள் எவ்வித நிபந்தனையின்றியும் நிர்வாஹத்தை ஏற்றுத் தங்களுக்கு உடனே நன்மைகளைச் செய்யவேண்டுமென்றே நமது மாகாண மஹாஜனங்கள் விரும்பினரென்பது வெள்ளிடைமலை. காங்கிரஸ்வாதிகள், சட்டத்தை உடைக்கவும், ஸ்வதந்திர இயக்கம் வலிமையடையவும், ராஜீயதத்வம் பேசிக்கொண்டிருப்பதற்காக வோட்டர்கள் அவர்களை சட்டஸபைக்கு அனுப்பவில்லை. இப்படியிருந்தும் அகில இந்தியக் கமிட்டியில் நிபந்தனையுடன் கூடிய உத்யோக ஏற்புத் தீர்மானத்தைக் காந்திஜீ முதலியவர்கள் தங்கள் கௌரவத்தை நிலைநிறுத்திக்கொள்ளக் கருதி நிறைவேற்றி விட்டார்கள். அதன் விபரீத பலத்தாலேயே சென்னைமாகாணத்தின் ராஜீய நிலைமையும், ஜனங்களின் நம்பிக்கையும் நெருக்கடியை அடைந்து இருக்கிறது. கவர்னர், தாம் கூடியவரையில் காங்கிரஸ் மந்திரிகளுடன் மனப்பூர்வமாக ஒத்துழைக்க உறுதிமொழி கொடுத்தும் அது பயன் படாமல் போய்விட்டது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானப்படி காங்கிரஸ் வாதிகள் அந்த உறுதிமொழியில் திருப்தியடைய இடமில்லாமல் போய்விட்டது. ஆகவே அவர்கள் ஒதுங்கி நிற்கத் தீர்மானித்துவிட்டார்கள். கவர்னர் தமது நிலைமையை விளக்கிச் சொல்லியிருப்பதில் விசேஷ அதிகார உபயோகத்தைப்பற்றித் தாம் எவ்வித உறுதிமொழியும் அளிக்கச் சட்டப்படி இடமில்லையென்று சொல்லுகிறார். இது உண்மையானால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்த சட்ட நிபுணர்கள் முன்னாடியே இதைக் கவனித்தார்களா? அல்லது உத்யோகமேற்புக் கக்ஷியாரின் கண்ணைத்துடைப்பதற்காக இந்தத் தந்திரமான தீர்மானத்தைச் செய்தார்களா வென்று தெரியவில்லை. உறுதிமொழியளிக்கச் சட்டப்படி கவர்னர்களுக்கு அதிகாரமில்லையானால் அதை முன்னாடியே காங்கிரஸ் வாதிகள் கவனித்து அதற்குத்தக்கபடி தீர்மானம் செய்திருக்கவேண்டியதே புத்திசாலித்தனமாயிருந்திருக்கும்.

இப்போது மெஜாரிடிக் கக்ஷியாராகிய காங்கிரஸ்வாதிகள் விலகிக்கொள்ளுவதால் கவர்னரின் நிலைமை ஸங்கடமாகிவிட்டது. அவர் ராஜ்ய நிர்வாஹ யந்திரத்தை ஓட்டிக்கொண்டு போகக் கடமைப்பட்டவர். அந்தக்கடமையை நிறைவேற்ற அவர் எந்த வழியையும் அநுஸரிக்க வேண்டியது அவருடைய கடமையாயிருக்கிறது. ஆதலால் அவர் மந்திரிஸபையை எப்படியாவது அமைத்துவிடப் பலமான முயற்சி எடுத்துக்கொண்டு அதில் சிறிது வெற்றியும் அடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கனவே மந்திரிகளாயும் நிர்வாஹ ஸபை அங்கத்தினராகவுமிருந்து வந்தவர்களைக் கொண்டே கவர்னர் தாத்காலிகமாக ஒரு மந்திரிஸபையை அமைக்க ஸர். கே. வி. ரெட்டி மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார். ஆனால் மெஜாரிடிக்கக்ஷியார் இந்த மந்திரிகளின் சம்பளத்தையும், மற்றவேலைத் திட்டங்களையும் ஆக்ஷேபிக்கலாம். அதன் மூலம் மந்திரிகள் ராஜிநாமா செய்யவேண்டுமாதலால், சிலமாதகாலம் வரையில் இந்த விசேஷாதிகார மந்திரிகளைக் கொண்டே அவர் நிர்வாஹத்தை நடத்த முடிவுசெய்திருக்கிறார். ஆகையால் பழய பெத்த பெருமாள் வசமே மஹாஜனங்கள் ஒப்படைக்கப்படுவார்களென்று நினைக்கப்படுகிறது.

இந்த நிலைமை ஏற்படக் கவர்னரின் போக்கும் சிறிது காரணமாயினும், காங்கிரஸ் தீர்மானமே பெரும்பாலும் காரணமென்று நிச்சயமாகிறது. புனரபிஜனனம், புனரபி மரணம் என்றரீதியில் அடிக்கடி சட்டஸபையைக் கலைப்பதும் மறுபடி எலெக்ஷன் நடத்துவதுமே காங்கிரஸின் வேலைத்திட்டமாயிருந்தால் அந்த அர்த்தமற்ற ராஜீய ஆர்ப்பாட்டங்களால் ஜனங்களுக்கு உடனே கிடைக்கக் கூடிய நன்மையில்லாததோடு தீங்கும் அதிகரிக்கும். இந்த நிலைமை ஏற்பட்டதற்கு காரணம் யாதாயினும், யாராயினும் மஹாஜனங்கள் மிகுந்த ஏமாற்றமடைந்திருப்பது மட்டும் நிச்சயமே.

குறிப்புகள்.

ஐரோப்பிய நாகரீகத்தின் அந்த்யகாலம்!

அபிஸீனியா விஷயமாக ஐரோப்பிய தேசங்கள் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து அவைகளின் பகட்டான சாயம் வெளுத்துவிட்டது. இத்தாலியானது நிமிர்படைத்து அபிஸீனியாவில் செய்த பயங்கர அக்ரமங்களை எல்லாதேசமும் வேடிக்கைப்பார்த்து மௌனம் சாதித்து நின்றன. இப்போது ஸமீபகாலமாக இதாலியர் அபிஸீனியாவில் நடத்திய மஹா கோர கார்யங்களைப் பார்க்கையில் ஐரோப்பிய நாகரீகத்திற்கே அந்தியகாலம் வந்துவிட்டதென்று நிச்சயமாகக் கூறலாம். இதாலிய ராணுவ அதிகாரியைக் கொல்ல முயற்சிசெய்யப்பட்டதாக வியாஜம் கூறி அங்கு இதாலியர் நடத்திய அட்டூழியத்தைப் பார்த்து மனிதஸமூஹமே தலைகுனிய வேண்டியதாயிருக்கிறது. அந்த ராணுவ அதிகாரிமீது வெடிகுண்டு போடப்பட்டதாம். ஆனால் அவர் செத்துப்போய்விடவில்லை. இந்த கார்யம் அபிஸீனியரால்தான் செய்யப்பட்டதென்று இதாலி முடிவுசெய்தது. இவ்வளவுதான் தாமதம்! ஆயிரக்கணக்கான அபிஸீனியர்களை வரிசையாக நிறுத்தி துப்பாக்கியால் சுட்டுக்கொன்று குவித்தனர். இதில் அநேக ஸ்திரீகளும், குழந்தைகளும்கூடக் கொல்லப்பட்டார்கள். இந்த கோரசம்பவம் உலகம் முழுவதுமே பெரிய அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது. பலவிடங்களில் இதாலியின் செய்கை கண்டிக்கப்படுகிறது. பழைய ராஜ தந்திரியான மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் பிரிடிஷ் பார்லிமெண்டில் இதைப்பற்றித் தீவிரமாகக் கண்டனம் செய்தார். ஆனால் பார்லிமெண்டும், மந்திரிகளும் தலையாட்டிவிட்டனர். அபிஸீனிய ஜனங்களும், ஸ்திரீ, குழந்தைகளும் கோரமாகக் கொல்லப்படுவதைக்கண்டு மனம் தாளாத மன்னர் உலகத்தினருக்கு இந்த அக்ரமத்தை விளக்கிக்காட்டி ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கிறார். இந்த அநியாயத்திற்குக் கேள்விமுறை கிடையாதாவென்று அவர் கண்ணீர்விட்டுக் கதறுகிறார். ஆனால் அது அரண்யரோதனமாகவே ஆகிவிட்டது. இதைக் காதுகொடுத்துக் கேட்பவர்களே அங்கு இல்லை.

யுத்த காலத்தில் அவர்கள் செய்த அக்ரமத்திற்கோ அளவில்லை. இப்போது வசப்படுத்திக்கொண்ட தேசத்தில் நிராதிகளும் திக்கற்றவர்களுமான ஏழை ஜனங்களை இவ்வாறு கொலைசெய்வது என்ன நாகரிகத்தில் சேர்ந்தது? இனம், இனத்தைக்காக்கும் என்றநீதிப்படி வெள்ளையர்கள் யாவரும் இதாலியின் குரூரத்தனத்தைப் பற்றி வாய்திறப்பதில்லை. இத்தகைய மனித வதைக்கு ஆதரவு காட்டும் தேசங்களை நாகரிகமுள்ளவை என்றோ, ஜீவகாருண்யமுள்ளவை என்றோ எப்படிச் சொல்ல முடியும்? ஐரோப்பிய தேசங்களைக் கண்டு மோஹித்து நிற்கும் நம்மவர்கள் அத்தேசங்களின் அநாகரிக நிலைமையைக் கவனிக்கட்டும்.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

காரைக்குடி.

ரொக்கப்பரிசு ரூ. 1300.

நெ. 10 சயமகள் போட்டி முதற் பரிசு சரியான விடை ரூ. 700 2வது பரிசு 1 தப்புள்ள விடை ரூ. 300.
பிரவேசக்கட்டணம் அணா 4 தான். முடிவு தேதி 20—6—37.

நெ	வார்த்தைகள்.
1	அம—
2	—ரி
3	மா—
4	—மரி
5	வி—யை
6	மா— —

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— இதில் காட்டப்பட்டிருக்கிற சயமகள் பெயர் 16. அதிலிருந்துதான் 6 வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கோடிட்ட இடங்களில் எழுத்துக்களைச் சேர்த்தால் சரியான விடைவரும். ஒவ்வொரு விடைக்கும் அணா 4 வீதம் தனித்தனியே விடைகளைச் சுத்தமாக எழுதி பிரவேசக் கட்டணத்துடன் M. O. ரசீதையும் சேர்த்து 20—6—37க்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். எழுத்துக்கு எழுத்துச் சரியானவிடைக்கு முதற் பரிசும் ஒருதப்புள்ள விடைக்கு இரண்டாவது பரிசும் பல சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை முறையே பகிர்ந்து அளிக்கப்படும்.

சயமகள் ஜாபிதா.

1. ஆரி. 2. மாகாளி. 3. வீரி. 4. மாலினி. 5. விசயை. 6. சமரி. 7. மாகேசி. 8. விசையை. 9. மாரி. 10. மாதா. 11. கௌரி. 12. அமரி. 13. மாமாயி. 14. சௌரி. 15. மாதவி. 16. குமரி.

நெ. 11 பாலர்கள் போட்டி சரியான விடை ரூ. 300.

நெ	வார்த்தைகள்.
1	தா—ம்
2	—தம்

இதில் காட்டப்பட்டிருக்கிற பெயர் 17 இதிலிருந்துதான் 2 சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கோடிட்ட இடங்களில் எழுத்துக்களைச் சேர்த்தால் சரியான விடை வரும். ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக்கட்டணம் அணா 4 வீதம் தனித்தனியே விடைகளைச் சுத்தமாக எழுதி M. O. ரசீதையும் சேர்த்து 20—6—37க்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைவந்தால் பரிசுத்தொகை முறையே பகிர்ந்து அளிக்கப்படும்.

பெயர்களின் ஜாபிதா.

1. பதம். 2. அதம். 3. தாலம். 4. வாதம். 5. தாபம். 6. சதம். 7. தாவம். 8. நாதம். 9. தானம். 10 பாதம். 11. தாதம் 12. இதம். 13. தாரம். 14 தாகம். 15. தாடம். 16. தாளம். 17. தாமம்.

நெ. 10 நெ 11 இவ்விரண்டு போட்டிகளுக்கும் மொத்தமாய் விடைஎழுதி அனுப்புவர்கள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனிக் காகிதத்தில் வரிசைக்கிரமமாய் எழுதியனுப்பலாம்.

மானேஜரின் சரியான விடைகள் சீல்போட்ட கவரில் தேவகோட்டை நாட்டுக்கோட்டையார் பாங்கில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு போட்டிக்கும் பரிசுத்தொகை 30—6—37க்குள் அனுப்பப்படும். பரிசு அளிக்கும் சகல விஷயங்களிலும் மானேஜர் தீர்ப்பே முடிவானது.

மானேஜர் நாக. வெ று நாச்சியப்ப செட்டியார்,
கார்த்திகேசன் நிலயம், தேவகோட்டை,
(இராமநாதபுரம் ஜில்லா).

தனி அரசியல் கக்ஷி வேண்டியது தான்.

வே. ஸோமதேவ சர்மா.

சுத்தக்ஷத்ரியனது தனி ஆளுகைக்கு ஆளாகாதவரை ஓர் நாட்டிற்கு நிரந்தரமான நன்மை ஏற்படாது. காலத்திற் கேற்றவாறு சிலது மாறவேண்டுமாயினும் முக்யமான சில சாச்வததர்மங்கள் எக்காலத்திலும் மாறுவதற்கில்லை. பசிக்கு உணவு முக்கியதர்மம். வயிற்றை நிரப்பும் வகை பற்பலவாகலாம். அன்றியுமது தேசகாலங்களுக்கு ஏற்றவகையில் அமைக்கப்படலாம். இதன் அடிப்படையான தத்துவத்தையே அறியாத பலர் அரசியல் வாதிகளாகிவிட்டனர். தன் தன் இஷ்டம் ஓங்காதென்ற காரணத்தினால் மட்டும் தேசிய வாதிகள் ஸ்ரீயுத காந்தி அல்லது பண்டித நேருவின் கொள்கையை ஆமோதிக்கிறார்கள். முடியுமானால் அவரவரும் தனித்தனி தன் ராஜீய ஒழுங்கைக் கூற முன் வரத்தயங்கார்.

2. தற்சமயம் தலைவராக அமைந்தவர்கள் நமது ஸநாதன தர்மத்தின் சிறப்பையும் நமது தேசத்திற்கேற்ற ராஜ்யதந்திரத்தையும் நன்கு அறியாதவர்கள். அறியாமையை ஏற்கவும் மனமில்லாதவர்கள். அன்றியும் கதாநாகநிகமாகப் பலரும்,சில தியாகங்களைக் கண்டு சிலரும் தங்களிடம் வைத்த மதிப்பை மிகப் பெரிதாக எண்ணி ஏமாந்தவர்கள். ஆகவின் இவர்களைத் திருப்புவதோ அல்லது கூடியவரை அவர்களுடன் கலந்துழைத்து நமது கொள்கையைச் சிறிது சிறிதாக அவர்கள் ஏற்கும்படி செய்யவோ முடியாதென்பது வெள்ளிடை மலை.

3. நாம் ராஜீய விஷயங்களில் ஒதுங்கி நின்று அவர்களால் ஏற்படுமாயின் அந்த பயன்களை அனுபவித்து பத விஷயங்களில் தலையிடும்போது எதிர்த்து நிற்பது என்ற கொள்கையும் அனுஷ்டானத்தில் பயனை அளிக்கவில்லை. ராஜீய அதிகாரிகளுடன் எதிர்முறையில் பழகிப் பழகி அந்த தோரணையிலேயே அல்லது அதற்கும் குறைந்தமுறையிலே நம்மை நடத்துகின்றனர். நமது வாக்கில் அவர்களுக்கு மதிப்பில்லை. சிலர் நம்மை விபரீதமாகவும் எண்ணுகின்றனர். ஆகவின் நமது விண்ணப்பம் பயன் பெறு! அவர்களுடன் ஒத்துழைக்கவும் இயலாது.

4. நடக்கிறது நடக்கட்டும். பகவதாக்ஞையால் கலியில் ஸாங்கர்யம் நேரிடுவது ஸஹஜம் என்று கூறி பேசாமலிருத்தல் பேடித்தன்மையாகும். நமது உடலுக்கோ குடும்பத்திற்கோ நோய் அல்லது துன்பம் நேரிடும்போது விதிப்படி நடக்க வேண்டும் என சிகித்ஸை செய்யாமலிருக்கவில்லை ஆதவின் தர்மக்லானியை அகற்ற ஏதேனும் ஓர் சிறந்த வழியைக் கண்டுபிடிக்கத்தான் வேண்டும். தனியான ஓர் மனிதனையோ ஓர் ஸமூகத்தையோ சீர்திருத்த வேண்டுமானால் நேர்முறனாக நின்று வேலை செய்வது சிறிது சிரமத்தை அளிக்கும். அவர்கள் செல்லும் வழியில் சிறிது கூடச் சென்று திரும்புவது தான் உசிதமாகும்.

5. வீர்யத்தைவிட காரியமே நமக்கு பெரிது. வர்ணாச்ரமஸபை, ஸநாதநதர்மஸபை, வர்ணாஸ்ரம ஸ்வராஜ்யஸங்கம் முதலிய பெயர்களும் மிகவாதி என்பனவும் துரதிருஷ்டவசமாக பொதுஜனங்களிடமும் உத்ஸாஹத்துடன் கூடிய ஆதரவை அளிக்கவில்லை. அந்தந்த ஸபைகளும் அனுஷ்டானம் முதலிய ஆக்க வேலைகளில் ஊக்கத்தைசெலுத்தட்டும். நீர் தமிழிபோல் ப்ரதிக்ஷணமும் தோன்றி அழியும் பல ராஜீய கொள்கைக்கு செவிகொடுக்காத பல மேதாவிகள் பல மதங்களிலிருக்கின்றனர். அத்தகையவர்களையும் ஒன்றுசேர்த்து ஓர் கக்ஷி ஆரம்பிக்கவேண்டிய காலமிது.

6. பண்டித நேருவின் பொதுவுடமை வாதத்திலும் ஸ்ரீ காந்திஜியின் சில பிடிவாதக் கொள்கையிலும் பலருக்கு வெறுப்புண்டு. ஆயினும் தேச நன்மைக்குறிய பல நல்வழிகளங்கிருப்பதால் பலருமவர்கள் கக்ஷியில் சேர்கின்றனர். தேசிய ஸபையிலுள்ள கதர் முதலிய பல நல்ல கொள்கைகளைத்தழுவி பண்டைய சாச்வத கொள்கைகளுக்கு பங்கமின்றி ஓர் "கன்ஸர்வேடிவ்" கக்ஷி ஆரம்பித்தால் பலர் உள்ளத்தை இழுத்து பலத்தை அளிக்கும். அறபாகம் ஜீவநாடியாயிருத்தல் வேண்டும்.

7. ஐம்பதாண்டுகளாக பணத்தையு மாதாவையுமளித்து வளர்த்த பிரசித்திபெற்ற தேசிய ஸபையின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ள நமக்கு உரிமையுண்டு. இக்கொள்கையுள்ள மஹம்மதியரும், கிரிஸ்தவரும் "காங்கிரஸ் கன்ஸர்வேடிவ்" சக்ஷியில் சேர்க்கப்படல் வேண்டும். இதன் வேலை முக்யமாக அவரவர் பழய ஒழுக்க மதவிஷயங்களைச் சட்டமூலமழிக்காமல் பாதுகாத்தலாக இருத்தல் வேண்டும். "ஸர்வே ஜநாஸ்ஸுகிநோபவந்து"என்ற கொள்கையை ஆசரித்து காட்டும்போது நமக்கு போராதரவு வேண்டிய அளவு கிடைக்கும்.

8. பலரை ஆகர்ஷிக்கும் வண்ணம் அரிய வேலைகளையும் நல்ல பிரசாரகர்களையும் சேர்க்க வேண்டும். பின்னர் சட்டதிட்டங்கள் ஏற்படும்போது வர்ணாச்ரமஸபை போன்றவைகளுக்கு தக்க ப்ரதிநிதித்வமளிக்கலாம். தேசிய ஸபையின் சில அம்சங்களில் பிரியமில்லாத பலர் இத்தகைய ஓர் ஸபையை எதிர்பார்க்குமிச்சமயம் இதுதோன்ற வேண்டியது மிக மிக அவச்யமாகும்.

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.)

தர்மத்தை நன்கு ரக்ஷிக்க:— சென்னை மாகாணத்தில் பச்சையப்பன் தர்மமில்லாத இடம் இல்லை. அவரது தினம் சமீபத்தில் ஆடம்பரமாக கொண்டாடப்பட்டது. அவரைப்போல் ஓர் உத்தம தார்மிகர் இன்னும் தமிழ்நாட்டில் காணவில்லை. அவர் தர்மத்தையாவது, அவர் மனதிற்கு விரோதமில்லாமல் மதநக்ஷிபேதம் பாராட்டாமல் ஒழுங்காக நடத்தினால் போதும்.

குருவினிடம் மான நஷ்டமா:— பாம்பேயில் மத்வ வகுப்பைச் சார்ந்த ஓர் பெண் (கணவனைவிட்டுத் தனியே வாழ்பவளாம்) தன் குருவான ஸ்ரீ மடாதிபதிகள் தனக்கு தீர்த்த ப்ரஸாதமளிக்கமறுத்ததால்மானநஷ்ட வழக்குத் தொடர்ந்தாள். விவேகியான நீதிபதி தீர்த்தப்ரஸாதம் அளிப்பதும், மறுப்பதும் ஆசாரியரது இஷ்டத்தைப் பொருத்தது. அங்கு சட்டம் தலையிடாதென்றார். பர்த்தாவைப் பிரிந்து வசிக்கத் துணிந்தவள் குரு அபசாரம் செய்வதில் ஆச்சர்யமென்ன? ஸ்திரீ சுதந்திரம் விரும்புவோருக்கு இதுஎச்சரிக்கை போலும்.

பசித்தது திருடினேன், இறந்தேன்:— என்ற செய்தி நாளுக்கு நாள் அதிகமாகிறது. இது நவநாகரிகத்தின் முதல் பலன். "பசியால் இறந்தவனில்லை" என்ற நம் நாட்டுப்பழமொழியை கலியில் பாழாக்கப் பார்க்கிறோம். கல்விச் செலவை அடியோடு அகற்றி கைத்தொழிற் கற்பிக்கும் வரை இத்துக்கம் நீங்காது. தொழிலாளிக்குழந்தைகள் தொழிலை அன்றி வேறு கல்வி கற்கலாகாது. படிப்பில் பணத்தைக்கொட்டி வேலையோ வேலையோ என அழுவதில் பயனென்ன? சென்ற வாரம் செங்கற்பட்டில் பிழைப்பிற்கின்றித் திருடினேன் என்றான் ஓர் படித்தவன். நீதி என்ன செய்யும்?

திண்ணைப் பள்ளிக்கூடம் கூடாது:— என்கிறார் சென்னை கல்வி அதிகாரி. சென்னையிலும் அனேக திண்ணைப்பள்ளிக்கூடங்களில் நவநாகரிக பள்ளிகளில் 3-வருஷம் கற்பிப்பதை ஒரே ஆண்டில் கற்பிப்பதுடன் பல ஸதாசாரங்களை கற்பிக்கின்றனர். பண்டைய குலமல்ல. ஸாதாரண பள்ளிகளில் பல தேவதா ஸ்தோத்ரம், தெய்வபக்தி, குருபக்தி, அடக்கம், ஸதாசாரம், முதலியன கற்பிக்கப்பட்டன. அதுகளில் உண்டாகும் நன்மையை அடையாவண்ணம் நாகரிகம் தடுக்கிறது. அவர் பேரில் குற்றமென்ன?

தமிழ் அழியவா:— சென்னையில் மிகப் பிரபலமாக ஹிந்திப்ரசாரம் நடக்கிறது. வழக்கப்படி புதிய புதிய பெண் ஆண்மக்களைக் கொண்டு ஆட்டம் நடக்கிறது. தமிழ் எழுத்தைவிட்டு அதற்கு பதில் ஹிந்தியை உபயோகிக்கும் வண்ணம் பல உபதேசம் நடந்தது. இதில் தமிழ் சிங்கம் உ. வே. சாமிநாதய்யரும் சிக்கியது விந்தையிலும் விந்தை! ஒவ்வொரு பாஷைக்கும் தனித்தனி எழுத்து. நாகரிகம் சுதந்திரம் நினைவு, அழகு, முதலிய அம்சங்கள் உண்டு. அவை காக்கப்படவேண்டும்.

அக்ஞானமா? அகந்தையா? இக்களியாட்டத்தில் காந்திஜி தனக்குத் தமிழ் விருத்தியாகாததற்குத் தமிழரே காரணமென்று கூறி தன் நாட்டுப் பெண் கூட தன்னிடம் தமிழ் பேசவில்லை. தன் புருஷனுக்கு தமிழ் கற்பிக்கவில்லை என பெருமையாகக் கூறுகிறார். தார்மிகரது மனது வெடிக்கும்படியும், ரத்தம் கொதிக்கும்படி இது செய்யுமென்பதை இவர் உணரவில்லையா? அல்லது என்ன செய்ய முடியுமென்ற திமிரா? கடவுளே கதி.

சென்றவர் விளக்குவாரா:— பூரிக்குச் செல்லும் பாக்யம் தமிழ்நாட்டில் வெகு சிலருக்கே கிட்டிற்று. சீர்காழி முதலியார், குடந்தை பிரும்மஸ்ரீ எஸ். மஹாலிங்கய்யர் அவர்கள், ஸாமிநாதசாஸ்திரியார் அவர்கள், போன்ற சில ஆஸ்திகசிகாமணிகளை வழியனுப்பும் பாக்யமே நமக்குக் கிட்டிற்று. இத்தகையோர் ஆங்கு ஸநாதந தர்மசபை நடந்த வரலாற்றை விரிவாக நமது பத்திரிகையில் வெளியிடல் மிக மிக அவசியம்.

சென்னை அநாத பிராமணாலயம்:— ஷை சபை வக்கீல் வெங்கட்டராமய்யர் தலைமையில் துவக்கப்பட்டது. ஓர் ஏழை குழந்தைக்கு வார அன்னம் ஏற்படுத்தி ஸாமவேதங்கள் கற்பிக்கப்படுகிறது: அனுபவீதரான மற்றோர் சிறுவருக்கு வார அன்னம் அளித்து ஓர் ஸம்ஸ்க்ருத கலாசாலை மூலம், காவ்யம் கற்பிக்கப்படுகிறது. இங்ஙனம் ஆங்காங்கு அனாதையைக் காப்பதுடன் வைதிக கல்வியும் போதிக்கப்பட்டால் நலமுண்டு.

இருவரும் தவறினர்:— ஸாதாரண வாக்களிக்காத அரசாங்கமும் மந்திரி பதவி ஏற்காத தேசிய சபையும் நாட்டின் நலத்தைக் கோராமல் பெரும் தீங்கு இழைத்தன.

சென்னை மந்திரி ஸபை. கவர்னரின் முயற்சி.

சென்னையில் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் மந்திரிஸபை அமைக்க மறுத்தபின் கவர்னர் வேறு கக்ஷியாரைக்கொண்டு அதை அமைக்க முயற்சித்தும் முடியவில்லை. ஆதலால் அவர் தமது அதிகாரத்தைக்கொண்டு தனிப்பட்டவர்களை அழைத்துக்கேட்டார். கனம் ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் தம்மால் இக்கார்யத்தில் சம்பந்தப்படமுடியாதென்றுசொல்லிவிட்டாராம் ஸர் .கே.வி. ரெட்டியார் தாம் மந்திரி ஸபை அமைக்க ஏற்பாடு செய்வதாக அங்கீகரித்திருக்கிறாராம். ஸர் உஸ்மான் ,ஏ.டி பன்னீர்செல்வம், குமாரராஜா முதலியவர்களின் பெயர் பிரஸ்தாபிக்கப்படுகிறது. 5பேர்களே மந்திரிகளாக இருப்பார்களாம்.

சட்டஸபை கூட்டமில்லையா?

சென்னையில் புதிய சட்டஸபைக்கூட்டத்தை தாற்காலிகமாக, நடத்துவதில்லையென்று கவர்னர் முடிவு செய்திருக்கிறாராம். சட்டஸபைக்கூட்டம் நடந்தால் மந்திரிகள்மீது நம்பிக்கையில்லையெனத்தீர்மானம் கொண்டுவரப்பட்டு மந்திரிகள் ராஜீநாமா செய்ய நேரும். இந்த கஷ்டத்தை சமாளிக்கசட்டஸபையையே கூட்டுவதில்லையென்று முடிவு செய்யப்படலாமாம்!

இந்தியா சட்ட ஸபை கலைக்கப்படும்

ஸமஷ்டி அரசியல் 194க்குள் ஏற்படாதென்று தெரிவதால் தற்போதுள்ள இந்தியாசட்டஸபையின் காலகெடு இவ்வருஷத்தில் முடிந்தபின் ஸபை கலைக்கப்பட்டு மறு எலெக்ஷன் நடத்த ஏற்பாடுசெய்யப்படுமெனத்தெரிகிறது.

எங்கும் இல்லை

சென்னையைப்போல் மற்ற மாகாணங்களிலும் கவர்னர்கள் உறுதிமொழி அளிக்கமறுத்து விட்டதால் எங்கும் காங்கிரஸ் மந்திரிஸபை இல்லையென்பது நிச்சயமாகிவிட்டது.

பம்பாயில் முஸ்லீம்களைச்சேர்ந்தவர்களும் மந்திரி ஸபை அமைக்கமறுத்துவிட்டனராம்.

பானிப்பெட்டில் ஹிந்துமுஸ்லீம் கலஹம்

ஹோலிப்பண்டிகையை முன்னிட்டு பானிப்பட்டில் ஹிந்து முஸ்லீம் கலஹம் ஏற்பட்டுப் போலீஸார் துப்பாக்கிப்பிரயோகமும் செய்ய நேர்ந்தது. இதனால் சிலர்இறந்து போனார்கள்

தேருக்கு முன்பு சண்டித்தனம்.

கள்ளிக்குறிச்சித் தாலுக்காவைச்சேர்ந்த இலவாஞ்சூர் கொட்டையில்ஜ்யோதிலிங்கேஸ்வரஸ்வாமியின் தேர்உத்ஸவத்தில் தேர் வீதியில் வரும்போது மசூதி முன்பாக மேளம் வாசிக்காமல் இழுக்க வேணுமென்று மஹம்மதியர்கள் வற்புறுத்தினர். அவர்கள் தேர் முன்பாகப் படுத்துக்கொண்டு சண்டித்தனம் செய்தனர். போலீசார்வந்து அவர்களை ஸமாதானப் படுத்தி அப்புறப்படுத்தி அமைதியாக மேளவாத்தியத்துடன் உத்ஸவத்தை நிறைவேற்றி வைத்தார்கள்.

குடந்தை ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவில் டிரஸ்டி நியமனம்

28உ மாயவரத்தில் நடந்த கும்பகோணம் தேவஸ்தானகமிட்டிக்கூட்டத்தில்,மாஜி சிரஸ்ததார் ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார் என்பவர் ஸ்ரீசாரங்கபாணி கோவில் டிரஸ்டிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இவர்இவ்வூரில் ஸ்ரீஅஹோபிலமடம் ஏஜண்டாக இருந்து வருகிறார். வைதிக சிரத்தையுள்ளவர். ஆசாரசீலர். இந்த வகையில் இவருடைய நியமனம் யாவருக்கும்திருப்தியைக்கொடுத்திருக்கிறது

ஸ்ரீ சாரங்கபாணி கோவிலில் வெள்ளித் திருட்டு.

ஷை கோவிலில் நடந்துவந்த தாயார் உத்ஸவத்தில் 4-வது தினத்தில் தாயார் வெள்ளிப் பல்லக்கிலிருந்து சுமார் 40, 50-ரூபாய் பொறுமானமுள்ள வெள்ளித் தகடு பெயர்க்கப்பட்டுப் போய்விட்டதாகத் தெரிகிறது. இதைப்பற்றி போலீஸ்விசாரணை நடக்கிறதாம்!

காச்மீர ஸம்ஸ்தானம் பிரதமமந்திரி பதவி.

திவான்பஹதூர் என் கோபாலஸ்வாமி அய்யங்காரின் நியமனம்.

சென்னை ரவின்யூபோர்ட் மெம்பரான திவான்பஹதூர் என். கோபாலஸ்வாமி அய்யங்கார் ஏப்ரல் முதல் தேதியில் வேலையிலிருந்து விலகியதும் காச்மீர்ஸம்ஸ்தானத்தின் முதல் மந்திரிபதவியை ஏற்றுக்கொள்வார்.

கல்கத்தாவில் 17 பேர் கைதி

கல்கத்தாவில் அரசியல் சட்ட எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்தியதற்காக 17 காங்கிரஸ்காரர்கள் கைதி செய்யப்பட்டார்கள்.

"முக்தி மார்க்கானு சிந்தனம்"

[இந்த வாரத்திய சஞ்சிகையின் 5, 8-பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கும் புஸ்தக விமர்சனமானது கும்பகோணம் ப்ரம்ஹஸ்ரீ சி. ஸுப்ரமண்ய சாஸ்திரிகளவர்களால் எழுதப்பட்டது.] மானேஜர்.

(5ம் பக்கத்தொடர்ச்சி.)

பட்டதாகவும் விளங்குகிறது. அக் கைலாஸத்தில் அதியுன்னதமான திவ்பாஸனத்தில் விஷ்ணு பிர்மா இந்திரன் முதலிய தேவர்களால் ஸேவிக்கப்பட்டவரான, உலகத்துக்குப் பிதாவான பரமேச்வரர் விளங்குகிறார். அவருடைய இடதுமடியில் குகனோடு கூடிய ஸ்ரீ கௌரியும், வலதுமடியில் கணபதியும் முன் பக்கத்தில் பக்தராகிய நந்திகேச்வரரும் பிரகாசிக்கிறார்கள். ஞானரூபிகளான இந்த ஐந்து தெய்வங்களையும் எந்த உபாஸகன் தரிசிக்கிறானோ அவனுக்கு முக்தி ஸித்தமாக ஏற்படுகிறது. அக் கைலாஸத்தின் மஹிமையானது மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதது.

அம் மஹிமைவாய்ந்த கைலாஸ மண்டபத்தில் அநேக தேவாதிகள் பிரும்மர்ஷிகள் முதலிய பெரியோர்கள் பகவானுடைய ஆனந்த விலாசத்தைப்பார்த்து ஸந்தோஷித்து இருக்கிறார்கள். அந்த ஸபையில் ஒரு பரமஹம்ஸரூகிய பாலஞானியின் அனுபவம் கூறப்படுகிறது. ஓர் பாலன் கைலாசதுவாரத்தில் வியத்தோடும் பஸ்மருத்திருக்ஷதாரியாயும் காஷாயகௌபீனதாரியாயும் பிரணவ ஜபம் ஸதா செய்துகொண்டும் ஆனந்தக் கண்ணீரோடு காணப்படுகிறான். பாலகன் மண்டபத்தில் பதினோருத்திரர்களையும் பார்த்தும் வணங்கியும் தன்னை அவ்விடத்திற்கழைத்துக் கொண்டு வந்த அமானவ புருஷருக்குப் பதிலாக ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமியையும், கணபதியையும், நந்திகேசரையும், ஸ்ரீ அம்பாளையும் ஸ்ரீ பரமேச்வரரையும் கண்டுகளித்து பக்திபரவசத்தால் ஸ்துதிசெய்து ஸ்ரீ பரமேச்வரரிடத்தில் தன் பிதுருபுத்தியையும் அம்பாளிடத்தில் மாதுருபுத்தியையும் கணபதிகுகன் இவர்களிடத்தில் பிராதுருபுத்தியும் வைத்துப் பாவனைசெய்து அதே தியானத்தால் பரமேசுவருடைய அங்கத்தையடைந்து ஸந்தோஷித்த ஸமயத்தில் பரமேசுவரனுக்கிரகத்தால் ஸர்வ த்வைத பிரபஞ்சமும் பாலனுக்கு மறைந்துவிடுகிறது.

2-வது மகாரண்யதர்சனம். பாலன் இம் மாதிரி ஸந்தோஷத்துடன் சிறிது நேரம் போக்கி பிறகு சிந்திக்கலானான். தனக்கு ஏகாந்தத்தில் இம்மாதிரி ஸௌக்கியம் எப்போது கிடைக்குமென்று தியானித்தஸமயத்தில் பகவதனுக்கிரகத்தால் விசித்ரமணீயமான பெரிய காடு ஒன்றும் காட்டில் அநேக விதமான விருக்ஷங்களும் பசு பக்ஷி மிருகாதிகளும் கிரி நதி குமாதிகளும் ஸந்தோஷத்துடனும் சப்தித்துக் கொண்டிருக்கிற ஹம்ஸக் கூட்டங்களும் ஸமீபத்தில் பெரியதான மானஸஸரஸ்ஸும் கண்ணிற்குப்பட்டது அவ்விடத்தில் ஏகாந்தத்தில் உட்கார்ந்து கொண்டு மனதையடக்கி ஹிருதயத்தில் பிதாவான பரமசிவனை தியானித்தும் நமஸ்கரித்தும் இருக்கும்ஸமயத்தில்ஸர்வகாரணரூபியானபகவான் பாலனுக்கு ஏற்பட்டிருக்கிற மாயா ரூபமான ஆவரணத்தை போக்கடிக்கிறார். பாலனுக்கு அக்ஞான நாசம் ஏற்பட்டு பரமசிவ தியானத்தில் ஸந்தோஷமாக ஈடுபட்டிருக்கும் சமயத்தில் ஹம்ஸங்களும் மயில் முதலிய பக்ஷிகளும் ஆனந்தமாக நர்த்தனம் செய்தன. இம்மாதிரி ஸமாதிகாலத்தில் ஆகாசவாணியானது, பாலனைப்பார்த்து நீ தன்யனானாய். முக்தனாய்விட்டாய். நீ தற்காலம் உன்னுடைய மாதுலரான விஷ்ணுவின் வீடுவந்துசேர் என்று சொல்லிற்று. இவ் வார்த்தையைக்கேட்டு பாலன் பகிர்முகனானான்.

3வது வைகுண்டதரிசனம். பாலனுடைய ஸங்கல்பானுசாரம் ஈசானுக்கிரஹத்தால் அத்யாச்சர்யமானதும் ஸூரகணங்களால் நிரம்பப்பட்டதும் கோடிஸூர்ய ப்ரகாசமுமான வைகுண்ட லோகம் தோன்றிற்று. அவ்விடத்தில் ரத்தினஸிம்மாசனத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவியோடு கூடிய விஷ்ணுவை தரிசித்து ஸமீபம் அடைந்து சரணாவிந்தத்தில் நமஸ்கரித்து ஆனந்தபாஷ்பத்தினால் சரணத்தை அலம்பினான். இச்சாசக்தி ரூபிணியான லக்ஷ்மீதேவியையும் நமஸ்கரித்து அவளுடைய பூர்ணகடாக்ஷத்திற்கும் பாத்திரனானான். அவ்விடத்திலும் தும்புரு நாரதாதி கணங்கள் ஆனந்தமாக ஸ்துதி செய்கிறதையும் கண்டான். ஏற்கனவே கைலாஸதரிசனகாலத்தில் எந்த ஆனந்தத்தை அடைந்தானோ பாலன் அதே ஆனந்தத்தை அப்போதுமடைந்தான் பின்னும் விஷ்ணுவின் பின்பக்கத்தில் அவ்யக்தமான ஜகத்காரணமான மாயா சக்தியை கண்டான். அப்போது அவன் மனதில் காரணரூபமான ஸ்வரூபத்தை (பரமசிவனை) கண்டோம். ஸூக்ஷ்மரூபகாரியான விஷ்ணுவையும் கண்டோம். இப்போது ஸ்தூல காரிய ரூபமான ஸ்வரூபத்தை (ப்ரும்மாவை) பார்க்கவேண்டுமென்ற இச்சையுண்டாயிற்று

4. ஸத்யலோக தரிசனம். பாலனுடைய ஸங்கல்பத்தால் ஈசானுக்ரஹத்தால் அவனுடைய திருஷ்டிக்கு இந்திராதி தேவர்களால் சூழப்பட்டதும் நைஷ்டிக ப்ரும்மசாரிகளாலும் ஸன்யாசிகளாலும் அடையக்கூடியதும் தேஜோமயமான ஸத்யலோகம் காணப்பட்டது. அந்த லோகத்தில் திவ்யமகாமண்டபத்தில் நாலு வேதங்களையும் நான்கு முகங்களால் எப்போதும் உச்சரித்துக்கொண்டிருக்கிறவரும் ஸநகாதிகளால் சூழப்பட்டவரான ஸாக்ஷாத் பிரும்மாவையும் அவருடைய பக்கத்தில் விளங்குகிற வித்யாதிதியும் பரமேசுவர பகினியுமான ஸ்ரீ ஸரஸ்வதி தேவியையும் கண்டு நமஸ்கரித்து ஸ்துதிசெய்தான். அந்த சமயம் ஸரஸ்வதி பாலனைக் கூப்பிட்டு சமீபத்தில் வா என்றழைக்க உடனே பாலன் தைரியத்தோடு ஸமீபத்தில் நெருங்கி வணங்கியவுடன் தானாகவே பிரும்மாவின் ஸமாதியைக் கலைய பிரும்மாவும் பாலனைப் பார்த்து கடாக்ஷித்தார். பாலன் தத்காலம் பிரும்மாவின் பிற்பக்கத்தில், ஏற்கனவே கைலாசத்தில் மாயையைப்பார்த்ததுபோலவும், வைகுண்டத்தில் மாயா காரியமான மகத்தத்துவத்தையும் பார்த்தது போலவும் மகத்தத்துவ காரியமான அகங்கார தத்துவத்தை அங்கு பார்த்தான். இந்த அஹங்காரம், மஹத்து, மாயை இம் மூன்றையும் ஞானத்தால் பேதம் செய்யாவிடில் மூன்று லோகங்களிலிருந்து வெளிக் கிளம்புவது அஸாத்யமென்று நினைத்தான். இவ்வாறு யோசித்த ஸமயம் ஸ்ரீ ஸரஸ்வதியானவள் பாலனைப்பார்த்து நம்முடைய தாயானவள் அந்தப்புரத்தில் நம்மைக் கூப்பிடுகிறாள் போவோம் வா என்றாள். அதைக் கேட்டு ஆச்சரியத்தையடைந்தான பாலன்.

5. தேவீ ஸபாவிலாசம்:—

அதே சமயத்தில் பாலன் உள்ளில் நுழைந்து தேஜோமயமான மண்டபத்தில் இரண்டு பக்கங்களிலும் வாணீ லக்ஷ்மிகளோடு கூடியும் ஸப்த மாத்ருகணங்களோடுங்கூடிய ஸாக்ஷாத் ஆதி பராசக்தியைப் பார்த்து நெருங்கி வணங்கி ஸ்துதிசெய்த சமயத்தில் தேவியானவள் பாலனுடைய சிரஸில் தன் கையால் அபயம்செய்து கடாக்ஷ விசேஷணத்தால் அநுக்கிரஹித்தாள். பாலன் ஜகன்மாதாவினுடைய அங்கத்தில் உட்கார்ந்து ஸரஸ்வதி லக்ஷ்மி இவர்களால் செய்யப்பட்ட காளத்தி லீடு பட்டு தியானத்திலாழ்ந்தான்.

6. ஸகுண லோகத்ரய மூர்த்தித்ரய தத்வாநுஸந்தானம்.

பாலன் சமாதி கலைந்து யோசிக்கலானான். ஏற்கனவே எந்தவிடத்தில் கைலாசம்தோன்றியதோ அதே இடத்தில் ஒரு ஆரண்யமும் பிறகு மானஸஸரசும், பிறகு வைகுண்டமும் பிறகு ஸத்யலோகமும் காணப்பட்டது. இப்போது மறுபடியும் கைலாசமே காணப்படுகிறது. ஆகையால் இம்மூன்று ஸகுண பிரும்ம லோகங்களும் பரமார்த்திகமாக ஒன்றுதான். ஆனாலும் அந்தந்த உபாஸகானுஸாரமாக அநேகவிதமாகத் தோனுகின்றன. ஸர்வ காரண ஸமஷ்டி ரூபியான பரமேசுவரனுக்கு ருத்திரர் அம்சம், ஸூக்ஷ்ம காரியமான ஹிரண்யகர்பருக்கு விஷ்ணு அம்சம், ஸ்தூல ஸமஷ்டி காரியமான விராட்டுக்கு பிரும்மா அம்சம். ஆகையால் பிரும்மா விஷ்ணுவினிடத்திலும் விஷ்ணு ருத்திரனிடத்திலும் பிரதிஷ்டிதராக இருக்கிறார். ஸாமான்யமாகவும் ஸ்தூலமானது ஸூக்ஷ்மத்திலும் ஸூக்ஷ்மம் காரணத்திலும் இருப்பது நியாயமன்றோ. அம்மாதிரி ஸ்தூலமான ஸத்யலோகம் ஸூக்ஷ்ம வைகுண்டத்திலும், வைகுண்டம் காரண கைலாசத்திலும் அதிஷ்டிதமாக இருக்கிறது. ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இரண்டும் அனித்யமானது. காரணம் ஒன்றே சாச்வதம். கார்யவர்கம் காரணவஸ்துவை அவலம்பிக்காமல் இருக்கமுடியாது. காரணமானது ஒன்றையும் அபேக்ஷிக்காமல் த்ரிகாலத்திலும் இருக்கக்கூடும். காரண ஸத்தையை தவிர்த்து காரியவர்கத்திற்கு தனியாக ஸத்தை கிடையாது அம்மாதிரியே ஞானஸ்வரூபிணியான ஸ்ரீ பார்வதியிடத்தில் ஸூக்ஷ்மமான லக்ஷ்மிதேவியும் ஸ்தூலரூபமான ஸரஸ்வதி தேவியும் பிரதிஷ்டிதைகளாக இருக்கிறார்கள். ஆகையால் ஸாக்ஷாத் பரமேசுவரர் ஒருவரே உபாஸகானுக்கிரகார்த்தம் அநேக ரூபமாகவும் அம்பிகையே லக்ஷ்மி ஸரஸ்வதி ரூபமாயும் தோன்றுகிறார்கள். விசாரித்துப்பார்த்தால் ஒரே ஸ்வரூபம்தான் மிச்சமாகிறது. சில அக்ஞானிகள் பரமேசுவரர் தமோகுணமுடையவர் என்றும் ஸம்ஹார்த்தா என்றும் தோஷம் சொல்லுகிறார்கள். அது மிகவும் பிசகு. ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் கருணையால் தாரக பிரும்மோபதேசம்செய்து உத்தாரம்செய்பவரும் ஞானநிதியுமான ஸ்ரீ பரமேசுவரனுக்கு தமோகுணம் எங்கிருந்துவரும். பிரளயத்தில் அவருடைய ஸம்ஹாரத்தில் ஜகத்துமுழுவதும் சாந்தியடைவதால் அதுவும் குணமாக முடிகிறது. ஆகையால் இதரர்கள்சொல்லும் தோஷம் ஒருபொழுதும் சசியை ஸ்பரிசிக்கலாகாது.

எப்போதும் பகவான் ஆனந்தரூபியாகவே இருக்கிறார். ஆகையால் எப்போதும் பக்தானுக்கிரகார்த்தம் ஆனந்ததாண்டவம் புரிந்துகொண்டிருக்கிறார் என்று இவ்வாறு சிந்தித்தான் பாலன்.

7. ஆனந்த நடன விலாசம்.

அதேஸமயம் பகவானுடைய நடனத்தை தரிசித்து சபாமண்டபம்சென்று தியானித்துதானும் நடனம்செய்து பகவானோடு தேஜோரூபியாய்க் கலந்தான் பாலன்.

கிரமமாக விதேக கைவல்ய நிருப் நிலையடைவதற்கு இம்மாதிரி பாலனுடைய உத்தமானுபவத்தை யனுசரித்து மற்றவரும் நடந்தால் எல்லாரும் மோக்ஷத்தை யடையலாம் என்று கிரந்தம் உபஸம்ஹாரமாகிறது.

இந்த க்ரந்தமானது ஸர்வஜன உபகாரத்திற்பொருட்டு கிரந்தகர்த்தாவின் குமாரரும் அத்வைத சாஸ்த்ரத்தில் விசேஷ பரிசயமுள்ளவரும் பிரசித்த ந்யாயவாதியுமான ஸ்ரீமான் R. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களால் உத்தரபாகத்தில் சொல்லப்பட்ட விஷயத்தை ஸங்க்ரஹமாகவும் ஸ்பஷ்டமாகவும் பத்யரூபமாய் எழுதப்பட்டு அத்துடன்சேர்த்து நாகரலிபியில் மெட்ராஸ் லா ஜர்னல்பிரஸில் அழகாக அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

வெளியூர்ச்செய்திகள்.

ஸ்ரீ பார்த்தஸாரதிஸ்வாமி தேவஸ்தான ப்ரதிஷ்டா வைபவம்

விஷமிகளின் குறும்புத்தனம்

முகாம் மதராஸ் மார்ச் 22வ.

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிஸ்வாமி தேவஸ்தானப்ரதிஷ்டா வைபவம் 15-3-37ல் ஆரம்பமாய் அதிவிமர்சையாய் நடைபெற்று நேற்றோடு சம்பூர்ணமாயிற்று. மாகாணமெங்குமுள்ள பக்தர்கள் திரளாக விஜயமாயிருந்தனர். லௌகிக நிர்வாக விஷயங்கள் தேவஸ்தான டிரஸ்டி ராவ்பகதூர் வி. ரெங்கநாதஞ்செட்டியாராலும், வைதிக காரியாதிகள் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்காராச்சாரியாராலும் கவனிக்கப்பட்டதாய்த்தெரிகிறது. ஞாயிறன்று சம்பூர்த்தி தினத்தில் விஷமிகள் தீண்டாதவர்களுடன் கம்பு தடிகளுடன் உட்சென்றதாயும் ஸ்வாமி நேவேத்ய பதார்த்தம் பிரசாதம் வகையரு வைத்திருக்குமிடங்களுக்கும் சென்றுவிட்டதாயும் அதுசமயம் ததீயாராதன (சாப்பாடு) சமயமெனவும் அங்கும் அவர்கள் நுழைந்ததும் பெரிய கலவரம் நடைபெற்று கோவிலுக்குள் அக்ரமமாயும் அற்பத்தனமாயும் தடித்தனமாய் நுழைந்து விஷமச்செயல் புரிந்தவர்கள் மஹாஜனங்களால் கையப்புடைக்கப்பட்டார்களெனவும் சொல்லி இருக்கிறதுடன் அதற்குமேல் கோயில் காரியாதிகள் நிரம்பவும் தாமதமாய் திரும்பவும் விசேஷ சம்ப்ரோக்ஷணைகள் நடைபெற்றதாயும் பெரும்பிரஸ்தாபமாய் இருக்கிறது. இம்மாதிரியான விஷமச்செயல் டிரஸ்டி ராவ்பகதூர் செட்டியாரால் சாதுர்யமாய் சமாளிக்கப்பட்டது பாராட்டத்தக்கதாகும். வந்தவர்களுக்கு ஸ்ரீ வானமாமலை மடத்திலும் தேவஸ்தானத்திலும் ததீயாராதனம் விமர்சையாய் நடைபெற்றன. திங்களன்று மாலையில் ஸ்ரீ வானமாமலை மடத்தில் வைத்து காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் ஆச்சாரியாரால் வேதபாராயண அத்யாபகர் முதலான கைங்கர்யாதிகளில் ஈடுபட்டுள்ள ஸ்வாமிகள் யாவர்க்கும் வேஷ்டி உத்தரீயம் ஸம்பாவனை முதலியன வழங்கப்பட்டன.

நமது திருநகரி நிருபர்.

ஆழ்வார் திருநகரி

பங்குனி உத்திர மஹோத்ஸவம்

இந்நகர் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான பங்குனி உத்திர மகோத்ஸவம் 17-3-37ல் ஆரம்பமாய் நடைபெற்று வருகிறது. 26-3-37ல் சம்பூர்ண தினத்தன்று வருகிற ஆண்டு கார் அறுவடைக்காக நிலங்களைப் பயிர்செய்யவேண்டி உழவுத்தொழில் புரியும் ஹரிஜனங்களுக்கு நிலச்சுவான்கள் நாள் சொல்ல வேண்டி தேங்காய் கொடுப்பது வழக்கம். அன்று பல்லாயிரக்கணக்கில் தெருக்களில் ஹரி ஜனங்கள் கூட்டங்கூட்டமாய்ச் சந்தனப் பூச்சும் கையில் தேங்காயுமுடன் நடமாடுவது ஆச்சர்யமாகும். திருநகரி ஸ்ரீவைகுண்டம் முதலிய நவதிருப்பதிகளில் ஒன்றான இந்நகரின் கிழ்புறமுள்ள தென்திருப்பேரை தேவஸ்தானத்தில் உத்தரத்தன்று கலஶாரோகணமாய் 10 தினம் அதிவிமர்சையாய் நடைபெறும். மஹோத்ஸவத்தில் இரண்டு வேளையிலும் தேவஸ்தானத்தில் வந்தவர்கள் யாவர்க்கும் அதிமதுரமான ததீயாராதனம் நடைபெறும், காரப்பங்காடு ஸ்ரீ உ.வே வித்வான் தேசிகவரதாச்சாரியாரால் உத்ஸவத்தையொட்டி பல அரிய உபந்யாஸங்களும் செய்யப்படுமெனத்தெரிகிறது.

ஸ்ரீமத் ஆத்தான் ஸ்வாமிகள் யாத்ரா விஜயம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆத்தான் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் தமது சிஷ்யகோடிகளின் பிரார்த்தனைக் கிணங்க இரண்டொரு வாரத்தில் இந்நகரிலிருந்து ஹைதராபாத் பக்கம் சிஷ்யயாத்ரையாய் எழுந்தருளுவாரெனத்தெரிவதுடன் தேவஸ்தான கமிட்டி வைஸ் பிரஸிடெண்டும் பிரபல மிராசுதாருமான ஸ்ரீமான் டி. தெய்வச்சிலை ஐயங்கார் பி.ஏ, பி.எல், யாத்ரா ஏஜண்டாக விஜயம்செய்வாரெனவும் தெரிகிறது.

நமது விசேஷ நிருபர்.

சென்னை.

ஸ்ரீ பூரி ஜகன்னாதத்தில் நடக்கும் அகில இந்தியவர்ணாச்ரம சங்கத்திற்கு ப்ரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீவத்ஸ வெ. சோமதேவசர்மா அவர்கள் பலவித அசௌகரியங்களால் அங்கு செல்லாமல் வேறு ஓர் சபைக்குச் சென்று வந்தார்.

திருவாமாத்தூர் வைதிகசபை. பிரும்மஸ்ரீ மஹாக்நிசித்யாக தீக்ஷிதரவர்களால் நடத்தப்படும் அநசனஸம்ஹிதா பாராயணத்திற்காக பல வேதபாடிகள் ஷெ ஊரில் சேர்ந்திருந்தனர். அச்சமயம் வர்ணக்ரம வித்வான் பிரும்மஸ்ரீ அபிநவ வ்யாஸ, வாக்குடை சுப்பராமகனபாடிகள் தலைமை வஹிக்க கிருஷ்ணயக்ஞ பிரும்மஸ்ரீ உமாமஹேச்வர சாஸ்திரிகளால் பிரேரணை செய்யப்பட்ட கீழ்கண்ட தீர்மானத்தை ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா ஆமோதிக்க ஏகமனதாக தீர்மானம் நிறைவேறியவர்களுக்கு அனுப்பப்பட்டது.

1. லலிதாசதனம் பிரும்மஸ்ரீ தண்டலம் ராமஸ்வாமி அய்யர் அவர்கள் மிட்டுகாஸநாதன தர்ம சபையை சரியானகாலத்தில் நடத்தி வைத்ததற்காக அலவைக்கொண்டாடி முக்தாபரமேச்வர ப்ரஸாதத்தாலும்; பிராமண பிரஸாதத்தாலும் அரோக த்ருடகாத்ரராயும் தீர்க்காயுஸாயுமிருந்து பல தர்மங்களைச் செய்துவர பிரார்த்திக்கிறோம்.

2. திருவாங்கூர் அரசன் செய்த அக்ரமத்தைக் கண்டித்து உடனே அச்சட்டத்தை மாற்றி ஸம்ப்ரோக்ஷணம் செய்யும்படி இச் சபை கோருகிறது.

ஸம்சயம். சேஷதர்மம் என்ற வடமொழி நூல் இப்போது அச்சிலுளதோ? எங்கு கிடைக்கும்? அது பாரதத்தைச் சார்ந்ததா ஆனால் பிரமாணமென்ன?

நமது நிருபர்.

மஹம்மதிய குடும்பம் ஹிந்துமதத்தில் சேர்ந்தது.

லக்ஷ்மணபுரியில் சையது இலியார்ஸ் ஹஸேன் என்ற பிரபல மஹம்மதியர் தமது குடும்பத்தாருடன் ஹிந்து மதத்தில் பிரவேசித்தார். இவருக்கு த்விஜ ஸம்ஸ்காரங்கள் செய்துவைக்கப்பட்டனவாம். இவருக்கு தர்மவேத சர்மா என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேர் உத்ஸவத்தில் விபத்து. மூவர் மரணம்.

திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி தேர் ஓடிவரும் ஸமயத்தில் மூன்றுபேர் மீது தேர் ஏறியதால் அவர்கள் மரணமடைந்தார்கள்.

சென்னை புதிய மந்திரிகள்.

6 பேர் நியமனம்.

சென்னையில் கீழ்கண்டவர்கள் தாற்காலிக மந்திரிகளாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். ஸர். கே. வி. ரெட்டி, முதல் மந்திரி. ஸ்ரீமான்களான பன்னீர் செல்வம், குமாரராஜா முத்தையா செட்டியார், பாலத், எம். ஸி. ராஜா, கபீபுல்லா ஸாஹிப். இந்த 6பேர்கள்மட்டும் மந்திரிகளாக வேலைபார்ப்பார்கள். ஜஸ்டிஸ் கக்ஷியார் கக்ஷிஹோதாவில் இதில் ஸம்பந்தப்படக்கூடாதென்று முடிவு செய்யப்பட்டதாம்.

கம்பர் திருநக்ஷத்திரம்.

குடந்தை டவுன் ஹைஸ்கூல் மாணவர் சங்கத்தின் ஆதரவில் சென்ற 26—3—37 வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு கல்வியிற் பெரியராகிய கம்பரது நாளைக் கொண்டாட ஓர் பொதுக்கூட்டம் மகா-ஸ-ஸ்ரீ C. S. முத்துசாமி அய்யர் அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. அதுசமயம் நகரின் பல பிரமுகர்கள் விஜயம் செய்தனர். ஹை ஸ்கூல் தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் ராஜகோபால பிள்ளை அவர்கள் கம்பரது சரித்திரத்தை மிக அழகாகப் பிரசங்கித்தார். ஸ்ரீமான் H. சுப்பராவ் அவர்கள் கம்பர் கவிநயம் என்பதைப் பற்றிப் பேசினார். ஸ்ரீமான்கள் M. ராமராவ் பிச்சமூர்த்தி அய்யர், முதலியவர்கள் இத்தகைய பெரியார்களின் நாட்களைக் கொண்டாடவேண்டிய அவசியத்தைப்பற்றிப் பேசினார்கள். தலைவரவர்கள் பிரசங்கத்திற்குப் பின் ஹை ஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் வை. சா. வெங்கடராமய்யர் அவர்கள் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நடந்தேறியது.

ஒரு நிருபர்.

ஸ்ரீ மகாபாரதச் சுருக்கம் (ஆதிபர்வம்.)

மூலத்திலுள்ளபடியே சுருக்கி எளிய நடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழ்பெற்றது.

விலை அணா 0—8—0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Binding of Law Reports.

We beg to bring to the kind notice of Gentlemen of the Bar that our Binding department is at their service and that we undertake to bind Law Reports at favorable rates. Quick and satisfactory work is guaranteed.

SRI JANARDANA PRINTING WORKS, LTD. KUMBAKONAM.

நமது கடமை.

(ப. ரே. திருமலை அய்யங்கார்.)

பழையன கழிதலும் புதியன புகுதலும் இக்காலத்து இயற்கை. புதியனவாகக் கூறப்படுவதும் உத்தரக்ஷணத்திலேயே பழையனவாக ஆகின்றதை பராமரிசிப்பதில்லை. மேலும் என்றும் மாறாத சில தத்வங்கள் உள்ளன என்பதையும் அடிக்கடி மறக்கவொண்ணாது. ஆயினும் தற்கால உலகியல் விபரீதத்திலேயே நாடிச் சென்றுகொண்டிருக்கிறது. காய்தல் உவத்தல் அகற்றி ஆயும் அறிவுடையார் குறைந்து வருகின்றனர். கலியின் கொடுமை என்று காலத்தைப் பழிப்பதிற் பயனில்லை. கலி சாது என்று பெரியோர் கூறுவர். அவரவர் கடமையைச் செய்தலே அறிவினைப் பெற்றதன் பயனாகும்.

முக்கியமாக நம் மாகாண சட்டசபையில் வருகிற மாதத்திலேயே தீண்டாமை விலக்கு மசோதா, ஆலயப்ரவேச மசோதா இவை போன்றவை கொண்டுவரப்படலாம். அவை ஆக்டுகளாக வரவும் தக்க பலம் கிடைக்கலாம். இச்சமயத்தில் சனாதனிகள் வாளாயிருத்தல் ஆத்மஹானியென்னலாம். வீண் குதர்க்கங்களிற்றலையிடாமல் நிமிடந்தாமதியாது தீவிரமாக உழைக்கவேண்டும். கிராமங்கள், நகரங்கள், பேட்டைகள் தோறும் கூட்டங்கூடி வரப்போகும் இன்னல்களை பொதுஜனங்களுக்கு நன்கு தெளிவித்து, கண்டனத் தீர்மானங்கள் மழமழப்பில்லாமல் ஏகமனதாய் நிறைவேற்றி, அனுப்பவேண்டிய இடங்களுக்கு சற்றேனும் தாமதமின்றி அனுப்புவதுடன், நடந்த விஷயங்களைப் பத்திரிகைகளுக்கும் அவ்வப்போது அனுப்பி பிரசுரிக்கச் செய்யவேணும். எங்கும் தக்க ஏற்பாடுகள் தக்க மனிதர்களைக்கொண்டுசெய்வித்தல் அத்யாவச்யகம். வெறும் தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் அவற்றின்படி நடக்கவேண்டிய ஏற்பாடுகள்செய்தல் அதனினும் ஆவச்யகம். சனாதனிகளின் தொண்டர் படை ஆங்காங்கு திரட்டி வேண்டும்போது நற்றுறையிலிறங்கி தேவதேச ஸேவை ஆற்ற சித்தமாய் நிற்றல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் கடமையை உணர்ந்து தம்மாலியன்ற வரை மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களாலும் நிர்மலமான கைங்கரியம் செய்யத் தயாராய் இருக்கவேண்டும். முன்ஜாக்ரதையாகவிருந்து பிரயத்னங்கள் செய்தால் எவரும் நம் தர்மத்துக்குத் தீங்கிழைக்க முன்வாரார். ஆகம முறைப்படி நடத்தப்பட்டுவரும் ஆலயங்களுள் அந்நிய ஜாதியார் பிரவேசிக்க பிரயத்தனங்கள் செய்து சேவெம். ஆசுரத்தன்மை அன்றி வேறில்லை. இதனால் தீண்டாதாருக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது. ஆங்காங்கு உள்ள பண்டிதர்கள் இதன் உண்மை தத்துவத்தை சகலரும் அறியுமாறு பிரசங்கஞ் செய்யவேண்டும். ஸ்ரீமான் யூ. பி. கிருஷ்ணமாசாரியாரவர்கள்போல்வார் மாகாணம் முழுமையும் சுற்றுப்ப்ரயாணம் சென்று ஆங்கிலக் கல்வியால் மதியிழந்து நிற்கும் மாணவர்கள் நன்மதி அடையுமாறு செய்தல் வேண்டும். இது மிகவும் முக்கியமான விஷயம்.

தற்காலம் உள்ள வயதிற் பெரியோர் மாத்திரம் குழுமிக் காரியங்கள் செய்வதில் எள்ளவும் பயனில்லை. இளஞ்சிறார்கள், வாலிபர்கட்கு நம் சநாதனதர்மப் பெருமையைத் துறையோடு புகட்டிவிட்டால் அப்புறம் கஷ்டமிராது. நாம் எவ்வளவு முயன்றும் அவர்கள் கோணல் வழியில் செல்கிற பர்யந்தம் நாட்டுக்கு நன்மை உண்டாக மார்க்கமில்லை. அங்ஙனம் நினைப்பதும் பகற் கனவாம். இது தவிர மற்றொரு இன்றியமையாதகாரியமும் செய்தல்வேண்டும். அடிக்கடி வாரத்திற்கு ஒருமுறையோ இருமுறையோ அவ்வப்போது நிலவிவரும் விஷயங்களைக் குறித்து நாம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை ஸ்பஷ்டமாக போதனா ரூபமாக துண்டுப்ரசுரங்கள் வெளியிடல் மிகவும் ப்ரதானமாகும். இப்பிரசுரங்கள் நாட்டிலுள்ள ஒவ்வோரகத்திற்கும் செல்லுமாறு செய்தல் வேண்டும். இம்முறையில் உழைப்பது மிகவும் காரியகரமாகும். இது அந்தந்த ப்ரதேசமொழிகளில் இருப்பின் நனி நலம். எல்லாவற்றிற்கும் பணம் வேண்டும், தக்க மனிதர்கள் வேண்டும். நமக்கு என்ன இருக்கிறது? என்று காலந்தாழ்த்தினால் வரும் அனர்த்தம் நம்மதே. அப்படிப் பின்வாங்குவதாயிருந்தால் அதிற் பிரவேசமே அநுசிதம். 'செய்வினைத் திருந்தச் செய். அரைகுறைவேலை அல்லல் விளைக்கலாம். கிட்டாதாயின் வெட்டென மற. ஆற்றிலொருகால் சேற்றிலொருகால் வைப்பதிற் பயனுண்டோ? கவர்ன்மெண்டிடம் தூது போவதோ, பதப் பாதுகாப்புகள் வேண்டுமென்று யாசிப்பதோ அது தீரனின் செயல் அல்ல. நம் கடன் பணிசெய்து கிடப்பதே. பலன் நம் கையில் இல்லை. கடமைச் செய்யாவிடில் அதுவுங் குற்றமே. முடிக்க இயலாத பிரச்னைகளிற் காலத்தைப் போக்காமல் உடனே செய்யவேண்டுவனவற்றை ஆங்காங்குள்ள சனாதனதர்ம ப்ரசாரக சபைகள் தீர்மானித்து சரியான திட்டங்கள் ஏற்படுத்தி மனச்சோர்வின்றி வேலை செய்தால் தர்மவிரோதிகள் அட்டூழியம் செய்வதை அறவே ஒழித்துவிடுவர். உழுகிறவன் ஏழையானால் எருது மச்சான் உறவு கொண்டாடுமாம். தக்கதைத் தக்க பருவத்தில் தக்கபடி நிறைவேற்றித் தகாதனவற்றைத் தள்ளலே முந்தையோர் கண்ட முறை. காலசக்கரம் அதிவேகமாகச் சுழல்கின்றது. அசுரர் கோஷ்டி நாளுக்கு நாள் வலுக்கின்றது. யுத்தம் தயாராகிறது. நாம் சோகிப்பதில் யாது பயன்? முன்வைத்த காலைப் பின் வைக்காமலும், புறமுதுகுக் காட்டி ஓடாமலும் தைரியத்துடன் முன்னணியில் நின்று யுத்தம் புரிவதே தர்ம வீரனின் முதற்கடமை. சனாதனிகள் இதனை இப்போதாயினும் நன்கு உணர்வாரா?

"யஜ்ஞோபவீதம்."

மாசி மாதம் 14௳ பிரம்மஸ்ரீ தர்மராஜ கனபாடிகள் வைதிஷயமாய் எழுதியதைக் கண்டதில் மிக ஆனந்தமுண்டாயிற்று. ஆனால் அவர் கூறியவாறு நடக்க சில காரணங்களைக் கூட எழுத வேண்டுமென மனதில் பட்டதால் அவைகளை யிங்கு எழுதத்துணிந்தேன். தற்காலமுலகில் முக்காலும் ஜனங்கள் அப்பிரதக்ஷிணமாகவும் அநேகவித அசுத்தியோடும் மற்று பலவாறான தோஷ பகுளமாயுள்ள நூல்களை வாங்கி பிரித்து உபவீதம் தரித்துக் கொள்கிறார்கள். மற்று சிலர் கடையில் வைத்திருக்கும் பூணூலையே வாங்கி தரிக்கிறார்கள். ஸ்ரீமான் கனபாடிகள் குறித்தவாறு அவ்வளவு விதி வத்தாயில்லாவிடினும் தானே நூற்றுவது (தக்ளியில் நூற்றால் பிரதக்ஷிணமாய் வரும். ராட்டையானால் இரண்டு சக்ரமத்தியிலுள்ளகயிற்றில் ஒரு சுற்றுப்போடவேணும்.) பூணூலுண்டாக்கி தரிப்பவர்கள் துர்லபமாயிருக்கின்றனர். மேலும் அதன் போனைப்பையும் நன்கு கவனித்தால் (யஞ்ஞ ஸூத்ரம் பிரம்ம ஸூத்ரம்) கர்மாக்கள் செய்ய இதனால்தான் அதிகாரம் சித்திக்குமெனவும் அக்கர்மங்கள் திருகுணாத்மகங்கள் (ஸத்வம், ரஜஸ், தமஸ்) எனவும் பூணூலிலுள்ள மூன்று நூல்கள் எவ்விதம் முடித்தல் அர்பிக்கப்பட்டுள்ளதோ அவ்வாறு திருகுணாத்மகமான கர்மங்களை பகவதர்பணம் செய்ய வேண்டும் (கர்மத்தில் கர்த்ருத்வபோதமில்லாமல் ஈசனில் மனதைச் செலுத்தவேண்டியது)மெனவும் தெரியவரும். ஆதலால் மிக அருமைவாய்ந்த பூணூலுக்கு வேண்டிய நூலைத்தானே நூற்றால் அதற்குச் சிரேஷ்டத்வம் கிடைப்பதோடு நமக்கும் அரிய இரண்டு குணங்கள் சம்பாதிக்கலாம். அதாவது ஏகாக்ரதையும் ஸகிஷ்ணுதையுமே. இவைகள் பிரம்மஞானத்துக்குக்கூட பிரதான சாதனங்கள். ஆகலால் வைதிக தோஷத்தைப்போக்கவும் குணத்தை சம்பாதிக்கவும் யாவரும் ஒருதினத்தில் அரை நாழியாவது முயற்சிக்கவேண்டியது அவர்களின் கடமையல்லவா; எவ்வளவோ சமயம் ஆயுளைமட்டும் பக்ஷிக்கச்செலவிடுவதில் சிறிது இதற்கும் விநியோகிப்பது அநுசிதமாயிராது. இதுதான் தற்காலம் நான் கூறவந்தது.

கே.வி. சுப்பிரமணிய சாஸ்த்ரி.
மங்கொம்பு.

திருவாங்கூர் ஆலயப்ரவேசக் கண்டனம்.

வானமாமலைமடத்தில் பெருங்கூட்டம்.

மதராஸ், மார்ச் 23௳

திருவல்லிக்கேணி ஸ்ரீவானமாமலைமடத்தில் நேற்று முன்தினம் பிரம்மாண்டமான பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ் தலைமை வகித்தார். திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரத்தைக் கண்டித்தும், அம்மாதிரி விஷமச்செயல்கள் பிரிட்டிஷ் எல்லையிலும் பரவாவண்ணம் கவனித்துக்கொள்ளவேண்டுமெனவும், அதை எதிர்த்து நடவடிக்கை செய்யும் கொச்சி மஹாராஜாவைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாகாணமெங்குமுள்ள பிரமுகர்கள் நிரளாக விஜயமாயிருந்தனர். இக்கூட்டம் நடக்கக் காரணபூதமான திருவல்லிக்கேணி தமிழ்ச் சங்க செக்ரெட்டரி ஸ்ரீமான் பி. ஆர் திருமலை அய்யங்காரின் சிரத்தை பாராட்டத்தக்கதாகும்.

நமது நிருபர்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது அசல் தங்க நகைகளைப்போன்ற "கவர்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கண்ணுசாமி பத்தர். பெரியதெரு, கும்பகோணம்.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

பெரியகுளம்வேதவிலாஸில்.

தார்மிக உபந்நியாஸங்கள்.

22—3—37 மாலை மணி 4-க்கு P. S. வைத்தீசுவர கனபாடிகளால் வைதிக கட்டடத்தில் ஸநாதன தர்மத்தைப்பற்றிப் பேசுவதற்காக ஓர் கூட்டம் கூடிற்று.

அநேக வேதவித்வான்களும் மேல்மங்கலம் பெரிய குளம் சுற்றுக்கிராமங்களிலிருந்து அநேக வித்வான்களும் வந்திருந்தார்கள்.

ஸாமவேத மிராசு புரோகிதர் பிரும்மஸ்ரீ நாகபூஷணம் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்.

P. S. வைத்தீசுவர கனபாடிகள் சபைகூடிய நோக்கத்தை தெரிவித்தார். அதாவது:—

தற்காலம் நமது தேசத்தில் நமது முன்னோர்களால் ஏற்பட்டு நாம் பெருமையாகக் கைப்பற்றிவந்த அநேக ஆசாரங்கள் மாறுதலை அடைந்துவிட்டன. ருதுமதிவிவாகம் விதவாவிவாஹம், தீண்டாமைவிலக்கு, பஞ்சமர்களின் ஆலயப்பிரவேசம் முதலிய வழக்கங்கள் புதிதாக ஏற்பட்டுவிட்டன.

பிராமண ஜாதியில் சிறு குழந்தைகளின் விவாகமானது மந்திரச்சடங்கு மாத்திரந்தானே? சரீர சம்பந்தம் சுமார் 14 வயதுக்கு மேல்தானே ஏற்படும். அந்த மந்திரச் சடங்கையே 14 வயதுக்குமேல்தான் செய்யவேணும் என்று ஓர் சட்டம் பிறந்தது. அநுஷ்டானத்துக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த சமயம் அநுஷ்டானத்துக்கு வந்திருக்கிறதே, இதினால் நாம் என்ன லாபம் அடைந்தோம்? அல்லது சந்தோஷம் உண்டா? நமது குழந்தைகளுக்கு ஸந்தோஷம் உண்டா? பிராமணப் பெண் குழந்தைகளுக்கு சிறுவயதில் கலியாணம் செய்து பிறகு முதல் ருது ஸ்நாந உத்ஸவம் நடத்தினால் அக் குழந்தைகளின் ஸந்தோஷத்தையும் கலியாணமாகாத பெண் குழந்தை 14-வது வயதில் படும் துக்கத்தையும் கவனித்தால் நாம் சொல்லாமலே ஸகலரும் அறிந்துகொள்ளலாம். நிற்க ருதுமதி விவாகம் செய்யக்கூடிய ஜாதிப்பெண்களுக்கு ருது ஸ்நாந கொண்டாட்டம் நன்றாய் நடக்கிறது.

கன்னிகா விவாகம் செய்யக்கூடிய ஜாதிப் பெண்களுக்கு ருதுஸ்நாந கொண்டாட்டச் சடங்கு முற்றிலும் தொலைந்துவிட்டது.

தற்காலத்தில் திருவாங்கூர் பஞ்சமர்கள் ஆலயப்ரவேச விஷயமும் சாஸ்திர விரோதமும் ஆஸ்திக மனச்சங்கடமும் நாஸ்திகர்களின் மன உச்சாகமுமாக இருக்கிறது. கலிகால கொடுமைக்காக நாம் என்ன செய்யலாம் என்று பரிதாபத்துடன் சொல்லி முடித்தார்.

உடனே வீரபாண்டி K. R. ஸதாசிவப் பிரும்மம் சபை வணக்கத்துடன் கூறியதாவது.

மஹான்களால் நட்ட கல்லுங்கூட தெய்வமாகிவிடுகிறதாம். அப்படிக்கு நமது சாஸ்திரம் உலகத்தில் எவ்வளவோ கற்களிருக்கிறது. டிமார்கேஷன் கல், சுமைதாங்கி கல், அம்மி கல், எந்திரக் கல், இந்தப் பெயர்கொண்ட கற்கள் மனிதனுக்கு ஓர் உபயோகமாக ஆகிறது. கோவிலுக்குள் நட்டிருக்கிறது கல்லேதான் அந்த கல்லுக்கு இந்துக்கள் என்று பெயர்கொண்ட நாம் ஸ்வாமி என்று பெயர்வைத்துகொண்டோம். எப்படி ஸ்வாமி ஆச்சுது? பெரியோர்களுடைய வழக்கத்தாலும் ஜாதிபேத-சாஸ்திர ஆசார-தேச வழக்கத்தாலும் வைத்துகொண்டோம். உண்மையில் ஸ்வாமி காணக்கூடாதது. அந்த ஸ்வாமியை (காணக்கூடியதாக)ச் செய்து கொண்டோம்.

அதுபோலவே ஸாமான்ய ஜனங்களுக்கு தெய்வ ஸ்வரூபம் மனதில் பதியவேண்டியதற்காக விக்கிரஹ ஆராதனம் ஏற்பட்டது.

பஞ்சமன் கோவிலுக்குள் புகுவதற்கு முன்னடியே பத்மநாபஸ்வாமி மஹான்களின் ஹிருதயத்திற்குப் போய்விடவில்லையா.

அநாசாரம் ஏற்பட்ட கோவிலில் ஸ்வாமி இருப்பாரா? அப்படி நமது சாஸ்திரம் உண்டா?

பஞ்சாங்கத்தை ஒளித்துவிட்டால் அமாவாஸை கிடையாதா, கடியாரத்தை ஒருவன் உடைத்துவிட்டால் சூரிய உதயாஸ்தமானம் கிடையாதா, சிப்பை ஒளித்தால் கலியாணம் நின்றுவிடுமா?

அதுபோல்மஹா புருடர்களும் எவ்வளவு காலத்துக்கு முன்போல் ஏற்பட்ட ஸ்வாமி உருவக்கல்லை அநாசாரத்தினாலோ அக்ரமத்தினாலோ அவிவேகத்தினாலோ ஒருவன் உடைத்தான். மிதாத்தான் அவமதித்தான். ஸ்வாமிக்கு ஏதாவது குறைவா? சாஸ்திரப்படி ஸ்வாமி ஸான்னித்யம் எந்த வழியிலிருந்து கல்லுக்கு வந்ததோ அந்தவிடத்துக்குப் போய்விட்டது.

சாசி விசுவநாதஸ்வாமி பழய கோவில் இப்போது இருக்கிறதா?

முஹம்மத்கஜ்னவி ஔரங்கஸெப்காளில் எவ்வளவோ கோவில் பாழாக்கியிருக்கிறதே! கோவில்தான் தொலைந்ததேதவிர ஸ்வாமியும் தொலைந்துவிடுமா? அந்த ஸாந்நித்யம் நமது பரம்பரையில் குறைவில்லாமலிருக்கிறது. எந்த துஷ்டன் கோவிலை இடித்தானோ அவன் வாழ்நாள் எப்படி ஆச்சுது என்று சபையோர்கள் தெரிந்துகொள்வார்கள்.

குரு க்ஷேத்திரத்தில் யுத்தாங்க பூமி மத்தியில் வீராவேசத்துடன் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனிடம் சொன்ன வசனம் ஒருகாலும் பொய்யாகாது. கிருஸ்துவ மகம்மதியனை இந்துவாக்கி நமது மதத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியம் நமக்கு ஒருகாலுமில்லை.

ஸத்யம், தர்மம் இரண்டும் தான் நமக்கு சரியான ரிவால்வர் அதுதான் எக்காலத்தாலும் நமக்கு ஜயம்கொடுக்கும். அதை குறைத்தால் நம்மை கெடுத்துவிடும். ஆகையால் நாம் தர்மம் ஸத்யம் அநுஷ்டித்து நமது பிள்ளைகளையும் நல்வழியில் நடக்கச் செய்யவேண்டியது அவசியம். பிறகு டாக்டர் T. N. சர்மா அவர்கள் சபை வணக்கத்துடன் உபன்யாஸம் செய்ததாவது:—

நமது பாரசாஸ்திரத்தில் சொன்னபடி நமது பிள்ளைகளை எவ்விதத்திலும் நல்வழி படுத்தவேண்டியது அவசியம், அதாவது குடுமி, குறிகள், உடை, நடைகள் இவைகள் மாறாமல் பிள்ளைகள் இருக்கும்படி செய்யவேணும், இது வெளிப்படை அடையாளம்.

உண்மை, தர்மம், குலவித்தை, மாத்ருபக்தி பித்ருபக்தி, குருபக்தி, ராஜபக்தி, தெய்வபக்தி இவைகளை பிள்ளைகளுக்குப் புகட்டுவது மிகவும் அவசியம்.

தற்காலத்தில் குலப்படிப்பு முற்றிலும் தொலைந்து ராஜாங்கப்படிப்பு, என்று சொல்லி கொண்டு இங்கிலீஷைப்படித்து கைப்பொருளையும் இழந்து ராஜாங்கத்தில் வேலை இல்லாமல் கஷ்டத்தையும் அநுபவிப்பதுடன் காலக்ஷேபத்துக்கிடமில்லாமல் தாங்கள் படிப்பை கொண்டு பிராமண நிந்தை ராஜத்துவேஷம் மதத்துவேஷம், ஆசாரத்துவேஷம், த்ரிகால ஞானிகளான ரிஷிகளின்நிந்தை வேதநிந்தை இந்தவழியில் நன்றாய் புத்தியைசெலுத்தி வேலைசெய்கிறார்கள்.

ஆனால் தேச சரித்திரத்தை கவனிக்குமளவில் சமணர்கள் சார்வாகர்கள் பந்தயத்தில் தோற்றுப்போனதாக தெரியவருகிறது. மகம்மதியர்கள் இரானிலும் இந்தியாவிலும் பிரவேசித்து இம்சைசெய்து பலவந்தப்படுத்தியும் தனது மதத்தைப் பரவச்செய்ததாக தெரியவருகிறது. புத்தர்கள் இம்சை செய்யாமல் இருபத்திநாலாயிரம் சன்னியாசிகளை கொண்டு அசோகன் என்ற ராஜா நாளில் பரவச்செய்தான்.

ஆனால் நமது முன்னோர்கள் எவ்வளவோ கஷ்டமும் நஷ்டமும் அடைந்து மத கொள்கையை காப்பாற்றி இருக்கிறார்கள்.

இக்காலத்தில் நமது பிள்ளைகளே நமக்கு சத்துரு. வீட்டுக்குவீடு மதத்துவேஷம் அநாசாரம் இவைகளை விருத்திசெய்ய சதா முயற்சியுடனிருக்கிறார்கள். இதுவரை கஷ்டந்தான். நமது பிள்ளைகளை நாம் கேட்டால் எல்லாரும் ஒரே ஜாதி ஆசாரமாயிருந்தால் ஸ்வராஜ்யம் கிடைக்குமென்கிறார்கள் இதுவும் ஓர் கால கொடுமையே.

எவர்கள் தலைமயிரை எடுக்கவேணுமோ அவர்கள் எடுக்கிறதில்லை.

எடுக்கக்கூடாதவர்கள் மயிரைப் பூராவாக எடுத்துவிடுகிறார்கள்.

கலியாணத்தை ஸரியானகாலத்தில் செய்துகொள்ளக்கூடியவர்கள், செய்யவேண்டாம் அவசரமில்லை பின்பு பார்த்துகொள்வோமென்கிறார்கள்.

சந்தியாவந்தனத்தின் முக்கியமாக கருத்து என்னவென்றால், தெய்வத்துக்கும் பிராமணனுக்கும் நடக்கக்கூடிய நித்ய சம்பாஷணை.

அந்தக்கடமை பிராமணன் செய்கிறதில்லை' கடமைப்படாதவன் செய்கிறான்.

நமது பிள்ளைகளோ ஆச்ரம ஸ்வீகாரம் தானாகவே செய்துகொண்டுவிடுகிறார்கள். தலை மொட்டையாயினும் மனம் மொட்டை ஆகவில்லையே என்றபடி பழமொழியுண்டு. நமது முன்னோர்கள் மனச்சுத்தி அடைந்த பிறகு தலைமொட்டை அதாவது (ஸந்நியாஸம்) அடைந்தார்கள்.

தற்காலப் பிள்ளைகளுக்கோ முதலில் தலையில் மொட்டை, தாடியில் கட்டை, (முகக்ஷவரம்)உடம்பில் சட்டை இடுப்பில் பட்டை (பெல்ட்டு), கையில் குடை, (டவல்) இவ்வைந்து அடையாளங்களும் அவர்களுடைய மனோராஜ்ய ஸன்னியாஸத்துக்கு அடையாளமாக இருக்கின்றன. ஆகையால் நமது பிள்ளைகளைக் கூடியமட்டில் குலவித்தை கற்பித்து நல்வழியில் நடத்தமுயலுவோமாக.

பூமி காடுமேடாக இருக்கிறது. மிருதுவாக்குவதற்காக பூமி பூராவாக தோல்விரிப்பதை காட்டிலும் தனது காலிற்கு ஓர் தோலுரை போட்டுக்கொள்வது சுலபமான வழி.

அதுபோல் நமது பிள்ளைகளை நாம் நல்வழியில் நடத்த முயலுவோம். பிறகு ஸ்வாமி கிருபைப்படி நடக்கும்.

அக்கிராஸனாதிபதி உபசாரவணக்கத்துடன் சபை முடிந்தது.

K. R ஸாமி கனபாடிகள்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சரஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R.Ramaswami Iyengar, Proprietor

(215117)



அநாவசியமாக - - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்தரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

ஒரேவாரத்தில் நீரழிவு குணமாகிவிட்டது.

தினசரி நாறுதடவை மூத்திரம் போனாலும் சரிஓயாத தாகம் உண்டாகி வரகூடியானாலும் சரி இனி பயப்படவேண்டாம்.

மந்திரா சக்தி குளிகை.

நீரழிவினால் உண்டாகும், பெலஹீனம், இளைப்பு, நீரடைப்பு, அதிக மூத்திரம் ஈ எறும்பு மொய்த்தல் நீர்கடுப்பு, வெள்ளை, சீ வெள்ளை தந்திமேகம், அதிகப்பசி, கிறுகிறுப்பு, மயக்கம், சரீரவெளுப்பு முதலிய சகல வெட்டைரோகமும் நீரழிவும் பூரண குணமாகிவிடும். பந்தயம் போட்டு பரீக்ஷிக்கலாம்.

100 குளிகை ரூ. 10 50 குளிகை ரூ. 5

விலாசம்:— கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி.

திருவண்ணாமலை,

பங்குனி உத்திர உத்ஸவம்: ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்திலிருந்து ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமியை ரதத்திலேற்றி அலங்காரம் செய்து நகரிலுள்ள எல்லா வீதிகளிலும் ஊர்வலமாக கொணர்ந்தனர். உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தியவர்களெல்லாம் யுவர்களே. தற்கால இளைஞர்களுக்கு இவ்வளவு பகவத்பக்தியும் உத்ஸவத்தில் ஊக்கத்தையும் அளித்தது பகவானென்றே கூறலாம். இதைப்போன்றே பிரதிவருஷமும் சிறப்பாக நடத்துவார்களென எதிர்பார்க்கின்றோம்.

ராமாயண ப்ரசங்கம்: நேற்றிரவு வழக்கம்போல் ராமமந்திரத்தில் பஜனை, ஆராதனை இவைகள் முடிந்தவுடன் ஓர் பெரியாரால் ராமாயணத்திலிருந்து சிற்சிலபாகங்களை ஆங்காங்கு எடுத்து பிரசங்கரூபமாக சொல்லப்பட்டது.

ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் வழக்கம்போல் பங்குனி உத்திர உத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. சுற்றுப்புற நகர, கிராமவாசிகளெல்லாம் சேர்ந்து சுமார் 2 லக்ஷம் பேர்கள் உத்ஸவம் பார்க்க வந்திருந்தனர்.

"வேதாந்த சங்கம்". இவ்வூரில் நேற்று மாலை "வேதாந்த சங்கம்" ஒன்று நிறுவப்பட்டது. அதற்கு ஸ்ரீ வி. கே. வேங்கடராமம் தலைவராக ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஊரில் பலவிடங்களிலும் பகவத்கீதை வகுப்புகளும், கீதாபாராயணமும், உபன்யாஸங்களும் மேற்படி சங்கத்தினர் நடத்துவார்கள்.

நமது நிருபர்.

காஞ்சீபுரம்.

பரமபதமெழுந்தருளல். மாம்பள்ளம் திருமலை விஞ்சிமூர் ஸுதர்சனாசாரியர்ஸ்வாமி என்பவரை ஸ்ரீ வைஷ்ணவவுலகம் பெரும்பாலும் அறிந்தேயிருக்கும். இந்த ஸ்வாமீ உபயவேதங்களிலும், உபயவேதாந்தங்களிலும் மற்றும் ஸகல ஆசார்ய திவ்ய ஸூக்திகளிலும் நிகரற்ற ப்ரவீணர். இந்த ஸ்வாமியைத் தலைவராகக் கொண்டே காஞ்சீபுரத்தில் வேதவேதாந்த வைஜயந்தீ என்கிற பாடசாலை 1913-ம் வருஷத்தில் ஆரம்பமாகி இவருடைய ப்ரதம அந்தேவாஸியான ஸ்ரீஉ-வே பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் பலமுகமாக அபிவிருத்திக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்த ஸ்வாமியினிடத்தில் க்ரமாந்தம் வேதாத்யயனம் செய்து முடித்தவர்கள் 25 திருநாமங்களுக்குமேல் உள்ளார்கள். இந்த ஸ்வாமியின் நன்முயற்சியினாலேயே காஞ்சீபுரத்திலுள்ள திருவெஃகா முதலிய திவ்ய தேசங்களிலெல்லாம் வேதபாராயண கைங்கரியம் புகழ்பெற்றுவருகின்றது. ஆழ்வார்திருநகரியிலும் இந்த ஸ்வாமியே சிலகாலம் எழுந்தருளியிருந்து பலர்க்கு வேதமோதுவித்து அங்கும் வேதபாராயண கைங்கரியம் வளர்ந்து ஓங்கும்படி கடாக்ஷித்தருளினர். பலவகையிலும் இவரை ஒரு அவதார புருஷரென்றே பலரும் பாராட்டிவந்தார்கள். இவர் தம்முடைய அறுபதாவது வயதில் காஞ்சியில் 24—3—37ல் திருநாட்டுக்கெழுந்தருளினார். இது ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும், விசேஷித்து காஞ்சிவாஸிகளுக்கும் அஸாமான்யமான சோகமேயாகும். இவரைப் போன்ற அதிகாரி நபூதோ நபவிஷ்யதி.

ஒரு நிருபர்.

மதிப்புரை.

ஸ்ரீ ரமண சுவாமிகள்.

பின்முடுக்குக்கும்மி.

(கும்பகோணம் பெரிய கடை வீதி ஜவுளி வியாபாரம் மு.ச சரவண முத்துச்செட்டியாரால் இயற்றப்பட்டு பதிப்பிக்கப்பட்டது விலை 1 அணா)

இச்சிறிய புத்தகத்தில், திருவண்ணாமலையில் சிவானுபூதிச்செல்வராய் திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரமண மகர்ஷியவர்களின் ஜீவிய சரித்திரமானது கும்மி ரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. நடை மிகத்தெளிவாகவும் அழகாகவுமிருப்பதுடன் சந்தத்தினமைப்பும் மிகவும் நேர்த்தியாயிருக்கிறது. மகர்ஷிகளுடைய சரித்திரத்தின் முக்யமான அம்சங்கள் சொல்லப்பட்டிருப்பதுடன் தற்காலம் திருவண்ணாமலை ஆச்ரமத்தில் நடந்துவரும் விசேஷ சம்பவங்களும் பல தேசங்களிலிருந்தும் பலஜாதியார்கள் மகர்ஷிகளுடைய தர்சனத்திற்காகவும் உபதேசத்திற்காகவும் தினந்தோறும் திரள் திரளாக வரும் வைபவமும் சொல்லப்பட்டிருக்கிறது. புண்ய புருஷரான மகர்ஷிகளைப்பற்றிய விஷயங்களை அறிவதற்கு இந்நூல் ஓர் சிறந்த சாதனமாகும்.

ஜி. வி. ஜி.

ஸ்ரீ ஸ்கந்த (ஸுப்ரமண்ய) ஸ்தோத்ரம்.

கும்பகோணம் ராஜாவேதபாடசாலை உதவி ஆசிரியர் ஸாஹித்யசிரோமணி ஸ்ரீ மான் ஸுதர்சன சர்மா அவர்களால் ஸ்ரீ மஹாபாரதம் வனபர்வத்திலுள்ள ஸ்ரீ ஸ்கந்தஸ்தோத்ரம் ஒன்று அழகான அச்சில் உயர்ந்த காகிதத்தில் பிரசுரம் செய்யப்பட்டதை வரப்பெற்றோம். இக்கலியில் ப்ரத்யக்ஷ தெய்வமும் ஸகல சிரேயஸ்ஸுக்கும் ஆஸ்பதமான ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமியின் மேற்படி ஸ்தோத்ரத்தையாவரும் படித்துப் பயன் பெறவேணும் என்று நாகரலிபியில் மூலமும் கூடவே தமிழில் மூலமும் பதவுரையுடன் வெளியிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும். அழகிய நடையில் சுத்தமான தமிழில் மாணவர்கள், ஸ்திரீகள் உள்பட யாவரும் படித்து பொருள் அறிந்துகொள்ளும் நிலையில் விளங்குகின்றது. முதலில் கடவுளின் படமும் கடைசியில் அஷ்டோத்திரமும் அமைக்கப்பெற்று இருக்கிறது. நமது வாசகர்களும் ஸ்வந்தர் பத்தர்களும் இதைப்படித்துப் பயன்படுவதுடன் தமது சிறுவர்களுக்கும் கற்பித்து வைக்கும்படி வேண்டுகிறோம். ஸ்ரீமதஸ்தர்களுக்கும் பொதுவான மதக்ரந்தங்களை பலதாளாக வெளியிட்டு அதன்மூலம் ஸநாதன மதப்பிரசாரம் செய்துவரும் ஸ்ரீமான் சர்மா அவர்களின் முயற்சியை ஆஸ்திகோத்தமர்கள் ஸபலமாகச் செய்யவேண்டுமென்பது நமது கோரிக்கை. மேற்படி புத்தகத்தின் விலை 0—2—0 தபால் செலவு தனி.

வேண்டுவோர் ஆர்யதர்மம் ஆபீஸிலாவது (14. வெங்கட்ராயர் தெரு, கும்பகோணம்) என்ற விலாசத்திலாவது பெறலாம்.

மேலக்காவேரி,

கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி,

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

ஆச்யரிமம்

8-4-1937

4 ம
22 14

215180.

215180
1-MAY 1937
OFFICE OF THE REGISTRAR OF BOOKS

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம். கலி 5038 தாது-ஸ்ரீ பங்குனி-மீ 26உ 1937-ஸ்ரீ ஏப்ரல்-மீ 8உ | ஸஂ 14

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.
விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0.
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
மானேஜர்,
ஆர்யதர்ம ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

மாகாண ஸ்வய ஆக்ஷி ஆரம்பம்.

ஏப்ரல் 1உயன்று புதிய சீர்திருத்தப்படி இந்தியாவெங்கும் மாகாண ஸ்வய ஆக்ஷி ஆரம்பமாகிவிட்டது. காங்கிரஸ் மெஜாரிடியில்லாத வங்காளம், பஞ்சாப், ஸிந்து, எல்லைப்புறம் அஸாம் முதலிய மாகாணங்களில் மெஜாரிடிக் கக்ஷியார் மந்திரி ஸபை அமைத்து நிர்வாஹத்தை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். சென்னை, பம்பாய், பீஹார், மத்யமாகாணம், ஒரிஸா, ஐக்யமாகாணம் இவைகளில் மெஜாரிடியாய் உள்ள காங்கிரஸ்காரர்கள் மந்திரிசபை அமைக்க முடியாமல் போய்விட்டதால் அவைகளில் கவர்னர்களே தனிப்பட்டவர்களைக் கொண்டு மந்திரிசபை அமைத்து விட்டார்கள். இந்த மாகாணங்களில் புதிய சட்ட சபைகள் இன்னும் 6-மாத காலத்திற்குக் கூடாதென்று தெரிகிறது.

அரசியல் ஆரம்பதினத்தில் ராஜ சக்ரவர்த்தியால் கவர்னர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆக்ஞாபத்திரம் பிரகடனப் படுத்தப் பட்டது.

வேலை நிறுத்த தினம்.

எப்ரல் 1உயன்று ஆரம்பமாகும் புதிய அரசியலை ஆக்ஷேபிப்பதற்கு அறிகுறியாக இந்தியாவெங்கும் அன்று வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று பெய்ஸ்பூர் காங்கிரஸ் செய்த தீர்மானத்தை ஒட்டி எங்கும் ஹர்த்தால் நடத்தப்பட்டது. காங்கிரஸ் பொதுக் கூட்டமும், ஊர்வலங்களும் நடத்தப்பட்டன புதிய அரசியல் சட்டம் கண்டிக்கப்பட்டது. சிலவிடங்களில் புதிய சட்டத்தைப்போல் கொடும்பாவி செய்து கொளுத்தப்பட்டது. புனாவில் அரசியல் சட்ட புஸ்தகம் கருப்புத் துணியில் சுற்றப்பட்டுக் கொளுத்தப்பட்டதாம்.

சென்னை ராஜாங்க சபைமெம்பர்களின் நியமனம்.

சென்னையில்புதிதாக ஏற்பட்டுள்ள ராஜாங்க சபைக்கு கவர்னர் சில மெம்பர்களை நிய[illegible] அடியிற் கண்டவர்களை அவர் மெம்பர்களாக நியமனம் செய்திருக்கிறார்.

ஸர். மஹம்மது உஸ்மான் (9-வருஷம்) டாக்டர், பி. ஜே. தாமஸ், (9-வருஷம்) ஸர். கே. வி. ரெட்டி (6-வருஷம்) கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் (6-வருஷம்) வி. ஆர். ரெட்டியார் (6-வருஷம்) திவான்பகதூர் ஆர். ஸ்ரீநிவாஸன் (3-வருஷம்) எம். ராமன் (3-வருஷம்) மிஸ்ஸஸ் ஹென்மன்ஸ் (3-வருஷம்)

இந்தியா சட்ட சபையில் காங்கிரஸ்கொடி

எப்ரல் 1உயன்று நடந்த ஹர்த்தாலைமுன்னிட்டு இந்தியா சட்ட சபையிலுள்ள காங்கிரஸ் மெம்பர்கள் அன்று நடந்த சட்டசபைக் கூட்டத்திற்குப் போகாமல் ஹர்த்தால் அனுஷ்டித்தனர். டில்லியில் போலீஸார் காங்கிரஸ் கொடியை அவமதித்த காரணமாக காங்கிரஸ் மெம்பர்கள் யாவரும் இந்தியா சட்டசபையில் காங்கிரஸ் கொடியைத் தனித்தனியாக வைத்துக்கொண்டு வந்தார்கள்.

டில்லி ஸம்பவத்தைப் பற்றி ஓர் அவசரக் கண்டனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேறியது. தேசியக் கொடியை அவமதித்ததைப் பற்றி பலர் கண்டித்தனர்.

காந்திஜியின் அறிக்கை.

கவர்னர்கள் விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பதில்லையென்று உறுதிமொழி கொடுத்தாலல்லது காங்கிரஸ்காரர் மந்திரிபதவி ஏற்கக் கூடாதென்ற தீர்மானம் முற்றிலும் தம்முடைய பொறுப்பாலேயே ஏற் [illegible] உறுதியளிக்கச் சட்டப்படி எவ்வித [illegible]மோ தடையோ கிடையாதென்றும், அப்படிச் செய்யாதவரையில் சட்டரீதியாக ஆக்ஷி நடப்பதை விட்டு, கத்தி முனையில் ஆக்ஷிநடப்பதாகவே நினைக்கப்பட வேண்டுமென்றும் காந்திஜி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

சென்னை மந்திரிசபை இலகாப் பிரிவினையும் சம்பளமும்.

சென்னை மந்திரி ஸபையில் முதல் மந்திரியான ஸர். ரெட்டிக்கு மாதம் 3-ஆயிரம் சம்பளம். பங்களா அலவுன்ஸ் 400 ரூ. மற்ற மந்திரிகளுக்கு 2500 சம்பளமும் 400 ரூ. கட்டிட அலவுன்ஸும் கொடுக்கப்படும்.

ஸர். ரெட்டியார் ரெவின்யூ இலாகா கனம் பன்னீர்ச் செல்வம், ஹோம் பொக்கிஷம், கனம் குமார ராஜா, ஸ்தலஸ்வய ஆக்ஷி, கனம் பாலத் கல்வி, சுகாதாரம், கனம் ஹபிபுல்லா, மராமத்திலாகா என்று இலாகாக்கள் பிரிக்கப்பட்டு வேலை நடக்கும்.

ஸர். அல்லாடி கிருஷ்ணஸாமி அய்யர் அட்வகேட் ஜனரலாக 5-வருஷம் இருக்க நியமிக்கப்பட்டார்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஹெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

புரி ஜகந்நாத க்ஷேத்திரத்தில் 9வது மஹாஸம்மேளனம்.

நடவடிக்கை விவரங்கள்.

(நமது நிருபரிடமிருந்து)

ஏற்கனவே பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டிருந்தபடி ஸ்ரீ புரி ஜகன்னாத க்ஷேத்திரத்தில் அகில இந்திய வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கத்தின் 9-வது அதிவேசனமானது மார்ச்சு 27, 28, 29௳களில் வெகு சிறப்பாகவும் நிர்விக்னமாகவும் நடந்தேறியது. இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்தும் பல பிரதிநிதிகள் வந்திருந்தனர். பிரபல வித்வான்களும், பெரிய அந்தஸ்திலுள்ள லௌகிக கனவான்களும் மிகுந்த உத்ஸாகத்துடன் வெகு தூரதேசங்களிலிருந்து விஜயமாகியிருந்தனர். ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபதிகள் முதலிய அனேக மடாதிபதிகள் தங்களுடைய பூர்ண அனுக்ரகத்தைக் காட்டி பிரதிநிதிகளையும் அனுப்பிருந்தார்கள்.

ஒவ்வொருதினத்திலும் ஏராளமானபொது ஜனங்களும் கூடியிருந்தனர். விஷ்ணுயாகம் த்வஜ வந்தனம் முதலிய காரியங்களும் செவ்வனே நடை பெற்றன. வித்வத் பரிஷத்திலும் பிரபல வித்வான்களும் லௌகிகர்களும் கூடி பல முக்கிய விஷயங்களை விவாதித்துத் தீர்மானித்தார்கள். மார்ச்சு 27௳ காலையில் ஸபாத்யக்ஷரான ஸ்ரீமான் ராவ் ஸாஹிப் என். நடேசய்யர் அவர்களுக்கு வெகு சிறப்பான உபசாரமும் ஊர்வலமும் நடத்தப்பட்டது ... புறப்பட்டு ஏராளமான ஜனஸங்கத்துடன் பல முக்கிய வீதிகள் வழியாக வந்தது. ஸபாத்யக்ஷர் முதலியவர்கள் விஷ்ணுயக்ஞம் நடக்குமிடம் சென்று தர்சனநமஸ்காராதிகள் செய்துகொண்டு 11-மணிக்கு தங்கள் ஜாகை போய் சேர்ந்தார்கள்.

ஊர்வலத்தில் முக்யமாக ரிக்வேத ஓலைப் புஸ்தகம் யானையின் சிரஸில் வைக்கப்பட்டு முன்னுடிகொண்டு போகப்பட்டது அதன் பின் அக்ராஸனாதிபதியின் வண்டி சென்றது. ஸநாதன தர்மத்திற்கு ஜே என்ற கோஷம் வெகு பலமாக இருந்தது.

மாலை 3-மணிக்கு மகாநாடு ஆரம்பமாகியது. ஸபையில் ஏராளமான கூட்டம் குழுமியிருந்தது. மகாநாட்டில் அடியிற்கண்ட முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர். ஸ்ரீமான்களான மஹாமஹோபாத்யாய அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள், பண்டிட் ஸத்யேந்திரநாத ஸேன், மாஜி. எம். எல். ஏ. கல்கத்தா, ஓ. ஸி. கங்கூலி, மஹாமஹோபாத்யாய பஞ்சாநநசாஸ்திரி தர்க்கரத்த, லக்ஷ்மீராம் ருடிவாலா, பங்கிம் சந்திர முகர்ஜி, தாமோதரஸின்ஹா, ரமாபதி மிச்ரா பம்பாய், கதாதாத்ரிபாடி, பண்டிட் தேவநாயக ஆசார்யா, நவாதே, நாகபூர் ஸ்ரீயுத பாண்டே, ஸ்ரீ ராஜ ராஜேச்வர சாஸ்திரி காசி, ஹரிநாம சுக்லா, வலங்கிமான் சிரஞ்சீவி சாஸ்திரிகள் (ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீமுகத்துடன்) ஸ்ரீ கிருஷ்ணய்யா, வக்கீல் நல்லூர், மல்லாதி ராமகிருஷ்ண சயனுலு, ஸ்ரீ புஷ்பகிரி ஸ்ரீமடம் ஏஜண்ட் வெங்கட்டராமசாஸ்தி, ஸ்ரீ காசிநாத உம்பர்கார், பண்டாரபுரம் மோஹனலால், அக்னிஹோத்ரி ‘ஆதேசம்’ பத்ராதிபர் மீரத், கோபபந்து பூஷண ஸாங்க்ய தீர்த்த, வங்காளம், டாக்டர் நளினீரஞ்ஜனஸேன் குப்தா, ட்ருத் ஆசிரியர், வங்காளம், எமார் மடாதிபதி ஹுமத், பூரி, மண்டலம் பண்டித சந்திரபானு சாஸ்திரி, கஞ்சம், ராவ் ஸாஹிப் என். நடேசய்யர், மதுரை, டாக்டர் சுப்பிரமணியஐயர், வெங்கடாசலய்யர், எல். மஹாலிங்கய்யர் கும்பகோணம், ஸ்வாமிநாத சாஸ்திரிகள், சீயாழி சிதம்பரநாதமுதலியார்,

கல்கத்தா:— மன்மத பட்டாசார்ஜீ வேதரத்ன ஆசிரியர், ‘ப்ரொடக்ஷன் ஆப்பங்கால்’ கோபபந்து பூர்ஹானி ஸாங்க்ய தீர்த்த ஆசிரியர் ‘பல்லிவாஸி’. ஹரீச்த்ரநாத் பட்டாசார்ய அட்வகேட். ஸ்ரீஜீவ் நியாயதீர்த்த, எடிடர் ‘ப்ராஹ்மண ஸமாஜ்’. ஹரிநாத் பட்டாசார்ஜீ ஆசிரியர் ‘பெங்கபாஸி’ (53 வருஷமாய் நடக்கிறது.) பண்டிட் ஹனுமான்டட் ஜோஷி மார்வாரி. மஹேந்த்ரப்ரஸாத், வக்கீல்.

ஹைதராபாத்:— வி. ஆர். சோமயாஜுலு நைஸாம் காலேஜ் ரிடையர்டு ப்ரொபஸர்.

காசி:— ஹரிஜன் கோகில்ஜீ. ஜதாங்கர் கோகுல்ஜீ. பாய்ஸங்கர், முகார்ஜீ லாலாபஸ். முதலிய வைதிக லௌகிகபிரமுகர்கள் அங்கு காணப்பட்டனர்.

மங்களாசரணத்துடன் ஸபை ஆரம்பமானதும் ஸ்வாகத சபையின் காரியதரிசியான ஸ்ரீயுத கோவிந்த மிச்ராஜீயும், பண்டித தேவநாயக ஆசார்யரும் ஸபை நிர்விக்னமாக முடியும்படி பிரார்த்தித்துச் சிறிது பேசினார்கள்.

பிறகு, ஸ்ரீமான் ராவ்ஸாஹிப் என். நடேசய்யர் அவர்களை ஸம்மேளனத்தில் தலைமை வகிக்கும்படி ஸ்ரீமான் மல்லாதி ராமகிருஷ்ண சயனுலு பிரேரேபித்து ஸ்ரீமான் அய்யாவர்களின் சிறந்த குணங்களைக் குறிப்பிட்டார். மகாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ அனந்த கிருஷ்ணசாஸ்திரிகளால் தீர்மானம் ஆமோதிக்கப்பட்டு காசி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வர சாஸ்திரி, ஸ்ரீமான் ரமாபதி மிச்ரா பம்பாய், தர்மவீர கோஸ்வாமீ ஜீவனதாஸ் மஹாராஜ், பஞ்சாப், ஸ்ரீமான் கதாதாஜீ, ராஜபுதனம், ஸ்ரீயுத உம்பர்கார், பண்டாரபுரி, ஓ. ஸி. கங்கூலி கல்கத்தா, கமலாகிஹாரிஸஹாய் ஹோர், அம்பாலால்ஜீ கத்யாவாட் முதலியவர் ஆதரித்துப் பேசியபின் பலத்த கரகோஷத்தினடையே ஆஸனத்திலமர்ந்த பின் ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதி ஸ்ரீஸ்வாமிகளிடமிருந்து வந்த ஸ்ரீமுகத்தை பிரம்மஸ்ரீ சிரஞ்சீவி சாஸ்திரிகள் ஸபையில் வாசித்தார்கள்.

அடியிற்கண்டவர்களிடமிருந்துவந்த ஆசிச் செய்திகளும் ஸபையில் படிக்கப்பட்டன. ஸ்ரீ ஜகத் கோகுலநாத் மஹாராஜா. பம்பாய், வைத்யநாதபஜோரியா, ஹத்திபாய் சாஸ்திரி ராஜ்கோட், தேவிதான் நாகர், வி. ஆர். ஸீதாராமசாஸ்திரி, முஸலிப்பட்டணம், வைத்யநாதசர்யா, கோஸ்வாமி. தேசபூஷண பிரஸன்ன வெங்கடேச்வரால் ஸ்ரீரங்கம்.

பிறகு, ஸ்வாகத ஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீயுத கதாதராசார்யாஜீ தமது வரவேற்பு உபன்யாஸத்தைச் செய்து முடித்ததும் ஸபாத்யக்ஷர் பிரம்மஸ்ரீ என். நடேசய்யாவர்கள் தமது அக்ராஸன ப்ரஸங்கத்தை சுமார் 1½-மணி நேரம் வரையில் செய்து முடித்தார்.

மஹாநாட்டில் கொண்டுவரப்படவேண்டிய தீர்மானங்களைப் பற்றி விஷயாலோசனைக்கூட்டத்தில் யோஜித்து முடிவுசெய்யப்பட்டது. மறுதினங்களில் நடந்த கூட்டத்தில் அனேக முக்யத் தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு நிறைவேறின. தீர்மானங்களைப் பிரேரிபித்தும் ஆமோதித்தும் பலர் பேசினார். அவர்கள் தங்களுடைய ஸநாதநதர்ம பித்தையையும், அதற்கு எதிரிகளால்நேரும் உபத்திரவத்தையும் வெகு உணர்ச்சியுடன் வெளியிட்டு வெகு சிறந்த முறையில் பிரஸங்கித்தனர். ஸநாதந தர்ம பிரசாரத்திற்காக பண உதவி செய்யவேண்டுமென்ற தீர்மானம் வந்தபோது ஸபையில் கூடியிருந்த ஆஸ்திக தனிகர்கள் உடனே தங்களாலியன்ற பண உதவியைச் செய்வதாக வாக்குறுதி செய்து தொகைக்கும் கையொப்பம் கொடுத்தனர். அதன் விவரம் தனியாக பிரகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த உபந்யாஸத்தை ஸ்ரீமான் தேவநாயக ஆசாரியர் ஹிந்துஸ்தானி பாஷையில் வெகு அழகாகவும், உருக்கமாகவும் ஸாரம்சமாகவும் மொழி பெயர்த்துச் சொன்னார். இத்துடன் அன்று மாலை 6½-மணிக்கும் கூட்டம் கலைந்தது

தீர்மானங்கள் நிறைவேறியபின் தலைவரின் முடிவுரை சொல்லப்பட்டு உபசாரக் கமிட்டித் தலைவராதும் மற்றவர்களாதும் தலைவர் அவர்களுக்கு வந்தனம் சொல்லப்பட்டது.

வெளியூர் பிரதிநிதிகளுக்கு தர்ம சாலைகளும் வேறு இடங்களிலும் ஸௌகர்யமான இடவசதிகளும் மற்ற ஸௌகர்யங்களும் உபசாரக்கமிட்டியால் வெகு நன்றாகச் செய்யப்பட்டிருந்தது. தீர்மானங்களில் முக்யமாக திருவாங்கூர் விளம்பரத்தைக் கண்டித்தும், கொச்சி மஹாராஜா, திருவாங்கூர் ஸீனியர் ராணி இவர்களைப் பாராட்டியும் சாரதாச் சட்டத்தைக் கண்டித்தும், சட்டஸபையிலிருந்து மத ஸம்ஹ விஷயமாக மசோதா கொண்டுவருவதை ஆக்ஷேபித்தும், மதத்திற்குச் சட்டப்படி போதிய பாதுகாப்பு ஏற்படுத்தவேண்டுமென்றும், ஸநாதந தர்மபிரசாரத்தை தேசமுழுவதும் தீவ்ரமாக நடத்தவேண்டுமென்றும் செய்யப்பட்டவை குறிப்பிடத்தக்கவை. இவைகளின் விபரம் பிறகு வெளிவரும்.

ஸர். கே. வி. ரெட்டியாரின் அறிக்கை. காங்கிரஸ் மீது குற்றச்சாட்டு.

சென்னையில் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிற ஸர். ரெட்டியார் தாம் மந்திரி ஸபை அமைத்ததைப் பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டு ஸமாதானம் சொல்ல முன் வந்திருக்கிறார். முக்கியமாக ஸ்ரீமான், ஸி. ஆர். ஆசாரியருக்கு பதில் கூறியிருக்கிறார். ஜனநாயக ஆக்ஷி முறையைப் புறக்கணித்தது ஸ்ரீமான் ஆசாரியரேயல்லது தாமல்லவென்றும், கவர்னர் மந்திரிசபையை அமைத்தது சட்டப்படி நியாயமே என்றும், தாம் ஜனங்களை ஏமாற்றவில்லையென்றும், ஸ்ரீமான் ஆசாரியரே வரியைக் குறைப்பதாயும், கல்வியை விருத்தி செய்வதாயும், பல வழியில் வோட்டர்களுக்கு வாக்குறுதிகொடுத்துவிட்டு ஜயம் பெற்ற பின் இப்போது அவைகளை நிறைவேற்றுமல் ஓட்டம் பிடிக்கிறார் என்றும், இவர்கள் தான் ஜனங்களை ஏமாற்றுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு தினுசுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்த்ரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprictor C. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோண.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

‘மூகபஞ்சசதீ’

(1—4—37 தொடர்ச்சி.)

1. அம்பிகையின் அழகைத் தன் கண்களால் பருகிவிடுவது போல் பரமசிவன் பார்ப்பதாக ‘லோசனயுகளேன லேஹ்யமானயாம்’ என்று இங்கு சொல்லப்பட்டது.

2. ஸௌந்தர்யமாகிற ஸமுத்ரத்தில் அடுத்தடுத்து வரும் அலைகள்போல் அம்பிகை இருப்பதை ‘லாவண்யாம்ருத தரங்க மாலயாம்’ என்பதில் சொல்லப்பட்டது. அடுத்தடுத்துவரும் அலைகளின் சேர்க்கைக்கு (தரங்க மாலைக்கு) லஹரி என்று பெயர். அம்பிகை இவ்விதமான ஸௌந்தர்யலஹரீ ரூபமாயிருப்பதால் அந்த ஸௌந்தர்யத்தைப்பற்றித் தான் எழுதிய ஸ்தோத்ரத்திற்கே ஸ்ரீமதாசார்யாள் ‘ஸௌந்தர்யலஹரீ’ என்று பெயர்வைத்தார்கள்.

39 மதுகர ஸஹசர சிகுரை:
மதனாகம ஸமய தீக்ஷித கடாக்ஷை: |
மண்டித கம்பா தீரைர்
மங்கள கந்தைர் மமாஸ்து ஸாரூப்யம் ||

மதுகர ஸஹசர சிகுரை:- வண்டுகள் போன்றதான (கறுத்த) கூந்தல்களையுடையதும், மதனாகமஸமய — காமசாஸ்த்ரத்தை போதிப்பதென்பதான, தீக்ஷித-தீக்ஷையோடு கூடிய, கடாக்ஷை:- கடாக்ஷங்களையுடையதும், மண்டித கம்பா தீரை: – கம்பாநதியின் கரையை அலங்கரிப்பதும், மங்கள கந்தை: - மங்களத்தின் மூலம் போன்றதுமான ஒரு மூர்த்தியோடு, ஸாரூப்யம் - ஸாரூப்யமானது மம அஸ்து – எனக்கு ஏற்படட்டும்.

40 வதனாரவிந்த வக்ஷோ-
வாமாங்க தடீ வசம்வதீ பூதா |
புருஷ த்ரிதயே த்ரேதா
புரந்த்ரி ரூபா த்வமேவ காமாக்ஷி ||

காமாக்ஷி – ஹே காமாக்ஷிதேவி! – புருஷத்ரிதயே - ப்ரம்ஹா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று பதிகளிடத்தில், வதனாரவிந்த வக்ஷோ வாமாங்கதடீ – முறையே அவர்களுடைய முக கமலத்திலும், மார்பிலும், இடதுமடியிலும், வசம்வதீ பூதா – எப்போதும் ... கொண்டு, த்ரேதா – மூன்று ரூபங்களோடுகூடிய, புரந்த்ரீ ரூபா - பத்னீ ஸ்வரூபமாக, த்வமேவ – நீயே (இருக்கிறாய்).

1. இதனால் ஸரஸ்வதீ, லக்ஷ்மீ, பார்வதீ என்ற மூவரும் பரப்ரம்ஹ ஸ்வரூபிணியான அம்பிகையின் ரூபங்களென்பது சொல்லப்பட்டது.

41 பாதாகரீம் பவாப்தே:
ஆதாராத்யம்புஜேஷு விசரந்தீம் |
ஆதாரீக்ருத காஞ்சீம்
போதாம்ருத வீசிமேவ விம்ருசாம: ||

பவாப்தே: – ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திற்கு, பாதாகரீம் – இடையூறைச் செய்பவளும், ஆதாராதி அம்புஜேஷு – மூலாதாரம் முதலான கமலங்களில், விசரந்தீம் - ஸஞ்சரிப்பவளும், ஆதாரீக்ருத காஞ்சீம்-காஞ்சீபுரியை வாஸஸ்தானமாக உடையவளும், போதாம்ருத வீசிம் ஏவ – ஞானம்ருத (ஸமுத்ர)த்தின் அலையாயிருப்பவளுமான ஸ்ரீ காமாக்ஷியையே, விம்ருசாம: – த்யானம் செய்கிறோம்.

1. ‘பவாப்தே: பாதாகரீம்’ என்பதினால் பக்தர்களை ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திலிருந்து கரையேறச்செய்து விடுவிப்பதாக அம்பிகையைப் பற்றிச் சொல்லப்பட்டது. இதேமாதிரி ஆசார்யாளும்,

‘................. ......ஜன்மஜலதௌ
நிமக்னானாம் தம்ஷ்ட்ரா முரரிபு வராஹஸ்ய பவதி ||’

என்று ‘ஸௌந்தர்யலஹரீ’யிலும்

‘ஸம்ஸார பங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா |’

என்று லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

2. அம்பிகையானவள் குண்டலினீ ரூபிணியாய் மூலாதாரம் முதலான ஷட் சக்ரங்களிலும் ஸஞ்சரிப்பதை ‘ஆதாராத்யம் புஜேஷு விசரந்தீம்’ என்று இங்கு சொல்லப்பட்டது. இதை விபரமாக ஆசார்யாள் ‘ஸௌந்தர்யலஹரீ’யில் வர்ணித்திருக்கிறார்கள்.

‘மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதம் ஆகாசமுபரி |
மனோऽபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ||
ஸுதாதாராஸாரை: சரணயுகளாந்தர் விகளிதை:
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புனரபி ரஸாம்னாய மஹஸ: |
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிபம் அத்யுஷ்ட வலயம்
ஸ்வமாத்மானம் க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே குஹரிணி ||’

42 கலயாம்யந்த: சசதர-
கலயாங்கித மௌளிம் அமல சித்வலயாம் |
அலயாம் ஆகமபீட
நிலயாம் வலயாங்கஸுந்தரீம் அம்பாம் ||

சசதர கலயாங்கித மௌளிம் – சந்த்ரனுடைய கலையினால் அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தையுடையவளும், அமல சித்வலயாம் – நிர்மலமான சித்ரூபமாயிருப்பவளும், அலயாம்–அழிவில்லாதவளும் ஆகமபீட நிலயாம் – வேதங்களாகிற பீடத்திலிருப்பவளும், வலயாங்கித ஸுந்தரீம் அம்பாம் – வளைகளையணிந்தவளுமான ஜகன்மாதாவை, அந்த: கலயாமி – என்மனதில் எப்போதும் த்யானம் செய்கிறேன்.

43. சர்வாதி பரம ஸாதக-
குர்வானீதாய காமபீடஜுஷே |
ஸர்வாக்ருதயே சோணிம-
கர்வாய ஸமர்ப்யதே ஹ்ருதயம் ||

சர்வாதி – பரமசிவன் முதலான, பரமஸாதக குர்வானீதாய-உத்தமமான ஸாதகர்களான குருக்களால் வரவழைக்கப்பட்டதும் (உபாஸிக்கப்பட்டதும்), காமபீடஜுஷே – காமகோடி பீடத்தில் விளங்குவதும், ஸர்வாக்ருதயே – ஸகலமான ஜகத்தின் ரூபமாயிருப்பதும், சோணிம கர்வாய – உயர்ந்ததான சிகப்பு நிறத்தையுடையதுமான ஒரு மூர்த்தியிடத்தில், ஹ்ருதயம் – (என்னுடைய) மனதானது, ஸமர்ப்யதே – அர்ப்பணம் பண்ணப்படுகிறது.

1. அம்பிகையின் உபாஸகர்களில் பரமசிவனை முதன்மையாகச் சொல்லப்படும். இதனால் அவரை ஆதிகுரு, ஆதிநாதரென்று சொல்வது ஸம்ப்ரதாயம். அம்பிகையை ப்ரதிபாதிக்கும் சாஸ்த்ரங்களாகிய தந்த்ரங்கள் பரமசிவனால் தன்னுடைய இரு அம்சங்களான சிவ, சக்தி ரூபங்களில் குரு, சிஷ்ய பாவத்தோடிருந்து, வெளியிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

‘குரு சிஷ்ய பதே ஸ்தித்வா ஸ்வயமேவ ஸதாசிவ: |
ப்ரச்னோத்தர பதைர் வாக்யை: தந்த்ரம் ஸமவதாரயத் ||’

குருமண்டலத்தைச் சொல்லும்போதும் ‘ஸதாசிவஸமாரம்பாம்’ என்று சொல்வது வழக்கம்.

44 ஸமயா ஸாந்த்ய மயூகை:
ஸமயா புத்யா ஸதைவ சீலிதயா |
உமயா காஞ்சீரதயா
ந மயா லப்யேத கிம் நு தாதாத்ம்யம் ||

ஸாந்த்யமயூகை:-ஸந்த்யாகாலத்து (ஸூர்ய) கிரணங்களுக்கு, ஸமயா – ஸமானமான காந்தியையுடையவளும், ஸமயா புத்யா பேதமில்லாமல் ஸமமான புத்தியுடன், ஸதைவ சீலிதயா-ஸதாகாலமும் உபாஸிக்கப்பட்டவளும், காஞ்சீரதயா - காஞ்சீபுரியில் ப்ரீதியுள்ளவளாயுமிருக்கிற, உமயா - உமாதேவியோடு, தாதாம்யம் – ஐக்யபாவனையானது (அல்லது, ஸாயுஜ்யமானது), மயா - என்னால் ந லப்யேத கிம் நு - கிடைக்கப்பெறுதா!

1. இங்கு சொல்லப்பட்ட ஸம புத்தியைப்பற்றி பின்வரும் 50-வது ச்லோகத்தில் விஸ்தரிக்கப்படுகிறது.

45. ஜந்தோஸ்தவ பதபூஜன-
ஸந்தோஷ தரங்கிதஸ்ய காமாக்ஷி |
பந்தோ யதி பவதி புன:
ஸிந்தோரம்பஸு பம்ப்ரமீதி சிலா ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷிதேவியே! தவ பத பூஜன - உன் பாதங்களைப் பூஜிப்பதினால் ஏற்படும், ஸந்தோஷ தரங்கிதஸ்ய - ஸந்தோஷம் நிறைந்த, ஜந்தோ: - ப்ராணிக்கு (மனுஷ்யனுக்கு), பந்த: - ஜன்ம (அல்லது, கர்ம) ஸம்பந்தமானது, புன: பவதி யதி - திரும்பவும் ஏற்படுமென்றால் (அது) ஸிந்தோ: அம்பஸு - நதீ ஜலத்தில், சிலா - கற்பாறையானது, பம்ப்ரமீதி - சுழலும் (என்று சொல்வது மாதிரி ஆகும்.)

1. அதாவது, ஜலத்தில் கற்பாறையானது மிதக்கிறது என்று சொன்னால் எவ்வளவு அஸம்பாவிதமாயிருக்குமோ அதே மாதிரி அம்பிகையின் உபாஸனையிலீடுபட்டவனுக்கு புனர்ஜன்மம் உண்டு என்று சொல்லது ஆகும், என்று தாத்பர்யம்.

46. குண்டலி குமாரி குடிலே
சண்டி சராசரஸவித்ரி சாமுண்டே |
குணினி குஹாரிணி குஹ்யே
குருமூர்த்தே த்வாம் நமாமி காமாக்ஷி ||

குண்டலி - குண்டலங்களை (அதாவது, தாடங்கங்களை) உடையவளும், குமாரி - பால்யமான வயதுடையவளும் (அல்லது, மங்களத்தைச் செய்பவளும்) சராசரஸவித்ரி - ஸ்தாவர ஜங்கமாத்மகமான ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டித்தவளும், சாமுண்டே - சாமுண்டா ரூபிணியாயிருப்பவளும், குணினி - த்ரிகுணங்களோடிருப்பவளும் குஹாரிணி - (மனதிலிருக்கும்) அந்தகாரத்தைப் போக்கடிப்பவளும், குஹ்யே - ரஹஸ்யமான ஸ்வரூபத்தோடிருப்பவளும், குருமூர்த்தே – குரு ஸ்வரூபியாயிருப்பவளுமான, காமாக்ஷி – ஹே காமாக்ஷியே! த்வாம் நமாமி - உன்னை நமஸ்கரிக்கிறேன்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

தாது-ஞு பங்குனி-மீ 26வ

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஸம்மேளனம்.

புரி ஜகன்னாத க்ஷேத்திரத்தில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் 9-வது ஸம்மேளனம் மிகச் சிறப்பாக நடந்தேறியதைக் கேட்டு நாம் ஸந்தோஷிக்கிறோம். பாரத தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் அனேக பண்டிதர்களும், நல்ல கௌரவம் வாய்ந்த லௌகிக கனவான்கள் பலரும் அதில் பிரஸன்னமாயிருந்து நடத்தி வைத்திருக்கிறார்கள். அனேக பிரபல மடாதிபதிகளும் பலவழியில் இந்த ஸம்மேளனத்திற்கு உதவி புரிந்து பிரதிநிதிகளையும் அனுப்பியிருக்கிறார்கள். இவ்வாறு சிறப்பாகவும் பிரபலமாகவும் நடந்த இந்த ஸம்மேளனத்தின் விவரமானது இத்தேசத்தியப் பத்திரிகைகளில், முக்கியமாகத் தென்னிந்தியப் பத்திரிகைகளில் சிறிது கூட வெளிவாரதகாரணம் தெரியவில்லை. உபயோகமற்ற ஸமாசாரங்களையெல்லாம் பரப்பிவரும் ஸமாசாரஸ்தாபனங்கள் இவ்வளவு பெரிய கூட்டத்தின் விவரத்தை பத்திரிகைகளில் வெளிப்படுத்த முயற்சிக்காதது ஆச்சர்யமாகவே இருக்கிறது. ஸம்மேளன அதிகாரிகளும் இதில் போதிய கவனம் செலுத்தவில்லையென்று நினைக்கிறோம்.

ஸம்மேளனத்தில் தலைமை வஹித்த நமது ஆஸ்திக சிரேஷ்டரான ராவ் ஸாஹிப் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்களைப் பற்றிச் சொல்லவேண்டியதொன்றுமில்லை. உறுதியாயும், தீவிரமாயும் உள்ள அவருடைய ஸநாதன தர்ம சிரத்தைக்கேற்றபடி அக்ராஸனப்ரஸங்கம் அமைந்திருப்பதில் அதிசயமில்லை. அந்தஉபந்யாஸமானது நமது எதிர்கால வேலைத் திட்டத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குவதை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டியதவச்யமாகும்.

மஹாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களில் இரண்டொன்று முக்கியமாகக் கவனிக்கத் தக்கன. திருவாங்கூர் ஆலயப்ரவேச கண்டனம், சாரதாசட்ட கண்டனம் இவை போன்ற தீர்மானங்களும் அங்கு நிறைவேறியிருக்கின்றன. திருவாங்கூர் விளம்பர விஷயமாக ஒரு டெபுடேஷனை மகாராஜாவிடம் அனுப்பி அதை ரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்த யோஜனை செய்யப்பட்டிருப்பது ஓர் முக்கிய விஷயமாகும். அந்த ஸம்ஸ்தானத்திற்கு மாத்திரம் உள்ள சில கோவில்கள் நீங்க, இந்தியாவெங்கும் எல்லா ஸேவார்த்திகளுக்கும் பொதுவாயும் யாத்திரை ஸ்தலமாயுமுள்ள ஸ்ரீ கன்யா குமாரி ஸ்ரீபத்மநாபர், ஸ்ரீ ஜனார்த்தனம் முதலிய தேவாலயங்களைப்பற்றிய வரையிலாவது மஹாராஜாவின் விளம்பரத்தை அமுலுக்குக் கொண்டுவாராமல் நிறுத்திவிடவேண்டுமென்று கேட்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த யோஜனை முக்கியமாயும் நியாயமாயும் இருந்தபோதிலும், மஹாராஜாவின் தற்கால மனோபாவத்திலும், அவருக்கு ஆலோசனை கூறும் ஸசிவோத்தமருடைய போக்கிலும் இது எவ்வளவுதூரம் பலிக்கும் என்பது நாம் அறியக்கூடியதே. ஆயினும் நமது கடமையைச்செய்யவேண்டியது அவசியமாகையால் கூடிய சீக்கிரத்தில் டெபுடேஷன் தனது வேலையைப் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்

இந்தியாவில் புதிய ராஜ்யமுறை அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டபின் மதாசார விஷயமாக ஏற்கனவேயிருந்த சிறிது பந்தோபஸ்தும் போய்விட்டது. கூட்டுக்கமிட்டி விசாரணைகாலத்தில் தார்மிகர்களுடைய பிரதிநிதிகளை அனுப்பி நாம் பாடுபட்டதும், சீர்திருத்தவாதிகளுடைய செல்வாக்கினால் பயன்படாமல்போயிற்று. ஆயினும் நாம் மதாசாரப் பாதுகாப்புவிஷயமாக இடைவிடாத கிளர்ச்சிசெய்துகொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. இவ்விஷயமாயும் புரி ஸம்மேளனத்தில் முக்யமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த தீர்மானத்தையொட்டி எங்கும் கிளர்ச்சி செய்வதுடன் இன்னொரு அவஸரமான விஷயத்தையும் குறிப்பிடவிரும்புகிறோம். மதாசார விஷயங்களில் ராஜாங்கம் பிரவேசிக்காதென்ற விக்டோரியா மஹாராஜ்ஞியாரின் உறுதிமொழி பலவகையில் இப்போது மீறப்படுத்தப்பட்டுவருகிறது. அதற்கு ஜீவன் இருக்கிறதாவென்றே ஸம்சயிக்கவேண்டியிருக்கிறது. சீர்திருத்தக்காரர்கள் குதர்க்கவாதங்கள் பண்ணி அந்த விளம்பரத்தின் தன்மையை குலைத்துவிட முயற்சி செய்து வருகிறார்கள். இந்த நிலைமையில் ஹிந்துக்கள் யாவரும் அந்த மகா நிலைமைக் கொள்கையைப் புதுப்பிக்கும்படி நமது சக்ரவர்த்தியரைக் கேட்டுக்கொள்ளவேணும். ஸமீபத்தில் நடக்கப்போகிற பட்டாபிஷேக ஸமயமே இதற்கு ஏற்ற சிறந்த தருணமாகும். சில பெரியோர்கள் இந்த முயற்சியில் இறங்கியிருப்பதாக நாம் அறிவதால் பொதுஜனங்களும் மஹஜர் மூலமோ, பொதுக்கூட்டத் தீர்மானமூலமோ நமது சக்ரவர்த்தியாருக்கு இந்த பிரார்த்தனையைச் செய்துகொள்ளுவது அவசியமென்று நினைக்கிறோம்.

ஸநாதன தர்ம பிரசார விஷயமாக ஸம்மேளனம் புதிய யோஜனையை வெளியிட்டிருக்கிறது. பாரததேசம் நெடுகிலும் ஏககாலத்தில் இப்ப்ரசாரம் செய்வது சிரமமாயும், பலன் தாரததாயுமிருப்பதால் குறிப்பாக ஒரு மாகாணத்தில்மட்டும் முதலில் பிரசாரத்தை நடத்திவரவேண்டுமென்றும், இந்தியாவிலுள்ள எல்லாத் தலைவர்களும், பிரசாரகர்களும் இந்த ஒரு இடத்திலேயே வேலை செய்யவேண்டுமென்றும், இப்படிச் செய்தால் ஸநாதனிகளுடைய அபிப்பிராயமும் வேலையும் சீக்கிரத்தில் உருவடைந்து பலனளிக்குமென்றும் ஸம்மேளனம் நினைக்கிறது. இது சிறந்த யோஜனையே. விஸ்தாரமான இடத்தில் வேலை செய்வதைவிட ஏதாவது ஒரு தாலூகாவைமட்டும் பொறுக்கி அங்கு யாவரும் கட்டுப்பாடாக பிரசாரம் நடத்தி, கிராமமுன்னேற்றம் முதலிய எல்லா வேலைகளையும் கவனித்தால் பிரயோஜனம் உண்டென்று நாம் நினைக்கிறோம். ஸம்மேளனத்தில் ஆஸ்திக தனிகர்கள் பண உதவி செய்ய மிகுந்த சிரத்தை காட்டியிருப்பதால், அந்த உதவியைப் பெற்றும், இன்னும் பலருடைய ஸஹாயத்தை அடைந்தும் ஷை தீர்மானத்தின்படி தீவிர பிரசாரத்தை நாம் ஆரம்பித்தால் ஸர்க்கார் உள்பட எல்லாக் கக்ஷியாருடையவும் கவனம் நம்மீது திரும்புவது நிச்சயமாகும்.

குறிப்புகள்.

காங்கிரஸின் உறுதிமொழிக் கோரிக்கை.

மாகாண கவர்னர்கள் உறுதிமொழியளித்தால் மந்திரி பதவி ஏற்கலாமென்று அ. இ. காங்கிரஸ் கமிட்டி செய்த தீர்மானத்தின் பயனாக ராஜீயக்குழப்பம் ஏற்பட்டிருக்கிறதல்லவா? இதைப்பற்றி எவ்வளவோ பேச்சுக்கள் நடக்கின்றன. இதில் ஒன்று நாம் சொல்ல விரும்புகிறோம். காங்கிரஸ்வாதிகள் காங்கிரஸ் காரியம் யாவற்றும் பொதுஜன அபிப்ராயப்படியே நடைபெறுவதாகச் சொல்லிவருகிறார்கள். புதிய சட்டத்தை உடைக்கவும் காங்கிரஸ் திட்டங்களை நிறைவேற்றவும் வாக்காளர்கள் தங்களுக்கு அநுமதிகொடுத்துவிட்டதாகக் காங்கிரஸ்வாதிகள் திட்டமாகக் கூறிவருகிறார்கள். ஆனால் உறுதிமொழிகேட்பதைப்பற்றி அவர்களுக்கு பொதுஜனங்கள் ஏதாவது ஆக்ஞையிட்டார்களா? உறுதிமொழி கேட்கப்போவதாகச் சொல்லி ஜனங்களுடைய அபிப்ராயம் இதில் என்னவென்று காங்கிரஸ்காரர்கள் ஜனங்களைக் கேட்டார்களா? ஒன்றுமில்லை! அகில இந்தியக் கமிட்டியில் உறுதிமொழிக் கோரிக்கைத் தீர்மானம் வரும்வரையில் ஒருவரும் ஸ்வப்னத்தில்கூட இதை நினைத்திருக்க மாட்டார்கள். ஜில்லா, மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளாவது இதைப்பற்றி அபிப்ராயம் கூறினவா? உத்யோகம் ஏற்கும் விஷயமாக அபிப்ராயம் தெரிவிக்கும்படி இந்தியா முழுவதுமுள்ள காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தெரிவித்ததை அநுஸரித்து அவைகள் கூட்டம்கூடி பலமாக சர்ச்சைபண்ணி அபிப்ராயம் கூறினவே! அப்போது எந்தக் கமிட்டியிலாவது, யாராவது இந்த உறுதிமொழிக் கோரிக்கையைப்பற்றி நினைத்ததுண்டோ? பேசியதுண்டோ? அந்தந்த மாகாணக் காங்கிரஸ் தலைவர்கள்கூட இதைப் பற்றிச் சிறிதும் சிந்தித்திருக்கமாட்டார்களல்லவா? முன்னாடியே உறுதிமொழிப் பிரஸ்தாபம் தலைகாட்டியிருந்தால் தேச மஹாஜனங்களும் அதைப்பற்றி யோசித்து அபிப்ராயம் சொல்லியிருப்பார்கள். ஆனால் நிறையன்று காரியகமிட்டியிலும், அ. இ. காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் ஒருவரும் நினையாத ஸந்தர்ப்பத்தில் இந்த உறுதிமொழிக் கோரிக்கை குதித்து நிறைவேறிவிட்டது.

இதில் இன்னொரு அதிசயமென்னவென்றால், இந்த உறுதிமொழிக் கோரிக்கையைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் முன்னாடியே அறியாதவர்களாயிருந்தும், அது நிறைவேறியபின் யாவரும் அதை தன்னுடைய அபிப்ராயம்போல் மதித்தும் ஆதரித்தும் கட்டுப்பாடாக அதைப்பற்றிப் பேசிவருகிறார்கள். அது காந்திஜியின் அபிப்ராயத்திலிருந்து வெளிவந்ததாயிருந்தும், அதை வேதவிதியாக பாவித்து ஆதரித்து நிற்கிறார்கள்! இந்தமாதிரி தலைவர் கிழித்தகோட்டைத் தாண்டாமல் காங்கிரஸ் வாதிகள் கட்டுப்பாடாக நிற்பது போற்றத்தக்கதே. ஆனால் இந்தக் கண்மூடிக்கட்டுப்பாட்டினால் இதனால் சில ஸமயங்களில் நன்மையுண்டாவதுபோல் சில ஸமயங்களில் தீமையும் உண்டாகிவிடக்கூடும். அப்படியே உண்டாகியும் இருக்கிறது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
Choyyeru, East Godawary.

ஆறுதலுக்கு இடமுண்டா?

மாகாண ஸ்வய ஆக்ஷியில் கவர்னர்களுடைய கடமைகளைப்பற்றி ராஜசக்ரவர்த்தி ஓர் ஆஜ்ஞாபத்திரம் பிறப்பித்திருக்கிறார். அதில் கவர்னர்களுக்குப் பல ஆக்ஞைகள் இடப்பட்டிருக்கின்றன. சட்டஸபையில் செய்யப்படும் ஒரு தீர்மானம் ஜனஸமூஹ நன்மைக்கு ஏற்றதாயில்லையென்று தோன்றினால் கவர்னர் அதில் தலையிடும்படி மேற்படி ஆக்ஞாபத்திரம் அதிகாரம்கொடுக்கிறது. அந்தப் பத்திரத்தில்

> "மதம், ஜாதி, கல்வி, முன்னேற்றமில்லாமை காரணமாக எந்தக் கூட்டத்தாருக்கும் பாதகமேற்படாமல் பாதுகாக்கவேண்டியதுகவர்னரின் விசேஷப் பொறுப்பு"

என்று கூறப்பட்டிருக்கிறது. மதம் காரணமாக ஒரு வகுப்பபாருக்குச் சட்டஸபையாலோ, அல்லது வேறு வகையாலோ பாதக மேற்படுமாயின் அப்போது கவர்னர்கள் இதில் பிரவேசித்துத் தக்கபாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குதர்க்கமாக இதற்கு ஓர் அர்த்தம் கற்பிக்கப்படாதவரை இதைக்கொண்டு மதாபிமானிகள் சிறிது ஆறுதல் அடைய இடமுண்டு. புதிய சட்டப்படி, மத விஷயமாக ஏற்கனவேயிருந்து வந்த பாதுகாப்புகள் எடுக்கப்பட்டுவிட்டன. சட்டஸபை இஷ்டப்பால் எவ்வித மதசீர்திருத்தத்தையும் செய்துவிடலாம். அதற்கு எவ்வித பாதுகாப்பும் கிடையாது. இவ்வித நிலைமையில் கவர்னர்கள் மதவிஷயமாகப் பாதுகாப்புச் செய்து கொடுக்கவேண்டிய அதிகாரம் பெற்றிருப்பது சிறிது விரும்பத்தக்கதே. ஆயினும் கவர்னர்கள் இந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கையில் கொஞ்சமும் பக்ஷபாதமின்மையும் காட்டுவார்களா? தங்களுக்கு ஸௌகர்யமான ஸமயங்களில் விசேஷாதிகாரத்தை உபயோகிக்கவும், இஷ்டமில்லாத ஸமயத்தில், அதை உபயோகிக்க மறுப்பதும் வழக்கமாயிருக்கிறது. சாரதாச்சட்ட விஷயத்தில், இதை உதாஹரணமாகப் பார்க்கலாம். விசேஷ அதிகாரத்தை உபயோகித்து அதைத்தடுக்க எவ்வளவோ நியாயமிருந்தும் அதை ஸர்க்கார் இன்றுவரை உபயோகிக்க முன் வந்தார்களா? ரங்கய்யர் ஆலயப்பிரவேச மசோதாவுக்கு முன் அநுமதியையே மறுக்கவேண்டுமென்று நாம் கேட்டது பலித்ததா? சென்னை சட்டஸபையில் டாக்டர் ஸுப்பராயனின் ஆலயப் பிரவேச மசோதா புகுந்ததைத்தடுத்தார்களா? இதையெல்லாம் நினைக்கையில் ஆசாரத்திருத்தவாதிகளுடைய கூக்குரலுக்குச் செவிசாய்த்து ஸர்க்கார் அநேக ஸமயங்களில் நம்மைக் கைவிட்டதுபோல் இனியும் செய்யமாட்டார்களாவென்ற ஸந்தேஹம் உண்டாகக் கூடியதே. மேலும் காங்கிரஸ் கக்ஷியார் கேட்கும் உறுதிமொழியும் கொடுக்கப்பட்டுவிட்டால், அவர்கள் மதச்சீர்திருத்த விஷமம் செய்வதை கவர்னர்கள் எப்படித்தடுக்க முடியும்? அப்போது, ராஜசக்ரவர்த்தியின் ஆக்ஞாபத்திரத்தின் கதிஎன்னவாகும்? ஆகையால் மற்ற விஷயங்களில் கவர்னர்கள் எப்படி நடந்தாலும், மதவிஷயத்தில்மட்டும் அவர்கள் கண்டிப்பாக இந்த ஆஜ்ஞாபத்திரத்தில்கண்ட ஆக்ஞையை நிறைவேற்றுவதில் மிகுந்த உறுதிகாட்டவேண்டும்.

தவிரவும், கிறிஸ்தவர், மஹம்மதியர் போன்றவர்களுடைய மத விஷயத்தைக் கவர்னர்கள் எவ்வளவு பொறுப்புடன் கவனிப்பார்களோ அவ்வளவு பொறுப்புடன் ஹிந்துக்களுடையமத விஷயமும் கவனிக்கப்படவேண்டும். இதில் பக்ஷபாதம் காட்டப்படாதென்றும் நினைக்கிறோம். எப்படியிருப்பினும், ஸநாதந தார்மிகள் இனி எதிர்காலத்தில் நடந்துகொள்ளப்போகும் மாதிரியை அநுஸரித்தே அவர்களுடைய நிலைமையிருக்கும் ஆதலால் மிகுந்த கட்டுப்பாடும், உறுதியும்கொண்டு நாம் நடந்துகொண்டால் இத்தகைய விசேஷாதிகாரங்களால் ஏதாவது நன்மைபெறலாம், இல்லையேல் நம்மை லக்ஷ்யம் செய்யாமலே கார்யங்கள் நடந்துகொண்டுபோகும்.

மன மாற்றமா?

சென்னை கார்ப்பரேஷனில் காங்கிரஸ்காரர் தயாரித்த வரவு செலவுத்திட்டம் விவாதிக்கப்படுகையில் காங்கிரஸ் மெம்பரான ஸ்ரீமான் என். ராஜகோபாலன் என்பவர் கர்ப்பத்தடை முறையைப் போதிக்க 2 ஆயிரம் ரூபாய் அநுமதிக்கும்படி ஓர் பிரேரணை கொண்டுவந்தார். காந்திஜிகூட கர்ப்பத்தடையை ஆதரிப்பதாக அவர் கூறினார். ஆனால் அதைப் பலர் ஆக்ஷேபித்து மறுத்தனர்.

இதில் விசேஷமென்னவென்றால் டாக்டர் முத்துலக்ஷ்மிரெட்டி கூட இந்தப் பிரேரணையை எதிர்த்ததாகும். கர்ப்பத்தடை விஷயத்தில் இந்துக்கள் மேற்றிசையாரைப் பின்பற்றக்கூடாதென்றும், கர்ப்பத்தடை முறையானது நமது சிறுமிகளையும், சிறுவர்களையும் பொறுப்பற்ற தகாதவழியில் கொண்டுபோய் விட்டு மிகுந்த தீங்கு விளைவிக்குமென்றும் பேசினார். மேலும், காந்திஜி கூறுவதுபோல் கர்ப்பத்தடைக்கு பிரம்மசர்யமும் தன்னடக்கமும்தான் அவச்யமென்றும் சொன்னாராம்.

இந்த அம்மாள் கர்ப்பத்தடை முறையை ஆதரிப்பவளென்று நாம் நினைத்திருந்தோம். ஆனால் அவர் அதை எதிர்ப்பது ஸந்தோஷிக்கத் தக்கதே. தீவ்ர ஆசாரத்திருத்தவாதினியான இந்த அம்மாள், ஆசாரத்திருத்தவாதிகளால் குருட்டுத்தனமாக ஆதரிக்கப்பட்டுவரும் கர்ப்பத்தடை முறையை எதிர்ப்பது விசேஷம்தான்.

"காங்கிரஸ்ஸை விட்டுவிடுவோம்"

சென்னை கார்ப்பரேஷனில் கல்வி இனச்செலவு விவாதிக்கப்படுகையில் முஸ்லீம் பெண்களுக்கு கார்ப்பரேஷன் செலவில் வண்டி வைத்துப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்து வருவதற்காக பணம் அநுமதிக்கப்பட்டது. பிறகு சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு முஸ்லீம் பெண் பாடசாலை வைக்கவேண்டுமென்று ஜனுப் ஹமீத்கான் பிரேரேபித்தார். அங்கு படிக்கக்கூடிய முஸ்லீம் பெண்கள் 25 பேர்களே இருப்பதாயும் இதற்காகத் தனிப்பள்ளிக்கூடம் தேவையில்லையென்றும், ஸ்ரீமான் வரதாச்சாரியார் சொன்னார். இவ்வளவுதான் தாமஸம்! காங்கிரஸ் வாதியாக இருந்து காங்கிரஸை அநுக்ரஹித்துவரும் ஜனுப் ஹமீத்கானுக்கு பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. உடனே 'ஜாக்கிரதை' என்று காங்கிரஸ்வாதிகளுக்கு எச்சரிக்கை கொடுக்க ஆரம்பித்தார். பொறுப்பற்ற வழியில் பேசுவதாகக் கண்டித்தார். முஸ்லீம்களை காங்கிரஸிலிருந்து துரத்துவதாகக் குற்றம் சாட்டினார். இப்படிப்பேசினால் மற்ற முஸ்லீம்களும் காங்கிரஸை விட்டுப் போய்விடுவார்களென்று பயமுறுத்தினார். காங்கிரஸ் கௌன்ஸிலர்கள் நடுங்கிவிட்டார்கள். அந்தோ!

ஸ்ரீமான் வரதாசாரியர் சொல்லியதில் என்ன தோஷம்? இதில் காங்கிரஸ் ஸம்பந்தமென்ன இருக்கிறது? முஸ்லீம்கள் எது சொன்னாலும், எது கேட்டாலும் கைகட்டி வாய்பொத்தி அப்படியே அதை ஆதரிக்கவேண்டியதே காங்கிரஸ்வாதிகளின் தலைவிதிபோலும்? விஷயத்திலுள்ள உசிதாநுசிதத்தைக் கூட எடுத்துக்கூற உரிமையில்லையா? இதில் ஜனுப் ஹமீத்கான் ஸம்பந்தமற்ற விஷயங்களைச் சேர்த்து காங்கிரஸைப் பயமுறுத்தியது நேர்மையா? முஸ்லீம்கள் எங்கு போனாலும் ஸ்வய நலத்திலேயே உறுதியான திருஷ்டியுள்ளவர்களென்பது வெகுகாலமாகத் தெரிந்ததே. இதில் காங்கிரஸ் முஸ்லீம்களும் சளைத்தவர்களல்ல. ஆனால் முஸ்லீம்களுக்கு இவ்வளவு தூரம் இடம் கொடுத்தது யார்? காங்கிரஸ் தலைவர்களன்றோ? அவர்கள் இழைத்த தவறுகளை அவர்களே அநுபவிக்கவேண்டியது அவர்களுடைய தலைவிதியே! ஆயினும் காங்கிரஸ்காரர் கொடுக்கும் இடத்தினால் ஹிந்து ஸமூஹத்தின் உரிமைகளும் நன்மைகளும் நாசமாகப்போவதை யார் ஒப்பக்கூடும்?

ருக்குமணி அருண்டேலின் ஸ்வாபிமானம்?

சென்னை அடையாற்றில் நடந்த பிரம்ம ஞானக்கூட்டத்தில் ஸ்ரீமதியான ருக்மணி அருண்டேல் ஹிந்து மதாசாரத்தில்அபிமானமும் ஆதரவும் காட்டிப் பேசியது ஓர் விசேஷமாகும். ஹிந்து ஸ்திரீகள் புடவைக்கட்டிக்கொள்ளும் முறையே உலகில் மிக நேர்த்தியானதென்றும், மேற்றிசையார், புடவை உடுத்திக்கொண்டு போவோரைப் பாராட்டுவதாயும் இவர் கூறினார். நமது ஸ்திரீகள் உடுத்தும் முறைக்கு இவருடைய ஆதரவு கிடைத்ததற்குப் பலர் ஸந்தோஷிக்கலாம்! இதற்கு மேல் அந்த அம்மா கூறியது தான் கவனிக்கத் தக்கது. நமது பழைய பழக்க வழக்கங்களை விட்டுவிடக்கூடாதென்றும், அவைஉண்மையான கலாஞான, நாகரிகத்தின் உணர்ச்சியின் சின்னங்களென்றும், ஐரோப்பியர் மாதிரி இந்தியரும், இந்தியர் மாதிரி ஐரோப்பியரும் கலப்பு வாழ்க்கை நடத்துவோரை "கலப்பு வழக்கத்தினர்" என்று தாமழைக்க விரும்புவதாயும் கூறினார்.

இவர் வெளியிட்டுள்ள மேற்கண்ட அபிப்பிராயங்கள் நியாயமானவைகளே. ஆனால் இந்த அம்மாள் விஷயத்தில் அவை எவ்வளவு தூரம் பொருந்தியிருக்கின்றன என்பதே மத்யஸ்தர்கள் கவனிக்க வேண்டிய அம்சம். டாக்டர் அருண்டேல் ஐரோப்பியர். ஆனால் அவர் இந்தியரைப் போல் வாழ்கிறார். இந்த அம்மா ஹிந்து. ஆயினும் ஒரு வெள்ளைக்காரரை மணந்து ஐரோப்பியரைப் போல் ஆகிவிட்டாள். இந்த மிச்ர வழக்கம் இவரிடமே இருக்கவில்லையா? பழைய பழக்க வழக்கங்களை எல்லாவற்றையும்விட்டுவிடக்கூடாதென்கிறார். ஜாதிக் கலப்பு விவாஹம் கூடாது என்ற பழைய பழக்கமும், வழக்கமும் இவர் விஷயத்தில் என்னவாயிற்று? நமது பிராசீன விவாஹமுறை உயர்ந்த நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்டதல்லவோ? பேச்சும், செய்கையும் முரண்பட்டதாக இருக்க வேண்டியதே தற்கால கலிகால நவீன நாகரிகம் போலும்?

வி. ரா. ஆசாரியர் சுற்றுப்ப்ரயாணம்.

கவர்னர் உறுதிமொழியளிக்க மறுத்ததையும், தமது நிலைமையையும் பொதுஜனங்களுக்கு எடுத்துச்சொல்லுவதற்காக ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் முதலிய காங்கிரஸ் தலைவர்கள் சென்னை மாகாணமெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்யத்தீர்மானித்திருக்கிறார்கள்.

All India Varnashrama Swarajya Sangh.

9th Session.

The following are extracts from the Presidential address of Rao Sahib N. Natesa Ayyar of Madura at the 9th Session of the All India Varnashram Swarajya Sangh at Puri on the 27th March 1937.

Pre-historic events repeat themselves oftener than historic events and transform sceptics into believers. This is not the first time when our Dharma and culture are threatenend to be stamped out by our brethren of materialistic tendencies, and those who value them assemble together to devise means for their protection. We have chosen a place where our voice can be heard by the Lord Shri Jagannath not sleeping in the Kshir Samudra but standing on the sea-shore to help us The times are very trying and intriguing. The Montague Chelmsford Constitution with its dyarchy, and its top-heavy Administration will make its exit unwept, unhonoured, and unsung. The atmosphere still continues charged with intense passion and excitement. All eyes are turned on India now, more than ever.

At this juncture, the Rashtrapati (Pandit Nehru) has declared:— "I am convinced that the only key to the solution of world's problems and of India's problems lies in Socialism, and when I use the word, I do so not in a vague humanitarian sense, but in the scientific and economic sense. .... It means a new civilization and some glimpses of it we can have in the territories of U. S. S. R. I look upon the great and fascinating unfolding of a new order and new civilization as the most promising feature of our dismal age. Stated in ordinary language this pronouncement reduces itself into 5 propositions:—

(1) The Institution of private ownership must be abolished. The Zamindar, the ryot, the farmer, the Temple, Mutt and every other religious and charitable institution must be content to receive whatever the State may choose to dole about.

(2) Capitalism must go. The Gaekwar, Mr. Birla and the Rajas and the Sirs, and the sowcars must alike surrender what they have.

(3) Morality is a convention having no independent value and mus yield to higher national interest.

(4) Religion is an unwanted imposition, and must be sent into exile.

(5) All inequalities must be levelled down.

But will Mr. Nehru explain why the civilized nations are perpetually fighting and devouring one another, minting constantly explanations and justifications for their actions. Hitler is reported to have said "To satisfy the people by doing good to them, to win their hearts by being their real friends is useless and impossible. The one thing that is needed is to fool the people by intensive and extensive lying and hypocrisy. If you can make people believe what you want, you can make them act as you want. People are such fools that you can make them believe anything you choose, if you say it long enough, loud enough and often enough.

The anti-Dharmic gentlemen seem to hold the same view. A Congress organ has described the orthodox Hindus as a set of fissiparous incorrigible cranks, sworn enemies of Swarajya and tried friends of alien imperialism. A Congress leader some time tickled his audience by stating "the Sanatanists have no place either in this world or in any other world". We are tempted to retort:— Ye spoilt, West-infatuated children, you do not know what you are doing" What is the cause of this universal topsy-turveydom which is confronting us at every turn? It is the collapse of religion and defiance of eternal principles. A firm wise policy rooted in religion and respect for eternal verities can alone save humanity from the annihilation to which it is heading. The A. I. V. S. Sangh is the only all-India body that is both political and religious in its outlook. Swadharma is implicit in Swarajya. You cannot think of the one without the other. This ideal alone is preminently fitted for the Indian genius. There is no question but that this ideal alone will survive ultimately.

The Congress President has defined his Swarajya as follows:— "I want you to understand what this Swarajya is. Remember this. It is not the changing over of British Officials for a handful of Indian officials. It means that the power of the Government should vest in the Indian masses. That is what Swaraj means. The 36 crores of the Indian people should be called sharers in the Swarajya; to whatever religion, or caste they might belong, they must have equal share in the Government of the country". This is tantamount to declaring that the 35crores are to rule themselves, all equally one with another. Does such a Government exist anywhere? Even in Russia and in the countries of Marx, Lenin and Stalin, it has never been anything else than one man's rule, however much interested persons may swear to the contrary. Whereever we turn, whether to England or America, we find it is only one man or a handful of men that is governing.

SWARAJYA—SANATANIST CONCEPTION.

Swarajya is a cherished age-long conception of ours. Swaraj was never denied by our conquering Kshatriyas even to the vanquished nations. Treating Swarajya as dear even to our enemies, shall we be indifferent to it for ourselves? He will be indeed a base traitor who would barter away his birth right for any consideration. Our Swarajya has a three-fold basis, political, religious, and economic The Swarajya of other parties is only political and economic. Unless legislative non-interference in religious matters is not only proclaimed on paper, as was done at Karachi, but sincerely carried out in practice, no Swarajya will ever be won and, if won, will not be worth having. Will not those of our brethren who have made a diversion and are interfering in our religion retrace their steps? Have they not already driven out in ever-increasing numbers the very large Sanatani section which has also contributed by its intellect, its heart and its purse to the steady growth of the Congress to its present dimensions?

Swaraj should march hand in hand with Swadharma. Both are parts of an indivisible whole. A Rajyam which denies Swadharma to the Hindu is not Swarajyam but the quintessence of Para Rajyam.

(To be continued.)

The Puri Conference. Some Impressions.

The President-elect of the All-India Varnashrama Swarajya Sangha Conference, which was held at Puri, emerged from the Govardhan Mutt, with Rao Bahadur Sadasiva Mahadeva Parande, Chairman of the Reception Committee, to head the mile-long procession to the Conference pavilion.

Dressed in immaculate white, the President-elect looked a dignified picture when he bowed to the thousands of Sanatanists who had gathered from all parts of the country and who greeted him with deafening cheers Headed by three tuskers, the procession was picturesque and extreme and made one feel as though the clock of time were switched back to a thousand years: so typical and characteristic was the scene, which presented an animated spectacle of thousands of Sanatanists, joining in community singing of hymns and psalms, all raising up their hands in the traditional oriental way to the Heavens.

The procession entered the spacious Conference Pandal, and after the Chairman of the Reception Committee had delivered his welcome address, Rao Sahib N. Natesa Iyer proceeded to deliver his Presidential address. The address was periodically punctuated with applause and was on the spot translated into as many as 15 languages for the benefit of those who were unacquainted with English. The consensus of opinion among the audience seemed to be that Rao Sahib Natesa Iyer had talked 100-per cent commonsense, which were inspired by the purest of motives and a transparent sincerity and unbounded energy for a cause which ought to be as near to the heart of every self-respecting Indian as the issue of his own flesh and blood.

Rao Sahib N. Natesa Iyer has succinctly summed up the Sanatana Case briefly when he compared our Swaraj to

Continued page 7.

புரி க்ஷேத்திரத்தில் வித்வத்பரிஷத்

பண்டிதர்கள் ராஜீய விஷயங்களில் கலக்கவேண்டும்.

(நமது நிருபர்.)

ஸ்ரீ புரி க்ஷேத்திரத்தில் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க அதிவேசனத்தின் அங்கமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வித்வத் பரிஷத்தின் கூட்டமானது மார்ச்சுமீ 27உ காலை 8-மணிக்கு நடைபெற்றது. மகா நாடுக்காக வந்திருந்த பிரபல வித்வான்களும் லௌகிகப் பிரமுகர்களும் நிரம்ப விஜயம் செய்திருந்தனர். நடவடிக்கைகள் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே நடைபெற்றன. ஸ்ரீ புஷ்பகிரி மடம் ஆஸ்தான வித்வான் பிரும்ம ஸ்ரீ மல்லாதி ராமகிருஷ்ண சயனுலு, பரிஷத்தில் அக்ராசனம் வகித்தார்.

அக்ராஸனாதிபதியும் வேறு இரண்டு பண்டிதர்களும் மத்யஸ்தர்களாக நியமிக்கப்பட்டனர். முக்கியமாக மூன்று விஷயங்களைப் பற்றிச் சர்ச்சை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(1.) திருவாங்கூர் ஆலயப்ரவேச விளம்பரத்தைப் பற்றியும், (2) சாரதாசட்டத்தைக் கடுமையாக்கும் முயற்சி விஷயத்தைப்பற்றியும், (3) பண்டிதர்கள் ராஜநீதி விஷயங்களில் பிரவேசிக்க வேண்டுமா என்பது பற்றியும் விசாரம் தொடங்கிற்று.

மூன்றாவது விஷயத்தை முதலில் விசாரித்து முடிவுசெய்வது உசிதமென்று பிரும்ம ஸ்ரீ ஸ்வாமிநாத சாஸ்திரியார் கூறிய யோஜனை ஒப்புக்கொள்ளப்பட்டது. அதைப்பற்றிச் சர்ச்சை ஆரம்பமாயிற்று ஒரு பண்டிதர் முதலில் பேசுகையில், பண்டிதர்களுக்கு ராஜீய விஷயங்களில் ஒன்றும் தெரியாது என்று தற்போது யாவரும் அவர்களை உதாஸீனம் செய்துவருவதாயும், தர்மவிரோதமாக ராஜநீதிகள் பிரவர்த்திக்கும் சமயங்களில் பண்டிதர்கள் உபயோககரமான காரியங்களைச் செய்ய முடியாமலிருப்பதாயும், இதை யோஜிக்கையில் நாம் ராஜநீதி விஷயங்களிலும் பிரவிருத்தித்தாலல்லது பிரஜைகளின் ஹிதத்தை ஸம்பாதிக்க முடியாதென்றும் வாதித்தார்.

தர்ம விரோதிகள் ஜனங்களிடையில் சென்று அவர்களுக்கு ஹிதகாரியங்களைச் செய்வதாகச்சொல்லி ஜனவிச்வாசத்தை ஸம்பாதித்திருப்பதை அறிந்து, பண்டிதர்களும், அதே மாதிரியே ஜனங்களிடையில் போய், தர்ம விரோதமான வழியில் சென்றால் உண்டாகக் கூடிய அனர்த்தங்களை எடுத்துக்காட்டி, தர்மத்தில் ருசியும், பண்டிதர்களிடம் நம்பிக்கையும் உண்டாகும்படி செய்யவேண்டியது அவசியமென்று அங்கீகரிக்கப்பட்டது.

காசி பிரும்மஸ்ரீ ராஜாராஜேஸ்வர சாஸ்திரிகள் பேசுகையில், அர்த்த சாஸ்திரப்படி ஆந்வீக்ஷகீ, த்ரயீ, வார்த்தா, தண்டநீதி இவை ராஜாவால் காப்பாற்றப்பட வேண்டிய அர்த்தங்களென்றும், இப்போதுள்ள ராஜாங்கமோவென்றால், தங்கள் தேசத்திலுள்ள வித்யைகளை அநுசரித்து அர்த்தநீதி சாஸ்திரங்களை பிரஜைகளிடம் வியாபிக்கும்படி செய்வதாயும், அதனால் வரும் அனர்த்தங்களை நிவாரணம் பண்ணப் பண்டிதர்கள் தர்மாநுசாரியான, அர்த்த, நீதிசாஸ்திரங்களை ஜனங்களுக்குத் தெரிவித்து லோகஹிதத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

மற்றொரு பண்டிதர் பேசுகையில், பண்டிதர்கள் ராஜீயதர்மங்களில் பிரவேசிப்பதால் ஜனங்கள் காங்கிரஸமுதலிய கோஷ்டிகளோடு பண்டிதர்களையும் சேர்த்துவிடுவார்களென்று சொன்னர். வேறு ஒரு பண்டிதர் இதற்குப் பதில் கூறுகையில் ராஜீய விஷயங்களில் பண்டிதர்கள் காங்கிரஸ் கக்ஷியை ஏன் பின்பற்றி நடக்கக் கூடாதென்று கேட்டார்.

பிரும்மஸ்ரீ ராஜாராஜேச்வரசாஸ்திரிகள் இதற்குப் பதில் கூறுகையில், ஸ்வாமி, அமாத்யன் சுக்ருத, கொச, ராஷ்ட்ர, துர்க்க, பலம் முதலிய ஏழு ஸ்தானங்களில் நமது தேசத்தவர்கள் ஆக்ஷி செலுத்த வேண்டுமென்பது காங்கிரஸ்காரர்களின் ஸ்வராஜ்யமென்றும், ஆனால் காங்கிரஸ்வாதிகளின் அபிப்பிராயப்படி, அந்த ஆக்ஷி பிரதிபந்தகமில்லாததாக இருக்கவேண்டுமென்றும், ஆனால் ஸநாதனிகளின் மதப்படி அந்த அதிகாரமும் ஆக்ஷியும் கட்டுப்பாட்டுக்கு உள்பட்டிருக்க வேண்டுமென்றும் அதாவது தர்மத்துக்குக் கட்டுப்பட்டே ராஜ்யாதிகாரம் நடக்கவேண்டுமென்றும் சொன்னர்.

அதன் பிறகு "பிராசீன பிரமாணங்களுக்கும் தர்மங்களுக்கும் அனுசாரியான வழியில் பண்டிதர்கள் ராஜ்ய நீதி விஷயங்களில் பிரவேசித்து ஸர்வ பிரகாரத்தாலும் கார்யங்களை செய்ய வேண்டும்" என்று பரிஷத்தில் ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டது.

இத்துடன் முதல்நாள் கூட்டம் முடிவு பெற்றது.

பிறகு நடைபெற்ற பரிஷத்கூட்டத்தில், ஆலயப்பிரவேசம், சாரதாச்சட்டம் இவைகளைப்பற்றி சர்ச்சை நடந்து அவை அசாஸ்திரீயமென்று தீர்மானிக்கப்பட்டன. கடைசியாக "ராஜா காலஸ்ய காரணம்" என்ற விஷயத்தைப்பற்றி வாஸ்தவமான கருத்து என்ன வென்பதைப்பற்றி சாஸ்திரியமான முடிவுசெய்யப்பட்டது.

இது பிறகு வெளிவரும்.

பிரசாரநிதிவஸூல்.

அகில இந்திய ஸ்வராஜ்ய ஸங்கத்தின் காரியங்களுக்காக பூரி அதிவேசனத்தில் 28—3—37-ல் வாக்களிக்கப்பட்ட நன்கொடைகள்.

1. ராம் தன்லால்ஜி ஜாஜடியா ரூ. 501 2. சிவதயால்ஜி ராம்ஜி தாஸ்ஜி பாஜோரியா 501, 3. ஸூரஜ்மல்ஜி நாகர்மல் 500, 4. ஜவஹார்மல் கோவிந்தாலல் 250, 5. ஹஜாரிமல்ஜி ஸோமாணி 251, 6. லாலா பாபு கன்னுஜி 251, 7. ஸேட் ஜயதயால்ஜி கஸரா & கம்பெனி 101, 8. விசேஷோராம் ஜிடுங்கர்மல் 101, 9. ஸாதிராம்ஜி கங்கா ப்ரஸாத் 251, 10. ராய்பஹதூர் ராமதேவஜி சொக்காணி 251, 11. சிவபகவான் கஜானன் 101, ஸ்னேஹிராம்ஜி ராம்குமார் ஜூஞ்சன்வாலா 201, 13. ஸ்ரீ நவீன்தாஸ் புருஷோத்தம்தாஸ் ஸங்கவி 125, 14 பண்டித ரமாபதி மிச்ரா 101, 15. காசிநாத் உம்பர்க்கார் சாஸ்திரி ரூ. 12 ப்ரதிவருஷம். 16 R. V. R. ஸோமயாஜி ரூ 24 வார்ஷிகம், 17. ஸ்ரீ சங்கராசார்யா, காமகோடிபீடம் 101, 18. ராவ்சாகிப் N. நடேசய்யர் 301, 19 ஸர்தார் நாநாசாகிப் காளிவாலே ரூ. 2, 20. மஹந்த் ஏமார் மடம் 501-ம், தவிர 300 வார்ஷிகம், 21. தக்ஷிண பார்சவமடம் மஹாந்த் ரூ 100-ம் தவிர 50 வார்ஷிகம், 22. மஹந்து தேவநாயகநாதார்யாஜி படகாத் 200 தவிர 100 வார்ஷிகம், 23. ச்ரிமாலிமட மகந்து 50 தவிர 25 வார்ஷிகம், 24. மகந்து ராதாவல்லபமடம் 101 தவிர 51 வார்ஷிகம், 25, ஸ்ரீ ஸேட்மகனீ ராம்ஜி ராம்குமார் பாஸ்கட், ரூ. 5100 (ஐயாயிரத்தி நூறு.) 26. ஸேட்லக்ஷ்மி நாராயண் கோடி வாலா 1001 ஒரு ஆயிரத்தி ஒன்று, 27. ஸ்ரீசங்கராசார்யர் ராஜராஜேசுவர மடம் ரூ. 51.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸம்மேளனம். ஜகந்நாதபுரம்.

(கும்பகோணம் ரிடையர்டு இஞ்சினியர் சுவாமிநாத சாஸ்திரிகள் எழுதுகிறார்)

சென்றவாரம் ஆர்யதர்மத்தில் ஸ்ரீமான் ஸோமதேவசர்மா வேண்டிக் கொண்டபடி பூரி ஸநாதனதர்மசபை வரலாற்றையும் யாத்திரை விசேஷத்தைப்பற்றியும் சில அம்சங்களை எழுதத்துணிந்தேன்:—

கும்பகோணத்திலிருந்து ப்ராம்மண சபை பிரதிநிதிகளாகவும் தமிழ்நாடு வைதிக தர்ம சங்க சார்பாகவும் ஸ்ரீமான் மகாலிங்கய்யரும் அடியேனும் சென்ற மார்ச்சு 22-தேதி இரவு இங்கிருந்து புறப்பட்டு பட்டணம் 23ந் தேதி போய்ச்சேர்ந்தோம். ஏற்கனவே தீர்மானித்திருந்தபடி ப்ருமஸ்ரீ ராமஸ்வாமி அய்யர் வீட்டில் பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து மதுரையிலிருந்து அக்கிராசனாதிபதி வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். சாயங்காலம் குறித்த சமயத்தில் ராவ்சாகிப் நடேசய்யர் அவர்களும் அவருடன் வக்கீல் வெங்கிடாசல சர்மா, Dr. சுப்பிரமணியய்யர் முதலிய பிரதிநிதிகளும் வந்துசேர்ந்தனர். கோயம்புத்தூரிலிருந்து மகா-ா-ா ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திராவும் வந்து கூடினர். அன்று இரவே 8மணிக்கு மதிராஸ் ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் அநேக வர்ணாச்ரம தர்மாபிமானிகள், அக்கிராசனாதிபதிகளான நடேசய்யரவர்களுக்கு மாலை சூட்டி ஆசீர்மொழிகள் கூறி வழியனுப்பிவைத்தனர். முக்கியமாய் சதுர்புஜதாஸ், கிருஷ்ணதாஸ், ராமஸ்வாமி அய்யர், திருமலை அய்யங்கார், சோமதேவசர்மா, வைத்தினாதய்யர் முதலிய ஆஸ்திகசிரோமணிகள் ஸ்டேஷனில் கூடி தங்கள் பூரிக்கு வரமுடியாமல் இருந்ததற்குமனம் வருந்தி தர்ம ஸம்மேளனத்திற்கு மங்கள வாழ்த்துக்கள் செய்து குழுமி நின்றனர்.

நாங்கள் 24-தேதி காலையில் எல்லூரில் இறங்கி அவ்வூர் ஸ்டேஷன் மாஸ்டராகிய

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

Cont. from page 6.

a tripod resting on a political foot, an economic foot and a religious foot. The religious foot, though lost, is not the least, and must needs be given the first place, in any scheme of Swaraj, and the President sounded a note of warning that for every year during which the religious foot remains the same, the goal—Swaraj—will stand retarded by ten times that number and for every minute by which restoration is hastened, by ten times that number the time needed for reaching the goal will be shortened and that unless non-interference in religious matters is not only proclaimed on paper, as was done in the Karachi Resolutions, but also religiously carried out in practice, no Swaraj, in any sense of the term, will be won, and if won, will not be worth anything.

Judging from the very large audience of the delegates who poured in from all parts of the country, it appears that the 1938 Conference will be an unprecedented success.

T. S. Ramaswami Iyer.

(7-ம்பக்கம் தொடர்ச்சி)

மாதிரிமங்கலம் கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களால் வெகு உபசாரத்துடன் அதிதி ஸத்காரம் செய்யப்பெற்றோம். அவ்விடத்திலிருந்த பிரபல ஸநாதநிகளும் மதுரை அய்யாவர்களை கண்டு ஸம்பாஷித்து சந்தோஷமடைந்தனர்.

பிற்பகலில் எல்லூரில் இருந்து புறப்பட்டு சாயங்காலம் 5மணிக்கு ராஜமகேந்திரம் ஸ்டேஷன் அடைந்து இறங்கி தவளேசுவரம் சென்று இஞ்ஜினீர் வலங்கிமான் வெங்கட்டராமய்யர் அவர்களால் ஆதரவுடன் அளிக்கப்பட்ட சிற்றுண்டிகளை உண்டு, இரண்டு மயில் அகலமுள்ள கோதாவரி ஆற்றைத் தாண்டி, கௌதமாச்ரமத்தைக் கண்டு களித்து, அக்கரை சேர்ந்து அவ்விடமிருந்து நாற்பது மயில் தூரத்தில் விஜயம் செய்திருந்த ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடிபீடாதிபதிகள் திவ்யதர்சனத்திற்காக துரிதமாய் பிரயாணம் செய்து இரவு 10மணிமுதல் 2மணிவரையில் ஸ்ரீ ஸ்வாமிகள் தர்சனத்துக்கும் நன்மொழி உபதேசங்களுக்கும், ஆசீர்வாதங்களுக்கும் பாத்திரர்களானோம்.

இரவு சற்றுத்தூங்கி 25-ந் தேதி காலை ஸ்ரீ ஸ்வாமிகள் பிரசாதமும் உத்திரவும் பெற்றுக்கொண்டு திரும்பி 45மயிலும் அதிசீக்கிரமாய் கடந்து இராஜமகேந்திரத்தில் கல்கத்தா ரயிலில் ஏறி இரவு முழுதும் சுகமாய் பிரயாணம் செய்து 26-ந் தேதி காலை 7மணிக்கு சத்ராபூர் ஸ்டேஷனில் அவ்வூர் ஜமீன்தாரும் பிரபல பிரபுவும் மகா ஆஸ்திகரும் ஸம்மேளன வரவேற்பு சபை உபதலைவரும், அட்வகேட்டுமாகிய மகா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் வெங்கிட கிருஷ்ணய்யா பந்துலுகாரு அவர்களால் எதிர்கொண்டு அழைக்கப்பட்டு, மேற்படியார் பங்களாவிற்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டோம். மேற்படியார் அக்கிராசனாதிபதி அவர்களையும் அவருடன் கூடவந்த பிரதிநிதிகள் எல்லோரையும் அன்று சிறப்பாக விருந்து செய்துவைத்து, போஜனத்திற்குப்பிறகு தனது மோட்டாரிலே சத்ராபூரிலிருந்து யாத்ரோத்தமஸ்தலமாகிய பூரி ஜகந்நாதத்திற்கு ரோட்மார்க்கமாகவே நூறுமைல் தூரமும் சில்கா ஏரி, நிர்மல் ஸரஸ், முதலிய விசேஷ ஸ்தலாதிசயங்களைக் காண்பித்துக்கொண்டு ஸநாதனதர்ம யாத்ரையைப் பூர்த்தி செய்துவைத்தார். இப்போப்பட்ட ஸம்ப்ரமங்களுடன் 26-ந் தேதி மாலை 6மணிக்கு நாங்கள் எல்லோரும் புருஷோத்தமபுரி ஆகிய ஸ்ரீஜகந்நாத க்ஷேத்திரத்தை அடைந்து மனம் களித்தோம்.

பூரியில் 27, 28, 29 மூன்று தினங்களும் தர்ம ஸம்மேளனம் வெகு விமர்சையாய் பல்லாயிரம் ஜனங்கள் பற்பல தேசங்களிலிருந்து ஒருங்கு கூடி வெகு விமர்சையுடன் நடந்தது. மூன்று நாளும் விஷ்ணு யாகமும் மஹாஜன ஸந்தர்ப்பணமும், வித்வத் சபைகளும், வேத பூஜைகளும், தேவதாதர்சனமும், பஜனைகோஷ்டிகளும் கண்டோர் களிப்புறுமாறு நடந்தன. பாம்பே முதல் அஸ்ஸாம் வரையில் காஷ்மீர் முதல் மதுரை வரையிலும் உள்ள இந்திய நாடுகள் எல்லாவற்றினின்றும் பிரதிநிதிகள் கூட்டம் கூட்டமாய் வந்து ஸம்மேளனத்தை நன்கு நடத்திவைத்தனர். அநேகமாய் நடவடிக்கைகள் எல்லாம் ஹிந்திபாஷையிலே நடந்தன. அடுத்த வருஷ தர்மஸம்மேளனத்தை தன் தன் ப்ராந்தத்தில் நடத்தி தர்ம கைங்கர்ய புண்யத்தையும் ஆனந்தத்தையும் அடையவேண்டும் என்று பஞ்சாப், மகாராஷ்ட்ரம், பண்டர்பூர், காசி, ஸிந்து, தமிழ்நாடு முதலிய பல மாகாணங்கள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு வரவேற்பு மொழிகள் கூறின. இப்படி எல்லா விஷயங்களிலும் ஆஸ்திகர்களுக்கு ஆஹ்லாதத்தை பல விதங்களில் செய்வித்து பகவத் கிருபையால் மங்கள வாழ்த்துடன் ஸம்மேளனம் இனிது முடிந்தது.

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.)

அத்தகையோரேவேண்டும்! கள்ளக்குறிச்சியில் ரதோத்ஸவத்தில் மேளசப்தம் கூடாதென துருஷ்கர்கள் பிடிவாதம்செய்ய போலீஸ் அதிகாரிகள் மிக ஸாமர்த்யமாக இருவருக்கும் ஸமாஸமுண்டுபண்ணி தேரை நிலைக்கு கொண்டுவந்தார்கள். எங்கும் இத்தகைய அதிகாரிகளிருந்தால் பல சண்டைகள் ஒழியும்.

அஜாக்ரதை! சென்னை பார்த்தஸாரதி தேரில் மூவர் அகப்பட்டிறந்தனர். இங்கு போலீஸ் அதிகாரிகளும் தர்மகர்த்தாக்களும் போதிய முன் ஜாக்ரதையுடனில்லாமலிருந்ததே காரணமென்பது பொதுஜன வாக். இப்படி அஜாக்ரதையாயிருந்தால் மேதாவி அதிகாரிகள் தேரே இழுக்கக் கூடாதென்பர்.

புடவை நிலைத்தது! அடையார், கலிக்கு ஓர் பிறந்த வீடு. அங்கு பற்பல அதர்மங்கள் விருத்தியாகின்றன. அங்கு நல்லவேளையாக பெண்கள் புடவை உடுத்துவது நியாயம். சிமையிலும் இதை விரும்புகிறார்கள். என ஓரம்மை பேசினாள். துணியே கூடாதென பேசுமிக்காலத்தே உடுக்கவும் அதிலும் புடவை கட்டவும் ஸாதகமாக அடையாற்றில் பேசியது பாக்யமே.

பலன்பெறவே ஆஸ்திகர்! அஸுரர் வரம் பெறும் வரை முனிவரைப்போல் தவம் செய்து ஆஸ்திகராக விளங்குவார். அதேபோல் கலியில் சிலர் ஓர் பலனைப்பெற 'நான் வைதிகனல்ல! மூடபக்தனல்ல' என பிரகடனம் செய்கிறதைப் பார்க்கிறோம். மிக ப்ரபல நீதிபதி பதவியை நாடி ஓர் சென்னை சட்ட நிபுணர் எனக்கு வைதிகத்தில் நம்பிக்கை இல்லை! சீர்திருத்தம் விரும்புவன் யான் என உத்கோஷித்தார். எதிர்பார்த்த பதவி கிடைக்கவில்லை. ஆனால் உள்ளது ஸ்திரமானது. ஆஸ்திகராவாரா!

கோயம்புத்தூர் கொடையாளி:— வியாபாரி ஒருவர் 10ஆயிரம் ரூபாய் புத்தகசாலைக்கும். 10 ஆயிரம் ஓர் நிதியும் குளம் கட்டவும் நன் கொடை அளித்தார். பெரும்பாலும் இக்கால கூற்றிற்கேற்கவே தானம் செய்வது நாகரிகமாய்விட்டது. பிராணிகள் தண்ணீர் அருந்த தடாகம் வெட்டுவதும் கல்வியளிப்பதும் மிக உத்தமமான தானமாகும். ஆஸ்திக கல்வியிருந்தால் சிறப்பாக தர்மம் செய்திருப்பார்.

பைத்தியமின்னுமா:— ஆகமாபாயிகளாய் பல இயக்கங்களைப் பார்க்கிறோம். கர்ப்பத்தடைபித்து ஆடி, ஓடி, பாடி ஓய்ந்தது எனலாம். இச்சமயத்தில் சென்னை நகரபரிபாலன ஸபையில் ஒருவர் அதை நினைப்பூட்டினார். பலர் அதை அடியோடு அடக்கிவிட்டனர். அவர் ஏமாந்ததற்கு வருந்துகின்றோம். மேலூட்டுப் பித்து என்று ஒழியுமோ?

பொதுப் பணத்தில் சலுகையா:- தாழ்ந்தவரை உயர்த்துவதென கண்மூடிக்கொள்கையால் பலர் பணத்தை ஒரு சிலருக்காக வாரி வாரி இறைத்திருக்கின்றன பல ஸபைகள். அதனால் ருசிகண்ட மகம்மதியரும் தங்கள் பெண்களுக்கு சென்னை நகரபரிபாலன ஸபையின் பணத்திலிருந்து வண்டி ஏற்பாடு செய்கிறது போதாத, தனி பல கலாசாலையும் மற்ற சௌகரியமும் வேண்டுமெனக் கேட்கின்றனர். தனிவரி மூலமப்படி செய்டலாம். பொதுப்பணத்தில் செய்வது நீதி அல்ல.

மந்திரி அமைப்பு:— சென்னை மந்திரி அமைப்பில் அனேக விசித்திரமுண்டு. அதில் ஒன்று ஸ்ரீ கிருஷ்ணராவ் என்பவர். (ஸநாதனி) பெயர் முதல்நாள் பத்திரிகையில் வந்தது. நேரில் முதல் மந்திரி அவரை அழைத்து நீ ஓர் மந்திரி என்றார். ஆனால் மறு நாள் அவர் பெயர் காணவில்லை. எங்கு எப்படி விஷமம் நடந்ததோ! மிக அல்பாயுஸாய் பிறந்த இச்சபை நியாயம் வழங்குவதானால் பிராமணர்களை சேர்த்திருக்க வேண்டும். இன்னும் பிரும்ம த்வேஷம் போகவில்லையா.

ஜவஹரின் அசட்டுத்தனம்:— நமது பல ஹீனத்தை எதிரிக்குக் காட்டாமலிருந்ததே பெரும் ராஜ தந்திரமாகும். எல்லோருக்கும் நன்மை புரிவதே தேசிய சபையின் நோக்கமென்று கூறி ஸநாதனிகளையும் சேர்த்துக் கொள்ளாதது ஒரு தவறு. இரண்டாவது வருந்தி வருந்தி மஹம்மதியரை இதில் சேர்க்க அழைப்பதும், அதற்கென பிரமாதமாக பேசுவதும் இச்சமயத்தில் ராஜ்யதந்த்ரமாகா! பலருக்கு இடமளிக்குமிது!

ராஜ்ய அடிமைகளே:— தேசிய தலைவர்கள் மேனாட்டு குருட்டு நாகரிகத்திற்கு அடிமைகளாகி ராஜ்யத்திலும் முழு அடிமைகளாகி விட்டனர். கற்பரசிகளான நமது குலஸ்திரீகளை சந்தியிலிழுத்து முரட்டு ராணுவ வெள்ளையரிடம் காட்டிக் கொடுத்துவிட்டுப் பிறகு பலமாக கத்தினால் யாது பயன்? சித்தானந்தர் பேத்தியை இரு அதிகாரிகள் மேல் வஸ்த்ரத்தைப் பிடித்துக் கிழித்தார்கள். சட்ட சபையில் தடபுடல் பேச்சு! இதை மதியாது அலக்ஷ்யமாக அதிகாரி பேசுகிறார்! குற்றம் யாரிடம்?

சென்னை.

அகில இந்திய வர்ணாச்ரம சங்கத்தலைவராக சென்ற ஸபையை மிக அழகாக நடத்தி ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாளையும், ஸ்ரீபூரி சங்கராசார்ய ஸ்வாமிகளையும் தரிசித்து சென்ற சனிக்கிழமை சென்னை ஸ்ரீ லலிதாலயத்தில் பிரும்மஸ்ரீ நடேசய்யரவர்கள் வ. ஸ். சங்க நிர்வாஹிகள் கூட்டத்தில் பிரஸன்னமாயிருந்து மதுரை சென்றார்.

ந. நி.

காந்தி - வைஸ்ராய் ஸந்திப்பு.

மந்திரிசபை அமைப்பு விஷயமாகச் சில மாகாணங்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதை ஸமாஸமாகத் தீர்த்து வைக்கவும், அதற்காக காந்திஜியும் வைஸ்ராயும் ஸந்திப்பது அவசியமென்றும் பார்லிமெண்டில் எதிர்கக்ஷித் தலைவராகவுள்ள மிஸ்டர் லான்ஸபரி வைஸ்ராயிக்குத் தந்தி அனுப்பியிருக்கிறார்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி.
மூடுந்துத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சாஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R. Ramaswami Iyengar, Proprietor

ஸ்ரீவைதிக வர்த்தனீ ஸபா புதுக்கோட்டை.

ஆலய மஹிமை.

(ஜி. மலையப்பசாஸ்திரிகள்)

மேற்படி ஸபையின் ஆதரவில் நடைபெற்ற ஸபையில் ஆலயமஹிமையைப் பற்றிசெய்யப்பட்ட உபந்நியாஸமாவது:—

ஆலயமென்பது விசேஷ ஸான்னித்யமுற்ற ஈச்வராதிகளுடைய விக்ரஹத்திற்குகற்பிக்கப்பட்ட ஸ்தானமாகும். அதற்குற்ற மஹிமை சுருதிகளால் விதிக்கப்படுவதும், ஸ்மிருதிகளால் அனுவதிக்கப்படுவதும் பெரியோர்களால் போற்றப்படுவதுமான பெருமையாகும். இதில் சிலருக்கு சிலகாலத்திற்கு முந்திதான் ஆலயங்கள் உண்டாயினவென்ற சங்கை உண்டாகிறது. அதனால் அவர்களுக்கு தற்காலத்திலும் ஆலயங்களுண்டாவென்று ஸம்சயப்படுகிறார்கள். அதற்காக ப்ராசீன விஷயங்களைத் தெரிவிக்கும் பிரமாணமான சுருதிஸ்மிருதிகளை ஆராய்ச்சி செய்தால்அவர்கள் அப்படி சங்கை செய்வதற்கு இடமே இருக்காது. சுருதிகளிலும் ஆலயங்களைப் பற்றி சொல்லி இருக்கிறதோ என்று சில ஆஸ்திகர்களும் கேழ்க்கிறார்கள். அவர்களுக்காக கோவில்களைக் குறிக்கும் ப்ரமாண வாக்கியங்களை கூறுகிறோம். பாஷ்யகாரர்கள் ப்ரும்மஸூத்ரபாஷ்யத்தில் எந்தெந்த உபநிஷத்துக்களிலிருந்து ப்ரமாண வாக்யங்களை உதாஹரிக்கிறார்களோ அந்த உபநிஷத்துக்களிலும் மற்றுமுள்ள நான்கு வேதங்களிலும் ஆலயம் உண்டென்பதற்கு ப்ரமாண வசனங்கள் அனேகம் இருக்கின்றன. அவற்றுள் ரிக்வேதத்தில் ஜகன்னாத க்ஷேத்திரத்தையும், காசி விச்வநாதஸ்வாமியையும் பற்றி சொல்லி இருக்கிறது. இதுபோல் சுருதிகளிலேயே 20-வாக்யங்கள் இப்போது படித்துக் காண்பிக்கப்படுகின்றன. இதை அநுசரித்து மன்வாதிஸ்மிருதிகளிலும், பாரத ராமாயணாதி இதிஹாஸங்களிலும் ஸூதஸம்ஹிதை முதலிய புராணங்களிலும் ஆயிரக்கணக்காக வசனங்களிருக்கின்றன. இந்த ஆலயங்களின் உபயோகம் தத்தத இஷ்டஸித்திகளை அடைய விரும்புவோர் ஈசுவரனதுவிக்ரஹத்தைவழிபடுவதேயாகும். அன்றியும் ஸன்னியாஸிகள் வந்து வஸிப்பதற்கு ஏகாந்த ஸ்தலமாயும் ஏற்படுகிறது. பாபங்கள் செய்தவர் பாபத்தைப் போக்குவதற்காக விதிக்கப்பட்ட பரிஷத் விதாயக ப்ராயச்சித்த விதானத்திற்கு இடமாகவும் உபயோகப்படுகிறது. அதனால் ஆரியர்களும் ஆலயங்களை ஸ்ருஷ்டிகாலம் தொடங்கி தங்களுடைய வைதிக கார்யங்களுக்கே உபயோகித்து வருகிறார்களென்பது இந்த வசனங்களில் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இப்படி நல்ல காரியங்களுக்கு ஆலயங்கள் உபயோகப்படுத்தப்பட்டு அவைகளிலுள்ள விக்ரஹாதிகளுக்கும் ஆராதனக்ரமம் தவறாமல் செய்யப்பட்டு வருமேயாகில் அந்த அந்த தேசமே சுபிக்ஷமாய் சிறப்புற்று ஓங்கி விளங்குமாம். இன்றேல் தேசங்கள் துர்பிக்ஷங்களுக்கு இடமாகுமாம். அந்த துர்நிமித்தங்களை தேவதா விக்ரஹங்களே உத்பாத ரூபமாக தெரிவித்துவிடும். அதாவது ப்ரதிமைகள் ஆடி, அசங்கும், அழுது, சிரித்து கூத்தாடி. இம்மாதிரி பல துர்நிமித்தங்களால் தேசத்திற்கே கெடுதலைத் தெரிவிக்கும். அக்காலத்தில் அந்த துர்பிக்ஷத்தையும் தேசக்கெடுதியையும் விலக்குவதற்காக ஸம்ப்ரோக்ஷணாதிகள், மஹாகும்பாபிஷேகங்கள், செய்யப்பட வேண்டுமாம். இதனாலும் ஆலயங்கள் தொன்றுதொட்டு வெகுநாளாய் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

அன்றியும், பரதன் ஸ்ரீ ராமன் வனவாசம் சென்ற பிறகு கேகயதேசத்திலிருந்துஅழைக்கப்பட்டு வரும்போது வீதிகளில் ஆலயங்கள் சூன்யமாக இருப்பதாகக் கண்டு பயப்படுகிறார். மறுபடி சித்ரகூடத்தில் ஸ்ரீ ராமபிரானை பரதன் பார்க்கப்போனபொழுது ஆலயங்களெல்லாம் ஒழுங்காகயிருக்கின்றனவா என்று கேழ்ப்பதே நீண்ட காலமாய் ஆலயம் உண்டென்பதற்கு ஆதாரமாகிறது. ஸ்ரீருக்மிணீதேவியின் கல்யாணகாலத்திலும் கல்யாணத்திற்கு முதல்நாள் அம்பிகாலயம் சென்று ஸ்ரீ பார்வதீ தேவியை தர்சித்துவந்ததாகவும் சொல்லியிருப்பதில் இருந்து தேவாலயம் நீண்ட காலமாக இருக்கிறதென்று தெரிகிறது. இன்னும் ஸூத ஸம்ஹிதையில் ஆஸேது ஹிமாசலபர்யந்தமுள்ள ஆயிரக்கணக்கான தேவாலயங்களைப்பற்றி சொல்லி இருக்கிறது. அன்றியும் இப்ரபஞ்சம் சப்த வடிவமாகவும் அர்த்த வடிவமாகவும் காணப்படுகிறதல்லவா! அவற்றுள் சப்தங்களில் ப்ரதீகோபாஸனம் ஏற்று விதிக்கப்பட்டிருக்கிறது போல் அர்த்தவடிவங்களான சிலா (கற்கள்) லோக (சுவர்ணாதி தாதுக்கள்) தாரு (கட்டை) முதலியவற்றால் செய்யப்பட்ட விக்ரஹங்களிலும் ஆராதனம் விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த விக்ரஹங்கள் அழகாக அமைக்கப்பட வேண்டுமென்றும் திருவாபரணங்களால் அலங்கரிக்கப்பட வேண்டும் என்றும் அதற்காக ஸ்திரீ பிம்பங்களுக்கும் புருஷ பிம்பங்களுக்கும் தக்கபடி ஆடாணங்கள் கற்பிக்கப்படுகின்றன. பிரும்மஸ்வரூபம் நிர்குணமாயும் நிராகாரமாயும் இருப்பினும் உபாஸகர்களுடைய இஷ்டஸித்திக்கு ஆராதிக்க வேண்டி ஆகாரம் கல்பிக்கப்படுகிறது. அப்படி ஆராதிக்கப்பட்ட ஈசுவரன் பக்தர்கள் விஷயத்தில் அபிவ்யக்தி அடைகிறார்.

ஆகையால் ஊநிஸித்தமாய் ச்ருதிஸ்மிருதிமூலமாய் அறியப்பட்ட ஆலயங்களில் விக்ரஹங்களை முறைப்படி ஆராதித்து அவரவர்கள் இஷ்டஸித்தியைப் பெறுவார்களாக.

(தொடரும்)

ஸ்ரீ ஸீதாகல்யாண மஹோத்ஸவம்.

கருணாநிதியான ஸ்ரீ ராமகிருபையை முன்னிட்டு பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருச்சி கீழ ஆண்டார்வீதி மூலைப்பிள்ளையார் கோவிலில் திருவையார் அம்மாளக்கிரகாரம் பிரம்மஸ்ரீ வித்வன்மணி ஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் (5—2—37)-ல் ஆரம்பம் செய்யப்பட்டு உபன்யாஸிக்கப்பட்டு வருகிற சிந்தித ஸர்வாபீஷ்டப்ரதமான ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் நாளது தாது-ஹு பங்குனி-மீ 29உ (11—4—37) ஞாயிற்றுக்கிழமை இரவு 9மணிக்கு ஸ்ரீ ஸீதாகல்யாண மஹோத்ஸவத்தை நடத்துவதாக நிச்சயித்திருப்பதால் பக்தர்களனைவரும் விஜயம்செய்து ஸ்ரீராம கதா மிருதபானம் செய்து ஸ்ரீஸீதாராம கிருபையால் சிந்தித ஸர்வாபீஷ்டங்களையும் அடையும்படி பிரார்த்திக்கிறோம்.

பி. ராமனுதய்யர், வக்கீல். ஸுப்பிரமணிய அய்யர், ரிட்டையர்டு போஸ்ட் மாஸ்டர். டி எஸ். சங்கரய்யர், மிராசுதார். கே. நடேசய்யர், ரிட்டையர்டு D. E. O. ஸுப்பிரமணிய அய்யர், Postal Suptd (Retired) விச்வநாத சாஸ்திரிகள், ரிடையர்டு போஸ்ட்மாஸ்டர்.

ஸ்ரீமத் கம்பராமாயண காலக்ஷேபம்.

நாளது 1937-ம் வருஷம் மார்ச்சு-மீ 31உ புதன்கிழமை முதல் கம்பராமாயண பிரசங்க கேசரி முத்தமிழ்க்கவி ப்ரும்மஸ்ரீ C. S. முத்துஸாமி அய்யரவர்களால் கும்பகோணம் மஹாமஹக்குளம் மேல்கரை ஸ்ரீ பழனியாண்டவர் தர்மசத்திரத் திண்ணையில் பிரதிதினம் இரவு 7-மணி முதல் 9-மணிவரையில் ஸ்ரீமத்கம்பராமாயணகாலக்ஷேபம் (நவாகம்) நடைபெறும். அன்பர்கள் சிரவண பலனை உத்தேசித்து உபந்யாஸகருக்குமுன் வைக்கப்பட்டிருக்கும் உண்டியில் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவியைச் சேர்ப்பிக்க வேணும்.

பக்தர்கள்.

சேங்காலிபுரம்.

எனது பிதாவும் லோக பூஜ்யாளுமான பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய தீக்ஷிதர் அவர்கள் காலகதியடைந்ததைகுறித்து சென்னை முதலிய வெகு இடங்களிலிருந்து லெட்டர் எழுதிய நண்பர்களுக்கு ஒவ்வொருவர்களுக்கும் பதில் தெரிவிக்கமுடியாததால் இந்தப் பத்திரிகைமூலமாய் என்னுடைய நன்றியை தெரிவிப்பதோடு எனது பிதாவினுடைய ஜீவனானது சாந்தியடைந்து புண்யலோகத்தை யடையுமாறு பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அனந்தராம தீக்ஷிதர்.

திரியம்பகபுரம்.

ஸ்ரீ மஹாசாஸ்தாவின் பிரம்மோத்ஸவம். சேங்காலிபுரத்துக்கு கிழக்கே ஒரு மைல் தூரமுள்ள திரியம்பகபுரமென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் பிரகாசிக்கும் ஸ்ரீ மஹாசாஸ்தாவின் பிரம்மோத்ஸவம் வழக்கப்போல் ஆஹிதாக்னிகளாலும், மற்றவர்களுராளம், செம்மங்குடி, கம்ஸபுரம் வடகுடி முதலிய கிராமத்தியபிரபுக்களாலும் தாது-ஹு பங்குனி-மீ 22உ ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து ரொம்பவும் நன்றாக நடந்துவருகிறது. வேதோக்தமான மந்திரங்களால் காவடிகட்டி பிரதிதினமும் அபிஷேகமும், இரவு ஸ்வாமி புறப்பாடும், வேதபாராயணமும், விமரிசையாக நடந்துவருகிறது. ஷை உத்ஸவத்தில் ஆஹிதாக்னிகள் வெகு சிரத்தையாக எல்லா காரியங்களையும் நடத்தி வருகிறார்கள். ஷை சாஸ்தாவின் வைபவத்தை ஒவ்வொருபக்தர்களும்பிரார்த்தித்துக்கொண்டு தங்கள் அபீஷ்டத்தை அடைவதால் ஒவ்வொரு தினமும் இரண்டு மூன்று அபிஷேகமும் நடந்துவருகிறது. ஷை சாஸ்தாவின் ஸன்னதியிலுள்ள க்ஷேத்திர விருக்ஷமான (மாவலங்கை) விருக்ஷத்தின் இலையை ஸன்னிதியில் வரும் பக்தர்களுக்கு கொடுப்பதால் ஜுரம், முதலிய ரோகங்கள் நிவர்த்தியடைவது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. பிசாசம் முதலிய பூதபாதைகளால் பீடிக்கப்பட்ட பக்தர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து பிரார்த்தித்துக்கொண்டு உண்டியலில் தங்களாலியன்ற திரவியத்தைசேர்த்து ஷைஸ்வாமிக்கு ஆலயம் கட்டிவரும்ஆஹிதாக்னிகளுக்குஅனுப்பிக்ஷேமத்தை யடைகிறார்கள் என்பது ஷை தைவத்தின் மகிமையை பிரகாசப்படுத்துவதாகும்.

ஷை உத்ஸவத்தில் பிரும்மஸ்ரீ அநந்தராம தீக்ஷிதர் அவர்களின் உபன்யாஸங்களும் நடந்துவருகிறது. பிரும்மஸ்ரீ பிரசங்கபாநு கே. வைத்தியநாதசாஸ்திரியள் அவர்களும் பிரும்மஸ்ரீ குஹதாஸ் நடராஜய்யர் அவர்களும் கோஷ்டியுடன் திருப்புகழ் பஜனையும் உபன்யாசங்களும் நடத்துவார்கள். பர்ஜன்யோபாஸகரான செருவாமணி பிரும்மஸ்ரீ சு. சி. ராமச்சந்திரசிவன்வாள் அவர்கள் ஷை ஆலயத்தில் அஹோராத்திரம் வஸிப்பதோடு யந்திரம் வைத்து பூஜை செய்துகொண்டு அந்த தேவதையின் பிரபாவத்தை அறிந்து, ரொம்பவும்சந்தோஷித்து வருகிறார்கள். குழந்தைகளிடத்தில் கூட ஸ்வாமி ஆவேசத்தை அடைந்து பக்தர்கள் மனதிலுள்ள விஷயத்தை எடுத்துச் சொல்வதானது இக்கலியில் தெய்வமில்லையென்று சொல்லும் நாஸ்திகர்களுக்குக் கூட தெய்வம் உண்டென்ற நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது.

நிகழும் ஈச்வரஹு சித்திரைமீ 1உ ஷை பிரும்மோத்ஸவம் ஸமாப்தி தினமாகும். ஷை உத்ஸவத்திற்கு ஆஸ்திகர்கள் எல்லோரும் வந்து தரிசித்து ஷை மஹா சாஸ்தாவின் பிரஸாதத்தை அடையும்படி கோரப்படுகிறது.

அனந்தராமதீக்ஷிதர்

215180

மார்சலிவே

சுவாஸப்பைகளில் கடினமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்



ஆர்யதர்மிகளுக்கு ஜே! ஜே!!
உங்களுக்கு அதிர்ஷ்டம் வருகிறது அப்படியானால்
பழனி டாக்டர் கே. எஸ். பதி அவர்களின் No. 1
ரசமணியை
வாங்கி அணியுங்கள். உண்மையில் நீங்கள் செல்வத்தை அடைவீர்கள். தரித்திரம் அணுகாது சகல தொழிலும் நினைத்த காரியங்களும் ஜெயமாகும்.
தாதுபுஷ்டியில் யானையைப்போல் நல்ல சுகம் அடையலாம்.
ஆர்டருக்கு முந்துங்கள் ஒரு வாரம் வரையில் ஒரு மணி ரூபாய் 7.
கே. எஸ். பதி வைத்தியசாலை பழனி.

வெளியூர்ச்செய்திகள்.

ஸ்ரீ ரங்கம்.

ஸ்ரீ மதாசார்ய ஜயந்தி

ஸ்ரீ மதாசார்யேந்திராளான ஸ்ரீ ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபினவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்ரீ ஜயந்தி மஹோத்ஸவகாலத்தில் நாளது தாது வருஷம் பங்குனி-மீ 23உ (5—4—37) திங்கட்கிழமை முதல் ஈசுவர-ஸ்ரீ சித்திரை மீ 7உ (19—4—37) திங்கட்கிழமை முடிய பதினைந்து நாட்கள் ஸ்ரீரங்கம் புது அக்ரஹாரத்தில் ஸ்ரீ மதாசார்யேந்திராள் ஸந்நிதியில் மாயவரம் பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ணசாஸ்திரிகளவர்கள் முகமாய் பிரதிதினமும் மாலை 7½ மணிமுதல் 10 மணிவரையிலும் ஆதிகாவ்யமாயும் வேதமே அவதரித்ததாயும் உள்ள ஸ்ரீமத் வால்மீகிராமாயண கதோபந்யாஸங்கள் நடைபெறும்.

டீ. கே. பாலஸுப்ரஹ்மண்யம்.

மாம்பலம்

ஸாமவேத பாராயணம்.

சென்னை மாம்பலம் ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி கோவிலில் 14—3—37 முதல் கும்பகோணம் வேதமூர்த்தி பிரம்மஸ்ரீ ராமநாதசிரௌதிகள் அவர்களுடைய சிஷ்யரான அப்புஸ்வாமி சாஸ்திரிகள், விச்வேச்வரசிரௌதிகள் சிஷ்யர்களான அய்யாசாமி சாஸ்திரிகள் தண்டபாணிசாஸ்திரிகள் முதலானவர்களால் நிஷ்காம்யமாய் பகவத்சன்னதியில் சாமவேத பாராயணம் ஒவ்வொருநாளும் நடந்துவருகிறது. இப்படி ஒவ்வொரு கிராமங்களிலும் டவுன்களிலும் நடந்துவந்தால் தேசத்திற்கும் வேதத்திற்கும் குறைவு இருக்காது இப்படி எங்கும் நடக்கவேணுமாய் ஸ்ரீ பரமாத்மாவை பிரார்த்திக்கிறேன்.

"வேதவத்ஸன்"

மதராஸ்.

தேவஸ்தான ப்ரதிஷ்டா வைபவம்.

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிஸ்வாமி தேவஸ்தான மஹாகும்பாபிஷேக வைபவம் மிகச் சிறப்பாக நடைபெற்ற விபரம் ஏப்ரல் 1உ வெளியீட்டில் ரமணீயமாக பிரசுரமாயிருக்கிறது இவ்விசேஷ வைபவத்தையொட்டி பல பிரபல வித்வான்களாலும் கோயில்முன் மண்டபத்தில் பல அரிய உபன்யாஸங்களும் செய்யப்பட்டதுடன் கோவிலைச்சுற்றி நூற்றுக்கணக்கில் பசுக்கள் கட்டப்பட்டு (கோரக்ஷணம்) ஆரம்பதினம் முதல் சம்பூர்த்திதினம்முடிய கோயிலார்களால் ரக்ஷிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாம். தவிர இவ்விசேஷ நிர்வாஹ டிரஸ்டியால் சன்மானிக்கப்படாத பல உள்ளூர் வெளியூர் கைங்கர்யஸ்வாமிகளுக்கு மற்றோர் டிரஸ்டி ஸ்ரீமான் வை. மு. நரசிம்மாச்சாரியாரால் கௌரவித்தனுப்பப்பட்டதாய்த் தெரிவதும் பாராட்டத்தக்கதாம். மாகாணமெங்குமுள்ள பக்தர்கள் விஜயமாயிருந்ததால் கூட்டம் மிக ஜாஸ்தியாகும். சம்பூர்த்திதினம் கோயிலுக்குள் நெருக்கடியில் நசுக்குண்டு ஓர் குழந்தை இறந்துபோய்விட்டது. இதையொட்டியும் விசேஷ சம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. வெறும் விஷயங்களை பிரமாதப்படுத்தும் சென்னை தினசரிகள் இப்பெரிய விஷயத்தை குறிப்பிடாமலேயிருந்ததும் கவனிக்கத்தக்கதாம்.

யதார்த்தவாதி.

திருவையார்.

ஸரஸ்வதி வாசகசாலை.

சென்ற 28—3—37 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-30மணிக்கு வழக்கம்போல் ராஜாகலாசாலை ஆசிரியர் பண்டித N. வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்களால் "பார்க்கவ கர்வ பங்கம்" என்னும் விஷயம்பற்றி வால்மீகி, துளஸீ, மோரோபந்த், கம்பர் இவர்களின் வடமொழி, ஹிந்தி, மஹாராஷ்டிரம், தென்மொழி பாஷைகளிலுள்ள இராமாயணத்தின் நுண்ணிய கருத்துக்கள் ஆராய்ந்தெடுத்துக் கோர்த்து கேட்போர் மனங்களிலுறுமாறு நன்கு உபந்யஸிக்கப்பட்டது. ஆங்காங்கு நாமுணரவேண்டிய பல நீதிகளும் ஸநாதன தர்மங்களும் எடுத்துக் காட்டப்பட்டன.

அவ்வமயம் கற்றோரும் மற்றோரும் குழுமியிருந்தனர். ஸ்ரீமான் C. V. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் உபந்யாஸகரின் குலத்தின் பெருமையையும், கல்வியறிவின் சிறப்பையும் உபந்யஸிக்கும் வன்மையையும் புகழ்ந்து கூறினர். பின்பு ஸ்ரீமான் T. K. கிருஷ்ணதீக்ஷிதர் அவர்களால் தற்சமயம் உலகத்திலுள்ளோரனைவரின் க்ஷேமத்தைக் கருதி விஜயயாத்திரை செய்துவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியாள் மஹா ஸந்நிதானத்திலிருந்து அனுக்கிரஹ பூர்வமாக அனுப்பப்பட்ட ஸ்ரீ முகத்தை ஸ்ரீமான் வக்கீல் V. சுப்பிரமணியய்யர் அவர்களால் படிக்கப்பட்டது. ஷை ஸந்நிதானத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பிரஸாதங்கள் ஸ்வஸ்திவாசன பூர்வகமளிக்கப்பட்டது. ஸ்ரீமான் வக்கீல் V. சுப்பிரமணியய்யர் அவர்களால் ஸ்ரீ ஜகத்குருவின் அனுக்ரகம் இவ்வாசகசாலைக்கும் உபந்யாஸகர்களும் மேன்மேலும் மேன்மையளிக்கவல்லதென்பதை தெளிவாக எடுத்துக் கூறப்பட்டு சால்வையும் அன்னார் கையினாலேயே போர்த்தப்பட்டது.

மஹாஜனங்களின் ஆசிர்வாதத்தை முன்னிட்ட கரகோஷத்துடனும் ஆரவாரத்துடனும் கூட்டம முடிவுற்றது.

ஒரு நிருபர்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கண்ணுசாமி பத்தர்.
பெரியதெரு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரம்பம்

15-4-1937

அ ஆ

22 15

21581.

536
215181
22

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22	கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ௗு சித்திரை-மீ 3உ 1937-ௗு ஏப்ரல்-மீ 15உ	ஸ 15

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0.

இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

உறுதிமொழித் தகராறு.

இந்தியா மந்திரியின் ஆக்ஷேபம்.

காங்கிரஸ்காரர் கேட்கும் உறுதிமொழியைப்பற்றிப் பார்லிமெண்டில் இரு ஸபையிலும் இந்தியா மந்திரி தனது ஆக்ஷேபத்தை தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

காங்கிரஸ்காரர் விரும்பும் உறுதிமொழியைக் கொடுக்க சட்டப்படி இடம் கிடையாதென்றும், காந்திஜி இவ்விஷயத்தை அறியாமல் பேசுவதாயும், காந்திஜி வேண்டினால் வைஸ்ராயைக்கண்டு பேச ஏற்பாடு செய்யக்கூடுமென்றும் அவர் சொல்லிவிட்டார்.

பம்பாய் மந்திரிகளின் வேலைதிட்டம்.

ஒருகோடி ரூபாய் நிலவரி வஜா.

பம்பாய் மந்திரிகள் தாங்கள் செய்யப்போகிற வேலைகளைப்பற்றி யோஜித்து வெளியிட்டிருக்கின்றனர். அது அனேகமாகக் காங்கிரஸ்காரர்களின் வேலைத்திட்டத்தை ஒத்ததாகவே இருக்கிறது.

முதலாவது வரவு செலவு திட்டத்தில் வியவஸாயிகளுக்கு நன்மை செய்யும்பொருட்டு ஒரு கோடி ரூபாய் நிலவரி வஜாசெய்ய ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள்.

ராஜீயக் கைதிகளை விடுவிக்கவும், ராஜீய காரணமாக பறிமுதல் செய்யப்பட்ட ஸொத்துக்களைத் திருப்பிக்கொடுக்கவும், கள்ளுக் கடைகளை குறைக்கவும், 200,முதல் 2ஆயிரம் வரையில் சம்பளம் வாங்குகிறவர்களுடைய சம்பளத்தைக் குறைத்தும், பல கார்யங்களைச் செய்யவும் திட்டம்போட்டிருக்கிறார்கள்.

பம்பாய் புதிய கவர்னர்.

தற்சமயம் பார்லிமெண்டில் மெம்பராயிருந்துவரும் மிஸ்டர் லாரன்ஸ் ரோஜர் லம்லீ என்பவர் பம்பாய்கவர்னராக நியமிக்கப்பட்டுவிட்டார், ஸர் ஸாப்ரு நியமிக்கபபடலாமென்ற வதந்தி பொய்யாயிற்று.

வங்காள ராஜாங்க ஸபை.

காங்கிரஸ் காரர் தலைவர்.

ஏற்கனவே ராஜாங்க கைதியாயிருந்த ஸ்ரீமான் ஸத்யேந்திரசந்திரமித்ரா என்ற காங்கிரஸ்காரர் வங்காள ராஜாங்க ஸபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னைகார்ப்பரேஷன் எலெக்ஷன்.

காங்கிரஸுக்குத் தோல்வி.

டாக்டர் நடேச முதலியார் இறந்ததால் ஏற்பட்ட காலிஸ்தானத்திற்கு நடந்த உப தேர்தலில் ஸ்ரீமான் தாதுலிங்க முதலியார் என்பவர் ஜயமடைந்தார். இவருக்குப் போட்டியாக நிறுத்திவைக்கப்பட்ட காங்கிரஸ் அபேக்ஷகர் ஸ்ரீமான் ஜகன்னாததாஸ் என்பவர் தோற்றுப்போனார். சென்ற சில தினங்களாகக் காங்கிரஸ்காரர்கள் இங்கு தீவ்ர பிரசாரம் செய்துவந்தார்கள்.

ஜாகீர் பறிமுதல்.

ஸர்தார் சாதூல் சிங்க் என்றவர் தீவ்ர ராஜீய வாதியாயும் பிரபல காங்கிரஸ்காரராயுமிருப்பவர். இவருடைய ஜாகீர்களை பஞ்சாப் கவர்ன்மெண்டார் பறிமுதல்செய்துவிட்டார்கள். நான்கு தலைமுறையாக இவர் அதை அனுபவித்துவந்தார். இவர் காங்கிரஸ் கார்யக்கமிட்டி மெம்பராயிருந்தவர்.

ஆர்யஸமாஜி விவாஹமசோதா.

இந்தியா சட்டஸபையில் நிறைவேறியுள்ள ஆர்யஸமாஜி கலப்பு விவாஹ மசோதா ராஜாங்கஸபையிலும் நிறைவேறிவிட்டது. ஸ்திரீ ஸொத்துரிமை மசோதாவும் நிறைவேறிவிட்டது.

மாடு அடிக்கும் தொட்டியை எடுக்க.

ஹிந்துஸபையின் ஸத்யாக்ரஹம்.

மத்ரா என்றவூரில் பசுமாடுகளைக் கொல்லுவதற்காக முனிஸிபாலிடியாரால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை எடுத்துவிடவேண்டுமென்று ஹிந்துமஹாஸபையின் கார்யக்கமிட்டியில் தீர்மானம் செய்யப்பட்டது.

இதுவிஷயமாக முனிஸிபாலிடியார் ஸரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டால் ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும், ஸ்ரீமான் பாய்பரமானந்தர், இந்த ஸத்யாக்ரஹத்தைத் தலைமை வஹித்து நடத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷீட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

"பக்தி"

(நாகூர் N. நாராயணசாமி அய்யர்)

(25—3—37 ஸஞ்சிகை தொடர்ச்சி.)

சரீரேந்திரியப்ராணாதிகள் ஆத்மாவென்கிற சம்சாரசாகரத்தை கடக்கச்செய்யும் பரப்பிரம்மமான ஸ்ரீ சீதாராமச்சந்திரமூர்த்தியின் சரணசேவையே இம்மானிடப் பிறவிக்கு முக்கியமாதலால் ஒவ்வொருவரும் அக்கருணாமூர்த்தியை சதா தியானித்தவர்களாய் அந்தரங்கமான பக்தியுடன் அனுபவத்தில் அவனை வழிபட்டுபேரின்பத்தை அடையமுயலவேண்டும். இல்லையேல் ஜென்மமெடுத்ததின் பயனை அடைந்தவர்களாகமாட்டோம். உண்மையான பக்தியில் ஈடுபட்டு உழைத்துவரும் மெய்யடியார்களுக்கு கஷ்ட நிஷ்டூரங்கள் நேரிடுவது சகஜமாயினும் அவ்விதம் நிகழ்வது இயல்பெனக்கருதி அவற்றிற்கெல்லாம் இடங்கொடுத்து மனஞ்சலியாது திடமான பக்தி வைராக்கியத்துடன் பகவானை வழிபட்டுவரின் எளிதில் அன்னவனின் பரிபூரண கிருபைக்குஉரித்தானவர்களாக ஆகிவிடலாம். பகவானின் பாதகமலங்களை அடைய பண்டிதராக விளங்கவேண்டும் என்கிறதுமில்லை. வேதசாஸ்திரங்களை கரைகண்டவராக இருக்க வேணுமென்கிறதுமில்லை. எக்குலத்தோராயினும் சரி, யாவரேயாயினும் சரி அந்தரங்கமான பக்தி விச்வாசத்துடன்கூட பகவானை பஜிக்க முன்வருவார்களேயானால் பரந்தாமன் அப்பக்த சிரேஷ்டர்களுக்கு பரமமங்களத்தை அதி சீக்கிரத்தில் அருள் செய்வான் என்பதில் ஐயமில்லை. அவன் மனம் நமக்கு கோயில். அவனுரை பலவும் வேதம், அவன்முயல் தொழில்களெல்லாம் அறத்தொழில்ஐயமில்லை. என பகவானது வாக்கினால் அவன்பாவிக்கப் பட்டவனும், ஆறே நாளில் கிடைத்தற்கரிய சாயுஜ்ய பதவியை பெற்றவனுமான திண்ணனார் என நாமம்பூண்ட வேடுவமைந்தன் திருக்கண்ணப்பனின் திவ்ய சரிதையே இதற்கு போதிய சான்றாகும். பகவான் கீதையில் அருச்சுனனுக்கு தனது பக்தன் எளிதாக மோக்ஷமடைகிறதற்கு சாதகமான கர்மபலத்தியாகத்தினுடைய சிரேஷ்டத்தை சொல்லுங்காலத்தில் அருச்சுனா! என்னால் சொல்லப்பட்டபடி யோகாப்பியாசஞ்செய்ய சமர்த்தனில்லாதவனாயிருந்தால் எனக்குப்பிரியகாமாயிருக்கப்படாநின்ற ஏகாதசி உபவாச முதலான விரதங்களுடன் நாமகீர்த்தனங்கள் முதலியநற் கருமங்களை செய்துவருவாயாகில் அதனாலும் மோக்ஷத்தை யடைவாய். இதற்கும் சக்தியில்லாதவனாயிருந்தாயாகில் நாமே எல்லாவற்றிற்கும் கதியென்று நம்மைத்தானே சரணமடைந்து மனோநிக்ரஹத்துடனேகூட நீ செய்யப்பட்ட சகல கர்மங்களையும் அவைகளின் பலன்களையும் எனக்கே யற்பணம் செய்துகொண்டு எல்லா பாரத்தையும் நம்மிடத்திலேயே பொறுப்பாய் வைப்பாயேயானால் அதனாலே நம்முடைய அனுக்கிரஹமுண்டாய் கிருதார்த்தனாய்விடுவாய் என்று உபதேசித்தபடியும் மிக எளிதில் "பக்தி" என்ற வைபவத்தினால் பகவானை அடையக்கூடியதாகவிருக்கிறபடியால், மானிட ஜென்மமெடுத்த ஒவ்வொருவரும் பரம்பொருளாகிய பரந்தாமனின் தாமரைபோன்ற இரண்டு திருவடிகளையும் தலைமேல் தாங்கி உறுதியாய்பற்றி நிச்சயமாக அது ஒன்றே நமது உயிர்க்கு உறுதிசெய்யத் தக்க காவலாருமென்று அதன் றுணைகொண்டு, ஹே! பிரபோ உமதருகிலிருந்து ஸேவித்துக்கொண்டிருக்கும் தேவர்களுக்கு கூட கிட்டாததான உங்களுடைய பங்கய மலர்போல் விளங்கும் பாதங்களுடைய ஸேவையை வெகுகாலமாய் யாசிக்கின்றேன். பெற்ற தாய்தனை மகமறந்தாலும், பிள்ளையைப் பெற்ற தாய் மறந்தாலும், உள்ளத்தை உயிர்மறந்தாலும், உயிரை மேவிய உடல் மறந்தாலும் கற்ற நெஞ்சம் கலை மறந்தாலும், கண்ணிரண்டு இமைப்பது மறந்தாலும், நற்றவத்தவருள்ளிருக்கும் நமச்சிவாயத்தை யான் மறவேனே என்று அருட்பிரகாசவள்ளலார் அருளியவண்ணம்மறக்கமுடியாதனவாயுள்ள வைகளை கற்றுக்கொண்டு மறந்துபோகக்கூடிய கதி ஏற்படினும் நின்னமட்டும் என் மனதே மறவாதிருக்க வரந்தரவேண்டும் என்னப்பனே. வாளாங் மகவறிந்து ஊட்ட வல்லாள் அல்லன் இவன், மாது சொன்ன சூளால் இளமைதுறக்க வல்லாளல்லன்னிவன் நாளாறற் கண்ணிடந்தப்பக்கூடிய திட வைராக்கிய சிலனல்லனிவன் என்றநாரணங்களைக்கொண்டு என்னை தடுத்தாட்கொள்ளாது விட்டுவிடக்கூடாது. ஏதோ குழந்தை நான் எவ்வித அபசாரங்கள் செய்தாலும் அவற்றினையெல்லாம் பொறுத்து நற்புத்தியை புகட்டி ஞானகிரியனாக செய்யவேண்டும். இவ்வுலகில் நான் எப்போதும் வேண்டுவது தங்கள் சரணசேவையே தவிர வேறல்ல. ஆகவே என்னை தாங்கள் எவ்வித காரணத்தாலும் புறக்கணித்து தள்ளாது தடுத்தாட்கொள்ளவேண்டும் என்று மெய்யுருகி பிரார்த்தித்து மனம், வாக்கு, காயம் என்ற மூன்று காரணங்களாலும் வழிபட்டு ஜன்மலாபல்யத்தை அடைய வழிபடவேண்டும். இதுவே கெதி பெய்வதில் சரியானமார்க்கமாகும். பக்தியே முக்திக்குவித்து. பக்தியே இஹபரமிரண்டிற்கும் சாதனமாயுள்ள பொக்கிஷம். பக்தியே காமம், வெகுளி, மயக்கம் என்ற இருட்டை போக்கும் சூரியன். ஆகவே பக்திக்கு நிகரானது ஒன்றுமில்லையாதலால் அப்பரமேஸ்வரனிடம் மீளா பக்திகொண்டு ஒவ்வொருவரும் இகபரமிரண்டிலும் இன்புற்றுவாழ சர்வவல்லவரான சர்வேஸ்வரன் அருள் புரிவாராக.

தேர்மீது தேசியக் கொடி.

ஒரு எச்சரிக்கை.

(நமது நிருபர்.)

திருநெல்வேலிஜில்லாவில் இரண்டுகோயில் உத்ஸவங்களில் ரதோத்ஸவத்தன்று தேர்மீது தேசியக்கொடி வைக்கவேண்டுமென காங்கிரஸ்காரர்கள் வற்புறுத்தி ஆர்ப்பாட்டஞ் செய்ததான விபரம் சென்னை தினசரிகளில் பிரசுரமாயிருக்கிறது. தேவாலயத் திருவிழாக் காரியங்களுக்கும் தேசியக்கொடிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. சர்வ வல்லமையுமுள்ள பிரிடிஷ் கவர்ன்மெண்டார்கள் கூட ப்ரதான சர்க்கார் ஆபீஸ்களில் மட்டுமே கொடியைப் பறக்கவிட்டிருக்கிறார்கள். வேண்டுமானால் காங்கிரஸ் ஆபீஸ்களிலும் மற்றும் ஆபீஸ் ஹோதாவிலுள்ள தங்கள் அதிகாரத்திலமைந்த சாதாரணவிடங்களிலோ தங்கள் தலைமீதோ (டில்லி அஸம்ப்ளியில் செய்ததுபோல்) தேசியக்கொடியை வைத்துக்கொள்ளட்டும். இரண்டொரு வருஷங்களுக்கு முன் உத்ஸவங்களில் தேர்மீது தேசியக்கொடி வைப்பது சம்பந்தமாய் இந்த மாகாணம் பூராவும் பெருங்கிளர்ச்சியும் தகாராறும் உண்டானதும் காங்கிரஸ்காரர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டதும் குன்றூரில் நடந்த சச்சரவில் கொலைகள் நடந்து பலர் போலீஸாரால் கைது செய்யப்பட்டும், சிலர் மாண்டுபோனதும் மிகப்ரஸித்தமாகும். இவ்வளவுக்கும் மேல் நெல்லை டிஸ்டிரிக்ட் சநாதன தர்ம மஹாசபாவின் நிர்வாஹக் கமிட்டி மெம்பரும் பிரபல காஸ்பாண்டெண்டுமான ஸ்ரீ. அ. தே. ராமாநுஜய்யங்காரால் சென்னை தேசியத் தலைவர் ஸ்ரீ எஸ். சத்யமூர்த்திக்கும் காங்கிரஸ் சர்வாதிகாரியான ஸ்ரீமான் எம். கே. நாகநிக்கும், ஒன்றுக்கும் உதவாத விஷயங்களுக்கெல்லாம் அபிப்பிராயம் சொல்லி ஆர்ப்பாட்டம் செய்து முன்வரும் தாங்கள் காங்கிரஸ்காரர்கள் செயல் காரணமாக எங்கும் இதே பேச்சாக இருக்கும் ஓர் விஷயத்தில் மௌனம் சாதிப்பது நியாயமும் ஒழுங்குமாகாதெனவும் தேசியக்கொடி, காந்தி படம் தேர்மீது வைக்கவேண்டுமென அனாவச்யமாய் ஆர்ப்பாட்டம் செய்யும் தொண்டர்களுக்கு உடனே உங்கள் மறுப்பைத் தெரிவிக்கவேண்டுமெனவும்கண்டு ரிஜிஸ்டர் லெட்டர்மூலம் தகவல் அறிவிக்கப்பட்டதும், அதன் மேல் காந்திஜியால் கன்யாகுமரி முனையிலிருந்து ஓர் நண்பர் எழுதிய கடிதத்திலிருந்து தேர்களில் தேசியக் கொடி படங்கள் வைக்கவேண்டும் என தாவாக்கள் நடைபெறுவதாக தாமறிவதாகவும் அவ்விதம் செய்வது நியாயமற்ற முறையெனவும் கண்டு நீண்டதோர் அறிக்கை வெளியிடப்பட்டதும் பத்திரிகைகளிலெல்லாம் பிரசுரமாயிருந்ததும் யாவருமறிந்ததாகும். திரும்பவும் அவ்வித செயல் புரிய ஆரம்பம் செய்யும் தொண்டர்களுக்கு முக்யஸ்தர்கள் எச்சரிக்கை செய்து புத்தி புகட்ட வேண்டியதவசியமென யாவராலும் பேசிக்கொள்ளப்படுவதாய்த் தெரிகிறது. தேசியத் தலைவர்கள் எனச் சொல்லிக்கொள்வோர் இதை கவனிப்பார்களா?

தக்ஷிண ஹிந்தி பிரசாரஸபை.

நல்லொழுக்கம் தவறியவரின் ராஜிநாமா.

தென்னிந்தியாவில் ஹிந்திப் பிரசாரத்தை பிரபலமாகநடத்திவரும் தக்ஷிணபாரதஹிந்திப் பிரசாரஸபையின் பொதுக் காரியதரிசியாக விளங்கிவந்த ஸ்ரீமான் ஹரிஹரசர்மா என்றவர் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். இவர் ஹிந்திப் பிரசார விஷயமாக ஸ்திரீகளுடன் நெருங்கிப் பழகிவந்ததில் நல்லொழுக்கம்தவறிவிட்டதாக காந்திஜிக்குப் புகார் எட்டியது. காந்திஜி சென்னைக்கு வந்த ஸமயம் இதைப்பற்றி அவரை விசாரித்ததில் ஸ்ரீமான் சர்மாவே தனது தவறை ஒப்புக்கொண்டுவிட்டபடியால் அவர் காரியதரிசிப் பதவியிலிருந்து விலகவேண்டிவந்ததாக காந்திஜி ஹரிஜன் பத்திரிகையில் நீண்டதொரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

முஸ்லீம் ஆதிக்யம்.

ஹிந்து ஸபையின் பயம்.

டில்லியில் நடந்த ஹிந்துஸபையின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில், புதிய ராஜ்யத்திட்டப்படி ஏற்பட்டுள்ள மந்திரி ஸபைகள் பலவற்றில் முஸ்லீம்களின் ஆதிக்யம் ஏற்பட்டுவிட்டதைப்பற்றி யோசிக்கப்பட்டது. அநேகமாக வட இந்தியா முழுவதும் முஸ்லீம்களின் நிர்வாஹத்தின் கீழ் வந்துவிட்டதைப்பற்றிக் கவலையடைந்து ரிகார்டுசெய்யப்பட்டது. இது காங்கிரஸ்வாதிகள் உத்யோகம் ஏற்க மறுத்ததின்பயனாக ஏற்பட்டதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

பிரஞ்சு பிரதேசத்திலும் பால்ய விவாஹத்தடை.

புதுச்சேரியில் யோசனை.

காரைக்கால், புதுச்சேரி முதலிய பிரஞ்சு பிரதேசங்களுக்குவந்து பிரிடிஷ் பிரஜைகள் பால்யவிவாஹம் நடத்துவதை தடுக்கவும், ஒருசட்டத்தைச் செய்யவேண்டியது அவச்யமென்றும், இதைப்பற்றி யோசித்துவருவதாயும் புதுச்சேரி கவர்னர் அவ்லூர் சட்டஸபையில் பேசினார்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(8—4—37 தொடர்ச்சி.)

1. இந்த ச்லோகத்தில் அம்பிகையைப் பலவிதமான நாமங்களால் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பிகையின் ரூபமான குண்டலினீ சக்தியானவள் 'புஜகநிபம் அத்யுஷ்டவலயம்' என்றபடி மூன்றரைச் சுற்றுக்களுடைய ஸர்ப்பாகாரமாக சுருண்டிருப்பதால் குடிலையென்று பெயர் ஏற்பட்டது. பக்தர்களுக்கு விரோதிகளாயிருப்பவர்களிடத்தில் அம்பிகை கோபத்தோடிருப்பதால் சண்டீ என்று பெயர். (தேவீ மாஹாத்ம்யத்தின் மூன்றாவது பாகமான உத்தர சரித்ரத்தில் ப்ரதிபாதிக்கப்படும் அம்பிகையின் முக்யமான ரூபத்திற்கு சண்டீ என்று பெயர். இதிலிருந்து தேவீ மாஹாத்திற்கே சண்டீ என்ற பெயரும் உண்டு.) அம்பிகையின் ரூபமான காளிகாதேவியானவள் சண்டன், முண்டன் என்ற இரு அஸுரர்களை ஸம்ஹாரம் செய்ததினால் சாமுண்டா என்று பெயர் ஏற்பட்டது.

'யஸ்மாத் சண்டம் ச முண்டம் ச க்ருஹீத்வா த்வம் உபாகதா |
சாமுண்டேதி ததோ லோகே க்யாதா தேவி பவிஷ்யஸி ||'

(துர்காதேவியின் மந்த்ரமான நவார்ண மந்த்ரத்தில் சாமுண்டா தேவியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.) மூலப்ரக்ருதி ரூபமாய் அம்பிகை இருக்கும்போது ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களாகிய மூன்று குணங்களும் ஸமமான நிலையோடு அவளிடத்திலிருப்பதாகச்சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸத்வம் ரஜஸ் தம இதி குணத்ரயமுதாஹ்ருதம் |
ஸாம்யாவஸ்திதிரேதேஷாம் அவ்யக்தம் ப்ரக்ருதிம் விது: ||'

இந்த குணங்கள் தனித்தனியாக மேலிட்டிருக்கும்போது வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ என்ற சக்தி ரூபங்களும் ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரர்களும் அம்பிகையிடமிருந்து ஏற்படுவதாகச்சொல்லப்படும். ஆகவே அம்பிகையை இங்கு குணினி என்று சொல்லப்பட்டது. கு என்ற அக்ஷரமானது மனதிலிருக்கும் அந்தகாரத்தை (இருட்டை, அக்ஞானத்தை) குறிக்கும். அம்பிகை அவ்விதமான இருட்டைப் போக்குவதால் கு ஹாரிணி என்று இங்கு சொல்லப்பட்டது. அம்பிகை குரு மூர்த்தியாயிருப்பது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் 'குருமூர்த்தி:', 'குருமண்டல ரூபிணீ', 'தக்ஷிணா மூர்த்தி ரூபிணீ' என்ற நாமங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

47. அபிதாக்ருதிர் பிதாக்ருதி-
ரசிதாக்ருதிரபி சிதாக்ருதிர் மாத: |
அனஹந்தா த்வமஹந்தா
ப்ரமயஸி காமாக்ஷி சாச்வதீ விச்வம்||

மாத: காமாக்ஷி - ஜகன்மாதாவான ஹே காமாக்ஷி! சாச்வதீ த்வம் - அழிவில்லாத ஸ்வரூபத்தையுடைய நீ, அபிதாக்ருதி: - பேதமில்லாத ரூபத்தோடும், பிதாக்ருதி: - பேதங்களான ரூபத்தோடும், அசிதாக்ருதிரபி - சித்ரூபமாயில்லாமலும், சிதாக்ருதி: - சித் ஸ்வரூபிணியாயும், அனஹந்தா - அஹங்காரமில்லாதவளாயும், அஹந்தா - அஹங்கார ஸ்வரூபிணியாயும் இருந்துகொண்டு விச்வம் - ஜகத்தை, ப்ரமயஸி - சுழற்றிக்கொண்டிருக்கிறாய்.

1. இதிலும் இதற்கு முந்திய ச்லோகங்களிலும் சொல்லப்பட்டபடி அம்பிகையானவள் பலவிதமான குணங்களுடனும் பலவிதமான ரூபங்களுடனும், இருப்பதாகத்தோன்றியபோதிலும் பரமார்த்தத்தில் ஒருவளாகவே இருந்துகொண்டுவருவதை ஒரு நடிகையானவள் பல வேஷங்களை தரித்து நடிப்பதற்கு ஒப்பிடப்பட்டு 'அம்பாஸ்தவ'த்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'தாக்ஷாயணீதி குடிலேதி குஹாரிணீதி
காத்யாயனீதி கமலேதி கலாவதீதி |
ஏகா ஸதீ பகவதீ பரமார்த்ததோऽபி
ஸந்த்ருச்யஸே பஹுவிதா நனு நர்த்தகீவ ||'

48. சிவ சிவ பச்யந்தி ஸமம்
ஸ்ரீ காமாக்ஷி கடாக்ஷிதா: புருஷா: |
விபினம் பவனம் அமித்ரம்
மித்ரம் லோஷ்டம் ச யுவதிபிம்போஷ்டம்||

ஸ்ரீ காமாக்ஷி கடாக்ஷிதா: புருஷா: - ஸ்ரீ காமாக்ஷியால் கடாக்ஷிக்கப்பட்டவர்கள், விபினம் - காட்டை, பவனம் - வீடாகவும், அமித்ரம் - சத்ருவை, மித்ரம் - ஸ்நேஹிதனாகவும், யுவதி பிம்போஷ்டம் ச - யுவதிகளுடைய கோவைக்கனிபோன்ற அதரத்தையும், லோஷ்டம்—ஓட்டாஞ்சல்லிபோலும், ஸமம் பச்யந்தி - ஸமமாகப்பார்க்கிறார்கள், சிவ சிவ - அஹோ ஆச்சர்யம்!

1. அதாவது, ஸ்ரீ காமாக்ஷியின் கடாக்ஷம் பக்தன்மீது பட்டவுடன் அவனுக்கு ஸமத்ருஷ்டி ஏற்பட்டு, வீடு, காடு என்றுவது, மித்ரன், சத்ரு என்றுவது பேதமான பாவமில்லாதவனாக ஆகிவிடுகிறானென்று சொல்லப்பட்டது. அவனுக்கு ப்ரியம், அப்ரியம் என்ற இரண்டு சித்தவ்ருத்திகளும் இல்லாமற் போய்விடுவதால் அவன் யுவதிகளுடைய பிம்பபலம்போன்ற அதரத்தைக்கூட ஓட்டாஞ்சல்லிக்கு ஸமானமாக மதிப்பானென்று சொல்லப்பட்டது.

49. காம பரிபந்த்தி காமினி
காமேச்வரி காமபீட மத்ய கதே |
காமதுகா பவ கமலே
காமகலே காமகோடி காமாக்ஷி||

காம பரிபந்த்தி காமினி - மன்மதனுக்கு சத்ருவான பரமசிவனுடைய நாயகியாயும், காமேச்வரி - காமேச்வரி (லலிதாம்பிகா) ஸ்வரூபிணியாயும், காமபீட மத்யகதே - காமராஜபீடத்தின் மத்தியிலிருப்பவளும், கமலே - லக்ஷ்மீ ஸ்வரூபிணியாயும், காமகலே — காமகலா ஸ்வரூபிணியாயும், காமகோடி — காமகோடியென்ற பெயருள்ளவளாயுமிருக்கும், காமாக்ஷி - ஹே காமாக்ஷிதேவியே! காமதுகா பவ - (என்னுடைய) விருப்பங்களைக் கொடுப்பவளாய் ஆகுவாயாக.

1. அம்பிகை சிதக்னி குண்டத்திலிருந்து லலிதாதேவியாக ஆவிர்பவித்தபிறகு தேவர்கள் அவளை விவாஹம்செய்ய அவளுக்கு எவ்வகையிலும் தகுந்தவரான புருஷன் கிடைக்கவேண்டுமே என்ற கவலையோடிருக்கும்போது பரமேச்வரன் காமேச்வர ரூபமாக

'கோடி கந்தர்ப்ப லாவண்ய யுக்தோ திவ்ய சரீரவான் |
திவ்யாம்பரதர: ஸ்ரக்வீ திவ்யகந்தானுலேபன: ||
கிரீட ஹாரகேயூர குண்டலாத்யைரலங்க்ருத: |
ப்ராதுர்பபூவ புருஷோ ஜகன்மோஹன ரூபத்ருக் ||'.

என்றபடி அங்கு வந்ததாகவும்பிறகு இருவருக்கும் விவாஹமான வ்ருத்தாந்தமும் லலிதோபாக்யானத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காமேச்வரரைப் பதியாக அடைந்ததினால் லலிதாம்பிகைக்கு காமேச்வரீ என்று பெயர் ஏற்பட்டது.

2. கமலா என்ற பதத்தினால் மஹாவிஷ்ணுவின் பத்னியான லக்ஷ்மீ ரூபமாக அம்பிகையிருப்பதைச் சொல்லப்பட்டது. இது தவிர, லக்ஷ்மீ என்ற பெயரே அம்பிகைக்கு உண்டென்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

'தஸ்யாங்க மண்டலாரூடா சக்திர் மாஹேச்வரீ பரா |
மஹாலக்ஷ்மீரிதி க்யாதா ச்யாமா ஸர்வமனோஹரா ||'
(விஷ்ணுபுராணம்)

'ச்ரியம் லக்ஷ்மீம் அம்பிகாம் ஔபலாங்காம் |'
(ஆயுஷ்யஸூக்தம்)

3. பரப்ரஹ்மஸ்வரூபிணியான அம்பிகையானவள் சிவ சக்தி ஸாமரஸ்யரூபிணியானதாலும், அவ்வித ரூபத்தில் காமேச்வரரான சிவனானவர் ஒரு கோடியாக (ஏகதேசமாக) இருப்பதாலும் அம்பிகைக்கு காமகோடியென்று பெயர் ஏற்பட்டது. (காமனென்ற பதமானது காமேச்வரரைக்குறிக்கும்)

4. காஞ்சீபுரியிலிருக்கும் பிலத்திற்கே காமகோடியென்று பெயர். அது ஸர்வதீர்த்தத்திற்கு மூன்று அம்சம் நிசான்யபாகத்தில் ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயத்திற்குள்ளிருக்கிறது. அதற்குப் பலவிதமான பெயர்களுண்டு.

'ஜகத் காமகலாகாரம் பூமே: குண்டலினீ பதம் |
....
தத் காமகலம் திவ்யம் அகக்னம் ஸர்வஸித்திதம் |
தபஸ்த்தானம் பிலம் ஸூக்ஷ்மபரமம் வ்யோம தத் ஸ்ம்ருதம் ||
ஆதிபௌதிக மர்மாங்கம் நாபிஸ்தானம் புவ: பரம் |
ததேவ ப்ரம்ஹண: சம்போ: சரீரமிதி கத்யதே ||
லோகானாம் வ்யங்க்ய சப்தத்வாத் நாபிரித்யபி ஸம்ஜ்ஞிதம் |
ஸ்ரீபுரஸ்ய த்ரிமூர்த்தீனாம் ஈச்வராணாம் நிசாமபி ||
லோகானாம் மேருசைலஸ்ய கோரூபாயாவனேரபி |
நவத்வாரஸ்ய மார்க்கம் தம் பூயோனிஸ் தன் மஹாபிலம் ||'

5. காமகோஷ்டம் (காமகோட்டம்) என்பது மேலே சொல்லிய காமகோடியென்ற பில மடங்கிய பெரிய ப்ரதேசத்திற்குப்பெயர். இது ருத்ரசாலைக்கும் விஷ்ணு சாலைக்கும் நடுவிலுள்ளது, பெரிய நான்கெல்லையுடையது. இதற்கு பஞ்சபாண நிகேதனம் என்றும் பெயர் உண்டு. இது காஞ்சியின் மத்ய ப்ரதேசம். ஸ்ரீ காமாக்ஷியின் ஆலயம் அடங்கியது. இங்கு எவர்கள் தங்கள் இஷ்ட தேவதையின் மந்த்ரத்தை ஜபிக்கிறார்களோ அதற்குக் கோடி மடங்கான பலனை அடைவார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஏதத் சதுர்திங்மத்யஸ்த்தம் பஞ்சபாண நிகேதனம் |
தஸ்மாத் தத் காமகோஷ்டாக்யம் காஞ்ச்யாம் மத்யமபூதலம் ||
யோ ஜபேத் காமகோஷ்டேऽஸ்மின் மந்த்ரமிஷ்டார்த்ததைவதம் |
கோடிவர்ணபலம் ப்ராப்ய முக்திலோகம் ச கச்சதி ||
காமானாம் வர்ணதாத்பர்யாத் தத்கோடி குணஸங்க்யயா |
காமகோடிதி விக்யாதம் காமகோஷ்டாந்தரதலம் ||'

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.

ஈச்வர-ஹு சித்திரை-மீ 3உ

பண்டிதர்களும் ராஜீய விஷயமும்.

புரிக்ஷேத்திரத்தில் நடந்த வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸம்மேளனத்தின் தீர்மானங்களைப் பற்றிச் சென்றவாரம்குறிப்பிட்டோம். அந்த ஸம்மேளனத்திற்கு அங்கமாக அங்கு நடத்தப்பட்ட வித்வத்பரிஷத்தில் நிகழ்ந்தவற்றை பற்றி இன்று சிறிது எழுதுவோம். அந்த பரிஷத்தில் அனேக பண்டிதர்கள்கலந்துகொண்டார்கள் தற்கால பண்டிதர்கள் இந்தியாவில் நடக்கும் ராஜீய வ்யவஹாரங்களில்கலப்பது அவச்யமாவென்றவிவாதம் நிகழ்ந்தது. இதைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசியபின் "ப்ராமாணங்களுக்கும், தர்மங்களுக்கும் விரோதமில்லாத வழியில் பண்டிதர்கள் இந்திய ராஜீய விஷயங்களில் கலப்பது அவசிய" மென்று அதில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்காலம் பண்டிதர்கள் ராஜீய விஷயங்களில் ஸம்பந்தப்படாமல், தனித்து நிற்பதால் ஜன ஸமூஹத்தில் அவர்கள் எவ்விதச் செல்வாக்கும் இல்லாதவர்களாய் இருப்பதை பலர் எடுத்துக் காட்டினார்கள்.

பண்டிதர்கள் ராஜநீதி விஷயங்களில் கலப்பது சாஸ்திரத்திற்கும் சரித்திரத்திற்கும் ஒத்ததாகவே காண்கிறது. ராஜ்யத்தின் வைதிக லௌகிக கார்யங்கள் யாவற்றிலும் பண்டிதர்களுடைய ஸம்பந்தம் இன்றியமையாததாக ராஜநீதி சாஸ்திரத்தில் கூறப்படுகிறது. சேனாதிபத்யம் முதலிய ஸகல விஷயங்களையும் வேதமறிந்தவனே வஹிக்கத் தக்கவனென்று மனு முதலியவர்கள் மொழிந்துள்ளார்கள். ராஜநீதிகளைப் ப்ரயோகிக்க வேண்டியதற்கும், சிக்ஷை முதலியவை விதிக்கவேண்டியதற்கும், வேறு ராஜ்ய நெருக்கடி காலத்திலும் பண்டிதர்களின் அபிப்ராயம் கேட்கபடவேண்டுமென்பது ராஜநீதியாக இருக்கிறது. ப்ராயச்சித்த பரிஷத் விதி போன்ற வைதிக கார்யங்களில் பண்டிதர்கள் ஸம்மந்தப்பட்டு தேச தர்மத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு அவர்களுக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது. வஸிஷ்ட வாமதேவாதி மஹரிஷிகளும், த்ரோணாசாரியாதிகளும் ராஜநீதி விஷயங்களில் எவ்வளவு தூரம் ஸம்பந்தப்பட்டிருந்தார்களென்பது நமது புராணங்களில் நன்கு புலப்படும். ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமி முதலிய சமீபகாலத்திய பெரியோர்களின் சரித்திரத்தையும் பார்க்கலாம். இந்தியாவில் தற்காலம் நடந்துவரும் ராஜீயசர்ச்சைகளில் ஓரளவு பண்டிதர்கள் கலந்திருந்தால், அது தற்போது பல அம்சங்களில் விபரீதமாகவிருக்கும் நிலைமைக்குவந்திராதென்பதில் ஸம்சயம் இல்லை. ராஜீய நுட்பங்களையும் அதில் நீதியை அனுசரித்து தீர்க்க திருஷ்டியுடன் செய்ய வேண்டிய கார்யங்களையும்பண்டிதர்களறிந்து சொல்வதுபோல் மற்றவர்கள் சொல்லமாட்டார்கள். ராஜீயத்தில் உண்மையான சாஸ்திரீயமான பிரக்ஞையே சிறிதும் இல்லாமல் நமக்கு உபதேசகர்களாகக் கிளம்பியுள்ள பல ராஜீயவாதிகளைவிட பண்டிதர்கள்மிகச்சிறந்தவர்களாக இருப்பார்களென்பதிலும் ஐயமில்லை. மேலும் தற்கால ராஜீய வாதிகளுக்கு அன்னியரிடமிருந்து நிர்வாகத்தைக் கைப்பற்றிவிட வேண்டுமென்கிற ஒரே யோஜனை மட்டும் இருக்கிறதேயல்லது வேறு ஸ்வதேச தர்ம நீதிகளைப்பற்றிச் சிறிதும் கவலையோ சிரத்தையோ கிடையாது. ஸ்வதர்மத்தை அழித்துக்கொண்டுவிடவும் அவர்கள் தயாராக நிற்கிறார்கள். ஸ்வராஜ்ய அமைப்பும் நிர்வாஹமும், ராஜீயக்கிளர்ச்சியும், மற்றயாவற்றும் அன்னியர்களிடமிருந்தே இந்திய ராஜீய வாதிகளால் கற்றுக்கொள்ளப்பட்டு அன்ய புத்தியைக்கொண்டு அவர்களைப் போலவே நடக்கவிரும்புகிறார்கள். பண்டிதர்கள் ஆரம்ப முதலே ராஜீயத்தில் ஸம்பந்தப்பட்டிருந்தால் ஸ்வதர்மத்திற்கு விரோதமின்றியும், ராஜநீதிகளுக்கு ஏற்றவழியிலும் ராஜீய வாதங்களைத் திருப்பியிருக்கலாம்.

இனியாவது சிறுகச்சிறுக நமது பண்டிதர்கள் தற்காலம் நடந்துவரும் ராஜீயவாதங்களை கவனித்தும், ஸர்வஜன ஹிதமான ராஜநீதி தத்துவங்களை அறிந்து வெளியிட்டும், தர்ம விரோதமற்ற வழியில் பொது விஷயங்களில் கலந்தால் பாரத தேசத்திற்கும் நமது ஸமுதாயத்திற்கும் ஹிதம் ஏற்படுவது நிச்சயம்.

புரி வித்வத் பரிஷத்தில் மற்றொரு முக்கிய விஷயமும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. திருவாங்கூர் ஆலயப்ரவேச அதிதியை யொட்டி ஒரு புதிய விவாதம் கிளப்பப்பட்டிருப்பதை யாவரும் அறிவோம். அதாவது அரசனுக்கு, காலத்தை அனுசரித்து தர்மத்தைமாற்ற அதிகாரமுண்டென்பதாகும். அந்த தேசத்திய ஸசிவோத்தமர் இந்த வாதத்தைக் கிளப்பி அந்த அரசர் ஆலயப்ரவேச விளம்பரம் செய்தது ஸரியென்று வாதிக்கிறார். "ராஜா காலஸ்ய காரணம்" என்ற வாக்யத்தைக் காட்டி, இந்த சர்ச்சை நடந்து வருகிறது இதைப்பற்றி அந்த பரிஷத்தில் விசாரித்து அது அரசன் தர்மங்களை தனதிஷ்டப்படி மாற்ற அதிகாரமளிப்பதாகாதென்றும், அத்தகைய அர்த்தம் கொடுக்க அந்த ப்ரமாணத்திற்கு சக்தியில்லையென்றும் 'அரசன் தனது கடமையை அனுசரித்தும், நீதியை அநுசரித்தும் அத்தந்த ப்ரஜைகளின் ஸ்வதர்மத்தை அப்படியே காத்து நல்ல ஆக்ஷி நடத்தி வரவேண்டுமென்றும் அதில் அவன் தவறு செய்தால் அதன் மூலம் ப்ரஜைகளுக்கும் ராஜ்யத்திற்கும் தீங்கிழைக்கிறவனுவானென்றும் அவன் தர்மவிஷயத்தில் மிகுந்த ஜாக்ரதையுடன் இருக்கவேண்டுமென்பதையே மேற்படி ப்ரமாணம் வற்புறுத்துவதாகவும் முன்பின் சந்தர்ப்பத்தையொட்டி அர்த்தம் ஏற்படுகிறதேயல்லது, அரசன் இஷ்டப்படி தேச தர்மத்தை மாற்ற அது அதிகாரம் அளிக்கவில்லையென்றும் பரிஷத் தீர்மானித்தது. இது முற்றிலும் சாஸ்திரஸம்புக்தப்பட்ட தீர்மானமென்பதில் ஸந்தேஹமில்லை.

இதைப்பற்றியதான எல்லா விஷயத்தையும் குறிப்பிட்டுச் சிறிதுவிவரமாக நாம் பிறகு எழுதுவோம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
Amalapuram, East Godawary.

குறிப்புகள்.

விஷமம் பலித்துவிடுமோ?

சாரதாச் சட்ட யமனுக்குப் பயந்து ஆஸ்திக ஹிந்துக்கள் பலர் விவாஹதர்மத்தை சாஸ்திரீயமாக நடத்தவேண்டியதற்குப் பிரஞ்சு ப்பிரதேசங்களுக்குப் போவது ஓர் ஸௌகர்யமாயிருக்கிறது. ஆனால் இது சீர்திருத்த விஷமிகளின் கண்களில் உறுத்திக்கொண்டிருக்கிறது. சாரதாச்சட்டம் உபயோகமற்றுப்போவதன் மூலம் தங்கள் முயற்சி வீழ்ச்சியடைந்ததைக் கண்டு அவர்கள் ஆத்திரப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பிரிடிஷ் பிரஜைகள் பிரஞ்சு எல்லையில்போய் பால்யவிவாஹம் நடத்துவதைத் தடுக்க அவர்கள் பலமான முயற்சி செய்துவருகிறார்கள். இதைப்பற்றிப் பார்லிமெண்டிலும் ப்ரஸ்தாபம் ஏற்பட்டிருப்பதுடன் இந்திய சட்டஸபையிலும் கேள்வி கேட்கப்பட்டு கவர்ன்மெண்டார் இதைப்பற்றிக் கவனிப்பதாக வாக்களித்துள்ளார்கள். முக்யமாக நமது மாகாணத்தில் தற்போது முதன் மந்திரிஸ்தானத்தை அலங்கரித்துவரும் ஸர். கே. வி. ரெட்டியார், சாரதாச் சட்டத்தை மீறிச் செய்யப்படும் பால்ய விவாகங்களைக் கடுமையான முறையில் தடைசெய்யவேண்டுமென்று அடிக்கடி சொல்லி வருகிறார். இவர் நிர்வாஹஸபை மெம்பராயும், கவர்னராயுமிருந்தகாலத்தில் கூட இந்திய கவர்ன்மெண்டுடன் இதை யோஜித்து வருவதாகப் பத்திரிகைகளில் ஸமாசாரம் வந்துகொண்டிருந்தன. இப்போது இத்தகையவர்களுடைய விஷமமுயற்சி பலிக்குமோ வென்று தார்மிகர்கள் அச்சமடைய வேண்டியிருக்கிறது.

புதுச்சேரி அஸம்பிளியென்கிற ஜனப்ரதிநிதி ஸபையில் அத்தேச கவர்னர் சிலதினங்களுக்கு முன் பேசுகையில் அங்கு பால்ய விவாஹத் தடைச்சட்டமொன்றை இயற்றி வைக்கவேண்டியது அவச்யமாயிருப்பதாயும், பிரிடிஷ் பிரதேசங்களிலிருந்து புதுச்சேரி எல்லைக்கு வரும் பால்ய விவாஹங்களைத் தடுக்க வேண்டியதுடன், அந்த தேசங்களிலேயே சிலர் பால்யவிவாஹம் அநுஷ்டிப்பதைத் தடுப்பதும் அவச்யமாயிருப்பதாயும் குறிப்பிட்டார். இத்தகைய மசோதா அங்கு எப்போது கொண்டுவரப்படுமென்பதும், அதற்கு ஆதரவோ எதிர்ப்போ எப்படியிருக்குமென்பதும் அதற்குள் தெரியக்கூடியதல்ல. ஆனால் இத்தகைய மனோபாவம் பிரஞ்சு தேசத்திய அதிகாரிகளுக்கு உண்டாயிருப்பதன் காரணம், இந்திய சீர்திருத்த வாதிகளின் விஷமமும், அதையொட்டிய பிரிடிஷ் அதிகாரிகளின் தூண்டுதலாகவே இருக்கவேண்டும். தங்கள் தேசத்திலேயே நம் ஜனங்கள் சட்டமென்ற அநீதியான நிர்ப்பந்தத்தால் மத தர்மங்களைக்கூடத் தங்களிஷ்டப்படி நடத்தமுடியாமல் கட்டுப்படுத்தியுள்ள அக்கிரமம் போதாதா? நாம் எங்கு சென்றாலும் அங்கு நம்மைத் துரத்திவந்து அடக்குவதுதான் ஸ்வதந்திரம் பேசும் தேசத்தினரின் நீதியோ?

பிரஞ்சு தேசத்தார் இந்தக் கூக்குரலுக்குச் செவிசாய்ப்பது முற்றிலும் நியாயமானதல்ல. இந்தியாவில் பலவிடங்களிலுள்ள பிரஞ்சுராஜ்யத்தில் ஆஸ்திகர்களாயுள்ள ஹிந்துக்கள் லக்ஷக்கணக்கில் பிரஜைகளாயிருந்து வருகிறார்கள். அவர்களுடைய மத உணர்ச்சியைப் பாதிக்கும்படியான நிர்ப்பந்தத்தை அந்த தேச அதிகாரிகள் செய்வது பெருத்த அதிருப்திக்கு இடமாகும். ஆகலால் பிரஞ்சு இந்திய பிரதேச வாதிகளும், நாமும் இம்முயற்சியை இப்போதே பலமாக ஆக்ஷேபிக்கவேண்டியது அவச்யமாகும்.

பிரிடிஷ் பிரதேசங்களிலிருந்து விவாஹம் செய்ய வருவோரிடம் ஏதாவது ஒரு சிறிய

விகிதத்தில் வரி வசூலிப்பதாயிருந்தாலும் அவர்களுக்கு ஆக்ஷேபமிராது. அப்படியின்றி அடியோடு அதைத்தடுப்பது நியாயமாகாது. இவ்விஷயங்களை அந்த ஸர்க்காரும், ஜனங்களும் ஜாக்கிரதையுடன் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

ஹிந்திப் பிரசார ஸபையில் ஸன்மார்க்க குறைவு.

காந்திஜியின் ஸமாதானம்.

சென்னை மாகாணத்தில் ஹிந்தி பிரசாரம் செய்துவரும் தக்ஷிணபாரத ஹிந்திப் பிரசார ஸபையின் பிரதான கார்யதர்சியான ஸ்ரீமான் ஹரிஹரசர்மா என்பவர் தமது பதவியை ராஜிநாமா செய்த விஷயமாக காந்திஜி வெளியிட்டுள்ள விவரம் ஹரிஜன் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. இந்த விவரம் மிக்க வெட்ககரமாயிருப்பதுடன் இந்தியாவில் காந்திஜியுள்பட, பொது ஸமூஹ விஷயங்களில் ஸ்திரீகளை அதிகமாகக் கலக்கும்படி செய்வதிலும் அவர்கள் புருஷர்களுடன் ஸமமாகக் கூச்சமின்றி பழகும்படி செய்வதிலும் நேரிடும் பெரிய விபரீதங்களை விளக்குவதாயிருக்கிறது.

ஸ்ரீமான் ஹரிஹரசர்மா என்பவர் இந்த மாகாணத்தில் ஹிந்திபிரசார வேலை மூலமாகச்சிறந்து பிரஸித்தியடைந்தவர். இவரிடம் பல மாணாக்கர்களும், மாணவிகளும் ஹிந்தி கற்று வந்தார்கள். இதன் மூலம் இவர் ஸ்திரீகளுடன் நெருங்கிப் பழகிவந்தார்.

ஸமீபத்தில் காந்திஜி சென்னைக்கு வந்திருந்தபோது ஹிந்தி பிரசார வேலையில் நல்லொழுக்கத்திற்கு பங்கம் விளையாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று உபதேசித்தார், மறுநாள் காந்திஜிக்கு ஒரு கடிதம் வந்தது.

ஹிந்தி பிரசார புனித வேலையை ஏற்றுக் கொண்டிருந்த தலைவரான ஹரிஹரசர்மாவின் நல்லொழுக்கத் தவறைப்பற்றி அதில் விரிவாகத்தகவல் சொல்லப்பட்டிருந்ததாம். காந்திஜி ஸ்ரீமான் சர்மாவைக் கூப்பிட்டு அவர் மீது வந்துள்ள புகாரைத்தெரிவித்துக்கேட்டதற்கு முதலில் அவர் மறுத்தாராயினும் கடைசியாகத்தாம் நல்லொழுக்கத்திலிருந்து வீழ்ச்சியடைந்ததை ஒப்புக்கொண்டுவிட்டாராம். அதன் மேல் காந்திஜி அவரை ராஜிநாமாச் செய்து விலகும்படி சொல்லிவிட்டு, அவருடைய அநுமதிப்படி இவ்விஷயத்தை பஹிரங்கப் படுத்தி ஹரிஜனப் பத்திரிகையில் வெளியிட முன்வந்ததாக காந்திஜியே விஸ்தாரமாக எழுதியிருக்கிறார்.

இதற்கு மேல் காந்திஜி எழுதுகையில் ஸ்ரீமான் சர்மாவின் நல்லொழுக்க வீழ்ச்சியை தாம் ஒளித்து வைக்க விரும்பாமலே வெளியிட்டதாயும், இதிலிருந்து மற்ற பிரசாரகர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்பதை உணருவார்களென்றும், தென்னிந்தியாவில் படுதா முறை, ஸ்திரீகளிடம் கிடையாதாகையால் ஹிந்திப்பிரசாரகர்கள் மாணவிகளிடம் ஜாக்ரதையாக நடக்கவேணுமென்றும், இதற்காக ஸ்திரீகளுக்குப்புருஷர் ஹிந்தி பிரைவேட் டியூஷன் சொல்லிவைக்கும் வழக்கத்தை நிறுத்திவிடவேண்டுமென்று சிலர் கூறுவதைத் தாம் ஏற்கமுடியாதென்றும் ஸ்திரி புருஷர்கள் நிறைந்துள்ள ஹிந்திப் பிரசார ஸபையில் நல்லொழுக்கம் முக்யமாக கவனிக்கப்பட்டாலே போதுமென்றும் என்னென்னவோ காந்திஜி சொல்லிக்கொண்டு போகிறார்.

காந்திஜிக்கு நேரில் இவ்விஷயமாய் எவ்வளவோ அஸம்பாவிதங்கள் ஏற்கனவே நேர்ந்து தெரிந்திருந்தும், இன்னும் அவர் ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்து பழகும்வழக்கதை விட்டு விடப்பிரியப்படவில்லை. அவருடைய ஸபர்மதி ஆச்ரமத்தில் ஸ்திரீகளும், புருஷர்களும் சேர்ந்து பழகிவந்தகாரணமாக அநேகம் தடவையில் நல்லொழுக்கம் கெட்டுவிட்டதை இவர் அறிந்து உபவாஸப் ப்ராயச்சித்தமும் செய்து கொண்டுகடைசியாக அந்த ஆச்ரமத்தையே ரத்துசெய்தார். இன்னும் இந்தியாவில் ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்து வேலை செய்யும் பல ஸ்தாபனங்களிலும் ஸன்மார்க்கம் அழிந்து கிடப்பதைப் பற்றிகாந்திஜி முதலியவர்கள் அறிந்தவர்கள்! அப்படியிருந்தும், இனிமேல் பொதுக்கார்யங்களிலும், கல்லூரிச் சாலைகளிலும், ஸதிரீகளும் புருஷர்களும் சேர்ந்து பழகும் வழக்கத்தை நிறுத்துவதன்றோ நேர்மையான கார்யமாகும்? அதைவிட்டு எல்லோரும் ஜாக்கிரதையாயிருந்தால் போது மென்று இவர்வாதிப்பது அனுபவத்திற்கு ஒத்ததாகுமா?

இந்தமாதிரியான ஸன்மார்க்கக் குறைவு நடத்தை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருமாதிரியான சப்பைக்கட்டைக்கட்டி, மேல்மேலும் இந்தவிபரீதத்திற்கு இடம் கொடுப்பது என்னகார்யமோதெரியவில்லை.

மஹா வைராக்யசாலிகளான மஹான்கள் கூட நெருங்கிப் பழகுவதால் ஸன்மார்க்க நிலைமையை அவசமாக இழந்துவிடுகிறார்கள். இதன் உண்மையை காந்திஜியே அறிவார். காந்திஜி வரையில் எட்டின கேஸ்கள் சிலதான் இருக்கலாம். இவர் வரையில் வாராமலே எவ்வளவோ ஆபாஸங்கள் நடந்து வரக்கூடும். ஆகலால் ஸ்திரீகள் முன்னேற்றமெனச் சொல்லிக்கொண்டு அவர்களை சந்தியில் இழுத்து ஸன்மார்க்கமும் நசிக்கும்படியான மூடத்தமான கொள்கைகளையும் செய்கைகளையும் நவீனர்கள் கைவிட்டாலல்லது காந்திஜியின் உபதேசமும், மனோரதமும் ஒரு நாளும் நிறைவேறப்போவதில்லை. இந்த மாதிரியான ஸம்பவங்களை ஒளித்துவைக்காமல் வெளியிட்டுவிடுவதால் காந்திஜி மீது ஒருவரும் திருப்தியடைந்துவிடார். இவ்வளவுக்குப் பிறகும் அவர் தமது பிடிவாதத்தை விடாமல், ஸ்திரீ புருஷர்களைச் சேர்த்து பழகும்படி செய்யும் விபரீதயோஜனையைப் பொது ஜனங்கள் கண்டிப்பாய் இனி எதிர்ப்பார்களென்பது நிச்சயம்.

யதார்த்தவாதி.

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.)

ஆணுடன் கைகுலுக்க மறுப்பு! பஞ்சாப் சட்டஸபையில் ஓர் மிலேச்ச ஸ்திரீ ராஜவிச்வாஸ பிரமாணம் செய்து அக்ராசனர் தன் கையை நீட்டியபோது கோஷா முறையைப் பின்பற்றி பர புருஷ சரீர ஸ்பர்சமும் கூடாதென கைகுலுக்கமறுத்தாள். அந்த உணர்ச்சியைக் கண்டு ஸந்தோஷித்து மரியாதை செய்யப்பட்டது. ஆர்யவம்சத்தில்ஜனித்த பல பிராமணஸ்திரீகள் சென்னை சட்டஸபையில் என்செய்வார்?

ஆலயதர்மாதிகாரி தவறு!! ஸ்ரீரங்கநாதன் திருமஞ்ஜன தீர்த்தம் கொண்டுவருவது முதலிய உத்தம கைங்கரியத்திற்கேற்பட்ட யானையை ஓர் மிலேச்ச மந்திரி ஊர்வலத்திற்கு உபயோகமாகும்படி செய்த தர்மகர்த்தாக்களது செய்கை மிக அதர்மமானது. கண்டிக்கத்தக்கது. பின்னர் ஓர்பாதிரி ஊர்வலத்திற்கும் அபாஊர்வலத்திற்குக்கூட ஆலயயானை உபயோகப்படுத்தப்படும். ஸ்ரீரங்க பக்தர்கள் இதை ஏன்கண்டிக்கக்கூடாது?

மந்திரி வழிகாட்டுகிறார்! பம்பாய் மந்திரி ஒருவர் தனது சம்பளத்தில் சிறிது செலவிற்கெடுத்துக்கொண்டு மிகுதியை ஏழைகளுக்கு கொடுத்துதவுகிறார். மற்றோர் சட்டஸபை நிலவரியைக் குறைத்து ராஜீயகைதிகளை விடுவிக்கஆரம்பிக்கிறது. இத்தகைய பேருதவியைக் குடிகளுக்குச் செய்துமுடியாத காலத்திலே மந்திரிபதவியை உதறித் தள்ளாதிருந்தது சென்னைசெய்ததவறாகும்.

பிராணனைவிட மானம்பெரிதன்றோ! சிற்சில படக்காக்ஷிகளில்ஹாஸ்யத்திற்காக பலகதைகள் இணைக்கப்படுகின்றன. அதில்பெரும்பாலும் பிராமணர்கெட்டுவிட்டதாகவே காட்டப்படுகிறது. அதில்நடிப்பவரும் பார்ப்பவரும் பிராமணர் எனக் கேட்கும்பொழுது பிராமணரத்தம் ஓடும் பலர் மனம் கொதிக்காமலிருக்காது. கதைஎழுதுபவர் நடிப்பவர் நடத்துபவர், பார்ப்பவர் அனைவர்க்கும் மானம் பெரிதென என்று தோன்றும்?

என்ன உத்தேசம்! திருவாங்கூர் மன்னன் ஜாவா செல்வாராம். ஆங்குள்ள கைத்தொழில்களை கவனிப்பாராம்! அவரை அங்கு அழைத்துச் செல்லும் திவானின் நோக்கமென்ன? பத்மநாபஸ்வாமி பொக்ஷம் சூன்யமாகும் வரை ஆட்டிவைப்பரோ?

வர்ணாச்ரம ஸங்க பிரசாரம்.

அகில இந்திய வர்ணாச்ரமஸம்மேளனத்தில் தீர்மானித்தபடி அதில் அக்கிராசனம் வகித்த மதுரை ராவ் சாகிப் நடேசய்யர் அவர்கள் பட்டணத்திற்கு திரும்பி வந்த உடனே சென்னை ராஜதானியில் வர்ணாச்ரம ஸ்வராஜ்யகிளை சபைகள் ஏற்படுத்தும் வேலையை தீவிரமாய் ஆரம்பித்திருக்கிறார்.

சென்ற வாரம் அவர் நேரில் திருச்சினாப்பள்ளிக்கு வந்து அவ்விடத்தில் திருச்சி ஜில்லா வர்ணாச்ரம சபையை துவக்கி வைத்தார். பிரம்மஸ்ரீ டி. கே. பாலசுப்ரமணிய்யரவர்கள் தலைவராகவும் வக்கீல் ஜயராமையர் கார்யதர்சி ஆகவும் வேலை செய்து வருகிறார். குழித்தலை, கரூர் என்ற இரண்டு இடங்களிலும் அடுத்த வாரம் கிளை சபைகள் ஏற்படுத்தபடும்.

கும்பகோணத்திலிருந்து பிரம்மஸ்ரீ M.K. வைத்தியநாதையரும் சுவாமிநாதசாஸ்திரிகளும் சென்ற ஞாயிற்றுகிழமை திருச்சியில் மதுரை நடேசய்யரவர்களைக்கண்டு கும்பகோணம் சபை விஷயமாயும் தஞ்சைஜில்லாசபையைப்பற்றியும் செய்யவேண்டிய ப்ரயத்தனங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

S. சுவாமிநாதசாஸ்திரிகள்

அய்யுவய்யர்—லெக்ஷ்மி அம்மாள் அத்வைத வேதாந்த பாடசாலைக்கு வித்யார்த்திகள் தேவை.

1937ஹு ஜூன்மீ 30உ யோடு ஷை பாடசாலையில் இரண்டாவது பரிவிருத்தி முடிவடைகிறது. ஷை பாடசாலையில் 1—7—37 முதல் சேருவதற்கு மூன்று வித்யார்த்திகள் தேவை. அப்படிச் சேரும் வித்யார்த்திகள் வேதாந்த சிரோமணியில்லாமல் வேறு சிரோமணி பாஸ் செய்தவர்களாய் இருக்கலாம். அப்படி சிரோமணி பாஸ் செய்யாமலிருந்தால் நல்ல வ்யுத்பத்தியுடன் தர்க்கத்தில் பிரகாரணர்தமாவது வியாகரணத்தில் கௌமுதியாவது ஆனவாகளாய் இருக்கவேண்டும். மேற்கண்ட யோக்யதையுள்ளவர்களாயும் பாடசாலையில்சேர விருப்பமுள்ளவர்களாயிருப்பவர்கள் கீழ்கண்ட விலாஸதாருக்கு 31—5—1937உக்குள் மனுச்செய்துக் கொள்ளவேண்டும். மனுக்களை பரிசீலனை செய்து அவசியமிருந்தால் நேரில் பரீக்ஷைசெய்தும் சேர்த்துக்கொள்ளப்படும்.

எம். கே. வைத்யநாத அய்யர், B.A., B.L.,
செக்ரடிரி,
கும்பகோணம் அத்வைத ஸபை.

எக்ஸ்டன்ஷன்ஸ்,
கும்பகோணம்,
14.4.1937.

புதுக்கோட்டை வைதிக வர்த்தினி ஸபை.

ஓர் உபந்நியாஸம்.

அர்ச்சையை ஸேவிக்கும் முறை.

ச்ருதிப்ராமாண்யத்தால் ஜாதி 18-ம் அநாதி என்றும் தேவாலயங்களும் அநாதியாக இருக்கின்றனவென்றும், ஸித்தித்த பின் தேவாலயங்களின் நிர்மாணம் செய்யும் முறையும் அதை ஸேவிக்கும் முறையும் அந்த ப்ரமாணங்களிலிருந்தே ஸ்பஷ்டமாகக் கிடைக்கின்றன.

சுருக்கமாக தேவாலயங்கள் மூன்றுவிதங்களாக இருக்கின்றன. ஸாங்கம், உபாங்கம், ப்ரத்யங்கம், என்ற மூன்றுவிதம். அவற்றுள் கர்ப்பக்ருகம் முதல் வெளிப்ராகார பர்யந்தம் அமைக்கப்பட்டது ஸாங்கமாம். மத்ய ஹாரம் முதலியவையோடு கூடியது உபாங்கமாம். மற்றவை ப்ரத்யங்கமாம் அதில் ப்ராகாரங்கள் 7, 5, 3, 2, 1 எனப் பலவகை. இவைகளில் த்வஜஸ்தம்பம், பரிவாரதேவதைகளின் ஸ்தானம் முதலிய விபரங்கள் ஸூக்ஷ்ம ஆகமத்தில் தர்சனவிதிப் படலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதே, பாஞ்சராத்ரம், வைகானஸத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் நிர்மாணம் செய்யப்பட்ட ஆலயங்களில் தேவதா பிம்பங்களை அஷ்டபந்தனம் சாத்தி அந்தந்த பிம்பத்திற்குரிய யந்த்ரங்களில் ஸ்தாபித்து, கலசஸ்தாபனம், வேதபாராயணம், ஹோமம் முதலியவைகளை முறைப்படி செய்து மஹா கும்பாபிஷேகம் வேதமந்த்ர பூர்வமாகச் செய்தால் அந்தந்த பிம்பங்களில் ஈச்வர ஸான்னித்யம் ஏற்படுகின்றது. அதே ஸான்னித்யம் ஆராதன வைபவத்தால் விசேஷமாக ஏற்படுகிறது. மஹான்கள் வந்து ஸேவிக்க ஸேவிக்க அந்த ஸான்னித்யம் அதிகப்படுகிறது. அதில் ஸேவிக்க வேண்டிய முறை ஸூக்ஷ்மாகமம், வதுளாகமம், ஸுப்ரபேதாகமம், காமிகம், அம்சுமதாகமம், காரணாகமம், காமிகாமம், முதலிய பல ஆகமங்களிலும், கைலாஸ ஸங்க்ரஹம், மகுடம், ரத்னாகரம், சிவார்ச்சனா சந்திரிகை முதலிய ப்ரகரணங்களிலும் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் சுருக்கம்:—

ஆசார்யதீக்ஷை பெற்ற சிவத்விஜன் கர்ப்பக்ருகத்தில் ப்ரவேசித்து ஆராதனம் ஸேவை முதலியது செய்யவேண்டும்.

பரிசாரகன், வேதாத்யயனம் செய்தப்ராம்மணர்கள், அர்த்தமண்டபத்திலிருந்து ஸேவிக்கவேண்டியது.

ப்ரும்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன் ஸந்யாசி என்ற ஆச்ரமிகள் ஸ்னபன மண்டபத்திலிருந்து ஸேவிக்க வேண்டியது.

ஸத்சூத்திரர்களான சைவசமய ருத்ரர்களும், அநுலோம ஸங்கரஜாதிகளும் மஹா மண்டபத்திலிருந்து தர்சனம் செய்ய வேண்டியது.

ப்ரதிலோம ஸங்கர ஜாதிகள் கோபுரத்வாரத்துக்கு வெளியிலிருந்து தர்சனம் செய்ய வேண்டியது. ப்ரதிலோம ஸங்கரஜாதிகள் சண்டாளன், புல்கஸன், முதலியவர்களாம். இவர்கள் அறியாமையால் உள்ளே சென்று ஸேவிப்பார்களாகில் அநேக தோஷங்கள் கூறப்படுகின்றன: பாசுபத ஸம்ஹிதையில்

"சண்டாள பதிதோதக்யா ஸூதிகோன்மத்தகாதிபி: | சோராசுசிபிர் வ்ராத்யை: பாஷண்டைர் தேவலைஸ்ததா ||
ப்ரவிஷ்டே பூஜனே ஸ்ப்ருஷ்டே
த்ரவ்யாணாம் ஸ்பர்சனே ததா |
தோஷாச்சபஹவோ தா ப்ரோக்தா:
தத்ப்ரேஷ்வேவ ப்ருதக் ப்ருதக் ||

சண்டாளன், பதிதன், பஹிஷ்டா ஸ்திரீ, ப்ரஸவித்த ஸ்திரீ, பைத்யம் பிடித்தவன், திருடன் ஆசௌசமுள்ளவன், ஸம்ஸ்காரமற்றவன், பாஷண்டர் முதலியவர்கள் உள்ளே ப்ரவேசித்து த்ரவ்யங்களையும் தொட்டுவிட்டால் பல விதமான தோஷங்கள் உண்டாகுமென்று தனித்தனியே எல்லா ஆகமங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. இதேமாதிரி விஷ்ணு ஆலயங்களிலும் வைகானஸம் முதலிய க்ரந்தங்களில் விரிவாய்க் கூறப்படுகின்றது. இந்த விபரங்களை ப்ரமாண வசனங்களுடன் கூடிய சீக்கிரத்தில் பிரசுரிக்கப்படும் சிறிய புஸ்தகத்தில் காணலாம்.

அப்படி ப்ரவேசித்த தோஷத்திற்காக ஸம்ப்ரோக்ஷணை முதலிய சாந்தி க்ரமங்களைச் செய்யவேண்டும். அப்படியே அநாதியாய் தேவாலயம் ஏற்பட்டது முதல் ஸாளுவரை அநுஷ்டானத்தில் நடந்து கொண்டு வருகிறது.

ஈச்வரன் எங்கும் வ்யாபகமாக இருப்பது பற்றி எல்லோருக்கும் பிறப்பினாலேயே எவ்விடங்களிலும் செல்ல சம உரிமை இருப்பதாக சிலர் யுக்தியைக்கொண்டு சொல்லுகிறார்கள். அப்படியானால் சாதாரண வீதிகளில் போல அரண்மனைகளிலும் ஈச்வரன் வ்யாபித்திருக்கிறார் என்ற காரணத்தால் வீதிகளில் போல் அரண்மனைகளிலும் எல்லோரும் சமமாக ப்ரவேசிக்க இடங்கொடுப்பார்களா ?

பொதுஸ்தலம் என்பதாகக் கருதப்பட்டாலும் மலஜல விஸர்ஜனத்துக்காக ஒதுக்கப்பட்ட பொதுஸ்தலங்களிற் போல், ஆபீஸ் ரோட், முதலிய மற்ற பொது ஸ்தலங்களிற் எல்லோரும் ஸமமாக வரம்புமீறி ப்ரவேசித்துவிடலாமா ? சில ஸ்தலங்கள் தான் சிற்சில ஜனங்களுக்கு பொதுவாகக் கருதப்படுகின்றதென்பது எல்லோரும் கண்கூடாக அநுபவித்து வருகிற விஷயம். அன்றியும் ஈச்வரன் வியாபித்த இடத்தில் ஸமமாக ப்ரவேசிக்கலாம், என்றால் மாதாவினிடத்திலும் பத்னியினிடத்திலும் தான் ஈச்வரன் ஸமமாய் வ்யாபித்துள்ளார். அவ்விருவர்களிடத்திலும் ஸமமாக ப்ரவேசித்துவிடலாமா ? இக்யாதி யுக்திகளுக்கும் உலக நடப்புக்கும் விரோதப்படுவதால் அவர்கள் சொல்லும் யுக்தி ஆபாஸமாகுமேயன்றி நிலைக்கமாட்டாது.

பிறவியினாலேயே எல்லோரும் எவ்விடத்திலும் ப்ரவேசித்துவிடலாமென சட்டமிட்டவர்களும், சண்டாளனோடு சேர்ந்து படிப்பவர் பஹிஷ்டாஸ்திரீ, ஆசௌசி முதலியவர்களை தேவாலயங்களுக்குள் ப்ரவேசிக்கக் கூடாதென்று எதற்காக விலக்கியிருக்கிறார்களோ தெரியவில்லை. நைமித்திகமான ஆசௌசாதிகள் ஸம்பவித்தபடியால் விலக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றால் சண்டாளர்களுக்கும் அந்த ஜாதியில் பிறந்த நிமித்தத்தால் அந்த விலக்குதல் ஏற்படுத்தவேண்டியதுதான். ஆசௌசத்தில் ஒருநாள், 90-நாழிகை, 3-நாள், 10-நாள் என நாட்கள் ஏற்றக் குறைவிற்கு சாஸ்திரமே பிரமாணமாவதுபோல் சண்டாளனுடைய அசுத்தி பிறவி முதல் முடிவு வரை இருப்பதாக சாஸ்திரம் கூறுவதால் அதன்படி அங்கீகரிக்க வேண்டியதுதான் க்ரமம். ஆசௌசி முதலியவைகளைப் பற்றி மட்டில் சாஸ்திரத்தை நம்புவதும், சண்டாளன் விஷயத்தில் சாஸ்திரத்தில் அவநம்பிக்கையும் 'அர்த்தஜரதீயம்' நியாயமாய்விடுவது ப்ராமாணிகர்களுக்கு அழகில்லை ச்ருதி முதலிய ப்ரமாணங்களைப் புறக்கணித்த நாங்கள் ப்ராமாணிகர்களல்ல என்ற கருத்துக் கொண்டவர்களிடம் இந்தக் கதையை ப்ராமாணிகர்கள் கூற அவசியமில்லை.

இப்படி சாஸ்திரவித்தாக்யமிருப்பதை ராஜாங்கத்தாரும் அநுஸரிக்க வேண்டும். சாஸ்திரங்களை உல்லங்கனம் செய்த தர்மத்தை அதர்மமாகவோ, அதர்மத்தை தர்மமாகவோ மாற்றுவதற்கு எந்த ராஜாங்கத்துக்கும் உரிமை கிடையாது. இது விஷயத்தைப்பற்றி பல ஸ்ம்ருதிகளும் கூறுகின்றன.

அங்ஙனமே மிதாக்ஷரையில்.—

"யஸ்மின்தேசேய ஆசார: வ்யவஹார: குலஸ்திதி: |
ததைவ பரிபால்யோஸௌ..........உபாகத: ||
(யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதி 343-வது சுலோகம்)

எந்த தேசத்தில் ஆசாரமும், வ்யவஹாரமும், குலங்களும் எப்படி ஏற்பட்டிருக்கிறதோ அப்படியே அந்த தேசத்தரசன் அவைகளைப் பரிபாலிக்க வேண்டியது. அங்ஙனமே

"குலாநி ஜாதீ: ச்ரேணீச்ச கணான்ஜான் பதானபி |
ஸ்வதர்மாத் சலிதான்ராஜா வினிய ஸ்தாபயேத்பதி || [யாக்ஞ-361]

குலங்களையும், ஜாதிகளையும், ச்ரேணிகளையும் கூட்டங்களையும், நாட்டார்களையும், அவரவர்கள் தர்மங்களைவிட்டு மாறுதல் வைப்பதோடு ஸ்வதர்மத்திலிருந்து விலகினால் அவர்களை சிக்ஷித்து நல்ல வழியிலிருக்கும்படி ராஜா செய்ய வேண்டியது.

"யதா சாஸ்த்ரம் ப்ரயுக்தஸ்ஸன் ஸதேவாஸுர மானுஷம் |
ஜகதானந்தயேத் ஸர்வம் அன்யதா தத் ப்ரகோபயேத் || " [யாக்ஞ-356]

சாஸ்திர முறைப்படி அரசன் ராஜ்யபரிபாலனம் செய்வானேயானால் அப்போது தேவதைகள், அஸுரர்கள், மனுஷ்யர்கள் கூடின இந்த ஜகத்தை ஸந்தோஷப்படுத்துபவனாவான். இல்லாவிடில் அந்த ஜகத்தை கோபமடையும்படி செய்துவிட்டவனாவான்.

பிருஹஸ்பதியும் இதே விஷயத்தைக் கூறுகிறார்:—

"தேசஜாதி, குலாசார தர்மாஸ் ஸந்த்ய ப்ரவர்த்திதா: |
ததைவ தே பாலனீயா: ப்ரஜா ப்ராக்ஷு யதே ந்யதா ||

தேசம், ஜாதி, குலம், ஆசாரம், தர்மங்கள் இவைகள் வேத ப்ரமாண வாயிலாக நடத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அப்படியே பரிபாலிக்கவேண்டியது. இல்லாவிடில் பிரஜைகளுக்குள் குழப்பமுண்டாகிவிடும்.

அங்ஙனமே தேவலரும் கூறுகிறார்:—

"யஸ்மின் தேசே புரே க்ராமே த்ரை வித்ய நகரேபிவா |
யோயத்ர விஹிதோதர்ம: தம் தர்மம் ந விசாலயேத் ||

(தொடரும்)

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசம் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி, பி வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

Registered No. M. 2913.

THE ARYA DHARMAM.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 15th APRIL 1937. [No 15.

OURSELVES.

In announcing with pleasure to our readers that our Journal has come of age,' being in its twenty-second year of publication, we wish to inform, them that from this issue onwards, an English supplement will be one of its *regular* features. There have been, in the past, articles and letters in English occasionally published but the need for a regular supplement in English has been brought repeatedly to our notice by readers and sympathisers all over the country. It is hoped that with valuable contributions from its readers, the supplement will enable the Journal to make a wider appeal and have a larger volume of support

The Puri Conference.

Extracts from The Presidential address (continued)

The Congress President has pointed the finger of scorn at the Sanatanists and closed the door upon us stating "It is difficult to draw a line between social matters and those which have some religions sanction behind them. It seems to me improper to put a ban on such social changes." To the telegram sent by the Madras Sanathana Conference, that the Sanathanists are in entire sympathy with political aspirations and will co-operate with Congress provided Congress gives a pledge not to introduce any Bills opposed to Hindu religion, social or socio-religious practices in the Legislature, and oppose them if brought by others, Pandit Nehruji replied "Congress can give no pledges except these embodied in its resolution and election manifesto."

With how much of glory would the Congress President have covered himself and the Congress had he realised his position as the responsible head of a party claiming to represent the whole of India? His illustrious go-ahead lieutenants declare religion "a petty issue," insist upon the further tighening of the Sarada Act, and paint Sanatanists as reactionaries and enemies of freedom who deserve to be broomed away."

Our Swarajya is an ideal as well as a practical Swarajya and not the Utopian unworkable Sovietism which Mr. Nehru threatens to fling at us.

We declare to all the world that this is our policy: We want to be a full nation. we want freedom to determine for ourselves what is best for us, untrammelled by outside agencies. We want to be politically free, as free as the dominions for the present. We want to be economically free, with nobody to control the distribution of our material resources except ourselves. We want to put an end to this top-heavy administration which leaves nothing for the poor and needy children of the soil. We want to drive out poverty and unemployment and find food, clothing and shelter for the masses. Our aim is peace and happiness here as well as hereafter. Sweet Swarajyam in holy wedlock is sweeter Swadharma. Are we ripe now for anything more? Are we fit for Purna Swaraj? In the absence of the necessary military equipment, when shall we be in the map of the world? Will the plough and the pestle (and these exhaust our armoury) afford us any protection against our own internal dissensions and foreign invaders?

Under the urge of the godless western education, an unenviable class of persons arose, "Indians in blood and colour only, but English in tastes, opinions, morals and intellect." The Neo-Hindu, West-infatuated and West-deluded, began throttling every Dharma which he was unable to understand. He tabooed whatever had not the hall-mark of the West imprinted on it. He refused to see anything except through English glasses Dharma had to conceal itself in Mutts, temples, river banks and among our women. The women full bravely and stoutly resisted this vandalism.

A fussy micoroscopic minority have however succembed. Fired by the labels "Devis. heroines. patriots" they have been befooled into forsaking their parents, husbands, and even infants in arms. At the top of all these men and women, boys and girls with character yet to be formed have begun to huddle themselves in talkies and movies, witnessing skyclad and airclad boys and girls flirting. Malicious-bye plays caricaturing the following of Varnashrama Dharma and holding up it to ridicule are witnessed without shame or revulsion by Hindu audiences The infection is spreading. Passive indifference to Dharma, gradually developed in sneering sarcasm and even degenerated into unreasoned animosity and revengeful hatred.

The term Dharma is untranslatable. Sanatana Dharma is so called, because it has no limitation of time, place or people. Being a Sanskrit term, it is associated with the Hindu and erroneously assumed to be the exclusive property of the Hindu. It is a mistake. It is common to all nations, to all ages and to all climes.

समानं त्रिषुलोकेषु सर्वविस्थासु शाश्वतम् ।
सनातमतं सत्यं चीयते नापचीयते ॥

It consists of seven universal principles condensed in seven simple words— Ahimsa. Satyam, Asteyam, Shoucham, Indriya, Nigraham, Thyaga and Seva, non—injury by thought, word, or deed.

SWADHARMA AND VARNASHARMA DHARMA,

Swadharma means one's own Dharma. Varnashrama Dharma means the Dharma appertaining to Varnas and Ashramas. Varna is untranslatable. Ashrama means a particular order in life of a particular Varna. Varna is often translated as caste. It is a mistake, and has arisen from the confusion of *Jathi* with Varna. The two are not synonymous. There are but four Varnas. There never was and never will be a fifth Varna. नास्ति तु पंचमः । Manu has said "there is no fifth caste." On the contrary he has distinctly stated there can be as many jathis as there can be permumtations and combinations of mixed unions among the Varnas and the offspring of mixed unions. They are bound to be countless in numbers.

The Yajurveda Samhita in the Narmadha Prakarana mentions at least a dozen castes based on birth and not merely on occupation. The Dharma of the four pure Varnas is not the same as the Dharma of the numerous mixed castes Manu himself deals with them in sufficient detail and later SmrithiKaras amplify them. Similarly there are but four Ashramas and their respective Dharmas have also been meticulously defined.

RELATIONSHIP BETWEEN SWADHARMA, VARNASHRAMA DHARMA AND SANATANA DHARMA:

Is Swadharma the same as Varnashrama Dharma? Varnashrama Dharma as already stated is the Dharma of the four Varnas and the four Ashramas viz., Brahmacharin, Grahasta, Vanaprasta and Sanyasin. It draws in its orbit, as its name implies, the groups answering the terms Varna and Ashrama. It relates exclusively to them. It cannot take in but on the other hand virtually excludes all the other groups outside. It does not govern the groups who consider themselves as having never belonged to the Varnashrama groups such as Christians, Moslems etc

Time was, when the whole world was inside the Varnashrama group and all were Varnashramites. Immigration into distant lands and the inevitable fading of memories coupled with ignorance, and illusion brought about a total severance from the parent stock. There arose a necessity to distinguish the Dharma of the Varnashrama group from the Dharma of the other groups outside. In consequence, the term Varnashrama Dharma came to be used to indicate the Dharma of the groups inside it, while the term Swadharma was used to indicate the Dharma of not only that group but of every other group outside. Under the term Swadharma will be included the distinct Dharma of each of the innumerable mixed castes as well as of Moslems, Christians and every other caste and creed in the world, while Varnashrama will be confined only to the four Varnas and Ashramas. It is called Dharma in all cases and the central idea is to bring home the truth that the goal is the same for all the groups and each group can reach it by following its own group-Dharma. What a grand, noble and tolerant religion and philosophy!

The principles of Sanatana Dharma enunciated above are common to all the groups aforesaid while Swadharma or Varnashrama Dharma is the special Dharma of each binding on that group only. Swadharma and Varnashrama Dharma are Sanatana Dharma put into action and practice and made applicable to particular groups and orders. A Panchama who faithfully observes his Swadharma is far superior to a Brahmana who is false to his. One special feature may be noted in this connection. The moment that one by one's superior merit transcends Varna and Ashrama, one rises above Traigunyam and stands, wholly emancipated from its bondage. The fetters fall away from him of their own accord like the dew off the peacock's feather.

THE PURPOSE OF VARNASHRAMA DHARMA AND SWADHARMA AND THEIR POTENTIALITY.

It may be that Varnashrama Dharma insists upon numerous restraints and shackles and clogs liberty of action such as prohibition of sea-voyage, interdinig and intermarriage and antagonises the modern generation. It may be that it prescribes rituals and formalities which are irksome, uneconomical and enslaving. Is there any disciplinary code which is free from such charge? After all, these rules are primarily intended to school the people into discipline, patience capacity to endure and self-sacriflice from the cradle to the grave. You want that we should become a nation of stalwart warrior. Can there be a more effective training ground than the field of Varnashrama Dharma? Is there any other institution anywhere which combines in itself all the good points in Imperialism, Pacifism, Fascism and Socialism etc, and presents such fine and easy facilities for creating and fostering a spirit of unity, service, self-sacrifice and team work? Remember that these rules have been promulgated by the same sages and saints who have preached and practised the essential oneness and divinity of the soul in every created being.

(To be continued.)

The Godless Movement in the U. S. A.

(From the Bombay Press Service.)

An American correspondent of the 'World Service' gives interesting particulars about the Godless movement in the U.S.A. 'In recent times', he says, "Great strides towards Atheism have been taken in the United States. The attack of the Godless movement is directed in a subterranean campaign against the Christian churches. The number of subscribers to the "Militant Atheist" the organ of the Godless Movement, had increased from 1,000 at the beginning of 1933 to over 4 000 at the end of the same year, and since then has continued to increase rapidly. The editor is Julius Haldeman of Kansas, and the paper contains principally articles on Russia. One of the chief Godless associations is the "American Association for the Advancement of Atheism" which aims at removing all laws upon which Christain morals are based. It is also opposed to any form of religious instruction in the schools and demands the removal of all religious expressions from Government speeches and public decrees, such as those on Thanks-giving Day".

"The Youth Group of the Godless Movement, the "Junior Atheist League" accepts children between the ages of 7 and 17, and has prepared a programme for the propagation of atheism.

"Other associations are the "Society of the Godless", which opposes the sale of the Bible, and the "Anti-Bible Society" with the same object There are also the 'World Union of Atheists' the "Sons of Satan" "Damned Souls" etc.

"All these associations are guided by the slogan of Carl Marx: "Religion is opium for the people. The suppression of religion is necessary for the recovery of the prosperity of the people".

"The Godless Movement is imported from Russia and its propaganda is growing, as it is supported by huge organisations, and has great financial resources".

Statues of religious leaders as targets in rifle practice

(From the Bombay Press Service.)

The home industries in Tachkistan, Russia, are at present engaged in the whole-sale manufacture of life-size statues of Christ, St. Nicholas, the Russian patron Saint, the Holy Father, Moses, Mohamed, Martin Luther and other religious leaders and prophets. The statues are to be used by the Communist youth groups as targets in rifle practice, having been recommended as such by the Godless Organisation "for propaganda purposes."

தமிழ்நாடு வைதிக தர்ம சங்கம்.

தஞ்சைஜில்லா கும்பகோணம்.

ஷை சங்கத்தின் உப காரியதரிசி ரிடையர்டு இஞ்சினீர் எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரிகள் அகில பாரதீய வர்ணாச்ரம மகாநாட்டிற்கு, சங்கத்தின் [Delegate)க்ாக சென்றவாரம் சென்றிருந்தார். புருஷோத்தமக்ஷேத்திரம் என்றும் ஜகன்னாதபுரி என்றும் வழங்குகிற உத்கலதேசத்திலுள்ள இடத்தில் சென்ற மார்ச்சு 27, 28, 29 மூன்று தினங்களில் நடந்த விஷயங்களும், வித்வத்ஸபை, வேதபூஜை, Conference Proceedings, Subject Committee தீர்மானங்கள் முதலியவைகளில் வைதிக தர்ம ஸங்க சார்பாக பிரும்மஸ்ரீ சாஸ்திரியார் கலந்துகொண்டு Conference பொதுக்கூட்டத்தில் கொச்சி மகாராஜாவுக்கும் திருவனந்தபுரம் பெரிய ராணிக்கும், ஆலய விஷயங்களை ஸநாதன தர்ம முறையிலும் ஆகமப்படிக்கும் நடத்திவருவதற்காக அகில இந்திய ஆஸ்திக மகாஜனங்கள் நன்றி பாராட்டுவதைத் தெரியப்படுத்துவதற்காக ஒரு தீர்மானத்தை ப்ரேரேபித்து நிறைவேற்றி வைத்தார்.

தமிழ்நாடு வைதிக தர்மசங்கத்தின் தற்கால வேலைகளின் சேர்க்கைகளைப்பற்றியும் ஆண்டு பத்திரிகை 200-சேர்த்து சிலவில் அச்சிட்டு ஸம்மேளனத்திற்கு வந்திருந்த பிரதிநிதிகளெல்லாருக்கும் கொடுத்து தர்ம சேவைகளில் எல்லோருக்கும் அபிருசி உண்டாகும்படியும் செய்தார்.

இப்படி தர்மசிரத்தை உள்ளவர்களெல்லொருவரும் தங்கள் தங்கள் சக்தியானுசாரமிடைவிடாமல் அப்போதைக்கப்போது செய்து வந்தால் வைதிக தர்மம் வெகு சீக்கிரம் ஓங்கி வளரும் என்பதில் ஐயமில்லை.

ஒரு நிருபர்.

ஆலங்குடி.

ஸத்ஸங்க ஸபா,

தாத்ருஷு பங்குனி-மீ 9-ம் உ திங்கட்கிழமை முதல் ஆலங்குடி ஸத்ஸங்க ஸபாவில் ப்ரும்மஸ்ரீ ஸ்வாமிநாதசிவாசாரியார் அவர்களால் பவிஷ்யோத்திர புராணம் க்ஷேத்ரவைபவ கண்டத்திலுள்ள காசியாரண்ய மஹாத்மியமும் ஸ்காந்த புராணத்திலுள்ள காசியாரண்ய மஹாத்மியமும் ஆன இவ்வூர் ஸ்தல புராணமானது ஆரம்பிக்கப்பட்டு தினசரி நடந்து கொண்டு வருகிறது. ஆஸ்திகர்கள் அனைவரும் தவறாமல் வந்து ச்ரவணம் செய்கிறார்கள்.

ஒரு நிருபர்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு இவைகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்திரா [illegible]
Preprietor C. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீநம்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம். கம்பர் திருநாள் கொண்டாட்டம்.

திருவல்லிக்கேணி தமிழ் சங்கத்தின் 3-வது கம்பர் திருநாள் கொண்டாட்டம் 26-3-37 வெள்ளிக்கிழமை மாலை 3½-மணிக்கு திருவல்லிக்கேணித் தெள்ளிய சிங்கப்பெருமாள் கோயில் தெருவிலுள்ள தவன உத்ஸவ பங்களாவில் மிகச்சிறப்பாக ஆரம்பமாகியது.

கனம் ஜஸ்டிஸ் வரதாச்சாரியார், கனம் ஜஸ்டிஸ் லக்ஷ்மணராவ், திவான்பகதூர் வி. பாஷ்யமய்யங்கார், திருப்புகழ் மணி, டி. எம் கிருஷ்ணசாமி அய்யர், ஸ்ரீமான்கள் எம். சுதர்சன அய்யங்கார், ஆர். ராமஸ்வாமி அய்யங்கார்; கிருஷ்ணராவ் பான்ஸலே, தேவக்கோட்டை கே. திருவேங்கடத்தய்யங்கார், சீர்காழி சுந்தராச்சாரியார், டி. என். எஸ். ராகவாச்சாரி, மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் வி. சாமிநாதய்யர் பிரசங்க பூஷண வசிஷ்ட பாரதி, வித்வான் மு. ராகவ அய்யங்கார், ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், எஸ். ஆர். ரங்கநாதய்யர், கே. எஸ். விஸ்வநாதசாஸ்திரியார், எஸ். குமாரசாமிசெட்டியார் முதலிய பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர்.

காரியதரிசி பாடிய கடவுள் வாழ்த்துக்குப் பின்னர், சங்கத்தலைவரால் மதுரை அட்வகேட் ஸ்ரீமான் டி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கட்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டதுடன் அன்னாரை அவைத்தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஸ்ரீமான் வி. நரசிம்மாச்சாரியாரும் டாக்டர் சாமிநாதய்யரும் ஆமோதிக்க அய்யங்கார் அவர்கள் அங்கீகரித்துத் தலைமை தாங்கினர்.

கம்பர் திருநாளை வாழ்த்தி அனுப்பப்பட்டிருந்த பல பாடல்களைப் பாடியபின்னர் காரியதரிசி வருட நடவடிக்கை வாசிக்க, பலர் எழுதியனுப்பியிருந்த வியாசங்களின் சாராம்சங்களையும் எடுத்துரைத்த பின்னர் ஸ்ரீ-உப-வே ஸ்ரீ காழிச்சீராமவிண்ணகரம் கம்பராமாயணம் ஆர். சந்தான கிருஷ்ணய்யங்கார் அவர்களால் கம்பராமாயணப்பாக்கள் சில இன்னிசை அழகாகப் பாடப்பெற்றன.

தலைவர்கட்கும் உபந்யாசகருக்கும் சங்கத் தலைவர் பூமாலையிட்டார்.

அவைத்தலைவர் முன்னுரையாக அழகியதோர் சிறு பிரசங்கம் செய்தபின் ஸேதுஸம்ஸ்தான மகாவித்வானும் அண்ணாமலை யுனிவர்ஸிடி ரீடருமான பாஷா கவிசேகர ஸ்ரீ உப-வே ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி "கம்பர் கவித்திறம்" எனும் விஷயம்பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தார்.

தலைவர் முடிவுரையாகச் சற்றுக் கூறி முடிதலும் காரியதரிசி வந்தனோபசாரம் அளிக்க இரவு 7-மணிக்குக் கொண்டாட்டம் இனிது முடிந்தது.

சங்கத்தின் சார்பாக ஸ்ரீமான்கள் எஸ். வரதாச்சாரியார், கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், வி. நரசிம்மாசாரியார், வி. ராஜகோபாலாசாரியார், எம். சுதர்சனமய்யங்கார், டி. ஜி. ஆராவமுதய்யங்கார், எஸ். வெங்கடேசய்யங்கார், ஆர். கேசவய்யங்கார், அப்பர் அண்டு கம்பெனியார் என்றிவர்கள் கொடுத்த ஆற்றுமுப்பது ரூபாயை சங்க உபதலைவரான ஸ்ரீமான் வி. நரசிம்மாசாரியார் அவர்களால் 31-3-37 கைச்யாநஸந்தானமான ஸ்துதியுடன் ஸ்ரீ-உப-வே ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது.

ப. ரெ. திருமலை அய்யங்கார்.

திருவல்லிக்கேணி.

எம்பெருமானார் மஹோற்சவம்.

ஸ்ரீ ராமாநுஜர் என்ற எம்பெருமானார் வருஷத்திரு நக்ஷத்திரம் 4உ வருகிறபடியால அதை யநுஸரித்து அன்று முதல் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் எம்பெருமானார் மஹோற்சவத்தைக்கொண்டாட ஏற்பாடாகி இருக்கிறது. அன்று தொடங்கி பிரதிதினம் மாலை 6-30 மணிவரை சங்கக்காரியாலயமான திருவல்லிக்கேணி வெங்கடரங்கம்பிள்ளை தெரு 42 ல் அடியிற்கண்ட உபந்யாசங்கள் சிறந்த பண்டிதோத்தமர்களால் செய்யப்படும். எம்பெருமானாரும் ஆழ்வாரும்; எம்பெருமானாரும்வியாசரும்; எம்பெருமானாரும் திருமங்கை மன்னனும்; எம்பெருமானாரும் வால்மீகியும்; எம்பெருமானாரும் பாணினியும்; எம் பெருமானாரும் ஆளவந்தாரும்; எம்பெருமானாரும் பட்டரும்; எம்பெருமானாரும் தேசிகனும்; எம்பெருமானாரும் வரவரமுனியும்; எம்பெருமானாரும் ஆண்டாளும். அனைவரும் கேட்டு அகமகிழ்க.

ஸத்வித்யா பாடசாலை.

சைதாப்பேட்டை பிராஹ்மணத் தெருவிலுள்ள ஸ்ரீ சௌந்தரேஸ்வரஸ்வாமி கோயில் மண்டபத்தில் ஸ்ரீ ஸத்வித்யா பாடசாலையின் ஒன்பதாவது வருடக் கொண்டாட்டம் 4—4—37உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15 மணிக்கு மகாராஜ ராஜ ஸ்ரீ கமலாபுரம் ஆர். இராமஸ்வாமி ஐயங்கார்வர்கள் (மதராஸ் கவர்ன்மெண்டு செக்ரடேரி) தலைமையில் வெகு சிறப்பாக நடந்தது.

கல்வாவு, கடவுள் வாழ்த்து, தலைவர் முன்னுரை, பாடசாலை வருட அறிக்கை வாசித்தல், வாய்ப்பாட்டு, அபிநயம், சம்ஸ்கிருதத்தில் ஸம்பாஷணை, தமிழ் மொழி பெயர்ப்பு, பாட்டு, பஜனை கும்மி, கோலாட்டம் பரிசு அளிப்பு, தலைவர் முடிவுரை, வந்தனோபசாரம் முதலிய நிகழ்ச்சிக்குறிப்புகள் நன்கு நிறைவேறின.

இதில் விசேஷசிரத்தை எடுத்து உழைத்து வரும் ஸ்ரீமான் ஆர். வரதாச்சாரியாரும், பண்டித சுதர்சனாச்சாரியாரும் இறைவன் இன்னருள் நிரம்பப்பெற்று நீடூழி வாழ்வாராக.

ப. ரெ. திருமலைஐய்யங்கார்.

ஆத்தங்குடி.

ஸநாதன தர்ம மகாஸபை.

4-வது ஆண்டு நிறைவு விழா.

எல்லாம் வல்ல இறைவனருளால் ஷை சபையின் நான்காவதாண்டு நிறைவு விழா ஈச்வர ஷு சித்திரைமீ 11உ(23-4-37)வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-மணி முதல் நடைபெறும் அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்க 1937 ஷு மகாநாட்டுத்தலைவரும் சிறந்த சட்ட நிபுணருமான மதுரை ராவ்ஸாஹேப் பிரும்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் அக்ராசனம் வகிக்க இசைந்துள்ளார்கள். புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் தமிழ்வித்வான கனகராஜய்யர், "விஜயன்" ஆசிரியர் ஆ. வி. லெ. அருணாசலம் செட்டியார், மதுரையிலிருந்து தலைவர்களுடன் வரும் சிறந்த பண்டிதர்களும் உபன்யாஸம் செய்வார்கள். அவ்வமயம் ஆஸ்திகர்கள் அனைவரும் விஜயம் செய்யக்கோருகிறோம்.

அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் கிளைகள் செட்டிமார் நாட்டில் பல இடங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்பது தலைவர்களின் உத்தேசம். காலதேச வர்த்தமானங்களை யோசிக்குமிடத்து ஸநாதனிகள் கட்டுப்பாடுடன் வேலை செய்யவேண்டுமென்பதில் ஐயமில்லை.' எனவே 23-4-37 வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் இவ்விழாவில் ஸநாதனதர்ம பற்றுடையவர்கள் ஏராளமாக விஜயம் செய்து திட்டங்கள் வகுத்து ஆவன செய்யும்படி மிக்கப் பணிவுடன் வேண்டுகிறோம்.

ஜகதீசய்யர்,
காரியதரிசி.

புதுக்கோட்டை.

ஸ்ரீ வைதிகவர்த்தினீ ஸபா.

இச்சபைன் ஆதரவில் 11—10—36முதல் ஸ்ரீமத் பாகவத தசம ஏகாதசஸ்கந்தங்கள் வாகூர் பாஷ்யபாவக்ஞ,ஸ்மிருதிபூஷணம் பிரும்மஸ்ரீ வி. எஸ். வெங்கடராம சாஸ்திரிகள் அவர்களால் பிரவசனம் செய்யப்பட்டு வந்து 9—4—37ல் பூர்த்தி அடைந்தது. ஷை ப்ரவசனம் சமாபன தினத்தன்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான் ஆர் தக்ஷிணாமூர்த்தி அய்யர் அவர்கள் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு வந்தனம் கூறினார்கள். பிரும்மஸ்ரீ சிவஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் ஷை பிரவசனங்களை அனுஸ்யூதமாக ச்ரவணம் செய்தும் இவைகளுக்கு த்ரவ்யஸஹாயம் முதலியதும் செய்த ஆஸ்திகப்பிரபுக்களுக்கும் இச்சபையின் சார்பாக வந்தனம் அளித்தார்கள்.

இவைகள் முடிந்தபின் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு ஸன்மானங்கள அளிக்கப்பட்டு மங்கள வாத்தியத்துடன் அவர்களை ஜாகையில் கொண்டுபோய் விடப்பட்டது.

பிரகிருதம் பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள் புதுக்கோட்டையை விட்டு 10-4-37-ல் புறப்பட்டு திருவானைக்காவல் சென்றிருக்கிறார்கள். அங்கு இரண்டொரு தினங்கள் தங்கி பிறப்பட்டு வாகூர் செல்லுவார்களென்று தெரிகிறது அங்கு சில அலுவல்களை முடித்துக்கொண்டு மறுபடியும் இங்குவந்து ஸ்ரீமத் பகவத் கீதா ப்ரவசனமும், தத்தாத்ரேய புராணபிரவசனம், ஸூத்ர பாஷ்யம் முதலியது ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஜி. மலையப்ப சாஸ்திரிகள்.

பட்டத்தை விட்டு காங்கிரஸில் சேர்ந்தார்.

ஸ்ரீமான் திவான்பஹதூர் எம். கே. ரெட்டியார் தமது திவான்பஹதூர் பட்டத்தை விட்டு விட்டுக் காங்கிரஸில் சேர்ந்துகொண்டு விட்டதாகத் தெரிகிறது.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது
அசல் தங்க நகைகளைப்போன்ற "கண்ணுஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கண்ணுசாமி பத்தர்.
பெரியதெரு. கும்பகோணம்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சாஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R.Ramaswami Iyengar, Proprietor

21681

அநாவசியமாக

அவஸ்தைப்படுகிறீர்கள்



அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

ஒரேவாரத்தில் நீரழிவு குணமாகிவிட்டது.

தினசரி நூறுதடவை மூத்திரம் போனாலும் சரியாத தாகம் உண்டாகி வாதியானாலும் சரி இனி பயப்படவேண்டாம்.

மந்திரா சக்தி குளிகை.

நீரழிவினால் உண்டாகும், பெலஹீனம், இளைப்பு, நீரடைப்பு, அதிக மூத்திரம் எறும்பு மொய்த்தல் நீர்கடுப்பு, வெள்ளை, சீ வெள்ளை தந்திமேகம், அதிகபசி, இறகிறப்பு, மயக்கம், சரீரவெளுப்பு முதலிய சகல வெட்டைரோகமும் நீரழிவும் பூரண குணமாகிவிடும். பந்தயம் போட்டு பரீக்ஷிக்கலாம்.

100 குளிகை ரூ. 10 50 குளிகை ரூ. 5

விலாசம்:— கே. எஸ். பதி வைத்தியசாலை, பழனி.

வெளியூர்ச்செய்திகள்.

திருநெல்லிக்காவல்.

கும்பாபிஷேகம்.

மன்னார்குடி தாலூகா திருநெல்லிக்காவல் ஸ்ரீ நெல்வனநாதஸ்வாமி விமானவேலையும் ஸ்ரீ மங்களாம்பிகா விமானவேலையும். நாலு பிரகாரங்கள் நூதனமாக தளவரிசையும் டி பிராகாரங்கள் நூதனமாக தளவரிசையும் டி பிராகார நாலு சுற்றுமதிலும் சிமிண்டு பூச்சு வேலையும் புதிய வேலைபோல் பிரகாசிக்கும்படிக்கும் வர்ண வேலையும் திறமைவாய்ந்தவர்களினால் செய்யப்பட்டிருக்கிறது. ஈச்வர வருஷம் சித்திரைமீ 13உ கடஸ்தாபனம், 16உ புதன்கிழமை கும்பாபிஷேகம். காலம் 6-க்கு வேதபாராயணம், பிராம்மண சந்தர்ப்பணைகள், ஸ்ரீ குருபக்திக்கும் ஈச்வரபக்திக்கும் ஈடுபட்டும் ருக்வேத பிராமணருக்கு சம்பாவனையும் சகல வேதப்ராம்மணருக்கு சந்தர்ப்பணைகளும் செய்துவைத்து சகல புண்ணியம் அடையவும் ஈச்வர ப்ரஸாதம் கொடுத்துசொல்லப்பட்டது. சிவனாண்டார்கோயில் பண்ணை ஆர். ராமய்யர்வாளிடம் சொன்னவுடன் மனமகிழ்ச்சியுடன் அங்கீகாரம்செய்து கொண்டதுபோல் யஜுர்வேதம், ஸாமம், சுக்ல யஜுர்வேத பாராயண சகலவேத ஸம்பாவனைகளும் பிராமணசமூகத்தில் இயன்றவரையில் கொடுத்து வேதரக்ஷணம் செய்யும்பொருட்டும் ஸ்ரீமடம் முக்கிய சிஷ்யன் வி. எஸ். ராமச்சந்திரய்யரால் சகல பிராமண உத்தமர்களையும் தெரிவிக்கலான காரியம். யாகசாலையும் பரிபூர்ணமாக நடைபெறவும் பிரும்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்திர நான்கு வர்ணத்தார்களும் உதவிபுரிந்து பெரும்புண்ணியம் அடையவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. எஸ். ராமச்சந்திரய்யர்.
ஸ்ரீமடம் முக்யசிஷ்யன்

ஆழ்வார்திருநகரி.
புத்தனேரியில் புதுமை.

ஸ்ரீவேங்கடாசலபதி ஆவிர்ப்பாவம், திரளானக்கூட்டம், போலீஸார் பாரா.

ஸ்ரீ வைகுண்டம் தாலூகா புத்தனேரி என்ற ஊரிலுள்ள தம்புவையங்கார் ஸ்திரி கிருஷ்ணம்மாள் என்றபெண்பாலின்மீது சென்ற திங்களன்று ஸ்ரீவெங்கடாசலபதி ஆவேசம் வந்து தாமும் நாச்சியாரும் பூமியிருந்து விக்ரஹ ரூபமாய் எழுந்தருளப் போவதாக தாக சாதித்தருளினாராம். சிலமாதகாலமாகவே இம்மாது காலையில் ஓர் அறையில் கையில் ஒன்றுமின்றி சென்று பிரதிதினம் ஏதோ பூஜைகள் நடத்துவதாகவும் பூஜையானதும் திருப்பதி கோவிலிலிருந்து வருவதாக தீர்த்தம் துளசி புஷ்பம் ஸ்ரீபாதரேணு முதலியன கொடுப்பதாகவும் வதந்தி பலமாக நெடுக உலாவவே பல ஊர்களிலிருந்தும் திரளாக ஜனக்கூட்டம் இந்த அதிசயத்தை காணப் புத்தனேரிக்குப் புறப்பட்டுவிட்டனர். இப்படியிருக்கையில் சென்றபுதனன்றும் 6-4-37 இரவு 8–30க்கு மேற்படியார் வீட்டு பின்புறம் தோட்டத்தில் ஸ்வாமியும் நாச்சியாரும் விக்ரஹமாய் பூமியிலிருந்து கிளம்பப்போவதாகச் செய்தி பலமாய் பரவியது. கூட்டம் ஏராளமெனவும், கார்களும் வண்டிகளும் பூமாலைகளும் கணக்கிலடங்காதெனவும் தோட்டத்தில் ஓர் இடத்தில் திரைபோடப்பட்டிருப்பதாயும் அதற்கு போலீஸாரும் முக்யஸ்தர்களும் அமர்த்திக்கப்பட்டதாயும் இரண்டு சின்னக்கிரீடங்கள் மட்டும் பூமிக்குள்ளிருந்து கிளம்பியதாயும் அதற்குமேல் விக்ரஹம் வரவில்லையெனவும் மேலும் 2மணி நேரம் காத்திருந்தும் விக்ரஹம் வரவில்லையெனத்தெரிந்து ஜனக்கூட்டம் சென்றுவிட்டதாயும், மேலும் தினசரி பூஜையைக் காணிக்கவும் கிரீடத்தைப் பார்க்கவும் இன்னும் ஜனங்கள் சென்றுகொண்டிருக்கிறார்களெனவே சொல்லப்படுகிறது.

ந வி. நி.

படுதாஸ்திரீ மெம்பருக்கு தனி ஸ்தானம்.
புருஷருடன் கை குலுக்க மறுத்தல்.

பஞ்சாப் சட்டசபையில் முஸ்லீம் ஸ்திரீகளுக்கு பிரதிநிதியாக மிஸ்ரஷீதா என்றவள் சட்டசபை மெம்பராய் இருக்கிறாள். இந்த ஸ்திரீ ராஜ விசுவாஸம் பிரமாணம் செய்தபின் அக்ராஸனாதிபதியுடன் கை குலுக்க மறுத்துவிட்டாள். புருஷர்களுடன் சேர்ந்து உட்காரவும் மறுத்துவிட்டாள். இவளுக்கு ஒதுக்குப் புறமான இடத்தில் தனியாக ஆஸனம் கொடுக்கப்பட்டது. இவள் கருப்புத் துணியால் முகத்தை மூடிக்கொண்டு கோஷா முறையுடனே அவ்விடம் வந்தாள். இந்த ஸ்திரீயின் உறுதியை நாகரிக ருசித்த ஸ்திரீகள் கவனிப்பார்களா?

இந்தியா சட்டசபை டெல்லிக் கூட்ட முடிவு.

இந்தியாசட்டசபையின் டெல்லிக்கூட்டம் முடிந்துவிட்டது. மெம்பர்கள் தம் தம் ஊருக்கும் புறப்பட்டுவிட்டார்கள்.

கோய் அரிசி இறக்குமதித் தீர்வையை மீண்டும் சிறிதுகாலத்திற்கு விதிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஈச்வர வருஷ திருகணித பஞ்சாங்க வரவு.

சென்னை திருவல்லிக்கேணி ஜ்யோதிர்பூஷண, பிரம்மஸ்ரீ டி எஸ். விச்வநாத சிரௌதிகளின் பார்வையில் மேற்படியார் சிஷ்யர் யாழ்ப்பாணம் ஸ்ரீ.வி. ஸுப்ரமண்ய அய்யரவர்களால் கணிக்கப்பட்ட திருகணித பஞ்சாங்கம் வரப்பெற்றோம். இதில், அநேக தலைமுறைகளாகக் கையாளப்பட்டு வரும் கணித முறையில், சுத்தமாயும், சாஸ்திரீயமாயும், எல்லா ஸம்பிரதாயஸ்தர்களுக்கும் உபயோகப்படும்படியும் எல்லா விஷயங்களும் அமைந்திருக்கின்றன. வான சாஸ்திர ஆராய்ச்சியால் ஏற்பட்டமுறையே இங்கு விசேஷமாக ஆதாரமாகக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1934-ல் மைசூர் மஹாராஜாவின் ஆதரவில் நடந்தவாக்யசாஸ்திர மாநாட்டுத்தீர்மானங்களும், ஆறுவது ஜார்ஜ் சக்ரவர்த்தியாரின் ஜாதகமும் இதில் காணப்படுகிறது. ஒரே நாளில் இரண்டு விரதங்கள் சேர்ந்தால் அநுஷ்டிக்க வேண்டிய முறை முதலிய பல முக்யவிஷயங்களும் அடங்கியிருக்கின்றன. வி. ஸுப்ரமண்ய அய்யர் நிலையம், கட்டுவில், சாவகச்சேரி யாழ்ப்பாணம் என்ற விலாஸத்தில் கிடைக்கும்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
.Published bI Gopaladesikachariar, and aAY 'lyanasundaram.

ஆசிரியதர்மம்

22-4-1937

4 ம

22 16

215182

2481
215182
OFFICE OF THE REGISTRAR OF ... 1-MAY 1937 MADRAS

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ்யश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| பு 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ஹு சித்திரை-மீ 10௳ 1937-ஹு ஏப்ரல்-மீ 22௳ | வ 16 |

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0 தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0.
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

காங்கிரஸ் கார்யக்கமிட்டி.

தற்கால நிலைமையை யோஜிக்கும்.

வார்தாவில் 26ஆ-யன்று காங்கிரஸ் கார்யக் கமிட்டிக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அந்தந்த மாகாணச் சட்ட ஸபைத் தலைவர்களும் இதற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். தற்காலம் ஏற்பட்டுள்ள ராஜீய நிலைமையைப்பற்றி இக்கூட்டத்தில் யோஜிக்கப்படும்.

காந்திஜியுடன் யோஜனை.

ஹுடலியில் நடைபெறும் காந்தி ஸேவா ஸங்கத்தின் கூட்டத்தில் தலைமை வகிக்க ஸ்ரீமான் காந்திஜி அவ்விடம் சென்றிருக்கிறார். ஸ்ரீமான் படேல், பஜாஜ், ராஜேந்திரர் முதலிய முக்யத்தலைவர்களும் காந்திஜியுடன் ராஜீய நிலைமையை யோஜிப்பதற்காக அவிடம் போயிருக்கிறார்கள்.

பலி நிறுத்த பிரசாரம்.

கல்கத்தாவில் தடை.

கல்கத்தா காளிகோவிலில் பிராணி பலியிடுவதைத் தடுக்கச் சிலர் அங்கு பிரசாரம் ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்கள் அந்தக் காளி கோவிலுக்குச் சுற்றியுள்ள எல்லைக்குள் நுழையக்கூடாதென்று அலிப்பூர் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஒரு தடையுத்தரவு போட்டிருக்கிறார்.

நீல் சிலையை எடுக்கத்தீர்மானம்.

சென்னையில் மௌன்ட்ரோட்டில் வைக்கப் பட்டுள்ள கர்னல் நீல் என்ற வெள்ளைக்காரருடைய ஞாபகச்சின்ன உருவத்தை எடுத்துவிடவேண்டுமென சென்னை கார்ப்பரேஷன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. இந்தச் சிலையை எடுத்துவிட வேண்டுமென்று சிலவருஷங்களுக்கு முன் ஸத்யாக்ரஹம் நடந்தது. அந்தச்சிலையில் அடியில் கத்தியுடனே யால் இந்தியர்களை பயமுறுத்துவது போன்ற ஆக்ஷேபகரமான வாக்யங்கள் வரையப்பட்டிருப்பதே காரணமாகும்.

சென்னைத் தலைவர்களின் வேண்டுகோள்.

காங்கிரஸ் மந்திரிஸபை அமைப்பு விஷயமாயும், இந்தியா மந்திரி அறிக்கை விஷயமாகவும், சென்னைத் தலைவர்களான், ஸர். சிவஸ்வாமி அய்யர், கனம் சாஸ்திரியர், ஸ்ரீமான் கே. ஸ்ரீநிவாஸன் முதலிய அநேகர் சேர்ந்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் இந்தியாமந்திரியின் அறிக்கை திருப்திகாமாயில்லையென்றும், அது ஸமாதானத்திற்கு வழி செய்வதாயில்லையென்றும், விசேஷ அதிகாரங்களை முக்யமான அவஸர ஸமயங்களில் தவிர மற்ற ஸமயங்களில் பிரயோகிக்கவில்லையென்ற பழைய இந்தியா மந்திரி ஸர் ஹோர் கூறியபடி செய்தால் கூட காந்திஜி திருப்தியடைவாரென்று தெரிவதால் அதன் படியாவது செய்யவேண்டுமென்றும் மூன்று ஜட்ஜுகள் அடங்கிய ஆலோசனை ஸபைக்கு இவ்விஷயத்தை விடுவது உசிதமென்றும் அப்படியில்லாவிட்டால் ஸமஷ்டி கோர்ட் ஜட்ஜிகளிடமாவது இதை விடுவது உசிதமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஐரோப்பிய ஸ்திரீகளை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது.

தென்னாபிரிகா மசோதா வாபீஸ்.

தென்னாபிரிக்கா பார்லிமெண்டில், அத்தேசத்திய ஆசியாக்காரர்கள் ஐரோப்பியர்களையும், ஐரோப்பிய ஸ்திரீகளையும் வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாதென்று தடுப்பதற்காகக்கொண்டுவரப்பட்டிருந்த மசோதாவை பிரதம மந்திரி வாபீஸ் பெற்றுக்கொண்டு விட்டார். இந்தியர்கள் ஐரோப்பிய ஸ்திரீகளை வேலைக்கு வைத்துக்கொள்ளுவதில்லையென வாக்குறுதி கொடுத்திருக்கிறார்களாம். வேறு சில மசோதாக்களும் இப்படியே செய்யப்படும்.

கேரள நாயர்களின் கோபம்!

ஸமீபத்தில் நடைபெற்ற நாயர்களின் மஹாநாட்டில் திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தை ஆதரித்து ஓர் தீர்மானம் செய்யப்பட்டதுடன், கொச்சி ஸம்ஸ்தானத்திலுள்ள தார்மிகர்கள் இதைக்கண்டித்துப் பலமான பிரசாரம் நடத்துவதை ஆக்ஷேபித்தும் அவர்களுடைய பிரசாரம் மிகக் கடுமையாயிருப்பதால் அதனால் தீங்கு விளையுமென்று எச்சரித்தும் ஓர் தீர்மானம் செய்யப்பட்டதாம்!

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷித் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.)

காவ்ய ரத்நாகர!! விசாகப்பட்டணம் ஜட்ஜ் ஸ்ரீ உ. வே. எம். கிருஷ்ணமாசார்யாருக்கு [illegible] பட்டத்தை ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளும் 'காவ்யவிநோத' என்றதை ஆந்த்ரதேச பண்டிதஸபையுமளித்தது. பல்லாண்டுகளாக நீதிபதி பதவியிலிருந்துகொண்டே காவ்ய ஆராய்ச்சி செய்து பல நூல்களை வெளியிட்ட இவருக்கு மிக பொருத்தமான பட்டமளித்தவர்களையே மிக கொண்டாடவேண்டும். குணைக பக்ஷபாதிகளான ரூபவான் வினையோருக்கு நல்லவழிகாட்டிகளாக பல்லாண்டுவிளங்கும்படி வேண்டுகிறோம்.

ஏசுவுக்கே பொருக்கவில்லையா? மெக்ஸிகோவில் ஓர்புதியபாதிரி பதவியேற்புகொண்டாட்டத்தில் மாதாகோவில் பூமி உள்ளேசென்று பலருக்கு காயமுண்டாயிற்று. நாகரிகத்தின் பெயரால் பலர் கடவுளை மறந்து காட்டுமிருண்டிகள் போல் கேவல சுயநலத்திற்காக பலரை சித்ரவதை செய்வதும் நகரங்களை அழிப்பதும் ஏசுவுக்கே பொறுக்கவில்லை போலும்!

அஸப்யவார்த்தை!! கடலூர் பிராமண ஸபையில் ஓர் தேசிய பிராமணரைப் பேசச்சொல்ல, அவர் தான் யார்? ஸபை எத்தகையது? என்பதை மறந்து தான் கற்ற கிளிப்பிள்ளை பாடத்தை ஒப்புவித்தார். அத்தகையவர்களை இனி எந்த வைதிக ஸபையுமழைக்கலாகாதென கடலூர் ஸபை ஓர் பாடங் கற்பிக்கிறது!! மற்றவை எச்சரிக்கையுடனிருக்குமென நம்புகிறோம்.

யுக்தியுக்தம்! ஆனசொல் சிறியவனிடமும் கிளியினிடமும் ஏற்கலாமன்றோ? சென்னை படக்காக்ஷி ஆட்டக்காரி ஒருவள் அதைப்பற்றிபேசினாள். இத்தகைய விஷயம் நமது பத்ரிகையை அசுத்தப்படுத்தக்கூடாதெனினும் சில நற்சொற்கள் கவனிக்கத்தக்கன. ஆபாஸமான ஹாஸ்யம் காட்டக்கூடாது. ஓர் நல்ல நீதியை கற்பிக்கவேண்டும் என்பன போன்றவை. ஸமூஹம், குலஸ்திரீகள், சிறுவர்கள் எவ்வளவு கெடுகிறார்கள் என்பதை எவரும் கவனிப்பதில்லை. வாய்கிழிய பேச்சு! ஆடுபவர், கொட்டகைக்காரர், கதை எழுதுபவர் பத்ரிகை அனைத்தும் பணப்பேராசைகொண்டு நாட்டைக் கெடுக்கிறார்கள்!!

ஒன்றுபட்ட கொள்கைக்கே மதிப்பு! பேரளவிலும் பத்ரிகை அளவிலும் ஓரிரண்டு வாசாலர் வாயளவிலும் பல வைதிகஸபைகளுண்டு. எப்படியாவது இவைகளிருப்பது நமக்கு ஓர் பலமே! ஆனால் எல்லாம் ஒன்றுபட்ட அபிப்ராயத்தை வெளியிட்டால் அதற்கு நல்ல மதிப்புண்டு. தற்கால பத்திரிகையை நிரப்பும் தேசிய ஸபையுடன் சேர்ந்து வேலை செய்யவேண்டுமென பல ஸபைகள் விரும்புவது ராஜ்யதந்திரமே. நமக்கு ஒத்துவருகிறவரை அத்துடன் சேர்ந்து வேலை செய்வதை ஒருமித்து கூறுமா?

தந்த்ரமா? தளர்ச்சியா? இளங்கன்று ஜவஹர் ஓர்மூலையில் சீர்திருத்தத்தைச் சிதற அடித்தோமென்கிறார். ஓர் மூலையில் கிழவனார் காந்திஜீ ராஜிக்கு முயற்சிப்பேன். நான் காலணா அங்கத்தினர்கூட இல்லை என்கிறார்! உத்யோகமேற்காதபடி செய்தது தவறென உணர்ந்து பிகுவை விட்டு நெஞ்சுவதுபோல் பேசுவதின் பொருளென்ன?

இடமளித்தால் மடம் பிடுங்குவார்! சென்னை நீர்குமிழி மிலேச்ச மந்திரி, உருதுவை பொது பாஷையாக செய்தால் தன்ஜாதி தேசீய ஸபையில் சேருவதாகவும் முன்னர் 30 கோடி இந்தியருக்கு தேசியஸபை பிரதிநிதி என்று கூறி இப்போது மஹம்மதியரை அதிகமாக சேர்க்க முயலுவதின் கருத்தைக்கூறும்படி அறைகூவி அழைக்கிறார். ஏற்கனவே இத்தகைய இன்னும் பல அனர்த்தங்களை எதிர்பார்த்தே அநாவச்யமாக தேசிய ஸபை ஓர் சாராரிடம் சலுகை காட்டியதை கண்டித்தோம்!

யாருக்குக்கூச்சம்? குலஸ்திரீகளை கூத்தாடிகளாக்க ஓர்பிராமண வக்கீல் மனைவி சென்னையில் அரும்பாடுபடுகிறாள். குலஸ்திரீ பரபுருஷனுக்கு மனைவியாக நடிக்கையில் ஆலிங்கனாதிகளில்கூச்சமேற்படுகிறது. ஆதலின் சதிபதிகளே தம்பதிகளாக நடித்தால் நலமென அந்தம்மாள் உபதேசிக்கிறாள். பல புருஷர் தன்னைப் பார்க்கும்படி ஆடிப்பாடுபவருக்கு இந்த கூச்சம் ஏது? பக்திஎன்று முதலில் பேச்சால் துணிபு, அப்புறம்புருஷஸபையில் பேச்சு, அதன் பிறகுபாட்டு, அப்புறம் ஆட்டம், அதன்பிறகுதான்னவோ?

புதுச்சேரியிலுமா? கவர்னர்பேசும்போது தன்னூரிலும் சாரதா சட்டத்தைப் போன்ற சட்டம் இயற்றிவைத்தால்வெளியூரார் இங்கு வந்து விவாஹம்செய்யாதிருப்பர் என்று பேசுகிறார். என்னகாரணமோ இவர் இப்படி பேச? கலிதான் ஆட்டிவைக்கிறான்போலும்! ஆங்குள்ள ஆஸ்திகர் தன்சுதந்தரத்தைக் காக்க முயற்சிப்பாராக.

சைனுவினுபதேசம்! படக்காக்ஷிகளால் வருந்திமையை உணர்ந்த அரசாங்கம் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் காக்ஷிசாலைகளைத் திறக்கக்கூடாதென உத்திரவிட்டது அநேக தீங்குகளை அகற்றும். இவ்வுத்திரவை ஆமோதிக்காதவர் இரார்! ஓர் தேசத்தின் பணம் அநியாயமாக அழிடவும் குடும்பம் கெடவும் துர்மார்க்கம் விருத்தியாகவும் சுருக்கச் சொல்லின் கலியின் தூதனாகவும் வந்தது இந்தக் காக்ஷி. இதை ஓர் கட்டுப்பாட்டிக்குட்படுத்தாவிடில் அனர்த்த பரம்பரை வளரும்.

வஸந்த நவராத்திரி.

நவராத்திரி என்பது சுக்லபக்ஷம் பிரதமை முதல் நவமி வரையில் ஒன்பது நாளைக்கு ஸ்ரீ தேவியை ஆராதிக்கிறது. ஒரு வருஷத்திற்கு 4 நவராத்திரி உண்டு. அதாவது ஆஷாடம், ஆச்விஜம், மாகம், வஸந்தம் என்று நான்கு உண்டு. இம்மாதிரி நவராத்திரியை ஆராதிக்கும்படி தேவி பாகவதத்தில் நன்றாய் சொல்லியிருக்கிறது. அதாவது:—

சைத்ரேऽச்விநெ ததாஷாடே மாகேகார்யோ
மஹோத்ஸவ: |
நவராத்ரே மஹாராஜபூஜா கார்யா விசேஷத: ||

என்று ஸுதர்சன மஹாராஜாவைப்பார்த்து ஸ்ரீ தேவி பிரஸன்னமாய் சொன்னதாவது "உன்னுடைய அயோத்தியா நகரத்தில் நித்தியம் மூன்றுகாலம் பூஜையும், அஷ்டமி முதலிய புண்ணிய காலங்களில் விசேஷ பலியோடு பூஜையும், பக்தி பூர்வகமாய் நடக்கும்படி ஏற்படுத்துவதாய் சரத்ருதுவில்வரும் நவராத்திரியிலும் ஆஷாடம், சைத்ரம் ஆச்விஜம், மாகம் என்னும் இம்மாதங்களிலும், க்ருஷ்ணபக்ஷம், அஷ்டமி, சதுர்த்தசி என்னும் தினங்களிலும் என்னுடைய ஆகமத்தில் கூறியிருக்கும் பூஜையை அவசியமாய் அந்தந்த காலத்திற்கும் விதிப்படி விசேஷமாய் செய்துவா நீ விளங்கவேண்டும்" என்று அனுக்கிரகித்து அந்தர்தானமாயினள். பிற்பாடு அயோத்திமாநகரம்போய் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொண்டு தானும் தன்னுடைய பிரஜைகளையும் இந்த நவராத்திரியை அனுஷ்டிக்கும்படிசெய்தான். இது ஸ்ரீராமர் 14 வருஷம் காட்டுக்குப்போகவேண்டும் என்ற பிதாவின் ஆக்ஞை என்று கைகேயி சொல்லக்கேட்டு ஸ்ரீ ராமர், லக்ஷ்மணர், ஸீதை இவர்களுடன் காட்டில் வசித்துக்கொண்டிருக்கும்போது ஸீதா தேவியார் பொன்மான் ஒன்று வந்ததைப்பார்த்து அதை பிடித்துக்கொடுக்கும்படி ஸ்ரீ ராமரைவேண்ட ஸ்ரீராமர் அதை பிடிக்கப் போயிருக்கும் தருவாயில் இராவணனால் ஸீதையை விமானத்தில் ஏற்றிக்கொண்டு இலங்கையில் வைக்கப்பட்டிருக்கும்போது ஸ்ரீ ராமரும் லக்ஷ்மணரும் ஸீதையைத்தேடி பிரலாபித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நாரதர் வீணாகானத்துடன். அவர்கள் சமீபம்வர அவர்கள் நாரதருக்கு விதிப்படி உபசாரனைசெய்ய நாரதர் ஹே! ராமா! நீ விசாரப்படாதே. ஸீதாதேவியை இராவணன் எடுத்துக்கொண்டு இலங்கையில் அசோகவனத்தில் வைத்திருக்கிறான் லக்ஷ்மி அம்சமான ஸீதையை பாம்பை எடுத்து கழுத்தில் போட்டுக்கொண்டாற்போல், தன் குலமெல்லாம் நாசமடைய இராவணன் எடுத்துக்கொண்டு போனான். அவனை ஸம்ஹாரம் செய்வதற்காகவே நீ அஜமகாராஜாவின் வம்சத்தில் பிறந்தனை. அந்த ஸீதாதேவிக்கு இந்திரன் காமதேனுவின் பாலை ஓர் பாத்திரத்தில்விட்டு அனுப்பியிருக்கிறான். அவள் அதை பானஞ் செய்துகொண்டு பசிதாகமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். நீ விசாரப்படவேண்டாம். அந்த இராவணனை ஸம்ஹாரம்செய்ய நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன்கேள். நீ இந்த மாதத்தில் நவராத்திரி வருகிறபடியால் அதை விதிப்படி நடத்துவாய் என்று சொன்னார். இப்படி ஸ்ரீ நாரதபகவானால் சொல்லப்பட்டதைக் கேட்டுக்கொண்டு ஸ்ரீராமர் லக்ஷ்மணருடன் நவராத்திரி விரதத்தை விதிப்படிசெய்து கொண்டுவரும்பொழுது அஷ்டமி அன்று பூஜை, ஹோமம், பலிதானம் எல்லாம் ஆன உடன் அர்த்தராத்திரியில் தேவி பிரஸன்னமாய் ஸிம்மவாஹனத்தில் எழுந்தருளிவந்து அவர்களுக்கு தரிசனம் கொடுத்து சொன்னதாவது,

"நான் உன்னால் எப்போதும் ஸ்மரிக்கத்தக்கவள். நன்றாய் விதிப்படி பூஜிக்கத்தகுந்தவள். ஆகையால் சத்ருவை ஜயித்து வெற்றியடைந்து ஸீதையுடன் ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொண்டு வஸந்த காலத்தில் நவராத்திரி விரதனாய் பரமபக்தியுடன் என்னுடைய மஹாயஜ்ஞம் என்ற ஆராதனத்தை உன்னால் தவறாமல் செய்யவேண்டும் என்று ஆக்ஞாபித்தாள். அவ்விதமாகவே சத்ருவை ஜயித்து ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துகொண்டு நவராத்திரி யஜ்ஞத்தை ஸ்ரீ இராமர் அயோத்தியா நகரம் முழுவதும் நடத்தினதாக தேவிபாகவதம் மூன்றாவது ஸ்கந்தத்திலிருக்கிறது. இந்த மஹிமைபொருந்திய ஸ்ரீ தேவி நவராத்திரியானது 12-4-37 திங்கள்முதல் 20-4-47 செவ்வாய்முடிய ஒன்பதுநாள். இந்த நவராத்திரி திருவல்லிக்கேணி பெரியதெரு 53 நெ. கிரஹத்தில் தேவிபக்தர்களெல்லாருஞ்சேர்ந்து வழக்கம்போல் நடத்துகிறார்கள். இதேமாதிரி ஆஸ்திக கனவான்களெல்லோரும் இந்த வஸந்த நவராத்திரியை ஆராதித்து இஹபர ஸுகத்தை அடையவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

E. R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

கமலா எலக்ட்ரிக் கம்பெனி
முடுக்குத்தெரு, கும்பகோணம்.
எங்களிடம் எல்லாவிதமான எலக்ட்ரிக் சாமான்களும், ஏராளமாக ஸ்டாக்கிலிருப்பதால். விலை சரஸமாகக் கொடுக்கப்படும். ஒருமுறை எங்கள் ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.
R.Ramaswami Iyengar, Proprietor

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூக பஞ்சசதீ'

(8—4—37 தொடர்ச்சி.)

6. மேலே சொல்லிய பில ப்ரதேசத்திற்கு காமகோடியென்று பெயர் வந்ததற்கு அனேகம் காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. காமம் என்ற பதமானது பொதுவாக விருப்பத்தை (அதாவது, புருஷார்த்தத்தை) குறிக்கும். ஜனங்கள் விரும்பும் புருஷார்த்தங்கள் தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களென்கிற நான்கு வகைப்பட்டதாகச் சொல்லப்படும். இந்த வரிசையில் காமத்திற்கு அடுத்தாற்போல் (அடுத்த கோடியாகிய) மோக்ஷம் வருவதாலும், மோக்ஷமே (காமங்களுக்குள்) மற்ற புருஷார்த்தங்களைவிட உத்க்ருஷ்டமானதாலும் (பரமகோடியாயிருப்பதாலும்) காமகோடியென்ற பதமே மோக்ஷத்தையும் குறிக்கும். ஆகவே இந்த காமகோடி க்ஷேத்ரத்தில் ஒருவன் மேலே சொல்லிய காமங்களில் ஏதாவது ஒன்றையுத்தேசித்து உபாஸித்தாலும் அவனுக்கு அந்தகாமமானது கோடிமடங்காகக் கிடைப்பதுடன் மற்ற புருஷார்த்தங்களும் கிடைத்து, கடைசியாகிய (காமகோடியாகிய) மோக்ஷமும் (அவன் உத்தேசிக்காவிட்டாலும்) அவனுக்குக் கிடைக்கப்பெறுமென்று சொல்லப்படுவதால் அந்த க்ஷேத்ரத்திற்கு 'காமகோடி' என்று பெயர் ஏற்பட்டது.

'யத்ர காமக்ருதோ தர்மோ ஜந்துனா யேன கேன வா |
ஸக்ருத்வாபி ஸுதர்மாணும் பலம் பலதி கோடிச: |
தேனேதம் காமகோடீதி பிலத்வாரம் ப்ரஸித்திமத் ||
....
அத காமஸ் த்ருதீயார்த்த: புருஷார்த்தேஷு விச்ருத: |
தத் பாஸ்தாத் ச்ருதோ மோக்ஷ: கோடி சப்தேன சப்தித: ||
காமகோடி ச்ருதோ மோக்ஷ: புருஷார்த்த சதுர்த்தக: |
அர்த்தோऽதவா ச்ருத: காம: காமேசோ தனத: ஸ்ம்ருத: |
தத்கோடிதா பீடசக்தி: காமகோடீதி விச்ருதா ||'

7. அம்பிகையே அந்த காமகோடி யெனப்படும் பிலாகாச ஸ்வரூபிணியாயிருப்பதால் அந்தப்பெயரே அம்பிகைக்கும் ஏற்பட்டதென்று சொல்லப்படும்.

8. அம்பிகையின் ரூபங்கள் ஸ்தூல, ஸூக்ஷ்ம, பர ரூபங்களென்ற மூன்றில் ஸ்தூலமென்பது கரசரணாதி அவயவங்களையுடையது. ஸூக்ஷ்மமென்பது மந்த்ரமயமானது. பரமென்பது வாஸனாமயமானது. திரும்பவும் ஸூக்ஷ்மரூபமானது ஸூக்ஷ்ம, ஸூக்ஷ்மதர, ஸூக்ஷ்மதமமென்பதாக மூன்று பிரிவையுடையது. ஸூக்ஷ்மமென்பது பஞ்சதசீ வித்யாரூபமானது. ஸூக்ஷ்மதரமென்பது காமகலாக்ஷரரூபமானது. ஸூக்ஷ்மதமமென்பது குண்டலினீ ரூபம்.

9. இந்த காமகலையானது மிகவும் ரஹஸ்யமானதால் அதினுடைய விபரங்களை குருமுகமாகவே அறிந்து கொள்ளவேண்டியது. ஆயினும் அவைகளை 'காமகலாவிலாஸம்' என்ற க்ரந்தத்திலும் பாஸ்கராயர், ஆர்தர் அவலன் முதலான பெரியோர்கள் எழுதிய க்ரந்தங்களிலும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அம்பிகையின் காமகலா ஸ்வரூபமானது மூன்று பிந்துக்களும் ஹகாரார்த்தமும் சேர்ந்ததாகவும் அவையிருக்குமிடம்,

'அக்ர பிந்து பரிகல்பிதானனாம்
அன்ய பிந்து ரசித ஸ்தனத்வயீம் |
நாதபிந்து ரசனா குணாஸ்பதாம்
நௌமி தே பரசிவே பராம் கலாம் ||'

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீமதாசார்யாளும் 'ஸௌந்தர்ய லஹரி'யில்

'முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய தததோ
ஹரார்தம் த்யாயேத்யோ ஹரமஹிஷி தே மன்மத கலாம்!'

என்று சொல்லியிருக்கிறார்கள்.

50. மத்யே ஹ்ருதயம் மத்யே நிடிலம்
மத்யே சிரோऽபி வாஸ்தவ்யாம் |
சண்டகர சக்ர கார்முக
சந்த்ரஸமாபாம் நமாமி காமாக்ஷீம் ||

மத்யே ஹ்ருதயம் - ஹ்ருதயத்தின் மத்தியிலும், மத்யே நிடிலம் - நெற்றியின் நடுவிலும், மத்யே சிரோऽபி - சிரஸின் நடுவிலும், (முறையே) சண்டகர - ஸூர்யன், சக்ர கார்முக - இந்த்ரதனுஸ், சந்த்ரன் - சந்த்ரன் (இவர்களுக்கு) ஸமாபாம் - ஸமமான காந்தியுடையவளாய், வாஸ்தவ்யாம் - இருப்பவளான, காமாக்ஷீ - காமாக்ஷியை, நமாமி - நமஸ்கரிக்கிறேன்.

1. அம்பிகையானவள் பக்தனுடைய சரீரத்தில் சிரஸில் சந்த்ரனுடைய காந்தியோடும், நெற்றியில் இந்த்ர தனுஸ் மாதிரியும் ஹ்ருதயத்தில் ஸூர்யன் போலவும் காந்தியோடிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில்

'சிரஸ்தி்தா சந்த்ரநிபா பாலஸ்தா இந்த்ர தனுஷ்ப்ரபா |
ஹ்ருதயஸ்தா ரவிப்ரக்யா .... ||'

என்றும் 'லகுஸ்துதி'யில் பின்வருமாறும் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஐந்த்ரஸ்யேவ சராஸனஸ்ய ததநீ மத்யே லலாடம் ப்ரபாம்
சௌக்லீம் காந்திம் அனுஷ்ணகோரிவ சிரஸ்யாதன்வதீ
ஸர்வத: |
வஷாऽஸௌ த்ரிபுரா ஹ்ருதி த்யுதிரிவோஷ்ணாம்சோ:
[ஸதாऽஹஸ்திதா
சிந்த்யான் ந: ஸஹஸா பதைஸ் த்ரிபிரகம் ஜ்யோதிர்
[மயம் வாங்மயம் ||'

51. அதிகாஞ்சி கேளி லோலை:
அகிலாகம யந்த்ர தந்த்ர மந்த்ர மயை: |
அதிசீதம் மம மானஸம்
அஸமசரத்ரோஹி ஜீவனோபாயை: ||

அதிகாஞ்சி - காஞ்சீபுரியில், கேளிலோலை:- விளையாடுவதில் மிகவும் ப்ரியமுள்ளதாயும், அகில ஆகம யந்த்ர தந்த்ர மந்த்ர மயை:- எல்லா வேதங்களாயும் யந்த்ரங்களாயும் தந்த்ரங்களாயும் மந்த்ரங்களாயுமிருப்பதும், அஸமசர - மன்மதனுடைய, த்ரோஹி - சத்ருவான பரமசிவனுடைய, ஜீவனோபாயை:- ப்ராணனுக்கு ஆதாரமாயிருப்பதாயுமிருக்கிற ஒரு மூர்த்தியினால், மம மானஸம் - என்னுடைய மனதானது, அதி சீதம் - மிகவும் குளிர்ந்திருக்கிறது.

1. 'விஷமசர' என்ற பாடந்தரத்திலும் மன்மதன் என்றுதான் அர்த்தம்.

52. நந்ததி மம ஹ்ருதி காசன
மந்திரயந்தீ நிரந்தரம் காஞ்சீம் |
இந்து ரவி மண்டலகுசா
பிந்துவியன் நாத பரிணதா தருணீ ||

காஞ்சீம் - காஞ்சீபுரியை, நிரந்தரம் - இடைவிடாமல், மந்திரயந்தீ - வாஸஸ்தானமாக உடையவளும், இந்து ரவி மண்டல குசா- சந்த்ர ஸூர்யர்களை ஸ்தனங்களாக உடையவளும், பிந்து வியன் நாத பரிணதா - பிந்து, (வியத்) ஆகாசம், நாதம் இம்மூன்று விதமான வேறு ரூபங்களையுடையவளுமான, காசன தருணீ - ஒரு யௌவன ஸ்த்ரீயானவள், மம ஹ்ருதி - என்னுடைய மனதில், நந்ததி - ஆனந்தத்தோடிருக்கிறாள்.

1. சந்த்ர ஸூர்யர்கள் அம்பிகையினுடைய ஸ்தனங்களாகவும் நேத்ரங்களாகவும் (காதிலணிந்த) தாடங்கங்களாகவுமிருப்பதாகச் சொல்லப்படுவார்கள்.

'ஸூர்ய சந்த்ரௌ ஸ்தனௌ தேவ்யா: தாவேவ நயனே
[ஸ்ம்ருதௌ |
உபௌ தாடங்கயுகளம் இத்யேஷா வைதிகீ ச்ருதி: ||'

2. வ்யோம, பிந்து, நாத—இவை நாதப்ரம்ஹ வித்யையில் சொல்லப்படும் பதங்கள். * பரமசிவன் சுக்லபிந்து ரூபமாகவும் சக்தியானவள் சோணபிந்து ரூபமாகவுமிருப்பதாகவும் அவைகள் பரஸ்பரம் ப்ரவேசிப்பதால் மிச்ரபிந்துவானது உண்டாகி அந்த பிந்துவிலிருந்து வ்யோமமும் நாதமும் ஏற்பட்டு அவற்றிலிருந்து ஸகல ஜகத்தும் உண்டாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதின் விபரங்களை 'காமகலாவிலாஸம்', 'சாரதாதிலகம்' முதலிய க்ரந்தங்களில் பார்க்கவும். இம்மூன்றும் அம்பிகையின் பரிணாமங்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'வ்யோமேதி பிந்துரிதி நாத இதீந்துலேகா-
ரூபேதி வாக்பவதனூரிதி மாத்ருகேதி |
நி: ஸ்யந்தமான ஸுகபோத ஸுதாஸ்வரூபா
வித்யோதஸே மனஸி பாக்யவதாம் ஜனானாம் ||'
(அம்பாஸ்தவம்)

53. சம்பா லதா ஸவர்ணம்
ஸம்பாதயிதும் பவஜ்வர சிகித்ஸாம் |
லிம்பாமி மனஸி கிஞ்சன
கம்பாதடரோஹி ஸித்த பைஷஜ்யம் ||

பவஜ்வர சிகித்ஸாம்-ஸம்ஸாரமாகிற ஜ்வரத்திற்கு சிகித்ஸையை, ஸம்பாதயிதும் - அடைவதற்காக, சம்பாலதா ஸவர்ணம் - மின்னல் கொடிபோன்ற நிறமுள்ளதும், கம்பாதடரோஹி - கம்பா நதிக்கரையில் உண்டானதுமான, கிஞ்சன - ஒரு, ஸித்த பைஷஜ்யம் - ஸித்தௌஷதத்தை, மனஸி - மனதில் (மனதால்), லிம்பாமி - பூசிக்கொள்ளுகிறேன்.

1. ஸம்ஸாரமாகிற ஜ்வரத்தைப்போக்கும் ஸித்தௌஷதமாக அம்பிகையை இங்கு வர்ணிக்கப்பட்டது. அது மின்னல் கொடிபோன்ற ரூபத்தையுடைது. அது (கொடியென்ற உபமானத்தை மேலும் அனுஸரித்து) கம்பாநதிக்கரையில் படர்ந்தது. இப்பேர்ப்பட்ட ஔஷதத்தை (ஸாதாரணமான ஜ்வரங்களைப் போக்குவதற்கு ஔஷதங்களை மேலே பூசுவதுமாதிரி) தான் மனதால் பூசிக்கொண்டதாக கவி இங்கு வர்ணிப்பதினால் தான் அந்த ஔஷதத்திற்கு உபமிக்கப்பட்ட அம்பிகையை மனதால் எப்போதும் த்யானம் செய்வதைச் சொல்லப்பட்டது.

2. சம்பா என்றால் மின்னல். மின்னலானது கொடிபோல் தோன்றுவதால் அதை லதையாகச் சொல்லப்பட்டது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்.

ஈச்வர-ஸு சித்திரை-மீ 10உ

ஸநாதந தர்ம ஸம்ரக்ஷணம்.

நமது பாரத தேசத்திய தர்மத்தின் சரித்திரத்தில் சென்றவாரம் புதிய ஸம்பவமொன்று நிகழ்ந்தது. அன்னிய மதஸ்தர்களான பிரிட்டிஷாரின் ஆட்சியால் நமது ஸநாதன மதத்திற்கு எவ்வித உபத்திரவமும் ஏற்படாதென்று விக்டோரியா மஹா ராணியாராலும் ஏற்கனவே அதற்குமுன் பார்லிமெண்டாராலும் நமக்கு உறுதிமொழி யளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வுறுதிமொழியானது கால க்ரமத்தில் இப்போது மஹிமையடைந்து அது வெறும் பேச்சளவோடு நிற்கும் நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதை நாம் விவரிக்கத் தேவையில்லை. இந்த நிலைமைக்கு யார் காரணமாயினும், இதை இப்படியே விட்டு வைப்பது மிகுந்த அபாயத்திற்கு இடமாகுமல்லவா? இதைப்பற்றி தார்மிகர்கள் செய்ய வேண்டிய முயற்சிகள்பல இருந்தபோதிலும், இந்த ஸந்தர்ப்பத்தில் இவ்விஷயமாக ஓர் சிறந்த யோஜனை தோன்றியது. அதாவது நமது ராஜசக்ரவர்த்தியாரின் பட்டாபிஷேகம் ஸமீபத்தில் நடக்கப்போவதை முன்னிட்டு அந்தசுப ஸந்தர்ப்பத்தில் அவருடைய பிரஜைகளுக்கு மதவிஷயமாக ஏற்பட்டுள்ள அச்சத்தைநீக்கிப் பழைய கொள்கைப்படி மத நடுநிலைமை வாக்குறுதியைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாமென சில பெரியோர்களின் திருவுள்ளத்தில் உதித்த அபிப்பிராயமானது சென்றவாரம் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் நிறைவேறியது. மத ஸம்ரக்ஷணார்த்தம் ஏற்பட்டுள்ள ஸ்ரீ மடாதிபதியவர்களின் பிரதிநிதிகள் பலர் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீமத் ஆசார்யாளின் முன்னிலையில் சேர்ந்து இவ்விஷயமாக ஓர் வேண்டுகோளைத் தயாரித்து அனுப்பத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸம்மேளனத்திற்கு இந்தியாவிலுள்ள பிரபல மடாதிபதிகள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியிருந்ததுடன், வேறுசிலர் தங்களுடைய பூர்ண ஆதரவைக்காட்டி ஸ்ரீமுகமும் அனுப்பியிருந்தார்கள். ஸநாதன தர்மாபிமானிகளான நம் தலைவர்களிலும் அநேகர் அவ்விடம் நேரில் வந்திருந்தனர். ராஜ சக்ரவர்த்தியாருக்கு அனுப்பவேண்டிய வேண்டுகோளின் வாசகம் அக்கூட்டத்தில் வெகுவாகச்சர்ச்சை பண்ணித் தயாரிக்கப்பட்டது. இம்மாதிரி நம்தேசத்தில் பற்பல ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த நமது மதாசாரியர்கள் இவ்வாறு சேர்ந்து மதஸம்ரக்ஷணத்திற்கு முயற்சி செய்தது மிகவும் முக்யமான விஷயமாகும். இம்மாதிரி மதாசார்யர்களின் ஸம்மேளனமானது சாச்வதமாக அடிக்கடி நடக்கும் பொருட்டு ஒரு நிரந்தரமான ஸபையும் ஏற்பட்டுவிடவேண்டியது அவச்யமென்று இந்த ஸந்தர்ப்பத்தில் நாம் நினைப்பது தகுதியாகாதே.

நம்மவர்களாலேயே நமது மதத்திற்கு உபத்திரவம் விளைவிக்கப்படுகிறது. இது முக்யமாக வருந்தக்கூடிய விஷயம். இந்தக் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று ஒரு அன்னிய மதஸ்தர்களிடம் நாம் அபயம் தேடுவது அதிலும் வருந்தத்தக்கதே. ஆயினும், இவ்வாறு நடந்த முயற்சியைப் பற்றிச் சிலருக்குச் சிறிது அபிப்பிராய பேதமோ, அதிருப்தியோ ஏற்படக்கூடாத நிலைமையில் அந்த வேண்டுகோள் பத்திரம் தயாரிக்கப்பட்டிருப்பதை யாவரும் மெச்ச வேண்டியதே.

நமது ஸநாதன தர்மம் ஈச்வரனைப்போல் அநாதியானது. இதற்கு எக்காலத்திலும் நாசமிலடையாது. எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருப்பது. இது நம்தேச க்ஷேமத்திற்குமட்டுமல்லாமல், உலகக்ஷேமத்திற்கே உதவிபுரியக்கூடிய மஹிமை வாய்ந்தது. தேசத்தில் ஒற்றுமையும், ஸௌபிக்ஷமும், சாந்தியும் ஏற்பட ஸநாதன தர்மத்தைவிடச் சிறந்த ஸாதனமிருப்பதாக ஒருவரும் நிரூபிக்கமுடியாது. இந்த தர்மம் பிறரால் அழிக்கப்படக்கூடிய நிலையில் இல்லாதபோதிலும் சிற்சில ஸமயங்களில் அது மலினம் அடைவதைப்பார்த்து வருகிறோம்.

இந்தியாவில் ஸநாதன தர்மத்திற்கு விரோதியாக எவ்வளவோ மதங்கள்தோன்றி மறைந்தன. ஜைந, பௌத்தாதிகளுடைய ஆக்ஷிகால ஸம்பவங்களையும், பிறகு மஹம்மதியர் முதலியவர் செய்துள்ள ஹிம்ஸைகளையும் சரித்திர மூலமாக நாம் அறிந்திருக்கிறோம். ஸநாதன தர்மம் அளவற்ற துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், ஸநாதனத்தின் எதிரிகள் மறைய நேர்ந்ததேயல்லது ஸநாதனதர்மம் பாதிக்கப்படாமல் இன்றும் பிரகாசித்து வருகிறது. ஆகையால் பழைய சரித்ரங்களையும், தற்போதைய நிலைமையையும் ஆராய்ந்தால் ஸநாதனம் அழிவுள்ளதல்ல வென்பதும், அழிக்கப்படக் கூடியதல்ல வென்பதும் நிதர்சனமாகும். இந்த அம்சங்களை மடாதிபதிகளின் மஜர் நன்கு விளக்கிக்காட்டியுள்ளது.

இந்த முயற்சியின் மூலம் இந்தியாவில் கோடிக்கணக்கான மதாபிமானிகளின் உறுதியான எண்ணத்தை நமது சக்ரவர்த்தியாரும், அவருடைய மந்திரிகளும் இந்தியாவிலுள்ள மதவிரோதிகளும் தக்கஸந்தர்ப்பத்தில் ஆழ்ந்து கவனிக்கும்படியான ஓர் நிலைமை இதனால் ஏற்பட்டிருப்பது ஓர் விசேஷமென்பதில் தடையில்லை.

குறிப்புகள்.

நாயர்களுக்கு நற்புத்தி வரவில்லையா?

திருவாங்கூர் நாயர்களின் கூட்டம் நடைபெற்றது. அதில் திருவனந்தபுரம் ஆலயப் பிரவேச அதிக்ரமத்திற்கு ஆதரவு காட்டித் தீர்மானம் செய்யப்பட்டது. இத்துடன் அவர்கள் நிற்காமல் ஆலயப்பிரவேச விளம்பரத்தைக் கண்டிக்கும் ஆஸ்திகர்களையும் கண்டிப்பதாக மற்றொரு தீர்மானம் செய்யப்பட்டதாம். இது என்ன பயமுறுத்தல்? இதற்கு யார் பயப்படுவார்? மஹாராஜாவின் யதேச்சாதிகார உத்திரவைக் கண்டித்துப்பேச அங்குள்ள ஆஸ்திகர்களுக்கு அனேகக் கஷ்டங்களிருக்கலாம். அதனால் அங்கு பஹிரங்கமான எதிர்க்கிளர்ச்சி நடக்கவில்லை. ஆனாலும் அனேக ஆஸ்திகர்கள் இந்த அக்ரமத்தை வேண்டியவளவு கண்டித்து எதிர்பிரசாரம்நடத்துவதாகவே தெரிகிறது. திருவாங்கூர் எல்லைகளிலும், கொச்சி ஸம்ஸ்தானத்திலும் இந்தக் கிளர்ச்சி வலுத்துவிட்டதாக மேற்படி நாயர்களின் தீர்மானத்தால் விளங்குகிறது. கொச்சியிலும் மற்றவிடங்களிலும் நடக்கும் ஸநாதநிகளின் கிளர்ச்சியால் அங்கு இந்த சீர்திருத்தத்திற்கு முடிவுகாலம் வந்துவிடுமோவென்ற பயம் தோன்றியிருப்பதற்கு இது அறிகுறி போலும்? தங்கள் தீர்மானத்திலேயே எதிர்க்கக்ஷிப் பிரசாரம் வலுத்துவிட்டதை நாயர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நிற்க, நாயர்கள் தீண்டாதாருக்குப்பரிந்து பேச முன் வந்த காரணமென்ன? தாழ்ந்த வகுப்பார் இந்த நாயர்களை பாதாளத்தில் அழுத்திவிட அங்கு செய்த விரோதங்களை இவர்கள் மறந்துவிட்டார்களா? திருவாங்கூரில் செய்யப்பட்ட புதிய ராஜ்யச் சீர்திருத்தப்படி நாயர்களுக்கு நியாயமான பிரதிநிதித்வம் கிடைக்க வொட்டாதபடி தாழ்ந்த வகுப்பார் விரோதம் செய்யவில்லையா? கிறிஸ்தவர், யாப்பிளை வகுப்பு மஹம்மதியர், முதலியவர்களுடன் தாழ்ந்த வகுப்பார் சேர்ந்துகொண்டு நாயர்களுக்கு விளைவித்த உபத்திரவத்தை மறந்தார்களோ? இப்போது இவர்கள், தங்கள் ஸமூஹப் பகைவராகக்கருதிய தீண்டாதாருக்குப் பரிந்துபேச முன்வந்த காரணமென்ன? தீண்டாதவரை நேசித்து அதன்மூலம் ஸர்க்காரின் பிரீதியைப்பெற எண்ணமா? நாயர்கள் இந்த விளம்பரத்திற்குத் தாளம் போட முன்வந்ததற்கு தக்ககாரணம் என்ன?

முஸ்லீம் ஆதிக்யம்!

சில தினங்களுக்குமுன் டெல்லியில் நடந்த ஹிந்துமஹாஸபை கார்யக்கமிட்டிக் கூட்டத்தில் ஓர் முக்ய விஷயம் யோஜிக்கப்பட்டதாகத் தெரிகிறது. புதிய அரசியல் சட்டம் வந்த காரணமாகவும், வகுப்புத்தீர்ப்புக் காரணமாகவும், பல மாகாணங்களில் ஹிந்துக்களின் உரிமைக்குப் பாதகம் ஏற்படுமென்று ஹிந்துஸபை வெகுநாளாகவே கிளர்ச்சி செய்து வருகிறது. காங்கிரஸ் இவ்விஷயத்தில் கோணல்புத்தி காட்டிவந்தபோதிலும் ஹிந்து மஹா ஜனங்கள் ஹிந்து ஸபையின் கக்ஷியில் கவனமும், ஆதரவும் காட்டிவருவதை நாம் அறிவோம். பஞ்சாபிலும், வங்காளத்திலும் காங்கிரஸிடம் பலத்த அதிருப்தி ஏற்பட்டிருப்பதாலேயே சென்ற இந்தியா சட்டஸபை எலெக்ஷனிலும், தற்போது நடந்த மாகாணச் சட்டஸபை எலெக்ஷனிலும் காங்கிரஸுக்கு மெஜாரிடி கிடைக்க வழியில்லாமல் போய்விட்டது. அங்குள்ள ஹிந்துக்கள் பிளவுபட்டிருப்பதே இதற்குக் காரணம்.

தற்போது எலெக்ஷன் முடிந்து மந்திரி ஸபையும் ஏற்பட்டிருப்பதிலிருந்து ஹிந்து மஹாஸபையின் பயம் ஒருவாறு நியாயமென்றே பலர் நினைக்கக்கூடும். பஞ்சாப், வங்காளம், அஸ்ஸாம், ஸிந்து, எல்லைப்புறம், ஆகிய மாகாணங்களில் முஸ்லீம்களே முதன் மந்திரியாக வந்து மந்திரிஸபை அமைத்திருக்கிறார்கள். மந்திரிப் பதவிகளிலும் மஹம்மதியர்களே அதிகம் நியமனமாகியிருக்கிறார்கள். சட்டஸபைத் தலைமைபோன்ற முக்ய பதவிகளையும் மஹம்மதியர்களே அடைந்திருக்கிறார்கள். ஹிந்துமஹாஸபை நினைப்பதுபோல் ஏறக்குறைய வட இந்தியா முழுவதும் மஹம்மதிய மந்திரிகளின் நிர்வாஹத்திற்கு உள்பட்டுவிட்டது நிஜமே. சில மாகாணங்களில் காங்கிரஸ், உத்யோகம் ஏற்க மறுத்த காரணத்தாலும் இந்த நிலைமை ஏற்பட்டதென்று ஹிந்து ஸபைக் கார்யக்கமிட்டி அபிப்ராயப்படுகி

243

Supplement to Arya Dharmam, 22—4—1937.

MEMORIAL.

The following Memorial has been submitted to His Majesty the King Emperor on behalf of the Matadhipathies in India.

MAY IT PLEASE YOUR MAJESTY,

BY the gracious blessings of God, Your Majesty is the head of a great Empire over which the sun never sets. The Indian sub-continent inhabited by about 350 millions is the most valuable part of the British Empire. Necessarily, the well-being of this vast Indian Nation must be a matter for Your Majesty's deep concern and affectionate care.

ON the eve of Your Majesty's Coronation, we have considered it necessary to apprise Your Majesty of the real state of affairs in India, with a view to secure, at any rate, for the Hindu population, the same toleration for their religious beliefs and practices, absolutely free from interference by the secular Government of India, as they have hitherto enjoyed. As accredited Spiritual Heads and Preceptors of the vast majority of the Hindu subjects of Your Majesty and as humble servants of the Supreme Being charged with the duty of preserving the Hindu religion and civilisation for the benefit of mankind, we have considered it necessary to commend to your Majesty a well-considered line of action which will enable Your Majesty to confer a boon to the whole world, leading it to peace and contentment.

YOUR Majesty in England, is the supreme governor in all spiritual and ecclesiastical matters as well as temporal. Yet Your Majesty and Your Majesty's predecessors on the throne of England have always afforded to "*unestablished* religion necessary protection from wrongful acts, though it is free from State control as regards *doctrine, government* and *discipline.*" The civil power recognises, and has always recognised, the right of all to follow the dictates of their conscience in the religious opinions which they hold, and statutory facilities have been offered in England providing generally for liberty and protection of religious worship, and the tenure of property held for the benefit of any religious body. It is well known that the civil power in England has never interfered with, and has been regarded as having no power to interfere in, matters affecting religion and religious beliefs, much less to legislate in regard to the same. Toleration of religious beliefs, nay, even their very protection, has at all times been considered as a fundamental creed of good Government, ancient and modern. Our own Vedic civilisation and religion has always recognised this cardinal principle, and declared in emphatic terms that the monarch of a newly subjugated territory *shall preserve the social and religious usages and the state of the classes already obtaining, and shall maintain the established laws of the provinces, of the castes and of the families.*

USAGE in matters of religious observances transcends the law in India as in every country which has an orderly and constitutional Government. What was declared by Manu in India was proclaimed by Asoka in his famous Edict, and by Emperor Constantine in Rome sixteen centuries ago. We read in Gibbon that the Emperors Constantine and Licinus proclaimed to the world that they granted "free and absolute power to all, of following the religion which each individual thinks proper to prefer, to which he has addicted his mind, and which he may deem the best adapted to his own use." Till recently Your Majesty's Government have been adopting the principle of religious neutrality, and of non-interference in religious affairs and religious observances of the Hindus

SECTION 18 of the East India Company Act, 1780, ran as follows :—

The authorities of fathers and masters of families among the natives to be preserved, etc.

"AND in order that regard should be had to the civil and religious usages of the said natives, be it enacted that the rights and authorities of fathers of families and masters of families according as the same might have been exercised by the Gentu or Muhammadan law shall be preserved to them respectively within their said

families; nor shall any acts done in consequence of the rule and law of caste, respecting the members of the said families only, be held and adjudged a crime, although the same might not be held justifiable by the laws of England."

SECTION 12 of the East India Company Act, 1797, was in similar terms.

"AND in order that due regard may be had to the civil and religious usages of the natives, be it enacted that the rights and authorities of fathers of families and masters of families, according as the same may be exercised by the Gentu or Muhammadan law, shall be preserved to them within their families respectively, nor shall the same be violated or interrupted by any of the proceedings of the said courts, nor shall any act done in consequence of the rule of the law of caste, so far as respecting the members of the family only, be deemed a crime, although the same may not be justifiable by the laws of England."

THE said sections were kept intact when the Government of India Act of 1919 was passed, and were retained in 1927 when the Statute Law Revision Act was passed. Lord Justice James in 14 *M. I. A.* observed: "*In India, however, almost all the great religious communities of the world exist side by side under the impartial rule of the British Government. They co-exist as separate and very distinct communities, have distinct laws affecting every relation of life, and the difference in religion pervades and governs all domestic usages and social relations*". The various Civil Courts Acts and Regulations in the various provinces contain provisions founded upon the parliamentary legislation of 1780 and 1797, and they have always been regarded as constituting one of the most important guarantees given to the people of India ever since the advent of British rule. The Proclamation of 3—12—1806 declared: "That the same respect which has been invariably shown by the British Government for their religion and their customs will always be continued, and that no interruption will be given to any native, whether Hindu or Muhammadan, in the practice of his religious ceremonies". Unconscious disregard of religious sentiment led to the mutiny of 1857 and to the transfer of Government from the Company to the Crown.

THE above points clearly to where the danger zone lies in Indian politics and [illegible] how Your Majesty's Indian subjects are very sensitive in religious and socio-religious matters.

FULLY conscious of this fact Your Majesty's Great-grandmother, with the advice of her able ministers, gave solemn assurance of non-interference in religious matters to her Indian Subjects in the Royal Proclamation of 1858. "We declare it to be our Royal will and pleasure that none be in any wise favoured, none molested or disquieted, by reason of their religious faith and observances, but that all shall alike enjoy the equal and impartial protection of the law, and we do strictly charge and enjoin all those who may be in authority under us, that they abstain from all interference with the religious belief or worship of any of our subjects, on pain of our highest displeasure." This fundamental right of the Indian people, guaranteed by successive Acts of Parliament and successive Royal Proclamations ever since the British Rule established itself in India, had apparently been considered to be unnecessary to be *specifically retained* in the present Constitution of India under the Act of 1935. But grave fears have been entertained that the repeal of the ancient statutes of Parliament safeguarding their religious usages and practices to Your Majesty's subjects may be understood as denying to Your Majesty's subjects their fundamental rights guaranteed by successive Royal Proclamations.

FOR the first time, S. 301 was introduced as an amendment in the House of Lords on 18—7—35, and it was passed without any proper consideration. The matter was never before the Simon Commission, or the Round Table Conference, or the House of Commons until after 18—7—35, and never before the Joint Parliamentary Committee. Neither the White Paper, nor the draft Government of India Bill, contained any reference to the intended repeal. Though it may be suggested for purposes of argument that the recognition of autonomy in the provinces and the provision for "special responsibilities" in the Act of 1935 may involve the continuance of the same beneficent policy through the Governors of the various Provinces, it is eminently just and desirable, for the happiness of millions of Your Majesty's subjects, that Your Majesty may be pleased to reaffirm the

243

guarantees given in the Proclamation of 1858, *and not leave the country to be disturbed in matters of religion and religious usages by mixed legislatures, chosen by the people for secular purposes,* whose equipment to understand and apply religion and religious principles aright was not the basis for their choice.

THE present situation is this. A section of Your Majesty's Indian subjects, though numerically small, occupies positions of vantage and influence, is vociferous, and commands the press; and while it may claim to represent the Indian Nation for political and economic purposes, it puts forward an unfounded and untenable claim to represent the nation for social, religious, and cultural purposes also, though wholly unqualified therefor by their utter ignorance of the basic principles of Vedic religion and culture, and of the fabric of Society based on it. Their misguided action in matters of religion and religious usages has had no real effect on the masses. They do not inform themselves of the real state of the country; they misinterpret the social and religious ideals of the people and attempt to obtain legislative sanction to their mistaken projects of reform, Not content with optional legislation, they sometimes seek to impose on the unwilling masses social and religious legislation of a compulsory character.

WHAT was regarded as a safeguard in the Indian Constitution, viz., the need to obtain the previous permission of the Governor-General for the introduction of Bills dealing with religion or socio-religious matters (and what proved to be a real safeguard in regard to the Temple Entry Bill, has now to be inferentially extracted from the unwritten constitution and fundamental rights, after the repeal effected by S. 301 of the Government of India Act. The absence of such an express safeguard would encourage the few to constantly harass the people and disturb the tranquility of the country by their attempt to obtain legislative sanction for their fantastic attempts to 'reform' Hindu religion, culture, and social structure. Your Majesty's Indian subjects believe that, in religious and socio-religious matters, they are governed by Divine Laws binding alike on the rulers and the ruled, and they would be obliged to resist to their utmost any man-made laws which contravene or attempt to modify them. The reformer's propensities, of which we have had very bad experience in the past, when there were express safeguards, have created a feeling of distrust and insecurity at present in the minds of Your Majesty's Hindu subjects; and it will not be allayed unless Section 301 of the 1935 Act is repealed, and a Royal Proclamation issued to the effect that no Legislative or Executive authority in India shall interfere with Religious or Socio-religious matters, except for remedying wrongs that have already been done in respect of these matters in the past, or except when they are clearly and unambiguously against public order or morality.

THE keystone of Vedic religion is peace and happiness to the whole world, and it is our earnest recommendation to Your Majesty, in these days of unrest in Europe and elsewhere, that sufficient safeguards may be provided against hasty and ill-considered religious and social legislation in India, so that the peace and social fabric of the country will not be disturbed. Sir John Woodroffe, a great scholar and judge, who devoted his life to a real understanding of the Vedic culture and philosophy says: "Her religion is the aspiration to Spiritual Consciousness. Her whole Dharma or Law is founded on it. Her philosophy, art and literature have the same upward look. Her progress is spiritual progress. Her founding of life upon this exalted conception, her urge towards the spiritual and the eternal, constitute the distinct value of her civilisation, and her fidelity to her ideal makes her people a nation apart from humanity. It is necessary that the Indian social organism be conserved."

THE conservation of ancient Indian civilisation in its natural purity and grandeur is therefore dictated by sound rules of good government.

BY the Grace of God, Your Majesty has the proud privilege of being in a position to preserve and help a civilisation which will contribute to the spiritual and cultural development of the world, and restore peace and happiness, and it is our earnest hope that Your Majesty may be pleased on the eve of Your Majesty's Coronation, to issue a Royal Proclamation, reassuring the pledges and guarantees given to the Indian people in the famous Proclamation of 1858, which is still remembered in every Indian home, and it is further hoped that Your Majesty may, with a view to restore confidence in Your Majesty's

4

subjects, further declare that there shall be no legislative or executive interference in religious or socio-religious matters, except where the interests of public morality and order, unambiguously and imperiously demand it.

LOYALTY to the Ruler for the time being is a fundamental creed of the Vedic religion, because the King alone can protect the Dharma. Such guarantee will go a great way towards ensuring the loyalty of the people.

WE conclude with the prayer which every devout Hindu utters every morning:—

"MAY the Rulers be happy who rule their subjects according to Justice and Vedic Dharma; and may the subjects prosper under their rule! and may the whole world be peaceful!!"

APRIL, 1937.

றது. ஏற்கனவேயே "சிறுபான்மையோர்" என்ற வியாஜத்தில் முஸ்லீம்களுக்கு ஏராளமான சலுகை காட்டப்படுகிறது. சட்ட ரீதியாகவும் பாதுகாப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. முஸ்லீம்களின் நன்மைக்காகவே கவர்னர்களுக்கு விசேஷாதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாக இச்சமயத்தில் இந்தியா மந்திரியும் தந்திரமாகப் பேசுகிறார். இவ்வளவு பின்பலங்களைக்கொண்டு முஸ்லீம்கள் எல்லைமீறி தங்களுடைய பாத்யங்களை வற்புறுத்த தைர்யம் பெற்றிருக்கிறார்கள். இப்போது அநேக மாகாணங்களின் நிர்வாகமும், கவர்னர்களின் பின்பலமும் அவர்களுக்குக் கிடைத்திருப்பதைக்கண்டு ஹிந்துமஹாஸபை கவலையும் பீதியும் அடைவதில் நியாயமிருக்கலாம்.

இதற்காக ஹிந்துஸபை, இந்தியாவிலுள்ள ராஜீயக்கக்ஷிகளுடனும், ஹிந்துக்களுடனும் ஒற்றுமைப் பட்டு தனது இயக்கத்தை பலமாக்கி எல்லா பிரதிநிதி ஸ்தானங்களையும் கைப்பற்றிவிட விரும்புகிறது. ஈசன் இதற்குத் துணைபுரிவாராக.

கொச்சி மஹாராஜாவின் ஆஸ்திக்யமும் தைர்யமும்.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச ஆதரவு ஆடம்பரங்கள் குறையக்குறைய, அந்த விளம்பரத்திற்கு எதிர்ப்பு அதிகரித்துவருவது பிரகாசிக்க ஆரம்பித்திருக்கிறது. கொச்சி மஹாராஜா இந்த அக்ரமத்தை ஒப்பாமல் எதிராக இருந்துவருவது பிரஸித்தமே. இப்போது அவருடைய செய்கை யொன்றின் மூலமாக ஆலயப் பிரவேச எதிர்ப்புக்கு ஒரு புதிய சக்தியுண்டாகியிருக்கிறது. திருவாங்கூர் கோவில்களில் பூஜைசெய்யும் பூஜகர்கள் கூடல் மாணிக்கம் என்ற கோவிலில்வந்து பூஜை செய்த விஷயமாக ஏற்கனவே பெரிய விவாதம் நடந்துவந்ததல்லவா? தீண்டாதார் பிரவேசிக்கும் கோவிலில் பூஜைசெய்யும் பூஜகர்கள் இந்தக் கோவிலிலும் கலந்துக்கொண்டு கோவிலை அசுத்தபடுத்திய காரணத்திற்காக மேற்படிக் கோவிலுக்கு ஸம்ப்ரோக்ஷணை முதலிய சுத்திகார்யங்களைச் செய்யும்படி ஏப்ரல்மீ 15உயன்று கொச்சி மஹாராஜா ஒரு உத்திரவு பிறப்பித்துவிட்டார் இது திருவாங்கூரில் பெரிய பரபரப்பையும் திகிலையும் உண்டுபண்ணியிருப்பதாகத்தெரிகிறது. இந்த உத்திரவுமூலம் அங்கு அநேக விசேஷங்கள் ஸம்பவிக்கக் கூடுமென்று சொல்லப்படுகிறது.

கொச்சி மஹாராஜாவின் இந்த உத்திரவை திருவாங்கூர் சீர்திருத்தவாதிகள் ஆக்ஷேபித்தபோதிலும் அது அவர்களுக்குப் பெரிய அதிர்ச்சியை இப்போதே கொடுத்துவிட்டதாகத்தெரிகிறது. அடுத்துள்ள ஒரு ஸம்ஸ்தானமே தீவ்ரமாயும், பிடிவாதமாயும், திருவாங்கூர் விளம்பரத்தை எதிர்த்து நிற்கிறதென்றால் இதைவிட சீர்திருத்தவாதிகளுக்கு வேறு பயம் என்னவேண்டும்? கொச்சி மஹாராஜாவின் ஆஸ்திக்யத்தையும், தைர்யத்தையும் இந்தியாவிலுள்ள தார்மிகர்கள் யாவரும் பாராட்டுவார்களென்பதில் ஐயமில்லை. இந்த உத்திரவு மூலம் அங்கு ஏற்பட்டுள்ள ஒரு நெருக்கடி மேல் மேலும் எப்படி முற்றுகிறதென்பதை தேசம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்துநிற்கிறது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Amalapuram, East Godawary.

தென்னிந்திய மடங்கள் பிரதிநிதிகள் மகாநாடு.

தென்னிந்திய மடங்களின் பிரதிநிதிகள் மகாநாடொன்று 18உ பிற்பகல் ஸ்ரீ அஹோபிலமடத்துத் தசாவதார சந்நிதியில் நடைபெற்றது. ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்ம சடகோப யதீந்திர மகாதேசிக ஸ்வாமிகள் தலைமை வகித்தார். ஸ்ரீ காஞ்சீ காமகோடி மடம் ஏஜெண்டு ஸ்ரீமான் குப்புசாமி அய்யர் பண்டித யமுனலால் தாசிரா, பிரம்ம-ஸ்ரீ வி. லக்ஷ்மீநரசிம்மம், பிரம்மஸ்ரீ ஹரிகிருஷ்ண சாஸ்திரிகள், வித்வான் திருமலையாசாரியார் நாதத்வாரா மடத்து சின்ன சுவாமிகள் ஆகியோர் பல்வேறு மடங்கள் சார்பாகவும் பிரசன்னமாகியிருந்தனர். உடுப்பி மடம் சங்கேசுவர மடம், மந்திராலய ராகவேந்திர மடம் முதலியவற்றிலிருந்தும் திருநாராயணபுரம் ஜீயர் ஸ்வாமிகளிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

ஜம்புகேசுவரம் ஸ்ரீ சங்கராசாரிய வித்யாலய மாணவர்கள் தங்கள் தலைமையாசிரியர் ஸ்ரீமான் ராமசாஸ்திரிகளுடன் வேதபாராயணம் செய்தார்கள்.

புத்தன் கோட்டகம் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசாச்சாரிய சுவாமிகள் பிரதிநிதிகளை வரவேற்றார். தர்மத்தைப் பாதுகாப்பதற்கான மார்க்கங்களை வகுக்கவே இம்மகாநாடு கூடப்பட்டிருக்கிறதென்றும் இவ்விஷயத்தில் மடங்களுக்குள்ளாக வித்தியாசம் கிடையாதென்றும் உலகிலேயே இணையில்லாத சநாதன தர்மத்தைப் பாதுகாப்பது மடங்களின் பிரதம கடமையென்றும் அவர் கூறினார்.

ஸ்ரீ அஹோபிலமடம் ஜீயர்ஸ்வாமிகளை தலைமை வகிக்கும்படி அட்வொகேட் ஸ்ரீமான் நடேசய்யர் பிரேரேபித்தார். பண்டித யமுனலால் தாசிரா அதை ஆமோதித்தார்.

தலைமையுரை

ஸ்ரீஸ்வாமிகள் தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:— தர்மம் தலைசாய்ந்து, தான் வர அவசியம் நேரும்போதெல்லாம் தர்மத்தைப் பாதுகாக்க பூலோகத்திற்கு வருவதாக பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார். தற்போது தர்மம் அடியோடு மறைந்துவிடும் போல் காண்கிறது. ஆகவே எந்த பகவானுடைய சந்நிதியில் நாம் கூடியிருக்கிறோமோ அந்த பகவான் நம்முடைய மகாநாட்டுக்குப் பூர்ண அநுக்கிரகம் செய்வாரென்று நான் உறுதியாக நம்புகிறேன். இப்போதிருக்கும் சக்ரவர்த்தியின் மூதாதையர் நமது மத உரிமைகளைப் பாதுகாத்து வந்திருக்கின்றனர் இப்போதுள்ள சக்ரவர்த்தியும் நம்முடைய விண்ணப்பத்தைக் கவனித்துத் தக்கது செய்வாரென்று நம்பலாம்.

ஸ்ரீமான் எஸ். மகாலிங்கய்யர் விண்ணப்பத்தைப் படித்துத் தமிழில் விளக்கினார். ஸ்ரீமான் வி. லக்ஷ்மீ நரசிம்மம் பண்டித ஹரிகிருஷ்ண சாஸ்திரியார் ஆகியோர் விண்ணப்பத்தை யாதரித்துப் பேசினர். மடாதிபதிகள் நேரகவும் இவ்விண்ணப்பத்தை மன்னர் பிரானுக்குச் சமர்ப்பிக்கவேண்டுமென்று அவர் கூறினார்.

மடத்துப் பிரதிநிதிகளின் நிரந்தர ஸ்தாபனமொன்று அவசியமெனத் தீர்மானிக்கப்பட்டு ஸ்ரீமான் கே. குப்புசாமி அய்யரும் ஸ்ரீமான் டி. கோதண்டராமய்யங்காரும் புதிய ஸ்தாபனத்தின் அமைப்பை வரையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

தலைவர் சில வார்த்தைகள் பேசியபின்னர் கூட்டம் முடிவடைந்தது.

விண்ணப்பம்

மன்னர் பிரான், இந்தியா மந்திரி, ராஜப் பிரதிநிதி, காண்டர்பரி யார்க் ஆர்ச்பிஷப்புகள், மாகாண கவர்னர்கள் ஆகியோருக்குக் கீழ்கண்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:—

இந்தியாவாகிற பெரிய கண்டம் தங்கள் ஆளுகையின் கீழிருக்கிறது. இந்நாட்டுப் பிரஜைகளின் க்ஷேமம் தங்களுக்கு எப்பொழுதும் கருத்திலிருக்கும் தங்கள் மகுடாபிஷேக காலத்தில் இந்நாட்டின் உண்மையை உங்களுக்குத் தெரிவித்தது சர்க்கார் தலையீட்டிலிருந்து ஹிந்துமதாசாரங்களுக்குப் பாதுகாப்பைத்தேடுவது உங்கள் உத்தேசம். ஹிந்துமதத்தை நாங்கள் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தாங்கள் இங்கிலாந்தில் மதலௌகீக விஷயங்களில் தலைவராகவிருந்தும் எல்லா மதங்களுக்கும் நியாயமான உரிமைகளையும் பாதுகாப்புகளையும் கொடுத்திருக்கின்றீர்கள். இங்கிலாந்திலுள்ள உங்கள் பிரஜைகள் அதிகாரிகளின் தலையீடில்லாமல் தங்கள்மதங்களையனுஷ்டித்து வருகின்றனர். ஒரு தேசம் மற்றொரு தேசத்தை சுவாதீனம் செய்துகொண்டால் சுவாதீனப்பட்ட நாட்டு மக்களின் சமூக மத குடும்ப ஆசாரங்களை புதியதேசத்தார் பாதுகாக்க வேண்டுமென்பதே எங்கள் வேதங்களின் கருத்து.

மதவிஷயங்களில் மற்றநாடுகளில் போலவே இங்கேயும் சட்டத்தைவிட ஆசார சம்பிரதாயங்களே பிரதானமானவை. மனுதர்ம சாஸ்திரத்தை அசோகன் ஊர்ஜிதம்செய்தார். வெகு சமீபகாலம் வரையில் இந்தியா சர்க்கார் ஹிந்துக்களின் மதவிஷயத்தில் தலையிடாமல் நடுநிலைமை வகித்து வந்தார்கள். இக்கொள்கையை ஈஸ்ட் இந்தியாகம்பெனி சட்டத்தின் 18-வது பிரிவில் காணலாம். 1927-ம் வருஷம் வரையில் ஏற்பட்ட சட்டங்களும் இக்கொள்கையை அங்கீகரித்தன. நிஷ்பக்ஷபாதமான பிரிட்டிஷ் சர்க்கார் ஆளுகையில் இந்தியாவிலுள்ள எல்லா பெரிய மதத்தினரும் வேற்றுமையின்றி வாழுகிறார்களென ஜஸ்டிஸ் ஜேம்ஸ் ஒருமுறை குறிப்பிட்டார். சமூக மதவிஷயங்களில் இந்தியப் பிரஜைகள் மிகவும் சிரத்தை கொண்டவர்கள். அவற்றில் தலையிடுவதை அவர்கள் ஒருபோதும் சகிக்க மாட்டார்கள். 1858-ம் வருஷம் விக்டோரியா மகாராணியார் தம்முடைய பிரகடனத்தில் இந்திய மக்களின் மதாசாரங்களில் அதிகாரிகள் தலையிடமாட்டார்களென்று உறுதி கூறியிருக்கிறார். இத்தகைய உறுதிமொழி 1935-ம் வருஷத்திய இந்திய அரசியல் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை. பழைய சட்டங்கள் ரத்தாகிவிட்டபடியால் பழைய உறுதிமொழிகளும் அமுலில் இராவோவென்ற அச்சமேற்படுகிறது. அவ்வுறுதிமொழியை நீங்களாவது ஊர்ஜிதம் செய்தல் வேண்டும். லௌகீக விஷயங்களை நிர்வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையினர் மதக்காரியங்களில் தலையிடும்படி விட்டுவிடக்கூடாது.

ஒரு கூட்டத்தார் இந்தியாவின் சமூக வாழ்க்கைக்கு தாங்களே பிரதிநிதிகளென்று சொல்லித் திரிகிறார்கள். அவர்களுக்குப் பத்திரிகைகளின் ஆதரவும் பலமாகவிருக்கிறது. மதவிஷயங்களில் அவர்கள் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த முயலுகின்றனர்.

உலக முழுவதும் அமைதியாகவும், சந்தோஷமாகவும் இருக்கவேண்டுமென்பதே வேதத்தின் கொள்கை. அவசரப்பட்டு வேதமதத்தில் தலையிடாமல் பாதுகாக்கவேண்டுவது அவசியமென்று நாங்கள் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இது விஷயமாக தங்கள் மகுடாபிஷேககாலத்தில் தாங்கள் ஒரு பிரகடனம் வெளியிடுதல் வேண்டும். இதனால் ஜனங்களின் ராஜ விசுவாசமும் பெருகும்.

(சு. மி.)

மேல்மங்கலத்தில் ஸனாதனதர்ம மஹாநாடு.

பெரியகுளம், சின்னமனூர், வத்திலக்தண்டு முதலிய பல பாகங்களிலுள்ள ஆஸ்திகர்களும், வித்வான்களும், அடங்கிய ஓர் பெரிய பொதுக்கூட்டம் பங்குனி-மீ 25-ம் உ 8—4—38) வியாழக்கிழமை மாலை 4½ மணிக்கு மேல்மங்கலம் அம்பி சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களது கிருஹத்தில் நடைபெற்றது.

மாலை 4 மணிக்கு ஸ்ரீ மதாசார்யாள் படத்துடன் அக்கிராஸனாதிபதி பிரும்மஸ்ரீ சதாசிவப்ரம்மத்தை பூர்ண கும்பத்துடனும், வேத கோஷத்துடனும், மேளவாத்தியத்துடனும் பொதுஜனங்களும், வித்வான்களும் உத்ஸாஹத்துடனும் ஷெயார் கிருஹத்திற்கழைத்து வந்தார்கள். மஹாநாடு வேத கோஷத்துடனும் தெய்வப்பிரார்த்தனையுடனும் ஆரம்பமாயிற்று. மேல்மங்கலம் பிரும்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் பிரும்மஸ்ரீ சதாசிவப்ரமம் அவர்களை அக்கிராசனம்வஹிக்க பிரேரித்தார். அந்த பிரேரணையை கூடலூர் பிரும்மஸ்ரீ சிவமூர்த்தி சாஸ்திரிகள் அம்பி சுப்பிரமணிய சாஸ்திரிகள். சிவரும சிரௌதிகள் கோமடம் சங்கர கெனபாடிகள் பெரியகுளம் வேதவிலாஸ் P. S. வைத்தீஸ்வர கெனபாடிகள் S. கிருஷ்ணசாஸ்திரிகள் மினகனூர் சங்கரகெனபாடிகள் முதலியோர் ஆமோதித்தனர்.

பிறகு பிரும்மஸ்ரீ சதாசிவப்ரமம் அவர்கள் சனாதன தர்மத்திற்கு ஜே என்ற கோஷத்துடன் அக்கிராசனம் வஹித்து சபை வணக்கத்துடன் முன்னுரையில் கூறியதாவது.

இந்த ஆஸ்திகர்கள் அடங்கிய கோஷ்டியில் நான் தலைமை வஹிக்கும்படியான ஓர் பாக்கியத்தை பெற்றதற்கு அளவிலடங்காத சந்தோஷமடைகிறேன். சனாதனிகளுக்கு இப்பொழுது தர்மவிரோதமான ஆபத்துக்கள் வந்திருக்கின்றன. ஆலயப்பிரவேசம் ருதுமதி விவாஹம் சாரதாசட்டம் முதலான தர்ம, மத விரோதமான சட்டங்கள் நம்மை மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிவிட்டன. காங்கிரஸ் போல் ஏத்தஸ்தாபனம் சில்லரை விஷயங்ளில் நன்மை புரிந்தாலும், தர்ம விரோதமான முக்கிய காரியங்களில் தலையிடுவதில் உத்ஸாஹம் காண்பிக்கின்றன. நமக்குள் கட்டுப்பாடுவேண்டும். ஆங்காங்கு சனாதனசபைகள் ஏற்பட்டு நமது அபிப்ராயங்களை தைர்யமாக வெளிப்படுத்தி, தர்ம விரோதமான செய்கைகளை கண்டிக்கவேண்டும். புதிய சட்டத்தில் மதவிஷயத்தில் தலை இடுவதில்லை, என்ற மஹாராணியின் உறுதிமொழியும் அழிந்துவிட்டது, கவர்மெண்டாரும், கார்டு விலை குறைவேண்டும். சர்க்கரை வரி கூடாது என்ற பொதுஜன அபிப்ராயத்திற்கு விரோதமாக விசேஷ அதிகாரங்களை பிரயோகிக்கிறார்கள். சாரதாச்சட்டம் போன்ற சமூஹ, மத தர்ம விஷயங்களில் மௌனம் சாதித்திருக்கிறார்கள். மஹம்மதிய, கிருஸ்துவ மதங்களுக்கு மதப்பாதுகாப்பு இருக்கின்றது. இந்துக்களுக்குச் சொந்தமான இப்பாரத பூமியில் நம்மதப் பாதுகாப்புக்கு வழி இல்லாதது நம் துரதிர்ஷ்டமென்றும், ரொம்பவும் வருந்தத்தக்கதென்றும், மேல்மங்கலம் வேதாந்த வித்வான் பிரும்மஸ்ரீ வெங்கடாசல சாஸ்திரிகளின் பிரிவானது சனாதன உலகிற்கே ஒரு குறைவு என்றும், அவர் மனது சாந்தி அடைய ஈஸ்வரனை ப்ரார்த்திப்பதாயும், முக்கியமாக திருவாங்கூர் ஆலயப்ரவேசம், சாஸ்திர, ஆசார, ஆகம சம்பிரதாயங்களுக்கு விருத்தமானதென்றும், குமரி முதல் ஹிமயபர்யந்தம் ஹிந்துக்கள் யாவருக்கும் பத்மநாபஸ்வாமி கோவில் சொந்தமென்றும், மஹாராஜா அவர்கள் ஏகதேசத்தில் தன் விசேஷ அதிகாரத்தை அனுமதிக்க அதிகாரமில்லை என்றும் தெய்வஸ்தலங்களை கண்காக்ஷிசாலை, டிராமா, சினிமா கொட்டைககளுக்குச் சமமாகச் செய்தது ஹிந்துக்கள் யாவருக்கும் மனக்கொதிப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், தர்மராஜ்யம் என்ற பெயரை மறுபடி ஸ்திரப்படுத்தி கும்பாபிஷேகம் முதலான கார்யங்கள்செய்து தான் செய்த அதிக்ரமத்திற்கு பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும். இல்லையேல் ரொம்பவும் அனர்த்தஹேதுவாகுமென்றும் உருக்கமாகப் பேசினர்.

பிறகு பிரும்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் சாரதாச்சட்டம் அமுலில் இருக்கும் போதே தண்டனையை அடைந்தாவது சிறுவயதில் விவாஹத்தை நடத்தும் பொதுஜன நோக்கமும் தண்டனைக்குபயந்து கவர்ன்மெண்டார் முதல் யாவருக்கும் தெரிந்தும் அதை ரத்துபண்ணாமல் சட்டத்தில் இருப்பது ரொம்பவும் வருந்தத் தக்கதென்றும், ஸ்ரீமான் நேருஜீ போன்ற பொதுஜனப்பிரியர்கள், பொதுஜன விரோதமாக சாரதா சட்டத்தைக்கடுமையாக்க ஆமோதிப்பதும், இவ்விஷயத்தில்கூட இந்துக்கள் ஸ்வயராஜ்யம் பெறமுடிய வழிஇல்லையென்றும் உருக்கமாகப்பேசினர்.

பிறகு கூடலூர் பிரம்மஸ்ரீ சிவமூர்த்தி சாஸ்திரிகள் இந்துக்களுக்கு முக்கியம் தேவசேவையுடன்கூடின தேசசேவை க்குத்தான் எல்லாம் வசமாகும். தேவ,என்பதிலுள்ள வகாரத்தையும் தேசஎன்பதிலுள்ள சகாரத்தையும் சேர்துப்பார்த்தால் வசம்என்பதாகும் அதல்லாமல் தேசசேவைக்குப் பிறகு தான், தேவ சேவை என்று சொல்லும் பக்ஷத்தில் தேச என்பதிலுள்ள சகாரத்தையும் தேவ என்பதிலுள்ள வ காரத்தையும் சேர்த்தால் சவமாகவேமுடியும். ஆகையால் முக்கியமாயுள்ள தேவசேவையில் ஈடுபட்டால் தேசசேவைக்கு ப்ரயோஜனமுண்டு. ஆகையால் மத சம்மந்தமான விஷயங்களில், வ்யவஸ்தையை முக்கியமாக அடிப்படையாகக் கொண்டால் உலகம் செழிக்கும். ஆள்பலமுண்டு,ஈஸ்வரானுக்ரஹமுண்டு. இல்லையேல் எல்லாம் வ்யர்த்தமே. இதை காங்கிரஸ்காரர்கள் கவனிப்பார்களாக. நம்ஸமூகவ்யவஸ்தையை விட்டுக்கொடுத்து, அதனால் ஏதோ நன்மையை அடைவதைக்காட்டிலும் உயிரிழப்பது மேல். பணத்திற்காக தாயைப்பறிகொடுப்பது உசிதமாகாது என்றுரொம்பவும் உருக்கமாகப்பேசினர். ஜனங்கள் யாவரும் ஸ்தம்பித்து க்கண்ணீர் சொரிந்தனர்.

பிறகு வேதவிலாஸ் P. S. வைதீஸ்வர கனபாடிகள் பேசுகையில் வெகுகாலமாக நாம்கையாளப்பட்ட புனிதமான பழக்க வழக்கங்கள் ஒவ்வொன்றாக நழுவப்பட்டுவருகிறதென்றும் முக்கியமாக 5-நாளில் நடத்தும் விவாஹம் ஒரேநாளில் நடத்தப்படுவது ரொம்பவும் துக்கிக்கதக்கதென்றும், வாதசஷோ ஊர்வலம், சங்கீதக்கச்சேரி முதலிய ஆர்பாட்டங்களைக்குறைத்துக்கொண்டு, ஸார்த்தமான ஸமாவர்த்தனம் முதல்சேஷ ஹோமம்முடியவுள்ள கர்மாக்களை 5நாள் நடத்துவதுமுக்கியமென்றும் அப்பொழுதுதான் அக்னி சித்தி ஏற்படுகிறதென்றும் மேலும் அபரக்கிரியைகள்தான் அந்தநாளில் செய்துமுடிக்கவேண்டுமென்றும் முக்கியமாக 'ப்ரதமார்த்தவஸாந்தி' முதலியகர்மாக்களை ஒரேநாளில் செய்துமுடித்தாலும் சம்பந்தி விருந்தென்று 2நாள் கல்யாணமாகக் கொண்டாடப்படுவது கவனிக்கத்தக்கதென்றும், விவாஹத்தை அபரச்சடங்குடன் சேர்ப்பது அழகல்ல வென்றும், இவ் விஷயங்களை ஒவ்வொரு ஊரிலும் ப்ரசாரம் செய்து நமது தர்மத்தை ரக்ஷிப்பது பண்டிதர்களின் கடமையென்றும் பேசினர்.

பிறகு கோமடம் சங்கர கனபாடிகள் பேசினதில் நமது மதம் அழிவற்றது. மற்ற இதர மதங்கள் ஒருவர் பெயரால் ஏற்பட்டது. உதாஹரணமாக மஹம்மதிய,கிருஸ்துவ,புத்தமதங்களெல்லாம் அவரவர்களால் ஏற்படுத்தப்பட்டது. மனுஷ்யனுக்கு எப்படி ஆயுள்முடியுமோ அப்படியே அம்மதங்களும் முடிவடையவேண்டியதே. அப்படி இருந்தும் நமது சனாதன மதமானது இன்று க்ஷீணதசையில் இருக்கிறது. ப்ராம்மணத்வேஷம், வேதநிந்தை மஹான்களின் நிந்தை விருத்தி அடைந்து வருகிறது. இதற்குக் காரணம் மதக்கல்வி இல்லாததே. சிறுவயது முதல் மதக்கல்வி அளிக்கப்படாமல் ஆரம்பத்திலேயே ஆங்கிலக்கல்விக் கனுப்புவதும், அதுவும் கிருஸ்துவ மதத்தை பரப்புவதையே முக்யலக்ஷ்யமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள கலாசாலைகளுக் கனுப்புவதும், நமது சிறுவர்களுக்கு மனக்கலக்கமுற்று, மதப்பற்றுதலற்று, நாஸ்திகத்திலும், மற்ற மதங்களிலும், அவர்களின் அனுஷ்டானங்களிலும் ப்ரவர்த்தி ஏற்பட்டு விடுகிறது, இதற்குக் காரணம் பெற்றெடுத்த பெற்றோர்களல்லவா? ஆகையால் பெற்றோர்கள் மதபோதனையை முக்கியமாக பலப்படுத்தவேண்டும். கிராமங்கள், நகரங்கள்தோறும் மதபோதனையுடன் கூடின கல்விச்சாலைகள் திறவப்படவேண்டும். ஆஸ்திக புத்தியுள்ள பிரபுக்கள் கவனம் செலுத்தினால் பிரயோஜனம் உண்டு. மேலும் நாஸ்திகத்தை மாற்ற பிரசாரகர்கள் கிளம்பவேண்டும். பிரசாரகர்களை ஒவ்வொரிடத்திலும் சனாதனி ஆதரிக்கவேண்டும். தர்மராஜ்யா, ஆர்யதர்மம் முதலான பத்திரிகைகளை ஆதரித்து தர்மத்தைக் காப்பாற்றி அதர்மத்தை வேரறுக்கவேண்டியது சனாதனிகளின் கடமை என்று உருக்கமாகப் பேசினர்.

பிறகு பிரம்மஸ்ரீ அம்பி சுப்பிரமணிய சாஸ்திரிகள் சிவரும சிரௌதிகள் முதலியோர் இம்மஹாநாட்டைக் கூட்டுவதற்குக் காரணபூதர்களான சிவராமகெணபதிகெனபாடிகள் சுப்புரும சாஸ்திரிகள் N. R. அய்யர் (B.A) முதலியவர்களுக்கு ஈஸ்வரன் சிரேயஸ்ஸைக் கொடுத்து, மென்மேலும் தர்ம காரியங்களில் ஈடுபடச் செய்யவேண்டுமென்றும் இம்மஹாநாட்டில் கலந்துகொண்ட பண்டிதர்களுக்கும் அக்கிராசனருக்கும் உபசார வார்த்தைகள் சொல்ல சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு சனாதன தர்மத்திற்கு ஜே என்ற கோஷம் வானத்தைப் பிளக்க கூட்டம் மாலை 6½ மணிக்கு இனிது முடிவடைந்தது.

சிவரும கெணபதி கனபாடிகள்.
மேல்மங்கலம்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர்.
பெரியதெரு, கும்பகோணம்.

புதுமாதிரி கால் செயின், கொலுசு திருகுகள்
குறைந்த கூலிக்கு தயார் செய்யுமிடம்
சந்திரா ஸில்வர் ஒர்க்ஸ்.
Proprictor G. தியாகராஜ முதலியார்,
ஸ்ரீகும்பேஸ்வரன் வடக்கு வீதி, கும்பகோணம்.

Registered No. M. 2913.

THE ARYA DHARMAM.
ENGLISH SUPPLEMENT. 249

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 22nd APRIL 1937. [No. 16

The Puri Conference.

Extracts from The Presidential address (continued)

The one crying need of the hour is a strong spirituality. The times are extremely propitious for winning it. In the mad race for worldly advancement, the Sanatani has been left far behind and he can never hope to regain the lost ground however much he may fret and frown, Kunti Devi, the mother of the five Pandavas prayed for the happening of fresh and frequent troubles as otherwise she thought she may neglect and forget God.

Even so, I welcome the modern tyrannies which thrust us all into the back-ground and compel us to remember and develop our spirituality. With our tejas, ojas and varchas rekindled, we will surely become Vasishtas and Vishwamitras, Bhishmas and Hanumans and the long-earned Swarajya will jump into the hollow of our hand. Varnashrama Dharma is among the greatest unifying forces. It is the accumulated experience and wisdom of eons of meditation and introspection of selfless persons who had no axes of their own to grind and had reached the peak of excellence in every realm of knowledge. The ideal Varnashramite has elevated discipline and obedience to the dignity of a Science by precept as well as by example. In the real Varnashramite, be he a Brahmana or Brahmanetera you will find a mighty power-house and the acme of all activities. Who can tell what will not happen when this man of action and spirit thinks fit to respond to thec all of the divine in him to unfold himself and breathe into the movement for winning Swaraj the mind force, the spirit force and his soul force which is his by birth?

A RETROSPECT.

We have defined our Swaraj. We have explained the Dharmas and their relationship *inter se* Unles the Hindu in the Hindu is preserved while fighting for Swaraj and union, the emerging Swaraj or union will be but that of the rat which has become one with the cat after the rat is eaten and digested by the cat. In the past when we were rendering implicit and unquestioning obedience to our Dharma we had reached dizzy heights in all realms of thought and knowledge. How our Kshatriyas and Vysias were carrying their conque- arms and extending their commerce to entire continents and how we had acquired absolute immunity against poverty and unemployment and how in consequence, peace, plenty and prosperity were reigning supreme! After we began to give the go-bye to it, our fall began, our four citadels, the caste institution, the marriage institution, the joint-family institution and the institution of religious worship, which had been defying the ravages of time and invasions started shaking and the process was helped by the birth and growth amongst us of inner enemies. the monuments of Western Education. The hard fact remains that a strange phenomenon is happening under our very nose. A culture, a philosophy, a religion and a morality which are the chiselled products of ages and which have with adamantine strength been bravely with-standing continuous onslaughts are beginning to show signs of softening, liquefying decomposing. Our Paradise stands lost and forfeited. Shall we regain it? When & how? Favourable indications are not wanting. Our cry has been heard at long last. God's Grace is slowly and steadily descending on us standing, as we are today, forlorn and forsaken by our own kith and kin even as it did upon the forlorn Panchali and Gajendra.

OUR POLICY AND OUR PROGRAMME.

The atmosphere is full of five-year plans, three year plans, the twelve points of Wilson, the fourteen points of Jinnah, the thirty-two points of the Right Honourable Sastri, a new morality to end the old religion and the old morality, a new man and a new woman to end the old man and the old woman, a war to end war, a peace to end peace, a new heaven to end the old heaven and a new hell to end the old hell. Every party in the field is pompously and vociferously flashing forth a policy and a programme remarkable more for their tinsel glitter and imagination-catch than for their soundness and practicality. So far none has resulted in any visible benefit. We had not laid down any for two reasons viz., an overwhelming sense of the strengh of our Dharmā which has lulled us into security and a vague feeling that what precious little we want will not be denied to us by our Congress brethren. But the disillusionment has come. Though the first cause still remains and will sustain us, the second is liquefying. But it has forsaken us at all critical times, at the time of the Sarda Act, at the time of the Temple Entry Bills, Untouuchability Removal Bills, Divorce Bills etc. The faith that we had been pining on it stands betrayed, cruelly betrayed.

By a singular irony of fate, all other parties have joined in disparaging us. By dint of their drowning noise, strong organization and long purse they are submerging us. It has therefore become necessary for us to become politically united as we are spiritually united and to formulate a policy and a programme - not the policy of befooling the people and ensnaring them with will-o the wisp's but a modest practial and safe policy suited to the Indian genius and soil. We have outlined already in skeleton our general policy while defining and delimiting our Swaraj. A fuller enunciation will perhaps be premature now. A few notes may, however, be added to give expression to the same.

FORM OF GOVERNMENT.

The Congress is drifting more and more towards Socialism under the regime of its present President. He has won the full support of the leftists. The seeds already sown in the soil, are threatening to sprout and grow into wild luxuriance. The mass mentality is being worked into frenzy and fury. The psychology of the situation is not un-understandable. Any scheme which offers easy avenues for sense gratification and opens a downhill path seemingly strewn with flowers for approaching them and involving no effort or strain on the body or purse and releases one from the galling restraints and shackles which have been acting as perpetual brakes, will certainly find a ready appeal to the unthinking proletariat. Socialism possesses all these features in a large measure. No wonder that like the myriads of moths flying into the burning lamp lured by its fascinating beauty, the common people, dazed and stupefied by enthralling promises of miraculous talismans and Aladin's lamps which will drive away by a mere touch the demons of unemployment poverty and hunger and the vampires of capitalism, landlordism etc, are falling easy victims. This socialism is in order of time, the second great public enemy of India which in the fulness of time will surely mutilate India out of shape and form, if left unchecked. It will be our sincere attempt to shut it out.

(To be continued)

THE SACREDNESS OF LIFE.

"The spirit-world around this
world of sense
Floats like an atmosphere,
and everywhere
Wafts through these earthly mists
and vapours dense
A vital breath of more
ethereal air."

Life is real. It is earnest and the grave is not its goal. Dust thou art and to dust thou returnest was not spoken of the soul. Death is but the opening of the door to another sphere; the dying person passes over alive, more vitally alive than he were before, the same man or woman with the same affections, desires, propensities, qualities and thoughts. Death may and most eventually intensify his vision and purify his nature but it does not alter his individuality or the character he has formed during his earthly sojourn nor does it release him from the responsibilities he has incurred. On the other hand it only reveals them to him with clearer vision. A person commits murder, and receives as punishment the death penalty. This is after all man's punishment. God does not punish but the person's act automatically brings Justice in that he will have to repay to the uttermost through innumerable ages the debt he owes to that person he so foully wronged. The hell fire is not there but a retribution of remorse far worse lies in wait for him. This is no mere phantasy but a naked truth.

The life on earth is only a preparation for the yonder side of death. Therefore if one wants to be happy there, he has necessarily to cultivate and nurture God-bound consciousness while in flesh and blood in this world. Our Shastras speak high of "Anthima-smrithi" the consciousness on the eve of death. How can this smrithi be correct and perfect unless he practises the same continually throughout his life on earth? We are building here for Eternity, not for the passion and gratification of a moment. Life is no mere child's play, and when one's back is against the wall, and one is fighting within oneself to play the game, to be true to one's ideals, then his only hope and safeguard for sufficient strength to carry through is not his own will-power, however strong, but prayer-that power which when drawn upon day by day, is sufficient unto that day.

God's love is divine All we have dreamed of as love, beauty, tenderness, and joy, is as nothing to the reality, for the reality is the perfection of these. Without proper understanding one may say that sex-function is ignoble, when it is one of the highest attributes God has given to man. It is no doubt God-like to create. It becomes ignoble and a source of evil, only in its abuse. In itself it is pure, holy and spiritualising. What man practises now is procreation, a substitute for creation. We have heard of powerful sages and munis of old endowed with Oordhwa Rethas and who were able create even human beings by their sankalpa.

The sacredness and permanence of marriage is a vital outcome of the true knowledge of spiritualities. In European countries we find men and maidens who so lightly enter into marriage as if it affected only their two selves and who so lightly step out of it when it does not suit them. In marriage it should be clearly understood that a karmic bond is formed, which though the parties may dissolve it down here is a knot of fate binding them together for many lives to come and can only be unravelled by love, selfless and holy and their responsiblity to their children is frightful in its immensity. Every child born of true love is of immaculate conception, though through heredity and karma, it has much to withstand and contend against. It has a spiritual birthright, and every child has the right to expect from its parents that spirtial birth-right of love.

In no other country than our Bharatha Varsha has the right and true significance of marriage been correctly understood and followed. This is due to the wisdom of our Maharishis and the lack of such selfless intellectual giants in other parts of the World. Marriage is a 'Samskara'. It is indissolvable. Due to Prarabdha marriage is performed. A girl can become the bride of only that particular *bhartha* whom she can rightfully wed. When after marriage the husband dies the wife has to lead the life of a *thapaswini* praying for the prosperity of her husband. She has no separate existence apart from her married husband. Can the world dream of a better system than the '*Sati*'? It meant that if the wife thought that she could not any longer live separately after her Purusha died, she could ascend the funeral pyre of her lord and both their bodies may be burned to ashes. The conception was that even in death the couple are unseparable. This grand conception, ideal and practice is heckled ever and anon by interested persons who are utterly incompetent to pass any remarks on the system enunciated by *Smirithi karthas*.

"Glaphyra the daughter of King Archelaus, after the death of her two first husbands (being married to a third, who was brother to her first husband, and so passionately in love with her that he turned off his former wife to make room for this marriage) had a very odd kind of dream. She fancied that she saw her first husband coming towards her and that she embraced him with great tenderness; when in the midst of the pleasure which she expressed at the sight of him, he reproached her after the following manner. Glaphyra! says he, thou hast made good the old saying, that women are not to be trusted. Was not I the husband of thy virginity? Have I not children by thee? How couldst thou forget our loves so far as to enter into a second marriage, and after that into a third, nay, to take for thy husband a man who has shamefully crept into the bed of his brother? However, for the sake of our passed loves, I shall free thee from thy present reproach, and make thee mine for ever. Glaphyra told this dream to several women of her acquaintance, and died soon after. I thought this story might not be impertinent in this place, wherein I spoke of those Kings. Besides that the example deserves to be taken notice of, as it contains a most certain proof of the immortality of the soul, and of Divine Providence. If any man thinks these facts incredible let him enjoy his own opinion to himself but let him not endeavour to disturb the belief of others, who by instances of this nature are excited to the study of virtue".

The sacredness of life is explained clearly and well in our Shastras. If we study them closely and carefully under the able guidance of Gurus we can understand a great deal and many of our present ills will vanish like the mist before sunrise. Life is not a bubble. It has a definite and spiritual purpose.

"One with a flash begins, and ends
[in smoke;
The other out of smoke brings
[glorious light,
And without raising expectations
[high
Surprises us with dazzling miracles

P. R Thirumalai Iyengar.

Current Comment.

We must prohibit the import of articles which are not quite essential. If I were Hitler or Mussolini, I will issue a long list of prohibited articles of luxury, including even wireless and television. I think it is a crime in India to create new wants.

(Sir C. V. Raman)

• • •

Speaking at Tanjore on 18th April, Mr. C. Rajagopalachariar stated that only the intellectual classes had some doubts in the matter of Congress accepting office conditionally; but there was unanimity of opinion among the masses the other way.

The masses have no opinions of their own. Their politics is what the press and platform makes. The intelligentsia run the press and man the platform.

To defend his present policies Mr. Rajagopalachari affects to relegate the intellectual classes to an inferior place. But he knows that it is a section of the intellectual classes that form the rank and file of the Congress workers. He should also know that his politics cannot make headway without the propaganda done by the "intellectuals" whom he pits against the masses.

தண்ணீர்பந்தல் தர்மம்.

(மேலக்காவேரி சிரோமணி கே. ஆர். வி. சாஸ்திரி.)

பரோபகாரமுள்ள கனவான்கள் தடாகங்களையும், கிணறுகளையும் அடிக்கடி தூர்வை எடுத்தும் பொது ஜனங்களுக்கு நன்மையுண்டாகும்படி நல்ல கிணறுகளை வெட்டி தொட்டிகள் கட்டி கயிறுபோட்டு விடுவார்களானால் அவர்களுக்கு ஏற்படும் புண்யத்திற்கும் புகழுக்குமளவில்லை. இவ்வளவு செய்ய சக்தியில்லாதவர்கள் கோடையில் அல்லது தேவையான சமயத்தில் பிரபை என்றுச் சொல்லப்படுகிற "தண்ணீர்பந்தல் தர்மம்" செய்ய வேண்டும். தர்மர் ராஜ்யத்தில் ஒரு வேதியர் கோடைகாலத்தில் கிணற்று ஜலத்தால் தண்ணீர்பந்தல் வைத்து வழிப்போக்கர்களையும் அந்த கிராமத்து ஜனங்களையும் தர்மம் தவறாமல் பருகச் செய்துவந்தனர். ஸூதர் முனிவர் கிணற்றுக்கு அருகாமையில் திவ்யமான தொட்டிகட்டி அதில் சுத்த ஜலம் விட்டு காலை மாலையில் சோம்பலில்லாமல் பசுமாடு குடிக்கும்படி செய்தார். ஏனெனில் பசுக்கள், தேவதைகள், பிராமணரிவர்கள் ஸம கௌரவமுடையவர்களல்லவா? பசுக்கள் கட்டியிருக்கும் பக்கத்தில் கால்நீட்டிப் படுக்கலாகாது. படுத்திருக்கும் பசுவை காலால் தட்டி எழுப்பலாகாது. தர்மங்களுக்குள் சிறந்தது தீர்த்ததானம். இப்படி அதிக மகிமைபொருந்திய தண்ணீர்பந்தல் தர்மத்தை ஸ்ரீ ஸோமசுந்திரக்கடவுள் தானே செய்து காட்டியிருக்கிறார். ஹாலாஸ்யமஹாத்மியம்:— பாண்டிய தேசாதிபதியான ராஜேந்திர பாண்டியனுக்கும் சோளதேசாதிபதிக்கும் ஒரு சமயம் யுத்தம் நடந்தபோது கோடைகால மத்தியான்னசமயம்கோரமான யுத்தம் பாண்டிய ஸேனைகள் தாகத்தால் பீடிக்கப்பட்டு யுத்தத்தில் நிற்கமுடியாமல் ஓட்டமெடுத்ததை பக்த பராதீனரான பகவான் கண்டு கருணை கூர்ந்து யுத்த பூமியிலே விஸ்தீர்ணமான தண்ணீர்ப்பந்தலை மாயையினாலே நிர்மாணம் செய்து அதில் நான்கு வேதமயமான நால் கால்களையுடையதாய் மஹா கம்பீரமாய் பிரகாசம் தங்கிய மஞ்சத்தை செய்து அதன் நடுவில் வீற்றுக்கொண்டு தனக்கு முன்புறம் மாயா சக்தியால் மிகவும் பெரிதான தீர்த்த யந்திரத்தை செய்துகொண்டு ஜடையிலுள்ள கங்கா ஜலத்தால் அதை நிறப்பி அதின்கண் வழிந்துள்ள ஜலத்தைக்கொண்டு பாண்டிய சேனைகளை பருகச்செய்து களைப்பை தீர்த்தார். பகவான் செய்த அநேக லீலைகளில் இதுவுமொன்று. தண்ணீர்பந்தல் தர்மம் பெரிதென்று கடவுள் ப்ரத்யக்ஷமாய் செய்துகாட்டினர். சக்தியுள்ளவர்கள் தண்ணீர்பந்தல் வைக்கவேண்டியதவச்யம். இதனாலேயே நமது நகரிலும் பல ஆஸ்திகர்கள் அத்தர்மத்தை நடத்திவருகிறார்கள். சிலர் பலகார்ய கௌரவத்தால் அச்ரத்தையாயிருந்தால் அவர்கள் உடனே வழக்கப்படி நடத்த முன்வர வேண்டும். கும்பகோணம் அத்வைதஸபை ஆதரவில் ஸ்ரீமான் அய்யுஅய்யர் அவர்களால் சிறந்த இடத்தில் இப்பெரிய தர்மம் நடத்தப்பட்டு பல நபர்கள், ஆஸ்திகர்கள், பள்ளி மாணவர்கள் வந்து தாகசாந்தி செய்கிறதை நாம் பார்த்துவருகிறோம். அப்பெரியார் ஒவ்வொரு நாளும்வந்து கூடயிருந்து சிரத்தையாக லோபமில்லாமல் நடப்பதை கவனித்து வருவது போற்றத்தக்கதாகும். பெரும்புண்யம் ஈசுவரப்ரீதிகாமானது முடியாதவர்கள் தங்கள் வீட்டிற்கு வருகிறவர்களுக்காவது தீர்த்தம்கொடுத்து உதவவேண்டும். ரூத்ரன் குடித்தால் மீதி ஜலம் சேஷமாய் விடுமென்று நினைக்கலாகாது. ஒருவன் வாசலில்வந்து ஐயா ஜலம் என்றால் உடனே குடுத்து மறுவேலை செய்யவேணும். ஜீவ காருண்யத்தை முன்னிட்டுச் செய்யக்கூடிய கார்யங்களில் இது முதன்மையானது.

तृणानि भूमि रुदकं वाक्चतुर्थीचसूनृता ॥
एतान्यपिसतांगेहे नोच्छिद्यन्ते कदाचन ॥

புண்யவான்களின் வீட்டில் ஆஹாரவஸ்துக்கள், தங்குவதற்குஇடம், தீர்த்தம் அன்பானவார்த்தை இவைகள் எப்போதும் இருக்கும். ஆகவே மேலான நன்மையையடைய முயலுபவர்கள் முடிந்தவரையில் இந்த தர்மத்தை அனுஷ்டித்து ஸபலமடையும்படி வேண்டுகிறோம்.

வெளியூர்ச்செய்திகள்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

எம்பெருமானார் மஹோற்சவம்.

16–4–37உ (சித்திரையிற்செய்ய திருவாதிரை) வெள்ளிக்கிழமை ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்களில் நடுநாயகமாய் விளங்கும் ஸ்ரீ இராமானுஜாச்சாரியார் என்ற எம்பெருமானார் திருநக்ஷத்திரக் கொண்டாட்டம் சங்கக் காரியாலத்தில் மாலை 6–30 மணிக்கு ஆரம்பமாகியது. மழையைக்கூடப் பொருட்படுத்தாது அறிஞர் அங்கு எழுந்தருளியது உடையவரிடம் உள்ள பக்தியை ப்ரதர்சனமாகக் காட்டிற்று.

காரியதரிசி 'என்னுயிர் தந்தளித்தவரை' 'ஆரண நூல்வழிச் செம்மை' என்ற இரு பாசுரங்களைப்பாடி அன்றைப்பெருமையினை எடுத்துரைத்தார்.

சங்கத்தலைவர் வேதம் அகாரத்திலும், ஸ்ரீமத்ராமாயணம் மகாரத்திலும், திருவாய்மொழி உகாரத்திலும் ஆரம்பமாகியுள்ளதை நன்கு ஆழ்ந்து நோக்கல்வேண்டுமென்றும், எம்பெருமானுக்கவதாரம்பத்தாதலால் எம்பெருமானார் மகோற்சவத்தை இன்றுமுதல் பத்து தினங்களில் கொண்டாடச்சங்கம் முன்வந்திருப்பதாகவும், வாசிகைங்கர்யத்தின் பெருமை அளவிட முடியாதென்றும், வாய்படைத்த பயனை உடையவருக்கு அதனை அர்ப்பணஞ் செய்தல் சாலப்பொருத்தமுடையதென்றும் கூறி ஸ்ரீமான் வி. நரசிம்மாசார்ஸ்வாமியை உபன்யாசத்தை உபக்ரமிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பாலவத்விஷயம் அட்வகேட் வி. நரசிம்மாச்சார்ஸ்வாமி." எம்பெருமானாரும் ஆழ்வாரும் என்ற விஷயத்தை சிறுவரும் எளிதில் அறியும்வண்ணம் எம்பெருமானார் மாறனடிபணிந்துய்ந்ததையும், ஹிதத்தாயாயிருந்து சம்ப்ரதாயத்தைக்காத்த முறையையும், உலகெங்கும் விசிஷ்டாத்வைத தத்துவம் கொண்டாடப்படுவதையும், சாரீரசாஸ்திரமே அனுபவத்துக்கு மிகவும் ஒட்டியதென்றும் மேல்நாடுச்சாஸ்திரவிற்பன்னர்களும் இதற்கே உடன்பட்டுள்ளார்என்றும் அதிரமணீயமாக பலஅருளிச்செயல் ப்ரவாகத்தோடு உபந்யசித்தார்.

காரியதரிசிஅளித்தவந்தனோபசாரத்துடன் ஸபை இரவு 8 மணிக்கு முடிந்தது.

இரண்டாம்நாள் 17.4.37உ சங்கத்தலைவர் "எம்பெருமானாரும் வேதவ்வியாஸரும்" என்ற விஷயம்பற்றிவிரிவானஉபன்யாசம்செய்தார். அதில் ஸ்ரீபாஷ்யப்ரக்ரியைகளை நன்கு எடுத்தோதிஅஃதுஎவ்வளவுபொருத்தமுடையதாக இருப்பதை விளக்கிக்காட்டினர். மகோற்சவம் நடை பெற்று வருகிறது.

ப. வெ. திருமலை அய்யங்கார். காரியதரிசி.

திருச்சி,

ஸீதாகல்யாணமஹோத்ஸவம்.

ஏற்கனவே நமது பத்திரிகைமூலம் வெளியிட்டபடி கருணாநிதியான ஸ்ரீராமகிருபையை முன்னிட்டு பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருச்சி கீழ ஆண்டார் வீதிமூலைப் பிள்ளையார்கோயிலில் திருவையார் அம்மாளக்ரஹாரம் பிம்ம ஸ்ரீ. வித்வந்மணீ ஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் (5–4–37ல்) ஆரம்பம் செய்யப்பட்டு உபன்யஸிக்கப்பட்டு வருகிற சிந்திதஸர்வாபீஷ்டப்ரதானமான ஸ்ரீமத்வால்மீகிராமாயணத்தில் நாளது தாது-ஞு பங்குனி-மீ 29உ ஞாயிற்றுக்கிழமை இரவு 9-மணிக்கு ஸ்ரீ ஸீதாகல்யாண மஹோத்ஸவ கட்டமானது உபன்யஸிக்கப்பட்டது. பக்தர்கள் அனைவரும் வந்து கதாச்ரவணம் செய்து பரமானந்தமடைந்தனர். ஜனங்களிடம் பக்தியைப் பரவச் செய்வதுடன், இனிய ஸங்கீத ஸாஹித்யத்துடன் கூடிய பிரும்ம ஸ்ரீ சாஸ்திரிகளின் உபன்யாஸ சக்தி யாவராலும் கொண்டாப்படுகின்றது,

ஒருநிருபர்.

மதுரை.

ஸ்ரீவேதாந்த தேசிக பக்தஸபை ஸ்ரீ பாஷ்யகார ஜயந்தி.

இச்சபையின் சார்பாக ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனாசாரியாரான ஸ்ரீ பகவத் ராமானுஜாசாரியார் ஸ்வாமியின் ஜயந்திதினம் நாளது ஈச்வர-ஞு சித்திரைமீ 4உ (16–4–37) வெள்ளிக்கிழமை முதல் ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸந்நிதியில் 14—4—37முதல் 16உ முடிய சாயங்காலம் 6-30மணி முதல் பிரதிதினமும் ப்ரவசனம் நடைபெற்றது. 13—4—37உ யன்று மாலை 6-30 மணிக்கு புதுப்பஞ்சாங்க படனமும் நடைபெற்றது,

மாடபூசி. வீ. கி. ஸ்ரீனிவாஸாசாரியார்,
காரியதரிசி.

ஆத்தங்குடி.

ஸநாதன தர்ம மகாசபை.

நிகழும் ஈசுவர ஞு சித்திரை-மீ 11உ (23—4—37) வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு ராம. கும. சு. வேத பாடசாலையில் அகில இந்திய வர்ணாசிரம சுயாராஜ்ய சங்கம் 1937-ஞு மகாநாட்டுத் தலைவரும், சிறந்த சட்ட நிபுணருமான மதுரை ராவ்சாகேப் ப்ரும்மஸ்ரீ என். நடேச அய்யரவர்கள் பி. ஏ., பி. எல்., தலைமையில் அரிய உபந்நியாஸங்கள் நடைபெறும். அவ்வமயம் அன்பர்கள் விஜயம் செய்து சிறப்பிக்கவேண்டுகிறோம்.

இங்ஙனம்,
ஸநாதன தர்ம மகாசபை

சென்னை.

உத்ஸவம்.

மைலாப்பூர் கபாலீச்வரர் ஆலய உத்ஸவம் அதிவிமர்சையாக நடைபெறுகிறது. ரிக், யஜுஸ், ஸாமவேத பாராயணங்களும் தேவாரம் நாதஸ்வரக் கச்சேரி, திவ்யாலங்காரம் பாணவேடிக்கைகள் பலர் உள்ளத்தைக் கவர்கிறது. போலீஸ் கவனிப்பும் நகரபரிபாலன ஸபை உடனுக்குடன் குப்பைகளை இரவே அகற்றி வியாதிபரவாமல் தடுக்க முயற்சிப்பதும் நெருப்பவிக்கும் யந்த்ரம் ஸன்னத்தமாக இருப்பதும் கொண்டாடத்தக்கதே. காலிகளை அடக்க முயற்சியில்லை.

நமது நிருபர்.

(215182)

மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

உங்கள் வறுமை கஷ்டம் நீங்கி அதிர்ஷ்டம் உண்டாகிவிடும்.

ரசமணி

இது அற்புத சக்திவாய்ந்தது. உடைந்து நீற்றுப்போகும் இந்திரியம் இறுகி தாதுபுஷ்டியில் யானை பலம் உண்டாகும். விந்து ஸ்தம்பித்து நிற்கும். தொழில் விருத்தியாகி செல்வம் உண்டாகும். கொடிய பீடைகள், கஷ்டம், வறுமை நீங்கிவிடும். நினைத்த காரியங்கள் சித்திக்கும். குடும்பம் க்ஷேமமடையும். 25 ரு. மணி 1-க்கு விலை ரூ. 10.

இதைவிட நூறுபங்கு வல்லமையும் அதிப் பிரகாசமாய் ஜொலிக்கும் அற்புத ஸ்பெஷல் மணி ரூ. 50. ஆர்டருக்கு முந்துங்கள்.

தீராதகுஷ்டம் திமிர் மதமதப்புகள் மாயமாய் மறைந்துவிட்டது.

சித்தாதி யெண்ணை

குஷ்டம், குழிப்புண், குறைநோய், சர்ம குஷ்டம், விஷ குஷ்டம், விஷநீர், தேமல், ஊறல், சொறி படர் தாமரை, வெண் குஷ்டம், வெண் புள்ளி, கருங் குஷ்டம், செம்மேகத் தடிப்புகள், மதமதப்பு-திமிர் சூலை, கிரந்தி, முடக்கு சூலை, பவுத்திரம், ஆறாத ரணங்கள், கால் ஆணி, முதலிய மேக வியாதிகள் ஆச்சரியமாய் குணமாகிவிடும்.

இந்த வியாதிக்கு இது கைகண்ட உயர்ந்த மருந்து.

1 புட்டி ரூ. 7. ஏழைகளுக்கு ரூ. 5.

கே. எஸ். பதி வைத்தியசாலை பழனி, S. I. R.

செங்கற்பட்டு.

மார்ச்சுமீ இவ்வூரில் மழையில்லாதநிமித்தம் ஆஸ்திகர்களின் சிரத்தையினால், என். வி. கிருஷ்ணமூர்த்தி தீக்ஷிதர், பி. என். நாராயணசாஸ்திரிகள் முதலியவர்களைக்கொண்டு மஹா வருணஜபமும், கல்போக்தப் பிரகாரம் பர்ஜன்ய சாந்தியும் ரொம்ப உத்ஸாகத்துடன் மகா-ள-ள-ஸ்ரீ அகோரம் அய்யர் முதலியவர்கள் முயற்சியினால் நடந்து முடிவுபெற்றது. பிறகு சுமார் 10நாளைக்கு மழை பெய்து ஆஸ்திக்யத்தை நிலைநிறுத்தச் செய்தது மிகவும் ஸந்தோஷிக்கத்தக்கது.

மார்ச்சுமீ முதல்வாரத்தில் பிரம்மஸ்ரீ ஈங்கனூதபுரம், ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் அவர்களால் மகா-ள-ள-ஸ்ரீ எம். ராகவாசாரியார் அவர்கள் கிரஹத்தில், மூன்று நாளைக்கு முறையே, 'தருவசரித்ரம்' 'ஸ்ரீ ருக்மணி கல்யாணம்' 'ப்ரஹ்லாத சரித்ரம்' 8—4—37-ல் 'ஸ்ரீ ராமாவதாரம்' வேதபாடசாலையிலும்நடைபெற்றது.

16—4—37 வெள்ளிக்கிழமை, பிரம்மஸ்ரீ மண்டகொளத்தூர் கிருஷ்ணஸ்வாமி பாகவதர் அவர்களால், ஈசுவரன் கோயிலில் 'பாத மஹிமா' என்னும் காலக்ஷேபம்நடைபெற்றது.

13—4—37 செவ்வாய்கிழமை வருஷப்பிறப்பன்று பிரம்மஸ்ரீ மதுரை எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் வேதபாடசாலையில் புதுவருஷப்பிறப்பை உத்தேசித்து பஞ்சாங்க படனமும் 'பஞ்சாங்கத்வம்' என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யஸிக்கப்பட்டது.

17—4—37 ஷை சுப்பிரமணியசாஸ்திரிகள் அவர்களால் வேதபாடசாலையில் ஸ்ரீபரமஹம்ஸ தஞ்சை ஸ்வாமிகள் அக்ராசனத்தின் கீழ் 'ஸ்வதர்மம்' என்னும் விஷயம் உபன்யஸிக்கப்பட்டது.

18—4—37 ஷை சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் வேதபாடசாலையில் 'ஸநாதனிகளும் ராஜீயமும்' என்னும் விஷயத்தை ஸ்ரீ பரமஹம்ஸ தஞ்சை ஸ்வாமிகள் அக்ராசனத்தின்கீழ் உபன்யஸித்தார். பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் தன் உபன்யாஸத்தில் ஸத்யே ஸ்வதர்மமென்றும் இன்னும் இதரமான ஸாதாரணங்களைப்பற்றியும் பேசிவிட்டு, ஸநாதனிகளுக்கும் காங்கிரஸுக்கும்,உள்ள வித்யாஸங்களையும் ஸநாதனிகள் தேசியத்திற்கு முட்டுக்கட்டைகள் என்று சொல்லப்படுவது சுத்த பிசகென்றும், ஸநாதனிகளே உண்மை தேசியவாதிகளென்றும், தற்காலத்தில் காங்கிரஸ் செய்துவரும் தவறுகளையும் தெளிவாய் விளக்கினர்.

செங்கற்பட்டுஜில்லா ஹிந்துமதப்பக்கமிட்டியின் 3 வது வருஷபூர்த்திக் கொண்டாட்டம் 21, 22தேதிகளில் நடைபெறும். பலபண்டிதர்களும் பல கனவான்களும் வருவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ந. நிருபர்.

கல்கத்தா.
நூதன பஞ்சாங்கபடனம்.

இவ்விடம் பவானிப்பூர் ஹரீஷ் முகர்ஜீரோட் 68/3 A நம்பர் க்ருஹத்தில் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீ கோதண்டராமபஜனாலயத்தில் சென்ற சித்திரை-மீ 1உ (13-4-37) செவ்வாய்கிழமை அன்றையதினம் ஸ்ரீ உபய வேதாந்தாசார்ய, ஸிம்மாஸநாதிபதி, வித்வான், பண்டிதவர்ய, பார்ஹஸ்பத்ய தரீண, வேலாமூர், ஸ்ரீ வேதாந்தாசார்ஸ்வாமிகள் அவர்களால் நூதன பஞ்சாங்கபடனம் அதிவிமர்சையாக செய்யப்பட்டது. அதில் நாளது வருஷத்திய நவக்ரஹாதி பத்யங்களை விசேஷமாக உபந்யஸித்ததுடன் கும்பகோணம் ஸ்ரீசங்கரபகவத் பாதாசார்யாள் அநுக்ரஹம் பெற்று வெளியாகிவரும் ஸ்ரீ கும்பகோணம் மடத்து பஞ்சாங்கத்தின் விசேஷமான கௌரவத்தையும் அந்தபஞ்சாங்கத்தை அனுஷ்டானம் செய்யும் ப்ராம்மண உத்தமர்களின் மேன்மையையும் ப்ராம்மண ஜன்மாவின் உத்கர்ஷணத்தால் பக்தி மநுஸ்ம்ருதி, பகவத்கீதை, உபநிஷத்துகள் இவைகளில் இருக்கிற ஆதாரத்துடன் கர்ணாம்ருதமாய் உபந்யஸித்தார்கள். அத்துடன் ப்ராம்மணன் கர்மாவினாலேயே ஜநகாதிகளைப் போல் ஸித்தியை அடையக்கூடும் என்கிற விஷயம் மேல் கண்ட உபந்யாஸத்தில் ரொம்பவும் அழகாகயிருந்தது. ஷை உபந்யாஸத்தை சுமார் 70, ஆஸ்திக சிரோமணிகள் கேட்டுச்ரவணாநந்தமடைந்தார்கள், பிறகு பானக, நீர்மோர், விசிறி, ப்ரஸாத, விநியோகத்துடன் ஷை உபந்யாஸம் முடிவடைந்தது.

கிட்டு சாஸ்திரிகள்.

த்ரியம்பகபுரம்.
உத்ஸவம்.

செங்காலிபுரத்திற்கு இரண்டுமைல்கிழக்கேயுள்ள ஷை க்ஷேத்ரத்தில் ஸ்ரீ மஹா சாஸ்தாவின் ப்ரமோத்ஸவம் நன்றாக நடந்து இன்று ஈச்வர ௵ சித்திரைமீ 1உ செவ்வாய்கிழமை முடிவு அடைந்தது. இந்தப் பக்கத்திலுள்ள ஆஸ்திகர்களும், செங்காலிபுரத்திலுள்ள ஆஸ்திகர்களும் ஏராளமாக வந்தனர். பிரஸங்க பாஜு பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகளாலும், பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்களாலும் அரிய விஷயங்கள் உபன்யஸிக்கப்பட்டன. ஸ்ரீ சாஸ்தாவின் ப்ரஸாதம் எங்கும் உண்டாகவேண்டுமாய் கோரப்படுகிறது.

நமது நிருபர்.

முக்கிய கவனிப்பு.

திருப்பந்துருத்தியில் சுமார் 300வருஷங்களுக்குமுன் ஸ்ரீ அமர்சிங்கு மகாராஜா காலத்தில் ஜீவன் முக்தி சமாதியில் அடைந்தவரும் ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியென்னும் அரிய நூலை இயற்றியவருமான ஸ்ரீ தீர்த்தநாராயண குருஸ்வாமிகள் ஸ்ரீ விஜய சரித்திரமும் அவரைப்பற்றிய ஆராய்ச்சியும் தெரிவிக்குமாறு கோரப்படுகிறது.

ஸ்ரீ தீர்த்தநாராயண குருஸ்வாமி மூர்த்தி மடாதிபதி,
திருப்பந்துருத்தி, ஷை யூர் P. O. (தஞ்சாவூர்).

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆசிரிய நிலையம்.

29-4-1937

4 [illegible]

22 17

215163

215183

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ஹு சித்திரை-மீ 17வ 1937-ஹு ஏப்ரல்-மீ 29வ | ஸஞ்சிகை 17

ஆர்ய தர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0.
இஞ்சு 1 க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

புனா மாருதி கோவில் உத்ஸவம்.

வாத்யம் வாசிக்கத் தடை
ஹிந்துக்களின் ஸத்யாக்ரஹம்.

புனாவிலுள்ள சோன்யா மாருதிகோவிலில் ஸ்ரீ ஹநுமாத்ஜயந்தி நடத்த ஏற்பாடாகிறது. ஸமீபத்திலுள்ள ஒரு மசூதியின்பிரார்த்தனைக்கு இடைஞ்சல் ஏற்படுமென்ற காரணத்தால் மேற்படி கோவிலில் வாத்யம் வாசிக்கக் கூடாதென்று அதிகாரிகள் உத்திரவு போட்டிருக்கிறார்கள். ஹிந்துக்கள் பலமாக இதைக் கண்டித்தும் கிளர்ச்சி செய்தார்கள். மணி அடிப்பதுகூட கூடாதென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பஜனை கோஷ்டிகளும் தடுக்கப்பட்டன. ஹிந்துக்கள் ஹர்த்தால் செய்திருக்கிறார்கள்.

தடை உத்திரவை மீறி பல பிரபல ஹிந்துக்கள் பஜனை முதலியவைகளை நடத்தினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திருவாங்கூருக்குத் தீண்டாதாரின் யாத்திரை.

சென்னையிலிருந்து ஒரு தீண்டாதார்கூட்டத்தார் திருவனந்தபுரம் சென்று அங்குள்ள கோவில்களைப் பரிசுத்தமாக்கிவிட்டு வந்தார்கள். அவர்களுக்குச் சென்னையில் உபசாரம் நடந்தது. ஒரு திவான்பஹதூர் அய்யங்கார் இந்தக் கொண்டாட்டத்தில் தலைமை வகித்து மனிதர்களுள் ஜாதி வித்யாஸம் தொலைய வேண்டும் என்று கூறினார்.

புனாவிலிருந்தும் தீண்டாதார் கூட்டம் ஒன்று திருவாங்கூருக்கு யாத்திரை புறப்பட ஏற்பாடாகி இருக்கிறதாம்.

விக்ரஹங்கள் உடைக்கப்பட்டன.

ஜான்ஸியைச் சேர்ந்த மாராஸிப்பூரில் ஹிந்து தேவாலயங்களில் உள்ள விக்ரஹங்கள் முஸ்லீம் கலகக்காரர்களால் உடைக்கப்பட்டன. ஹிந்து முஸ்லீம் மனஸ்தாபம் அங்கு மிகுதியாக இருந்து வருகிறது.

கொச்சி மஹாராஜாவின் ஸம்ப்ரோக்ஷணை உத்திரவு.

கொச்சி ஸம்ஸ்தான எல்லையிலுள்ள கூடல் மாணிக்கம்கோவிலில் திருவாங்கூர் தேவாலய பூஜகர்கள் நுழைந்து பூஜை செய்ததற்காக மேற்படி கோவிலுக்கு உடனே ஸம்ப்ரோக்ஷணை நடத்தும்படி கொச்சி மஹாராஜா உத்தரவு செய்துகொள்ள விஷயம் ஏற்கனவே பிரசுரமாயுள்ளது. தீண்டாதார் பிரவேசிக்கும் கோவிலில் பூஜை செய்யும் நெடும்பள்ளி நம்பூத்ரிபாடும் அவரைப் போன்ற 21 குடும்பத்தினரும், பிராயச்சித்தம் செய்து கொள்ளாதவரை கொச்சியிலுள்ள எந்தக் கோவிலிலும் நுழையக் கூடாதென்றும், குளங்களில் ஸ்நானம் செய்யக் கூடாதென்றும், அந்த உத்திரவில் சொல்லியிருக்கிறார். மேற்படி நெடும்பள்ளி நம்பூத்ரி பாட் கூடல் மாணிக்கம் கோவிலில் நுழைந்து பூஜை செய்யலாமென்று திருவாங்கூர் அரசர் போட்டிருந்த உத்திரவைக்கூட கொச்சி மகாராஜா தமது அதிகாரத்தைக் கொண்டு தடுத்துத் தடை உத்திரவு போட்டு விட்டார்,

பிரிடிஷ் ரெஸிடெண்டும், இத்தத் தகராறு முடியும் வரையில் பிராயச்சித்தத்திற்குள்ளாகியுள்ள நம்பூத்ரிகள் ஒருவரும் கொச்சி உத்திரவை மீறிக் கிளர்ச்சி செய்யக்கூடாதென்பதை ஆதரித்து நிற்கிறார்.

கூடல் மாணிக்கம் கோவிலில் உண்மையான பாத்யம் கொச்சி மஹாராஜாவுக்குண்டா இல்லையா என்பதைக் சிலர் சர்ச்சை செய்து வருகின்றனர்.

சென்னை மந்திரிகளின் நிர்வாஹ திட்டம்.

100க்கு 25 வீதம் நிலவரியைக் குறைக்க ஏற்பாடு.

சென்னையில் மந்திரி ஸபையார் தாங்கள் செய்யப்போகும் வேலைகளைப்பற்றி யோஜித்துத் திட்டம் வெளியிட்டிருக்கிறார்கள். முக்யமாக நிலவரியை 100க்கு 25 வீதம் குறைக்க முடிவுசெய்திருக்கிறார்கள். பூர்ண மதுவிலக்கு தற்காலம் உடனே ஸாத்யமல்லவென்றும் நினைக்கிறார்கள்.

இவர்களுடைய வேலைத்திட்டம் கவர்னராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் கடன்வாங்க முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

பட்டாபிஷேகத்திற்கு 7 லக்ஷம் பவுன் செலவு.

6வது ஜார்ஜ் மன்னரின் பட்டாபிஷேக வைபவத்திற்காக ஸர்க்கார் பொதுப்பணத்திலிருந்து 7 லக்ஷம் பவுன் செலவு செய்ய உத்தேசித்திருப்பதாகக் காமன்ஸ் ஸபையில் அறிவிக்கப்பட்டது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஜிட் ஜெம்ஸெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

கடலூர் பிராம்மண ஸபை.

ஓர் மறுப்பு.

திருப்பாதிரிப்புலியூர் அட்வோகேட் ஸ்ரீமான் டி. ஈ. சடகோபாசாரியர் எழுதுகிறார்:—

நாளது ஏப்ரல்மீ 22உ 'ஆர்யதர்மம்' பத்திரிகையில் ஸ்ரீமான் ஸோமதேவசர்மா அவர்கள் எழுதிய 'வாரக்குறிப்புகள்' என்கிற ப்ரகரணத்தில் பின்வருமாறு காணப்படுகிறது —

'அஸப்ய வார்த்தை!! கடலூர் பிராமண ஸபையில் ஓர் தேசிய பிராமணரைப் பேசச் சொல்ல அவர் தான் யார்! ஸபை எத்தகையது! என்பதை மறந்து தான் கற்ற கிளிப்பிள்ளை பாடத்தை ஒப்புவித்தார். அத்தகையவர்களை இனி எந்த வைதிகஸபையுமழைக்கலாகாதென கடலூர் ஸபை ஓர் பாடங்கற்பிக்கிறது! மற்றவை எச்சரிக்கையுடனிருக்குமென நம்புகிறோம்.''

இக்குறிப்பைப்பற்றி என் மித்ரர்கள் சிலர் என்னிடம் வருத்தத்துடன் ப்ரஸ்தாபிக்கநேர்ந்தது. இதற்கு நான் பதில் எழுதவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தியும் நான் வெகுதூரம் யோசிக்கலானேன். ஒருக்கால் இது பலருக்குக்கண்ணில் படாமலிருக்கலாம், பட்டிருந்தும் விவரம் புலப்படாமலிருக்கலாம் அப்படியிருந்தால் நான் பதில் எழுதுவதால் தூங்குபவரைத் தட்டி எழுப்புவது போல் முன் கவலிக்காதவர்களைக் கூட இப்போது கவனிக்கும்படி செய்வது யுக்தமாகுமாவென்பது முதலான பல ஸந்தேஹங்கள் என் மனதில் உதித்தன. கடைசியாய் இதற்கு நான் பதில் எழுதாமற்போனால் நான் இதை ஒப்புக்கொண்டுவிட்டதாகவே அர்த்தமாகுமாகையால் அது மேற்குறித்த ஸபையின் நான் அத்யக்ஷ பதவியை வஹிப்பது பற்றி என் கடமைக்கு விருத்தமாகுமென்று நிஷ்கர்ஷித்து இதை எழுதலானேன். மேலும் அவ்வுபந்யாஸம் நடந்த ஸமயத்தில் நான் கூடவிருந்தபடியாலும் உபந்யாசகர் மிகவும் கௌரவத்துக்குப் பாத்ரமான எனது மித்ரராகையாலும் நான் இது விஷயத்தில் உபேக்ஷிப்பது பொருந்ாதென்கிற எண்ணமும் நான் இங்கெழுதுவதற்குக் காரணமாகும்.

சர்மா அவர்கள் பெயர்குறிப்பிடாமல் கண்டனம் செய்திருந்தபோதிலும் எழுதியமாதிரியைக் கொண்டே எல்லோரும் ஆவல்கொண்டு யாரென்று விசாரித்துத்தெரிந்துகொண்டிருப்பார்களாகையாலும் ஏற்கனவே தினப்பத்திரிகைகளில் விவரங்கள் வெளிவந்திருப்பதாலும் பெயரை மறைப்பதில் பிரயோசனமிருப்பதாக எனக்குத் தோன்றாமையாலும் இம்மாதிரியான ஸந்தர்ப்பங்களில் மறைவிடமாய் பேசுவது மேன்மேலும் விபரீத பலத்துக்கே ஹேதுவாகிறதென்பது அநுபவத்தில்தெரிவதாலும் எல்லோரும் அறியும்படி வியக்தமாகச் சொல்வதேயுக்தமென்று நான் நினைக்கிறேன்.

நாளது ஏப்ரல்-மீ 14உ சென்னை அட்வகேட் ஸ்ரீமான் கே. பாஷ்யமய்யங்காரவர்கள் ஓர் கேஸ் விஷயமாக மஞ்சக்குப்பம் வந்திருந்த ஸந்தர்ப்பத்தில் அங்குள்ள கடலூர் பிராமணஸபை கார்யதர்சியவர்கள் 'பிராமணரும் ராஜீய முயற்சியும்' (Brahman and Political work) என்கிற விஷயத்தைப் பற்றி உபந்யாஸம் செய்யவேண்டுமென்று அவரைக்கேட்டுக் கொண்டதற்கிணங்கி அன்று ஸாயங்காலம் உபந்யாஸம் நடைபெற்றது. இதைப்பற்றித்தான் சர்மா அவர்கள் முன் கூறியவாறு தூஷித்தெழுதியிருக்கிறார். அவருடைய தூஷணங்கள் சிறிதும் பொருந்தாவென்று நானும் என்னைப்போல் நேரில் அவ்வுபந்யாஸத்தைக் கேட்டவர்களும் அபிப்ராயப்படுகிறோமென்பதையும் சர்மா அவர்கள் அதை நேரில் கேட்டவரல்லவென்றும் முதலெடுப்பில் தெரிவிக்கப்ராப்தமாகும். ஸ்ரீமான் பாஷ்யமய்யங்காருடைய உபந்யாஸத்தில் 'அஸப்யவார்த்தை' என்று அவமதித்துச் சொல்லக்கூடிய தொன்றுமிருந்ததாகப் புலப்படவில்லை. ஏனையோர் போலவர் தாம்சொல்வதே ஸர்வ ப்ரகாரத்திலும் ஒப்புக்கொள்ளத்தக்கதென்று வற்புறுத்தாமல் தனக்குள்ள ஸ்வதஸ்ஸித்தமான விநயத்துடனும் ஆர்ஜவத்துடனும் ப்ராமண ஸமுதாயத்துக்கிக்காலத்தில் நேர்ந்துள்ள பலப்ரகாரமான கஷ்டங்களைக்குறிப்பிட்டு அவைகளுக்குத் தகுந்த பரிஹாரம் தேடவேண்டுமென்கிற ஆவலையை வெளியிட்டு அதுவிஷயமாகத் தனக்குத்தோன்றும் சிலவம்சங்களை ஸூசிப்பித்து அவைகளைத் தனக்குப் புலப்பட்டவரையில் ஏதோ நிக்தர்சனம் செய்தது மாத்ரமேயன்றி இது விஷயமாக நிர்ணயம் செய்யத் தமக்கு அதிகாரமில்லையென்றும் வேறு தகுந்த அதிகாரிகள் ஒருங்கு கூடி எல்லோருக்கும் நன்மைதரக்கூடிய நிர்ணயங்களைச் செய்யவேண்டிய தவசியமென்றும் கூறினர். இவ்வகையாக அவர்பேசிய விஷயங்கள் யாருக்கும் வெறுக்கத்தக்கதாயிருந்ததாக அங்கிருந்தவர்களுக்குத் தோற்றவில்லை. அவர் ஸூசிப்பித்த பரிஹாரங்களில் சிலதைக் குறித்து அபிப்ராய பேதம் இருக்கக்கூடும். அன்று அவகாசமில்லாததால் அதுவிஷயமாகச் சர்ச்சைசெய்ய நேரிடவில்லை. ஆனால் அது காரணமாகவே நாம் அவரை அலக்ஷ்யதா புத்தியுடன் தூஷிப்பது நம் கௌரவத்துக்கும் ஆர்யதர்ம பத்திரிகையின் பெருமைக்கும் பொருந்தாதென்று நினைக்கிறேன். ஸநாதனதர்மத்தை அவலம்பித்த நமக்கு மற்றெல்லாரையும் விடப் பொறுப்பு அதிகமென்பது உணரத்தக்கது. பிறர் நம்மைப்பற்றிப் பலவாறு வாய்க்கு வந்தபடி பேசியபோதிலும் அவையெல்லாம் வெகுவாய் பாராட்டப்படமாட்டா. ஆனால் நாம் அஜாக்ரதையாக ஏதாவது சொன்னால் அது வெள்ளைத்துணியில் கறுப்புப்புள்ளிபோல் எல்லோருக்கும் ஸ்பஷ்டமாய்ப் புலப்படுமாகையால் நாம் எந்த ஸந்தர்ப்பத்திலும் அதிக ஜாக்ரதையுடன் முன்னடி பார்த்துநடக்கவேண்டுமென்பது ஒருநாளும் மறக்கத்தக்கதல்ல. நம்மைக்குறித்துப் பிறர் நிந்தா வசனங்கள் ப்ரயோகிப்பதைக் கேட்டு அப்பழக்கத்தினால் நாமும் அவ்வசனங்களைக் கையாட எத்தனிப்பது யுக்தமாகாது. நமக்கு விலக்ஷணமாயமைந்துள்ள பரிசுத்தியையும் கௌரவத்தையும் காம்பீர்யத்தையும் ஸத்வகுணத்தையும் அவைக்கநுகுணமான மநோவாக்காயங்களுடைய வ்யாபாரங்களையும் இக்காலத்தில் கூட நாம் சிறிதும் கைவிடாது மற்றோனைவரும் நம் நிறத்தில் வியக்கம் பயம் பக்தி முதலியதைப் பாராட்டும்படி நடந்துகொள்வதே நமக்கு ஸ்வரூபமாகும்

மேலும் நம்முடன் அபிப்ராய பேதமுள்ளவர்கள் சொல்வதை நாம் கேட்டுத்தெரிந்துகொள்வதால் அவர்கள் மனதிலிருக்கும் சங்கைகள் நமக்குப் புலப்படுவதால் நாம் தக்க ஸமாதானங்கள் கூறி அவைகளைப் பரிஹரிக்க ஸந்தர்ப்பம் நேரிடும். அதனால் நம் தேசத்துக்கும் பெரிய உபகாரம் செய்ததாகும். அப்படிக்கன்றி அவர்களை நாம் விலக்கிவைத்தால் ஒருவர்க்கொருவர் மனோபாவம் தெரியாமல் மேன்மேலும் வைமத்யத்துக்கே காரணம் ஏற்படும். தவிரவும் நாம் ஏதோ விதேசியப் பிராமணர்போல் வேறு சிலரை தேசியப் பிராமணரென்று வகுத்துப்பேசுவதும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

சர்மா அவர்கள் எனக்கு மிகவும் ஆப்தராகையால் நான் இவ்வாறெழுதியதைப்பற்றி அவர் வைமனஸ்யம் கொள்ளாது என் அபிஸந்தியை நன்குணர்வாரென்று நம்புகிறேன். அவரிடத்தும் அவராலாதரிக்கப்படும் ஆர்ய தர்ம பத்திரிகையிடத்தும் எனக்குள்ள அபிமானமும் நான் இதை எழுதியதற்கு ஹேதுவாகும்

ஆத்தன்குடி ஸநாதன தர்ம மஹாஸபை

நான்காவது ஆண்டு நிறைவு விழா

ஈசுவர-ஹு சித்திரை-மீ 11உ வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு குருபூஜை மடத்திலிருந்து மேளதாளத்துடன் விழாத் தலைவர், மதுரை ராவ்ஸாஹிப் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்களை அழைத்து விநாயகர் ஆலயத்தில் தரிசனம் செய்துகொண்டு, ராம. குமு. சு. வேதபாடசாலைக்கு வந்து வேதபாடசாலை மாணவர்கள் பிரம்மஸ்ரீ ஜெ ஸாமிநாதய்யரவர்கள் கடவுள் வாழ்த்துப்பாட சபை ஆரம்பமாயிற்று. சபையின் தலைவர் பிரம்மஸ்ரீ திரு. மு. முத்துஸாமி அய்யங்காரவர்கள் சபாபண்டிதர் பிரம்மஸ்ரீ கல்யாணசுந்தர கனபாடிகள் இருவரும் வடமொழியில் தாங்கள் தயாரித்த உபசாரப் பத்திரத்தையும் உபதலைவர் ஸ்ரீமான் சு. வீர. கதிரேசச் செட்டியாரவர்கள் சபையின் தமிழ் உபசாரப் பத்திரத்தையும் வாசித்துக்கொடுத்தபின் பிரம்மஸ்ரீ ஜெகதீசய்யரவர்கள் அறிக்கையைப் படித்தார்கள்.

தலைவரவர்கள் முகவுரையில் ஸநாதர்ம தத்துவங்களை விளக்குகையில் ஸநாதனதர்மம் பொது தர்மமென்றும், வர்ணாச்ரமதர்மம் வர்ணாச்ரமிகளுக்கு உரியதென்றும், சுதர்மம் ஒவ்வொரு ஜாதியினரும் அனுஷ்டிக்கத்தக்கதென்றும், விஸ்தாரமாக தகுந்த ஆதாரங்களுடன் ஒருமணிநேரம் பேசினார்கள். மாணவர். நாச்சாள் ராமாயண வசனத்தில் கலையாழிப்படலம் வரை சொற்பொழிவாற்றிய பின், புதுக்கோட்டை மதுரையிலிருந்து வந்திருந்த பிரபல வித்வான்கள் பிரம்மஸ்ரீ கனகராஜய்யர், ராகவசாஸ்திரிகள்: ராமச்சந்திர சாஸ்திரிகள், சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அட்வகேட், வெங்கடாசலமய்யர், ராமச்சந்திரசாஸ்திரிகள், காரைக்குடி விஜயன் ஆசிரியர், ஸ்ரீமான் ஆவி. லெ. அருணாசலம் செட்டியாரவர்கள் முதலானோர் சொற்பொழிவாற்றினர்.

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்கான சௌக்கியம். தங்கமெடல் பரிசம் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூக பஞ்சசதீ'

(15—4—37 தொடர்ச்சி)

54. அநுமித குச காடின்யாம்
அதிவக்ஷ: பீடம் அங்கஜன்மரிபோ: |
ஆனந்ததாம் பஜே தாம்
ஆனங்க ப்ரம்ஹ தத்வ போதி ஸிராம் ||

அநுமித குச காடின்யாம் - ஊஹித்தறியவேண்டிய காடின்யத்தையுடைய (உறுதியையுடைய) ஸ்தனங்களையுடையவளும், அங்கஜன்மரிபோ: - மன்மதனுடைய சத்ருவான பரமசிவனுடைய அதி வக்ஷ: பீடம் - மனதில் (மனதிற்கு), ஆனந்ததாம் - ஆனந்தத்தைக் கொடுப்பவளும், ஆனங்க ப்ரம்ஹதத்வ - காமசாஸ்த்ரத்தை, போதி ஸிராம் - போதிக்கும் வழியாயுமுள்ள, தாம் - அந்த ஸ்ரீகாமாக்ஷியை, பஜே - பஜிக்கிறேன்.

1. அங்கமென்றால் மனது என்றர்த்தம். காமமானது மனதிலிருந்து உண்டாவதால் மன்மதனை மனதிலிருந்து பிறந்தவனாக அங்கஜனென்றும் மனஸிஜனென்றும் சொல்வது வழக்கம்.

55. ஐக்ஷிஷி பாசாங்குசதா—
ஹஸ்தாந்தம் விஸ்மயார்ஹ வ்ருத்தாந்தம் |
அதிகாஞ்சி நிகமவாசாம்
ஸித்தாந்தம் சூலபாணி சுத்தாந்தம் ||

பாசாங்குசதா ஹஸ்தாம் - பாசம், அங்குசம் இவற்றைக் கைகளிலுடையவளும், விஸ்யமார்ஹ வ்ருத்தாந்தம் - ஆச்சர்யப்படத்தக்கதான சரித்திரத்தையுடையவளும், நிகமவாசாம் - வேத வாக்யங்களுக்கு (அதாவது வேதங்களுக்கு), ஸித்தாந்தம் - முடிவான தாத்பர்யமாயிருப்பவளுமான, சூலபாணி சுத்தாந்தம் - பரமசிவனுடைய பத்னியை, அதிகாஞ்சி - காஞ்சீபுரியில், ஐக்ஷிஷி - பார்த்தேன்.

1. 'விஸ்மயார்ஹ வ்ருத்தாந்தம்' - இதேமாதிரி 'அத்புத சாரித்ரா' என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமமிருக்கிறது. இதனால் அம்பிகையைப்பற்றிய பண்டாஸுர வதம், மஹிஷாஸுர வதம் முதலியவைகள் சொல்லப்பட்டதுடன் குறிப்பாக ஸ்ரீ காமாக்ஷியால் செய்யப்பட்ட தபஸ், பந்தகாஸுரவதம், ஸ்வர்ண காமாக்ஷி ப்ராதுர்பாவம் முதலிய (காமாக்ஷீ விலாஸத்தில் சொல்லப்பட்ட) வ்ருத்தாந்தங்களும் குறிக்கப்பட்டன.

56. ஆஹித விலாஸ பங்கீம்
ஆப்ரம்ஹ ஸ்தம்ப சில்ப கல்பனயா |
ஆச்ரித காஞ்சீம் அதுலாம்
ஆத்யாம் விஸ்பூர்த்திம் ஆச்ரியே வித்யாம் ||

ஆப்ரம்ஹ ஸ்தம்ப - ப்ரம்ஹா முதல் புழுமுடிய எல்லா ஜீவன்களையும், சில்ப கல்பனயா - ஸ்ருஷ்டிப்பதினால், ஆஹித விலாஸ பங்கீம் - தன் லீலைகளின் பேதங்களையுடையவளும், ஆச்ரித காஞ்சீம் - காஞ்சீபுரியை அடைந்தவளும், அதுலாம் - இணையற்றவளும் ஆத்யாம் விஸ்பூர்த்திம் - ப்ரம்ஹத்தின் முதன் முதலான உணர்ச்சியாயிருப்பவளுமான, வித்யாம் - வித்யா (ஞான) ரூபிணியை, ஆச்ரியே - ஆச்ரயிக்கிறேன்.

1. அம்பிகையானவள் ஸகல ஜீவன்களுடைய ஸ்ருஷ்டிக்கும் காரணமாயிருப்பதால் 'ஆப்ரம்ஹகீடஜனனீ' என்றும் 'ஆப்ரம்ஹாதி பிபீலிகாந்த ஜனனீ' என்றும் இங்கு சொல்லப்பட்டதுமாதிரி வர்ணிப்பது வழக்கம். ப்ரம்ஹா என்ற பதமானது ஸகல ஜீவன்களுடைய ஸ்தூலசரீரங்களின் ஸமஷ்டி ரூபமான ஹிரண்ய கர்ப்பரைக்குறிக்கும். ஜீவன்களுக்குள் முக்யமான அவரையும், ஜீவன்களில் கடைசியாக இருக்கும் புழு, எறும்பு முதலியவற்றையும் சொல்லியிருப்பதால் நடுவாக இருக்கும் ஸகல ஜீவன்களையும் சேர்த்துச் சொல்லப்பட்டது. ஸ்தம்பமென்பது அதீந்த்ரிய மானதும் (இந்த்ரியங்களுக்குத் தென்படாததும்), வைத்ய சாஸ்த்ரங்களில் நகேருகம், மகேருகம் என்று இருபெயர்களால் சொல்லப்படுவதுமான புழுப்போன்ற ஜீவ விசேஷம்.

2. ப்ரளயகாலத்தின் போது (மறுபடியும் ஜனிக்கவேண்டிய) ஸகல ஜீவன்களையும் தன்னிடம் அடக்கிக்கொண்டு ப்ரம்ஹமானது ஸ்வாத்மாராமமாய் இருக்கும்போது, அவ்விதமான ஜீவன்களுடைய கர்ம வாஸனையால் திரும்பவும் ஸ்ருஷ்டியுண்டாகவேண்டிய காலம் வந்தவுடன் அப்படி ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்பதான ஒரு உணர்ச்சியானது ப்ரம்ஹத்தினிடம் உண்டாகிறது. இதையே ச்ருதியில் 'ஸோऽகாமயத' என்பது முதலான வாக்யங்களினால் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமான உணர்ச்சியை ஸ்பந்தனம், ஸ்பூர்த்தி, ஸ்பந்தம் என்று சொல்லப்படும். இதை (பாலானது காய்ச்சப்படும்போது) பொங்குவதற்கு முன்னமிருக்கும் தோற்றத்திற்கு (கொதிப்புக்கு) உபமிக்கப்படும். இந்த ஸ்பூர்த்தியானது மாயையின் (அம்பிகையின்) கார்யமானதால் அதையே அம்பிகையின் ரூபமாகச்சொல்லப்படும். அதுவே ஸ்ருஷ்டிக்கு முதல் முதலாக ஏற்படுவதால் 'ஆத்யாம் விஸ்பூர்த்திம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

57. மூகோऽபி ஜடில துர்கதி -
சோகோऽபி ஸ்மரதி ய: க்ஷணம் பவதீம் |
ஏகோ பவதி ஸ ஜந்து:
லோகோத்தர கீர்த்திரேவ காமாக்ஷி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷியே! ய: - எவனொருவன், மூகோऽபி- ஊமையாயிருந்தபோதிலும், ஜடில துர்கதி சோகோऽபி - மிகவும் சிக்கலான கஷ்டங்களால் துக்கப்படுகிறவனாயிருந்தபோதிலும், பவதீம் - உன்னை, க்ஷணம் ஸ்மரதி - ஒரு க்ஷணநேரம் ஸ்மரித்தானேயாகில், ஸ ஏகோ ஜந்து: ஏவ - அந்த ஒருவன் மட்டுமே, லோகோத்தர கீர்த்தி: - மிகவும் மேன்மையான கீர்த்தியுடையவனாக, பவதி- ஆகிறான்.

58. பஞ்சதச வர்ண ரூபம்
கஞ்சன காஞ்சீ விஹார தௌரேயம் |
பஞ்சசரீயம் சம்போ:
வஞ்சன வைதக்த்ய மூலம் அவலம்பே ||

பஞ்சதசவர்ணரூபம்- பஞ்சதசாக்ஷரீ ரூபமுடையதும், காஞ்சீ விஹார தௌரேயம் - காஞ்சீ பட்டணத்தில் விளையாடுவதில் முன்னிற்பதும், சம்போ: வஞ்சன வைதக்த்யம் — பரமசிவனை வஞ்சிப்பதில் (மோஹிப்பதில்) ஸாமர்த்தியமுடையதும், பஞ்ச சரீயம் - மன்மதனைச்சேர்ந்ததான (காமரூபிணியான), கஞ்சன - ஒரு மூர்த்தியை, அவலம்பே - சரணமடைகிறேன்.

1. பஞ்சதசாக்ஷரீ (ஸ்ரீ) வித்யையானது அம்பிகையின் சரீரமாயிருப்பது

'ஸ்ரீமத் வாக்பவ கூடைக ஸ்வரூப முக பங்கஜா |
கண்டாத: கடிபர்யந்த மத்யகூட ஸ்வரூபிணீ |
சக்தி கூடைகதாபன்ன கட்யதோ பாகதாரிணீ ||'

என்ற 'ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம'த்திய நாமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

59. பரிணதவதீம் சதுர்த்தா
பதவீம் ஸுதியாம் ஸமேத்ய ஸௌஷும்னீம் |
பஞ்சாசதர்ண கல்பித-
பதசில்பாம் தாம் நமாமி காமாக்ஷீம் ||

ஸுதியாம் - ஞானவான்களுடைய, ஸௌஷும்னீம் பதவீம்- ஸுஷும்னா மார்கத்தை, ஸமேத்ய - அடைந்து, சதுர்தா - நான்கு விதமாக, பரிணதவதீம் - பேதங்களடைந்திருப்பவளாயும், பஞ்சாசதர்ண கல்பித - ஐம்பது அக்ஷரங்களாலாகிய, பதசில்பாம் - பதங்களின் ரூபமாயிருப்பவளுமான, தாம் காமாக்ஷீம் - அந்த காமாக்ஷீ தேவியை, நமாமி - நமஸ்கரிக்கிறேன்.

1. முந்திய ச்லோகத்தில் அம்பிகை ஸ்ரீ வித்யாரூபிணியாயிருப்பதைச்சொல்லிவிட்டு, இந்த ச்லோகத்தில் சப்த ரூபிணியாயிருப்பதைச் சொல்லுகிறார். சப்தமானது (வாக்கானது) பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்று நான்கு வகைப்படும். நாதமானது மூலாதாரத்தில் இருக்கும்போது பரா என்ற பெயரோடும் அங்கிருந்து ஸுஷும்னா மார்கமாக மேலே வருகையில் ஸ்வாதிஷ்டானத்திற்கு வரும்போது பச்யந்தி என்றும், அனாஹதத்திற்கு வரும்போது மத்யமா என்றும், அதற்கு மேலாக விசுத்திஸ்தானமான கண்டத்தின் மூலமாய் வெளிவரும்போது வைகரீ என்றும் பெயர்.

'மூலாதாரே ஸமுத்பன்ன: பராக்யோ நாத ஸம்பவ: |
ஸ ஏவோர்த்வதயாநீத: ஸ்வாதிஷ்டானே விஜ்ரும்பித: ||
பச்யந்த்யாக்யாம் அவாப்னோதி ததைவோர்த்வம் சனை: சனை:|
அனாஹதே புத்தி தத்வ ஸமேதோ மத்யமாபித: |
ததா தயோர்த்வ நுன்ன: ஸன் விசுத்தௌ கண்டதேசத: |
வைகர்யாக்ய: .... ||'
இதையே ஸ்ரீமதாசார்யாளும்
'மூலாதாராத் ப்ரதமமுதிதோ யச்ச பாவ: பராக்ய:
பச்சாத் பச்யந்த்யத ஹ்ருதயகோ புத்தியுங் மத்யமாக்ய: |
வ்யக்தே வைகர்யத ருருதிஷோஸ் தஸ்ய ஜந்தோ: ஸுஷும்னா
பத்தஸ் தஸ்மாத் பவதி பவன ப்ரேரிதா வர்ணஸம்ஞா ||'
என்பதாக 'ப்ரபஞ்சஸார'த்தில் சொல்லியிருக்கிறார்கள்.

1. இந்த வைகரீ என்ற வாக்கானது நாம் ஸாதாரணமாகப் பேசுவது. இதையே தான் வாக்கென்று தெரியாதவர்கள் சொல்வார்களே தவிர அறிஞர்கள் வாக்கானது மேலே சொல்லியபடி நான்குவகைப்பட்டதென்றும் அவற்றில் கடைசியானதுதான் வைகரீ வாக்கென்றும் சொல்லுவார்கள்.

'சத்வாரி வாக் பரிமிதா பதானி
தானி விதுர் ப்ராஹ்மணா யே மனீஷிண: |
குஹா த்ரீணி நிஹிதா நேங்கயந்தி
துரீயம் வாசோ மனுஷ்யா வதந்தி ||'

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ சித்திரை-மீ 17௳

கொச்சி திருவாங்கூர் தகராறு.

கொச்சி ஸம்ஸ்தானத்திலுள்ள கூடல் மாணிக்கம் கோவில் விஷயமாக கொச்சி மஹாராஜா பிறப்பித்துள்ள உத்திரவைப்பற்றிப் பத்திரிகைகளில் இருதரப்பு விமர்சனங்களும் ஏராளமாக வெளிவந்த வண்ணமாயிருக்கின்றன. கொச்சி மஹாராஜாவின் உத்திரவானது ஆலயப்பிரவேச வாதிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறது. ஆதலால் சீர்திருத்தக்காரர் திகில் அடைந்து கூச்சல் போடுவதில் ஆச்சர்யப்பட நியாயமில்லை. திருவாங்கூர் ஆலயப்பிரவேச உத்திரவானது நிர்விவாதமாக அங்கீகரிக்கப்பட்டு அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டதாகக் காட்டிய பிரசார மாயையின் வேஷம் வெளுத்துவிட்டது. திருவாங்கூருக்கு ஸமமாக உள்ள கொச்சி ஸம்ஸ்தானமே இந்த ஆலயப்பிரவேச அதர்மத்தை எதிர்க்க முன்னணியில் வந்திருப்பதிலிருந்து கேரளதேசத்தில் எவ்வளவு பெரிய எதிர்ப்பு இருக்கிறதென்பது வெளியாகவில்லையா? தர்மவீரனான கொச்சி மஹாராஜா தமது உத்திரவினால் ஆலயப்பிரவேச அநீதியின் தன்மையையும், தார்மிகர்களின் கக்ஷியின் நியாயத்தையும், அவர்களுடைய பலமான எதிர்ப்பையும் உலகம் முழுவதும் அறிந்து கொள்ளும்படி செய்து ஸநாதநிகளுக்குப் பெரிய உபகாரம் செய்துவிட்டார். இதற்காக தார்மிக உலகம் அவரை எவ்வளவு பாராட்டினாலும் போதாது. ஆலயப்பிரவேச அநீதி உத்திரவானது அமைதியாக அரங்கேறிவிட்டதாகச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தவர்கள், ஸீனியர் ராணியின் நடவடிக்கையாலும், கொச்சி மஹாராஜாவின் உறுதியான தர்ம சிரத்தையாலும் அது சிதறிப்போய் விட்டதை இனி மறைக்கமுடியுமோ?

கொச்சி மஹாராஜாவின உத்திரவுக்குப் பிறகு ஆலயப்பிரவேச விஷயமாகத் திருவாங்கூரில் உள்ள உண்மை நிலைமையும் வெளிவர ஆரம்பித்திருக்கிறது. கொச்சி ராஜ்யத்திலுள்ள கூடல் மாணிக்கம் கோவிலில் திருவாங்கூர் ஸம்ஸ்தான தேவாலய பூஜகர்கள் பூஜைசெய்து வழக்கம். தீண்டாதார் பிரவேசிக்கும் ஆலயங்களில் பூஜை செய்பவர்கள் சாஸ்திரப்படி பிராயச்சித்தத்திற்கு உள்ளாகி விட்டவர்களாகையால் அசுத்தர்களான அவர்கள் கூடல் மாணிக்கம் கோவிலில் நுழையவோ பூஜை செய்யவோ கூடாதென்றும், கொச்சி ஸம்ஸ்தானக் குளங்களில் ஸ்நானாதிகள் செய்யக் கூடாதென்றும், ஏற்கனவே அவர்கள் பிரவேசித்ததோஷத்திற்காக மேற்படிக் கோவிலுக்கு ஸம்ப்ரோக்ஷணத்தை உடனே செய்துவிடவேண்டுமென்றும் கொச்சி மன்னன் உத்திரவு போட்டிருக்கிறார். ஸ்ரீமான் நெடும்பள்ளி நம்பூதிரிபாடு என்கிற பூஜகரும் அவரைப் போன்ற 24 பூஜக குடும்பஸ்தர்களும் பிராயச்சித்தம் செய்து கொள்ளாதவரையில் கூடல் மாணிக்கக் கோவிலில் நுழையமுடியாது. தவிர நெடும்பள்ளி நம்பூதிப்பாடுஎன்பவர் ஏற்கனவேயே தமது குடும்பத்தாரால் பஹிஷ்காரம் செய்யப்பட்டுத் தனியாக வஸித்து வருவதாயும் இப்போது வெளியாகியிருக்கிறது. ஆதலால் திருவாங்கூர் ஆலயப்பிரவேசம் எவ்வளவு பலமாக அங்கு எதிர்க்கப்படுகிறதென்பதும் தெளிவாகிறதல்லவா? கொச்சி மஹாராஜா இவ்வாறு திருவாங்கூர் உத்திரவைக் கவிழ்த்துவிட முன்வந்ததிலிருந்து திருவாங்கூருக்குத் திகில் பிடித்துவிட்டது. ஆதலால் அது கீழ்த்தரமான ஒரு பயமுறுத்தல் உத்திரவை வெளியிட்டிருக்கிறது. கொச்சி மன்னரின் உத்திரவுக்குப் பயந்து பூஜகர்கள் பிராயச்சித்தம்செய்துகொண்டு விட்டால் திருவாங்கூரின் நிலைமை கேவலமாகிவிடுமல்லவா? ஆகையால் கொச்சிராஜாவின் உத்திரவுக்கு உட்பட்டு பிராயச்சித்தம் செய்துகொள்ளும் பூஜகர்களுடைய பாத்யங்களும், படித்தனங்களும் பறிமுதல்செய்யப்படுமென்று திருவாங்கூர் அரசாங்கம் பயமுறுத்தி ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. இந்த பயமுறுத்தலையும் லக்ஷ்யம் செய்யாமல் கார்யங்களை மேல் நடத்திக்கொண்டுபோக கொச்சி அரசாங்கம் தீவ்ரமாகத் துணிந்து நிற்கிறது. ஆங்கிலேயரான ரெஸிடென்ட் அதிகாரியும், கொச்சி திவானும் இந்த உத்திரவை நிறைவேற்றுவதற்கு வேண்டிய கார்யங்களைச் செய்ய முன்வந்திருப்பதும் திருப்தியைக் கொடுக்கிறது

கொச்சியும், திருவாங்கூரும், கேரளதேசத்திலுள்ள முக்ய ஸம்ஸ்தானங்கள். ஆலயப்பிரவேச விஷயமாக இவ்விரண்டும் முரண்பட்ட அபிப்பிராயம் கொண்டிருப்பதில் எதில் நியாயமிருக்கிறதென்பதை அறிவது கஷ்டமல்ல. திருவாங்கூர் அரசர், சிறிய வயதுள்ளவர். இன்றும் நிர்வாஹ அநுபவமும் தன் ஸொந்த அபிப்பிராயத்தை நல்ல வழியில் செலுத்தும் சக்தியும், பெறாதவர். புத்திசாலியாக நினைக்கப்படும் பிறரின் ஆலோசனைப்படியே நடக்கவேண்டியவர். கொச்சிராஜாவோ அப்படியன்று. விருத்த வயதானவர். நிர்வாஹ அநுபவமுள்ளவர். பிரஜைகளின் மனோபாவத்தை நேரில் அறிந்தவர். நவீன பைசாசக்கொள்கைகளுக்கு வசப்படாதவர். ராஜ்யத்தின் பாரம்பர்யதர்மத்தை நிலைநிறுத்துவதில் சிரத்தையும் கவலையும் கொண்டவர். திருவாங்கூர் அரசர் தமது மந்திரியின் துராலோசனைக்கு லகுவில் இணங்கிவிட்டதுபோல் இவர் இணங்கக்கூடியவரல்ல: திருவாங்கூர் திவானைவிட கொச்சி திவான் தீவ்ர சீர்திருத்தக்காரர். தென்னிந்தியாவில் தோன்றியுள்ள ஸமதர்மக் கக்ஷியில் ஆதரவுவைத்தவர்.

இவர், மஹாராஜாவை துராலோசனையால் கெடுக்கக் கூடிய நியாயமிருந்தும் கொச்சி மஹாராஜாவின் விருப்பப்படியே அங்கு திவான் நடக்கிறார். திருவாங்கூரிலோ இது தலை கீழாக இருக்கிறது.

எப்படியும் திருவாங்கூர் அநீதி உத்திரவானது ஆட்டம் கண்டு விட்டது. அங்கு புகைந்து கொண்டிருக்கும் நெருப்பு, வெளிப்படையாக ஜ்வலிக்க ஆரம்பிக்கையில் அதில் இது எரிந்து சாம்பலாவது நிஸ்ஸம்சயம். தம் இனத்தவரும், ஆஸ்திகரும் அநுபவசாலியுமான கொச்சி மஹாராஜாவைப் பின்பற்றி நடப்பதே திருவாங்கூர் அரசரின் தர்மமாகும். திருவாங்கூர் உத்திரவினால் அனர்த்தங்கள் பல தோன்ற ஆரம்பித்துவிட்டனவாகையால் அந்த அரசர் திருந்தி தனது உத்திரவை ரத்து செய்வதே விரும்பத்தக்கதாம்.

குறிப்புகள்.

விமான - மோட்டார் மரணங்களை தடுக்க வழியென்ன?

நவீன நாகரிகத்தின் பயனாகத் தோன்றியுள்ள மோட்டார் வண்டிகள், ஆகாசவிமானம் இவைகளால் ஏற்படும் அகாலமரணம் உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது. கூட்டம் கூட்டமாக விமானமரணம் வெளிவராத நாளே கிடையாது. மனித ஸமூஹத்திற்கு மிக்க உபயோகமானவர்களான படிப்பாளிகள், மேதாவிகள், முதலிய பலர் இந்த அகால மரணத்தால் மறைந்து போகிறார்கள்.

மோட்டார் மரணமும் இப்படியே. மோட்டார் ஸவாரி செய்கிறவர்களின் அகாலமரணம் தவிர வழி நடப்போர் மீது ஏறி அவர்களுக்கு அகாலமரணம் உண்டுபண்ணுவதும் மிகவும் அதிகமாகிவிட்டது. நல்ல பலிஷ்டர்களான யுவர்களும், யுவதிகளும், குழந்தைகளும், சிறுவர்களும், கிழவர்களுமாக கணக்கில்லாதவர்கள் மரணமடைகிறார்கள். அநேக குடும்பங்கள் தங்களுடைய ரக்ஷகனை இழந்து பரிதவிக்கின்றன. பர்த்தாவை இழந்து பரிதவிக்கும் பல ஸ்திரீகளும், புத்திரனையிழந்து தவிக்கும் பெற்றோர்களுமாகப் பல குடும்பங்கள் பெருங் கஷ்டத்திற்கு ஆளாகிவிட்டன. அங்க ஹீனர்களாகப் போனவர்களின் தொகையோ இன்னும் அதிகம். இந்த அகால மரணம் மற்றதேசத்தைவிட இந்தியாவில்மிக அதிகமாயிருக்கிறதாம்.

இந்த மோட்டார் யமன்கள் இல்லாவிட்டால் இவ்வளவு பெரிய மரணங்கள் ஏற்பட்டிருக்க நியாயமில்லையல்லவா? தனிப்பட்ட மனிதர்கள் தங்கள் சௌகரியத்திற்காகவோ டம்பத்திற்காகவோ மோட்டார் ஸவாரிசெய்து பாதசாரிகளுக்கு மரணமும், அங்கஹீனதையும் உண்டுபண்ணுவது என்ன நியாயத்தில் சேர்ந்தது? இந்த அக்ரமமரணத்தைத் தடுக்க இந்திய சீர்திருத்த வாதிகளும், ராஜ்யவாதிகளும் என்ன முயற்சி செய்கிறார்கள்? என்ன முயற்சி செய்யமுடியும்? பிரதிவருஷமும் ஆயிரக்கணக்கான மரணம் ஏற்பட்டுவருவதைப் பார்த்து வருகிறோம். இந்தியாவிற்கு மோட்டார் வந்தது முதல் இன்றுவரை இந்த மரண ஸங்கியைக் கூட்டிக் கணக்கிட்டால் லக்ஷக்கணக்கில் இந்த மரணம் அதிகரித்திருப்பதை காண உடல் நடுங்குகிறது.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் விளம்பியுள்ள ஆசாரத்திருத்த வாதிகள் இந்தியாவில் ஸமூஹப் பழக்க வழக்கங்களாலும், பால்ய விவாஹங்களாலும் அகால மரணம் அதிகரித்து வருவதாகக் குதர்க்கம்பேசிக் குறாச்சட்டங்களைச் செய்யத்தூண்டுகிறார்கள். உண்மையை நோக்கினால் இந்தமோட்டார் அகால மரணத்திற்கு ஒன்றும் ஈடாகாது. பால்ய விவாஹத்தினால் அகால மரணம் ஏற்படுவதாகச் சொல்லுவது அநுபவவிருத்தமென்பது நமது கக்ஷி. சீர்திருத்தவாதிகளுடைய அபிப்பிராயப்படி பார்த்தால்கூட பால்ய விவாஹ மரணத்தைவிட மோட்டார் அகாலமரணம் கணக்கில் அதிகமாயும், பிரத்யக்ஷத்தில் கண்டுபிடிக்கக்கூடியதாயுமிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஆயிரக்கணக்காக மோட்டார் மரணம் அதிகரிப்பதைப்போல் பால்ய விவாஹ மரணம் அதிகரிப்பதாகச் சீர்திருத்தவாதிகள் காட்டமுடியுமா?

அப்படியிருக்க சாரதாச்சட்டம், ருதுசாந்தி லைஸென்ஸ்சட்டம் முதலிய ஆபாஸச்சட்டங்களால் நமது மத உரிமையைக் கெடுக்கத் துணிந்ததெப்படி? மோட்டார் வைத்துக்கொள்ளாததால் இறப்பு சிறேயஸ் குறைந்துவிடாது. அதிலும் ஜனங்களுக்கு உயிர்நாசத்தை உண்டாக்கக்கூடிய கார்யத்தை ஒவ்வொருவரும் நினைத்தால் உடனே நிறுத்திவிடலாம். இந்தக்கார்யத்தில் சீர்திருத்தவாதிகள் என்ன செய்தார்கள்? மோட்டார் வைத்துக்கொண்டிருப்பவர்களை அணுகி இந்த அபாய யந்திரத்தை உபயோகிக்கவேண்டாமென்று சொல்லி பிரசாரம் செய்வார்களா? மோடார் சொந்தககாரர்களும் இதற்கு இணங்கி விட்டுக்கொடுப்பார்களா? ஒன்றும் பலிக்காது. ஆனால் ஸாதுக்களான தார்மிகர்களைப் பொய்சொல்லி பயமுறுத்தி அவர்களுடைய தர்மத்தை நாசமாக்கலாம். நம்தேச ஆசாரங்களை நம்மிடம் பழிக்கும் வெளிநாட்டார் தங்கள் தேசத்தில் இம்மாதிரி அகால மரணங்கள் அதிகரித்திருப்பதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்? அந்ததேச நாகரிகத்தை அநுஸரிப்பதாலேயே இந்தியாவிலும் அகால மரணம் அதிகரித்துவிட்டதல்லவா? அரை நூற்றாண்டுக்கு முன் நம் தேசத்தில் இந்த அகாலமரணம் ஒன்றாவது உண்டா?

நவீன நாகரிகம் விருத்தியாக ஆக அது மனிதஸமூஹத்தின் உயிரைக் கூட்டம் கூட்டமாகக் கொள்ளை கொள்ளுவதே எங்கும் அதிகரித்துவிட்டது இந்த உண்மையான காரணத்தை மறைத்து நமது தர்மங்களை ஆசாரங்களையும் பழி சொல்லுவது எவ்வளவு மூடத்தனம்? பால்யவிவாகத்தடைச்சட்டம் செய்து அகாலமரணத்தைத் தடுக்க முயற்சிப்பது போல், மோடார் அகாலமரணத்தைத் தடுக்க, ஒருவரும் மோட்டார் உபயோகிக்கக்கூடாதென்று சட்டம் செய்வார்களோ? மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பட்டுவிட்டால் செத்தவர் திரும்பிவிடுவாரா?

தேரில் தேசியக்கொடி போடுவதா?

நீடாமங்கலம் ஸ்ரீ ஸந்தான ராமஸ்வாமி கோவிலில் நடந்த ரதோத்ஸவத்தில் அந்த ரதத்தின் மீது தேசியக்கொடி போடப்பட்டதாயும், இது அங்குள்ள சிலருக்குப் பிடிக்காததால் ஆக்ஷேபம் ஏற்பட்டுச் சச்சரவு நடந்ததாயும் தேசியக்கொடியை எடுத்துவிடும்படி சிலர் ஸத்யாக்ரஹம் செய்து சக்ரத்தின் மீது படுத்துக்கொண்டதாயும் கடைசியாகப்போலீஸ் அதிகாரிகளுடைய தலையீட்டால் அமைதியேற்படுத்தப்பட்டதாயும் ஸத்யாக்ரஹம் செய்தவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாயும், தேசியக்கொடியுடன் தேர் இழுக்கப் பட்டதாயும் ஒரு ஸமாசாரம் பத்திரிகைகளில் வந்திருக்கிறது.

இந்தமாதிரி சம்பவம் ஏற்கனவே பலவிடங்களிலும் நிகழ்ந்திருப்பதையும் நாம் அறிவோம். இந்தக்கார்யத்தால் சிலவிடங்களில் பெருத்த கலஹம்கூட நடந்திருக்கிறது. இப்படியிருந்தும் காங்கிரஸ் வாலண்டியர்கள் பொருத்தமில்லாமலும், பொறுப்பில்லாமலும் இந்த அர்த்தமற்ற கார்யத்தை மேல்மேலும் அநேக இடங்களில் செய்து கலகம் விளைவித்து வருவதைக் காங்கிரஸ் தலைவர்கள் கண்டிக்காதது அதிசயமாயிருக்கிறது. தேவாலயங்களும், அவைகளில் செய்யப்படும் கார்யங்கள் ஒவ்வொன்றும் சாஸ்திரங்களால் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவை முற்றிலும் மத ஸம்பந்தமானவைகளே. லௌகிக கார்யங்களுக்கு ஏற்பட்ட தேசியக்கொடியை, முற்றிலும் மத ஸம்பந்தமான கார்யங்களில்கூட பலாத்காரமாக வைப்பது என்ன நீதியில் சேர்ந்தது? தேவாலயம் ஹிந்துக்களில் ஸகல ஜாதியினருக்கும் ஸொந்தமானது. எல்லா ஸம்பிரதாயஸ்தர்களுக்கும் பொதுவானது. காங்கிரஸ் கொள்கையை ஹிந்துக்கள் யாவரும் அங்கீகரித்துவிடவில்லை. தேசியக்கொடியில் மதஸம்பந்தம் யாதுமில்லை. ஆனால் ஹிந்துமதவிரோத அம்சமே உள்ளது. காங்கிரஸ் ஹிந்துமதத்தை அழித்துவருகிறது. தவிரவும் தேசியக்கொடியில் உள்ள வர்ணங்களும், அதன் கொள்கையும் மதாபிமானிகளால் ஏற்கக்கூடியவைஅல்ல. ஹிந்து - முஸ்லீம்சீக்யர், ஆகியவர்களுடைய ஒற்றுமையை தேசியக்கொடி விளக்குகிறதாக காங்கிரஸ்வாதிகள் வியாக்யானம் செய்கிறார்கள். இந்த வியாக்யானப்படி தேசியக்கொடி நமது மத ஸம்பந்தமான கார்யங்களுக்கு விருத்தமென்பது புலப்படவில்லையா? தேவாலயங்களில், முஸ்லீம், சீக்கியர் போன்ற அன்னியமதஸ்தர்களைப்பற்றி, அதிலும் நம்தேவாலய விரோதிகளைப்பற்றிய குறியை நாம் ஆதரிப்பது எவ்வளவு ஆபாஸமான கார்யமென்பதை யோஜிக்கவேண்டாமா?

தேவாலய ரதமானது முற்றிலும் சாஸ்திரவிதிப்படி அமைக்கப்பட்டது. அதில் செய்யப்படும் அலங்காரங்களும் ஆகமசாஸ்திரங்களாலேயே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ரதங்களும் மந்திரபூர்வகமாக பிரதிஷ்டை செய்யப்பட்டவை. அவைகளில் நமது லௌகிக ஆசைகளுக்கு ஏற்றபடி நாமாக ஒரு கார்யத்தைச் செய்ய இடமில்லை. சிவனுக்கு விருஷபத்வஜமும், விஷ்ணுவுக்கு கருடத்வஜமும் ரதத்தில் பறக்கவிடப்படவேண்டுமென்று ஆகமவிதியுள்ளது. அதன்படி தேர்களில் அந்தக் கொடிகள் சாஸ்திரீயமாக அமைக்கப்படுவது இன்றைக்கும் வழக்கமாயிருக்கிறது. இப்படி முற்றிலும் மதஸம்பந்தமான கார்யத்தில் காங்கிரஸ் வாதிகள் பிரவேசித்து வீண் சச்சரவுகளை உண்டாக்குவது ஆக்ஷேபகரமாகும். தேசியக் கொடிக்கும் ஹிந்துமதத்திற்கும் என்ன ஸம்பந்தம்? காங்கிரஸ் வாதிகள் இதில் ஸரியான வழிக்கு வராவிட்டால் கலஹம் நேருவதுடன் ஆங்காங்குள்ள ஆஸ்திகர்கள் நியாயஸ்தலத்தின் மூலமாகவும் இதை தடுக்க வேண்டிவரும். நீடாமங்கலம் கோவில் டிரஸ்டிகளுடைய செய்கையை நாம் ஆக்ஷேபிக்கிறோம்.

இங்கிலாந்திலும் பிராணி பலி!

லண்டனில் நமது சக்ரவர்த்தியாருக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறது இச்சமயத்தில் பல விநோத விஷயங்களை நாம் கேள்விப்பட நேரிட்டிருக்கிறது. இவைகளில் அநேக விஷயங்கள் ஸம்ப்ரதாய வழக்கங்களை ஒட்டியவை. நம் தேசத்திய ஜாதிகுலப் பழக்க வழக்கங்களையும், ஆசாரங்களையும் மூடநம்பிக்கைகளென்று பரிஹாஸம் செய்கிறவர்கள் இந்த பட்டாபிஷேக காலத்தில் கணக்கற்ற பழக்கவழக்கங்களையும் வியவஸ்தைகளையும், மதச்சடங்குகளையும் கிறுஸ்தவர்களில் பார்க்கப்போகிறார்கள். அதிலும் ஒரு பெரிய ஏகாதிபத்ய ராஜ சக்ரவர்த்தி குடும்பத்திலும் அவருடைய ஜனங்களிடையிலும் இவ்வாறு பல வழக்கம் இருப்பதை இந்திய நவீனர்கள் கவனிக்க நேரும்.

இப்போது முக்யமாக ஒரு விஷயம்வெளியாகி இருப்பதைக் கவனிக்க வேண்டும். ராஜ சக்ரவர்த்தியின் பட்டாபிஷேக காலத்தில் அந்த தேசத்தின் பலவிடங்களில் காளைமாடுகளைக் கொன்று நெருப்பில் பொரிப்பது ஓர் ஸம்பிரதாயச் சடங்காம். இந்த குரூர வழக்கம். அங்கு என்ன நம்பிக்கையின் பேரில் நடந்துவருகிறதென்று தெரியவில்லை இந்தக் கொடுமையான வழக்கத்தை நிறுத்திவிட வேண்டுமென்று ராஜ சக்ரவர்த்தியை வேண்டிக்கொண்டு இந்தியாவிலிருந்து பலர் மனுச் செய்திருக்கிறார்கள். இந்த வேண்டுகோளை அங்கு காதில் வாங்குகிறவர்கள் யாருமிருக்கமாட்டார்கள் என்பது நிச்சயமே. ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்த ஜாதி குலதர்மங்களுக்கு ஏற்றபடி எவ்வளவோ ஸம்ப்ரதாயங்கள் இருந்துவருகின்றன. அவைகளில் இதர ஜாதியார் வெறுப்புக்கொள்ளக் கூடியவைகளும் பல உண்டு. ஆனால் இதற்காக இவைகளை விட்டுவிட வேண்டுமென்று சொல்ல யாருக்கும் அதிகாரமில்லை. மற்ற ஜாதியாரிடம் நவீன சீர்திருத்த வாதிகளின் ஜம்பம் சாயுமா? ஹிந்துக்களை விரட்டுவார்கள்! நமது ஆசாரங்களும் ஸம்ப்ரதாயங்களும் மூடநம்பிக்கையென்று நம்மவர்களே நகைத்து அன்னியர் எதிரில் நம்மைச் சிறுமைப் படுத்துவார்கள்.

நம் தேசத்தில் தெய்வங்களை உத்தேசித்து பிராணி பலி செய்யும் வழக்கம் சிலரிடம் அனுதியாக இருந்துவருகிறது. இது ஒரு சிறந்த தர்மமாக அவர்களிடையில் தீவ்ர நம்பிக்கை இன்றும் இருந்து வருகிறது. இது அநாகரிகமென்றும் மதத்தின் பெயரால் பிராணி பலிசெய்வது தகாதென்றும், இப்போது சில நவீனர்கள் கூச்சலிடுகிறார்கள். ஸர்க்காரும் இதற்கு செவிகொடுக்க ஆரம்பிக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்துபோன்ற பெரிய நாகரிக தேசத்தில் ஒரு பெரிய சுபகாலத்தில் மேற்கண்டவாறு பிராணிவதை ஸம்பிரதாயங்கள் அநுஷ்டிக்கப்படுவதைப்பற்றி இந்திய நாகரிகர்கள் என்ன பதில் சொல்வார்கள்? நம்மைப் பரிஹஸிக்கும் வெள்ளைக்காரர்களும், பாதிரிகளும் தங்களைப்பற்றி முதலில் நினைத்துக் கொள்வார்களா?

வாரக் குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

சரித்ரமறியா சரித்ராசிரியர்!! லண்டன் டைம்ஸ் என்ற பத்திரிகையில் ஓர் சரித்ராசிரியர் ஜாதிகள் நிறைந்த இந்தியாவிற்கு ஸ்வராஜ்யமளித்தால் அனர்த்தமுண்டாகுமென்கிறார் இந்திய சரித்ரத்தை அறியாத இவர் போன்றவர் நூலை படிப்பவருக்கு எப்படி சரித்ரஞானமுண்டாகும்? புராணம் கற்பரா?

கிளிப்பிள்ளை நீதிபதி!! எம். ஆர். ஜயகர் ஓர் பிரபல அநாசார சீர்திருத்தக்காரர். இவருக்கு ப்ரபல நீதிபதி பதவி கிடைத்தது! இந்தக் கிளிப்பிள்ளையும் அந்த பாடத்தை அப்படியே ஒப்பிப்பதில் விந்தை என்ன?

அநியாயம்! கேள்வியில்லையா?:— சக்ரவர்த்தி மகுடாபிஷேகத்தில் கோ எருதுகள் உயிருடன் நெருப்பு வைக்கப்படுமாம். வடநாட்டில் இரண்டொருஸநாதனஸபைகிளர்ச்சி செய்கிறது. நாஸ்திகர் கூட்டம் பலத்த தேசிய ஸபை, யாகம் கூடாதென்றும் ஜீவகாருண்ய ஸபை, மற்றவைகளிதைக் கண்டிக்கவில்லை.

நம்பாவிட்டால் பிரளயமா?:— சென்னை அட்வகேட் ஜனரல் ஆலயங்கள் கல்வி கற்பித்தால் தான் தனக்கு அதில் நம்பிக்கை உண்டென ஓர் ஸபையில் பேசினார். ஆலயம் மதக் கல்வி புகட்டத்தான் வேண்டும். இத்தகையோர் நம்பிக்கையால் தான் உலகமிருப்பதாக நினைப்பதுதான் விந்தையிலும் விந்தை.

கோச்சிகோன் வாழி:— பாதாலயமான கூடல் மாணிக்கம் சிறிது ப்ரசித்தமாயிற்று பாபிகள் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியதென கூறியதில் கோட்டிமுதல் தொண்டமான் வரை சீர்திருத்தக்காரர் சீறுகின்றனர். தர்மத்தையே நம்பி வைதிக தர்ம ஸேவைக்காக்கும் மன்னன் நீண்ட ஆயுளுடன் வாழ்க! நீரன் வாழ்க! தர்மம் வாழி!

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Amalapuram, East Godawary.

261

...ரபாண்டியில் ஸநாதனதர்ம மகா ஸபை.

ப்ரம்மஸ்ரீ கே. ஆர். சதாசிவப்ரம்மம் அவர்களால் வீரபாண்டி சதாசிவ வைத்யசாலையில் ஓர் சபை 29-3-37 மாலையில் கூடிற்று. அவ்வமயம் மேல்மங்கலம் சின்னமனூர், போடி முதலிய ஊர்களிலிருந்து ஆஸ்திகமகா ஜனங்கள் வந்திருந்தார்கள். பெரியகுளம் ராஜாதீக்ஷிதர் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்.

ப்ரும்மஸ்ரீ பி. எஸ். வைதீசுவரகனபாடிகள் (பெரிய குளம்) அவர்கள் சொன்னதாவது. முக்கியமாக இந்த சபையின் நோக்கம் கூடியமட்டில் ஒவ்வொருவரும் ஸநாதன தர்மத்தை, பிரபல தசைக்குக் கொண்டுவருவதே இச்சபையின் நோக்கம்.

தற்காலம் பஞ்சமர் ஆலயப்ரவேசம், விதவா விவாகம், பிரௌடா விவாகம், ஸ்திரீ ஸ்வாதந்த்ரியம், ஸ்திரீகள் உபாத்தியாயர் ஆபீஸ் அதிகாரவேலை. இதுமட்டுமா. ஸ்திரீயின் ராஜபார்டு, அவர்கள் சபை கூடுவது. அதில் புருஷர்களுக்குத் தாங்கள் அடங்கக் கூடாது என்கிற அனேகவிதச் சட்ட திட்டங்கள் உண்டாக்கி புருஷர்களுக்கு அடங்காமல் மீறி நடப்பது இவ்விதமான வழங்கங்கள் பெண் குழந்தைகளுக்கு ஏற்பட்டுவிட்டது.

இந்த சங்கடமான சமயத்தில் நாம் ஸநாதன தர்மத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்று பரிதாபத்துடன் பேசினார்.

பிறகு கே. ஆர். சதாசிவப்ரம்மம் அவர்கள் சபை வணக்கத்துடன் உபன்யாசம் செய்தார். நமது குழந்தைகளை தாம் நல்வழிப்படுத்த முயலவேண்டும். குழந்தைகளின் உற்பத்தியே கோணலாக இருக்கிறதே அதை முதலில் நாம் நேர்வழிப்படுத்திப் பிறகு தானே அப்பிள்ளைகளை நல்வழிப்படுத்தலாம்.

நாம் பயிரிடுவதனால் நீர்வளம், நிலவளம், விதை, காலம் இவைகளைக் கவனிக்கிறோமல்லவா. அதேமாதிரி புருஷன் விதைஸ்தானம், ஸ்திரீ பூமிஸ்தானம். ஸ்திரீ புருஷர்கள் தேஹம் சுத்தமாயிருக்கவேண்டும். அது மட்டும் போதாது. ஜாதி, குலம், தர்மம், மாதா, பிதா, குரு, கடவுள், ராஜா, தேசம் இவைகள் பரம்பரையை ஒட்டி பிள்ளைகளுக்குப் பக்தி வரவேண்டுமானால் ருதுகால நியமம் ஸ்திரீகளுக்கு முக்யமாக வேண்டும்.

ருது ஸ்னானத்தன்று முதலில் தன் புருஷனை ஸ்னானம் செய்ததும் பார்க்கவேணும், புருஷனைப் பார்ப்பது, ருதுஸ்னான வ்ரதத்தின் கடைசி காரியம். யஜுர்வேதத்தில் (முதல் ருதுவின் விரதம்) சுமார் 15-வ்ரதம் சொல்லப்பட்டிருக்கிறது. தவறினால் அவர்களுக்கு இந்தப்படிக்கு கெடுதலான பிள்ளை ஜனிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இனி ஜோதிட சாஸ்திரத்தைக் கவனிப்போம். ஜோஸ்யத்திற்கு மூல சாஸ்திர வசனம் சொல்லுவது தற்காலம் அனுவசியம். பஞ்சாங்கத்தில் புஷ்பிணிலக்ஷணமறிதல் என்ற பிடிகை போட்டு மாதம், வாரம், திதி நக்ஷத்திர பாதங்கள் 108. தரிசனம் செய்யும் ஆசாரிகள் அங்காலத்தில் உடுத்தியிருந்த வஸ்திரம் இந்த விஷயத்தைப் பற்றி சுமார் 491 பலன்கள் சொல்லியிருக்கிறது. அதில் 98 நல்ல பலன் 96- கெடுதல் பலன் சொல்லி இருக்கிறது. அந்தப் பலன்களை கவனிப்போமானால், [illegible] செய்வாள், சோரம் போவாள், [illegible], பெற்றிழப்பாள், மலடியாவாள், பரம்பவதி, கணமிழப்பாள், இப்படி சொல்லியிருக்கிறது தவிர, நல்ல புருஷனை அடைவாளென்று ருது பலன் சொல்லும் சமயத்தில் சொல்லவேயில்லை.

இந்த அனுமானங்களை உத்தேசித்து சகல ஜாயிதினரும் பெண் குழந்தைகளுக்கு, ருதுமதியாவதற்கு முன் விவாகம் செய்யவேண்டுமென்றே தாத்பர்யமாகிறது.

இனி வைத்ய சாஸ்திரத்தைக் கவனிப்போம். ஸுச்ருதத்தில் முதல் ருதுஸ்நானம் செய்தவுடன், தனது பர்த்தாவையே முதலில் பார்க்கவேணும் என்று முக்யமான வ்ரதமாகச் சொல்லப்படுகிறது.

சரக ஸம்ஹிதையிலும் பதி தரிசன விரதமும் பிறகு நிஷேகவிதிசயனக்ருஹலக்ஷணம் முதலியவைகளை மந்திரங்களுடன் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிராமண, க்ஷத்ரிய, வைசிய ஜாதிகளுக்கு மந்திரச் சடங்கும், சூத்திரர்களுக்கு பிராமண வாக்கு ஆசிர்வாதமே போதுமானது என்று விபரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிராம்மண ஜாதி முதன்மையாயினும் அந்த ஜாதி பஹிஷ்டா ஸ்திரீ மூன்று நாளைக்கு அவளுடன் புருஷன் பேச்சு, பார்வை முதலியது கூடாது என்று விலக்கப்பட்டிருக்கிறது, அக்காலத்தில் புருஷன் இறந்துவிட்டாலும் கூட அவன் சமீபம் வருதல், பிணத்தைப் பார்வையிடல் முதலியவைகள் கூடாதென்று தற்காலத்திலும் இருந்துவருகிறது.

நீக்ரோ என்று ஓர் ஜாதியார், பஹிஷ்டா ஸ்திரீகளுக்கு தனியாகவே சாலை கட்டி விட்டிலுங்கூட மூன்று நாள் வசிக்காமல் இருக்கும் வழக்கம் இருப்பதாக தேச சரித்திரத்தால் வெளியாகிறது.

இன்னம் எவ்வளவோ சாஸ்திரங்கள் ருது கால விதிகளைப்பற்றி கூறுகிறது. இப்படி இருக்க தற்காலம் நமது நாட்டில் எவ்வளவோ லக்ஷக் கணக்கான வருஷங்களாக கையாடிவந்த பிரதம ருதுகால வ்ரதத்தையிழந்துவிட்ட காலமும் வந்துவிட்டது. ஆனால் வ்ரதத்தை விட்ட பாபம் கர்மைத்தொடாவில்லை. அதன் முயற்சிக்காரர்களையே தொடருமாயினும் நற்குணம் பொருந்திய பிள்ளை பிறக்க எவ்விதத்திலும் வழியில்லை. ஏன்? பஹிஷ்டா ஸ்திரீகள் தற்காலம் ருதுகாலத்தில், கூடாத காரியத்தை முக்யமாகச் செய்கிறார்கள். சுகமான சாப்பாடு, ஸோப்புஸ்னானம், படிப்பு, பிடில், ஹார்மோனியம், கடைபாஷணம், வீண்வம்பு, கூடாதவேலைகள் அனேகவிதமாகச் செய்கிறார்கள்.

எப்படிக்கு நல்ல பிள்ளை பிறக்கும்? ஆகையால் இப்பேர்ப்பட்ட கலிகாலத்தில் கூடியமட்டில் ஸநாதன தர்மத்தில் விசுவாஸத்துடன் நாமும், நமது ஸ்திரீகளும் நமது குழந்தைகளும் நடக்கவும் ஸ்திரீகளை தர்மத்தில் நடக்கும்படிக்கும் செய்து குழந்தைகளுக்கு நல்வழி புகட்டுவோமாக. பிறகு ஜயநீசன் செயல்.

எவ்விதத்திலும் மனச்சோர்வு அடையாமல் ஸநாதன தர்மத்தைக் காப்பாற்றுவோமாக. ஸநாதன தர்மிகளுக்கு ஐக்யமும் தர்மமும் தான் துணை. அதுவே நமக்கு சத்ருவைக்கொல்லும் ஆயுதம். பாராசர ஸ்மிருதி அப்படித்தான் சொல்லுகிறது. சந்த்யாகாலமாகிவிட்டபடியால் இத்துடன் உபன்யாசம் முடிவடைந்தது. அக்ராஸனாதிபதி ஆயோஜித்தல், சபைவந்தன வணக்கத்துடன் சபை முடிந்து. டாக்டர் டி. என். சர்மா

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது
[illegible] "கன்னுஸ்
[illegible] கோல்ட் கோல்ட்" நகைகளையே வ
[illegible]
தயாரிப்பவர்:— என் கன்னுசாமி பத்தர்.
பெரியதெரு கும்பகோணம்.

திருவாங்கூர் செய்கை கண்டனம்.

கோச்சி மகாராஜாவுக்கு பாராட்டு.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் சகல ஹிந்துக்களும் கோயிலுக்குள் செல்லலாமென சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை பெரும்பாலும் சாஸ்திர சம்மதமும் நியாயமும் ஆகாதென்றும் இறுஸ்தவர்களாய் மாறுகிறவர்களைத்தடுக்கவே ஆலயப்ரவேச அனுமதியளிக்கப்பட்டதென சொல்லப்படுவதாக பெரும்பிரஸ்தாபமும் இருந்து வருகிறது. மகாராஜாவின் விளம்பரத்தை முன் ரீஜண்ட் மகாராணியாய் இருந்த (ராஜாவின் பெரிய தாயார்) ஸ்ரீமதி சேதுபார்வதிபாய் ஒப்புக்கொள்ளாமலிருப்பதுடன் தமது ஆதீனத்திலுள்ள கோயில்களில் ஹரிஜனங்களையும் மகாராஜாவையும் கூட செல்லமுடியாமல் தடைசெய்யும்படி சேர்ந்தது. திருவாங்கூர் சமீபமாயுள்ள கொச்சி சமஸ்தான மகாராஜா அவர்களும் திருவாங்கூர் தேவாலயங்களில் பூஜைசெய்து வரும் நம்பூதிரிகள் கூட தமது சமஸ்தான கோயில்களில் பிரவேசம் செய்யக்கூடாதென உத்தரவு பிறப்பிக்கும்படியாய்விட்டது. விஷமப் பிரசார பத்திரிகைகளும் ஸ்ரீமான்கள் காந்தி வி. ஆர், போன்ற காங்கிரஸ்பேர்வழிகளும் கொச்சி மகாராஜாவைக் கண்டித்தாலும் பொது ஜனங்கள், பெரும்பாலும் திருவாங்கூர் அதிக்ரமத்தையே வெறுக்கிறார்கள் என்பது எவருமறிந்ததேயாகும். பெருத்த விஷமப்ரசாரம் தீவிரமாய் நடைபெறும் தற்காலம் எவரையும் லக்ஷியம் செய்யாமல் புராதன (சாஸ்த்ரம்) சம்ப்ரதாய ரக்ஷணார்த்தம் மிக வீரத்தனமாக உயர்தர லக்ஷியங்களுடன் மிகவும் கண்யமாக கொச்சி மகாராஜாவால் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையால் எங்குமுள்ள மகாஜனங்கள் யாவருமே மிகவும் குதூகலமடைந்து மகாராஜா அவர்களைப் பாராட்டுகிறார்களென்பதை அறிவிக்க மிகவும் மகிழ்வெய்துகிறேன்.

தீண்டாதவர்கள் பிறமதம் செல்கிறார்கள் அதற்காக ஆலயப்ரவேசஅனுமதியளித்தால் பிறமதம் புகுதல் தடைபடுமென நினைப்பது பயித்தியக்காரத்தனமே யாகுமெனவும் எல்லா மதங்களுக்கும் பொதுவாக கவர்ன்மெண்டார்கள் கவனிக்கவேண்டுமானையால் கிறிஸ்தமத மாற்றல் பிரயத்தனங்களைத் தடுக்க புதிதாக ஓர் சட்டமியற்றி அவரவர்கள் தம் தம் மதங்களையே அனுஷ்டிக்க வேண்டுமெனவும் பிறமத அநுஷ்டானம் செய்வோர்களும் வேறு மதத்தாரால் தங்கள் மதத்துக்கு ஏமாற்றி இழுக்கப் பிரயத்தனப்படுவோரும் தண்டிக்கப்படுவார்களெனவும் திருவாங்கூர் சமஸ்தானத்தார் யாவராலும் பாராட்டப்பட்டிருப்பார்களெனவும் தற்போதுள்ள சங்கடமான நிலை ஏற்பட்டிருக்காதெனவும், பிரபல அறிஞர்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிவதுடன் எங்கும் இதே பேச்சாகவே இருப்பதாயும் தெரிகிறது.

நாதுக்ருபர்.

ஆழ்வார் திருநகரி.

சைத்ரோத்ஸவம்.

இந்நகர் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான சித்திரைத் திருநாள் மிக விமர்சையாய் நடை பெற்று முடிவேறியது. இவ்வூரின் சமீபமாயுள்ள ஸ்ரீவைகுண்டம் தேவஸ்தான பஹோத்ஸவம் வருகிற ஞாயிற்றுக்கிழமை அனுஜரோஹணமாய் சிறப்பாக நடைபெறும் ஐந்தாம் திருநாள் கருடஸேவை மிக விசேஷமாகும். இவ் உத்ஸவத்தையொட்டி காப்பங்காடு ஸ்ரீ-உ-வே. வித்வான் தேசிகவாசாரியரால் ஸ்ரீவைகுண்டத்தில் பல அரிய உபந்யாஸங்கள் செய்யப்படுகிறதெனத் தெரிகிறது.

ந. வி. கி.

Registered No. M. 2913.

The Arya Dharmam.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 29th APRIL 1937. [No. 17

Mr. JAYAKAR On Co-education.

(Mr. G. V. Venkatramaier, B.A., B.L.)

The departed soul of the late Mr. Champion, Director of Public Instruction, Madras would indeed jump with joy out of its grave if it heard of the recent speech of the Hindu judge-designate of the Federal Court of India at the Rattaowada Girls' High School, advocating the adoption of even a more complete system of co-education of boys and girls than he himself envisaged. The Judge is of opinion that co-education of the right type is the first requisite for the development of mutual reliance of man and woman which stage would follow the present one of self-assertion through which woman is passing after having undergone the stage of sub-mergence in man and sub-missiveness to him. He thinks that the system of co-education which now obtains does not go far enough and is not full or complete as it merely "segregates" girls in separate class rooms and keeps them in "tantalising isolation." He advocates that boys and girls should be taught and trained "together to give of their best to the country so that they would be a complement to each other to fulfil their mission in life."

What exactly does this New Messiah mean? What new experiment would be like to try on the unfortunate Hindu Society? Where would he lead it? The tragedy of it is that there seems to be no end of these false prophets who, armed with some temporal power or status, issue pontifical fiats to change our delicately-balanced society beyond all recognition. Would that they divert their patronage to other communities of no less importance than ours to whom the charges of "segregation" and "isolation" of woman would be more appropriate.

What then is co-education? In essence it is the system of teaching and training boys and girls together without any differentiation or discrimination either as regards the subjects taught or the manner or method or place of instruction. Is this system necessary or desirable for the Hindu Society?

Taking up the question of subjects to be taught, there can be no doubt that the bulk of opinion, in this country at any rate, holds that the spheres of work of men and women are fundamentally distinct. The woman's legitimate place is the home and her legitimate charge the children while that of the man is out-door avocation and bread-earning. It will thus be apparent that apart from the knowledge of the three R's, the subjects that have to be taught to women will have to comprise domestic economy and cookery, maternity and mothercraft, music, needle-work and knitting. These are not subjects which, from their very nature, man can or need trouble himself about. Likewise, women cannot or need not trouble themselves to acquire knowledge of engineering, law, arts or sciences, for which man alone has special facility, attitude leisure and scope. To impart knowledge of the latter to woman or of the former to man will misfit either for his or her legitimate function and dislocate social harmony. To make a hotch-potch syllabus of both sets of subjects and teach the same to men and women together will be as wasteful as it will be absurd.

As regards the place of instruction the co-educationist is particular that boys and girls should sit side by side in the same class and learn. That this system has not been working satisfactorily even in western countries where greater freedom of contact is permissible between the sexes and where sexual errors are condoned by public opinion as venial, is admitted by various writers and observers. In this country, particularly, the system is doomed to failure. Our code of morals is much higher than that of any western country and our society and public opinion is strictly opposed to any contact or familiarising between the sexes as an infraction of that code. The Hindu women are not "society" ladies as in the west and their natural and innate bashfulness and shyness make it impossible for them to feel at home with strangers of the other sex. It is thus apparent that any system by which boys and girls, particularly in their adolescence, are asked to sit side by side and learn is opposed to the genius of the Hindu race.

The infinite harm and danger inherent in co-education cannot be better indicated than by the expression 'tantalising isolation.' Where is the tantalisation unless Mr. Jayakar has the sex-appeal in mind? Reformers of education like Mr. Jayakar, it must be realised, advocate co-education not so much for children as for grown-ups of both sexs and for these, is it not in their own interest and welfare that the isolation should be complete rather than be tantalising?

Even as regards the capacity to learn, there is a lot of temperamental difference between the man and the woman. The former is slower but surer to learn while the latter is quicker but more unsteady. It will be a mismatched team for scholastic instruction and will not work well.

A further difficulty arises in the choice of the teacher for the mixed classes proposed. There are obvious disadvantages whatever may be the sex to which the teacher may belong.

It will thus be clear that the system of co-education as it has been introduced in some parts of the country or as it is proposed to be made complete by Mr. Jayakar is unworkable and undesirable and particularly unsuited to the genius of the Hindu race.

It is unfortunate that Mr. Jayakar who is a Hindu, is so much out of touch with his own Society as to state that Hindu women were sub-merged in men previously, that they are self-assertive now, and that his panacea of co-education will bring about mutual reliance between the sexes. The absolute identity of life and interests of the husband and wife which is the ornament of the Dharmic Hindu home, has appeared to his jaundiced eyes as sub-mergence and submissiveness of the woman to

(Cont. on page 8.)

The Ensuing Coronation.

A Proclamation wanted.

While the leading writers of the day are engaged in writing for all kinds of papers, stories about the Coronation and descriptions of the huge and magnificent pageantry that will be witnessed during the Coronation, I find myself in Queer Street when I am asked to write an article for a Sanatani weekly in the weeks immediately preceding the Coronation.

Your readers will know that before this comes in print the Conference of representatives of Matadhipathis has submitted a memorial to His Majesty the King-Emperor praying His Majesty to issue a Proclamation similar to that issued by Queen Victoria, granting India and her people absolute freedom in the practice of their religion without interruption from disgruntled politicians and proclaimed socialists, as laid down in their respective religious books and traditions.

When I think of the Coronation, my mind immediately pictures the pattabhishekams of our ancient Hindu Kings who governed the land according to justice and Vedic Dharma. It is true that the English are carried away by the vehement vociferations of the Congress and other similar bodies, who but form a microscopic fraction of the vast population of this great continent. More than 75 per cent, are tillers of the soil-be they Hindus or Muslims-who believe in their religion with almost fanatic zeal. The Hindus, who form more than half of the whole population of the country, are most of them Sanatanis by practice and conviction. And here the word Sanatani requires to be defined. A Sanatani is a person-Hindu necessarily-who believes and who so adjusts his daily life as to fall into conformity with the rules, regulations, advice and strictures laid down in the Srutis, Smritis, Puranas and Agamas as traditionally interpreted and followed. The great Hindu religion has its unique and sublime origin in our Vedas, which have been revealed by Brahma to the saintliest of rishis, i. e., Sanaka and Sanandana and others on whom effulgent divine graciousness has been poured in profusion. These have been traditionally interpreted and followed by their followers in the Smritis, Puranas and Agamas which form our very basis and concept of life, and include the neat village administration and from them on to the City administration, till we ascend in spiral fashion to the king who is above all. But above the king are the high-priests in their saintly simple robes and smiling beaming faces, giving the King advice whenever he seems to be in doubt or suspense, whenever he is vacillating or wavering, whenever he deviates even by the fraction of a hair's breadth from Sanatana Dharma, the highest ideal and concept of equal justice for all, in other words, the ideal of divine justice which poets and novelists alike so insist on in their works.

When I think of the Coronation and the memorial, I wonder what India today is, when so many of our countrymen are clamouring, not knowing what they are about, for temple-entry and other revolutionary changes in religious and socio-religious practices. The whole country seems to me to be standing head downward, foot upwards. The religious classes are being persecuted for no fault of theirs while swashbucklers and dare-devils seek entry into the royal courtyard and threaten king and country to fall into their ways of thinking. It is a pitiable state for any country, all the more for a country of India's size and peoples.

Our duty is therefore plain and simple. Sanatana Dharma has got to be resuscitated in the land of Aryavartha and towards that noble end, neither men nor money can be spared. If we do not go the straight road of Sanatana Dharma, we become waifs and strays in Vanity Fair and in the marshes of abject degradation and wretchedness. Life's ambition and aim is lost and we become wanderers in the wilderness.

Supposing some of the present day crazy leaders of Congress were to come into power at the end of six months, it is more than likely that under the cloak of up-lifting the depressed or protecting the oppressed, they will manoover to bring in legislation of a coercive nature to interfere with religious and socio-religious matters. That being so, we have to put our case even now and strongly to His Majesty the King to issue a proclamation granting us all the right to practise our religion as enjoined on us by our Sastras. Even as the Congress says, it is a very simple thing; we only ask, whoever-it-may-be, not to interfere in religious or socio-religious matters. Can the Congress deny that they have not yielded, time and again, to the pressure of enlightened Hindu Public opinion and promised not to interfere in religious and socio-religious matters?

This very simple thing- we ask of the Congress and the King-Emperor alike and it is in the power of both to satisfy us in this behalf, the former by a gentleman's agreement and the latter by a proclamation similar to that issued by the late Queen Victoria.

Our political ambitions are the same as those of the Congress. We want to see India a dominion -a free, rightful and equal partner in the British Commonwealth of Nations-as Gandhiji and others have repeatedly pointed out. We are nationalists out and out and can stand shoulder to shoulder with the staunchest Congressman in the matter of patriotism. But only we are one step better than themselves in this, that while the Congress only wants political emancipation, we wanted both physical and spiritual freedom.

T. S. Ramaswami Iyer,
Secretary.

The Madras Provincial Varnashrama Swarajya Sangha.

(Cont. from page 7).

the man. The self-assertiveness of a few women of the reformist group has been magnified by Mr. Jayakar to be a national attribute and his pet fads are trotted out as a cure for the nation's ills. Let him not worry himself about the women of India and their 'segregation' and 'tantalising isolation.' Let him be assured that the heart of the Hindu womanhood is absolutely sound, that the Hindu women are the queens of their homes and quite happy and that they have no need for his prescription.

Cochin Maharaja Thanked.

The following resolution was unanimously passed at a meeting of the members of the Dharma Shastra Sabah, Madura, held on 25-4-37 and communicated to His Highness the Maharaja of Cochin by its President Rao Sahib. N. Natesa Aiyar, Advocate, Madura.

RESOLUTION.

"Dharma Shastra Sabha, Madura, appreciates with gratitude the correct and shastraic attitude that has been courageously taken by His Highness the Maharaja of Cochin in the matter of temple entry and prays for his long life, continued prosperity and strength of mind to continue the good work that has been already initiated by him in his State."

"Human equality is a myth. If it were true leadership is impossible. Without leadership, no human ends can be achieved in politics or religion, war or peace."

* * * *

'Beware of catchwords! They deceive the deceiver and the deceived."

ஜில்லா போர்டு நடவடிக்கைகள்.

தமிழில் நடத்தத் தீர்மானம்.

சேலம் ஜில்லா போர்டார் அங்கு நடைபெறவேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலேயே நடத்தவேண்டுமென்றும், தஸ்தாவேஜிகளைத் தமிழ்பாஷையிலும் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

500 தீண்டாதாரை

கிறிஸ்தவராக்க முயற்சி.

பம்பாயில் ஆமதாபாத் ஜில்லாவைச்சேர்ந்த பல கிராமங்களிலுமுள்ள ஸுமார் 500 தீண் [illegible]

செங்கற்பட்டு ஜில்லா ஹிந்து மத்யக் கமிட்டியின் 3-வது வருஷபூர்த்தி கொண்டாட்டம்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 21, 22, 23 தேதிகளில் நடைபெற்றது.

21—4—37.

பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு தஞ்சை பரமஹம்ஸ ஸ்ரீ சிவப்ரகாச ஆனந்தகிரி ஸ்வாமிகள் அக்கிராஸனம் வகித்தார்கள். பகவத் பிரார்த்தனைப்பிறகு பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்களால் ஸபையை ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிறகு அக்ராஸனாதிபதி சுமார் ஒருமணிநேரம் வேதம், ஸம்ஸ்கிருத பாஷையின் அவசியம் இவைகளின் அவசியத்தைப்பற்றி உபன்யஸித்தார், பிறகு, உதவி கார்யதரிசி பி. என். நாராயண சாஸ்திரியால் கமிட்டியின் வருஷாந்திர ரிபோர்ட்டு படிக்கப்பட்டது. கீழ்க்கண்டவர்கள் புதுவருஷ நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகா-ள-ள-ஸ்ரீ வி. விசுவநாத அய்யர் அவர்கள் ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர் பிரஸிடெண்டு, (1) மகா-ள-ள-ஸ்ரீ வி. அனந்தராம அய்யர் அவர்கள் அட்வகேட் வைஸ்-பிரஸிடெண்டு, (2) மகா-ள-ள-ஸ்ரீ வி. அகோராம் அய்யர் கார்யதரிசி, (3) மகா-ள-ள-ஸ்ரீ பி. என். நாராயண சாஸ்திரி உதவி கார்யதரிசி, (4) மகா-ள-ள-ஸ்ரீ என் ராமனாதய்யர், பி.ஏ., எம்.எல்., அட்வகேட், பொக்கிஷதார் மற்றும் 12 மெம்பர்கள கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாலை 3 மணிக்கு நியமாத்யயன வேதபாடசாலை வித்யார்த்திகளுக்கு பரீக்ஷை நடத்தப்பட்டது. பிறகு எம். என். ஸுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்கள் "வேத மஹிமை" என்னும் விஷயத்தையும், இரவு 8 மணிக்கு பிரம்மஸ்ரீ குப்புஸாமி அய்யர் (ரிடையர்ட் டிப்டி கலெக்டர்) அவர்கள் வேதாந்த விஷயத்தைப் பற்றியும் உபன்யஸித்தார்.

22—4—37.

ஸ்ரீ ஸ்வாமிகள் அக்ராஸனம் வகித்து, வேதாத்யயனம், ஸதாசாரம் இவைகளைப் பற்றி உபன்யஸித்தார். பிறகு பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் "ஸங்கத்தின் அவசியம்" என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தார். மாலை 4 மணிக்கு பிரம்மஸ்ரீ மங்களம் சேஷகிரி தீக்ஷிதர் அவர்கள் "பிரம்ம வித்யை" என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தார். இரவு 7-30 மணிக்கு திருவாணைக்காவல் ஸ்ரீ ஜகத்குரு வித்யா ஸ்தானம் பிரின்ஸிபால் பிரம்மஸ்ரீ போலகம் ராமா சாஸ்திரிகள் "புருஷார்த்தங்கள்" என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தார், வித்தியார்த்திகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. பிறகு அக்ராஸனாதிபதியின் முடிவுரையுடனும் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களுடைய வந்தனோபசாரத்துடனும் முடிவு பெற்றது.

23—4—37.

மாலை 4 மணிக்கு நியமாத்யயன வேத பாடசாலையில் மகா-ள-ள-ஸ்ரீ எம் சேஷாத்ரி அய்யர் அவர்கள் ஆதாவிலும் முன்னிலையிலும் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் "அக்ரூராகமனம்" என்னும் விஷயம் உபன்யஸித்தார். இரவு 7-30 மணிக்கு பிரம்மஸ்ரீ போலகம் ராமா சாஸ்திரிகள் "விவேகம்" என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தார்.

24—4—37.

மாலை 4 மணிக்கு பிரம்மஸ்ரீ போலகம் ராமா சாஸ்திரிகள் "மதத்வயத்திலும் ஸநாதனோபாலனே" என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யஸித்தார். பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் மூலமாய் சேங்காலிபுரம் குஹதாஸ அவர்கள் அனுப்பிய ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் படங்கள் ஸபையில் விநியோகிக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமிகள் அக்ராஸனத்தின்கீழ் கீழ்க்கண்ட தீர்மானங்கள் விவாதித்து நிறைவேற்றப்பட்டன.

(1) "இக்கூட்டம் ஸமீபத்தில் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் நடைபெற்ற ஆலயப் பிரவேசத்தைக் கண்டித்தும், மே. த. கொச்சி மஹாராஜா அவர்களைப்பாராட்டியும், தென்னிந்தியப் பத்திரிகைகள் கட்டுப்பாடாய் ஆலயப்பிரவேசத்தை ஆதரித்தே பிரசாரம் செய்வதைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது."

(2) "இக்கூட்டம் ஸமீபத்தில் லண்டனில் நடைபெறப்போகும் மே. த. ஆறுவது ஜார்ஜ் சக்ரவர்த்தி யவர்களுடைய மகுடாபிஷேக காலத்தில், மே. த. விக்டோரியா மஹாராணியாருடைய வாக்குறுதியை அனுஸரித்து ஸனாதனிகளுக்கு வாக்குறுதி கொடுத்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்வதாய் தீர்மானிக்கப்பட்டது.

(3) "சென்னை, பூரி முதலிய இடங்கள் ஸனாதன தர்ம மகாநாட்டின் நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் ஆதரிக்கும் இக்கமிட்டியை வர்ணாசிரம ஸ்வாராஜ்ய ஸங்கத்தின் கிளைஸபையாக அங்கீகரிக்கும்படி ஷை ஸங்கத்தை கேட்டுக்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது.

(4) இக்கூட்டம் அஸம்பிளியில் கொண்டு வரப்பட்டிருக்கும் சாரதா சட்டச்சபை மசோதா, தீண்டாமைவிலக்கு மசோதா முதலியவைகளைக்கண்டித்தும், கலப்புவிவாஹ செல்லுபடிமசோதாவை எதிர்த்துப்பேசி நிராகரிக்க செய்ததற்காக கவர்ன்மெண்டையும், பஞ்ஞாத் பஜோரியா முதலிய அஸெம்பிளி மெம்பர்களையும் பாராட்டுகிறது.

(5) சென்னை அஸெம்பிளி எலெக்ஷனில் இந்த ஜில்லா தாழ்ந்தவகுப்பு பிரதிநிதியான ஸ்ரீமான் எம். ஸி. ராஜா அவர்கள் சென்னையில் ஒரு உபசாரவிருந்தில் பேசுகையில் முதல் முதல் ஆலயப்பிரவேச மசோதா கொண்டு வருவதே முதல் வேலையென்று பேசியிருப்பதைக்கண்டு இக்கூட்டம் இந்த ஜில்லா ஓட்டர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன் அதை பலமாய் கண்டிக்கிறது.

(6) நியமாத்யயன வேத பாடசாலைக்கு ஒரு கட்டிடம் ரொம்ப அவசியமும் அவசியமாயிருக்கிறபடியால் அதற்குவேண்டி ஸஹாயங்களைசெய்து பூர்த்திசெய்து வைக்கும்படி இக்கூட்டம் இன்னகர்வாஸிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது. இத்தீர்மானங்கள் பிரேரேபித்தும், ஆமோதித்தும் பிரம்மஸ்ரீ போலகம் ராமா சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ எம். என். ஸுப்ரமண்ய சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், பி. என். நாராயண சாஸ்திரி, என். பி. திருவேங்கடாசாரியார், வி. அனந்தராமய்யர் முதலியோர் பேசினார்கள். (ந. நி.)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரவர்கள் முடிவுரையில் அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் இலக்ஷியங்களைக்கூறி, புதிய அரசியல் பல வழிகளிலும் இந்தியாவின் அபிவிருத்திக்கு ஏற்றதில்லையென்றும், முக்கியமாக மதசமூக விஷயங்களில் விபரீதமாய் தலையிடத்தக்கபடி அரசியல் சட்டம் அமைக்கப்பட்டிருப்பது வெறுக்கத்தக்கதென்றும், சுமார் பதினேழு வருஷகாலமாய் காங்கிரஸ் தலைவர்களில் பிரமுகர்கள் மதஸமூக விஷயங்களில் விருத்தமாய்த் தலையிட்டு வருவது காங்கிரஸின் நற்பெயருக்கு களங்கத்தை உண்டுபண்ணுகிறதென்றும், தேசக்ஷேமத்தை நாடும் பெரும் ஸ்தாபனம் நாட்டில் ஐக்கியத்தை உண்டாக்கத்தக்க நிலையில் செயல் புரியவேண்டுமென்றும், தேச மத சமூக சம்ரக்ஷணத்துடன் கூடிய இந்திய நாட்டிற்குகந்த நல்லரசியலை அடைவதே ஸநாதனிகளின் இலக்ஷியம் என்றும் கூறினார்கள்.

காரைக்குடி சா. கணேசன் அவர்கள் இடையே குறுக்கிட்டுப் பேசவும், தலைவரவர்கள், நிறமையுடன் சாந்தமாக பதில் அளித்தும் மீண்டும் அய்யர் கணேசன் எழுந்து ஸநாதநிகள் இனியும் ஏமாற்றமுடியாதென்றும் பொது மக்கள் விழித்துக் கொள்ளவேண்டுமென்றும் சாஸ்திரவாதம் செய்யத்தயாராக இருப்பதாகவும் கூறவே தலைவரவர்கள் ஒழுங்குடன் நடந்து கொள்வது முறையென்றும் வேதசாஸ்திர முறைகளுக்குட்பட்டு ஒழுங்கான முறையில் ஏற்பாடு செய்யப்படும் சர்ச்சையில் தங்கள் கக்ஷியை கூறுவதாகச் சொன்னார்கள். எழுத்துமூலம் வந்த சில கேள்விகளுக்கு சாஸ்திரீயமான பதில் வேத சாஸ்திர சர்ச்சை செய்யப்படும் காலத்தில் கூறப்படும் என்றும் கூறினார்கள்.

திரு. ஜகதீசய்யரவர்கள் தலைவர்கள் அனுமதி பெற்று கூறுகையில் எதிர் கக்ஷியினர் தங்கள் கருத்துக்களைத் தனிக்கூட்டம் போட்டு விளக்குவது முறையேயன்றி ஒரு கக்ஷியினர் நடத்தும் கூட்டத்தில் தலையிட்டு குழப்பம் செய்வது சரியில்லையென்றும் கூறியபின் வந்தனோபசாரத்துடன் இரவு 10½ மணிக்கு சபை இனிது நிறைவெய்தியது.

ஜெகதீசய்யர்.

மருகூர் கற்போத்ஸவம்.

அநந்த கல்யாண குணநிதியான ஸ்ரீ ஸீதாராமருடைய கற்போத்ஸவம் நளது-ஷு பங்குனி-மீ 29௳ (11—4—37) ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பித்து ஈஸ்வர-ஷு சித்திரை-மீ 7௳ (19—4—37) திங்கட்கிழமை புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஜனன உத்ஸவமும், மறுநாள் ஸீதா கல்யாணமும், ஆஞ்சநேய உத்ஸவமும் பிரதிதினம் ஸ்ரீ ராமாயண பிரசங்கமும், திவ்யநாம பஜனையும், நாம ஸித்தாந்த நிருபணமும் வழக்கம்போல் நடைபெற்றன. ஷை உத்ஸவத்தில் திருக்கருகாவூர் மகா-ள-ள-ஸ்ரீ T. L. சுப்பய்யர் அவர்கள் ஒரு நாள், சநாதன தர்மம், பிராமண்யம் என்கிற விஷயத்தைப்பற்றி வெகு அழகாக உபன்யாஸம் செய்தார்கள். உத்ஸவம் வெகு விமரிசையாகவும் குதூகலத்துடன் நடந்தேறியது.

R. கணேசய்யர்,

பஜனை மஹாஸபை.

அடியேன் கிராமகாலமான மே-ஜூனில் தர்மப்ரசாரார்த்தமாக வெளியூர் செல்வதாலும் பல விஷய தாதாக்கள் அவகாசமளிக்கும்படி கேட்டதாலும் மற்றும் சில ஸௌகரியங்களை உத்தேசித்தும ஷை ஸபை ஜூலையில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதுவரை விஷயப்ரதானம் செய்த பக்தர்களுக்கு நன்றி செலுத்துவதுடன் ஜூன்மாதம் வரை விஷய தானம் செய்ய அவகாசமுண்டானதால் தயை செய்யும்படி பக்தர்களை வேண்டுகிறேன். 154. தம்புசெட்டி, சென்னை என்ற விலாசத்திற்கே அனுப்பலாம்.

பக்தாங்க்ரிரேணு,
ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா.

ராஜீயக்கைதிகள் விடுதலை.

இந்தியாவில் மாகாண ஸ்வய ஆக்ஷிமூலம் புதிய 'சகாப்தம்' ஆரம்பித்துவிட்டதால் ராஜீயக்கைதிகள் யாவரையும் விடுதலைசெய்துவிடவேண்டுமென்ற ஆலோசனை மந்திரி ஸபைகளில் நடந்துவருகிறது- கவர்னர்களும் இதில் ஓரளவு ஆதரவு காட்டுவார்களென்று நம்பப்படுகிறது.

(215103)



அநாவசியமாக - -

- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

உங்கள் வறுமை கஷ்டம் நீங்கி அதிர்ஷ்டம் உண்டாகிவிடும்.

ரசமணி

இது அற்புத சக்திவாய்ந்தது. உடைந்து நீற்றுப்போகும் இந்திரியம் இறுகி தாதுபுஷ்டியில் யானை பலம் உண்டாகும். விந்து ஸ்தம்பித்து நிற்கும். தொழில் விருத்தியாகி செல்வம் உண்டாகும். கொடிய பீடைகள், கஷ்டம், வறுமை நீங்கிவிடும். நினைத்த காரியங்கள் சித்திக்கும். குடும்பம் க்ஷேமமடையும். 25 ரு. மணி 1-க்கு விலை ரூ. 10.

இதைவிட நூறுபங்கு வல்லமையும் அதிப்பிரகாசமாய் ஜொலிக்கும் அற்புத ஸ்பெஷல் மணி ரூ. 50. ஆர்டருக்கு முந்துங்கள்.

தீராதகுஷ்டம், திமிர் மதமதப்புகள் மாயமாய் மறைந்துவிட்டது.

சித்தாதி யெண்ணை

குஷ்டம், குழிப்புண், குறைநோய், சர்மகுஷ்டம், விஷ குஷ்டம், விஷநீர், தேமல், ஊறல், சொறி படர் தாமரை, வெண் குஷ்டம், வெண் புள்ளி, கருங் குஷ்டம், செம்மேகத் தடிப்புகள், மதமதப்பு-திமிர் சூலை, கிரந்தி, முடக்கு சூலை, பவுத்திரம், ஆறாத ரணங்கள், கால் ஆணி, முதலிய மேக வியாதிகள் ஆச்சரியமாய் குணமாகிவிடும்.

இந்த வியாதிக்கு இது கைகண்ட உயர்ந்த மருந்து.

1 புட்டி ரூ. 7. ஏழைகளுக்கு ரூ. 5.

கே. எஸ். பதி வைத்தியசாலை பழனி, S. I. R.

சேங்காலிபுரம்.

ஸ்ரீ ராமநவமி உத்ஸவம்.

1. ஆஸ்திகர்களால் அலங்கரிக்கப்படுகிற இக்கிராமத்தில் மேலத்தெரு ஸ்ரீமான் M. சுப்பிரமணியஅய்யர் அவர்கள் கிருஹத்தில் ராமாயணம் பிரும்மஸ்ரீ அப்பாஸாமி சாஸ்திரியள் அவர்களால் ஒருமாதகாலமாய் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீ வால்மீகி ராமாயணப் பிரவசனத்தில் சென்ற 14—4—37 புதன்கிழமை ஸ்ரீ ஸீதாகல்யாண கட்டம் வெகு விமர்சையாய் நடைபெற்றது.

2. வருஷப்பிறப்புமுதல் ஷை ராமாயணம் அப்பாஸாமிசாஸ்திரியள் அவர்கள் கிருஹத்தில் ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு பிரதிதினம் காலையில் உபநிஷத் பாராயணம் பிராமண ஸந்தர்பணமும் மாலையில் உபந்யாஸங்களும் நடந்தன. அதில் ஆரம்பதினம் முதல் பிரஸங்கபானு பிரும்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரியள் அவர்களால் முறையே (மத்ஸ்யாவதாரசரித்திரம், வாமனாவதாரம், ஸ்ரீ ராமாயண ஸாரம், ஸ்ரீ ராமாவதாரத்தின் மஹிமை) இவைகள் சாஸ்திரார்த்தங்களோடு கூட கம்பீரமாய் உபந்யாஸம் செய்யப்பட்டது.

3. 18—4—37 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிமுதல் 9 மணிவரையில் காப்பணமங்கலம் பிரும்மஸ்ரீ மஹாலிங்கசாஸ்திரியள் அவர்களால் பாயஸப்பிரதானகட்டம் உபந்யஸிக்கப்பட்டது. 9 மணிக்கு மேல் 11 மணி வரையில் குற்றாலம் ஸ்ரீமான் S V. நடராஜய்யர் அவர்களால் தமது சிஷ்யர்களோடு ஸர்வ ஜனங்களையும் பரவசப்படுத்தும்படி பகவத் பஜனம் செய்யப்பட்டது.

4. 19—4—37 திங்கட்கிழமை ஸ்ரீ ராமநவமிதினம் காலை 6 மணிமுதல் 1 மணிவரையில் உபநிஷத்பாராயணம் ஸஹஸ்ரநாமார்ச்சனம் ஸ்ரீ ராமாவதார ஸர்கபடனம் பிரவசனம் பிராமண ஸந்தர்பணம் இவைகள் பக்தி சிரத்தையோடு நடைபெற்றது. மஹாஜனங்கள் எல்லோரும் வந்து தர்சனம்செய்து ஆனந்தமடைந்தார்கள்.

5. 20-4-37 செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிமுதல் 11 மணிவரையில் பஜனம் ஷை சாஸ்திரியள் அவர்களால் ஸ்ரீ ஸீதாராம பட்டாபிஷேக சரித்திரம் உபந்யாஸம் செய்யப்பட்டு ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமி உத்ஸவத்தோடு உத்ஸவம் மங்களகரமாய் பூர்த்தியடைந்தது.

ஒரு நிருபர்.

வேலையில்லாத் திண்டாட்டம்.

ஸர்க்கார் விளம்பரம்.

இந்த ராஜதானியில் படித்தவர்களில் வேலையில்லாத்திண்டாட்டம் எவ்வளவுவரையிலிருக்கிறதென்று நிர்ணயிக்க சர்க்கார் லேபர் கமிஷனரவர்களை,படித்து வேலையில்லாதவர்களில் சட்டத்தில் தேர்ந்தவர்கள், ஸையன்ஸில் தேறினவர்கள் இன்னும் இதர கீழ்நாட்டு கல்வி பட்டம் பெற்றவர்களின் சங்கியையை எடுக்கும்படி உத்திரவிட்டிருக்கிறார்கள். அப்படியே லேபர் கமிஷனரும் சென்ற ஜூலை மாதத்தில் சமாசாரபத்திரிகை மூலமாக ஒரு விளம்பரம்செய்து சட்டம், ஸையன்ஸ், இஞ்சினீரிங், வைத்தியம், இகநாமிக்ஸ் இன்னும் ஐரோப்பியபாஷைகளில் தேர்ச்சிபெற்று வேலையகப்படாமலிருப்பவர்களின் பெயரையும் இன்னும் இதர சில விஷயங்களைப்பற்றிக் கேட்டார்கள். ஆனால் அந்த விளம்பரத்துக்கு பதிலளித்தவர்கள் 759 பெயர்கள் மாத்திரம் தான். சர்க்கார்விளம்பரத்துக்கு அனுசரித்து கிடைத்த பதில்களின் சங்கியை அவ்வளவு திருப்திகரமாக இருக்கவில்லையென்று அபிப்பிராயப்பட்டு மறுபடியும் ஒருமுறை முன்னிலும் விசாலமான முறையை அனுஷ்டித்து வேலையில்லாத் திண்டாட்டத்திலகப்பட்ட படித்தயாவரையும் சேர்த்துக்கொள்ளும்படியான நடவடிக்கை உத்தேசித்திருக்கிறார்கள்.

2. இந்த கணக்கு எடுப்பதற்கு படித்து வேலையில்லாதவர்கள் என்னும் மொழிக்குக் கூடியவரையில் சரியான அன்வயம் செய்ய வேண்டும். படித்த சிறுவர்கள் என்பதற்கு ஐக்கிய மாகாணத்தில் சப்ரூ கமிட்டி கொடுத்த அன்வயமாவது, உயர்தரக் கல்லூரிகளிலோ மத்தியதரக் கல்லூரிகளிலோ, உயர்தரக் கழகங்களிலோ, சுதேசபாஷா விருத்தி மத்தியதரக் கழகங்களிலோ அல்லது கைத்தொழில் கல்லூரிகளிலோ அல்லது அந்தந்தத் தொழிலுக்கேற்ற படிப்பைக் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களிலோ கீழ்கண்ட பரீக்ஷைகளில் பட்டம் பெற்றவர்களென்பதாம். "வேலையில்லாதது" என்னும் வார்த்தைக்கு ஷை கமிட்டி அபிப்பிராயப்பட்டதாவது:— உயர்தரக் கல்லூரியில்படித்துப் பரீக்ஷையில் தேறி சன்னதுபெற்று 23 முதல் 26 வயது வரையில் வேலையின்றி இருப்பவர்களும், பள்ளிக்கூடங்களில் படிப்புமுடிந்த பின்னர் உயர்தரக் கல்லூரிப்படிப்பு தேவையின்றி வேலையில்லாம லிருப்பவர்களுமென்பதாம். இந்த அன்வயங்கள் முற்றிலும் சரியானதென்று ஏற்றுக்கொள்ளக்கூடியவைகளல்லவாகிலும் இப்பொழுது எடுக்கப்படும் கணிதையை உத்தேசித்து இந்த அன்வயங்களை ஒரு ஆதாரமாகக்கொண்டு மேல்நடவடிக்கை நடத்தலாமென்பதுதான்.

மேலே 2-வது பாராவில் குறிப்பிட்ட படித்து வேலையில்லாதிருக்கும் யாவர்களும் இந்த விளம்பரம் பிரசுரித்த 6 வாரத்துக்குள் சென்னை எழும்பூரிலிருக்கும் லேபர் கமிஷனரவர்களுக்கு அடியில்கண்ட விவரப்படி. தெரிவித்துக்கொள்ளும்படி இதனால் கூறப்படுகிறது.

1. பெயர்.
2. விலாசம்.
3. யோக்கியதா பத்திரம்.
4. ஏற்கனவே வேலையிலிருந்திருந்தால் அது என்ன?
5. எந்த வேலை தேவை.

அனுப்பப்படும் கவர்மீது "வேலையில்லாத் திண்டாட்ட விசாரணை" என்று எழுதவும்.

*[M A., M.Sc., L.L.B., B.A., B.Com., B.Sc., B.Ag., Intermediate in Arts, Science, Commerce, and Agriculture. High School Examinations, Vernacular Middle Examinations, Oriental Titles Examination, Final Examination of the Technical Institutions, Engineering, Medicine.]

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அன்யதர்மம்

6.5.37

~~24-6-1937~~

4 ல

22 18

215184

724
25184
24 MAY 1937
MADRAS

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ஞு சித்திரை-மீ 24உ 1937-ஞு மே-மீ 6உ | வா 18

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
[illegible] ஆர்யதர்ம ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

சென்னையில் ஹிந்துமுஸ்லீம்கலகம்

ஒரு ஹிந்து கொல்லப்பட்டார்.

சென்னை சூளையிலுள்ள ஆஞ்சநேயஸ்வாமியின் உத்ஸவத்தில் பல்லக்கு ஊர்வலம் நடக்கையில் யாரோ ஒருவன் ஊர்வலத்தின் மீது கற்களையும் ஸோடா புட்டிகளையும் வீசியெறிந்த காரணமாக ஸ்வாமியைக் கீழே வைத்துவிட்டு ஜனங்கள் ஓடிப்போய்விட்டார்கள். பிறகு போலீஸார் வந்து ஸ்வாமியைக் கோவிலுக்குக் கொண்டுபோனார்.

இந்தக் கலகம் ஹிந்து முஸ்லீம் கலகமாக ஆகிவிட்டது. ரஸ்தாக்களில் போகிறவர்களெல்லாம் தாக்கப்படுகின்றனர். சில வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டதாகத் தெரிகிறது. கோபாலசாமி முதலி என்றவர் ஸைகிளில் போய்க்கொண்டிருக்கையில் மஹம்மதியர்களால் குத்திக் கொல்லப்பட்டார். ஒரு முஸ்லீம் கத்தியால் குத்தப்பட்டுக் கிடந்தார். கலவரம் அடிக்கடி நடக்கிறது. போலீஸார் தக்க பந்தோபஸ்து செய்து வருகிறார்கள். இருவகுப்பாருக்கும் ஸமாஸம் செய்துவைக்க முயற்சி நடக்கிறது. ஹிந்துகோவில் உத்ஸவத்திற்கு ஸரியான போலீஸ் பந்தோபஸ்து செய்யப்படாததே இந்தக் கலவரத்திற்குக் காரணம் எனச் சிலர் நினைக்கிறார்கள்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி.

உறுதிமொழித் தீர்மானம் உறுதி.

அலகாபாத்தில் நடந்த காரியக் கமிட்டியில் கவர்னர்கள் உறுதிமொழியளிக்கும் விஷயமாக அகில இந்தியக் கமிட்டி செய்த தீர்மானத்தை உறுதி செய்தும், பார்லிமெண்டில் இந்தியா மந்திரிகள் வெளியிட்ட அறிக்கைகள் காங்கிரஸ் கோரிக்கையை பூர்த்தி செய்வதாயில்லை என்றும், அது காங்கிரஸ்ஸைஅவமதிப்பதாயிருப்பதாயும், உறுதிமொழி கேட்டதன் மூலம் அரசியல் சட்டத்தை மாற்றிவிட காங்கிரஸ் விரும்பவில்லை என்றும், சட்டத்திற்கு உட்பட்டே கவர்னர்கள் உறுதிமொழியளிக்க முடியுமென்றும் அந்தத் தீர்மானம் சொல்லுகிறது.

[illegible] ஆர்பாட்டம்.

கூட்டத்தில் பேசமுடியவில்லை.

பம்பாய் மந்திரி ஸர். கம்பினி என்பவர் பெல்காமில் சுற்றுப்பிரயாணம் செய்கையில் ஜனங்கள் ஏராளமாகக் கூடி கருப்புக்கொடி காட்டி ஆர்பாட்டம் செய்தனர். எதிர் கூட்டம்வலுவாக இருந்தபடியால் மந்திரி அந்தக் கூட்டத்தில் பேசமுடியாமல் திரும்பிப்போய்விட்டார்.

காங்கிரஸ் செய்ததுபிசகு.

டாக்டர் நாயுடு அபிப்பிராயம்!

டாக்டர் வரதராஜநாயுடு வெளியிட்டுள்ள அறிக்கையில் காங்கிரஸ் உறுதிமொழி கேட்டது பிசகு என்றும், அதைக் கேட்காமலே காங்கிரஸ்காரர் உத்யோகம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்றும், கவர்னர்கள் ஸரியாக நடப்பார்களென்று நம்பியே காரியங்களைச் செய்யவேண்டுமென்றும், காங்கிரஸ் திட்டங்கள் ஒன்றும் இதுவரையில் பலிக்கவில்லையாகையால் காங்கிரஸ்வாதிகள் ஸமயோசிதக் கொள்கையை அவலம்பித்துநடக்க வேண்டுமென்றும், ஸ்ரீ திலகரின் பரஸ்பர ஒத்துழைப்பு முறையே சிறந்ததென்றும் அதில் அவர் சொல்லியிருக்கிறார்.

புனா மாருதி கோவில் ஸத்யாக்ரஹம்

தீண்டாதாரின் பேரம்.

[illegible] ஸப்தம அஷ்டமின கதாமி [illegible] வாசிக்கவும், மணியடிக்கவும் செய்துள்ள தடையை எதிர்த்து நடத்தப்பட்டுவரும் ஸத்யாக்ரஹத்தில் இன்னும் பலர் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

தீண்டாதார்கள், தங்களுக்கு ஆலயப்ரவேச உரிமை அளித்தால் தாங்களும் இந்த ஸத்யாக்ரஹத்தில் சேருவதாகச் சொல்லுகிறார்களாம்.

30-ஆயிரம்பேர் சுட்டுக் கொல்லப்பட்டனராம்.

இதாலியரின் கொடுமை.

அபிஸீனியாவில் இதாலிய கவர்னர்ஜனரலான கிரேஸானியைக் கொல்லச் சதியாலோசனை செய்த குற்றத்திற்காக 30-ஆயிரம் அபிஸீனியர்கள் இதாலியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், மிக பிரபல அபிஸீனியர் பலர் கொல்லப்பட்டதாயும் நேரில் பார்த்தவர் ஒருவர் பத்திரிகைகளுக்கு அறிவிக்கிறார்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிக்ஸ்ட் பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷீட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டென்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்

ஸ்ரீசங்கர ஜயந்தி மஹோத்ஸவம்.

துகிலி.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யாளுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு நடத்திவரும் ஸ்ரீ குரு சங்கர ஜயந்தீ மஹோத்ஸவம் ஈஸ்வர-ஹு சித்திரை மீ 23உ (5—5—37) புதன்கிழமை முதல் வைகாசி-மீ 1உ (14—5—37) வெள்ளிக்கிழமை வரை ஆர்யவித்யாபிரபோதினி ஸம்ஸ்கிருத பாடசாலை மானேஜரும் கரஸ்பான்டெண்டுமான எஸ். இராமலிங்கசாஸ்திரிகள் அவர்கள் கிருஹத்தில் பாடசாலை உபாத்தியார்களாலும் வித்யார்த்திகளாலும் கொண்டாடப்படும்.

ஆசார்யசரணசேவாதத்பரர்கள்.

பண்ணுருட்டி.

ஸ்ரீ ஜகத்குரு பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஆதி ஸ்ரீ சங்கர பகவத்பாதாளுடைய ஜயந்தி தினமான நாளது ஈஸ்வர-ஹு வைகாசி-மீ 1உ (14—5—37) சுக்கிரவாரம் வைசாக சுத்த பஞ்சமி புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், ஸ்ரீ சங்கர ஜெயந்தி உத்ஸவத்தை வழக்கம்போல் நடத்திய பிரகாரம் இவ்வருஷத்திலும் ஸ்ரீ பரமாசார்யாளின் கிருபையை முன்னிட்டு நடத்துவதாக உத்தேசித்து இருக்கிறது. காலையில் பஜனை, மறுபடி பூஜை முதலிய எல்லா கார்யங்களிலும் ஈடுபட்டு ஸ்ரீ சங்கர பகவத்பாதாளின் மூலமாய் ஸர்வ சிரேயஸ்ஸையும் அடையும் படிக்கும் ஸ்ரீ ஆசார்யகைங்கர்யத்திற்கு அவரவர்களால் ... செய்யும்படிக்கும் பிரார்த்திக்கப்படுகிறது.

சிஷ்யகோடிகள்.

திருவிரிஞ்சிபுரம்.

ஸ்ரீமத் பகவத் பாதாளுடைய அவதார திவ்யதினம் நிகழும் ஈஸ்வர-ஹு வைகாசிமீ முதல் தேதி சுக்கிரவாரம் (14—5—37) இத்திருவிரிஞ்சஸ்தலத்தே ஸ்ரீமதப்பைய்ய தீக்ஷிதர் பெரியவாளுடைய மடலாயத்தில் 5ம் ஆண்டு ஜெயந்தி உற்சவம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அன்று திவ்ய சுதினத்தில் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரருக்கு மஹாபிஷேகமும் ஸ்ரீமத் பகவத் பாதாளுடைய திவ்ய உருவபடத்திற்கு நல்ல அலங்கார ஏற்பாட்டில் அர்ச்சனைகள் விசேஷ நைவேத்திய ஆராதனைகள் நடைபெறும். பகல் பிராம்மண சந்தர்ப்பணையும் மாலை பானக பூஜைக்குப்பின் வீதிவல உற்சவமும் நடைபெறும் அன்று பிரம்ம ஸ்ரீ சென்னை ஸ்ரீவத்ஸ வெ சோமதேவசர்மா அவர்களை வரவழைத்து ஸ்ரீ ஆசார்ய பெரியவாளுடைய சரித்திரத்தை உபன்யாசம் நடத்தி வைக்கவேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறது.

பக்தர்கள்.

ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் அவர்களின் அவதாரதினம் வருகிற ஈஸ்வரஹு வைகாசி மீ 2உ (15—5—37) சனிக்கிழமை வருகிறபடியால் அந்த ஜயந்தி மஹோத்ஸவத்தை ஷெடி சித்திரை-மீ 29உ (11—5—37) முதல் ஆரம்பித்து வைகாசிமீ 2உ (15-5-37) முடிய ஐந்து நாட்கள் விசேஷமாகக்கொண்டாடுவதாக உத்தேசித்திருக்கிறது. ஷெடி உத்ஸவ காலங்களில் பிரதிதினமும் காலையில் மஹந்யாஸபூர்வகமாய் ஏகாதசருத்ராபிஷேகமும், ப்ரஸ்தானத்ரயபாஷ்யபாராயணமும், பிராம்மணஸந்தர்ப்பணமும், ஸாயங்காலங்களில் ஸ்ரீ சங்கர விஜய உபந்யாஸங்களும், வித்வதுபந்யாஸங்களும், ராத்திரிகளில் உத்ஸவமும் ஸங்கீத கச்சேரிகளும் நடத்துவதாக இருப்பதால் ஆசார்யபக்தர்களனைவரும் தங்களாலியன்றமட்டில் இந்த ஸத்கார்யங்களுக்கு உதவிபுரியுமாறு கோரப்படுகிறார்கள்.

டீ. கே. பாலஸுப்ரஹ்மண்யம்.

திருவல்லிக்கேணி.

நாளது ஈஸ்வர-ஹு ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் ஜயந்தி தினம் வைகாசி-மீ 1உ (14—5—37) பிருகுவாரம் வருகிறபடியால் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதியின் பூர்ண அநுக்ரஹத்தை முன்னிட்டு, இந்த வருஷம் திருவல்லிக்கேணி வீரராகவ முதலி தெரு ஹிந்து ஹைஸ்கூலில் சித்திரை-மீ 27உ (9—5—37) ஆதிவாரம் மாலை ஷெடி உத்ஸவத்தை ஆரம்பித்து அவதார தினமாகிய வைகாசி-மீ 1உ (14—5—37) பிருகுவாரம் பூர்த்தி செய்வதாக நிச்சயித்திருப்பதால் அனைவரும் பிரதி தினமும் காலை மாலை நடைபெறும் பூஜைக்கும், இரவில் நடக்கும் உபந்யாஸங்களுக்கும், ஷெடி வைகாசி-மீ 1உ (14—5—37) ராத்திரி 8 மணிக்கு வேத பாராயண பஜனையுடன் நடைபெறும் ஸ்ரீமத் ஆசார்யாள் ஊர்வல உத்ஸவத்திற்கும் வழக்கம்போல் வந்து குரு கைங்கர்யங்களில் ஈடுபட்டு குரு பிரஸாதத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்,

மந்திரிகளிடம் நம்பிக்கையில்லை.

... மஹஜர்.

சென்னை சட்டசபையில் இரு ஸபையிலுள்ள காங்கிரஸ் மெம்பர்கள் கையெழுத்துச் செய்து சென்னை கவர்னருக்கு ஓர் மஹஜர் அனுப்பியிருக்கிறார்கள். அதில் தற்போதிய மந்திரிசபையிடம் தங்களுக்கு நம்பிக்கை இல்லையென்று தெரிவித்திருக்கிறார்கள்.

காங்கிரஸ்காரரல்லாத மெம்பர்களிலும் அநேகர் இதில் கையெழுத்துப்போட்டிருக்கிறார்கள்.

ஆள்வாரிலும், மேலர் கோட்டாவிலும் கலஹம்.

ஹிந்துக்கள் மீது துப்பாக்கி.

ஆள்வார் ஸம்ஸ்தானத்தில் நடந்த ஹிந்து முஸ்லீம் கலகத்தில் ஹிந்துக்கூட்டத்தின் மீது ஸம்ஸ்தான அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைப்பற்றி ஹிந்து ஸபை விசாரணை செய்ததில் அதிகாரிகள் செய்தது அநீதியென்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறது

மேலர் கோட்டா என்ற ஸம்ஸ்தானத்திலும் ஒரு பள்ளிக்கூட விஷயமாக ஏற்பட்ட ஹிந்து முஸ்லீம் கலகத்தில், ஹிந்துக்கள்மீது அதிகாரிகள் துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். இதை ஆதரித்து அந்த ஸம்ஸ்தான அதிகாரிகள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

சென்னை மாகாண நிலவரி விசாரணை கமிட்டி நியமனம்.

சென்னை புதிய மந்திரிஸபையார் செய்ய உத்தேசித்துள்ள கார்யங்களில் நிலவரிமுறையைத் திருத்தி அமைப்பது ஒன்று. இதைச் சீராக நடத்தவேண்டிமிஸ்டர் மார்ஷ்பாங்க்ஸ் என்பரின் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. இது மாகாணமெங்கும் விசாரணை செய்து சிபார்சு வெளியிடும்.

பட்டாபிஷேககாலத்தில் பசுவதை.

நிறுத்த வேண்டுகோள்.

தற்போது பம்பாய் மந்திரிகளில் ஒருவரும் பர்பாய் மாஜிமேயராயுமிருந்த ஸ்ரீமான் ஜமுனாதாஸ் மேட்டா பிரிட்டிஷ் ப்ரதாமந்திரிக்கு ஒரு அவஸர ஸமாசாரம் அனுப்பியிருக்கிறார்.

அதாவது ராஜ சக்ரவர்த்தியாரின் பட்டாபிஷேக காலத்தில் இங்கிலாந்தில் பலவிடங்களிலும் எருதுகளைக் கொன்று பொரிக்கும் வழக்கம் நடைபெறுமாம். இந்தக் கொடுமையான வழக்கத்தை இந்தியர்கள் வெறுப்பதாயும், நாகரிக தேசமாகிய இங்கிலாந்தில் இந்த அநாகரிகத்தை நிறுத்திவிட வேண்டும் என்றும் பம்பாயில் நடந்த பொதுக் கூட்டத்தில் இம்மாதிரி ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருப்பதாயும் அவர் மிஸ்டர் பால்டுவினுக்கு தந்தி கொடுத்திருக்கிறார்.

புதிய மந்திரிஸபை சட்டவிரோதமானது.

சென்னை அட்வகேட் ஸங்கத் தீர்மானம்.

சென்னை ஹைகோர்ட் அட்வகேட் ஸங்கத்தின் பொதுக்கூட்டத்தில் சென்னை புதிய மந்திரிஸபை அமைப்பைப் பற்றி சட்டரீதியான விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டதில், அது சட்ட விரோதமானதென்றும், இந்தியா கவர்ன்மெண்ட் சட்ட விதிகளுக்குமீறியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சட்டஸபை காங்கிரஸ் மெம்பர்கள் 9உ கூட்டம்

சென்னை சட்டஸபையிலுள்ள காங்கிரஸ் மெம்பர்களின் கூட்டமொன்று 9உ மாம்பலத்தில் கூட்ட ஏற்பாடாகியிருக்கிறது. உறுதிமொழி விஷயமாக இந்தியா மந்திரியும் காங்கிரஸ் கார்யகமிட்டியும் செய்துள்ள தீர்மானங்களைப் பரிசீலித்து மேற்கொண்டு நடக்கவேண்டிய வேலைகளைப்பற்றி இதில் யோசிக்கப்படும்.

மந்திரிமீது இன்ஸால்வென்ஸி வழக்கு.

வங்காள ப்ரதம மந்திரியான ஜனாப்பஸ்லுல் ஹக் மீது கல்கத்தா ஹைகோர்ட்டில் இன்ஸால்வென்ஸி மனு கொடுக்கப்பட்டது. அவருக்கு ஏராளமாகக் கடன் இருப்பதாயும் அவருடைய சொத்துக்களை ரிஸீவரிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் அந்த மனுவில் சொல்லப்பட்டிருந்தது. இது ஸம்பந்தமான விசாரணை நடந்த பிறகு ஷெடி மனு தள்ளப்பட்டது.

திருவாங்கூரின் போட்டி உத்திரவு.

பூஜகர்களுக்கு எச்சரிக்கை. படித் தனம் நிறுத்தப்படுமாம்.

கொச்சி மகாராஜாவின் உத்திரவுக்குட்பட்டு பிராயச்சித்தம் செய்துகொள்ள ஸம்மதிப்பவர்களும், அந்த உத்திரவை பகிரங்கமாக ஆக்ஷேபிக்காதவர்களுமான நம்பூரி பூஜகர்களுடைய உரிமைகள் பறிக்கப்படும் என்று திருவாங்கூர் ஸர்க்கார் ஓர் உத்திரவு போட்டிருக்கிறார். சம்பளம், தானம், படிச்செலவு, கௌரவம் முதலிய எல்லா உரிமைகளும் நிறுத்திவிடப்படுமென்று திருவாங்கூர் ஸர்க்கார் எச்சரித்திருக்கிறார்கள்,

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(29—4—37 தொடர்ச்சி.)

3. வைகரீ வாக்கானது அ முதல் க்ஷ வரையிலுள்ள ஐம்பது அக்ஷரங்களாலும் அவற்றின் சேர்க்கைகளான பதங்களாலும் உண்டாவது. அதை இங்கு 'பஞ்சாசதர்ண கல்பித பத சில்பாம்' என்று சொல்லப்பட்டது. வர்ணங்கள் அ முதல் க்ஷ வரையில் இருப்பதால் பஞ்சாசத் வர்ணங்களையும் (வைகரீ வாக்கையும்) அக்ஷமாலையென்றுசொல்லப்படும்.

'பரா ப்ரூஜன்ம பச்யந்தீ வல்லீ ருக்சஸமுத்பவா |
மத்யமா ஸௌரபா வைகர்யக்ஷமாலா ஜபத்யஸௌ ||'

4. இந்த நாலுவிதமான வாக்குகளும் அம்பிகையின் ரூபங்களென்பதாக

'பரா ப்ரத்யக்சிதீ ரூபா பச்யந்தீ பரதேவதா |
மத்யமா வைகரீ ரூபா.... .... ||"

என்பதாக 'ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம'த்தில் சொல்லப்பட்டது. இதைபற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் பாஸ்கரராயருடைய ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம், காமகலா விலாஸம், சாரதா திலகம், ஆர்தர் ஏவலனுடைய க்ரந்தங்கள் முதலியவற்றைப் பார்க்கவும்.

60. ஆதிக்ஷன் மம குருராட்
ஆதி க்ஷாந்தாக்ஷராத்மிகாம் வித்யாம் |
ஸ்வாதிஷ்ட சாபதண்டாம்
நேதிஷ்டாமேவ காமபீடகதாம் ||

மம குருராட் - என்னுடைய குருநாதனானவர், ஸ்வாதிஷ்ட - மிகவும் இனிப்பான, சாபதண்டாம் - (கரும்பு) வில்லையுடையவளும் காமபீடகதாம் - காமகோடிபீடத்திலிருப்பவளும், ஆதி - அ முதலாக, க்ஷாந்த - க்ஷ முடியவுள்ள, அக்ஷராத்மிகாம் - அக்ஷரங்களின் ஸ்வரூபமாயுள்ள, வித்யாம் - வித்யாரூபிணியுமான ஸ்ரீ காமாக்ஷியை, நேதிஷ்டாம் ஏவ - மிகவும் ஸமீபத்திலிருப்பவளாகவே, ஆதிக்ஷத் - காட்டினார் (உபதேசித்தார்.)

1. அதாவது, தன் குருநாதருடைய அனுக்ரஹத்தினால் வித்யா ரூபிணியான ஸ்ரீ காமாக்ஷியின் தர்சனம் தனக்குக் கிடைத்ததாகச் சொல்லுகிறார்.

61. துஷ்யாமி ஹர்ஷிதஸ்மர-
சாஸனயா காஞ்சிபுரி க்ருதாஸனயா |
ஸ்வாஸனயா ஸகல ஜகத்-
பாஸனயா கலித சம்பராஸனயா ||

ஹர்ஷிதஸ்மரசாஸனயா - ஸ்மரனை (மன்மதனை) தண்டித்தவரான பரமசிவனை ஸந்தோஷப்படுத்தியவளும், காஞ்சிபுரி - காஞ்சிபுரியில், க்ருதாஸனயா - வாஸஸ்தானத்தையுடையவளும், ஸ்வாஸனயா - தன்னிடமே நிலையோடிருப்பவளும், ஸகல ஜகத் பாஸனயா - ஸகல ஜகத்தையும் ப்ரகாசத்தோடு இருக்கச் செய்பவளும், கலித சம்பராஸனயா - மன்மதன் (திரும்பவும்) உண்டாகும்படி செய்தவளுமான (ஸ்ரீ காமாக்ஷியால்), துஷ்யாமி - ஸந்தோஷப்படுகிறேன்.

1. ஜகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் ப்ரஹ்மத்தினிடம் நிலையோடிருக்கையில், ப்ரம்மமானது தன்னிடமே நிலைத்திருப்பதாகச் சொல்லப்படும். இப்படி தான் நிலைத்திருப்பதற்கு பிற வஸ்துக்களை அபேக்ஷிக்காமல தன்னிடமே ப்ரதிஷ்டிதமாக ப்ரம்ஹமிருப்பதை 'ஸ்வாஸனயா' என்ற பதத்தினால் இங்கு குறிக்கப்பட்டது.

2, சம்பரன் என்ற மஹா மாயாவியான அஸுரனை மன்மதன் ஸம்ஹாரம் செய்ததால் அவனுக்கு சம்பராஸனன் என்று பெயர். அவனை அம்பாள் உஜ்ஜீவிக்கச் செய்ததை 'கலித சம்பராஸனயா' என்று சொல்லப்பட்டது.

3. சம்பரமென்றால் மிகவும் சிரேஷ்டமான என்றும் அர்த்தமுண்டு. ஸர்வோத்க்ருஷ்டமான ஆஸனமான காமகோடி பீடத்தில் அம்பிகை இருப்பதை 'கலித சம்பராஸனயா' என்று சொன்னதாகவும் சொல்லலாம்.

62. ப்ரேமவதீ கம்பாயாம்
ஸ்தேமவதீ யதிமன:ஸு பூமவதீ |
ஸாமவதீ நித்யகிரா
ஸோமவதீ சிரஸி பாதி ஹைமவதீ ||

ஹைமவதீ - ஹிமவானுடைய பெண்ணான காமாக்ஷியானவள், கம்பாயாம் - கம்பாநதியிடத்தில், ப்ரேமவதீ - ப்ரியமுள்ளவளாயும், யதிமன:ஸு - யதிகளுடைய மனதுகளில், ஸ்தேமவதீ - ஸ்திரமான நிலையோடிருப்பவளும், பூமவதீ - ஐச்வர்யம் (மஹிமை) பொருந்தியவளும், நித்யகிரா - அழிவில்லாத வாக்காகிய வேதங்களால், ஸாமவதீ - புகழப்பட்டவளும், சிரஸி - சிரஸில், ஸோமவதீ - சந்திரனையுடையவளுமாக, பாதி - விளங்குகிறாள்.

63. கௌதுகினா கம்பாயாம்
கௌஸுமசாபேன கீலிதேனாந்த: |
குலதைவதேன மஹதா
குட்மள முத்ராம் துனோது ந: ப்ரதிபா ||

கம்பாயாம் கௌதுகினா - கம்பாநதியில் (கம்பாநதீ தீரத்தில் இருப்பதில்) உத்ஸாஹத்தோடு கூடியதும், அந்த: - உள்ளுக்குள் (மனதில்) கௌஸுமசாபேன - மன்மதனால், கீலிதேன - செய்யப்பட்ட அடையாளத்தோடு கூடியதுமான (அதாவது, ச்ருங்கார ரஸம் நிரம்பிய மனதையுடையதுமான), மஹதா குலதைவதேன - உயர்ந்த (ஸர்வோத்க்ருஷ்டமான) குலதெய்வத்தினால் ந: ப்ரதிபா - நம்முடைய புத்தியானது, குட்மளமுத்ராம் துனோது - மலர்ச்சியடையட்டும்.

1. மன்மதன் புஷ்பங்களாலாகிய தனுஸ்ஸை உடையவனாகையால் இங்கு 'கௌஸுமசாபேன' என்று சொல்லப்பட்டது.

2. மலரும் தருணத்திலிருக்கும் மொட்டுக்கு குட்மளம் என்று பெயர்.

64. கேனாபி மிளித தேஹா
ஸ்வாஹாஸஹாய திலகேன |
ஸஹகார மூலதேசே
ஸம்வித்ரூபா குடும்பினீ ரமதே ||

ஸம்வித்ரூபா - ஞான ரூபிணியான, குடும்பினீ - ஒரு குல ஸ்திரீயானவள், ஸ்வாஹா ஸஹாய - அக்னியை, திலகேன - திலகமாகயுடைய (அதாவது அக்னியை நெற்றிக் கண்ணாக உடைய) கேனாபி - யாரோ ஒரு (வர்ணிக்க முடியாத) யௌவன புருஷனுடன், மிளிததேஹா - சேர்ந்ததான சரீரத்தையுடையவளாய். ஸஹகார மூல தேசே - ஆம்ரமரத்தின் மூலப்ரதேசத்தில் (அடியில்), ரமதே - ரமித்துக்கொண்டிருக்கிறாள்.

1. இங்கு சிவதம்பதிகளுடைய அர்த்தநாரீச்வர ஸ்வரூபமானது 'மிளிததேஹா' என்பதினால் சொல்லப்பட்டது.

2. அக்னியினுடைய பத்னிக்கு ஸ்வாஹா என்று பெயராகையால் இங்கு 'ஸ்வாஹா ஸஹாய' னென்று அக்னியைச் சொல்லப்பட்டது.

65. குஸுமசர கர்வ ஸம்பத்-
கோசக்ருஹம் பாதி காஞ்சிமத்யகதம் |
ஸ்தாபிதம் அஸ்மின் கதமபி
கோபிதம் அந்தர்மயா மனோரத்னம் ||

குஸுமசர - மன்மதனுடைய, கர்வஸம்பத் - கர்வமாகிய தனத்தின், கோசக்ருஹம் - பொக்கிஷமானது, காஞ்சிமத்யகதம் - காஞ்சிபுரியின் நடுவிலிருந்துகொண்டு, பாதி - விளங்குகிறது. அஸ்மின் ஸ்தாபிதம் - அதில் ஸ்தாபிக்கப்பட்டதாயிருக்கும், மனோரத்னம் - என் மனோரத்னமானது, மயா - என்னால், அந்த: - என் மனத்திற்குள், கதமபி கோபிதம் - எப்படியோ காப்பாற்றப்பட்டுவருகிறது.

1. காஞ்சிமத்யகதமான காமகோடிபீடமானது மன்மதனுடைய கர்வத்திற்குக் காரணமாயிருக்கும் காமத்திற்கு பொக்கிஷம்போல் விளங்குகிறதென்றும் அதில் ஸ்தாபிக்கப்பட்ட மூர்த்தியான ஸ்ரீ காமாக்ஷியானவள் ஒரு ரத்னம்போல் என் மனதில் விளங்கிக்கொண்டு என்னால் எப்போதும் காப்பாற்றப்பட்டு (அதாவது, த்யானிக்கப்பட்டு) வருகிறாள் என்றும் கவியால் சொல்லப்பட்டது. அவ்விதமான கோசக்ருஹத்திற்குள் ஸ்தாபிதமான (ஸ்ரீ காமாக்ஷியாகிற) ரத்னத்தைத் தான் கொண்டு வந்து தன் மனதிற்குள் வைத்து எப்படியோ காப்பாற்றி வருவதாக வர்ணிக்கப்பட்டது.

66. தக்த ஷடத்வாரண்யம்
தரதளித குஸும்ப ஸம்ப்ருதாருண்யம் |
கலயே நவ தாருண்யம்
கம்பா தடஸீம்னி கிமபி காருண்யம் ||

தக்த ஷடத்வாரண்யம் - ஆறு அத்வாக்களாகிய ஆரண்யத்தை எரித்ததும் (அதாவது, அவற்றைக் கடந்ததும்), தரதளித - கொஞ்சம் மலர்ந்ததான, குஸும்ப - குங்குமப்பூவின், ஸம்ப்ருத - சேர்க்கையான, ஆருண்யம் - சிகப்பு நிறத்தையுடையதும், நவ தாருண்யம் - புதிதான (ஆரம்பித்ததான) யௌவனத்தையுடையதுமான, கிமபி காருண்யம் - ஏதோ ஒரு கருணாரூபிணியை, கம்பா தடஸீம்னி - கம்பா நதிக்கரையில், கலயே - அறிகிறேன் (த்யானிக்கிறேன்.)

1. ஜகத்தானது ஷட் (ஆறுவகையான) அத்வாக்களாய் (வழிகளாய்) சித்ரூபிணியான அம்பிகையிடமிருந்து ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

'வர்ண: கலா பதம் தத்வம் மந்த்ரோ புவனமேவ ச |
இத்யத்வ ஷட்கம் தேவேசி பாதி த்வயி சிதாத்மனி ||'

கொச்சி மஹாராஜாவுக்குப் பாராட்டு

குடந்தையில் பெருங்கூட்டம்.

அரசியல் சட்டத்தில் மதப்பாதுகாப்புவேண்டும்

சில முக்கிய தீர்மானங்கள்.

(நமது நிருபர்)

கூடல் மாணிக்கம் கோவில் விஷயமாக கொச்சி மஹாராஜா மிக்க உறுதியுடன் ஸநாதன தர்மக்கொள்கையை அனுசரித்து நிற்பதைப் பாராட்டுவதற்காகவும், வேறு சில ஸமயோசித விஷயங்களை யோஜித்து முடிவு செய்யவும் கும்பகோணம் தார்மிகர்களுடைய பெருங்கூட்டமொன்று ஜில்லா பிராமண ஸபையின் ஆதரவில் ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் ஸ்ரீமடத்தில் சனிக்கிழமை மாலை 7½-மணிக்கு நடைபெற்றது. அங்கு தினமும் நடைபெற்றுவரும் பிரும்மஸ்ரீ வேப்புசாஸ்திரிகளுடைய ஸ்ரீமத்ராமாயண ப்ரவசனத்தை முன்னிட்டும் ஏராளமான ஸ்திரீகளும் புருஷர்களுமாக மிகப் பெரிய கூட்டம் வந்திருந்தது. கூட்டத்தில் நகரப்ரமுகர்களிலும் பலர் காணப்பட்டனர். ட்வுன் ஹைஸ்கூல் மாஜி ஹெட்மாஸ்டர் பிரம்மஸ்ரீ ஆர் ஸ்வாமிநாதய்யர் அவர்களை அக்ராஸனம் வஹிக்கும்படி ஸபா கார்யதரிசியான அட்வோகேட் பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யர் அவர்கள் பிரேரணை செய்தார். பிரும்மஸ்ரீ ஸ்வாமிநாதய்யர் தலைமைவஹித்து அட்வோகேட் ஸ்ரீமான் எம். கே. வைத்யனாதய்யரவர்களைத் தீர்மானங்களைப் பிரேரேபிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீமான் அய்யாவர்கள் கொச்சிமகாராஜா ஆலயப்ரவேச விஷயத்தில் உறுதியாக ஸநாதன தர்மத்தை ஆதாரமாக நிற்பதைப் பாராட்டியும், கூடல் மாணிக்கம் கோவில்விஷயமாக அவர் எடுத்துக்கொண்ட தார்மிகமான நடவடிக்கைகளை ஆதரிப்பதாயும் இவ்விஷயத்தில் திருவாங்கூர் ராஜ்யத்தின் போக்கைக் கண்டிப்பதாயும்,

இந்தியா கவர்ன்மெண்டு புதிய சட்டத்தில் மதப்பாதுகாப்பு விஷயமாக நிரந்தரமான ஒரு பிரிவு சேர்க்கப்பட வேண்டும் என்றும்,

புனா மாருதி கோவிலில், வாத்யம் வாசிக்கக் கூடாதென்றும், மணியடிக்கக் கூடாது என்றும் மாஜிஸ்ட்ரேட் பிறப்பித்துள்ள உத்திரவானது ஹிந்துமத உரிமைகளுக்குப் பங்கம் விளைவிப்பதால் அதைப் பலமாக ஆக்ஷேபிப்பதாயும்,

புதுச்சேரி சட்டசபையில் பிரிடிஷ் இந்தியாவில் போல் பால்ய விவாகத்தடை மசோதா ஒன்றைக் கொண்டுவர முயற்சி நடப்பதை ஆக்ஷேபிப்பதாயும்,

கருத்துக்களடங்கிய தீர்மானங்களை பிரேரித்து அவைகளின் நோக்கத்தையும் விவரித்துக் கூறினர்.

பிரும்மஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர் ஷை தீர்மானங்களை ஆமோதித்துப் பேசுகையில் "திருவாங்கூர் அரசாங்கம் ஆலயப்ரவேச அக்ரமத்தைப் பிடிவாதமாயும், கட்டுப்பாடாயும், தப்பு வழியிலும் நிலைநிறுத்த முற்பட்டிருப்பதாயும், இந்த விஷயத்தைக் கொச்சி ராஜ்யத்திலும் தந்திரமாக புகுத்திவிடச் சூழ்ச்சி நடப்பதாயும், கொச்சியிலுள்ள கூடல் மாணிக்கம் கோவிலில், திருவாங்கூர் தேவாலய பூஜகர்கள் பூஜை செய்வது வழக்கமாயினும், அங்கு பஞ்சமர்புகும் ஆலயங்களில் பூஜை செய்யாமல் ஒதுங்கிநிற்கும் பூஜகர்கள் பலர் இருப்பதால் அவர்களைக் கொண்டு கூடல் மாணிக்கம் கோவில் பூஜையை நடத்த ஸௌகர்யமிருந்தும், அப்படிச் செய்யாமல் பஞ்சமர்புகும் தேவாலய பூஜகர்களையே திருவாங்கூர் ஸர்க்கார் வேண்டுமென்றே கூடல் மாணிக்கம் கோவிலுக்கு அனுப்புவது கட்டுப்பாடான விஷமமென்று தெளிவாகிறதென்றும் கொச்சி மஹாராஜா இந்த சூழ்ச்சிக்கு இடம்கொடுக்காமல் உறுதியாக உத்திரவு போட்டுவிட்டதை தார்மிகர்கள் பாராட்ட வேண்டுமென்றும், கொச்சியின் உத்திரவிற்கு உட்பட்டு பிராயச்சித்தம் செய்துகொள்ள முன்வரும் பூஜகர்களுடைய படித்தனங்களையும், தானங்களையும் நிறுத்திவிடப் போவதாக திருவாங்கூர் அறிவித்திருப்பது இன்னும் பெரிய அநீதியாய் இருக்கிறதென்றும், அந்த படித்தனங்களும், தார்மிகர்களான முன் அரசர்களால் பூஜகர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பதால் அவைகளை தற்போதிய அரசர் பறிமுதல் செய்வது மிகுந்த அக்ரமமென்றும், பண பலத்தைக்கொண்டு தர்மத்தை அழிக்கவும், அதர்மத்தை விருத்தி செய்யவும் துணிந்துவிட்டதையே இது காட்டுவதாயும், ஸர்க்கார் செய்துள்ள அதர்மத்தை ஆதரிக்குமவர்களுக்கே பணம் கிடைக்குமென்றும். அதை எதிர்ப்பவர்களுக்குப் பணம் கிடையாதென்பதும் இதற்கு நிதர்சனமாயிருப்பதாயும், இம்மாதிரி பூஜகர்களை பயமுறுத்தியும், [illegible] உத்திரவை ஸ்தாபித்துகொள்ள திருவாங்கூர் முன் வந்திருப்பதிலிருந்து, அந்த ஸம்ஸ்தானத்தில் பண பலத்தாலும், பயமுறுத்தலாலுமே இந்த ஆலயப்பிரவேச அநீதி அமைதியாக ஸாதிக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணத் தகுந்த காரணம் ஏற்படுவதாயும், அந்த தேச ஜனங்கள் இந்த அக்ரம உத்திரவை இன்னும் ஆதரிக்கவில்லை என்பதே தெளிவாகிறதென்றும் ராஜநீதி ஒழுங்காக நடைபெறுவதற்கு தண்டாதிகாரம் எவ்வளவு அவச்யமோ, அவ்விதம் மதஸம்பந்தமான கார்யங்கள் ஒழுங்காக நிலைத்திருப்பதற்கு ப்ராயச்சித்த விதிகள் ஆவச்யகங்களென்றும், பிராயச்சித்தங்களும் ஸமூஹ பஹிஷ்காரநிகளும் இக்காலத்தில் கூட ராஜீய விஷயங்களுக்குக் கூட அவசியமென்று ராஜீய வாதிகள் நினைக்கையில் மதஸம்பந்த விதிகளில் அவைகளை ஆசரிப்பதைப் பற்றி எவரும் குறைகூற முடியாது என்றும் இவ்விஷயத்தில் கொச்சி ராஜா ஸநாதன தர்மத்தின் அடிப்படையான தத்வங்களைக் கூட உலகமறிய பரவச் செய்துவிட்டதற்காக அவரிடம் நாம் மிகுந்த நன்றிசெலுத்தவேண்டுமென்றும், அவருடைய தர்மவழி நிலையுள்ள கார்யங்களை நாம் மனப் பூர்வமாக ஆதரித்து அவருக்குப் பக்கபலமாக நிற்க வேண்டியது ஆவச்யகமென்றும் குறிப்பிட்டார்.

பிறகு பிரும்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் ஆதரித்துப் பேசுகையில் ஸ்வதர்மமில்லாத ஸ்வராஜ்யம் பயனற்றதென்றும், ஸ்வராஜ்ய வாதிகள் இதை அறியவில்லையென்றும், ஸநாதனிகளும் தர்மவிரோதமற்ற வழியில் ஸ்வராஜ்யம் வேண்டும் என்றே விரும்புவதாயும், ஸ்வதர்ம மற்ற ஸ்வாராஜ்யமானது, அரையில் வஸ்திரமணியாமல் தலையில் அழகியதலைப்பாகையணியும் நிர்வாணிக்கு ஸமானமானதென்றும் அழகாக எடுத்துக் கூறி யாவரும் தீர்மானங்களை ஆதரிக்கும்படிக் கேட்டுக்கொண்டார்.

மாஜிஜில்லா ரிஜிஸ்தாரும், ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி கோவில் டிரஸ்டியாயிருந்தவருமான ஸ்ரீமான் என். எஸ். ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களாலும் தீர்மானங்கள் ஆதரிக்கப்பட்டன. தலைவர் பிரும்மஸ்ரீ ஸ்வாமிநாதய்யர் அவர்கள் தீர்மானங்களை ஓட்டுக்கு விடுமுன் சுருக்கமாகவும், தெளிவாகவும் அவைகளின் கருத்தை விளக்கி, யாவரும் இத்தகைய தார்மிக பிரசார கார்யங்களில் சிரத்தை எடுத்துக்கொண்டு தர்மத்தை ரக்ஷிக்கப் பாடுபட வேண்டுமென்றும் சொன்னார்.

தீர்மானங்கள் ஓட்டுக்கு விடப்பட்டு பலத்த கரகோஷத்தினுடையே நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீமான் வி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங் அவர்கள் ஸமயோசிதமாயும், சாதுர்யமாயும் பேசி, தலைவருக்கும் மற்றவருக்கும் வந்தனோபசாரம் கூறியபின் இரவு 7¾-மணிக்கு ஸபை பூர்ணமாகியது.

நெடும்பள்ளி நம்பூத்ரி பஹிஷ்கரிக்கப்பட்டார்.

கொச்சி ஸம்ஸ்தானம் கூடல் மாணிக்கம் கோவில் விஷயமாய் தற்போது ஏற்பட்டிருக்கும் அமளிக்கு காரணமாயிருப்பவர் நெடும்பள்ளி பரமேசுவரன் என்ற நம்பூத்ரி.

இவர் நெடும்பள்ளி இல்லத்தைச் சேர்ந்தவர். திருவநந்தபுரம் சம்ஸ்தானத்திற்குள் இவர் வாஸமும் சொத்துக்களும் உடையவர். இவருடைய இல்லத்துக்கு திருவாங்கூர் மகாராஜாவிட்டிருந்த வருஷாந்தரம் சுமார் ரூ. 20,000 இருபதாயிரம் பெறுமானம் உள்ள வரும்படிகள் ஏற்பட்டிருக்கின்றன.

திருவாங்கூர் மகா ராஜா வெளிப்படுத்திய ஆலயப்ரவேச சாஸனத்துக்கு முன்னவே இவர் ஸம்மதி கொடுத்தவர்.

கூடல்மாணிக்கம் கோவிலில் நடந்த 'கலசம்' உத்ஸவத்தில் இந்த பரமேசுவரன் நம்பூத்ரி சம்பந்தப்பட்டதற்காக அவருடைய குடும்பத்தார்கள் அதில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார்கள்.

தன் குடும்பத்தார் தன்னை பஹிஷ்காரம் செய்திருப்பதின் காரணமாக, தான் குடும்ப இல்லத்துக்கு வெளியே தனிக் குடிசையில் வசித்து வருவதாக மெயில்பத்திரிகையின் நிருபரிடம் பரமேச்வரன் நம்பூத்ரி தெரிவித்தார். அவர்ணிகள் பிரவேசிக்கும் ஸ்ரீபத்மநாபசுவாமிகோவிலில் பூஜை செய்த இந்த பரமேசுவரன் நம்பூத்ரியை வேண்டுமென்று விதண்டைக்காகவே கூடல்மாணிக்கம் பூஜைக்கு அனுப்பினார்கள். நெடும்பள்ளி இல்லத்தைச் சேர்ந்த வேறு ஒருவரை கூடல் மாணிக்கத்துக்கு அனுப்பியிருக்கலாம். வம்பு வளர்ப்பதற்காகவே அனுப்பவில்லை.

ஆலயங்களில் அவர்ணிகளை பிரவேசிக்க சம்மதி கொடுக்காதவர்களுக்கு இனிமேல் திருவாங்கூரிலிருந்து எவ்வித தானங்களும் மானியங்களும் பண உபகாரங்களும் கொடுக்கப்படமாட்டாது என்று மகாராஜா ஆக்ஞை இட்டிருக்கிறார்.

இது அர்த்த பலத்தைக்கொண்டு தர்மத்தை நசுக்குவதாகும்.

ஸத்யமே ஜயிக்கும். பிசாசம் கொஞ்ச தூரம் வெல்லும். முடிவில் ஜயிக்காது. அர்த்த பலம் தர்மநிலையை சிறிது ஆட்டும். கடைசியில் தர்மமே நிலைக்கும்.

ஓர் நிருபர்.

திருவையார் கும்பாபிஷேகம்.

மஹாஜனங்களின் ஆலயபக்தி

சீர்திருத்தக்காரர்கள் கவனிக்கவேண்டிய விஷயம்.

(நமது நிருபர்)

மஹாபுண்ய க்ஷேத்திரமாகிய திருவையாரில் உள்ள தேவாலயத்தை ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியார் என்ற புண்யசீலர் பல லக்ஷம் ரூபாய் செலவில் வெகு நாளாகத் திருப்பணி செய்து இம்மாதம் 2௳ ஞாயிற்றுக் கிழமையன்று விசேஷ வைபவத்துடன் கும்பாபிஷேகம் நடத்திவைத்தார். இதை முன்னிட்டுச் செய்யப்பட்ட வைதிக, லௌகிக கார்யங்களின் விமர்சையை வர்ணிக்க இயலாது. சுமார் 2-லக்ஷம் ஜனங்கள் கும்பாபிஷேகம் வைபவத்தைத் தரிசித்து ஜன்ம ஸாபல்யமடைய அங்கு கூடியிருந்தார்கள். கும்பாபிஷேக ஸமயத்தில் நகரத்தின் வெகு தூரம் வரையில், ரோடுகளிலும், மாடிகளிலும், மரங்களிலும் கூட தாங்கமுடியாத ஜனக்கூட்டம் நின்றுகொண்டு அதை தரிசித்த காக்ஷி கண்கொள்ளாத காக்ஷியாயிருந்தது. இந்த சிறந்த தர்மகார்யத்தில் ஈடுபட்ட தர்மவானாகிய ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியாரைப் பாராட்டாதவரில்லை. அவருடைய கைங்கர்யத்திற்கு ஏற்றபடி அவருக்கு பொது ஜனங்களால் மரியாதைகள் செய்யப்பட்டதில் அதிசயமில்லை. இந்த தார்மிகர் நீடூழி வாழ்க.

ஜனங்களின் தெய்வபக்தி.

இந்தக் கொடிய கலியில்கூட நமது ஹிந்து ஜனங்களுக்கு மத சிரத்தையும், தெய்வபக்தியும், பரலோக நம்பிக்கையும் சிறிதுகூடக் குறையவில்லை என்பதற்கு இதுபோன்ற ஸந்தர்பங்கள் முக்கிய நிதர்சனங்களாயிருக்கின்றன. பாரத தேசத்தில் ஆஸேது ஹிமாசலம் அங்கங்கு இத்தகைய விசேஷங்கள் புண்யதீர்த்த ஸ்நான, க்ஷேத்திரோத்ஸவாதிகளும் அடிக்கடி நேருவதும், பணம், சரீரச்ரமம் முதலியவைகளைக் கூட கவனியாமல் வெகு தூரதேசங்களிலிருந்துகூட லக்ஷக்கணக்கணக்காக ஜனங்கள் பக்திசிரத்தையுடன் கூடுவதையும் காண்கிறோம். ஆசார நிருத்தவாதிகள் ஏதோ ஒரு மூலையில் சிலரைக் கூட்டிவைத்துக்கொண்டு பத்திரிகைகளின் பின்பலத்தால், தேசம் முழுவதும் சீர்திருத்தத்தை விரும்புபோல் மாயையைக் காட்டியபோதிலும் அது வெறும் ஏமாற்றமென்பதும், ஸநாதன நம்பிக்கை உள்ளவர்களே இன்னமும் தேசத்தில் மிக மிக அதிகமாயிருப்பதாயும் இத்தகைய ஸந்தர்பங்கள் விளக்குவதை யார் தான் மறைக்கவோ, மறுக்கவோ முடியும்? திருவையாற்றில் இவ்வளவு பெரிய ஜனக்கூட்டம் என்ன நம்பிக்கையால் அங்குக் கூடியதென்பதை சீர்திருத்த வாதிகள் கவனிப்பது நலம்.

ஆலயப்ரவேசத்தை ஆதரிப்பார்களா?

முக்கியமாக இச்சமயத்தில் தீண்டாதார் ஆலயப்ரவேச வாதிகள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. இந்த கும்பாபிஷேகத்தில் உபயோகப்பட்ட முக்ய வஸ்து ஜலமே. இந்த அபிஷேக ஜலமானது நதிகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும் நம்மால் காணப்படும் ஸாதாரண ஜலத்தை விட மிக மேற்பட்டதென்றும் அதில் மந்திர சக்தியால் தெய்வ ஸாந்நித்யம் ஏற்பட்டுவிட்டதென்றும், அதனால் அது மிகப்புனிதமான தீர்த்தமென்றும் அதை தர்சிப்பதால் இஹபர சிரேயஸ்ஸுக்கள் உண்டாகுமென்றும் ஜனங்கள் நம்பினார்கள். இதற்கு ஆகமசாஸ்திர நம்பிக்கையே காரணமென்பதை விட வேறு யாதொரு காரணமும் சொல்லமுடியாது. ஸாதாரண ஜலத்தில், மந்த்ர ஜப, ஹோமாதிகளுடைய பலத்தால் தெய்வசக்தியை உண்டுபண்ணமுடியுமென்று த்ருடமான சிரத்தை கொள்ளாதவரையில் ஜனங்கள் இதை ஆதரிப்பார்களா? பிரத்யக்ஷத்தில், ஸாதாரண ஜலத்திற்கும் இந்த அபிஷேகஜலத்திற்கும் நம்மால் எவ்வித வித்யாஸமும் காணப்படவில்லையே! ஆயினும் அந்த ஜலத்தில் மந்த்ரசக்தியால் ஏதோ தெய்வ ஸான்னித்யம் ஏற்பட்டுவிட்டதாக சாஸ்திரத்தையே ஜனங்கள் நம்பியிருக்கிறார்களேயல்லது வேறில்லை. இவ்வாறு ஜலத்திலும், சிலையிலும், உலோஹத்திலும் மந்திரசக்தியால் தைவ ஸாந்நித்யம் ஏற்படுவதாகக் கூறும் ஆகம சாஸ்திரமே, சில அநாசாரங்களால் அந்த தைவஸாந்நித்யம் குறைந்து விடுமென்று சொல்லுவதை மட்டும் ஜனங்கள் எப்படி நம்பாமல் இருக்கமுடியும்? ஆதலால் ஆகம சாஸ்திர நம்பிக்கையுடன் அங்கு கூடியிருந்த 2-லக்ஷம் ஜனங்களும் ஆலயங்களில் தீண்டாதார் பிரவேசிப்பதை ஆக்ஷேபிக்கிறவர்களே என்பதில் ஸந்தேகத்திற்கு இடமில்லை. தீண்டாதார் பிரவேசத்தால் தெய்வஸான்னித்யம் குறையுமென்ற ஆகமவிதியை இந்த 2-லக்ஷம் பேர்களும் மனப்பூர்வமாக ஆதரிப்பவர்களே என்பதை ஆலயப்ரவேச வாதிகள் புறக்கணிப்பதிற்கில்லை. இந்தப் பெரிய ஸம்பிரம ஸந்தர்ப்பத்தில் ஒரு தீண்டாதாரையாவது கோவிலில் புகவிட இந்த 2-லக்ஷ ஜனங்களில் ஒருவராவது ஸம்மதிப்பாரா? அதற்கேற்ற முயற்சி நடந்ததா? நடக்க முடியுமா?

பத்திரிகைகளின் அலக்ஷ்யம்.

திருவையார் கும்பாபிஷேகம் ஹிந்து மக்களின் மதஸம்பந்தமான ஒரு பெரிய ஸம்பவம். இதில் ஜனங்கள் காட்டியுள்ள சிரத்தைக்கும் உத்ஸாஹத்திற்கும் அளவில்லை. இப்படியிருந்தும் இவ்விஷயம் நம் தென்னிந்தியப் பத்திரிகைகளில் போதியவளவு பிரசாரம் அடைந்ததா? இந்துக்களுடைய ஆதரவினாலும் அவர்களுடைய பண உதவியாலும் பிழைத்துவரும் ஹிந்துப் பத்திரிகைகள் இந்த கும்பாபிஷேக விருத்தாந்தங்களை மஹாஜனங்கள் அறியுமாறு விஸ்தாரமாக ஒவ்வொரு விஷயங்களையும் ஏன் பிரசுரிக்கலாகாது? கிறிஸ்தவர்கள் சர்ச் தொழுகை ஸமாசாரங்களையும், மகம்மதியர்களின் மத மஹிமைகளையும், ஆலயப்ரவேசம், கர்ப்பாசம் போன்ற அதர்மங்களையும் ஸாங்கோபாங்கமாக பத்திபத்தியாக பிரசுரிக்குமிவை லக்ஷக்கணக்கான ஜனங்களின் மனதை ஆகர்ஷித்துவரும் இத்தகைய விஷயங்களை அலக்ஷ்யம் செய்வது ஸ்வஜனத்ரோஹமல்லவா? இவைகளுக்கு ஸ்வாபிமானம் உண்டாவது எக்காலமோ?

The V. D. S. Sanskrit College, Kallidaikkurichi.

விளம்பரம்.

இந்த காலேஜானது, மதருஸ் யூனிவர்ஸிடியால், வியாகரண, மீமாம்ஸா சிரோமணி பாடங்கள் கற்பிக்க அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. வியாகரண சிரோமணியில் சேர்ந்து வாசிக்க விரும்பும் மாணவர்களுக்கு போஜனம், இடவஸதி முதலியன இனாமாக அளிக்கப்படும். கோடை ரஜாவிலிருந்து 1937 ஜூன் 10௳ காலேஜ் திறக்கிறபடியால், மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 5—6—37-க்குள் இதனடியிற்கண்ட விலாஸத்துக்கு அனுப்பவேண்டும்.

எம். ராமலிங்க அண்ணாவி.
Correspondent.
கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா

ஆசார்ய வழிபாடும் ஸ்வதர்மமும்.

தமிழ்நாடு வைதிக தர்மஸங்கம் உபகாரியதரிசி, கும்பகோணம். ரிடையர்டு இஞ்சினீர் எஸ். சுவாமிநாதசாஸ்திரிகள் எழுதுகிறார்:—

கும்பகோணத்தில் சென்ற 23—4—37ல் மகாவீரஜயந்தி ஒரு ஹிந்துசபையால் கொண்டாடப்பட்டதென்று என்னுடைய நண்பர் ஒருவர் தெரிவித்தார். மகாவீரர் என்பவர் ஜையினமதப்ரவர்த்தகர். அம்மதப்படி தெய்வம் ஒன்றுகிடையாது. வேண்டியதுமில்லை. ஆனால் முன்னிருந்த மகாபுருஷர்கள் பெயரை நினைத்துக்கொண்டு அவர்களின் குணநிசயங்களை இடைவிடாது அநுஸந்திப்பதே தற்கால ஆத்மாக்கள் மோக்ஷமடைவதற்கு முக்கிய சாதனம். ஹிந்து மதப்படிக்கோ தெய்வம் ஒன்று எப்போதும் இருக்கிறது. அத்தெய்வத்தின் அருளினாலும் அவ்விறைவனை வழிபடுவதினாலும் ஜீவகோடிகள் துன்பஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு மோக்ஷம் என்கிற பரமாநந்த தசையை அடைவார்கள். இப்படி நம்முடைய மதக்கொள்கைகளுக்கும் ஸம்பிரதாயத்திற்கும் முரண்பட்ட இதர நாஸ்திக மதாசார்யாளைக் கொண்டாடுவது ஹிந்துக்களுக்கு யாதொரு ப்ரயோஜனமும் அளிக்காது. வீண் காலக்கழிப்பே அது. நிற்க நம் மிலனைவர்கள் நம் மதாசார்யாள் தினங்களை ஏன் கொண்டாடக்கூடாது. ஸ்ரீசங்கர ஜயந்தி, ஸ்ரீராமநுஜ ஜயந்தி, ஸ்ரீமாத்வஜயந்தி, நாஸிம்மஜயந்தி, ஸ்ரீராமநவமி, ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி முதலிய பலபெரியோர்கள் தினங்கள் நமக்கு கொண்டாடவிருக்க அவைகளில் சிறிது அளவும் ஊக்கம், உத்ஸாகம், ச்ரத்தை அபிமானம் இவையொன்றும் இல்லாமல் போய் பிறமதக் கொள்கைகளைப் போற்றுவது இக்கால நவீன படிப்பின் பலனாகிய விபரீதங்களில் ஒன்று. இனிமேலாவது நம் ஹிந்துமதஸ்தர்களை நான் வேண்டுக்கொள்கிறேன். ஹிந்துமதப்பற்றை விடாமல் நம் ஆசார்யாள் ஜயந்திகளை நாம் கொண்டாடுவோம். அடுத்த வாரம் 14—5—37-ல் ஸ்ரீ சங்கர ஜயந்தி தினம் அன்றைக்கு நம் நகரத்தோர் எல்லோரும் ஆசார்யாள் சரித்திரத்தையும் அத்புத கைங்கர்யங்களையும் பக்தி ச்ரத்தையுடன் செவிகொடுத்து கேட்டு நம்முன்னோர் சென்றவழியில் நாமும் நடப்போமாக.

"We think our fathers fools, so wise we grow
No doubt our wiser sons will think us so"

ஓர் நன்கொடை.

ஸ்ரீரங்கத்திலிருக்கும் பிரபல தனவந்தரும் ஆஸ்திகசிரோமணியுமான தேசபூஷண ஸ்ரீமான் R K. பிரஸன்ன வெங்கடேச்வாரவ் அவர்களிடமிருந்து நமது பத்திரிகைக்கு ரூ. 25. நன்கொடை கிடைத்ததைப் பற்றி நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்கிலாந்தில் காளைமாடு பலி.

பலவிடங்களில் கண்டனம்.

ஜார்ஜ் மன்னரின் பட்டாபிஷேகச் சடங்கைமுன்னிட்டு இங்கிலாந்தில் எருதுகளை பலி கொடுக்கும் வழக்கத்தை உடனே நிறுத்திவிட வேண்டுமென்றும், அது ஹிந்துக்களுக்கு மிகுந்த அதிருப்தியை கொடுக்கிறதென்றும் பஞ்சாப் ஸநாதன தர்ம ஸபை பிரதம மந்திரிக்கு தந்திகொடுத்திருக்கிறது. சென்னை ஜீவரக்ஷா பிரசார சபையிலும் இதுமாதிரி ஒரு தீர்மானம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஷு சித்திரை-மீ 24உ

திருவாங்கூரின் சூழ்ச்சிகள்.

கூடல் மாணிக்கம் கோவில் விஷயமாகக் கொச்சிக்கும் திருவாங்கூருக்கும் நடந்துவரும் தகாறைப்பற்றிச் சென்றவாரம் நாம் எழுதியபிறகு இன்னும் சில விசேஷங்கள் நடந்திருக்கின்றன. கொச்சி ராஜ்யத்தின் கக்ஷியைத்தாங்கி அநேக பிரமுகர்கள் பத்திரிகைகளில் எழுதிவருவதுடன் பலவிடங்களிலுமுள்ள தார்மிகர்களும், தார்மிக ஸங்கங்களும் கொச்சியின் செய்கையை ஆதரித்துத் தீர்மானம் செய்தும் வருகின்றனர். கொச்சி திவானாகிய ஸர். ஷண்முகம் செட்டியை காந்திஜீபோன்றவர்கள் தூண்டிவிட்டபோதிலும் அவர் கொச்சி மஹாராஜாவின் உத்திரவுக்கு மாறாகப் போகமுடியாதெனச் சொல்லிவிட்டார். தாம், மஹாராஜாவுக்கு லௌகிக காரியங்களில்மட்டும் ஆலோசனைகூற அதிகாரமுண்டேயல்லது, அவருடைய மதஸம்பிரதாயாதி விஷயங்களில் புகத் தமக்கு அதிகாரமில்லையென்றும், கொச்சி மஹாராஜா உள்ளும் புறமும் ஒத்த உண்மையான தீவ்ர ஸநாதநியென்றும், அவரை ஒருவரும் மாற்ற முடியாதென்றும் ஸர். ஷண்முகம் சொல்லிவிட்டார். ஆகையால் திருவாங்கூரைத் தூண்டிவிட்ட சீர்திருத்தவாதிகள், சீர்திருத்தக்காரராகிய திவானைக்கொண்டு காரியசித்தி பெறலாமென்று நினைத்தது கனவாகிவிட்டது. ரெஸிடெண்டும் இதில் உறுதிகாட்டுவதால் அவர்மூலம் முயற்சி செய்வதும் பயன்படாமற் போய்விட்டது.

ஆயினும், கூடல் மாணிக்கம் கோவிலின் வைதிக விசாரணை கர்த்தாவாகிய கைமால் என்பவர் கொச்சி உத்திரவுக்கு விபரீதமாக அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார். திருவாங்கூர் கோவில்பூஜகர்கள் கூடல்மாணிக்கத்தில் பூஜைசெய்தால் தோஷம் ஒன்றும் ஏற்படாதென்றும் ஆதலால் பிராயச்சித்தம் வேண்டியதில்லையென்றும் அவர் சொல்லுகிறார். இருந்தாலும், கூடல் மாணிக்கம் கோவில் விஷயமான அதிகாரம் யாருக்கு உண்டென்பதை இந்தியா கவர்ன்மெண்டார் பரிசீலனைசெய்து வருவதால், அதன் முடிவு வெளியாகும்வரையில் எல்லோரும் கொச்சி உத்திரவுக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டுமென்றும் ஸ்ரீமான் கைமால் சொல்லியிருக்கிறார் கொச்சி மஹாராஜா தமது ஸம்ஸ்தானத்திலுள்ள வித்வான்களையும் பெரியோர்களையும் கலந்துயோஜித்தபிறகே கூடல் மாணிக்கம் கோவிலுக்கு ஸம்ப்ரோக்ஷணை செய்யும்படி உத்திரவிட்டிருக்கிறார். அப்படியிருக்க, இந்தக் கைமால் 'பிராயச்சித்தமே வேண்டியதில்லையென்று விபரீதமாகக் கூறுவதற்குக் காரணமென்ன? சாஸ்த்ரத்தையும் ஆசாரங்களையும் அழிக்க முற்பட்டவர்களின் சூழ்ச்சிகளில் இந்தக் கைமாலும் சிக்கிக்கொண்டதே காரணமாயிருக்கவேண்டும். திருவாங்கூரைப்போல் கொச்சியிலும் ஆலயப்பிரவேச அநீதியை ஸ்தாபித்து, அதன்மூலம் திருவாங்கூர் செய்கைக்குப் பக்கபலம்தேடிக்கொள்ளப் பெரும் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இவைகளில் பெரும்பாகம் திருவாங்கூரிலிருந்தே கிளம்பியவை யென்று கூறத்தடையில்லை. கொச்சியிலுள்ள சிலரைத் தூண்டிவிட்டு மஹாராஜாவை நிர்ப்பந்திக்க முயற்சி நடக்கிறது. கொச்சி பிரஜைகளுக்கும், கொச்சி ராஜாவுக்கும் அபிப்பிராய பேதத்தை உண்டுபண்ணிவிட்டு, அதன்மூலம் அத்தேச நிர்வாஹத்தில் குழப்பமுண்டுபண்ணச் சதிநடப்பதாகச் சிலர் பத்திரிகைகளில் வெளியிட்டுவருகிறார்கள். பிரஜைகளெல்லோரும் ஆலயப்பிரவேசச் சீர்திருத்தத்தை விரும்புவது போலவும், மஹாராஜா மாத்திரம் அதை எதிர்ப்பதுபோலவும், காட்டுவதற்காகப் பெரியமாயை செய்யப்படுகிறது.

மேலும் திருவாங்கூரில் ஏற்பட்டுள்ள புது அநாசாரத்தால் அசுத்தியடையாத நெடும்பள்ளி இல்லத்தைச்சேர்ந்த பூஜகர்கள் இருக்கிறார்கள். கொச்சி ராஜாவின் அபிப்பிராயத்தை அநுஸரித்து அவர்களைக்கொண்டு கூடல் மாணிக்கம் ஆலய பூஜையை நடத்தக்கூடியதாயிருந்தபோதிலும், திருவாங்கூர் அப்படிச்செய்யாமல் தீண்டாதார் புகும் கோவில் பூஜகர்களைக்கொண்டே கூடல் மாணிக்கத்திலும் பூஜைசெய்யவேண்டுமென்று பிடிவாதம் செய்வதன் காரணமென்ன? எப்படியாவது திருவாங்கூரில் ஆரம்பமாயிருக்கும் அஸன்மார்க்கத்தைக் கொச்சியிலும் பாவச்செய்து இரண்டையும் ஸமமாக்கிவிடுவதே திருவாங்கூர் நோக்கமென்பது தெளிவாகவில்லையா? தவிர இதில் இன்னொரு பெரிய அக்கிரமத்தையும் கவனிக்கவேண்டும். அதாவது, திருவாங்கூர் ராஜ்யமானது பண பலத்தைக்கொண்டு தர்மத்தை அடக்கி அதர்மத்தை நிலைநாட்ட முயற்சிப்பதாகும்.

பிராயச்சித்தத்திற்கு உள்ளாகிவிட்ட பூஜகர்கள் கொச்சி உத்திரவுப்படி பிராயச்சித்தம் செய்துகொள்ளுவார்களானால் அவர்களுக்குத் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில் ஏற்பட்டுள்ள தானம், மான்யம் முதலிய ஸகல வருமானங்களையும் நிறுத்திவிடுவதாகத் திருவாங்கூர் உத்திரவு செய்திருக்கிறது. இந்த உத்திரவுமூலம் பூஜகர்கள் பலர் பெரிய வருமானத்தை இழக்கநேரிடும். ஆதலால் இதற்குப்பயந்து அவர்கள் பிராயச்சித்தம் செய்துகொள்ள மறுக்கவும், அதன் மூலம் திருவாங்கூர் அக்கிரம உத்திரவைத் தாங்கி நிற்கும்படி செய்யவும் சூழ்ச்சி நடத்துவதாகவே தெரிகிறது. முன்னோர்களான அரசர்கள், தர்மமார்க்கத்தை அவலம்பித்து பூஜகப் பிராம்மணர்களுக்கு ஏற்படுத்தியுள்ள தானங்களை நிறுத்தவும், இந்த பயமுறுத்தலைக்கொண்டு பூஜகர்களை ஆலயப்பிரவேச அநீதிக்கு இணங்கும்படி கட்டுப்படுத்தி நிர்ப்பந்திக்கவும் திருவாங்கூர் முயற்சிப்பது வெளியாகவில்லையா? இப்படி பஹிரங்கமாகப் பணத்தால் தர்மத்தை அழிக்க அது முற்பட்டிருப்பதிலிருந்து தம் ராஜ்யத்திற்குள்ளேயே ஆலயப்பிரவேச விளம்பரத்தால் அமைதிக்குறைவு ஏற்படாமல் தடுக்கு ஸரிப்படுத்திக்கொள்ள எவ்வளவு பணம் செலவு செய்ததோவென்று ஸந்தேஹிக்க இடமுண்டாகிறது.

ஆதலால் திருவாங்கூர் படித்தன நிறுத்த உத்திரவுக்குப் பயந்தும், அவ்வுத்தரவு மூலம் பூஜகர்களுக்கு ஏராளமான கஷ்டமுண்டாவதைத் தடுக்கவுமே கைமால் என்பவர் கூடல் மாணிக்கத்திற்குத் தீட்டு ஏற்படவில்லையென்றுதீர்ப்புக்கூறினாரோபோலும்? ஒருசட்டிக் கூழுக்காக ஆசைப்பட்டு சாச்வதமான பரலோக சிரேயஸ்ஸை இழந்து தர்ம த்ரோஹமும் செய்ய முற்பட்டமையால் அந்த தெய்வங்களின் முன்பாகத் தன்னைத் தூண்டியவர்களுடன் தனது பெரும் குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டிவருவது நிச்சயமே. இனி இவ்விரு ஸம்ஸ்தானங்களின் தகாறு இந்தியா கவர்ன்மெண்டின் தீர்ப்புக்குப் போயிருக்கிறது. அங்கிருந்து ஸத்யத்தையும், தர்மத்தையும் உறுதிசெய்யும் முடிவு வெளியாகுமென்று நம்புகிறோம்.

குறிப்புகள்.

மாருதிகோவிலில் மணியடிக்கத் தடை?

புனாவிலுள்ள ஸ்ரீமாருதிகோவிலில், பூஜா காலத்தில் வாத்யம் வாசிக்கவோ மணியடிக்கவோ கூடாதென்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட் உத்திரவு செய்திருக்கிறார். இந்தக்கோவிலுக்கு ஸமீபத்திலுள்ள தம்போலி மசூதியில் தொழுகைக்கு இடைஞ்சலுண்டாகுமென்ற காரணத்தாலேயே இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சென்ற வருஷம் இந்தக்கோவிலில் உத்ஸவத்தின்போது ஹிந்து முஸ்லீம் கலவரம் சிறிது அங்கு ஏற்பட்டது உண்மையே. ஆயினும் அந்தமாதிரிக்கலகம் மீண்டும் ஏற்படாமல் தடுக்கவே மாஜிஸ்ட்ரேட் இந்தத்தடை உத்திரவு போட்டது நியாயமாயில்லை. இந்த அநீதியான உத்திரவு ஹிந்துமதத்தின் உரிமையைப்பறிப்பதாயிருப்பதால் பூனாவாஸிகளான ஆஸ்திகர்கள் இதை எதிர்த்து ஸத்யாக்ரஹம் நடத்திவருகிறார்கள். இதுவரையில் 500பேருக்குமேல் கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயக ஸ்வராஜ்யக் கக்ஷியும், ஹிந்து மஹாஸபையும் வர்ணாச்ரம ஸபையும் இந்த ஸத்யாக்ரஹத்திற்குப் பூர்ண ஆதரவு அளித்துவருகின்றன. தேசத்திலுள்ள அநேக ஆஸ்திக ஸபைகளும் இந்த இயக்கத்தில் தங்களுடைய அபிமானத்தைக்காட்டித் தீர்மானம் செய்து வருகின்றன. பம்பாய் மந்திரியான கனம். பமுனுதாஸ் மேட்டா அந்த ஸ்தலத்திற்கு நேரில் போய் இதைப்பற்றி விசாரணை நடத்திவருகிறார். இதன் பலனாக என்ன பலன் ஏற்படுமென்பது இனித்தெரியவேண்டும்.

ஸர்க்கார் பிறப்பித்துள்ள தடை உத்திரவானது மிகுந்த ஆக்ஷேபத்திற்கு இடமாயுள்ளதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஹிந்துக்கள், முஸ்லீம்கள் இருவரும் ராஜசக்ரவர்த்தியின் பிரஜைகளே. இருவருடைய மத உரிமையும் காப்பாற்றப்படவேண்டியதே நியாயமாகும். இப்படியிருக்க ஒருவகுப்பாருக்குச்சலுகைகாட்டி மற்றொருவகுப்பாரின் மதஉரிமையைப் பாதிக்கக்கூடிய காரியம் நியாயமானதா? மசூதிகளில் தொழுகை எவ்வளவு முக்யமோ, அதுபோல் கோவில்களில் மணியடிப்பதும் வாத்யம் வாசிப்பதும் முக்யமானதே. ஹிந்துக்களின் சாஸ்திரங்களிலும் ஆசாரங்களிலும் பூஜாகாலத்தில் மணியடிப்பது ஓர் முக்ய மதகார்யமாக இருக்கிறது. ஆகம சாஸ்திரங்கள் ஆலயங்களில் மணியடிக்கவேண்டிய முறையைப்பற்றி விதிகள்செய்திருக்கின்றன. மணியடிக்காவிட்டால் பூஜையில் சாஸ்திரீயமான குறைவு ஏற்பட்டுவிட்டதாகவே ஹிந்துக்கள் நம்புகிறார்கள். இவ்வளவு முக்யமான மதவிஷயத்தை ஸர்க்கார் தடுப்பது, நிச்சயமாக நமது மதத்தில் பிரவேசிப்பதாகும். மதத்தின் உள் காரியங்களில் புகுந்து ஒன்றை இப்படிச்செய், இப்படிச்செய்யாதே என்று உத்திரவிட எவருக்கும் அதிகாரம் கிடையாது. மஹம்மதியர் தொழுகை காலத்தில் மண்டி போட்டுக்கொள்ளுவதும், ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கித் தொழுவதும், வேறுபல வழக்கமும் இருக்கின்றன. கிறிஸ்தவர்களில் பல வழக்கமிருக்கின்றன. அந்த மத அனுஷ்டான விஷயங்களில் புகுந்து இன்ன மாதிரியில்தான் தொழவேமென்று விதிக்க ஸர்க்காருக்குஅதிகாரமுண்டா? அம்மாதிரி செய்வது மதநடுநிலை உறுதிமொழிக்கு முரண்பட்டதல்லவா! அதுபோல் ஹிந்துக்கள் பூஜைகாலத்தில் மணியடிப்பதும் மத அநுஷ்டானத்தில் ஓர் அவாந்தர விஷயம். எந்தெந்த சமயங்களில் மணியடிக்கலாம் அல்லது கூடாதென்பது ஹிந்து சாஸ்திரங்களாலேயே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது அந்த ஆசாரத்தை ஹிந்துக்களின் விருப்பப்படி காப்பாற்றவேண்டியதே கவர்ன்மெண்டின் கடமையென்பது தெளிவு.

காங்கிரஸ்காரரின் விபரீத மனப்பான்மை.

புனா மாருதிகோவில் விஷயமாக ஸர்க்காரின் போக்கு ஒருவிதமாயிருக்க, ஹிந்துக்களிலேயே காங்கிரஸ் வாதிகளுடையவும், தீண்டாதாருடையவும் மனப்போக்கு வெகு விசித்ரமாயிருப்பதை யாவரும் கவனிக்கவேண்டும். தங்களுக்கு கோவில் பிரவேச உரிமை கொடுத்தால் தாங்களும் இந்த ஸத்யாக்ரஹத்தில் சேருவதாகத் தீண்டாதார் சொல்லுகிறார்களாம். அவர்களின் தலைவரான ஸ்ரீமான் ராஜபோஜ் என்பவர் இம்மாதிரி ஒரு அறிக்கையை வெளியிட்டிருப்பது விநோதமாயிருக்கிறது, ஹிந்து மதத்தின் உரிமைக்கே பங்கம் நேரிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இம்மாதிரி பேரம் பேசுவது எவ்வளவு அல்பத்தனமாயிருக்கிறதென்பதை நாம் விவரிக்கவேண்டியதில்லை. தீண்டாதாரின் உதவின்றியே இதை ஸமாளிக்கக்கூடிய மனிதபலம் ஜாதி ஹிந்துக்களுக்கு அங்கு பூர்ணமாக இருக்கிறது. ஆதலால் தீண்டாதாரை ஸஹாயத்திற்கு அழைக்கவேண்டிய அவச்யமில்லாதிருந்தும் அவர்கள் இந்த நெருக்கடி ஸமயத்தில் இத்தகைய விகாரமான் பேரம்பேச முன்வந்தது வெட்ககமான காரியமே என்பதில் தடையில்லை. தீண்டாதாருக்கு இத்தகைய குறுகிய புத்தியை உண்டுபண்ணியது சுயநலவாதிகளான ராஜீயவாதிகளே என்பதில் ஸந்தேஹமில்லை.

அங்குள்ள காங்கிரஸ் வாதிகளின் மனப்போக்கும் இந்தவழியிலேயே இருப்பது ஆச்சயமானது, ஹிந்துக்கள் மணியடிக்கும் உரிமைக்காகப் போராடுகின்றார்களாம். தீண்டாதாரோ கோவில் பிரவேச உரிமைக்காக ஹிந்துக்களிடம் போராடுகிறார்களாம். ஆகையால் கோவில் பிரவேச உரிமையைக் கொடுக்காதவர்கள், மணியடிக்கும் உரிமைக்காக க்கிளர்ச்சி செய்ய நியாயமில்லையென்றும், ஆதலால் காங்கிரஸ்வாதிகள் இந்தக்கிளர்ச்சியில் அநுதாபம் காட்ட முடியவில்லையென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். காங்கிரஸ் வாதிகள் ஹிந்துமத விஷயமாகக் காட்டிவரும் மனோபாவம் வெகுநாளாகத் தெரிந்ததே. ஹிந்துமத உரிமைகளை பங்கப்படுத்தவும், மஹம்மதிய மத உரிமைகளை வலுப்படுத்தவுமே காங்கிரஸ் எப்போதும் கட்டுப்பாடாக நிற்கிறது. ராஜீய கன்மையையுத்தேசித்து ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை அவர்களுக்கு வேண்டியிருக்கிறது. அதற்காக ஹிந்துமத உரிமைகளைக் காட்டிக்கொடுத்தாவது அந்த ஒற்றுமையை அடைய முயற்சிப்பது தற்கால காங்கிரஸ் சரித்திரத்தில் ஸாதாரணமாயுள்ள விஷயம். புனா மாருதி கோவில் விஷயத்திலும் இந்த நோக்கத்துடனேயே காங்கிரஸ்வாதிகள் பேசுகிறார்களேயல்லாது உண்மையில் தீண்டாதாருக்குப் பரிந்து பேசவில்லை ஹிந்துக்களிடம் அநுதாபம் காட்டினால் மஹம்மதியர்கள் காங்கிரஸிடம் கோபித்துக்கொண்டுவிடுவார்களல்லவா? காங்கிரஸில் முஸ்லீம்களைச் சேர்க்கப் பிரார்த்தனை நடக்குமித்தருணத்தில் மஹம்மதியருக்கு விரோதமான காரியத்தைச் செய்வது அபாயமல்லவா? இதற்காகத்தான் காங்கிரஸ்வாதிகள் வேஷம் போடுகிறார்கள். தீண்டாதாருக்குக் கோவிலில் பிரவேசிக்கும் பாத்யம் ஒன்றுமட்டில் இல்லையேயல்லது, மற்றபடி ஸ்வாமி தர்சனம் செய்வது, தேர் இழுப்பதுபோன்ற ஸகல விஷயங்களிலும் ஜாதி ஹிந்துக்களுடன் ஸமமான பாத்யமிருக்கிறது. தேர் இழுக்கும் பாத்யம் தங்களுடையதென்றே அவர்கள் நினைக்கிறார்கள். ஒரு மசூதி முன்பாகத் தேர் இழுப்பதை முஸ்லீம்கள் தடுப்பார்களாயின் அப்போது காங்கிரஸ்காரர் என்ன செய்வார்? தீண்டாதார் பாத்யத்திற்காகப் பரிந்து பேசி மஹம்மதியர்களுடன்வாதாடுவார்களா? ஒருநாளுமில்லை. தீண்டாதாரும் இதை கவனிக்கவேண்டும். தெருவில் தேர் இழுக்கும் உரிமைக்கு மஹம்மதியர்களால் பங்கம் ஏற்பட்டால் ஜாதி ஹிந்துக்களின் உதவியை அவர்கள் கோரமாட்டார்களா? ஜாதி ஹிந்துக்களும் தங்களுடைய கடமையை உணர்ந்து தீண்டாதாருடன்சேர்ந்தே அந்த உரிமையை ஸ்தாபிக்கப் பாடுபடுவார்களேயல்லது. இப்போது தீண்டாதார் பேசுவதுபோல் பேரம் பேசமாட்டார்கள். எப்படியும், தீண்டாதாரும் காங்கிரஸ் வாதிகளும் இச்சமயத்தில் இம்மாதிரி மனப்பான்மை காட்டுவது வெறுக்கத்தக்கதே. இது ஜாதி ஹிந்துக்களுக்கும் தீண்டாதாருக்கும் ஒற்றுமை ஏற்படாமல் விரோத உணர்ச்சி வலுக்கவே காரணமாகும்.

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.)

இதை தான் செய்யலாமா ?:— திருவாங்கூர் பேசாமலிருக்குமா? ரஹஸ்யமாயிருந்த உத்திரவை பஹிரங்கப்படுத்தித் தன்து நண்யத்தை இழந்தது. ஏழைகள், தார்மிகர், அரசன் அநீதியைப் பகிரங்கமாக ஆதரிச்காவிடில் சம்பளம், யாசகம், பூஜை, தானம், முதலியவைகளைக் கொடுக்காதாம்! ஏழைகளிடம் போர் தொடுக்கும் இச்செயல் குழந்தைகள் சண்டைபோலிருக்கிறது. இதற்கு யார் அஞ்சுவர்! பரமன் படியளப்பான்

அஞ்சேல் கார்கிறோம்:— என்று கூறி அத்தகைய தீர தார்மிகர்களைக்கார்க்க நமக்கு ஓர் ஸங்கமும் பலமுமில்லையே என்று வருந்துகிறோம். கொடுங்கோல் நாட்டைவிட கடும்புலி வசிக்கும் காடுமேல் என்று பெரியார் சொல்லை நம்பி தார்மிகர் வெளியேறுக.

முதற்காரியம் கடனு?:— சென்னை மந்திரிசபை நிலவரியைக்குறைப்பதாகவும் உடனே அதற்கென கோடிகோடியாக கடன் வாங்குவதாகவும் தீர்மானித்தது. நல்ல பிள்ளை என பெயர் பெறவும் பதவி நிலைக்கவும் இது அவசியமே. கடனை அப்புறம் பேசலாகாதா?

விருந்துண்ட செட்டியார்:— பன்னர்குடி முன்சீப் வெளியூருக்கு மாற்றப்பட்டதால் ஓர் விருந்து நடந்தது. ஆஸ்பத்திரி வையுங்கள், அறியாமையை அகற்றுங்கள், பாதிரியைப் பின் பற்றுங்கள், என்று அவர் உபதேசித்தார். இத்துடன் நின்றால் நன்று. ஆலயங்களை புதுப்பிக்க அநியாயமாக தந்தை செலவு செய்யாதீரென்கிறார். அந்தோ!

தூங்க வேண்டும்! மேளம் கூடாது:— என்று ஓர் புண்யவான் மைலாப்பூர் கபாலியின் வாத்யத்தை நிறுத்தி வாத்யமில்லாமல் ஸ்வாமி ஊர்வலம் செல்லும்படி தர்மம் செய்தார். ஆலயங்களில் அகாலத்தில் உத்ஸவம் நடவாமல் தர்மகர்த்தாக்களுடன் கலந்து நல்ல ஏற்பாடு செய்யக்கூடாதா? சட்டம் பேசி போலீஸை சரணமடைந்தது அழகா? எல்லோருக்குமேல் இறைவனல்லவா?

பூர்ண ஆதரவளிப்போம்! சென்னை முத்யால் பேட்டை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் பூனா ஆஞ்சநேயர் கோவிலில் நடக்கும் தர்ம ஸத்யாக்ரஹத்திற்கு எல்லாவகையான பூர்ண ஆதரவளிப்பதாகவும் விடாமல் ஸத்யாக்ரஹம் நடத்தும்படியும் கோரி ஓர் தீர்மானம் செய்தனுப்பியது. இந்த வகையிலும் ஆஸ்திகர் ஒன்றுசேர்ந்து ஓர் வ்யவஸ்தை ஏற்படுத்த வேண்டும். தென்னாடுறங்கலாகாது. அவர்களுக்கு உத்ஸாகமளிக்கவேண்டும்.

சென்னை அமளி!! ஓர் மகம்மதியர் பொம்மை குதிரை ஆடிய பெண்ணினிடம் அசட்டுத்தனமாக நடந்ததைக்கொண்டு சில துஷ்டர்கள் அட்டஹாசம் செய்ய அது இந்துமுஸ்லீம் சண்டையாகக் கருதப்படுகிறது! பல காயமும் அடியும் நோ பீதியாலும் நாடோடிகளது அப்ரமாண சொற்களாலும் சென்னை நகரமே நிலைகுலைந்ததெனலாம். இந்த ஸமயத்தை உபயோகித்துக்கொள்ளும் துஷ்டர்களிடம் ஸி. ஐ. டி. கவனம் செலுத்தல் வேண்டும்.

வானமாமலை வாழி!! மகுடாபிஷேக காலத்தில் மன்னர்கள் அரசாங்கம் மதத்தில் தலையிடுவதில்லையென உறுதிமொழி அளிக்கும்படி ஷை மடம் தெரிவித்திருக்கிறது. இங்ஙனம் எல்லாமடங்களும் சேர்ந்து தர்மரக்ஷணார்த்தம் தீக்ஷைசெய்துகொண்டு தார்மிகரை உத்ஸாகப்படுத்தினால் தர்மம் தழைத்தோங்காதோ?

மார்க்கதர்சி!! மஹர்ஷி எனத்தகும் ஓர் அக்னிஹோத்ரி, பாலக்காடு நூரணி அக்ரஹாரத்தில் தருணக்னிஹோத்ரம் செய்து க்ரம ஸன்யாஸம்பெற்று சென்ற வாரம் ஸித்தி அடைந்தார். வேதசாஸ்த்ராப்யாஸத்துடன் நல்ல ஆசாராநுஷ்டானமும் அடக்கமுமுள்ள இப்பெரியார்; ஓர் பிராமணன் எப்படியிருக்க வேண்டுமென்று ஸ்வாநுஷ்டான மூலமாகவுமுபதேசித்தார்.

ஆத்தன்குடியிலுமா? ஷையூர் ஸபை செய்துவரும் தர்மபிரசாரத்தால் தற்கால நாகரிகப்பேய் பறந்தோடியிருக்குமென கருதினோம்! சென்ற ஆண்டுவிழாவில் "நான் போகவில்லை" என்று தலைநீட்டி இன்னும் சிறக்க பிரசாரம் செய்யும்படி உபதேசக்கின்றது போலும்!

சந்தாதாருக்கு அறிவிப்பு

ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேகத்தை முன்னிட்டு நமது அச்சாபீஸிற்கு விடுமுறையானபடியால் 13—5—37உ 'ஆர்யதர்மம்' வெளிவராது. அடுத்தசஞ்சிகை 20-5-37ல் வெளிவரும். ப—ர்.

சென்னை மஹாஜன சபையின் வருஷாந்தர மீட்டிங் 29-4-37 மாலை நடந்தது. 1936-37 ஷுத்திய ரிபோர்ட் வாசிக்கப்பட்டது. வருஷாரம்பத்தில் 227 மெம்பர்கள் இருந்தார்கள் கடைசியாய் 132 மெம்பர்கள் இருந்தார்கள் இது சென்னை நகரில் அரசியல் விஷயங்களில் பெருத்த செல்வாக்குள்ளதாகக் கருதப்படும் சபைகளில் முக்கியமானது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Amalapuram, East Godavary.

கொச்சி மஹாராஜாவிற்கு விசேஷப் பாராட்டுக்கூட்டம்.

விவரமான செய்தி.

அகில இந்திய பிராஹ்மண மஹாஸபை, சென்னை வர்ணாஸ்ரம சுயராஜ்யசங்கம், திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம் என்ற மூன்று சபைகளின் ஆதரவில் 2—5—37உ ஞாயிற்றுக்கிழமை நான்குமணிக்கு திருவல்லிக்கேணி கைரவிணியின் கீழ்க்கரையிலுள்ள ஸ்ரீ வானமாமலை மடத்தில்கொச்சி மஹாராஜாவின் சநாதனதர்ம நெறி நிற்கைக்கு விசேஷப் பாராட்டுக்கொண்டாட்டவிழா ஆரம்பமாகியது. அட்வகேட் ஸ்ரீமான் வி. நரஸிம்ஹாசாரியர் தலைமைவகித்தார். பட்டணத்தின் பல இடங்களிலிருந்தும் சநாதனிகள் வந்திருந்தனர்.

மேற்படி மூன்று சபைகளின் காரியதரிசி ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள் பிரதமத்தில் பேசினர்.

கடவுள் வாழ்த்துக்குப்பின்னர் தலைவர் முன்னுரை கூறியதும்

சென்னை வர்ணாஸ்ரம ஸ்வாராஜ்ய சங்கத் தலைவர் ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாச்சாரியாரவர்கள் முதன் முதலாகப்பேசியது பின் வருமாறு:—

முன்னரே இதுவிஷயமாய்ப் பத்திரிகைகட்கு எழுதியுள்ளேன். விவரங்களைமட்டும் விளக்குகிறேன். கொச்சி ராஜ்யத்தில் கூடல் மாணிக்கம் என்ற ஸ்தலம் உள்ளது. இது கொச்சிராஜ்யாதிகாரத்துக்கு உட்பட்டது. இது பிராசீனமான ஸ்தலம். மஹாஜனங்கள் மேற்பார்வையில் நடக்கிறது. யோகக்காரர்கள் நடத்துகிறார்கள். ஆகம சாஸ்திரப்படி பிரதிஷ்டை இருநூறு வருடங்களுக்கு முன்னிருக்கலாம். திருவிதாங்கூர் அற்ப ராஜ்யமாக இருந்தது. தளவாய் ராமையன் காலத்தில்தான் அது நன்கு விளங்கியது. திருவிதாங்கூர் ஜமீந்தார் பட்டத்துடனிருந்து பின்னரே ராஜாபட்டம் வந்தது. கொச்சி ராஜா என்று ஆரம்பத்திலிருந்தே பட்டம் உண்டு. தளவாய் ராமையன் மார்த்தாண்டவர்மாவின் மந்திரி. மஹாராஜாவை பத்மநாப தாஸராகச் செய்தவர் இவரே. கூடல் மாணிக்க தர்மகர்த்ருத்வம் திருவிதாங்கூர் ராஜாவுடையது. இவரால் நியமிக்கப்பட்டவர் தச்சுடைக் கைமால். இவர் நாயர். பண்டாரஸந்நிதிபோன்றவர். அவர் தர்மகர்த்தா. யோகக்காரருக்கு வருஷாவருஷம் கணக்கு ஒப்பிவிக்கவேணும். கூடல் மாணிக்கத்தில் ஆராத்யதெய்வம் பரதன். சென்ற நவம்பரில் திருவிதாங்கூர் ஆலயப்ரவேசவிளம்பரம், இப்பொழுது செய்துள்ள சம்பளபிடித்தவகையறு விளம்பரங்களால் நினைத்தபடி விளம்பரம் பலிக்கவில்லை என்றேற்படுகிறது. ஆறு அர்ச்சக குடும்பஸ்தர்களில் ஐந்துகுடும்பத்தினர் திருவிதாங்கூர் வேண்டாம் என்று விட்டனர். ஒன்று பகிஷ்கரிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் மூன்றுபேர்தான் அப்படி. குருஸ்வாமி, ரங்கநாயகி அம்மாள் திருவிதாங்கூர் போய்வந்த விவரத்தைக் கேட்டதிலிருந்து அங்கு ஸ்ரீமுகத்தை ஊர்ஜிதப்படுத்த நடந்துவரும் பகீரத ப்ரயத்னம் புலனாகவில்லையா? கே. ஷண்முகஞ்செட்டியினர் கோஷ்டிக்கு கொச்சி ஆலயங்களில் பிரவேசம் இல்லாதிருப்பினும் தமது கடமையைச் செய்தது போற்றத்தக்கதே. மாமூலை நிலைநிறுத்தவேண்டும். தர்மரக்ஷணமே அரசர்கடமை. கடமையைக் கடந்து விபரீத காரியம்செய்வதைக் கண்டிக்க வேண்டும். உடன்படிக்கைப்படி வைதிரயப் புகுந்து பிராசீனமுறையை ஊர்ஜிதமாக்க வேண்டும். ராஜா சநாதனிகள் கடமையையும் காக்ககடவன். திருத்தவேண்டிய விஷயம் சொல்வதில் ஏன் பின்வாங்க வேண்டும்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வித்வான் ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. ப. வே. சடகோபாச்சாரியார் ஸ்வாமி வெகு அழகாக சுருக்கமாக பிரசங்கித்தார்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தலைவர் அட்வகேட் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் பேசுகையில் ஒன்றை சிலாகித்தும் ஒன்றைக் கண்டிப்பதற்கும் காரணத்தை அறியவேண்டும் என்றும் ஒருவர் தருமத்தைக் காக்கிறார், இன்னொருவர் அதை நிராகரிக்கிறார் என்றும், யாரால் தர்மம் காக்கப்படுகிறதோ அவரே பூஜ்யர் என்றும், எவரால் தர்மம் நிராகரிக்கப்படுகிறதோ அவர் த்யாஜ்யர் என்றும், பிரகிருதிக்கும் ஆத்மாவுக்கும் உள்ள சண்டைபோன்றது இதென்றும் ஜாபாலிக்கும் பெருமாளுக்கும் நடந்த சண்டைதான் இப்பொழுதும் நடக்கிறதென்றும், வர்ணதர்ம மில்லையென்றால் வைதிகதர்மமில்லை என்றும், வர்ணசித்தியினால்தான் ஆச்ரமசித்தி என்றும், வர்ண தர்மம் சரீரத்தைப்பற்றியதுதான் என்றும், சாஸ்திர நம்பிக்கையில்லாமற்போனால் பிரயோஜனமில்லை என்றும், தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும் என்றும், வேதத்தைக்கண்டு பயப்படுபவர் சிலரும் வேதத்தைப் பயப்படுத்துகிறவர் சிலருமாக இருக்கிறார்கள் என்றும், ஆஸ்திகன், நாஸ்திகன், ஆஸ்திக நாஸ்திகன் இவர்களில் ஆஸ்திக நாஸ்திகனால் தான் அனர்த்தம் வருமென்றும், கொச்சி மகாராஜாவை நாம் பாராட்டுதல் தகும் என்றும் நன்கு விளக்கிப்பேசினர்.

ஸ்ரீமான் யஸ். லக்ஷ்மி நரசிம்மாச்சாரியர் பூனா மாருதிகோவில் இயக்க சம்பந்தமான சநாதனிகட்குஅநுதாபம் தெரிவிக்க வேண்டும் என்றும், திருப்பதி மலைமீது ரயில் போடுவதை ஆக்ஷேபிக்கவேண்டும் என்று கூற பிரம்மஸ்ரீ எழூர் நாராயணசாமி ஐயரவர்கள் அங்கு காங்கிரசுக்காரர் ஒரு மனோபாவத்துடன்சேர நினைப்பதை நாம் நன்கு ஆலோசிக்கவேண்டுமென்றும்கூற இவ்விஷயங்களை பிரத்யேகமான வேறொரு மீட்டிங்கில் முடிவு செய்வதெனத் தலைவர் தீர்மானித்தார்.

பிரம்மஸ்ரீ பி. எஸ். வைத்யநாதஐயர் (புரசைப்பாக்கம்) கூடல் மாணிக்கம் வைதிகர்களின் தருமசிந்தனையும் உறுதியும் மிகவும் கொண்டாடத் தக்கதென்று கூறினர்.

கொச்சி மஹாராஜாவின் உறுதியான சநாதனதர்ம நெறி நிற்றலை நன்கு சிலாகித்தும் அன்னார் அநேக நீடகாலத்ராய் நெடுங்காலம் தர்ம பரிபாலனம் செய்யவேண்டுமென்றும் அவரது திவான் ஸர். ஷண்முகஞ்செட்டியாரின் நடுவு நிலைமையைக் கொண்டாடியும், திருவிதாங்கூர் மஹாராஜா இன்னும் இது விஷயத்தில் சாஸ்திர சம்பந்தமான காரியத்தில் ஈடுபடுவதைக் கண்டித்தும், வைதிரயவர்கள் பிராசீன முறையை நிலைநாட்டி இதை முடிவுசெய்யவேண்டுமென்றும், கூடல் மாணிக்கம் வைதிகர்களை நன்குபாராட்டியும் தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

ஸ்ரீமான் யஸ். லக்ஷ்மி நரசிம்மாச்சாரியாரவர்கள் அளித்த வந்தனோபசாரத்துடன் சபை மாலை 6-மணிக்கு இனிது முடிவடைந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

Kudal Manikkam Temple.

Meeting at Kumbakoman.

A meeting of Sanatanist Hindus was held last evening in the premises of the local Sri Sankaracharya Mutt under the presidentship of Mr. R. Swaminatha Aiyar, retired Headmaster, Town High School, Kumbakonam.

1. This meeting places on record their deep admiration and thankfulness that the Maharaja of Cochin is acting up to the true Dharmic ideal of Kingship, by his firm stand against allowing the Koodalmanikkam Temple to be polluted, and congratulates him on the rare courage he is showing in refusing to yield to the intimidating and artificial propaganda conducted through the so-called nationalist press in support of the unsastraic Travancore Proclamation.

2. This meeting is of opinion that the Government of India Act should be so amended as to provide complete and unambiguous safe-guards for the protection of religion and culture, by prohibiting the Legislatures or the Executive from interfering in the religion or the socio-religious life of the different religious communities inhabiting our country.

3. This meeting expresses its deep sympathy with the leaders and others who are making sacrifices for upholding the religious rights of the Hindus, which have been gravely prejudiced by the authorities in Poona prohibiting the playing of music in the Sonya Maruthi Temple.

This meeting further emphasises the supreme need for the members of the Hindu community to assert themselves whenever their religious rights are attacked, and is if opinion that the Hindu community can live with strength and self-respect only if Hindus all over India stand together in solidarity and with sensitiveness for the protection of their religion.

4. This meeting deplores and condemns the reported move of the French India authorities in Pondicherry for introducing legislation similar to Sarada Act within their tertory, and is of opinion that such a move which will necessarily interfere with the religion of the Hindu community in French India, will be an act of great injustice fraught with grave consequences for the peace and happiness of the Hindu citizens of French India.

"I Alone."

The Congressman was till now able to say things with the air "I alone." The privilege appears to be fast slipping from him. Hon. Mr. Yunus, Chief Minister, Patna, is leaving for Chagra, *armed with a spade and shovel* for initiating the work of repairing the embankment of a private tank. The Chief Minister has invited Babu Rajendra Prasad to accompany him. It is magic when one man does it, and others see and admire. When many people do it, it ceases to be magic. Let Congressmen beware that their magic is becoming common. Many people are learning it, because it pays.

மதுரையில் திருக்கருகாவூர் ப்ரம்மஸ்ரீ டி. எல். ஸுப்பய்யரவர்களின் உபந்யாஸங்கள்.

மதுரை வர்ணச்ரமதர்ம ஸ்வாராஜ்ய ஸங்கம், மதுரை தர்ம சாஸ்த்ர ஸபை இவ்விருஸபைகளின் சார்பாக மதுரையில் ப்ரம்மஸ்ரீ ராவ் சாஹிப் என். நடேசய்யரவர்களின் பங்களா நந்தவனத்தில் திருக்கருகாவூர் ப்ரம்மஸ்ரீ டி. எல். ஸுப்பய்யரவர்கள் பி. ஏ., பி. எல்., நாளது ஏப்ரல் மீ 27, 28, 29உகளில் வெகு இனிமையான உபன்யாஸங்கள் செய்தார்கள் ஷை 3 தினங்களிலும் அஹோபில மடம் ஆஸ்தான வித்வான் தில்லையம்பூர் பண்டித பூஷணம் சக்ரவர்த்தி ஆசார்ய ஸ்வாமி அக்ராஸனம் வகித்தார்கள்.

27உ உபன்யாஸத்தின் விஷயம் கலியுக தர்மமும் தார்மிகர்களின் கடமையும்." உபந்யாஸகர் சொன்னதாவது :— ஜனங்களுக்கு தர்மத்தில் ஊக்கம் நாளுக்கு நாள் குறைந்துவருவதை நாம்பார்க்கிறோம். ஆனால் தார்மிகர்கள் அதனால் அதைர்யப்படுவதற்கு யாதொரு காரணமுமில்லை. ஒவ்வொருவனும் தன் புண்ய பாபங்களின் பலனைத் தானே அனுபவிக்கிறான். ஒருவன் செய்யும் புண்யத்தை, இதர்கள் பலர் செய்யும் பாபம் எவ்விதத்திலும் கெடுக்கமுடியாது "புண்யம் செய்பவன் ஒருநாளும் கெட்ட கதியை அடையமாட்டான்".

ஒரு கார்யம் தர்மமா அதர்மமா வென்பது அதை அதிகப்பேர் செய்கிறார்களா குறைந்த பேர் செய்கிறார்களா வென்பதனால் தீர்மானிக்கமுடியாது. அதைத் தீர்மானிப்பதற்கு சாஸ்த்ரமே ப்ரமாணம். கலியுகக் கடைசியில் தர்மமெல்லாம் மறைந்துவிடுமென்றும் க்ருதயுக ஆரம்பத்தில் அது மறுபடி செழிக்குமென்றும் நமது சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. விஷ்ணு புராணத்தில் கலியுகத்தின் தோஷங்களைச் சொல்லி, அதன் குணங்களையும் சொல்லியிருக்கிறது. ஸாதுக்கள் கலியுகத்தில் பிறக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஏனெனில் கலியுகத்தில் நல்ல காரியங்கள் சிறிது செய்தாலும் அவைகளின் பலன்கள் அளவிறந்தவைகளாகின்றன.

தார்மிகர்களுக்கே எப்பொழுதும் க்ஷேமம் என்பதில் ஸந்தேகமேயில்லை, ஒருவன் செய்யும் நல்ல கார்யங்களின் நல்ல பயன்களையும் கெட்ட கார்யங்களின் கெட்ட பயன்களையும் ப்ரத்யக்ஷமாகவே பார்க்கலாமென்றும் அவனுடைய ஜீவதசையிலாவது அவன் பிள்ளை அல்லது பேரனின் ஜீவதசையிலாவது ஷை கார்யங்கள் ப்ரத்யக்ஷமாகவே பயன்களைக் காட்டுகின்றன வென்றும் மநு ஸ்ம்ருதி கூறுகிறது. இந்த உபந்யாஸகரின் 40 வருஷ அனுபவத்தில் தார்மிகர்கள் க்ஷேமமாயிருப்பதையும் அதார்மிகர்கள் கேடையடைவதையும் நிதர்சனமாய்ப் பார்த்திருக்கிறார். தார்மிகர்கள் சில சமயங்களில் துன்பமடைவதைக்கண்டு நாம் சாஸ்த்ரங்களில் அவநம்பிக்கைப்படக்கூடாது. முன் ஜன்மங்களில் செய்த பாபங்களின் பலனாகத்துன்பங்கள் ஏற்படுகின்றன. இந்த ஜன்மத்தில் செய்யும் புண்யங்களினால் ஷை பாபபலன்களின் வீர்யம் குறைந்து தார்மிகர்களுக்கு அதிகத் தீங்கு விளைகிறதில்லை: இந்தத் தத்வத்தை அநேக இதிகாஸங்கள் மூலம் நிரூபித்து சாஸ்த்ரப்படி தர்மம் செய்து வருவதே நமக்கு க்ஷேமம் என்று ஸ்தாபித்தார்.

நமது தர்ம முயற்சிகளைப் பத்திரிகைகள் மூலமும் ஸபைகள் மூலமும் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். இப்பொழுது இருக்கும் ஸநாதன தர்ம வாரப் பத்திரிகைகளை ஆதரிப்பதோடு தினஸரிப் பத்திரிகைகள் ஏற்படுத்த தீவிர முயற்சிகள் செய்யவேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் க்ராமத்திலும் வர்ணாச்ரம தர்ம ஸ்வாராஜ்ய ஸங்கம் ஏற்படுத்தி ஷை ஸங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து வேலை செய்யவேண்டும் நாளடைவில் நமது முயற்சிகள் கை கூடுமென்பதில் ஸந்தேகமில்லை.

காங்கிரஸ் தலைவர்கள் ஸி. ராஜகோபாலாசார்யார், காந்திஜி முதலியவர்கள் நமது சாஸ்த்ரங்களின் அர்த்தங்களைப் பிசகாக ஜனங்களுக்குச் சொல்லி அவர்களை அதார்மிகர்களாச் செய்ய முயலுகிறார்கள். சாரதாச் சட்டமும் தீண்டாதார் ஆலயப்ரவேசமும் மதவிஷயங்களில் ஸம்பந்தப்பட்டவைகளல்ல வென்று ஸி. ராஜகோபாலாசார்யார் சொல்லுகிறார். தீண்டாமைக்கு சாஸ்த்ரங்களில் ஆதாரமே கிடையாதென்று காந்திஜி சொல்லுகிறார். ஜனங்களுக்கு அவர்கள் சொல்லுவது பிசகு என்று எடுத்துக்காட்டி சரியான சாஸ்த்ர தத்வங்களை நாம் நமது ஸபைகள் மூலம் ப்ரசாரம் செய்யவேண்டும்.

தற்கால பூதசாஸ்த்ரங்கள் நமது ப்ராசீன சாஸ்த்ரானுஷ்டானத்தின் மகிமையை ஒப்புக்கொள்ளுகின்றன. நமது சாஸ்த்ரங்களில் எவ்வித கார்ய ஸித்திக்கும் உபாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சாஸ்த்ரானுஷ்டானம் குறையக் குறைய ஜனங்களின் நடை, உடை, பாவனைகள் அடிக்கடி மாறி எவ்விதத்திலும் கேட்டையே விளைக்கின்றன.

காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு பொது உடமையினாலேயே நமது தேச க்ஷேமம் ஏற்படும் என்கிறார். தேசத்திலிருக்கும் ஸொத்துக்களெல்லாவற்றையும் ராஜாங்கத்தில் எடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு பிரித்துக் கொடுத்துவிடவேண்டுமாம். எவ்வித யூகத்துக்கும் இது பொருந்தவில்லை. மனிதனிடம் ராகத்வேஷங்களிருக்கிறவரை சிலர் ஸொத்துக்களைத் தாமே வைத்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பார்கள். மற்றவர்களை ஏமாற்றவேண்டுமென்றும், மற்றவர்களை ஹிம்ஸித்துத்தாம் ஸுகம் அடையவேண்டுமென்றும் நினைப்பார்கள். பண்டித ஜவஹர்லால்நேரு ச்லாகித்துப்பேசும் பொதுஉடமைக் கொள்கையை அனுஷ்டிக்கும் ரஷ்யா தேசத்தில் மூலை உள்ள சிலர் மற்ற ஜனங்களை அடக்கி அக்ரமமாக தயையில்லாமல் அதிகாரம் செலுத்திவருகிறார்கள். இந்தக் கொள்கைகளெல்லாம் நமக்கு அநர்த்தம் தான் விளைக்குமென்றும் நமது சாஸ்த்ரங்களில் சொல்லிய வழிகளே நமக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியவையென்றும் ஜனங்களுக்கு எடுத்துக்காட்டவேண்டியது தார்மிக ஸபைகளின் கடமையாகும்.

அக்ராஸனாதிபதியவர்கள் உபந்யாஸ விஷயங்களை அழகாய் சுருக்கிச்சொல்லும்பொழுது கலியுகத்தில் நாம் க்ருதயுக தர்மங்களையே செய்ய முயலவேண்டுமென்றும் அப்படிச் செய்வதால் கலியுகம் [illegible] கெட்டவழியில் போவதைக்கண்டு மயங்காமல் நாம் உறுதியுடன் சாஸ்த்ரத்தில் சொல்லிய மார்க்கத்திலேயே செல்லவேண்டியது நமது கடமை என்றும் வற்புறுத்தினர்.

சகிந்திராபாத்.

காலக்ஷேபம்.

சென்ற 25-4-37 மாலை சுமார் 6-மணிக்கு 'மார்க்கட் தெருவிலுள்ள ஆல்பர்ட் வாசகசாலையில், சுவாமிமலை பிரும்மஸ்ரீ 'பாய்' பாகவதர் அவர்களால் 'அஹிமஹி சரித்ரம்' என்னும் கதா காலக்ஷேபம் மிக்க விமரிசையாக நடந்தேறியது. அவ்வமயம் பல பிரமுகர்களும், ரஸிகர்களும் பிரசன்னமாயிருந்து கதை முடியும்வரையில் மிகவும் சிரத்தையுடன் சிரவணம் செய்தார்கள். பிரும்மஸ்ரீ பாகவதர்கள், ஏகாங்கியாய் பக்க வாத்யங்களின் உதவியை அதிகமாய் எதிர்பார்க்காமல் நிர்வஹித்து காலக்ஷேபம் நடத்தியது யாவராலும் நன்கு பாராட்டப்பட்டது. [illegible] சிக்கந்திராபாத் ரஸிகர்கள் இத்தகைய உயர்தர கதாகாலக்ஷேபங்களையே ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்பது ஷை காலக்ஷேபத்திற்கு வந்திருந்த கூட்டத்தால் அறியலாகும்.

நமது நிருபர்.

திருவிரிஞ்சீபுரம் ஏகாதசமஹா ருத்ராபிஷேகம்.

நாடு நலம்பெற நவக்ரஹ சாரப்படி உலகில் பஞ்சமும் பயங்கரமான பூகம்பநாசமும் ஏற்படுமென வருஷாதி பலன் அறியப்படுத்துவதால் அவ்வகை பீடைகள் சம்பவிக்காவண்ணம் சமனம் ஆக்கவல்லது. ஈசுவர ஆராதனையே என்ற ஆஸ்திக தர்ம வழிபாட்டில் பிரும்மஸ்ரீ பழனி சிவன் என்ற பெரியவாள் தர்ம கைங்கர்யம் வசூலித்து இலண்தலத்தே ஸ்ரீ மார்க்கபந்து ஈசுவரருக்கு பதினொரு வேத பிராம்மணோத்தமர்களை வரவழித்து நிகழும் ஈசுவர வருஷப்பிறப்பு நாள் முதல் பதினொரு நாட்களும் தினப்படி உச்சிகால ஆராதனையாய் மஹன்யாஸபூர்வம் ஏகாதச மஹா ருத்ர மந்திரம் மஹாபிஷேகமும் விசேஷ சந்தர்ப்பணையும் நடத்திவைக்கப்பட்டது. இவ்விசேஷ தெய்வ ஆராதனையின் மெய்ப்பலனாய் இலண்தலதொண்டநாடு நிகழும் சித்திரை மதியிலேயே காலாவதியில் விசேஷ மழை பொழிய ஆஸ்தீக வழிப்பாட்டின் மெய்ப் பலனை காட்டியுள்ளதுபோலும்.

ஒருநிருபர்.

திருக்குடந்தையில் புஷ்பப்பல்லக்கு உத்ஸவம்.

ஸ்ரீயப்பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமி என்கிற ஆராவமுதனுக்கும், திருவாழி ஆழ்வான் என்கிற ஸ்ரீ சக்ரபாணிக்கும், சக்ரவர்த்தித் திருமகனார் என்கிற ஸ்ரீ ராமஸ்வாமிக்கும், ஸ்ரீஆராவமுதன் விடயாற்றி சாத்துமுறையாகிய நாளது ஈசுவர-ஞு சித்திரை-மீ 27உக்குச் சரியான 9—5—1937 ஞாயிற்றுக்கிழமை ராத்திரி அழகிய மூன்று புஷ்பப்பல்லக்கமைத்து ஜகத் க்ஷேமார்த்தமாய் திருவீதி உத்ஸவம் கண்டருளப் போகிறபடியால் ஷை உத்ஸவத்துக்கு ஆஸ்திகர்களான பக்தகோடிகள் அனைவர்களும் ஸத் திரவியத்தால் உபகரித்து கைங்கர்யத்தை பூர்த்திசெய்தும் எம்பெருமான்களை ஸேவித்தும் ஸர்வாபீஷ்டத்தையும் பெறக் கோருகிறோம் என்று ஷை கைங்கர்ய நிர்வாகர்களான [illegible] பட்டாசார், கோபாலகிருஷ்ண பட்டாசார் அறிவிக்கிறார்.

ஸ்ரீ பாராங்குச பக்தஸபை கும்பகோணம்.

இந்த ஸபையின் சார்பாக நாளது-ஞு ஸ்ரீ ஆராவமுதன் சைத்ரோத்ஸவத்தில் அத்யாபக கைங்கர்யம் செய்தருளிய வெளியூர் உள்ளூர் ஸ்வாமிகள் சிலருக்கு ஸ்ரீ. உ. வே. நடுவக்கரை ஆர். நீலமேகாசாரியார் ஷை தினத்தில் அக்கிராசனம் வஹித்து ஸம்பாவனை செய்தருளினார். அதுஸமயம் ஸ்ரீ. உ. வே தென்பரை வெங்கட வரதாச்சாரியார் ஸ்வாமியால், திவ்யப்ரபந்தத்தின் மஹிமையைப்பற்றி ஓர் உபன்யாஸம் செய்யப்பட்டது. பின்னர் அங்கு ஸபைக்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீ உ வே. தென்பரை ராமஸ்வாமி அய்யங்கார், (ரிடையர்டு தாசில்தார்) டவுன்ஹைஸ்கூல் புரோபஸர் ஆர். சடகோபாசாரியர் முதலான ஸபையோர்களுக்கும் கார்யதர்சியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு அக்கிராசனருக்கு மாலை சூட்டியதும் ஸபை இரவு 9மணிக்கு இனிது நிறைவேறியது என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

மன்னார்குடி.

புராண பிரவசனம்.

சுமார் 1½மாதகாலமாய் இந்நகரில் கீழ 2ம் தெரு விஷநிவர்த்தி விக்னேச்வரர் ஆலயத்தில் பிரும்மஸ்ரீ புடார்ஜுன சர்மா சிரோமணி அவர்கள் ஹாலாஸ்யமாகாத்மத்தை இரவு 8 மணி முதல் 9½வரை நன்கு உபந்யஸித்து வந்தார்கள். ஏராளமான ஜனங்கள் கூடி உத்ஸாஹமாக அதைக்கேட்டு ஆநந்தமடைந்தார்கள். கடைசியில் மீனாக்ஷிகல்யாணத்தில் அவருக்கு விசேஷ சம்பாவனையும் செய்தார்கள். அன்று விசேஷமாக பிரும்மண ஸந்தர்ப்பணமும் நடந்தது. இவ்வளவு அழகாய் உபந்யஸித்துவந்த சர்மா அவர்கள் தஞ்சை வைதிக தர்மஸங்கத்தின் அத்யாபகராவர். அவருடைய யோக்யதையை அவருடைய ஆசாரமே நன்கு அறிவிக்கும். நிற்க அதே ஆலயத்தில் பிரதிதினம் பெருவாழ்ந்தான் ஸ்ரீ. உ. வே. ராமபத்திராசார்யஸ்வாமிகள் தர்மவ்யாதோபாக்யானம் முதலான சில முக்ய உபாக்யானங்களை மஹாபாரதத்திலிருந்து நன்கு சொல்லிவருகிறார். இவருடைய உபந்யாஸம் வாசாமகோசாமாயிருப்பதோடு கேட்பவர்களின் மனதை ரொம்ப உருக்கச் செய்கிறது. இவையெல்லாம் இந்நகர் பிராமண ஸமாஜத்தின் ஆதரவில் நடைபெற்று வருகிறது. ஆதலால் இந்நகரிலுள்ள ஆஸ்திகர்கள் எல்லாரும் பிராம்மண ஸமாஜத்தில் மெம்பராகச் சேர்ந்து சிறு பண உதவி செய்தால் அடிக்கடி ஒருவித சிரமுமில்லாமலே அழகான உபன்யாஸங்கள் நடத்த முடியும். தயவு செய்து எல்லோரும் இதில் மெம்பர்களாகச் சேர்ந்து ஸத்விஷயங்களை நன்கு நடத்தவேண்டிய ஏற்பாடு செய்ய முன்வரும்படி பகவானை பிரார்த்திக்கிறேன்.

என். விச்வநாதசாஸ்திரிகள்.

பாலக்காடு.

பிரும்மானந்த தீர்த்தர் பரமபதம் சென்றார்.

1858. காலயுக்தி ஹு-ல் பாலக்காடு நூறணி அக்ரஹாரத்தில் கருடசயனுதி அனேகம் க்ரதுக்களை அனுஷ்டானம் பண்ணினவரான மஹான் பிரும்மஸ்ரீ பரசுராம தீக்ஷிதர் அவர்களுக்கு ஜ்யேஷ்ட புத்திராய் ஜனித்த சேஷாத்திரி தீக்ஷிதர் அக்னிஷ்டோமம், ஸர்வபிருஷ்டம், கருடசயனம், (ஸாஹஸ்ரம்) த்விஷாஹம்ஸசயனத்துடன் த்வாதசாத்திரம், நக்ஷத்திரஸத்ரம, சகார்மாஸ்யம், த்ரிஷாஹஸ்ரசயனத்துடன் ஐகாஹிக யஜ்ஞாவிருதம், ஸாவித்திராதி சஷோத்திரசயனங்கள் என்ற இப்பேர்ப்பட்ட மஹாக்ரதுக்களை யதாவத்தாக அனுஷ்டானம் செய்து மேற்படி கர்மாக்களினால் சித்தசுத்தி ஏற்பட்டு தாது ஹு ஐப்பசி மீ 14உ 30—10—36 பௌர்ணமி தினத்தில் ஸன்யாஸாச்ரம ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டார்.

ஷெயார் ஈச்வர-ஹு சித்திரை-மீ 10உ (22—4—37) குருவாரம் இரவு மணி 3½க்கு ஜனித்ததான 'பகதைவத்யமான' உத்திரபல்குனி நக்ஷத்திரத்திலேயே உத்தேச்யமான கைவல்யத்தைக் கைகொண்டார். மேற்படி அக்கிரஹாரவாஸிகளும் ஸமீபக்கிரஹாரவாஸிகளும் புத்திரர்களும் வேதகோஷத்துடனும் பஜனைகோஷ்டியுடனும் பட்டின பிரவேசம் செய்துவைத்து பிறகு கிராமஸமீபத்திலேயே ஸமாதியும் யதாவத்தாக நிறைவேற்றப்பட்டது.

மேலும் 10வது தினம் (2—5—37) முதல் மஹா ரீ பூ ஜை முதலானவைகளும் நடைபெற்றது.

ஒரு நிருபர்.

திருவையாறு மஹாகும்பாபிஷேகம்.

தென்னாட்டுத் திருத்தலங்களிலெவர்களாலும் போற்றத்தகுந்த மூர்த்தித் தீர்த்தம் ஸ்தலம் என்ற மூவகை பெருமை வாய்ந்ததும் பூகைலாஸமென்றும் தக்ஷிண கைலாசமென்றும் மேன்மையுள்ளதும் சைவ சமயாசார்யார் நான்கு மஹான்களாலும் பாடல் பெற்றதும் ப்ரம்மவைவர்த்தபுராணத்தில் விசேஷமாய் வர்ணிக்கப் பெற்றுள்ளது. ஜப்யேச்வார், ப்ரணதார்த்திஹரர், பஞ்சநதீச்வரர், என்ற காரணப்பெயர்வாய்ந்த மூர்த்தி மஹிமையையடைந்ததுமான தஞ்சைமாநகரத்துக்கு வடபுறம் ஸ்ரீகாவேரி நதியின் வடகரையிலுள்ள மஹா புண்யக்ஷேத்ரமாகிய திருவையாற்றில் நாளது ஈசுவரஹு சித்திரைமீ 20உ 2—5—37—ல் மஹாகும்பாபிஷேக மஹோற்சவம் வெகு விமர்சையாய் நடைபெற்றதை கண்டு களிக்காதவர்கள் யாருமிரார். ஷெ கும்பாபிஷேகத்தில் ருக், யஜுஸ், ஸாமவேதம், புராணங்கள், தேவாரம் முதலியவைகள் பாராயணம் செய்யப்பட்டன. இதில் விசேஷம் யாதெனில் ஸாமகானப்ரியமான பகவானுக்கு ப்ரீதிகரமான இனிய ஸாமகானம் பழைய முறையிலேயே இவ்விடத்திலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இந்தப்ராசீன ஸாமகான முறையானது ஸ்ரீமன்னார்குடி மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ ராஜுசாஸ்திரிகள் அவர்களாலும் திருவிசநல்லூர் மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ ராமசுப்ப சாஸ்திரியள் அவர்களாலும் சிறந்த ரூபமாய் அச்சிட்டு ஆதரிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்தவிஷயமே. அதற்கு ஏற்பட்ட சில இடையூறுகளை விலக்கி நிர்விக்னமாய் இதை நடத்தும்படி ஏற்பட்டது தர்மஸாம்வர்த்தனியின் அருளேயாகும் என்பதில் ஐயமில்லை.

இந்த மஹாகும்பாபிஷேகத்தை நன்முறையில் நடத்திவைத்த திருப்பணி செட்டியாருடைய பரம்பரைக்கு ஸர்வாபீஷ்டமுண்டாகும்படி அந்த ஈசுவரிய பகவானைப் பிரார்த்திக்கிறேன்.

ஓர் ஆஸ்திகன்.

நாகையில் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் உபன்யாசம்.

நாகப்பட்டணம் ஹிந்துமதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் சென்ற 26-4-37 திங்கள் கிழமை யன்று மாலை 7மணிக்கு நாஷனல் ஹைஸ்கூலில் சென்னை அட்வோகேட் ஸ்ரீமான் வி.வி. ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள் ஸ்ரீராமசந்திரன் புருஷோத்தமன் (Rama The Ideal Man) என்னும் விஷயத்தைப் பற்றி உபன்யஸித்தார்கள். நாகப்பட்டிணம் அட்வோகேட் ஸ்ரீமான் ஆர். எஸ். நடராஜ சாஸ்திரிகள் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள். ஸ்ரீமான் ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள் ஸ்ரீராமாவதாரத்திற்கும் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திற்கும் உள்ள வித்யாசத்தை எடுத்துக்காட்டியும் கிருஷ்ணாவதாரத்தில் பகவான் தான் ஈச்வரன் என்பதை ஒவ்வொரு சமயங்களிலும் வியக்தமாக காட்டிவந்தாரென்றும் ராமாவதாரத்தில் தான் மனிதனே தவிர வேறில்லை என்று காட்டுவதற்கே பகவான் பிரமப்பட்டு வந்தாரென்றும் தர்மத்தை நடத்திக் காட்டுவதற்கே ராமாவதாரமானது ஏற்பட்டதென்றும் அவ்விதம் அனுஷ்டித்துக் காட்டியதில் புத்ரனாகவும் ப்ராதாவாகவும் பர்த்தாவாகவும், சிநேகிதனாகவும், குருவாகவும், சிஷ்யனாகவும் பலவழிகளிலும் அந்தந்த தர்மங்களை நடித்துக்காட்டியிருக்கிறாரென்றும் காட்டுக்குப்போன அவர் நிர்மாணித்த காலத்தில் பிதிருவாக்ய பரிபாலனத்தைவிட தன்னுடைய பிதா அதார்மிகனாக போகாமலிருக்க வேண்டுமென்பதே முக்யமான நோக்கமென்றும் அந்தந்த இடங்களில் ஸ்ரீமத் ராமாயண ச்லோகங்களை சுட்டிக்காட்டி வெகு அழகாகவும் தன்னுடைய அபிப்ராயங்கள் எல்லோருடைய மனதிலும் ப்ரத்யக்ஷமாக படும்படி படம் எழுதுவதுபோல் உருக்கமாகவும் உபன்யஸித்தார்கள். பிறகு அக்ராசனர் அவர்கள் ஸ்ரீமத் ராமாயணத்தினுடைய விசேஷங்களை எடுத்துக்காட்டி எல்லோரும் பிரதிதினமும் சிரத்தை பாராயணம் செய்து பாலபத்தை அடையவேண்டுமென்று சொல்லி முடித்தார்கள். பிறகு சபையின் தலைவரான ஸ்ரீமான் பி. எஸ். சிவராமய்யர் அவர்களால் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு சபையானது கலைந்தது.

என். ஸாம்பசிவ அய்யர், பி.ஏ. பி.எல்.
சபாகார்யதர்சி.

கும்பகோணம்

வேதபாராயணகோஷ்டி ஸம்பாவனை.

திருக்குடந்தை ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி சைத்ரோத்ஸவகாலத்தில் அய்யங்கார் தெரு, பாட்டாசார் தெருவாரால் நடத்தப்பட்டு வரும் வேதபாராயண கோஷ்டியும், ததீயாராதனங்களும் எப்போதும்போல் இவ்வருஷமும் விசேஷமாக நடைபெற்றன.

அய்யங்கார் தெருவில் 9வது உத்ஸவம் இரவு வேதபாராயணகோஷ்டி ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது. அட்வோகேட் ஸ்ரீ உ. வே. ஜகந்நாதாசாரியர் இந்த ஸபையில் தலைமை வகித்தார். திருவாதி காலேஜ் புரொபஸர் ஸாஹித்ய, வியாகரண, வேதாந்த சிரோமணி ஸ்ரீ உ. வே ஸ்ரீநிவாஸதாதாசாரியர் ஸ்வாமி வேதவைபவத்தைப்பற்றிச் சிறந்த பிரசங்கம் செய்தார். ஸ்ரீ உ. வே. கனபாடி அனந்தாசாரியர், அண்ணுத்தளையாசாரியர் முதலியவர் பேசியபின் வந்தனோபசாரத்துடன் ஸபை பூர்த்தியாகியது.

ஷெ கோவில் அத்யாபக—வேதபாராயண மிராசதார்களான பட்டாசாரியர்களாலும் இரு கோஷ்டி ஸ்வாமிகளுக்கு அன்று ஸம்பாவனை செய்யப்பட்டது. மாஜி தாசில்தாரும் ஷெ கோவில் டிரஸ்டியாயிருந்தவருமான ஸ்ரீமான் டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி அக்ராஸனம் வகித்து ஸம்பாவனைகளை நடத்தினார்.

மஹாமஹோபாத்யாய, பண்டிதராஜ, ஸ்ரீ. உ.வே. ஆர். வி. கிருஷ்ணமாசாரியஸ்வாமிகள் ஸ்ரீ.உ.வே. கே. எஸ். பட்டாசாரியஸ்வாமிகளும் ஆகியவர்கள் வேதங்களுடையவும் பிரபந்தங்களுடையவும் மஹிமையைப்பற்றிச் சிறந்த பிரஸங்கம் செய்தனர்.

நமது நிருபர்.

சிதம்பரம்.

ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

நிகழும் ஈசுவரஹு வைகாசிமீ 1உ (14-5-37) வெள்ளிக்கிழமை சிதம்பரம் குருவையர் அக்ரஹாரம் 19 நெ. கிருஹத்தில் வழக்கம்போல் மிகச் சிறப்பாக நடந்த நிச்சயித்திருப்பதால் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவத்திற்கு ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் வந்திருந்து ஆசாரியர்களைத் தரிசித்து உபந்யாஸங்களை அனுபவித்து திருவீதி ப்ரதக்ஷிண மஹோத்ஸவத்தை நடத்திவைத்து ஸத்ஸம்ப்ரதாய பாகவத பஜனத்தை மனமார புகழ்ந்து ஸ்ரீமத்பகவத்பாதர்களுடைய கருணாமிர்தத்திற்குப் பாத்ரராகும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

B. S. கிருஷ்ணய்யர்.

புதுக்கோட்டை வைதிக வர்த்தினீ ஸபை.

அர்ச்சையை ஸேவிக்கும் முறை.

(15—4—37 தொடர்ச்சி).

எந்தேசத்தில், கிராமத்தில், நகரத்தில் எந்த தர்மம் பரம்பரையாய் வந்ததோ அதை மாற்றக்கூடாது என்கிறார்.

அப்படி ஒருவாறு மாற்றிவிட்டால் அந்த தேசம் துர்பிக்ஷத்தை அடைந்து கஷ்டத்துக்குள்ளாகும் என்று ஸ்ரீமஹாபாரதம் சாந்திபர்வா, ராமாயணம் அயோத்தியாகாண்டம் முதலிய விடங்களில் ராஜதர்ம ப்ரகரணங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது அப்படி தர்மமாக நடந்துகொண்டுவரும் ஜனங்களை அரசன் தர்மத்தை மீறி தண்டித்தால் அபகீர்த்தியையும், அச்ரேயஸ்ஸையும் அடைவான் என்று யாஜ்ஞ வல்க்யம் 357-வது சுலோகம் கூறுகிறது.

"அதர்ம தண்டனம் ஸ்வர்க கீர்த்தி
லோக விநாசனம் |
ஸம்யக்து தண்டனம் ராக்ஞ: ஸ்வர்க்
கீர்த்தி ஜயா வஹம் ||"

அதர்மமாய்த் தண்டிப்பது அரசனுக்கு ஸ்வர்க்கம், கீர்த்தி, லோகங்கள் இவைகளை நாசம் செய்துவிடும். தர்மமாய் தண்டித்தால் ஸ்வர்க்கம், கீர்த்தி, ஜயங்களை உண்டுபண்ணும், என்று கூறியிருப்பதால் பரம்பரையாய் வந்ததைமாற்றியும் அதற்குட்படாதவர்களை தருமமுறை தவறி தண்டிப்பதும் அரசர்களுக்கு அபகீர்த்திக்கு இடமாகும், தேசக் குழப்பத்திற்கும் காரணமாகும்.

ஆகையால் அரசனுகிலும், தேசத்தலைவனாகிலும் அநாதியாய் வந்த வழக்கத்தை மாற்றுவதென்பது கூடவே கூடாது. அப்படி மாற்ற ஆரம்பித்த 'வேன' மஹாராஜாவின் கதையும் 'கார்த்தவீர்யார்ஜுனன்' கதையும் பாரதத்தைப் படித்தவர்களுக்கு புலப்படாமலிருக்காது. அதர்மமாய் ப்ரவர்த்தித்த 'வேனன்' அதோகதி யடைந்தானேயன்றி வேறில்லை. ஆயிரம் கைகளைப் படைத்து ராஜ்யம் ஆண்டுவந்த கார்த்தவீர்யன் அதர்ம ப்ரவர்த்தியால் அடியோடு அழிந்தானே அன்றி நற்கதி பெறவில்லை.

ஆஸுர, ராக்ஷஸ ப்ரக்ருதி வாய்ந்த ஹிரண்யகசிபு முதலியவர்களைவிட தபோவலிமையும், ஈசுவர வரப்ரஸாதமும் பெற்றவர் வேறு ஒருவருமில்லை. அவர்களெல்லாம் அடைந்த கதியை நம் பாரத மாதாவின் புதல்வர்களில் அறியாதவரும் உண்டோ. ஹே பாரதமாதாவே! கங்காதேவி! ஹே விசுவநாதா! பிரும்ம தேவரின் பாதி வயதுவரை நடத்தப்பட்டு வந்த ஸம்ப்ரதாயத்தை ஒரே நொடிப்பொழுதில் மாற்றிவிடவேண்டும் என்ற எண்ணத்தைக் கொடுத்து கெடுத்துவிடுவது உங்களுக்கேற்ற தர்மமா? பிராணிகளின் புத்திவலிமை உங்கள் அதீனமாக இருப்பதாக சாஸ்திரம் கூறியபடி தற்காலத்தில் தோன்றியிருக்கும் பிராணிகளின் புத்தி பேதத்தை மாற்றி நல்லவழியில் கொண்டுவந்து சேர்த்து எல்லோரும் க்ஷேமமாக இருக்கும்படி, கருணைபுரியும்படி உங்கள் பாதங்களை பன் முறை பணிந்து பிரார்த்திக்கிறேன். இவ்வளவால் சாஸ்திர முறைப்படி ஆலயங்களில் சென்று அவர்களுக்குரிய ஸ்தானங்களிலிருந்து ஸேவிப்பதே எல்லோருக்கும் க்ஷேமகரமென்று ஏற்படுகிறது.

ஆகையால் சாஸ்திரங்களில் கூறியவாறும் நாளதுவரை இருந்துவரும் பழக்க வழக்கங்களுக்கு விரோதமன்னியிலும் எல்லோரும் தேவாலயங்களில் அவர்களுக்குக்குறிப்பிட்ட இடங்களிலிருந்து பரமேசுவரனை ஸேவித்து அவன் அருளுக்கு ஆளாவார்களாக!

இவ்விதம் பிரும்மஸ்ரீ வெங்கடராமசாஸ்திரிகளவர்கள் சொல்லிமுடித்த பிறகுஇச்சபையோரின்வேண்டுகோளுக்கிணங்கி இங்கு விஜயம்செய்திருந்த தேவகோட்டை வக்கீல் பிரும்மஸ்ரீடி. ஜீ. நாகரெத்ன சாஸ்திரிகளவர்கள் இவ்விஷயமாக சட்ட சம்பந்தமான பல விஷயங்களை எல்லோருக்கும் நன்கு மதிக்கும்படி எடுத்து உரைத்தார்கள்.

அநாதிகாலமாக ஏற்பட்டிருக்கிற வழக்கத்திற்கு விரோதமாக ஸவர்ணர்களே ஆராதிக்கும் கோவில்களுக்குள் அவர்ணர்கள் பிரவேசிக்கக் கூடாதென்று இதுவரை இருந்து வரும் வழக்கமானது நமது சாஸ்திரங்களுக்கும் வேதம், புராணம், ஆகமம், இதிஹாஸம் முதலானதுகளுக்கும் ஒத்ததாயும் இதுவரை நமது பாரத பூமியில் அனுஷ்டானத்திலிருந்து வரும் சட்டதிட்டங்கங்களுக்கும் ஒத்ததாக இருக்கிறது.

கொச்சி திருவாங்கூர் கோவில் பிரவேசத் தகராறு.

ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமி அபிப்பிராயம்.

(நமது விசேஷ நிருபர்)

கொச்சி திருவாங்கூர் கோயில் பிரவேசத் தகராறு விஷயமாய் ஸ்ரீஜகத்குருவான வானமாமலை மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகள் தமது அபிப்பிராயத்தை வியக்தமாய் வெளியிட்டிருக்கிறார். ஹரிஜன ஆலயப்ரவேச அனுமதி விளம்பரம் திருவாங்கூர் மகாராஜாவால் வெளியிடப்பட்டபோதும் ஸ்ரீமத் வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளால் விளம்பரம் சாஸ்த்ர விரோதமும் நியாய விரோதமுமான அதிக்ரமச் செயலெனக் குறிப்பிட்டு தாம் அதைக் கண்டிப்பதாக மகாராஜாவுக்கு ஓர் தந்தி கொடுக்கப்பட்டது. தற்போது கூடல் மாணிக்கம் கோவிலில் தீண்டாதார் பிரவேசம் செய்யும் கோயில் பூஜகர்களை பூஜை செய்யக் கூடாதென கொச்சி மகாராஜா அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கைமூலம் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றியும் ஸ்ரீ ஸ்வாமிகள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார். தீண்டாதார் பிரவேசம் செய்யும் கோவில் பூஜை செய்வோர் ப்ரஷ்டர்களாக விடுவதால் அவர்களை மற்ற கோவில்களில் பூஜை செய்ய விடக்கூடாதென கொச்சிமகாராஜா வெளியிட்ட அறிக்கையை பாராட்டி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். சென்னை ஹரிஜன சங்கத் தலைவர் ஸ்ரீமான் வி. பாஷ்யமய்யங்கார் (ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ்) திருவாங்கூர் அதிக்ரமச் செயலை ஆதரித்தும் கூடல் மாணிக்கம் கோவில் விஷயமாய் கொச்சிமகாராஜா வெளியிட்ட அறிக்கையின் தாத்பர்யம் தனக்குப் புரியவேயில்லை எனவும் புனராலோசனை செய்யுமாறு கொச்சி மகாராஜாவை வேண்டியும் சென்னை தினசரிகளில் நீண்ட வியாசங்களை எழுதித் தள்ளியிருக்கிறார். ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமி அபிப்பிராயம் கவனித்த பின் ஸ்ரீமான் அய்யங்கார் விஷயம் அறிந்துகொள்வதென்பதற்கு ஐயமில்லை. காங்கிரஸ், ஹிந்து மகா சபையார், ஹரிஜன ஸேவா சங்கத்தார் முதலிய நவீன நோக்கம் கொண்ட பேர்வழிகள் அறிக்கைகள் மூலம் புனராலோசனை செய்யுமாறு கொச்சி மகாராஜாவை கேட்டுக்கொண்டேயிருக்கையில் சென்னை மாகாண ஸத்ஸபைகளும் சனாதன பிரமுகர்களும் ஸத்காரியத்தை பாராட்டி அபிப்பிராயம் தெரிவித்து ஆதரவளிக்கக் கூட சோம்பல் கொண்டு மௌனம் சாதிக்கிறார்களே என பொதுஜனங்களால் பேசிக்கொள்ளப்படுவதாய்த் தெரிகிறது.

கொச்சி மஹாராஜாவின் தீரச்செயலுக்குப் பாராட்டு.

ஸ்ரீ வானமாமலை மடத்தில் பிரும்மாண்டமான கூட்டம்.

(நமது விசேஷ நிருபர்.)

ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை வர்ணாச்ரம சுயராஜ்யசங்கம் அகில இந்திய பிராம்மண மகாசபை திருவல்லிக்கேணி தமிழ்சங்கம் இவைகளினாதரவில் திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் பிரும்மாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. மெட்ராஸிலுள்ள பிரபல அட்வோகேட் பலரும் மற்றும் அறிஞர்களும் திரளாக விஜயமாயிருந்தனர் தீண்டாதாருக்கு ஆலயப்ரவேச அனுமதியளித்து திருவாங்கூர் மகாராஜாவால் வெளியிடப்பட்ட அதிக்ரம ஆக்ஞையைக் கண்டித்தும் கூடல் மாணிக்கம் கோவிலில் திருவாங்கூர் பூஜகர்கள் பிரவேசிக்கக் கூடாதென சாஸ்திரீய சனாதன சம்ரக்ஷணார்த்தம் விஷமப்பிரசாரங்களை எதிர்த்து மிகவும் நியாயமாக தீரத்துடன் கொச்சி மகாராஜா பிறப்பித்த ஆர்டரைப் பாராட்டியும் முக்யஸ்தர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. முடிவில் பலவித தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு பத்திரிகைகளுக்கும் கொச்சி திருவாங்கூர் மஹாராஜாக்கள், வைஸ்ராய், கவர்னர் யாவர்க்கும் இவ்விஷயங்களை நேரில் அனுப்ப ஸபா காரியதரிசிகளுக்கு அதிகாரமும் அளிக்கப்பட்டது.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கன்னுசாமி பத்தர்.
பெரியதெரு, கும்பகோணம்.

ஆர்யதர்மிகளுக்கு ஜே! ஜே!!
உங்களுக்கு அதிர்ஷ்டம் வருகிறது அப்படியானால்
பழனி டாக்டர் கே. எஸ். பதி அவர்களின் No. 1
ரசமணியை
வாங்கி அணியுங்கள். உண்மையில் நீங்கள் செல்வத்தை அடைவீர்கள். தரித்திரம் அனுகாது. சகல தொழிலும் நினைத்த காரியங்களும் ஜெயமாகும்.
தாதுபுஷ்டியில் யானையைப்போல் நல்ல சுகம் அடையலாம்.
ஆர்டருக்கு முந்துங்கள் ஒரு வாரம் வரையில் ஒரு மணி ரூபா 7.
கே. எஸ். பதி வைத்தியசாலை பழனி.

மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

மதிப்புரை.

வேதபுரி கீர்த்தனைகள்.

இவற்றின் முதல்பாகம் கிடைக்கப் பெற்றோம், இவைகளை இயற்றிய சங்கீத வித்வான் ஸ்ரீமான் டி. ஆர். விசுவநாத சாஸ்திரிகள் சென்னை ம்யூஸிக் அகாடமியால் புரிசளிக்க பெற்றவர், அவரது ஸங்கீத ஸாஹித்யவல்லமையானது ஸங்கீத சாஸ்த்ர வித்வன்னர்களான அனேக கனவான்களால் உயர்தரமாகப் புகழப்பட்டிருக்கிறது. இவர் இயற்றிய கீர்த்தனைகள் இவரது ஜன்ம பூமியாகிய வேதபுரியின் பெயரை முத்ரையாகக்கொண்டவை. தற்போதுவந்துள்ள பாகத்தில் தமிழ் கீர்த்தனைகள் மூன்றும் ஸம்ஸ்க்ருத கீர்த்தனமொன்றும் அடங்கியிருக்கின்றன. ஸாஹித்யத்தின் நடையும் அமைப்பும் மிகவும் அழகாக இருக்கின்றன. ஒவ்வொரு கீர்த்தனத்தின் கடைசியிலும் அதை ஸ்வரப்படுத்தி அதைப் பாடும்விதமும் சொல்லப்பட்டிருப்பதுடன் அதனுடைய ராகத்தைப்பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. ஆகவே ஸங்கீதத்தில் தேர்ச்சி அடைவதற்கு இவ்விதமான வெளியீடுகள் மிகவும் உபயோகமுள்ளவை என்பதில்லாதொரு ஐயமுமில்லை. இதேமாதிரி ஸ்ரீமான் சாஸ்திரியார் தன்னுடைய கீர்த்தனங்களை சஞ்சிகைகளாக வெளியிட உத்தேசித்திருப்பதை ஸங்கீதாபிமானிகள் ஆதரிக்க வேண்டியது முக்கியமான கடமையாகும் (பிரதி ஸஞ்சிகை விலை அணா 2.

கிடைக்குமிடம்:—

செக்ரிடரி, ஸங்கீத ஸதனம்
ராமசாமித் தெரு,
ஜி. டி. சென்னை.

ரொக்கப்பரிசு ரூபாய் 1800

நெ. 8 கலைமகள் போட்டி

முதற் பரிசு சரியான விடை ரூபாய் 1000
இரண்டாவது பரிசு ஒருதப்புள்ள விடை ரூபாய் 500

முடிவு தேதி 30—5—1937

பிரவேசக்கட்டணம் அணா 4 தான்.

நெ. 8

நெ	வார்த்தைகள்.
1	பூமா —
2	— — மகள்
3	வா —
4	— — மடந்தை
5	கலை — —
6	சா — — தி

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்.

இதில் காட்டப்பட்டிருக்கிற கலைமகள் பெயர் 18. அதிலிருந்துதான் 6 சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கோடிட்ட இடங்களில் எழுத்துக்களைச் சேர்த்தால் சரியான விடைவரும். ஒவ்வொரு விடைக்கும் அணா 4 வீதம் தனித்தனியே விடைகளை சுத்தமாக எழுதி பிரவேசக்கட்டணத்துடன் M. O. ரசிதையும் சேர்த்து 30—5—37க்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். எழுத்துக்கு எழுத்து சரியான விடைக்கு முதற் பரிசும் ஒருதப்புள்ள விடைக்கு இரண்டாவது பரிசும் பல சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை முறையே பகிர்ந்தும் அளிக்கப்படும்.

கலைமகள் பெயர் ஜாப்தா.

1. சொன்மடந்தை
2. இசைமகள்
3. சரசுவதி
4. சாச்சொதி
5. நான்மடந்தை
6. சொன்மகள்
7. சாச்சோதி
8. வாமை
9. கலைமான்
10. கலைமடந்தை
11. வாணி
12. கலைவாணி
13. கலைமகள்
14. வாரி
15. இசைமடந்தை
16. வாரா
17. புலமகள்
18. பூமாது.

நெ. 9 கூட்டல் போட்டி.

சரியான விடை ரூபாய் 300.

நெ. 9

●
●
●
10

● இந்த இடத்தில் ஒவ்வொரு எண் வீதம் போட்டுக் கூட்டினால் 10 வரவேண்டும். வந்த எண் வரலாம். சரியான விடை வந்தால் பரிசுத்தொகை 300 ஐயும் பகிர்ந்து அளிக்கப்படும். ஒவ்வொரு விடைக்கும் அணா 4 வீதம் விடைகளை சுத்தமாக எழுதி பிரவேசக்கட்டணத்துடன் M. O. ரசிதையும் சேர்த்து 30—5—37 க்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். ஒன்றுக்குமேற்பட்ட

நெ 8 நெ. 9 இவ்விரண்டு போட்டிகளுக்கும் மொத்தமாய் விடை எழுதி அனுப்புவர்கள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனி காகிதத்தில் வரிசைக்கிரமமாக எழுதியனுப்பலாம்.

மானேஜரின் சரியானவிடைகள் சீல்போட்ட கவரில் தேவகோட்டை நாட்டுகோட்டையார் பாங்கில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு போட்டிக்கும் பரிசுத்தொகை 10—6—37க்குள் அனுப்பப்படும். பரிசு அளிக்கும் சகல விஷயங்களிலும் மானேஜர் தீர்ப்பே முடிவானது.

மானேஜர்,
கார்த்திகேசன் நிலையம், தேவகோட்டை,
ராமநாதபுரம் ஜில்லா.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

20-5-1937

H	[illegible]
22	[illegible]19

215185

4
215185
21 MAY 1937
291

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர் :
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ஸு வைகாசி-மீ 7உ 1937-ஸு மே-மீ 20உ | ல 19

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மா ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

புனுமாருதிகோவில் ஸத்யாக்ரஹம் நிறுத்தப்பட்டது.

புனுமாருதிகோவிலில் மணியடிக்கக்கூடாதென்றும் வாத்யம் வாசிக்கக்கூடாதென்றும் செய்யப்பட்ட உத்திரவை மீறி நடந்த ஸத்யாக்ரஹம் நிறுத்தப்பட்டது. அசெம்பத்ருதியை நினைத்துடன் உத்ஸவர் பூர்த்தியாகிவிடுவதாலும், தடையுத்திரவும் அன்றோடு காலாவதியாகிவிட்டதாலும் ஸத்யாக்ரஹமும் நிறுத்தப்பட்டு விட்டது.

ஸ்ரீமான் என். ஸி. கேல்கார் முதலிய பிரபல புனு தலைவர்களும், வெளியூர்பிரமுகர் பலபலரும் இந்த ஸத்யாக்ரஹத்திலகலந்து தடை உத்திரவை மீறினார்கள். இதுவரையில் ஆயிரம் பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மீது கேஸ் நடத்தப்படும், ஸ்ரீமான் கல்கர் முதலியவர்களுக்கு ரூ. 50. அபராதம் விதிக்கப்பட்டது. அல்லது ஒருவாரம் காவல் தண்டனை.

பத்திரிகைகளுக்குத்தடை.

இதாலி தேசத்திற்குள் பிரிடிஷ்பத்திரிகைகள் பலவும் வரக்கூடாதென்று இதாலிகவர்ண்மெண்ட் தடை உத்திரவு போட்டிருக்கிறது. லண்டனிலுள்ள இதாலிய பத்திரிகை நிருபர்களை இதாலிக்குத் திரும்பி வந்துவிடும்படியும், இதாலியிலுள்ள பிரிடிஷ் பத்திரிகை நிருபர்கள் இதாலியை விட்டு வெளியேறி விடவேண்டுமென்றும் இதாலி ஒரு உத்திரவு போட்டிருக்கிறது. இதாலிக்கு அகௌரவம் நேரும்படி பிரிடிஷ் பத்திரிகைகள் பொய் பிரசாரம் செய்ததே இதற்குக் காரணம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷீட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

1904-ஸு ஸ்தாபிக்கப்பட்டது.
கிளை ஆபீஸ்கள் :—மன்னார்குடி & நாகப்பட்டணம்.
ஸப் ஆபீஸ்கள் :—நன்னிலம் & அய்யம்பேட்டை.
30—4—37-ல் எடுக்கப்பட்ட கோஷ்பாரா.

மூலதனம். செல்லுகள்.		சோத்துகள், இருப்புகள்.	
1. மூலதனம் (வரவுவந்த பங்குத்தொகைகள்) ...	282575—0—0	1. ஆபீஸ் சாமான்கள்: கட்டிடங்கள், ஸ்தாவரங்கள்	61405—1—4
2. ரிஸர்வ்நிதிகள், காப்புநிதிகள் ...	199063—8—8	2. இன்வெஸ்ட்டுமெண்டுகள்: சர்க்கார், ஸ்டேட் கடன் பத்திரங்கள் ...	178881—2—4
3. தவணை, கரண்ட், சேவிங்ஸ் முதலிய டிபாஸிட்டுகள் ...	1683193—5—3	இதர இனங்கள் ...	165675—7-10
4. சில்லரை இனங்கள் ...	41655—4—6	3. வரவேண்டிய கடன்கள், வசூலிக்கவேண்டிய உண்டியல்கள், அதிகபத்துகள் உள்பட ...	1643604—3—8
		4. சில்லரை இனங்கள் ...	11472—9—1
		5. இருப்பு: ரொக்கமும், இதர பாங்கிகளிலும் ...	145148—10—2
மொத்தம் ...	2206487—2—5	மொத்தம் ...	2206487—2—5

S. மஹாலிங்கய்யர், B.A., B.L.,
மானேஜிங் டைரெக்டர்.

கும்பகோணம்,
10—5—37.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்.

பல விடங்களிலும் கொண்டாட்டம்.

கும்பகோணம்,

ராஜா பாடசாலையில் ஸ்ரீ ஆதிசங்கரருடைய படத்திற்கு 14-5-37 (வெள்ளி) காலை 9-மணிக்கு ருத்ரபூர்வமான ப்ரோக்ஷண அபிஷேகமும், மாலை 4-மணிக்கு திருவையார் ஸம்ஸ்க்ருதகாலேஜ் உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ சிவராமசாஸ்திரிகள் அவர்களால், ஆதி சங்கரருடைய அவதாரம் என்பதைப்பற்றி நன்கு உபன்யஸிக்கப்பட்டு பக்தர்களுக்குப் ப்ரஸாதம் முதலியவைகள் வழங்கி ஸ்ரீ மஹோத்ஸவமானது இனிது நடந்தேறியது. இவ்விஷயத்தில் உபாத்தியாயர்கள் பழைய வித்யார்திகள் முதலியவர்கள் பங்குஎடுத்துக்கொண்டு நடத்தி வைத்தார்கள்.

ஒரு நிருபர்.

ராமச்சந்திரபுரம்.

ஸ்ரீ ஆதி சங்கராசாரியரின் ஜன்மதினமானது சென்ற 14உ வெள்ளிக்கிழமை தினம் இவ்வூர் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் எஸ். சாம்பமூர்த்திசாஸ்திரிகள் வீட்டில் விசேஷமாக கொண்டாடப்பட்டது. காலையில் ஸ்ரீ ஜகத்குருவின் படத்திற்கு ஸஹஸ்ரநாம பூஜையும் உபநிஷத் பாராயணமும் நடைபெற்றது. சாயங்காலம் கானப்பேட்டை பண்டிதர் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரதீக்ஷிதரால் ஸ்ரீ சங்கரருடைய சரித்திரம் சுருக்கமாகவும் தெளிவாகவும் உபன்யஸிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர்.

ஒரு நிருபர்.

பண்ணுருட்டி.

பண்ணுருட்டி அக்கிரஹாரத்தில் வழக்கம்போல் தாரண ஸ்ரீ வைகாசி-மீ 1உக்கு (14—5—1835) சுக்கிரவாரம் வைசாக சுத்த பஞ்சமி புனர்பூசம் நக்ஷத்திரம் கூடிய சுபதினம் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளுடையபூஜையும், அடியில் கண்டபடி வெகு விமரிசையாக நடந்தது. காலையில் மந்த்ரபூர்வமாக விருஷப லெக்னத்தில் கொடத்தில் ஆவாஹனம்செய்து அதன்பிறகு பஜனை கோஷ்டிகளுடனும் பக்க வாத்யங்களுடனும், பஜனையும், அதன் பிறகு தேவதாமூர்த்திகளுக்கும் உபநிஷத் பாராயணங்களுடன் அபிஷேகமும், அதன்பிறகு ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் நிவேதனமும் நடந்தது. அதன்பிறகு கிரமப்படி தீர்த்த பிரஸாதம் வழங்கியும், பிராம்மண ஸந்தர்ப்பணையும் பரிபூர்ணமாய் நடந்தது. அன்று தினம் மாலையில் பிரும்மஸ்ரீ அனந்தநாராயணபாகவதர் அவர்களும், ஸ்ரீ. வ். வே. கிருஷ்ணமாசாரியார் அவர்களும், ஸ்ரீமான் R. சுப்பிரமணிய அய்யர் அவர்களும், குருபக்தி, ஆசார்ய மஹிமை, சங்கரருடைய பிரபாவம் என்பதைப்பற்றியும் வெகு விமரிசையாய் உபன்யஸித்தார்கள். இரவு லலிதாஸஹஸ்ரநாம குங்குமார்ச்சனையும் கிரமப்படி செய்யக்கூடிய நிவேதனங்களுடனும், பிரும்மஸ்ரீ ஸாம்பமூர்த்தி கனபாடிகள் அவர்களைக்கொண்டு வழக்கம்போல் ஷை உத்ஸவம் வெகு விமரிசையாயும் பக்தி சிரத்தையுடனும் பல பிரமுகர்களுடைய திரவிய சகாயத்துடனும் நடந்தது. இக்கலியில் ஒத்துமையுடனும் ஆஸ்திக பக்த சிகாமணிகளைக்கொண்டும் நடந்தது ரொம்பவும் ஸநாதனதர்மத்திற்கு விரோதமில்லாமல், மேன்மேலும் முன்னேற்றம் அடையும் என்பதற்கும் ஐயமில்லை.

ஸ்ரீமடம் சிஷ்யன்.

அரியலூர்.

இந்த வருஷத்திலும் ஆசார்யாளின் ஜயந்தி உத்ஸவம் மேமீ 12உ முதல் ஸங்கல்ப பூர்வமாய் ஆரம்பிக்கப்பட்டு 12, 13 14 தேதிகளில் மாலையிலும் ராத்திரியிலும் வாகூர் பிரம்மஸ்ரீ V. S. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் ஆசார்யமஹிமை முதலிய அநேக விஷயங்கள் உபந்யஸிக்கப்பட்டு ஜயந்தி தினம் பூஜை விநியோகம் முதலியவைகள் நடந்து சாயங்காலம் கிராம பிரதக்ஷிணமும் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இரவில் அத்வைத ஸித்தாந்தப்படிக்கு மோக்ஷதத்வத்தைப்பற்றி உபந்யாஸத்துடன் உத்ஸவம் ஸமாப்தி அடைந்தது. கிராமத்திலுள்ள வைதிகர்கள் நித்தியோறும் செய்துவந்த உபநிஷத் பாராயணமும் மற்ற ஆஸ்திகர்களுடைய சிரத்தையும் மெச்சத்தகுந்தது.

ஒரு நிருபர்.

மேல்மங்கலம்.

பிரதிவருஷம்போல் இவ்வருஷமும் சித்திரைமீ 29உ(11—5—37)முதல் வைகாசிமீ 1உ (14—5—37) வரை நான்கு தினங்களிலும் ஸ்ரீமதாசார்யாளுக்கு காலையிலும் மாலையிலும், பூஜை, ஸஹஸ்ரநாமார்ச்சனாதி வைபவங்களும் மஹந்யாச பூர்வமாக அபிஷேகமும், வேதபாராயணம், கீதாதோபநிஷத், ப்ரம்மஸூத்ராதி பாஷ்ய பாராயணங்களும், பிராம்மண சந்தர்ப்பணையும், இரவில் மதுரை பிரம்மஸ்ரீ M.N. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் பகவத்பாதாளின் திவ்யசரித்திர உபன்யாசமும், விமரிசையாக நடைபெற்றது. வைகாசிமீ 1உ ஜயந்திதினம் காலை விசேஷபூஜை ஆராதனைகளுடன், மாலை 5மணிக்கு ஸ்ரீமதாசார்யாள் படத்தை புஷ்பசப்பரத்தில் அலங்கரிக்கப்பட்டு உபநிஷத்கோஷத்துடன் நகர் வலம் வந்து, உபன்யாசத்துடனும், பானக பூஜையுடனும் உத்ஸவம்பூர்ணமானது. கிராம மஹாஜனங்கள் நான்குதினங்களிலும் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டனர்.

சிவராம கனபாடிகள்.

பொள்ளாச்சி.

ஸ்ரீ ஜகத்குரு பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஆதி ஸ்ரீ சங்கரபகவத் பாதாளுடைய ஜயந்தி தினத்தை சென்ற 1928-ஞ் முதல் நடைபெற்றுவருவதுபோல் இவ்வருஷமும் (வைகாசி-மீ 1உ வெள்ளிக்கிழமை) நடைபெற்றது. ஸ்ரீ ஆதிசங்கரர் படத்தையும் ஸ்ரீ சாரதாம்பிகை படத்தையும் வைத்து காலை 9 மணி முதல் 1 மணி வரையில் மஹந்யாஸ பூர்வகமாய் ஏகாதசருத்ராபிஷேகமும், உபநிஷத்பாராயணமும் நடைபெற்றபின் ஆசார்யாளுடைய அஷ்டோத்தர அர்ச்சனையும் தீபாராதனையும் நடைபெற்றது. வந்திருந்த ஆஸ்திக மஹாஜனங்களுக்கு தீர்த்தப்பிரஸாதமும் பஞ்சாமிர்தமும் விநியோகம் செய்யப்பட்டது. மாலையில் 7 மணி முதல் 8 மணி வரையில் ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமார்ச்சனையும் ஆசார்ய அஷ்டோத்திரமும் ருத்ரத்ரிசதியும் அர்ச்சனை செய்யப்பட்டு தீபாராதனையானவுடன் வந்திருந்த ஆஸ்திக மஹாஜனங்களுக்கு குங்குமம், புஷ்பம், சந்தனம், தாம்பூலம் முதலியன வழங்கப்பட்டது. ஷை ஜயந்தியானது பொள்ளாச்சி புது அக்கிரகாரத்தில் 23 நெ. உள்ள "கோகுலம்" என்று வழங்கும் அண்ணாசாஸ்திரியார் கிரகத்தில் நடைபெற்றது.

கி. அண்ணாசாஸ்திரி.

திப்பிராஜபுரம்.

கும்பகோணத்திற்கு அடுத்த திப்பிராஜபுரம் த்ருபுரஸுந்தரம் என்னும் க்ரஹத்தில் மந்த்ரமூர்த்தி க்ருஷ்ணசாஸ்திரிகளால் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவமானது வைசாக சுக்ல ப்ரதமை முதல் ஷை பஞ்சமி வரையில் ப்ரதிதினமும் காலை கர்பூரஹாராதி ஆனந்தம் புஷ்பாஞ்சலி செய்து தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் சொல்லி நமஸ்காரம் செய்து தச 10 சாந்திகள் சொல்லி பாஷ்யபடனமும், உபநிஷத் பாராயணமும், பிராம்மணாளைக்கொண்டு செய்வித்து த்ரிபுரஸுந்தரி சகலபூஜை லலிதா ஸஹஸ்ரநாமம் த்ருசதிநாம ஆசார்யாஷ்டோத்தர அர்ச்சனைகளுடன் பூஜை பூர்த்தி செய்து பிராமண ஸந்தர்ப்பணம் செய்து 4-மணி முதல் 6-மணிவரையிலும் ராத்திரி பூஜையும் பிராம்மண ஸந்தர்ப்பணமும் ஆனவுடன் 8-மணி முதல் 11-மணி வரையில் முதல் நாள் உத்தரசம்பூர்த்தி மந்த்ரார்த்தவாதிய வலங்கிமான் ஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகளால் ஜகத்ருபமான ஆத்மவிகாச தீபதியும் ராமாயண பாதுகாபட்டாபிஷேக உபந்யாஸமும், வேதபுரம் திருப்புராயபுரம் ப்ரும்மஸ்ரீ ஸப்பயிய சாஸ்திரிகளால் பூர்ண ராமாயணம் சந்நிபூர்வகாலாபனத்துடன் உபந்யாஸங்களும். 3-வது நாள் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராமதீக்ஷிதரால் ஆசார்ய அவதாராதி சரித்திர உபந்யாஸமும், 4-வது நாள் திருவாரூர் 13வயதுள்ள மாஸ்டர் துரையின் பாட்டுக் கச்சேரியும், ராத்திரி ஸ்வஸ்திவாசன மேள வாத்யத்துடன் பாமாசார்ய ப்ரதிமையும் த்ரிபுரசுந்தரியையும் விமானத்தில் அலங்கரித்து நகர்கோலமும் நடந்து உத்ஸவம் பக்திசிரத்தையுடன் ரொம்பவும் விமரிசையாய் நடத்தப்பட்டதும் பக்க வாத்யத்துடன் ஷை பாட்டுக் கச்சேரியும் மிகவும் போற்றத்தக்கதாயிருந்தது.

நாராயணசர்மா.

குழந்தை
சுடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்கான செலக்கியும், தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு பாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. தனி.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்குவெளிவீதி, மதுரை

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூக பஞ்சசதீ'

(6—5—37 தொடர்ச்சி.)

2. இந்த ஆறு அத்வாக்களில் வர்ண, பத, மந்த்ரமென்பவைகள் வாக்கைச் சேர்ந்தவைகளென்றும் கலா, தத்வ, புவனமென்றவைகள் அர்த்தத்தைச் சேர்ந்தவைகளென்றும் அந்த வாக்கும் அர்த்தமும் முறையே ப்ரகாச, விமர்சாத்மகமானவையென்றும் அவற்றிலிருந்து இந்த ஜகத்தானது ஏற்படுகிறதென்றும் சொல்லப்படும்.

3. அம்பிகை இந்த ஆறு அத்வாக்களுக்கும் அப்பாலிருப்பதை 'ஷடத்வாதீதரூபிணீ' என்று 'ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம'த்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

5. அல்லது, காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யங்களென்ற ஷட்ரிபுக்களை 'ஷடத்வா' என்ற பதத்தினால் குறிப்பிட்டதாகவும் சொல்லலாம். அவை காட்டிலுள்ள மரங்கள் மாதிரி மேலும்மேல் உண்டாவதால் அவற்றை ஒரு அரண்யத்திற்கு ஸமானமாக வர்ணிப்பது வழக்கம். அம்பிகையின் அனுக்ரஹம் ஏற்பட்டால் அவை நசித்துவிடுவதால் 'தந்த ஷடத்வாரண்யம்' என்று சொல்லப்பட்டது

3. இதேமாதிரி 'ஸகல ஜனனீஸ்தவ'த்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'ஷடத்வாரண்யானீம் ப்ரளய ரவி கோடி ப்ரதிருசா
ருசா பஸ்மீக்ருத்ய ஸ்வபத கமல ப்ரஹ்வ சிரஸாம் |
விதன்வான: சைவம் கிமபி வபுரிந்தீவருசி:
ருசாப்யாம் ஆனம்ரஸ்தவ புருஷகாரோ விஜயதே ||'

67. அதிகாஞ்சி வர்தமானாம்
அதுலாம் கரவாணி பாரணம் அக்ஷ்ணோ: |
ஆனந்த பாக பேதாம்
அருணிம பரிணம கர்வபல்லவிதாம் ||

அதிகாஞ்சி - காஞ்சிபுரியில், வர்த்தமானாம் - விருத்தியடைகிறதாயும், அதுலாம் - தனக்கு ஸமானமில்லாததாயும், ஆனந்த பாக பேதாம் - ஆனந்தம் நிறைந்த ரூபத்தையுடையதாயும், அருணிம பரிணம கர்வ பல்லவிதாம் - அதிகமான சிகப்பானது வளர்ந்தோங்கிய துளிர்போலிருப்பதாயுமுள்ள ஒரு மூர்த்தியை, அக்ஷ்ணோ:பாரணம் கரவாணி - என் கண்ணால் பார்க்கிறேன்.

68. பாண ஸ்ருணி பாச கார்முக
பாணிம் அமும் கமபி காமபீடகதம் |
ஏணதர கோண சூடம்
சோணிம பரிபாக பேதம் ஆகலயே ||

பாண ஸ்ருணி பாச கார்முக - (புஷ்ப) பாணம், அங்குசம், பாசம், (இக்ஷு) கோதண்டம் இவற்றையுடைய, பாணிம் - கைகளையுடையதும், காமபீடகதம் - காமகோடி பீடத்திலிருப்பதும், ஏணதர கோண சூடம் - சந்திரனுடைய கலையை சிரஸில் தரித்ததும், சோணிம பரிபாக பேதம் - உயர்ந்ததான சிகப்பு நிறத்தோடு கூடியதானதுமான, அமும் - இந்த, கமபி - ஒரு மூர்த்தியை, ஆகலயே - த்யானிக்கிறேன்.

1. ஏணமென்றால் மான் என்று அர்த்தம். சந்த்ரமண்டலத்திலிருக்கும் களங்கத்தை மானென்று வர்ணிப்பது வழக்கமாகையால் சந்த்ரனுக்கு ஏணதரனென்று பெயர் சொல்லப்படும்.

69. கிம் வா பலதி மமான்யை:
பிம்பாதர சும்பி மந்தஹாஸமுகீ |
ஸம்பாதகரீ தமஸாம்
அம்பா ஜாகர்த்தி மனஸி காமாக்ஷீ ||

பிம்பாதர சும்பி - கோவைக்கனிபோன்ற அதரத்தைத்தொட்டிய, மந்தஹாஸ முகீ - புன்சிரிப்போடு கூடிய முகத்தையுடையவளும், தமஸாம் ஸம்பாதகரீ - அக்ஞானத்தை அறவே போக்கடிப்பவளுமான, அம்பா காமாக்ஷீ - தாயாரான காமாக்ஷியானவள், மனஸி - என்னுடைய மனதில், ஜாகர்த்தி - விளங்கிக்கொண்டிருக்கையில், அன்யை: - பிறரால், மம - எனக்கு, கிம் வா பலதி - என்ன காரியம் ஆகவேண்டியிருக்கிறது!

70. மஞ்சே ஸதாசிவமயே
பரசிவ மய லலித பௌஷ்ப பர்யங்கே |
அதிசக்ரமத்யம் ஆஸ்தே
காமாக்ஷீ நாம கிமபி மம பாக்யம் ||

காமாக்ஷீ நாம - காமாக்ஷீ என்ற பெயரோடுகூடிய, கிமபி - ஏதோ ஒன்று, மம பாக்யம் - என்னுடைய பாக்யமானது, அதி சக்ரமத்யம் - ஸ்ரீ சக்ரத்தின் மத்தியில், ஸதாசிவமயே மஞ்சே - ஸதாசிவனாகிற மஞ்சத்தில் (கட்டிலில்), பரசிவமய - பரசிவனாகிய, லலித - அழகான, பௌஷ்ப பர்யங்கே - புஷ்பமெத்தையின்மீது, ஆஸ்தே - விளங்கிக்கொண்டிருக்கிறது.

1. ஸ்ரீ சக்ரத்தின் நடுநாயகமாக விளங்கும் ஸர்வானந்தமய சக்ரமென்ற பிந்துவை இங்கு 'அதிசக்ரமத்யம்' என்பதால் சொல்லப்பட்டது. அதில் பஞ்சப்ரம்ஹாகாரமான மஞ்சத்தில் காமேச்வரரும் அவருடைய வாமாங்கத்தில் ஸ்ரீலலிதாம்பிகையும் இருப்பதாகச்சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸதனஸ்யோபரி தாஸாம் ஸர்வானந்தமய நாமகே பிந்தௌ |
பஞ்சப்ரம்ஹாகாரம் மஞ்சம் ப்ரணமாமி மணிகணாகீர்ணம் ||.'

இந்த மஞ்சத்திற்கு ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன் இந்நால்வரும் கால்களாயிருப்பதாகச் சொல்லப்படும்.

'பர்யங்கஸ்ய பஜாம: பாதான் பிம்பாம்புதேந்துஹேமருச: |
அஜஹரிருத்ரேசமயான் அனலாஸுர மாருதேசகோண
ஸ்தான் ||'

இந்த மஞ்சத்திற்கு ஸதாசிவன் மேல்தட்டாயிருப்பதாகச் சொல்லப்படும்.

'பலகம் ஸதாசிவமயம் ப்ரணௌமி ஸிந்தூர ரேணு கிரணம் |'

மேலேசொல்லிய ஐவரும் தங்களுடைய சக்திகளோடு இல்லாதிருக்கும்போது ப்ரேதங்களாக இருக்கிறபடியால் அவர்களாலான கட்டிலானது 'பஞ்சப்ரேத மஞ்சம்' என்று சொல்லப்படும். (இதைப்பற்றி அதிகமாகத் தெரியவேண்டுமானல் ஞானார்ணவம் முதலியவற்றைப் பார்க்கவும்)

2. இந்த மஞ்சத்தைப் பொதுவாக 'மஞ்சே ஸதாசிவமயே' என்று இங்கு சொல்லியதுபோல் 'சிவாகாரே மஞ்சே' என்று 'ஸௌந்தர்யலஹரி'யிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

3. இப்பேர்ப்பட்ட மஞ்சத்தின்மீது காமேச்வரருடைய வாமாங்கத்தில அம்பிகை வீற்றிருப்பதால் அவ்விதமான அவருடைய (அழகியதும் புஷ்பம்போல் ம்ருதுவானதுமான) அங்கத்தை 'பரசிவ மய லலித பௌஷ்ப பர்யங்கே' என்று இங்கு சொல்லப்பட்டது. இதேமாதிரி ஸ்ரீமதாசார்யாளும்

'சிவாகாரே மஞ்சே பரமசிவ பர்யங்க நிலயாம்'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

71. லக்ஷ்யோऽஸ்மி காமபீட—
லாஸிகயா கனக்ருபாம்பு ராசிகயா |
ச்ருதியுவதி குந்தளீமணி-
மாலிகயா துஹினசைல பாலிகயா ||

காமபீட லாஸிகயா - காமபீடத்தில் நர்த்தனம் செய்கிறவளும், கன க்ருபாம்பு ராசிகயா - கனீபூதமான கருணாரஸத்தின் ரூபத்தையுடையவளும், ச்ருதியுவதி - வேதங்களாகிற யுவதிகளின், குந்தளீ மணிமாலிகயா - கேசங்களில் அணிந்திருக்கும் ரத்னங்களின் மாலைபோன்றவளும், துஹின சைல பாலிகயா - ஹிமவானுடைய குமாரியாயுமிருக்கிற ஸ்ரீ காமாக்ஷியால், லக்ஷ்யோऽஸ்மி - பார்க்க (காப்பாற்ற)ப்படுகிறேன்.

1. லாஸிகா என்பது நர்த்தனம் செய்யும் ஸ்த்ரீக்குப் பெயர்.

2. அம்பிகையானவள் ஸகலவேதங்களுக்கும் பரமதாத்பர்யமாயிருப்பதால், வேதங்களை ஸ்த்ரீகளாகவும் அம்பிகையை அவர்களுடைய சிரஸின் கேசங்களிலணிந்திருக்கும் ரத்னங்களின் கோர்வையாகவும் இங்கு வர்ணிக்கப்பட்டது. அம்பிகையை அந்த ஸ்திரீகள் இடைவிடாமல் நமஸ்கரிப்பதால் அவளுடைய பாதங்களின் (செம்பஞ்சுக்குழம்பு கலந்ததால் சிகப்பாயிருக்கும்) தூளிகள் அவர்களுடைய வகுட்டிலணியப்பட்ட ஸிந்தூரமாயிருப்பதாக

'ச்ருதி ஸீமந்த ஸிந்தூரீ க்ருத பாதாப்ஜ தூளிகா'

என்ற 'ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாம'த்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

72. லீயே புரஹரஜாயே
மாயே தவ தருண பல்லவச்சாயே |
சரணே சந்த்ராபரணே
காஞ்சீசரணே நதார்த்திஸம்ஹரணே ||

புரஹர ஜாயே - முப்புரங்களையும் அழித்தவரான பரமசிவனுடைய பத்னியே, மாயே - மஹாமாயாரூபிணியே, தருணபல்லவச்சாயே - இளந்துளிர் போன்ற (சிவந்த) காந்தியுடையவளே, சந்த்ராபரணே - சந்த்ரனை (சிரஸின்) ஆபரணமாக உடையவளே, காஞ்சீசரணே - காஞ்சீபுரியை வாஸஸ்தானமாக உடையவளே, நதார்த்திஸம்ஹரணே - நமஸ்கரிக்கின்றவர்களுடைய கஷ்டத்தைப்போக்குகிறவளே, தவ சரணே - உன்னுடைய பாதத்தில், லீயே - லயித்திருக்கிறேன்.

1. இங்கு வந்த பதங்களில் 'தருணபல்லவச்சாயே', 'காஞ்சீசரணே', 'நதார்த்திஸம்ஹரணே' என்றவைகள் அம்பாளுடைய சரணத்தைப்பற்றிச் சொன்னதாகவும் சொல்லலாம். இதர தேவதைகள் போலல்லாமல் அம்பாள் தன்னுடைய சரணங்களாலேயே பக்தர்களுடைய பயத்தைப்போக்கி வேண்டிய அளவுக்கு மிஞ்சி அனுக்ரஹம் செய்யும் மஹிமை வாய்ந்தவளென்பதாக ஸ்ரீமதாசார்யாள் 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

'த்வதன்ய: பாணிப்யாம் அபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடித வராऽபீத்யபிநயா |
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்ச்சா ஸமதிகம்
சரண்யே லோகானாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ ||'

உ

தஞ்சை ஜில்லா பிராஹ்மண மஹாஸபா.

ஒன்பதாவது வருஷாந்திரக் கூட்டம்

17—5—1937.

மதுரை அட்வகேட் மகா-ா-ஸ்ரீ ராவ்சாகிப் N. நடேசய்யர் அவர்களின் அக்ராஸனப் ப்ரஸங்கம்.

ब्रह्मावेदपतिः शिवः पशुपतिः सूर्यश्च चक्षुष्पतिः
शक्रोदेवपतिर्यमःपितृपतिस्स्कन्दश्च सेनापतिः ।
यक्षोवित्तपतिः हरिश्चजगतां वायुः पतिः प्राणिनां
इत्येते पतयः समेत्यसततं कुर्वन्तु नामंगलं ॥

வேதபதியாகிய பிர்மாவும், பசுபதியாகிய சிவனும், சக்ஷுஷ்பதியாகிய சூரியனும், தேவபதியாகிய இந்திரனும், பித்ருபதியாகிய யமனும், சேனாபதியாகிய ஸ்கந்தனும், தனபதியாகிய குபேரனும், ஜகத்பதியாகிய விஷ்ணுவும், பிராணிகளுக்குப் பதியாகிய வாயுவும், இந்த பதிகள் யாவரும் கருணையுடன் ஒன்று சேர்ந்து நமக்கு சாச்வதமான மங்களத்தை அளிக்கட்டும்!

2. இவ்வளவு தேவர்களும் சேர்ந்து நம்மை ரக்ஷிக்கட்டும் என்று பிரார்த்தனைக்கு இப்பொழுது என்ன அவசியம்? இதைச் சற்று விசாரிப்போம். மனுஷ்ய ஜன்மாவை அடைந்த ஜீவகோடிகளுக்குப் பிறப்பிலேயே தேகசக்தி, புத்திசக்தி, ஆத்மசக்தி இவைகள் ஏற்படுகின்றன. இதர பிராணிகளுக்கு தேகசக்தி மட்டும் உண்டு. பின் சொன்ன புத்திசக்தியும் ஆத்மசக்தியும் கிடையாது. மனுஷ்ய ஸாமான்யத்துக்குள்ளும் மேற்சொன்ன மூன்று சக்திகளும் ஸமமாகயிருக்கிறதல்ல. இந்த பாரத வர்ஷத்தை எடுத்துக் கொள்வோம். இங்கு பிராம்மண, க்ஷத்ரிய, வைசிய, சூத்ரர்கள் என்ற நான்கு வர்ணங்கள் இருக்கின்றன. பொதுவாக பிராம்மணர்களுக்கு தேகசக்தி சற்று குறைந்தும் புத்திசக்தியும், ஆத்மசக்தியும் கொஞ்சம் வலுத்தும், பிராம்மணேதரர்களுக்கு தேகசக்தி வலுத்தும், புத்திசக்தி ஆத்மசக்தி சற்றுகுறைந்தும் சிலகாலத்திற்கு முன்வரையில் இருந்துவந்தன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இவ்வாறு புத்திசக்தியிலும், ஆத்ம சக்தியிலும், சிறந்தவர்களாயும் அர்த்தகாமங்களில் விசேஷப்பற்று இல்லாதவர்களாயும் இரண்டு புருஷார்த்தங்களிலும் பெரும்பாலும் ஈடுபட்டவர்களாயும் கூடியமட்டில் விஹிதகர்மாக்களை அனுஷ்டித்தும், நிஷித்த கர்மாக்களைத் தள்ளியும், ஞானவான்களாயும், ஸதாசார ஸம்பன்னர்களாயும், மார்க்கதரிசிகளாயும், வேதசாஸ்திர அர்த்தங்களை மற்றவர்களுக்கு உபதேசம் செய்வதோடு நிற்காமல் தாங்களே மழை, காற்று, வெய்யில், குளிர் முதலானவைகளை கொஞ்சமேனும் லக்ஷ்யம் செய்யாமல் அனுஷ்டித்துக் காட்டியும், பூஜாபாத்ரர்களாகவும் இருந்துவந்தார்கள். அதைப்பற்றியே எவ்வளவோ ஆயிர வருஷகாலமாய் பிராம்மணர்களை மற்றவர்கள் கௌரவமாயும், மரியாதையாயும் நடத்திவந்ததுமன்றி அவர்களுடைய ஜீவியத்தின் க்ஷேமத்திற்கு போதுமான அளவு உபகரித்து வந்தார்கள். இவ்விதம் நாளைக்காக என்று எதையும் சேர்த்து வைத்துக்கொள்ள அவசியமும், கவலையும் இல்லாமல் தங்கள் புத்திசக்தியையும், ஆத்மசக்தியையும் இதர விஷயங்களில் சிதறவிடாமல் குவித்து வைத்துக் கொண்டு அன்னிய நாட்டார்கள் மனதார பெருமைப்படுத்தத் தக்கதாயும் அவர்களால் மனதினால்கூட கருதப்படக் கூடாததுமான அவ்வளவு ஆச்சர்யகரமான நூல்களை நாற்றுக்கணக்காக இயற்றி பொது ஜனங்கள் யாவரும் ஆனந்தமடைந்து மேன்மேலும் அவர்களுக்கு மங்களம் உண்டாகும்படிக்கும் வழி இறைத்து வந்திருந்தார்கள். அனேகமாயும் அபௌருஷேயமாயும் பிரகாசித்துக்கொண்டிருக்கிற வேதங்கள் நிற்க, அவர்கள் செய்த தனுர்வேதம், ஆயுர்வேதம், காந்தர்வ வேதம், வியாகரணம், தர்க்கம், மீமாம்ஸை ஜோதிஷம், ஸ்மிருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள், காவ்யங்கள், நாடகங்கள், கோசங்கள், தர்மசாஸ்த்ரங்கள், அர்த்த சாஸ்த்ரங்கள், இவைகள் யாவும் நிகரற்றவைகளாக ஸமஸ்தர்களான அயல் நாட்டார்களாலேயே இன்னமும் கொண்டாடப்படுகின்றன. ஆனால் இப்பொழுது சில காலமாக இவைகள்யாவும் முற்றிலும் மாறிவிட்டன. இன்றோ பிராம்மணர்கள் மதிக்கப்படவில்லை. இகழ்ச்சியாகவும், இகழ்ச்சியாகவும் பேசப்படுகிறார்கள். பிராம்மணர் என்ற பதமே ஒரு பரிஹாஸச் சொல்லாக ரூபம் மாறிவிடும்போல் இருக்கிறது. இதற்குக் காரணம் பெரும்பாலும் பிராம்மணர்களே.

3. தங்களுடைய ஸ்வதர்மத்துக்கும், ஆச்ரமத்திற்கும் உசிதமான தர்மங்களையும், கடமைகளையும் முற்றிலும் மறந்து, இதரர்களுடைய தர்மங்களையும், தொழில்களையும், மிதமிஞ்சி கைப்பற்றி பொருள்களை மேன்மேலும் சேர்த்து வைக்கவும், விடியற்காலம் முதல் இரவு 10-நாழிகை வரையில் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிற சில ஸாதகமான ஆத்மிக கர்மாக்களை அடியோடு நழுவவிட்டும், ஸத்வபுத்தியை குறைத்து தாமஸ புத்தியை விருத்திசெய்யக்கூடிய தாமஸ ஆகார, தாமஸபான, ஸல்லாபம் முதலான நிஷித்த காரியங்களில் மனதைச் செலுத்தியும், சரீர சக்தியையும் இழந்து வருவதுமன்றி புத்திசக்தியையும், ஆத்மசக்தியையும், மேன்மேலும் பரிகாரித்துக்கொண்டு வருகிறார்கள். சாஸ்திரவிஹிதமாயும் சிஷ்டாசார ஸம்மதமாயும் உள்ள நடை, உடை, பாவனைகளைத் தள்ளிவிட்டு விபரீதமான, ஒவ்வாதவைகளை கைக்கொண்டு உருக்குலைந்து வருகிறார்கள். பிரம்ம தேஜஸும், பிரம்மவர்ச்சஸும், பிராம்மணர்களை விட்டு எங்கேயோ போய் ஓடி ஒளித்துக்கொண்டு விட்டன. இந்த நிலைமையில் முன் பிராம்மணர்கள்பேரில் இதரர்கள் வைத்திருந்த பக்தியையும், சிரத்தையையும், மரியாதையையும் பிராம்மணர்கள் எதிர்பார்க்க என்ன ந்யாயம் இருக்கிறது. முன் இருந்த விரதம், அனுஷ்டான சக்தி இருக்கிறதா? பாண்டித்யம் இருக்கிறதா? அநுஷ்டானம் இருக்கிறதா? ஆத்மகுணங்கள் இருக்கின்றனவா? ஸதாசாரம் இருக்கிறதா? மந்த்ர சக்தி, தபஸ் சக்தி, யோக சக்தி ஏதேனும் இருக்கின்றனவா? இவைகள் யாவும் பிராம்மணர்களைவிட்டு அஸ்தமித்தால் ஆனபிறகு மரியாதை காரணம் பற்றி அவர்களுக்குக் கௌரவம் கிடைக்கும். ஒரு பதில் மட்டும் அவர்கள் சொல்லிக்கொள்ளலாம். அது பின் வருமாறு:—

4. முற்காலத்தில் இதர வர்ணத்தார்கள் பிராம்மணர்கள் தங்களுடைய தர்மங்களை கவலையின்றி ஒழுங்காக நடத்துமாறு சௌகர்யங்கள் செய்துவைத்ததை அவர்கள் நிறுத்திவிட்டபடி சேர்ந்து விட்டபடியாலும், அன்னிய ராஜாக்கள் இப்பாரத பூமியை தங்கள் ஸ்வாதீனம் ஆக்கிக்கொண்டு பிராம்மண தர்மங்களை நிறைவேற்ற வொட்டாமல் பலவாறாக நிர்பந்தித்துவந்திருந்தும் அவர்கள் தங்களுடைய உதாஸீனத்தினாலும் ராஜ்ஜியாளர்களையும், நீசர்களையும் செய்யும்படியான ஆபத்துக்களைப் பரித்து ஆரம்பத்தில் ஆபத்தர்மமாக மட்டும் கைக்கொண்ட தர்மங்களை ஸ்வதர்மமாகவே பாவிக்கும்படியாக சேர்ந்து இப்பொழுதிய நிலைமைக்கு ஆளாகி விட்டார்களேயொழிய வேறல்ல. இவ்விதம் அலைந்து கொண்டிருந்த பாதர்மங்களை பதறித் தள்ளிவிட்டு முன்போலவே தங்களுடைய வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டிக்க பிராம்மணர்கள் இப்பவும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அபேக்ஷிப்பது ஒன்று மட்டுமே. இதர வர்ணத்தார்களும், ராஜாங்கத்தார்களும் முன்போல் அவர்களுக்கு ஊண், உடைகளுக்கு சௌகர்யங்கள் செய்துகொடுத்து ஆதரிக்க வேண்டியது மட்டுமே. வேறு அவர்களுக்கு வீடு, வாசல்கள், க்ஷேத்ரங்கள், வாஹனங்கள், ஆபரணங்கள், யாதொன்றும் தேவையில்லை. பிராம்மணர்களுக்கு ஜீவனோபாயமே அவர்களுக்குப் போதுமான தனம். கர்ம ஞானங்களான தபஸ்வர்களாய் லோகங்களுடைய க்ஷேமத்தையும் சாந்தியையும் அவர்கள் பிரார்த்தித்துக்கொண்டிருக்கத் தயாராக இருக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யாவிட்டால் பிராம்மணர்களுக்கு வேறு கதி யாது? வசிஷ்ட, வாமதேவாதிகளைப் போல் பிராம்மணர்கள் இருக்க வேண்டியது அவசியமே. ஆனால் ராஜாக்கள் ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியைப் போலவும் தர்மபுத்திரனைப் போலவும், வைசிய சூத்ரர்கள் நந்தகோப குமாரர் போலவும், விதுரர் போலவும் இருக்கவேண்டியது அவசியமல்லவா? இதை அவர்கள் கவனிப்பார்களாக.

5. முன்போல் மேற்சொல்லிய நிலைமையை பிராம்மணர்களும் பிராம்மணேதரர்களும் ஸ்தாபித்துக்கொள்ளுகிறவரையில், தற்கால நெருக்கடியில் பிராம்மணர்கள் எவ்வாறு நடக்கவேண்டியது என்பதை பரியாலோசனை செய்யவேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது. முதலில் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. இதுவரையில் பிராம்மணர்கள் தங்களுக்கென்று தனியான சபைகளை ஏற்படுத்திக்கொண்டது கிடையாது. ஏனெனில் பிராம்மணேதரர்களுடைய க்ஷேமத்தையும் முன்னேற்றமுமே தங்களுடைய க்ஷேமத்திற்கு போதுமானதாகக் கருதியிருந்தார்கள். காங்கிரஸ் மஹாசபையையே உதாரணமாக வைத்துக்கொள்ளலாம். சென்ற 52 வருஷத்திய காங்கிரஸ் ரிகார்டுகளை பரிசீலனை செய்தால் வெளியாகும். காங்கிரஸை ஸ்தாபித்து அதன் கொள்கைகளை நாளுக்குநாள் பலப்படுத்தி அதை ஜனங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாகச்செய்து இப்பொழுது அது வகித்திருக்கிற உன்னதஸ்திதிக்கு கொண்டுவர, மனதாரப்பாடுபட்டு, உடல் பொருள், ஆவி அனைத்தும் தத்தம் செய்தவர்கள் பிராம்மணர்களே என்பது நன்கு விளங்கும். ராஜ்ய விஷயத்தில் மத விஷயங்களையும் ஸமூக விஷயங்களையும் புகவிடாமல் சென்ற 17 வருஷங்களுக்கு முன்வரையில் தவிர்த்தவர்களாக இருந்தார்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஸம்ரக்ஷித்துவந்தார்கள். அதைப்பற்றியே தங்களுக்கு என்று தனிஸ்தாபனங்களை பிராம்மணர்கள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. (தொடரும்.)

ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்.

மாம்பலம்.

சென்னை மாம்பலம் ஸத்வித்யாப்ரகாசினீ ஸபைத்தலைவர் ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகளவர்களால் சென்ற ஆண்டுகளில் போலவே இவ்வாண்டிலும் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம் நடத்தப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு ஷை உத்ஸவமானது 14—5—37முதல் 22—5—37 வரை நடக்க ஏற்பாடாகி இருக்கிறது.

அதில் 14—5—37 ஆசாரிய அவதாரதினமாகிய வெள்ளிக்கிழமையன்று ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி சாஸ்திரிகளால் புதிதாக அமைக்கப்பட்ட 'ப்ரம்ஹவித்யா நிலயம்' என்ற கட்டிடத்தில் காலையில் வேதம் உபநிஷத் பாஷ்யம் இவற்றின் பாராயணத்துடன் ஆசாரியபூஜையும் நூறுபேர்களுக்கதிகமாக ப்ராம்ஹண ஸந்தர்ப்பணமும் செய்யப்பட்டன. அத்துடன் பூஜாவஸானத்தில் சாஸ்திரிகளால் ஆசாரியோபதேசமுறை என்ற விஷயம் பற்றி கேட்போர் மனம் கனியுமாறு உபன்னியஸித்து தமக்கு அவ்விஷயத்திலுள்ள பற்றை வெளியிட்டனர். அன்றுமாலை, காஞ்சி காமகோடி பீடம் ஆஸ்தான வித்வான் கவிரத்னம் ப்ரம்ஹஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் ஆசாரிய சரித்திர வைபவச்சுருக்கம் என்ற விஷயம் பற்றிச் செய்த சொற்பொழிவானது கேட்போரின் மனத்தை ஆசாரிய சரணங்களிலீடுபடும்படி செய்துவிட்டது. அத்துடன் ப்ரம்ஹஸ்ரீ சாஸ்திரிகளால் தெள்ளிய நடையில் தமிழில் எழுதப்பட்டு, மாம்பலம் ஸத்வித்யாப்ரகாசினீ ஸபையாரால் அச்சியற்று வெளியிடப்பட்ட 'சங்கரகுருவைபவச் சுருக்கம்' என்ற புஸ்தகமானது அங்கு விஜயஞ்செய்திருந்த ஆசார்ய பக்தர் யாவர்க்கும் இலவசமாய் வழங்கப்பட்டது. அப்புஸ்தகத்திலுள்ள விஷயங்களை சீமான் சீமாட்டிகளும் படித்துணர்ந்து சாஸ்திரிகளவர்களை மனமாறப்புகழ்ந்தனர். 15—5—37 சனிக்கிழமையன்று ஸபாத்தலைவர் ப்ரம்ஹஸ்ரீ கடலங்குடி நடேசசாஸ்திரிகள் 'ஸந்தியாநிகர்மானுஷ்டானமும் அதன் பயனும்' என்ற விஷயம்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். அச்சொற்பொழிவைச் செவியுற்ற அன்பர் யாவரும் பரவசப்பட்டு அதேவிஷயம்பற்றித் தொடர்ச்சியாக சுமார் இருபது உபன்னியாஸங்கள் செய்ய வேண்டுமென சாஸ்திரிகளை ப்ரார்த்திக்க அவர்களும் ஜயந்தி உத்ஸவம் முடிந்ததும் செய்வதாக வாக்களித்தனர். 16—5—37 ஞாயிறன்று மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் மீமாம்ஸாப்ரபஸர் ப்ரம்ஹஸ்ரீ பாலசுப்ரமணிய சாஸ்திரிகளவர்கள் 'முக்திஸோபானம்'என்ற விஷயம்பற்றி சாந்தோக்யோபநிஷத்திலும் ப்ரம்ஹஸூத்திர சங்கரபாஷ்யத்திலும் சொல்லிய முறையைத்தழுவி செய்த உபன்யாசமானது கற்றவர் மற்றவர் யாவரையும் மிக்க மகிழ்வித்ததுடன் யாவருள்ளத்திலும் ஆசாரிய பக்தியையும் சாஸ்திர விசுவாஸத்தையும் நன்கு பதியும்படி செய்துவிட்டது என்பதில் யாதும் தடையில்லை. மேலும் 17—5—37 முதல் 22—5—37 வரை உத்ஸவமானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ப்ரதிதினமும் பண்டித ரத்னங்களின் உபன்யாஸங்களும் நடைபெறவிருக்கின்றன. முடிவு தினமான 23—5—37 ஞாயிறன்று அத்வைதபண்டித ஸபையொன்று வழக்கம்போல நடத்தவும் ஏற்பாடு நடந்து வருகிறது.

உண்மையுரைப்போன், சங்கரபக்தன்.

திருவானைக்காவல்.

திருச்சிஜில்லா திருவானைக்காவல் வடக்கு வீதியில் விளங்காநிற்கும், கும்பகோண நிவாஸிகளான ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடாதிபதிகள் ஸ்ரீஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் மடத்தில் ஈசுவர-ஞு சித்திரை-மீ 29உ (11-5-37) செவ்வாய்க்கிழமை முதல் வழக்கம்போல் ஸ்ரீகுரு சங்கரஜயந்தி மஹோத்ஸவம் நடைபெற்றது. ப்ரதிதினம் காலையில் 7மணி முதல் ப்ரஸ்தானத்ரய பாஷ்யம் முதலிய பாராயணங்களும், மஹான்யாஸபூர்வமாக அபிஷேகாதி பூஜைகளும், இரவு 7மணி முதல் ஸஹஸ்ரநாமார்ச்சனங்களும் விசேஷ தீபாராதனங்களும் உபன்யாஸங்களும் கதைகளும் நடைபெற்றன. செவ்வாய்க்கிழமை பிரும்மஸ்ரீ வி. என். சுப்பிரமணியசாஸ்திரிகள் 'தாசாரம்' என்னும் விஷயத்தையும், புதன் கிழமை வித்யாஸ்தானம் தலைமை உபாத்தியாயர் வேதாந்தநிலகம் போலகம் பிரும்மஸ்ரீ ஸ்ரீராமசாஸ்திரிகள் அவர்கள் 'ஆசார்யபக்தி' என்னும் விஷயத்தையும், சுருதி ஸ்மிருதி முதலிய பிரமாணங்களுடன் கேட்போர் மனம் பூரிக்கும்படி தெளிவானநடையில் உபன்யஸித்தார்கள். வியாழக்கிழமை சிறுகமணி ஸ்ரீமத் ராமாயண காளமேகம் பிரும்மஸ்ரீ சிவராம கிருஷ்ணபாகவதர் அவர்கள் 'ஸுலோசனோபாக்யானம்' என்னும் கதாகாலக்ஷேபத்தை நடத்தினார்கள்.

ப்ரதிதினம் மாலையிலும் 4மணிமுதல் பழமானேரி பிரும்மஸ்ரீ பி. கே. சுப்பிரமணிய சாஸ்திரிகள், வித்யாஸ்தானம் வேதாந்த வித்யார்த்திகள், 'சிரோமணி, மீனாக்ஷிசுந்தர சாஸ்திரிகள், சிரோமணி நாராயணசர்மா, ராமனுஜ தீக்ஷிதர் முதலியோர் கிரமமாக யோகமஹிமா ப்ரணவமஹிமா, பிரும்மஸூத்ரங்களுக்கு அத்வைதத்தில் தாத்பர்யம், 40 ஸம்ஸ்காரங்கள், என்னும் விஷயங்களை தெளிவாக உபன்யஸித்தார்கள். ஜயந்திதினமான வைகாசிமீ 1உ (14—5—37) வெள்ளிக்கிழமை இரவு 8மணிக்கு ஸ்ரீ மதாசார்யாளின் படத்தை அழகிய வெள்ளி மஞ்சத்தில் நன்கு அலங்கரித்து வேதபாராயணங்களுடனும் மேளவாத்தியங்களுடனும் ஊர்வலம் வந்து ஆஸ்தானத்தை அடைந்ததும் பிரும்மஸ்ரீ ஸ்ரீராமசாஸ்திரிகளால் 'ஜயந்தி உத்ஸவம் எல்லோராலும் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்று நன்கு உபன்யஸிக்கப்பட்டது. இந்த சமயங்களில் உள்ளூர் மகாஜனங்களும் வெளியூர் ஆஸ்திகர்களும் வந்து உபன்யாஸங்களை சிரவணம் செய்தும் ஸ்ரீமதாசார்யாளை தரிசித்தும் ஆசார்யாளின் பிரஸாதம் பெற்று தத்தம் இல்லம் சென்றனர். ப்ரதிதினம் பிராம்மண சந்தர்ப்பணங்களும் விசேஷமாக நடந்தன. 'இவ்வுத்ஸவமானது ஷை வித்யாஸ்தானம் ப்ராசீன வேதாந்த வித்யார்த்தி சிரோமணி ஆர். சுப்பிரமணிய சிரௌதிகளின் விசேஷசிரத்தையாலும் விடாமுயற்சியாலும் முன் வருஷங்களை விட சிறப்பாக நடந்தேறியது.

கே. ராகவசாஸ்திரிகள்.
வியாகரணசிரோமணி.

உடையாளூர்.

சென்ற ஆண்டுபோல் இவ்வருஷமும் கும்பகோணம்தாலூகா உடையாளூர் கிராமஆஸ்திக பக்தர்களால் ஸ்ரீ சங்கரஜயந்தி உற்சவம் 14—5—37 வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. ஷை கொண்டாட்டத்திற்காக இவ்வூர் மிராசுதாரும் திருச்சி தேசியகலாசாலை ஆசிரியர் திரு. வி. ராதாகிருஷ்ண அய்யரும், இவ்வூர் ஸ்கூல் மானேஜர் திரு. த. ராமச்சந்திரய்யரும் விசேஷ முயற்சி எடுத்துக் கொண்டு பணவசூல் செய்து இருந்தனர்.

அன்றுகாலை 10மணிக்கு தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த இவ்வூர் குளத்தங்கரை மடத்தில் ஸ்ரீ ஆசார்யாளுடைய படம் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு வேதபாராயணத்துடன் விசேஷ ஜபங்கள், பூஜைகள், அர்ச்சனைகள் செய்யப்பட்டு விசேஷ ப்ரஸாதங்களும் வழங்கப்பட்டன. அங்கு குழுமியிருந்தவர்களுக்கு இவ்வூர் பிரும்மஸ்ரீ சுந்தரேசசாஸ்திரிகள் 'சங்கர ஜனனம்' என்பதுபற்றி ஓர் சிறு உபந்யாஸம் செய்து இப்போர்ப்பட்ட கொண்டாட்டத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசினார்.

மாலை 5½மணிக்கு இவ்வூர் பிரும்மஸ்ரீ கே. ஆத்மனாத சாஸ்திரிகள் 'ஸ்ரீ சங்கர ஜனனம்' என்பதுபற்றி விரிவாக ஓர் உபந்யாஸம் செய்தார்.

சுமார் 8½மணிக்கு ஷை உபந்யாஸம் முடிவுபெற்றது. தீபாராதனைக்குப்பின் ப்ரஸாதங்கள் எல்லோருக்கும்வழங்கப்பட்டனபிறகு ஒரு பானகபூஜையும் நடத்தப்பட்டது

21—5—37௳ வெள்ளிக்கிழமை வரையில் ஷை க்ரந்தம் படிக்கப்பட்டு பிரும்மஸ்ரீ கே. ஆத்மனாதசாஸ்திரிகளால் சங்கரர் சரித்திரம் உபந்யஸிக்கப்படும். சென்ற 2, 3 தினங்களாக இரவில் உபந்யாஸங்கள் நடைபெறுகின்றன.

இக்கைங்கர்யத்திற்கு பொருள் உதவிய திரு. R. கல்யாணசுந்திரமய்யர், P. O. சிவராமய்யர், முதலியோர்களுக்கும் ஷை கொண்டாட்டத்திற்கு கும்பகோணத்திலிருந்து விஜயம் செய்த திரு K. அனந்தராமய்யர் அவர்களுக்கும் இனிது நடைபெறும்படி விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ளுகிற திரு. R கல்யாண சுந்தரம் அய்யர், திரு. ராமச்சந்திரய்யர், திரு. V. கிருஷ்ணமூர்த்தி அய்யர் R. நாராயணஸ்வாமி அய்யர் முதலியோர்க்கும், மற்றும் பொருளுதவிசெய்த பக்தர்களுக்கும் நிர்வாகிகள் வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

ஷைகொண்டாட்டம் 21—5—37உ வெள்ளிக்கிழமை முடிவுபெறும். அன்று மாலை ஸ்ரீ ஆசார்யபடம் ஊர்வலமாக கொண்டுவரப்படும்.

அது விஷயம் கும்பகோணம் மடாதிபதி ஏஜண்டு அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீசந்நிதானத்திலிருந்து பிரஸாதங்கள் நிர்வாகிகளுக்கு அனுப்பப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆர். நாராயணஸாமி.

சேங்காலிபுரம்.

ஓர் உபன்யாஸம்:— பாரதமண்டலத்தில் புண்யபூமியாகிய இக்ராமத்தில் மேலத்தெரு ஸ்ரீமான் எம். சுப்ரமணிய அய்யர் அவர்கள் கிருஹத்தில் சுமார் மூன்று மாதகாலமாக ஷையூர் பிரும்மஸ்ரீ ராமாயணம் அப்பாசாமி சாஸ்திரி அவர்களால் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீ வால்மீகிராமாயண ப்ரவசனத்தில் பரதராம ஸம்வாத சரித்திரம் நடைபெறுகிறது. 14-5-37 வெள்ளிக்கிழமை ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுடைய ஜயந்தியை முன்னிட்டு அன்றயதினம் பகவத்பாதாளுடைய அவதார சரித்திரம் ஷை சாஸ்திரியாள் அவர்களால் படனம் செய்து மிக அழகாக உபந்யாஸம் செய்யப்பட்டது. ஆஸ்திகர்கள் அனைவரும் வந்து கதாச்ரவணம்செய்து பரமாசார்யாளுடைய பரிபூர்ண அனுக்ரஹத்துக்கு பாத்திரர்களானார்கள். பிறகு பூஜா நிவேதனங்கள் பக்திச்ரத்தையோடு விசேஷமாய் நடைபெற்றது.

ஷை ஸ்ரீ ராமாயண ப்ரவசனத்தில் ஸ்ரீ பாதுகாபட்டாபிஷேக மஹோத்ஸவம் ஒரு வாரத்தில் நடைபெறுமென்று தெரிகிறது. இக்ராமவாசிகளுக்கு ஸ்ரீ பகவான் விசேஷமாக அருள் புரிவாராக. ஒரு நிருபர்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-௵ வைகாசி-மீ 7௳

நமது பண்டிதர்களுக்கு வேண்டுகோள்.

சென்னையிலுள்ள ஆசாரத்திருத்த வாதிகள் இப்போது தங்களுடைய முயற்சியை மற்றொரு வழியின் மூலம் செய்ய முன்வந்திருக்கிறார்கள். ஆலயப்ரவேசம் முதலிய சீர்திருத்தங்களுக்கு சாஸ்திரமூலமான ஆதாரமிருப்பதாகக் காட்டி ஜனங்களை ஏமாற்ற ஒரு சீர்திருத்தப் பண்டித பரிஷத்தைக்கூட்ட யோஜனை செய்துவருகிறார்கள். இவர்களுடைய ப்ரவிருத்திகளெல்லாம் நமது ஸமூஹத்தை உருத்தெரியாமல் மாற்றும் தன்மையாயிருப்பதை அடிக்கடி நாம் கவனித்து வருகிறோம். ஸநாதனதர்மத்தை மாற்றவேண்டுமென்ற பிடிவாதமான மனப்போக்கு ஒன்றுதான் இவர்களுடைய முயற்சிகளுக்குக் காரணமேயல்லது உண்மையாக எந்த ஜாதியாருக்கும் ஹிதம் செய்யவேண்டுமென்ற நோக்கமல்லவென்பது தெளிவாக வெளிப்பட்ட விஷயம். இந்த நிலைமையில் இவர்கள் தற்போது நமது சாஸ்திரங்களை வ்யாகுலப்படுத்தவும், ஸாதுக்களாகிய பண்டிதர்களை, தங்களுடைய அகார்ய ப்ரவிருத்திக்கு ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ளவும் முயற்சிப்பது ஒரு பெரிய குற்றமென்பதில் ஸந்தேஹமில்லை.

இந்த நிலைமையில், நமது பண்டிதர்களின் கடமையென்ன? இவர்கள் என்னசெய்யப் போகிறார்கள் என்பது முக்யகேள்வியாக இருக்கிறது. சென்னை சீர்திருத்தவாதிகளின் இந்த முயற்சி புதிதன்று. ஏற்கனவே 25வருஷங்களுக்கு முன் காஞ்சியிலும் திருவாதியிலும் இரு பரிஷத்துக்களை நடத்தித்தங்களுடைய சீர்திருத்த முயற்சிக்கு ஆதரவுதேடப் பாடுபட்டார்கள். முக்யமாக ருதுமதீ விவாகத்திற்கு சாஸ்திரஸம்மதியைப் பெற வெகுவாக சிரமப்பட்டார்கள். அக்காலத்தில் இச்சீர்திருத்தக் காரர்களுடைய முக தாக்ஷிண்யத்திற்கு உள்பட்டுச் சில பண்டிதர்கள் விபரீத அபிப்ராயம் கொடுத்தபோதிலும், ஒருவராவது ருதுமதீ விவாஹம் சாஸ்திரீயமென்று சொல்லத் துணியவில்லை என்பது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். தவிரவும் காஞ்சி பரிஷத்தில், சீர்திருத்தக்காரர்களின் ஆடம்பரத்தினாலும் சூழ்ச்சியாலும் சில பண்டிதர்கள் ஏமாந்துபோன போதிலும், திருவாதி பரிஷத்தில் நட்டமாகச் சீர்திருத்தவாதிகளுக்குப் பண்டிதர்கள் இணங்க மறுத்துவிட்டது தெளிவாகத் தெரிகிறது. காஞ்சி பரிஷத்தில் விவாஹ விஷயமாக அபிப்ராயம் தெரிவித்த 50பண்டிதர்களுள், வைதிக லிங்கம், ஸ்மார்த்த சருதியைவிட ப்ரபலம் என்று சொன்னவர்கள் 19 பண்டிதர்கள். திருவாதியிலோ 56-பண்டிதர்கள் ஸ்மார்த்த சருதியே ப்ரபலமென்று சொல்லியிருப்பதுடன், வைதிகலிங்கம் ப்ரபலம் என்றவர்களின் தொகை குறைந்துவிட்டது. ருதுவானபிறகு மூன்றுவருஷம் வரை விவாஹத்திற்கு அநுமதியிருப்பதாக 21 பண்டிதர்கள் காஞ்சியில் அபிப்ராயம் கொடுத்தார்கள். ஆனால் திருவாதியில் 58-பண்டிதர்கள் அந்த அநுமதி பெரிய ஆபத்காலத்திற்குச் சொல்லப்பட்டதேயன்றி எப்போதும், யாவராலும் ஆசரிக்கக் கூடியதல்லவென்று சொல்லிவிட்டார்கள். மேலும், திருவாதி பரிஷத்தில், கலியில் பாராசர ஸ்ம்ருதிக்கு அதிக ப்ராபல்யமுண்டென்று 90பண்டிதர்கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். பாராசர ஸ்ம்ருதியின்படி ருதுமதீ விவாஹம் கலியில்கூட நிஷித்தமென்று 51 பண்டிதர்கள் ஸ்பஷ்டமாக அபிப்ராயம் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கு எதிராகச் சொல்லியவர்கள் 37 பேர்கள். இந்த ரீதியில் இரண்டு பரிஷத்தின் வித்யாஸத்தைப்பார்த்தால் காஞ்சியைவிடத் திருவாதியில் பண்டிதர்களுள் விழிப்பு அதிகம் ஏற்பட்டிருந்தது நன்கு விளங்கும். ஸ்மார்த்த சருதி பலத்தாலும், பாராசர ஸ்ம்ருதி நிஷேதத்தாலும் ருதுமதீ விவாஹம் அசாஸ்திரீயமென்கிற தீர்மானமே திருவாதியில் பெரும்பாலோரான பண்டிதர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்படி இருந்தபோதிலும் 25 வருஷங்களுக்கு முன் இருந்த நிலைமைக்கும் தற்போதுள்ள நிலைமைக்கும் வித்யாஸமிருக்கிறது. பல காரணங்களாலும் ஜனங்களுடைய மனதில் முன்னைவிட மாறுதல் அதிகம் ஏற்பட்டுவருவதைப் பார்க்கிறோம்.

மேலும் முற்போக்கு, ஸ்வராஜ்யம் முதலான அர்த்தமற்ற ஆடம்பர வார்த்தைகளால் நம்மவர்களின் மனம் கலக்கமடைந்திருக்கிறதென்பதும் மறுக்கக்கூடியதல்ல. இந்த நிலைமையில் இக்கப் புதிய பரிஷத்தால் அதிகம் தீங்கு நேரிடுமென்று எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகையால் இத்தகைய பெரிய அனர்த்தம் நேராமல் தடுக்கவேண்டியதே தற்கால பண்டிதர்களின் கடமையாயிருக்கிறது. ஏற்கனவே ஆசாரத்திருத்தக்காரர்களின் வலையில் சிக்கி, கௌணகல்பமாக ருதுமதி விவாகத்திற்கு அநுமதிகொடுத்த பண்டிதர்களின் விபரீதத்தாலேயே இப்போது சாரதாச்சட்டம் தோன்றி நம்மையும் நமது தர்மத்தையும் துன்புறுத்திவருவதை நமது பண்டிதர்கள் கவனிக்கவேண்டும். கௌணகல்பமாக அவர்கள் அநுமதிகொடுத்த வினையால் இப்போது முக்ய கல்ப விவாஹத்தைக்கூட தார்மிகர்கள் செய்யமுடியாமல் தவிப்பதும், விசாரணை, தண்டனை, மானஹானி முதலிய அனர்த்தங்களுக்கு உள்பட்டு சிறுமைப்படுவதும் அந்தப் பண்டிதர்களுக்கே பச்சாதாபத்தைக் கொடுத்திருக்கிறது. தாங்களும் தங்கள் பந்து மித்ரர்களும், தங்களுடைய வினையால் மிகுந்த கஷ்டத்திற்கும் அதர்மத்திற்கும் உள்ளாகிவிட நேர்ந்திருப்பதைக் கண்டு அந்தப் பண்டிதர்களே தங்கள் செய்கையைப் பற்றி தாபங்கொண்டிருப்பதை நாம் அறிந்துகொண்டிருக்கிறோம். ஆதலால் தற்போது நடக்கப்போகும் பரிஷத்தில் சீர்திருத்தவாதிகள் நமது பண்டிதர்களை ஒரு கருவியாகக் கொண்டு தங்களுடைய அதார்மிக நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள நம்மவர்கள் இடங்கொடாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சீர்திருத்தக்காரர்களின் வலையில் சிக்கிக்கொண்டு சாரதாச்சட்டம்போன்ற வேறு பல துன்பங்களுக்கு இடமளிப்பது நமது தர்மத்திற்கும், தேசத்திற்கும், முன்னோர்களுக்கும் செய்யும் பெரிய அபசாரமாகுமென்பதில் ஐயமில்லை. ஆதலால் பண்டிதர்கள் முன் ஜாக்கிரதையுடனும், கட்டுப்பாடுடனும் உறுதியாக நின்று இந்த பரிஷத்திற்கு ஆதரவு கொடுக்க மறுப்பதுடன், ஒவ்வொருவரும், தங்களுடைய ஆப்தர்களுக்கும் இதனால் விளையும் தீங்கை எடுத்துக்காட்டி அதில் கலக்காமல் செய்யவேண்டியது தர்மமூலமான கடமையென்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

கும்பகோணத்தில் ஸ்ரீ சங்கரஜயந்தி.

ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதாளின் அவதாரதினமான நாளது ஈச்வர-௵ வைகாசிமீ 1௳ வைசாக சுத்த பஞ்சமி சுக்ரவாரம் (14—5—37) ஸ்ரீ மடாசார்யாளின் ஜயந்தியானது வழக்கம்போல் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. காலையில் ஸ்ரீ மடாசார்யாளுக்கு விசேஷ பூஜையும் மாலை 3 மணிக்கு பானகபூஜையுமானபிறகு ஸ்ரீ பகவத்பாதாளுடைய மூர்த்தியானது விசேஷமாய் அலங்கரிக்கப்பட்டு மேளவாத்யத்துடனும் யானை முதலிய பிருதுகளுடனும் முக்கியமான வீதிகளில் எடுத்துச்செல்லப்பட்டு ஸ்ரீ மடத்திற்கு வந்துசேர்ந்தது. இரவு வைதிக, லௌகிக ப்ரமுகர்கள் சேர்ந்ததோர் பெரிய ஸபையில் இஞ்சிக்கொல்லை ஆத்மவித்யாபூஷணம் ப்ரம்மஸ்ரீ ஜகதீச்வர சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீ பரமாசார்யாளுடைய அவதார மஹிமையைப்பற்றியும் அவர்கள் ஸ்ரீ பரமேச்வரனுடைய ஞானசக்தி ரூபமானவரென்றும், அவர்கள் அவதரிக்கப் போவதைப்பற்றி முந்தியே வேதத்திலுள்ள ஸ்ரீ ருத்ரத்திலும் புராணங்களிலும் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர்களால் நிலைநாட்டப்பட்ட அத்வைத வேதாந்தத்தின் தத்துவங்களைப்பற்றியும் அவர்களால் ஹிந்து சமூகத்திற்குச் செய்யப்பட்ட மஹத்தான உபகாரத்தைப்பற்றியும் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தியதோடு ஜயந்தி தினக்கொண்டாட்டமானது மங்களகரமாகவும் அதிவிமர்சையாகவும் முடிவுற்றது.

புதுச்சேரி கவர்னரிடம் தூது.

பிரஞ்சு தேசத்தில் பால்ய விவாகத்தடை மசோதா கொண்டுவர உத்தேசித்திருப்பதை நிறுத்திவிட வேண்டுமென்று தார்மிக ஹிந்துக்களின் அபிப்ராயத்தை அவ்வூர் கவர்னர் ஜனரலிடம் தெரிவித்துக்கொள்ளுவதற்காக ஒரு டெபுடேஷனை அனுப்பத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தலைமை வஹிக்க திவான்பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் ஸம்மதித்துவிட்டார். இது ஸம்பந்தமான கார்யங்கள் சீக்கிரத்தில் பூர்த்தியாகும்.

சாத்தனூர்சேரி.

ஸநாதன தர்மக்கூட்டம்.

11-5-37ல் சாத்தனூர்சேரி கிராம ஸநாதன தர்ம ஸங்கத்தின் மீட்டிங்கில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. கொச்சி ஸமஸ்தானத்தில் உள்ள கூடல்மாணிக்கம் கோயில் பூஜை விஷயத்தில் திருவாங்கூரில், பஞ்சமர்கள் ப்ரவேசித்த ஆலயங்களில் பூஜை செய்த அர்ச்சகரையனுமதிக்காமல் தர்மத்தில் உறுதியாய் நிற்கும் மே. த. கொச்சி மஹாராஜா அவர்களை இந்த ஸங்கம் பாராட்டுகிறது. காரியதரிசி.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Amalapuram, East Godawary.

தஞ்சை ஜில்லா, ப்ராம்மண மஹா ஸபை.

ஒன்பதாவது வார்ஷிக ஸம்மேளனம்.

சென்ற பத்து வருஷங்களுக்குமுன் குடந்தையில் ஸ்தாபிக்கப்பட்டு விளங்கிவரும் ஜில்லா ப்ராம்மண ஸபையின் ஒன்பதாவது வர்ஷபூர்த்தி வைபவம் 17௳ திங்கள்கிழமையன்று ஜகத்குரு ஸ்ரீமடாசார்யாள் ஸ்ரீமடத்தில் வெகுசிறப்பாக நடந்தேறியது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து அனேக பண்டிதர்களும் லௌகிக ப்ரமுகர்களும் இதற்கு விஜயம்செய்திருந்தார்கள்.

மதுரை அட்வகேட்டும், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தலைவருமான ராவ் ஸாஹிப் ப்ரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் இந்த ஸம்மேளனத்தில் அக்ராஸநாதிபத்யம் வகித்தார்கள்.

திங்கள்கிழமை காலை 7-மணிக்கு மஹாஸபையின் அங்கத்தினர்களின் கூட்டம் நடைபெற்றது. அட்வொகேட் ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யர் அவர்களால் மஹா ஸபையின் நிர்வாஹ யாதாஸ்தும், வரவு செலவும் வாசிக்கப்பட்டு மெம்பர்களால் அங்கீகரிக்கப்பட்டது. அந்த யாதாஸ்தின்படி மஹாஸபையானது அடிக்கடி கூடி, தர்ம விருத்தமான கிளர்ச்சிகளைக் கண்டித்தும், ஸநாதந தர்ம விஷயங்களைப்பற்றிச் சிறந்த பண்டிதர்களைக்கொண்டு அடிக்கடி உபந்யாஸங்கள் நடத்தியும் அரிய கார்யங்களைச் செய்துவந்திருப்பது வெளியாகியது. கார்யதர்சி ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யரின் சிரத்தை ஸபையோரால் பாராட்டப்பட்டது. பிறகு புதியவர்ஷத்திற்கு, டவுன் ஹைஸ்கூல் மாஜி. ஹெட்மாஸ்டர் ப்ரம்மஸ்ரீ ஸ்வாமிநாத அய்யர் அவர்கள் தலைவராயும், ஸ்ரீமான்கள் என், ஸ்ரீநிவாஸஅய்யங்கார், ஏ. ஸுப்ரமண்ய அய்யர் ஆகியோர் உபதலைவர்களாயும், ஸ்ரீமான் ஸ்வாமிநாத சாஸ்திரியார் கார்யதர்சியாகவும், அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியர் உதவிக் கார்யதர்சியாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். ப்ரபல பண்டிதர்களும், லௌகிக கனவான்களுமடங்கிய நிர்வாஹ ஸபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. வெளித்தாலுகா ஒவ்வொன்றுக்கும் அங்காங்குள்ள ப்ரமுகர்கள் நிர்வாஹிகளாகத்தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸ்ரீமான் ஜி. வி. வெங்கடராமய்யர் அட்வொகேட், மீண்டும் பொக்கிஷதாரராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

பிறகு விஷய அட்டவணையில்கண்ட கார்யங்கள் ஆலோசனைக்கு வந்தன. அக்ராஸநாதிபதியவர்கள் பேசுகையில் ஸமீபத்தில் சென்னையிலுள்ள ப்ரபல சீர்திருத்தக்காரர்கள் ஒரு பண்டித பரிஷத்தைக்கூட்ட உத்தேசித்திருப்பதைக் குறிப்பிட்டு அந்த பரிஷத் விஷயத்தில் ஸநாதநிகளாகிய நாம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி ஸபையின் அபிப்ராயத்தை அறிய விரும்பினார். அட்வொகேட் ஸ்ரீமான் ஜி. வி. வெங்கடராமய்யர் அவர்கள் இதைப்பற்றிப் பேசுகையில், ஆசாரத்திருத்தத் தலைவர்கள் முன்னேற்பாடுடனும் ஸங்கேதத்துடனும் தங்கள் சீர்திருத்தக் கொள்கையை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக இந்தப்பரிஷத் நடத்துவதால் அதில் ஸநாதந பண்டிதர்கள் கலப்பது உசிதமில்லையென்று சொன்னார். ஸ்ரீமான் குன்னம் ஸுப்ரமண்யய்யரும் வேறு சிலரும் அந்தப்பரிஷத்தில் நாமும்கலந்து எதிர்க்கக்ஷிவாதங்களை முறியடிப்பது நலமென்று அபிப்ராயப்பட்டார்கள். நீண்டநேரம் சர்ச்சை நடந்தபின் ப்ரம்மஸ்ரீ மஹாலிங்கய்யர் அவர்களின் ப்ரேரேபணையின்மேல் இந்த விஷயம், பண்டிதர்களும், லௌகிகர்களும் அடங்கிய ஓர் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பிறகு ஸநாதநிகளின் வேலைத்திட்டத்தைப் பற்றி யோஜிக்கையில் ஸ்ரீமான் கோபால தேசிகாசாரியர், ஸநாதநிகளாகிய நாம் வெறும் மதப்ரசாரத்துடன்மட்டும் நிற்பதால் நமது கக்ஷி வலுப்படாதென்றும் ஆதலால் நாம் ராஜ்யவிஷயங்களில் கலக்க வேண்டுமென்றும் கன்ஸர்வேடிவ், அல்லது வியவஸ்தாவாதிகள் என்ற ஒரு புதிய கக்ஷியை ஆரம்பித்து எல்லாஜாதி மதஸ்தர்களுடையவும் உதவியைப்பெற்று ராஜ்யத்தில் புகுந்து வேலைசெய்வது பயனளிக்குமென்றும் சொன்னார். இந்த அபிப்ராயத்தை ஆதரித்து ப்ரம்மஸ்ரீ மஹாலிங்கய்யர் அவர்கள் பற்பல யுக்திகளையும் ராஜ்ய நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டு பொதுவுடமை, அபேதவாதம் முதலிய தீங்குகள் நேரிடக்கூடிய சின்னங்களையும் விவரித்து வியஸ்தாவாதிகளின் கக்ஷியொன்று ஏற்படவேண்டிய அவச்யத்தை முக்கால்மணிநேரம் தெளிவாகவும், உறுதியாகவும் வற்புறுத்திப்பேசினார். இவருடைய அபிப்ராயம் ஸபையோர் மனதில் ஆழப்பதிந்ததாகத் தோன்றியது.

இச்சமயம் காங்கிரஸ்வாதிகளான சில ப்ராம்மணச் சிறுவர்கள் ஏதோபேச ஆரம்பித்ததும், இது மெம்பர்களின் ப்ரத்யேகக்கூட்டமென்றும், இதில் மெம்பரல்லாதவர்கள் பேச நியாயமில்லையென்றும், மாலையில் பொதுக் கூட்டத்தில்வந்து கேள்விகளைக் கேட்கும்படியும் சொல்லப்பட்டது.

இச்சமயம் 11-மணி ஆகிவிட்டதால் ஸபை கலைந்து மீண்டும் மாலை 3-மணிக்கு ஆரம்பமாகியது. காலையில் நடந்த விவாதத்தைத் தொடர்ந்து ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யர் அவர்கள் பேசுகையில். காங்கிரஸில் இப்போது ஸோஷலிஸம் இல்லையென்றும், பின் ஒரு காலத்தில் அது ஏற்படவும் நியாயமில்லையென்றும், நேருஜியே இதை ஒத்துக்கொண்டிருப்பதாயும் குறிப்பிட்டார். இதையொட்டி ராமாநுஜதாதாசாரியர், பூவராஹாசாரியார், எஸ். மஹாலிங்கய்யர் முதலியவர்கள் பேசியபின் கன்ஸர்வேடிவ் கக்ஷியொன்றை ஸ்தாபித்து, அதன் மூலம் ராஜ்ய விஷயத்தில் ஸநாதனிகள் கலந்துகொள்ள வேண்டியது அவச்யமென்று தீர்மானிக்கப்பட்டது.

பிறகு இந்த ப்ராம்மண ஸபையின் பெயரை மாற்றாமலேயே இதை அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் பிரிவாக அங்கீகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஸபையின் ப்ரசாரத்திற்கும் மற்ற கார்யங்களுக்கும் வேண்டிய த்ரவியத்தைச் சேகரிப்பதற்கு பலவித யோஜனைகள் செய்யப்பட்டன.

பொதுக்கூட்டம்.

இத்துடன் மெம்பர்களின் கார்யாலோசனை கூட்டம்முடிந்து உடனே பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. பண்டிதர்களும், லௌகிக ப்ரமுகர்களும், பொதுஜனங்களுமாக ஏராளமானபேர்கள் ஸபையில் கூடியிருந்தார்கள். ஸ்ரீமான்களான சாஸ்திர ரத்னாகர விச்வநாத சாஸ்திரிகள், திருவையார் மஹாமஹோபாத்ய ஆர். வி. கிருஷ்ணமாசாரியர், மஹா மஹோபாத்யாய ம. வீ. ராமாநுஜாசாரியர், சேங்காலிபுரம் ப்ரசங்கபானு வைத்யநாத சாஸ்திரிகள், ஆத்மவித்யாபூஷணம் ஜகதீச்வர சாஸ்திரிகள், அத்வைத வேதாந்த பாடசாலை உபாத்யாயர் ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகள், அக்னிஹோத்ரம் தாதாசாரியர், அய்யுவய்யர் வேதாந்த பாடசாலை உபாத்தியாயர் வைத்யநாத சாஸ்திரிகள், புடார்ஜுன சர்மா, கோபால தேசிகாசாரியர், வா. ஸ்ரீநிவாஸ தாதாசாரியர், ராமாநுஜ தாதாசாரியர் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத உபாத்தியாயர் ஸ்ரீமான் நடேச சர்மா, வேம்புசாஸ்திரிகள், திருவாதி காலேஜ் உபாத்யாயர் சிவராமசாஸ்திரிகள் பூவராஹாசாரியர் முதலிய பல வித்வான்களும், ஸ்ரீமான்களான ஏ. ஸுப்ரமண்ய அய்யர், குன்னம் ஸுப்ரமண்ய அய்யர், திருக்கருகாவூர் ஸுப்பய்யர், தேவகோட்டை வக்கீல் ஸுப்ரமண்ய அய்யர். தஞ்சை வக்கீல், ஜி. வி. லக்ஷ்மண சாஸ்திரிகள், ஆர். ஸ்வாமிநாத அய்யர், எஸ். ஸ்ரீநிவாஸய்யர், எம். கே. வைத்யநாதய்யர் எஸ். மஹாலிங்கய்யர், ஜி. வி. வெங்கடராமய்யர், ஜி. வி. கணேசய்யர், ஸ்வாமிநாத சாஸ்திரிகள், ஸாரம் ரங்காசாரியர், என். வெங்கடராமய்யர், வி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அய்யாதுரை அய்யர், மாஜி ஸப் மாஜிஸ்ட்ரேட் பி எஸ். வைத்யநாதஸ்வாமி அய்யர், மார்க்கபந்து ஆசிரியர் ஸ்ரீ மடம் ஏஜண்டு கே. குப்புஸாமி அய்யர், ஸாமிநாதய்யர் வக்கீல், ஸீதாராமய்யர், கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் திருவசலூர் மீனாக்ஷிஸுந்தரமய்யர் மாஜி வக்கீல், திருவாதி. முதலிய ப்ரமுகர்களும் ஸபையில் முக்யமாகக் காணப்பட்டனர்.

ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யர் அவர்கள், ப்ரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்களை அக்ராஸனம் வகிக்கும்படி ப்ரேரேபித்து ஸ்ரீமான் அய்யரவர்களுடைய அரிய குணங்களையும் ஸநாதந தர்ம சிரத்தையையும் குறிப்பிட்டார். ப்ரம்மஸ்ரீ எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரியாரால் ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீமான் அய்யரவர்கள் தலைமை ஸ்தானத்தில் அமர்ந்ததும் ப்ரம்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் முதலியவர்களால் உபநிஷத்திலிருந்து வேதவாக்யங்கள் மங்களாசரணமாக ஓதப்பட்டது. பிறகு ஸ்ரீமான் எஸ். ஸ்வாமிநாத சாஸ்திரியாரால் தலைவருக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

ஸபைக்கு நேரில் வரமுடியாததால், ஸபை நிர்விக்னமாக நடக்கவேண்டுமென்று கோரியும் வெளியூரிலிருந்து பலர் அனுப்பியிருந்த செய்திகள் ஸ்ரீமான் ஸ்வாமிநாத சாஸ்திரியாரால் வாசிக்கப்பட்டன. திவான்பகதூர், கே எஸ் ராமஸ்வாமி சாஸ்திரியார், டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் சென்னை, வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கார்யதர்சி. அகில இந்திய ப்ராம்மண ஸபைத்தலைவர் என். ஸ்ரீநிவாஸாசாரியர், பி. ஆர். திருமலை அய்யங்கார், ஆத்தங்குடி, ஸநாதநதர்ம ஸபை கார்யதர்சி, ஜகதீசய்யர், கிருஷ்ணமூர்த்தி அய்யர், கோயம்புத்தூர், ஒய். கே. சேஷய்யர் சேலம், செங்கட்டு ஹிந்து கமிட்டி, முதலிய அநேகர் ஆசிச் செய்தியையும் சில யோஜனைகளையும் தெரிவித்திருந்தார்கள்.

பிறகு அக்ராஸநாதிபதியவர்கள் தலைமை உபந்யாஸத்தை தமிழில் வெகு அழகாகச் செய்தார்கள். அதன் விவரம் மற்றொரு இடத்தில் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. தலைவரின் ப்ரஸங்கம் ஸபையோருக்கு மிகுந்த உணர்ச்சியைக் கொடுக்கக்கூடியதாயும் உண்மை நியாயங்கள் நிறைந்ததாயும், ப்ராம்மண ஸமூஹத்தின் முற்கால தற்கால நிலைமையை விளக்கித் தகுந்த ஆலோசனை கூறுவதாயும் அமைந்திருந்தது. இடையிடையே அநேக உதாஹரண விஷயங்களைத் தலைவர் விவரித்து கூறியதும் ஸபையோருக்கு ரஸ்யமாகவிருந்தது.

தலைவர் ப்ரஸங்கம் முடிந்தபின் திருக்கருகாவூர் ப்ரம்மஸ்ரீ டி. எல். ஸுப்பய்யர் அவர்கள் "ப்ராம்மண்யம்" என்ற விஷயத்தைப் பற்றி வெகு உருக்கமான ப்ரஸங்கமொன்று செய்தார். மனுஸ்ம்ருதி முதலியவைகளிலி

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ சங்கரஜயந்தி.

கும்பகோணம்.

கோபால ராவ் Study Club.

ஷை சங்கத்தின் ஆதரவின் கீழ் 15-5-37 மாலை 6½-மணிக்கு ஸ்ரீமதாசார்யாள் ஜயந்தி பானது கொண்டாடப்பட்டது. பல பிரமுகர்களும் மாணவர்களும் கூடியிருந்த அந்த சபைக்கு ரிடையர்டு ஹெட்மாஸ்டர் ப்ரும்ம ஸ்ரீ ஆர். ஸ்வாமிநாதய்யர் அக்ராஸனம் வகித்தார்கள். அச்சமயம் ரிடையர்டு இஞ்சினீயர் ப்ரும்மஸ்ரீ எஸ். ஸ்வாமிநாதசாஸ்திரியவர்கள் நீண்டதோர் உபந்யாஸம் செய்தார். பொதுவாக எல்லா ஆசார்யாளுடைய ஜயந்தியை கொண்டாடுவது ஹிந்துக்களின் முக்கியமான கடமையென்று சொல்லிவிட்டு ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாளால் இயற்றப்பட்ட 'தக்ஷிணாமூர்த்தி அஷ்டக'த்தின் சுலோகங்களை வாசித்து அவற்றின் தாத்பர்யங்களை விளக்கிக் காட்டி திருக்குறள் முதலிய தமிழ் நூல்களிலிருந்து மேற்கோளுடன் குருசிஷ்ய பாவத்தின் தத்துவத்தையும் குருவினுடைய அனுக்ரஹத்தின் மஹிமையைப் பற்றியும் அழகாக அவர் சொன்னார். பிறகு ரிடையர்டு சப்மாஜிஸ்ட்ரேட் எஸ். அய்யாத்துரை அய்யர் அவர்கள் அத்வைத வேதாந்தமானது தற்காலத்திய பௌதிக சாஸ்திரத்தின் முடிவுகளுக்கு ஒத்ததாயிருக்கிறதென்று சில உதாஹரணங்களுடன் எடுத்துக் காட்டியதுடன் ஷை ஸபையானது அக்ராஸனரின் முடிவுரையுடன் இனிது முடிந்தது.

அனந்தப்பூர்.

ஸ்ரீ விச்வேச்வர ஆலயத்தில் சங்கரஜயந்தி மஹோத்ஸவமானது நான்கு நாட்களாக பூஜை, அபிஷேகம் முதலியவைகளோடு கொண்டாடப்பட்டது. முனிஸிபல் ஹைஸ்கூல் ப்ரம்ஹஸ்ரீ ஸேஷசாஸ்திரிலுவாரு அவர்களால் சங்கரரது ஜீவிய சரித்ரமும் வெகு அழகாய் உபன்யஸிக்கப்பட்டது. 14—5—37 ஸ்ரீசங்கரரின் பிறந்த தினத்தன்று சங்கரரது உருவப்படத்தை அலங்கரித்து காலையில் ஊர்வலமும், மத்யானம் ப்ராம்மண ஸந்தர்ப்பணையும் வெகு சிறந்தமுறையில் இனிது நிறைவெய்தியது.

என். கே. வெங்கடேசம் பந்துலு.

நாகூர்.

ஸ்ரீ ஆசார்யாள் பக்தியில் ஈடுபட்டவர்களும் நற்சிந்தையும் தருமகுணமும் நிறைந்தவர்களுமான பிரம்மஸ்ரீ N. A. பட்டாபிராமய்யர் அவர்களால் இவ்வூர் அக்கிரஹாரவாசிகளின் பரிபூரண உதவியையும் ஒற்றுமையையும்கொண்டு ஒவ்வொரு வருடமும் வழக்கம் போல் நடத்தப்பட்டுவரும் ஆதி ஸ்ரீ ஜெகத்குரு சங்கரபகவத்பாதாள் அவதாரதின மகோத்ஸவவைபவம் இவ்வருடம் 14-5-37உ யன்று மிக்க விமரிசையாக கொண்டாடப்பட்டது. அன்று ஸ்ரீ நாகவல்லியம்பாள் சமேத ஸ்ரீ நாகநாதேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீ தெக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகளுக்கு விசேஷ அபிஷேக அர்ச்சனங்களும், ஆராதனைகளும் உபநிஷத் முதலான கிரந்தங்களின் பாராயணமும் வேதியர்களால் மஹந்யாச ஏகாதச ருத்ர ஜெபம், ஸ்ரீ நாகநாதேஸ்வரர் சன்னதி பற்றுமுள்ள சன்னதிகளுக்கு அர்ச்சனை ஆராதனங்களும்செய்து பானக பூஜையும் நடத்தப்பட்டது. அதிமானுஷமான அற்புத சரித்திரத்தை காப்பனூமங்கலம் பிரம்மஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் சுமார் ஒன்றரைமணிநேரம் மிக்க விரிவாகவும் பெருமையாகவும் உபந்யசித்தார்கள். உபன்யாஸம் முடிந்து பகவத் பிரஸாதம் வழங்கப்பட்டதும், ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யாள் திருவுருவப்படம் நன்கலங்கரிக்கப்பட்டு மேளவாத்தியம், வேதபாராயணம், பஜனைகோஷ்டி இவைகளுடன் ஆலயப் பிரதக்ஷணம் செய்விக்கப்பட்டு பிர்ம்மஸ்ரீ N. A. பட்டாபிருமய்யர் அவர்கள் ஜாகைக்கு வழக்கம்போல் கொண்டுவரப்பட்டது. அங்கும் ஸ்ரீமத் பகவத்பாதாசார்யாளுக்கு அஷ்டோத்திர அர்ச்சனங்களும், ஆராதனங்களும் செய்யப்பட்டபின் பின்னர் பிராம்மண சந்தர்ப்பணையும் நடந்தேறி வித்வத் சம்பாவனையுடன் உத்ஸவம் முடிவுற்றது. ஷை உத்ஸவம் மிக்க விமரிசையாக நடந்தேறி அனைவரும் ஆசார்யாளின் பரிபூர்ண கிருபைக்கு பாத்திரபூதாளாகவேண்டி சென்ற வருஷம் போல் இவ்வருடமும் இவ்வூர் பிராமண சங்கத்தார் நன்கொடை முதலானதுகள் வசூல் செய்து கொடுத்தும் மிக்க பக்தி சிரத்தையுடன் கூடவிருந்து ஒத்துழைத்து உத்ஸவம் ஸந்தோஷமாக முடிவுபெற உதவி புரிந்தனர்.

பிராம்மண சங்கத்தார்.

மிலட்டூர்.

ஸ்ரீமத்சங்கரஜயந்திமகோத்ஸவம் 14-5-37 மிலட்டூர் ஸ்ரீசிவப்ரியர் ஸம்ஸ்கிருத வித்யாசாலையில் நடைபெற்றது. ஸ்ரீமகாசார்ய பூஜைகள் நடந்தபின் ப்ரும்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள், டி. எல். ஸுப்பய்யர், சுந்தரேச சாஸ்திரிகள் முதலியவர்களால் ஆசார்ய சரிதம் ச்ருதிகள்முதலியவைகளைப்பற்றி உபன்யஸிக்கப்பட்டபின் சந்தனம் பானகம் பிரஸாத தாம்பூலங்கள் வழங்கப்பட்டன.

ஆர். சீதாராமசர்மா.

ஆலங்குடி.

நிகழும் ஈசுவரஹு வைகாசி 1உ சுக்ல பக்ஷ பஞ்சமி வெள்ளிக்கிழமையன்று காசி ஆரண்யக்ஷேத்ரம் என்னும் ஆலங்குடியில் சென்ற வருஷம் ஸ்தாபனம் செய்யப்பட்ட சத்சங்க ஸபாவின் ஆதரவின் கீழ் ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய ஆசார்ய ஜயந்தி மஹோத்ஸவமானது வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. காலையில் ஆசார்ய படத்துக்கு பூஜையும், அர்ச்சனை, பிராம்மணசந்தர்ப்பணை நடைபெற்றது. மாலை 4-மணி முதல் 6 மணி வரையில் குட்டி வித்வான் ஜி. ராமச்சந்திரய்யர் அவர்களால் விகடக் கச்சேரியும், மாலை 6-மணி முதல் 7-மணி வரையில் விசலூர் பிரும்மஸ்ரீ சுவாமிநாத சாஸ்திரியள் அவர்களால் காசி ஆரண்ய க்ஷேத்ர ஸ்தலமான்யம் உபந்யாஸத்தில் ஸ்ரீஏகாம்பிகா ஆபத்ஸகாயேச்வரர் கல்யாணகட்டம் உபந்யஸிக்கப்பட்டது. இரவு 9-மணி முதல் 1-மணிவரையில் தக்க பக்கவாத்தியங்களுடன் கூத்தாநல்லூர் மிடில்ஸ்கூல் உபாத்தியாயர் ஜகத்குரு ஸேவா துரந்தர: பிரும்மஸ்ரீ நா. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்கள் ஆதி சங்கரபகவத்பாதாசார்ய அவர்களது திவ்யசரித்திரம் ஹரிகதா காலக்ஷேபம் நடைபெற்றது. ஆஸ்திக ஜனங்கள் அனைவரும் வந்து ச்ரவணம் செய்து குதூஹலமாக ஜயந்தி மகோத்ஸவத்தை கொண்டாடினர். ஷை ஸ்தல க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் 12, 13-வது அத்யாயங்களில் 52 ச்லோகங்கள் வரையில் ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் அவர்களது சரித்திரம் வெகு சுருக்கமாக உளது. ஸ்ரீ ஆசார்யாள் அவர்களால் செய்யப்பட்ட ஓர் அருமையான ஸ்தோத்திரத்தில் ஷை ஸ்தல புராணத்திலும் இருக்கிறது. அது ப்ருஹத்ஸ்தோத்ர ரத்னாகரத்திலும் இருக்கிறது.

ஒரு நிருபர்.

தஞ்சை ஜில்லா பிராம்மண மஹா ஸபை.

(7-ம் பக்கத்தொடர்ச்சி).

ருந்து பல ஆதாரங்களைக்காட்டி பிராம்மண்யம், வேதம் முதலியவைகளின் ஏற்றத்தைப் பற்றி ஸபையோர் பரவசமாகும்படி பிரஸங்கித்தார்.

இச்சமயம் ஸந்தியாவந்தனத்திற்காக ஸபை கலைந்து மீண்டும் 7½ மணிக்கு ஆரம்பமானதும், பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் பிராம்மண ஸபையைப்பற்றியும் பிராம்மண மஹிமையைப்பற்றியும் அநேக வேதவாக்யங்களை உதாஹரித்து அழகாகப் பேசினார்.

பிரம்மஸ்ரீ ராமாயணம் வேம்பு சாஸ்திரிகள் ஜடாயு, ராவண ஸம்வாத ப்ரகரணத்திலிருந்து பல அரியமேற்கோள்களைக் காட்டி ஸனாதன தர்மத்தின் கௌரவத்தை சமத்காரமாகவும், கம்பீரமாகவும் நிரூபணம் செய்தார்.

தேவகோட்டை வக்கீல் எஸ். ஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் பேசுகையில் தற்கால ராஜ்ய நிலைமையையும், காங்கிரஸ் வாதிகளால் நமது மதத்திற்குச் செய்யப்படும் தீமைகளையும் விவரித்துக் கூறி நமது மடாதிபதிகள் இந்த விஷயத்தில் மிகவும் அதிகமான முயற்சி எடுத்துக்கொண்டு தர்மத்தை ரக்ஷிக்கப் பாடுபட வேண்டுமென்றும் அதற்காக ஆகும் பணச்செலவுக்கு யோஜிக்கக்கூடாதென்றும் வெகு உணர்ச்சியுடன் பேசி ஸபையோர் மனதிலும் அதைப் பதியச் செய்தார்.

திருவாதி, மஹா வித்வான், சாஸ்திர ரத்னாகர, விச்வநாத சாஸ்திரிகள் பேசுகையில் இன்று காலைமுதல் நடந்த ஸகல சர்ச்சைகளையும் குறிப்பிட்டு, ஸனாதனிகள் காங்கிரஸில் சேருவதைப்பற்றி யோஜிப்பது நல்லமென்றும், நமது ஸ்திரீகளும் ஆங்கிலம் கற்க ஆரம்பித்து அதன்மூலம் குடும்ப தர்மமும், ஸமுதாய தர்மமும் நசிக்க ஆரம்பித்துவிட்டதைக் குறிப்பிட்டு இந்த ஆபத்தைத் தடுக்க உடனே முயற்சிக்கவேண்டியது அவச்யமென்றும் வற்புறுத்தினார்.

தலைவர் முடிவுரை கூறிய பிறகு ஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யரால் தலைவருக்குவந்தனோபசார வார்த்தைகள் கூறப்பட்டு இரவு 11 மணிக்கு ஸபை ஸம்பூர்ணமாகியது.

பிரம்மஸ்ரீ ப்ரஸங்கபாநு வைத்யநாத சாஸ்திரிகள் நமது பிரசாரத்திற்காகப் பண உதவி வேண்டுமென்ற விஷயத்தை ஸபையில் வெகு சாதுர்யமாயும், அழுத்தமாயும் கூறியபின் சிறிது தொகைக்குக் கையொப்பம் கிடைத்திருக்கிறது.

பரிஷத் விஷயமான முடிவு.

சென்னையில் நடக்கப்போகும் பரிஷத்தில் ஸனாதனப் பண்டிதர் கலந்து கொள்ள வேண்டுமோ என்ற விஷயத்தை யோஜித்து முடிவு செய்ய செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ மஹாலிங்கய்யர் கிரஹத்தில், பிரம்மஸ்ரீ என் நடேசய்யர் அவர்களின் தலைமையில் பல பிரமுகர்கள் கூடி யோஜித்தார்கள். 2 மணி நேரம் விவாதம் நடந்தபின், சென்னை சீர்திருத்த பரிஷத்தின் உண்மை நிலைமையையும், வேஷத்தையும் விளக்கி ஒரு அறிக்கை வெளியிடுவதென்றும், சீர்திருத்த பரிஷத்காரரிடமிருந்து கிடைக்கும் பதிலைப் பார்த்துக் கொண்டு அதற்கேற்றபடி நடந்துகொள்ள வேண்டிய கார்யக்கிரமத்தை நிச்சயிக்க பிரம்மஸ்ரீ தலைவர் அவர்களையும், பிரம்மஸ்ரீ கோபாலதேசிகாசாரியரையும் ஒரு கமிட்டியாக நியமிப்பதாயும், ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஸம்மேளனத்தை நன்கு நடத்த ச்ரமம் எடுத்துக்கொண்ட ஸ்ரீமான் ஸ்வாமிநாத சாஸ்திரியாரின் ச்ரத்தையை யாவரும் பாராட்டினார்கள்.

Registered No. M. 2913.

The Arya Dharmam.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 20th MAY 1937. [No. 19

The Reformer's Latest.

(By Mr. S. Subrahmanya Aiyar, Advocate, Devakottah.)

I hope you will have noticed the publication in the Madras Mail of the 8th instant that it is contemplated to convene a conference of Pandits within the next few months with the alleged object of *wisely solving* several important questions such as the removal of untouchability, and temple—entry by Avarnas. A notification signed by Sir P. S. Sivasami Iyer, Mr. T. R. Venkatarama Sastriar, Mr. S. K. Yegnanarayana Aiyar and Rao Bahadur K. V. Sesha Iyengar and others calling for a meeting on the 9th instant of those interested in taking steps for such a conference, is understood to have been issued. One can see plainly from the names of the signatories published, that they are not the supporters of the Sanatanist cause but are confirmed social reformers who have been hitherto taking active part in making propaganda against Sanatanism and sparing no pains to misinterpret our Sastras and misquote them. The avowed object in calling for such a conference is not to come to any unbiased conclusion as to what the Sastras say on an impartial investigation of authoritative shastraic texts but to get a make-believe opinion in favour of their pet propaganda and to broadcast it to the indifferent and uninformed public as the authoritative and right opinion of those who are competent to pronounce an opinion. The move is very portentious. It is patent that the organisers have made up their mind to get up a packed conference of pretenders masquerading as Pandits. There is some clever wire-pulling behind the whole thing. I shall not be very much surprised if there are the designing hands of Sir C. P. Ramasami Iyer and Mr. C. Rajagopalachariar behind it. It is not a mere accident that Mr. C. R. Achariar, who was indulging recently in sentiments that the Congress party if it assumed the ministry will not do anything calculated to oppress the minority and that it will not do things which are controversial, and who has been insisting upon assurance by the Governor of non-interference as a condition precedent to his assuming responsibility to form the Government, has been addressing public meetings and temple trustees to open a campaign for temple entry for Harijans. He is reported to have said that it was his earnest desire that the temples should subserve the interests *not only of the Hindus but of all communities* (italics mine), that it was the duty of the trustees and the public to strive for that end and that he could not rest content without securing temple entry for Harijans who formed an important limb of the Hindu body politic. He is further also reported to have said that had it not been for his pre-occupation with the political problem, he would certainly have carried on a more vigorous campaign to quicken the pace of the most essential national reform, according to him. He naively invites Hon. Rao Bahadur M. C. Rajah to introduce a Temple-entry Bill in the Madras Assembly and assures him of popular support for the measure. Probably he is too much inebriated with success in the recent elections to remember the distinct opinion in this Presidency and sister provinces in India of the immensely vast public majority to the contrary expressed only recently in 1933—34. Thank God, it is being demonstrated in Bombay that, were it necessary, people will not be wanting to use the very weapon of passive resistance the weapon of his political Guru and Sambandhi.

The immediate concern is now to expose the pretension and to prevent the agitators from effectively misleading the public. We should lose no time for effecting the same. I am quite sure that the organisers will certainly not invite the acknowledgedly authoritative or genuine Pandits and even if they make a semblance of inviting some to them, it will be only a formal affair with a view more to keep them out rather than bring them in. Most of the Pandits of the genuine and learned type are either too poor to go to Madras and attend the conference at their cost, or too much devoid of facilities to incline them to undertake a journey to Madras Many of them will be ignorant even of the actual taking place of the conference. The Conference may further be stage-managed by those who pull the strings behind.

Under these circumstances it is the duty of all real lovers of Sanatana *Dharma*, of those who keep an open mind in the matter and especially of the Sanatani leaders and All India Varnashrama Swarajya Sangha to take steps immediately to make a list of all the really learned Pandits with their addresses throughout the Presidency with the help, if necessary, of the several Mutts in the Presidency as well as in Mysore State and publish them in all the papers, to make financial arrangement for the to and fro trip to Madras and to arrange independently for their mess and residence during their brief sojourn at Madras If it comes to the question of putting obstacles in the way of their legitimately taking part freely in the proposed conference, then and there another conference of genuine Pandits should be held at the same time in a place which previously should have been got ready arranged for the same. Some of the Sanatani leaders should enter into correspondence with the conveners of the proposed conference in order to see that free and genuine scope is given to the Pandits to express their opinion impartially and without fear or favour. There should be no room for window-dressing. If we do not take time by the fore-lock and let slip this opportunity our cause will go by default and we certainly shall not deserve any respect. We should see that all the available Pandits go and attend the conference. The Matadhipathies cannot afford to be indifferent at this juncture. This will be a very decisive vote. It will have a more far-reaching consequence than the recent political elections. The Government is watching with keen eyes the result. It is worth spending several thousands of rupees in this peculiar election campaign Therefore we should bestir ourselves and leave no stone unturned. This is now the time to display our power of organisation, if we really have any.

Educated Mind, but Helpless Will.

The lawyer and the teacher and the doctor are having less incomes, with a growing "standard of living." Each is having less peace of mind than a peasant or a labourer. Why should he submit to social snobbery—why should he allow "Respectability" to haunt him so much as to rob him of his right to live his own life on his own lines? He has no excuse, because his education should have given him the mental equipment to lead the protest against the tyranny of the advertiser and the booster, the press-controller and the platform-babbler? Why do they allow themselves to be driven like sheep, like the rest of the flock?

"Equality"

"Reformers who preach short cuts to a better world of equality will do well to beware lest their experiments lead to the diminution of the common fund. If the urge for equality is allowed to destroy the social order, the source of social wealth will dry up altogether."

Hartley Withers.

'His Holiness' The Thachudaya Kaimal.

Upon the materials made available to the public so far, including the presumably correct statements of an Ex-Dewan, an Ex Vice-Chancellor and a practising Chief Court Vakil, the following matters emerge with reasonable certainty.

1. The Koodal Manickam temple is a public religious institution situated wholly within the limits of the Cochin State.

2. His Highness the Maharaja of Cochin owns, possesses and exercises sovereign rights, powers and prerogatives over this temple similar to those possessed and exercised by him over any other temple in his State except to which other persons or bodies have been permitted or authorized to exercise some of hem.

3. In addition to these sovereign rights, powers and prerogatives the Maha Raja owns, possesses and exercises other powers as the spiritual head of a Yogam which constitute him the final authority in matters touching the rituals and interpretation of the religious texts, customs, practices and usages governing this temple.

4. The Maharajas of Cochin in exercise of their rights, powers and prerogatives as the Sovereigns of the State and as the spiritual heads of the Yogam, used to appoint a Chief Architect(Thachudaya Kaimal) to carry out repairs and renovations in the Garbha Graha of this temple whenever it stood in need of them. A chief, whose status has not been made clear but who is perhaps a vassal of the Maharaja of Cochin or is in subordinate alliance with him had been granted the honour, the dignity and the privilege of making a nomination to this place if and when so required by the Maharaja of Cochin.

5. This honour, dignity and privilege of making a nomination to the place of chief Architect presumably revocable on the face of it and by its very nature, apart from other consideration, appears to have devolved on His Highness the Maharaja of Travancore under several proceedings which it is not necessary to set out at present.

6. The Thachudaya Kaimal, as his name implies, is no other than the Chief Architect referred to above and his primary duty is to function as the Chief Architect. In this view the term "His Holiness" now attempted to be prefixed to his name is a misnomer as opined by the Ex Vice-Chancellor. It is possible that other dignities and privileges have grown round him in course of time and have been allowed to be exercised, by implied leave and license, as is natural under such circumstances, but they can possibly have no bearing upon his primary and perhaps his only legitimate function of Chief Architect.

7. There is, therefore, no foundation for the view adumbrated with characteristic flippancy that the Kaimal is the spiritual or religious head of the temple having sole jurisdiction to settle and prescribe the procedure, the rituals and the rules of worship and admission to the worship. Such a conception is wholly repugnant to the Sovereign status of the Maharaja of Cochin. Even allowing for a moment and for the sake of argument that the Kaimal has jurisdiction over these matters, a fundamental and basic alteration in the substantial law declared in the Agamas and Tantras and other scriptures is entirely beyond his competence and will be tantamount to the usurpation of a power which not even a sovereign possesses anywhere outside an autocratic State.

8. The soundness and validity of this view derive considerable support from the pronouncements made in the course of this week by the talented Dewan of Travancore who, it may be presumed, will not easily or lightly make admissions against the interests of his Sovereign. It is implicit in these pronouncements that no case has arisen for the Travancore Durbar to lodge a protest or complaint to the Imperial Government against the doings of the Cochin Durbar in respect of the Kudal Manickam temple. This necessarily means that the Maharaja of Cochin has acted quite within his powers in issuing the prohibitory orders against the transgressors and there is nothing in them which can be treated as infringing in any way any international law, or any treaty rights and obligations of the High Contracting Parties or any other laws written or unwritten.

9. One other conclusion flows naturally from the aforesaid pronouncements. The present Thachudaya Kaimal has really no legal right to call in question the regularity or the propriety or the validity of the orders of the Maharaja of Cochin or to sit in judgment himself over them. The Travancore Durbar which appears to have deliberately selected the transgressing Nambudries to officiate in the Kalabham ceremonies etc, and perhaps as a sort of feeler would certainly have pursued its line of action further and would not have permitted their nominee the present Thachudaya Kaimal to sit quiet with folded hands as he is doing. This necessarily involves the further position that the Thachudaya Kaimal is certainly not a religious or spiritual head as erroneously assumed, but at the best a person in the position of an executive officer charged with the duty among others of preserving and maintaining order and discipline in carrying out worship in the Koodal Manickam temple in the accustomed manner and in strict compliance with the laws, usages, customs, practices and traditions of the locality without any alteration.

N. Natesa Aiyar,
President,
All India Varnashrama Swarajya Sangh.

From the Congress Ranks.

"The *uneducated and the illiterate mob* or their representatives who ruled the country in a sense, had no interest in education, and they did not believe in having to pay without having to say. If the teachers really wanted dominion status, they should raise money by school fees."

C. RAJAGOPALACHARIAR,
at the Tanjore Educational Conference.

"A Satyagrahi is sometimes bound to use language which is capable of two meanings, provided both the meanings are obvious and necessary and there is no intention of deceiving. The language of the Vedas and the Gita often yields several meanings."

Gandhiji in the "Harijan".

"Jawaharlal believes in the inevitability of class war and doubts the possibility of conversion of capitalists"—*Ibid.*

"Popular Politics."

The great rewards that "popular politics" claims and gets in our day presage a serious danger. The persons who take to it are often people of quite ordinary intelligence, apart from the instructive *flair* that they possess for what would make a "democratic" appeal—what would find a push and a boost from the city press. A sort of energy and self-confidence, based largely on a sense of self-rigteousness produced by saying and hearing the same things over and over again, combined with the popularity-seeking instinct, take them through to success. With the immense power of propaganda, at one end, ~~in the hands~~ wielded by common-place and half-educated enthusiasts, and, with a gullible, ignorant and flattery-loving public at the other, that can be hustled by ambitious and artful organisers into accepting anything that is told them, what is the outlook for our country?

Deceiving Politicians and Flattery-loving Democracy.

"Certain defects seem inherent in the very nature of representative institutions. There is a sense of self-importance, inseparable from success in a contest for popular favour. There is an all but unavoidable habit of hypocrisy, since experience shows that democracy does not detect insincerity in the orator, and will, on the other hand, be shocked by things which even the most sincere man may think necessary; Hence arises a tone of cynicism among elected representatives, and a feeling that no man can retain his position in politics without deceit. This seems unavoidable so long as the main thing that all bodies of men demand of their champions is flattery."

Bertrand Russel.

"Raising Hands."

It requires an alert and equipped mind to discover a fallacious argument.

Arguments are to be weighed and judged only in an assembly of equipped men.

The politician's calling from the crowd for their vote for or against on the question of assurances or interim ministries is not helpful or decisive.

The crowd is flattered both before and after the vote. The speaker and audience are both satisfied that they have done a very wonderful thing. But, what is the value of such a vote?

மதுரையில்
வர்ணாச்ரம தர்மப்ரஸங்கம்

குருபக்தி

4-5-37 செவ்வாய்க்கிழமை காலையில் மதுரை ஸ்ரீ ச்ருங்ககிரி மடத்தில் திருநல்வேலி அட்வகேட் ப்ரும்மஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் எம்.ஏ. பி.எல். அவர்கள் 'குருபக்தி' என்கிற விஷயத்தைப்பற்றியும் அதே தினத்தில் மாலையில் ஷையாரவர்கள் ப்ரம்மஸ்ரீ ராவ் ஸாஹிப் என். நடேசய்யர் அவர்களின் பங்களா நந்தவனத்தில் மதுரை தர்மசாஸ்திர ஸபை, மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம் இச்சபைகளின் சார்பாக "ஸ்வதர்மமும்' ஸ்வராஜ்யமும் என்கிற விஷயத்தைப் பற்றியும் இரண்டு வெகு இனிமையான உபந்யாஸங்கள் செய்தார்கள். காலையில் ப்ரும்மஸ்ரீ சிவராமக்ருஷ்ணசாஸ்திரிகளவர்களும் மாலையில் ப்ரும்மஸ்ரீ ராவ்ஸாஹிப் என். நடேசய்யர் அவர்களும் அக்ராஸனம் வஹித்தார்கள். "குருபக்தி" என்கிற விஷயத்தைப்பற்றி உபந்யாஸகர் பேசியதாவது:—

ஈச்வரன் தமது பரமகாருண்யத்தினால் ஜீவர்களை மோக்ஷம் அடையும்படி செய்வதற்குத் தாமே குருவாக ரூபத்தை எடுத்துக்கொள்ளுகிறார். ஜகத்தை ஸ்ருஷ்டிசெய்த பகவானுக்கு தன்னை அடையவேண்டுமென்கிற ஆவல் எப்பொழுதும் இருக்கிறது. அவர்கள் தன்னை அடைவதற்கே சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடி மனிதர்கள் அவரவர்களின் கடமைகளை பகவத் பக்தியுடன் செய்துவருவதால் பகவானுக்குப் ப்ரீதி ஏற்பட்டு குரு ரூபமாகத் தோன்றி தம் உபதேசங்கள் மூலம் மோக்ஷத்தைக் கொடுக்கிறார். நமக்கு மோக்ஷம் கிடைக்கும் வரை சாஸ்த்ரங்களை அப்யஸித்து ஜீவன், ஜகத், மோக்ஷம் இவைகளின் ஸ்வரூபங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு குருவினிடம் இடைவிடாத தீவிர பக்திசெய்து அவருடைய ஆக்ஞைகளை நிறைவேற்றி வர வேண்டும்.

அக்ராஸனாதிபதியவர்கள் முடிவுரையில் ஸம்ஸாரமாகிற துக்க ஸாகரத்தைத் தாண்டுவதற்கு குரு ஒரு படகாக ஏற்படுகிறார் என்றும் குரு என்கிற பதத்திற்கே அஜ்ஞானத்தைப் போக்கடிக்கிறவர் என்பது அர்த்தமென்றும் குருபக்தியினாலேயே நமக்கு எவ்வித க்ஷேமமும் கிடைக்குமென்றும் கூறி முடித்தார்கள்.

"ஸ்வதர்மமும் ஸ்வராஜ்யமும்"

என்கிற விஷயத்தைப்பற்றி உபந்யாஸகர் பின்வருமாறு பேசினார்:— தர்ம சாஸ்த்ரங்கள் மனிதர்களுக்கேற்பட்டிருக்கின்றன. தர்மம் அதர்மம் என்று பகுத்தறியும் புத்தி அக்ஞானியாக விருக்கிற மனிதனுக்கே இருப்பதால் அவனையே சாஸ்த்ரங்கள் கட்டுப்படுத்துகின்றன. பகுத்தறியும் புத்தி சக்தியில்லாத ம்ருக பக்ஷி முதலிய ப்ராணிகளுக்கு தர்ம சாஸ்த்ரங்கள் ஏற்படவில்லை. ஸ்வரூப ஸாக்ஷாத்காரமடைந்த ஆத்ம ஞானியையும் தர்ம சாஸ்த்ரம் கட்டுப்படுத்தாது. நாமெல்லோரும் ஞானிகளாக ஆவதற்கு ஸ்வதர்மானுஷ்டானம் ஸாதனமாக சாஸ்த்ரம் விதிக்கிறது. ப்ரஜைகளின் ஸ்வதர்மங்களை ரக்ஷிக்க வேண்டியது ராஜாக்களின் கடமை என்று சாஸ்த்ரம் கூறுகிறது. நாமெல்லோரும் ஸ்வராஜ்யம் வேண்டுமென்றே முயலுகிறோம் ஆனால் நமக்கு கிடைக்கும் ஸ்வராஜ்யத்தில் நமது ஸ்வதர்மத்துக்கு யாதொரு கெடுதலும் இருக்கக்கூடாதென்பது நமது நோக்கம். காங்கிரஸ் முதலிய ராஜீய ஸங்கங்களில் ஸ்வராஜ்யத்துக்காக முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நமது ஸ்வதர்மங்களின் மஹிமை தெரியாமல் அவைகளை அழிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். காங்கிரஸ் தலைவர்களின் முயற்சியால் ப்ராம்மண்யமே தொலைந்து விடுவதற்கு ஹேதுவான சாரதா சட்டம் ஏற்பட்டது. பஞ்சமர்களை ஆலயங்களுக்குள் கூட்டிக்கொண்டுபோய் அவைகளைக் கெடுத்துவிடவேண்டுமென்று அதே தலைவர்கள் முயலுகிறார்கள்.

நமது சாஸ்த்ரங்களில் கூறிய விதிகளுக்கெல்லாம் நமது அற்ப அறிவைக் கொண்டு காரணங்களை தீர்மானித்துவிட முடியாது. நமது ஜகத்குரு ஸ்வாமிகள் ஆலயங்களிலும் க்ருஹங்களிலும் பூஜிக்கப்படும் மூர்த்திகளைப் பார்த்த மாத்திரத்திலேயே பூஜைகளின் குறைவுகள் அவர்களுக்குத் தெரிகின்றன. அவர்களுக்குத் எப்படித் தெரிந்ததென்று நமக்குப் புலப்படுவதில்லை. நமது மகம்மதிய ராஜாக்கள் நமது சாஸ்த்ரங்களில் நம்பிக்கை வைத்திருந்ததாக தஸ்தாவேஜுகள் மூலம் தெரிகிறது. திப்புஸுல்தான் தான் யுத்தத்தில் ஜயம் பெறுவதற்காக சிருங்ககிரியில் ஒரு சண்டிஹோமம் செய்யவேண்டுமென்று ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குருஸ்வாமிகளைப் பிரார்த்தித்து அதன் செலவுகளுக்காகப் பணமும் அனுப்பியிருக்கிறான்.

நமது சாஸ்த்ரங்களில் நம்பிக்கையில்லாமல் நமது ஸ்வதர்மங்களை அழித்துவிடவேண்டுமென்று முயற்சிசெய்கிற ராஜீயத் தலைவர்களுக்கு அதிகாரம் இருக்கும் ஸ்வராஜ்யத்தில் நமக்கு நன்மை கிடையாது. ஆகையால் நாம் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கங்கள் தேசம் முழுவதும் ஏற்படுத்தி ஸ்வதர்மத்தைக் காப்பாற்றும் ஸ்வராஜ்யம் கிடைப்பதற்காக ஒன்று சேர்ந்து வேலைசெய்யவேண்டும். நமது ஸ்வதர்மத்தைக் கெடுக்க முயற்சிக்காமலிருக்கும் ராஜீய ஸங்கங்களோடு நாம் எப்பொழுதும் ஸ்வராஜ்யத்துக்காக ஒத்துழைப்போம்.

அக்ராஸனாதிபதியவர்கள் ஸ்வதர்மத்தோடு கூடிய ஸ்வராஜ்யத்தையே நாம் அடைய வேண்டுமென்று வற்புறுத்தினார்கள்.

அக்ராஸனாதிபதியவர்களுக்கும் உபந்யாஸருக்கும் வந்தனோபசாரங்களுடன் உபந்யாஸ விஷயம் முடிந்தது.

நமது நிருபர்.

கல்கத்தா

ஸீதாகல்யாண மஹோத்ஸவம்.

ஹரீஷ் முகர்ஜீரோட் 68/3A நம்பர் க்ருஹத்தில் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கிற ஸ்ரீ கோதண்டராம பஜனாலயத்தில் சென்ற சித்திரைமீ 20உ 2-5-37 ஞாயிற்றுக்கிழமை அன்றயதினம் "ஸ்ரீ ஸீதாகல்யாணமஹோத்ஸவம் அதிவிமர்சையாக நடந்தேறியது. முதல் நாள் ராத்ரி பஜனை திவ்யநாம ப்ரதக்ஷிணமும் ஞாயிற்றுக்கிழமை காலை 7-மணி முதல் 11-மணி வரையில் மஹோத்ஸவமும் 12-மணிக்கு சுமார் 200-ப்ராம்மணர்களுக்கு ஸந்தர்ப்பணையும் தவிர ஏழைகளுக்கு விசேஷ அன்னதானமும் ஸாயங்காலம் 6-மணி முதல் ஸ்ரீமான் பார்த்தஸாரதி அய்யங்கார் அவர்கள் கோட்டுவாத்யக் கச்சேரியும் பிறகு கும்பகோணம் ஸ்ரீமான் ஜயராமய்யர் அவர்களின் பிடில் கச்சேரியும் நடந்தது. மேல் கண்ட வித்வான்களுக்கு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் அனுக்ரஹ பூர்வமாய் துப்பட்டாக்கள் ஸம்மானம் செய்யப்பட்டது.

மறுநாள் ஸ்ரீ ஆஞ்சனேய உத்ஸவமும் விமர்சையாக நடந்தேறியது. அன்றைதினம் ஸ்ரீராமநவமி முதல் அன்றயவரையில் யஜுர் வேதம் பூராவும் பாராயணம் செய்த புதுக்கோட்டை கனபாடிகள் முதலியவர்களுக்கு யதேஷ்ட ஸம்பாவனையுடன் உத்ஸவம் பூர்த்தி அடைந்தது. ஷை உத்ஸவத்திற்கு கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களால் அனுக்ரஹ பூர்வமாய் ஒரு பட்டும் ப்ரஸாதமும் அனுப்பப்பட்டது. ஷை உத்ஸவத்தை ச்ரத்தையுடன் நடத்திக்கொடுத்த கல்கத்தா மஹாஜனங்களுக்கு ஸ்ரீ ராமச்சந்திரர் ஸர்வாபீஷ்டத்தையும் நிறைவேற்றி வைப்பாராக. ஷை உத்ஸவத்தில் ரொம்பவும் ச்ரத்தை எடுத்துக்கொண்டு நடத்திவைத்த சேலம் சுந்தரசாஸ்திரிகள் குடும்பத்திற்கு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி ஸர்வாபீஷ்டத்தையும் நிறைவேற்றி வைக்கவேணுமாய்ப்பிரார்த்திக்கிறேன்

ஸ்ரீ கோதண்டராம பஜனாலயம்.

கல்கத்தாவில் ஹரீஷ்முகர்ஜீ ரோட் 68/A ப்ரும்மஸ்ரீ கிட்டு சாஸ்திரிகள் க்ருஹத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்த பஜனாலயத்தின் ஆதரவின் கீழ் இந்தவருஷத்திய ஸ்ரீராமநவமி நித்யோத்ஸவம் கல்கத்தாவாசி பக்தகோடிகளின் ஊக்கத்தினாலும் ஒற்றுமையினாலும், பிரதிதினமும் காலை மாலை இருவேளைகளிலும் வேதபாராயண அஷ்டோத்ர ஸஹஸ்ரநாமார்ச்சனை பூஜைகளோடும், இரவில் பஜனையோடும் நடைபெற்று சென்ற மேமீ 2, 3உகளில் ஸ்ரீ ஸீதாகல்யாண ஆஞ்சனேய மஹோத்ஸவ வைபவங்களோடு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கல்யாண மஹோத்ஸவத்திலும் அதற்கு அடுத்த தினத்திலும் ப்ராம்மணசந்தர்ப்பணையும், ஏழைகளுக்கு அன்னதானமும் செய்விக்கப்பட்டன.

நமது நிருபர்.

ஐக்யமாகாண சட்டஸபை மெம்பர் மகாநாடு.

ஐக்யமாகாண சட்டசபை மெம்பர்களின் கூட்டம் பண்டித கோவிந்த வல்லப பந்துவின் தலைமையில் கூடி, உறுதிமொழி கொடுக்க கவர்ண்மெண்டார் மறுத்ததையும் புதிய மந்திரி ஸபை அமைத்ததையும் கண்டித்துத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இதற்கு 5-ஆயிரம் பேர்கள் வந்திருந்தனராம்.

முக்கிய கவனிப்பு.
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கண்ணுசாமி பத்தர்.
பெரியதெரு, கும்பகோணம்.

The V. D. S. Sanskrit College, Kallidaikkurichi.
விளம்பரம்.
இந்த காலேஜானது, மதராஸ் யூனிவர்ஸிடியால், வியாகரண, மீமாம்ஸா சிரோமணி பாடங்கள் கற்பிக்க அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. வியாகரண சிரோமணியில் சேர்ந்து வாசிக்க விரும்பும் மாணவர்களுக்கு போஜனம், இடவஸதி முதலியன இனாமாக அளிக்கப்படும், கோடை ரஜாவிலிருந்து 1937 ஜூன் 10உ காலேஜ் திறக்கிறபடியால், மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 5—6—37-க்குள் இதனடியிற்கண்ட விலாஸத்துக்கு அனுப்பவேண்டும்.
எம். ராமலிங்க அண்ணாவி,
Corresponden[t]
கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா

(215185)



அநாவசியமாக

அவஸ்தைப்படாதீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

தென்னிந்திய பிராம்மணர்களின் 4-வது வருஷ ஸம் மேளனம்.

கும்பகோணம்.

பிராம்மணர்களுக்குள் விசேஷ ஒற்றுமையும் பரஸ்பர ஸஹாயபுத்தியும் வளர்ந்து பிராம்மண சமூஹமும் அவர்கள் வசிக்கும் அக்கிரஹாரங்களும் மேன்மையடையும்பொருட்டு முதல் முதலாக மாத்தியம பிராம்மணர்களின் பல வகுப்புகளைச்சேர்த்து 1933-வரு காலஞ்சென்ற ஆஸ்திகரத்னம் திவான்பகதூர் T. R. ராமச்சந்திரய்யர் B.A., B.L., அவர்களால் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு பல விடங்களில் கிளைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஷை சங்கத்தின் ஆதரவில் 3 வருஷங்களாக பிரதி வருஷமும் ஓரிடத்தில் மகாநாடு நடைபெற்று வந்திருக்கிறது. அதற்கு ஆதாரமாக 'மார்க்கபந்து' என்ற ஓர் உயரிய மாதப்பத்திரிகையும் வெளியிடப்பட்டு வருகிறது. பிராம்மணர்களுடைய ஆசாரங்களிலும் விவாஹ காரியங்களிலும் விசேஷ கட்டுப்பாடுகள் ஏற்படவேண்டியது அவசியமென்றும், பிராம்மணர்களுக்குள் விவாஹ சம்பந்தங்கள் விஷயமாய் ஓர் விவாஹ சபா சரக்கமிட்டி ஏற்படவேண்டுமென்றும், அநேக ஏழைகளின் அநுகூலத்திற்காக ஓர் ஸஹாயநிதி ஏற்படுத்தல் அவசியமென்றும், பிராம்மணர்களுக்குள் கோர்ட்டு வியாஜ்ஜியங்கள் ஒழிந்து எல்லா மனஸ்தாபங்களும் மத்தியஸ்தம் மூலம் பரிஹாரம் செய்யப்படவேண்டுமென்றும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆகவே இந்த வருஷமும் அதேமாதிரி ஓர் பிராம்மண ஸம்மேளனம் கும்பகோணத்தில் நடைபெறவேணுமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. நாளது 1937-வரு மே-மீ 25உ (ஈச்வர-வரு வைகாசி-மீ 12உ) பௌர்ணமி செவ்வாய்க்கிழமை முதல் மூன்று தினங்கள் கீழ் காணப்படும் காரிய அட்டவணைப்படி மகாநாடு நடைபெறும். அதற்கு தஞ்சை ஜில்லா பிராம்மணசபை காரியதரிசி பிரம்ம-ஸ்ரீ சேங்காலிபுரம் S. ஸ்ரீனிவாஸய்யர் அவர்கள் B.A., B.L., அட்வகேட் அக்கிராஸனம் வகிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அகிலஇந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தலைவர் பிம்ம-ஸ்ரீ ராவ்ஸாகிப் மதுரை N. நடேசய்யர் அவர்கள் B. A., B. L., மகாநாட்டைத் திறந்துவைப்பார்கள். பல பிராம்மண ஸமூஹத்தலைவர்கள் மகாநாட்டிற்கு விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தென்னிந்தியாவிலுள்ள பிரதிக்கிராமத்திலுமுள்ள பிரமுகர்கள் பிரத்தியேகமாய் சிரத்தையெடுத்துக்கொண்டு இந்த மகாநாட்டிற்கு ஒரு ஜவாப்தாரியான பிரதிநிதியை யனுப்பிவித்து ஜனசமூஹத்திற்கு முக்கியமாயுள்ள பல பிரச்னைகளை ஆலோசித்து மகாநாட்டை கௌரவப்படுத்தி சித்திபெறச் செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கடிதப்போக்குவரத்து மகாநாட்டுக் காரியதரிசி 5 டபீர்நடுத்தெரு என்ற விலாசத்திற்கு செய்துகொள்ளவும். பிரத்யேகமான வசதிகள் வேண்டும் கனவான்கள் முன்னதாகத் தெரிவித்துக்கொள்ளவும். மகாநாட்டிற்கு ரூ. 2—0—0 வரவேற்புக்கமிட்டிக் கட்டணமாகவும் அணா 4 பிரதிநிதிக்கட்டணமாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சாத்யமானவரை மதத்ரயபேதமின்றி எல்லா பிராம்மணர்களும் இம்மகாநாட்டில் கூடியவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. பொதுஜனங்கள் மணியார்டர் மூலம் செய்யும் பண உதவியை ஸ்ரீமான் A. கோபாலய்யர் 5-டபீர் நடுத்தெரு கும்பகோணம் என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

காரிய அட்டவணை.

24—5—37 மாலை 4மணிக்கு ஸம்மேளன த்வஜாபிவர்தனக் கொண்டாட்டம்.

25—5—37 காலை 8மணி கும்பகோணம் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் மடத்தில் மகாநாடு ஆரம்பம். வேதகோஷத்துடன் தலைவர்கள் ஊர்வலம். தெய்வ பிரார்த்தனை. மகாநாட்டுத் திறப்புவிழா பிரசங்கம். வரவேற்புத் தலைவர் பிரசங்கம். அக்கிராசனர் பிரசங்கம்.

மாலை 2 முதல் 4 மணிவரை விஷயாலோசனைக்கூட்டம் மாலை 4½ முதல் 6½மணிவரை பொதுக்கூட்டம். தீர்மானங்கள். பிரசங்கங்கள்.

இரவு 8½ முதல் 10 மணிவரை விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம்.

26—5—37 புதன்கிழமை காலை 8 முதல் 11 மணிவரை பொதுக்கூட்டம். தீர்மானங்கள்.

மாலை 2 முதல் 4 மணிவரையில் விஷயாலோசனைக் கூட்டம்.

4 முதல் 6½ வரை பொதுக்கூட்டம் தீர்மானங்கள்.

27—5—37 வியாழக்கிழமை மாலை 4 முதல் 6½ மணிவரை அக்கிராசனரின் முடிவுரை. வந்தனோபசாரம். மங்களம்.

மகாநாட்டு தினங்களில் வித்வத்பரிஷத் ஒன்றும் யுவஜனக்கூட்டம் ஒன்றும் பௌராணிகர் சமாவேசம் ஒன்றும் பஜனைசமாவேசம் ஒன்றும் நடைபெறக்கூடும்.

கும்பகோணத்திற்கு சமீபமுள்ள பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு போய்வர இஷ்டப்படும் பிரதிநிதிகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்படும்

மகாநாட்டு தினங்களில் வெளியூர்களிலிருந்துவரும் பிரதிநிதிகளுக்குசௌகரியமாக ஜாகை, போஜனம் முதலிய வசதிகள்செய்விக்கப்படும்.

P. S. வைத்யநாதஸ்வாமி அய்யர்.

காட்டுமன்னார் கோவில்

உபந்யாஸம்.

8-5-37 இரவு 8-மணிக்கு பிராம்ஹணசபையில் ஆதரவில் சந்நிதி வீதியிலுள்ள ரங்கவிலாசத்தில் சென்னையிலிருந்து சிஷ்யானுக்ரஹார்த்தம் விஜயம் செய்திருந்த ஸ்ரீ உ-வே வித்வான் "உபன்யாசபூஷண" ராமானுஜாசார்ய ஸ்வாமிகளால் வர்ணாச்ரம தர்மமென்னும் விஷயம் பற்றி உபன்யாசம் செய்யப்பட்டது. ஆடவரும் பெண்டிருமாகப்பலர் குமிழியிருந்திருந்தினர். உபன்யாசத்தின் சிறப்பை காரியதரிசியாலும் அவைத் தலைவராலும் புகழப்பட்டு இரவு 10-மணிக்கு சபை இனிது நடந்தேறியது. இம்மாதிரியான தர்மப்ரசாரகர்களை ஷை சபை விருப்பத்துடன் எதிர்பார்க்கிறது.

வைராசோத்ஸவம்.

பில்வாரண்யமெனும் உடையார்குடியில் திருக்கோயில்கொண்டு விளங்கும் பக்தவத்ஸலனான ஸ்ரீ அனந்தபாமேசுவரனுக்கு 15-5-37 முதல் பிரும்மோத்ஸவம் வெகு விமர்சையாய் நடைபெறும். தர்மகர்த்தர்களான செங்குந்தச் சிவநேசர்கள் போதுமான முன் ஏற்பாடுசெய்து வைத்திருக்கின்றனர். பஜனைகளும், பிரஸங்கங்களும், பாராயணங்களும் நடக்க ஏற்பாடாயிருக்கிறது.

"ந்ருஸிம்ஹப்ரியா" வி. உமாமஹேச்வரசாஸ்திரி.

நாகப்பூர்

தென் இந்திய பஜனை ஸமாஜத்தில் ஸத்கர் மானுஷ்டான கைங்கர்ய ஸபையாரின் கோரிக்கைப்படி 6-5-37 குருவாரத்தில் ஆசார்யாளுடைய வைபவத்தையும் ஸ்ரீ பாகவத ருக்மணி கல்யாண விஷயத்தையும் பற்றி சுமார் 3-மணி ஸாவகாசம் அருமையான உபந்யாசம் அம்ருதத்தை வர்ஷித்து பக்த மஹாஜனங்களின் மானஸாரவிந்தத்தை மலரச்செய்து பாமரனத்தத்தை விலக்கின காஞ்சியார் கோவில் லக்ஷ்மீ மந்திரம் ஸ்ரீ உபய வேதாந்த ஆசார்யபுருஷ ஸிம்ஹாஸனாதிபதி வித்வான் அபிநவ ஸரஸ்வதி வாங்முகாத்ந கோச: வித்வத் சிரோமணி குருவர்ய: நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசார்யார் அவர்களின் லோகோபகார ஸனாதனதர்ம பிரசாரம் மிகவும் பாராட்டத் தக்கதுடன் சென்ற தினங்கள் கிழமை பகவத்பக்தி விஷயங்களைப் பற்றி உபந்யசித்த ஓர் ஆனந்தமும் அளவிடற்கரிது.

ஓர் நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

27-5-1937

ல

4
22

20

9 V 215186 307

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-வரு வைகாசி-மீ 14௨ 1937-வரு மே-மீ 27௨ | வ 20

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

ஆர்யஸமாஜப் பிரசாரம்.

சென்னையில் தடை.

சென்னை ஜூலைப் பிரதேசத்தில் ஏற்பட்ட ஹிந்து முஸ்லீம் கலஹம் சிறிது அடங்கியதாயினும் மறுபடி தலைநாட்டியிருக்கிறது. ஹிந்துக்களும் மஹம்மதியர்களும் கத்தியால் குத்தப்பட்டுக் காயமடைவது நிற்கவில்லை. போலீஸார் பலமான ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். 2 ஹிந்துக்கள் கொலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

சென்னையிலுள்ள ஆர்யஸமாஜிகள் மதப்பிரசாரம் செய்வது, வகுப்பு மனஸ்தாபத்திற்குக் காரணமாயிருப்பதால் அவர்கள் பிரசாரம் செய்யக்கூடாதென்று போலீஸ் கமிஷனர் தடை உத்திரவு போட்டிருக்கிறார்.

அபேதவாத பயிற்சிப் பள்ளிக்கூடம்.

சென்னை கவர்ன்மெண்டின் தடை,

தெலுங்கு ஜில்லாவிலுள்ள கொத்தப்பட்டணம் என்கிற ஊரில், காங்கிரஸ் வாதிகள், அபேதவாதக் கொள்கையைப் போதிக்கும் ஒரு ராஜீயப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தனர். இது ஸர்க்காரிடம் ஜனங்களுக்கு அப்ரீதியையும், கலவரத்தையும் உண்டாக்குவதற்கு இடம் கொடுப்பதால் இந்தப் பள்ளிக்கூடம் சட்டவிரோதமானதென்று சென்னை கவர்ன்மெண்டார் அறிவித்து அதைக் கலைத்துவிட உத்திரவு போட்டிருக்கிறார்கள். அந்தப்பள்ளிக்கூடத்தில் படித்துவந்த 60பேர்கள் 15ஸ்திரீகள் உள்பட ஸர்க்கார் உத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுத்ததால் கைது செய்யப்பட்டார்கள். கூட்டத்தைப் போலீஸார் கலைத்தனர்.

காந்திஜியின் மறுப்பு.

சென்னைச் சட்டஸபையிலுள்ள காங்கிரஸ்காரர்களில் சிலர் இந்தியாமந்திரியின் உறுதிமொழியில் திருப்தியடைந்து, மந்திரிபதவி ஏற்க விரும்புவதாயும் அதற்குக்காந்தியின் ஸம்மதியைக் கோரியிருப்பதாயும் சில பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. ஆனால் இது உண்மையில்லையென்று காந்திஜி மறுக்கிறாராம்!

ஹிந்து முஸ்லீம் கலஹம்.

திருநெல்வேலிஜில்லா, கடையநல்லூரில் மஹாநவமி உத்ஸவம் நடக்கும் ஒரு ஸந்தர்ப்பத்தில் மஹம்மதியர் சிலர் புகுந்து [illegible] செய்த காரணமாக இருவகுப்பாருக்கும் பலத்த சண்டை ஏற்பட்டது. ஹிந்துக்களின் வீடுகளும் தான்யங்களும் நாசமாக்கப்பட்டன. பாடுகளும் சேதமடைந்தன. 150பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

ஜில்லா கலெக்டர் ஸ்தலத்திற்கு வந்தார். நிலைமை அமைதி.

மஹம்மதியர்களுள் கலஹம்.

லக்ஷ்மணபுரியில் 7பேர் மரணம்.

மஹம்மதியர்களுள், ஷியா - ஸுன்னி என்ற இருவகுப்புக்களுள் மனஸ்தாபம் ஏற்பட்டு பலமான கலஹம் லக்ஷ்மணபுரியில் நடந்தது. இதன் காரணமாக ஏழுமஹம்மதியர்கள் இறந்தனர். குழந்தைகள் உள்பட ஒரு ஷியா மஹம்மதிய குடும்பமே ஸுன்னிகளால் கொல்லப்பட்டுவிட்டது

பொக்கிஷ மந்திரிகள் கூட்டம்.

மாகாணங்களிலுள்ள பொக்கிஷ மந்திரிகளின் கூட்டமொன்றை நடத்த பம்பாய் பொக்கிஷமந்திரி ஸ்ரீமான் யமுனாதாஸ் மேத்தா முயற்சி செய்கிறாராம். மாகாண மந்திரிகள் தாங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பணம் சேகரிக்க என்னவழி செய்யலாமென்பதே இதில் யோஜிக்கப்படுமாம்,

ஆள்வார் மஹாராஜா பாரிஸில் மரணம்.

மன்னரின் பட்டாபிஷேகத்திற்குப் போயிருந்த ஆள்வார் மஹாராஜா பாரிஸில் ஒரு விளையாட்டு ஸ்தலத்தில் வழுக்கி விழுந்த காரணமாக கால் ஒடிந்து இறந்துவிட்டார். இவருடைய பிரேதம் இந்தியாவிற்குக் கொண்டுவரப்படும்.

வெடிகுண்டு செய்தவர்களின் கதி.

பாட்னா நகரத்தில் சிலதுஷ்டர்கள் ஒரு ஜட்ஜியைக் கொல்லும் நோக்கத்துடன் வெடிகுண்டுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கையில் வெடி விபத்து ஏற்பட்டு பலத்தகாயம் அடைந்தனர். ஒருவருக்கு இரண்டு கண்களும் போய்விட்டன. மற்றொருவர் கால் வெட்டப்பட்டது, பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்ரீசங்கர ஜயந்தி.

ஸ்ரீ சங்கர குருகுலம், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவமானது இவ்விடத்தில் சென்ற 11உ செவ்வாய்க்கிழமை முடிய வெகு விமர்சையாகவும் பரம குதூகலத்துடனும் நடந்தேறியது. பிரதி தினமும் காலையில் மஹன்யாஸ பூர்வக ஏகாதச ருத்ரஜபமும் விசேஷமான அபிஷேக திரவ்யங்களுடன் அபிஷேகமும் ஸஹஸ்ரநாம அர்ச்சனைகளும் பற்பலவிதநைவேத்யங்களும் நீராஜனங்களும் அங்கு கூடியிருந்த ஏராளமான ஜனங்களின் மனதைக் கவரச்செய்து கொண்டு காலை 7 மணி முதல் மத்யானம் 12 மணி வரையில் மிகவும் பரிஷ்காரமாய் நடந்தன. ப்ரஸ்தான த்ரய பாஷ்யமும், சங்கர விஜயமும் பாராயணம் செய்யப்பட்டன. பிறகு வந்திருந்த பக்தர்களுக்கெல்லாம் ஸந்தர்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. ஸாயங்காலங்களில் உத்ஸவ மூர்த்திக்கு ஒவ்வொருநாளும் விதம் விதமாக அலங்காரம் செய்யப்பட்டு கோவிலைச்சுற்றியுள்ள பிரகாரத்தில் வேத கோஷத்துடனும் பஜனையுடனும் உத்ஸவம் நடத்தப்பட்டது. முதல் நாள் ஸாயங்காலம் பிரம்மஸ்ரீ ஸேதுராம சாஸ்திரிகளின் சங்கரவிஜய உபந்யாஸமும், அன்று ராத்திரி உத்ஸவத்திற்கு பிறகு கல்லிடைகுரிச்சி பிரம்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய பாகவதரின் லக்ஷ்மண சக்தி என்கிற ஹரிகதையும் மிகவும் நன்றாகயிருந்தன. 3-ம் நாள் ராத்திரி பிரம்மஸ்ரீ நாகராஜராவ் அவர்களின் பில்லாங்குழல் கச்சேரி எல்லோர் மனதையும் ரொம்பவும் கவர்ந்தது இவருடன் மாஸ்டர் T. B. சங்கரன் பிடிலும் பாலக்காடு ராமச்சந்திரன் மிருதங்கமும் வாசித்தது மிகவும் நேர்த்தியாக இருந்தது.

4-ம் நாள் ராத்திரி சென்னைப்பட்டணம் பிரம்மஸ்ரீ G. N பாலஸுப்ரஹ்மண்யம் B.A, (hons) வாய்ப்பாட்டும் மேற்கண்ட இருவர்களுடைய பக்க வாத்யங்களும் கூடியிருந்து ... ஜனங்களை மிகவும் ரஞ்ஜிக்க செய்ததுடன் ராத்திரி மணி 12 ஆகியும் காலம் போனதே ஒருவருக்கும் தெரியாமல் செய்துவிட்டது. 5-ம் நாள் ராத்திரி அரியக்குடி ராமானுஜய்யங்கார் வாய்ப்பாட்டும், மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர் பிடிலும் முத்தய்யர் மிருதங்கமும் அத்யத்புதமாக இருந்தது. ஜயந்தி தினமானதால் கூட்டமும் ஸுமார் 2000 ஜனங்களுக்குமேல் இருந்தது. எல்லோரும் ஆனந்த பரவசர்களாய் ஆசார்யாளின் மூர்த்தியிலும் ஸங்கீதத்திலும் ஈடுபட்டு ராத்திரி 1 மணிக்கு கலைந்தார்கள். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம் விடாயத்தாக ஏகாந்தத்தில் ஸ்ரீரங்கம் வைணிக வித்வான் ராமஸ்வாமி அய்யங்கார் மிகவும் உருக்கமாக வீணை வாசித்து நீராஜனையுடன் இவ்வருஷத்தில் உத்ஸவம் முடிந்தது. இவ்வருஷம் எலக்ட்ரிக் விளக்குகளால் ஆலயம் முழுவதும் மிகவும் விசித்ரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

4-ம் நாள் ஸாயங்காலம் மாஸ்டர் T. B. சங்கரன் ஸதாசிவ பிரம்மேந்திராளின் சரித்திரத்தை ஸங்கீதத்துடன் உபந்யாஸம் செய்தது வெகு அழகாயிருந்தது.

V. கோதண்டராமன்.

திருவிடமருதூர்.

ஈஸ்வர வருஷம் சித்திரை 28உ மாலை ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு, ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீயவாள் அமலாபுரம் முகாமிருந்து அனுப்பப்பட்ட ஸ்ரீபரமாசார்யாளின் புருஷாக்ருதியான திருவுருப்படம், வீரசோழன் ஆற்றங்கரையிலிருந்து திருவெண்காடு ஸ்ரீமான் டி. பி. சுப்ரமணியப்பிள்ளையின் நாதசுரக் கச்சேரியுடனும் வாணவேடிக்கைகளுடன் ஏராளமான பக்த கோடிகள் சூழ்ந்துவரவும், வேத கோஷங்களுடனும் அதி விமர்சையாக எழுந்தருளச் செய்யப்பட்டு, பிரம்மஸ்ரீ மணி சாஸ்திரிகள் கிருகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மறுதினம் 29உ யன்று காலை பிரம்மஸ்ரீ நாராயண கனபாடிகள் (பிச்சு சாஸ்திரிகள்) அவர்களால் பிராண பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதுமுதல் தினந்தோறும் காலையில் இவ்வூர் ஜ்யோதிர் மஹாலிங்க நிடமாத்யயன பாடசாலை அத்யக்ஷர் த்விவேதி பிரம்மஸ்ரீ விச்வேச்வர கனபாடிகள் அவர்களாலும், அவர்கள் சிஷ்யர்களாலும், உள்ளூர் வேத பாடசாலை உபாத்யாயர்கள் பிரம்மஸ்ரீ சுந்தர சாஸ்திரிகளும், வெங்கட்ராம சாஸ்திரிகளும் மேற்படியார் சிஷ்யர்களாலும் வேத பாராயணமும் பிரம்மஸ்ரீ பண்டிட் சிரோன்மணி பிரம்மஸ்ரீ முத்துகிருஷ்ண சர்மா அவர்களால் ப்ரஸ்தானத்ரய கடோபநிஷத்கள் பாராயணமும், உள்ளூர் வைதிககோஷ்டிகளால் உபநிஷத் பாராயணங்களும் நடந்து, ததிஹா மூர்த்தி ஸஹஸ்ர நாமமும் ஸ்ரீ பகவத்பாதாளுடைய அஷ்டோத்தர அர்ச்சனையும், ஷோடசோபசார பூஜா ஆராதனைகளும், ஸ்ரீ பரமாசார்யாளுக்கு உத்ஸவம் பூர்த்தி ஆகிறவரை நடைபெற்றது. அது முதல் தினம் மாலை 4 மணிக்கு பிரம்மஸ்ரீ முத்துக்ருஷ்ண சர்மாவினால் "காது மதம்" என்பதைப் பற்றி உபந்யாஸம் செய்யப்பட்டது. இரவு 7-மணிக்கு பூஜாராதனைக்குப் பிறகு வேப்பத்தூர் பஜனை கோஷ்டி வாலிபர்களாலும் உள்ளூர் வாசிகளாலும் பஜனை செய்யப்பட்டு கும்பகோணம் பிடில்வித்வான் மகா-ள-ஸ்ரீ சிதாரமய்யர் அவர்களால் தனி பிடில்கச்சேரி செய்யப்பட்டது.

இரண்டாம் தினம் 30உயன்று மாலை பிரம்மஸ்ரீ வலங்கைமான் சுப்ரமண்யசாஸ்திரிகளால் "ஆசார்ய மஹிமையைப் பற்றி ஓர் உபந்யாஸம் செய்யப்பட்டது. அதன் பிறகு வழக்கம்போல் பஜனை முடிந்தவும் உள்ளூர் வித்வான் கோட்டுவாத்யம் ஸகாராம் ராவ் குமாரரான மகா-ள-ஸ்ரீ சீனிவாசராவ் அவர்களால் பக்கவாத்யத்துடன் கோட்வாத்யக் கச்சேரி நடந்தேறியது.

மூன்றும் நாள் உத்ஸவத்தன்று, மாலையில் மேற்கூறிய சுப்ரமண்யசாஸ்திரிகள் அவர்களாலேயே உபந்யாஸம் நிகழ்ந்தது. பிறகு கும்பகோணம் மகா-ள-ஸ்ரீ டாக்டர் குப்புசாமிய்யர் அவர்களின் பௌத்திரர்களான மகா-ள-ஸ்ரீ ராமச்சந்திர சகோதரர்களால் வீணைக் கச்சேரி நடைபெற்றது.

ஸ்ரீ ஆசார்ய ஜயந்தியன்று (வெள்ளிக்கிழமை வைகாசி 1உ) காலையில் வேதபாராயணங்களுக்கு பிறகு மகாபூஜா ஆராதனங்கள் ஆனவுடன் உள்ளூர் பிரம்மஸ்ரீ கிருஷ்ண பாகவதர் அவர்களால் ஸ்ரீ ஆசார்ய ஜனனம் சொல்லப்பட்டு, ஏராளமான ஜனங்களுக்கு வினத தானம் வழங்கப்பட்டது. பின்பு சுமார் 400 ஜனங்களுக்கு பிராம்மண சந்தர்ப்பனை நடத்திவைக்கப்பட்டது.

இரவு ஸ்ரீ ஆசாரியாள் படத்தை வெள்ளி ரூபமான விமானத்தில் அலங்கரித்து பந்தநல்லூர் ஸ்ரீமான் ரத்னம்பிள்ளை அவர்களுடைய நாதஸ்வரக் கச்சேரியுடனும், வாணவேடிக்கைகளுடனும் ஸ்வஸ்திவாசனங்களுடனும், அனேக பக்தகோடிகள் சூழ்ந்துவர, திருவீதிக்கு புறப்பாடு செய்விக்கப்பட்டது.

மறுநாள் வைகாசி 2உயன்று ஸ்ரீ ஆசார்யாளுக்கு விடையாற்று உத்ஸவம் நடந்தது. அன்று இரவு பஜனைக்குப் பிறகு மறத்துறை பிரம்மஸ்ரீ சுப்ரமண்ய பாகவதர் அவர்களால் "சந்த்ரஹாஸ" என்னும் ஸத்கதாகாலக்ஷேபம் நடைபெற்றது. பின்பு மங்கள ஹாரத்தி செய்து உத்ஸவம் பூர்த்தி செய்யப்பட்டது.

வைகாசிமீ 3உ இவ்வூரில் ஸ்ரீ சங்கரஜயந்தி மகோத்ஸவத்தை, காசியாத்திரைக்குப் போகும் போது, ஆரம்பித்து வைத்தவரும் இவ்வருஷ மஹோத்ஸவத்திற்கு ஸ்ரீ பரமாசாரியாளின் படத்தை மகா ஜனங்களிடம் கருணை கூர்ந்து, அநுக்ரஹித்து, அனுப்பி வைத்தவாளும், தற்காலம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடத்தில் எழுந்தருளியிருக்கிறவாளுமான, ஸ்ரீமத் த்விஜப ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதி மஹா யதீந்திராளின், திருவுருவப்படத்துக்கு அலங்கார அர்ச்சனைகள் செய்விக்கப்பட்டு, வேணுகலாலங்கார பால வித்வான் மாஸ்டர் மகாலிங்கத்தின் வேணுகானக் கச்சேரி நடைபெற்றது. பிறகு எல்லோருக்கும் விபூதி குங்குமாக்ஷதை பிரஸாதங்கள் வழங்கப்பட்டது.

உத்ஸவம் இனிது முடிந்ததற்கு, ஸ்ரீமதாசாரியாள் பரிபூர்ணமான அனுக்ரஹமும், பிரம்மஸ்ரீ மணிசாஸ்திரிகளின் ஊக்கமும் பெருமுயற்சியும் அவருடைய நாற்றங்காலுக்கான நண்பர்களின் சகிபாத ஒத்துழைப்புமே காரணங்களாகும். பிரதி வருஷமும் இவ்வுத்ஸவம் மேன்மேலும் விமர்சையாக நடக்கும்படிக்கும், ஸ்ரீமத் ஆசார்யாள் பரிபூர்ணமாக அனுக்ரஹிக்கும்படியாக ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யாள் ஸ்வாமிகளை, அனேக ஸாஷ்டாங்க ப்ரணாமங்கள் செய்து இவ்வூர் மஹாஜனங்கள் பிரார்த்தித்துக் கொள்ளுகிறார்கள்.

டி. ஆர். வெங்கடராம சாஸ்திரிகள்.

வைதிக வர்த்தனி ஸபா புதுக்கோட்டை.

இச்சபையின் ஆதரவில் வழக்கம்போல் ஸ்ரீ பரமாசார்யாளின் அவதாரக் கொண்டாட்டமானது டவுன் வடக்கு ராஜவீதி மகா-ள-ள-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் பிராஞ்ச காலேஜில் நடத்தப்பட்டது.

14-5-37 வெள்ளிக்கிழமை தினம் காலை 7½ மணிமுதல் 8½ மணிவரை ஸ்ரீ பரமாசார்யாளின் மூர்த்திக்கு ஸஹஸ்ரநாமார்ச்சனை, உபநிஷத் பாராயணம் முதலியதும் அன்று முதல் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயணம் ஆரம்பித்து நடந்தது.

14—5—37 முதல் 21—5—37 முடிய பிரதிதினம் மாலை 6½ மணி முதல் 8 மணிவரை ஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் ஜயந்தி சரித்ர ப்ரவசனம் மாயவரம் பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரியவர் குமாரர் பிரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரியவர் அவர்களால் நடத்தப்பட்டது.

ஸமாப்தி தினமான 21-5-37 வெள்ளிக்கிழமை காலை 7½ மணி முதல் 8½ மணிவரை ஸ்ரீ பரமாசார்யாளின் பிம்பத்திற்கு, ஸஹஸ்ரநாமார்ச்சனை, உபநிஷத் பாராயணம் முதலியதும் அன்று ராத்திரி ப்ரவசனம் முடிந்தபிறகு ஸ்ரீ பரமாசார்யாளின் பிம்பத்தை சிபிகையில் ஆரோஹணிக்கச்செய்து மங்கள வாத்யத்துடன் க்ராமப் பிரதக்ஷிணம் நடந்தது.

G. பலையப்ப சாஸ்திரிகள் காரியதரிசி.
A. சிவஸ்வாமி சாஸ்திரிகள் உப அக்ராஸனர்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது
அசல் தங்க ஸைகளைப்போன்ற "கஸ்ஸாஸ் ப்லேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என். கல்யாணராமன் பத்தர். பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(20—5—37 தொடர்ச்சி.)

73. மூர்த்திமதி முக்திபீஜே
மூர்த்னி ஸ்தபகித சகோர ஸாம்ராஜ்யே |
மோதித கம்பா கூலே
முஹுர் முஹுர்மனஸி முமுக்ஷாஸ்மாகம் ||

மூர்த்திமதி - உருவத்தோடு கூடிய, முக்தி பீஜே - முக்திக்கு வித்தாயிருப்பவளும் (அதாவது முக்திக்கு வித்தே உருவெடுத்தாற் போலிருப்பவளும்), மூர்த்னி - சிரஸில், ஸ்தபகித சகோர ஸாம்ராஜ்யே-சகோரங்களுக்கு சக்ரவர்த்தியான சந்த்ரனைசெண்டுபோல் அணிந்திருப்பவளும், மோதித கம்பா கூலே-கம்பா நதியின் கரையிலிருப்பதற்கு ப்ரியமுள்ளவளுமான ஒரு மூர்த்தியிடத்தில், முமுக்ஷா-ஆனந்தமடையவேண்டுமென்ற ஆசையானது, அஸ்மாகம் மனஸி-நம்முடைய மனதில், முஹுர் முஹு:-அடிக்கடி (மேலுக்கு மேல்), உண்டாகிறது.

1. சகோர பக்ஷியானது சந்த்ரனுடைய நிலவையே ஆஹாரமாக உடையதென்பதாகச் சொல்லப்படுமாதலால் சந்த்ரனை சகோரங்களுக்கு ஸம்ராட்டாகச் சொல்லப்பட்டது.

74. வேதமயீம் நாதமயீம்
பிந்துமயீம் பரபதோத்யத் இந்துமயீம் |
மந்த்ரமயீம் தந்த்ரமயீம்
ப்ரக்ருதிமயீம் நௌமி விச்வ விக்ருதிமயீம் ||

1. வேதமயீம் - வேதங்களின் ரூபமாயும், நாதமயீம் - நாத ஸ்வரூபிணியாயும், பிந்துமயீம் - பிந்து ஸ்வரூபிணியாயும், பரபதோத்யத் - மோக்ஷத்தில் உதிக்கும், இந்துமயீம் - சந்த்ர ரூபிணியாயும், மந்த்ரமயீம் - மந்த்ரரூபிணியாயும், தந்த்ரமயீம் - தந்த்ரரூபிணியாயும், ப்ரக்ருதிமயீம் - ப்ரக்ருதிரூபிணியாயும், விச்வ விக்ருதிமயீம் - ஜகத்திலுள்ள எல்லாவற்றையும் தன்னுடைய பரிணாமங்களாயுடையவளுமான ஸ்ரீ காமாக்ஷியை, நௌமி - நமஸ்கரிக்கிறேன்.

1. பரப்ரம்ஹமானது ஸ்ருஷ்டியோன்முகமாக ஆகும்போது தன்னுடைய விமர்சரூபமான சக்தியிலிருந்து மஹா பிந்துவாக ஆவிர்ப்பவித்து அதிலிருந்து நாதமும், அதிலிருந்து ஸகலப்ரபஞ்சமும் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது

'பரசிவ ரவிகர நிகரே ப்ரதிபலதி விமர்ச தர்பணே விசதே |
ப்ரதிருசி ருசிரே குட்யே சித்தமயே நிவிசதே மஹாபிந்து: ||
ஸ்புரிதாத் அருணாத்பிந்தோ: நாதப்ரம்ஹாங்குரோ ரவோ [வ்யக்த: |
தஸ்மாத் ககன ஸமீரண தஹனோதக பூமி வர்ண ஸம்பூதி: ||'

2. இவ்விதமாக ஏற்படும் விச்வமானது (ப்ரபஞ்சமானது) ப்ரக்ருதிமயியான (ஆதிகாரண வஸ்துவான) அம்பாளுடைய விக்ருதியாக (பரிணாமமாக) இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படிப் பாலிலிருந்து தயிரும் வெண்ணையும் நெய்யும் விகாரங்களாக (வேறு ரூபங்களாக) ஏற்படுகின்றனவோ அம்மாதிரி ஸகல ப்ரபஞ்சமும் அம்பாளுடைய விகாரங்களாய் இருப்பதாக சாக்தர்களால் சொல்லப்படும். (இதை பரிணாமவாதமென்று சொல்லப்படும்) இது சாக்தர்களுடைய ஸித்தாந்தம்.

75. புரமதன புண்யகோடீ
புஞ்ஜித கவிலோக ஸூக்தி ரஸதாடீ |
மனஸி மம காமகோடீ
விஹரது கருணா விபாக பரிபாடீ ||

புரமதன - புரங்களை அழித்த பரமசிவனுடைய, புண்யகோடீ-புண்ணியத்தின் எல்லையாயிருப்பவளும் (அதாவது, அவர் செய்தபாக்யத்தால் கிடைக்கப் பெற்றவளும்), புஞ்ஜித கவிலோக ஸூக்தி ரஸதாடீ - கவிலோகத்திலுடைய (கவிகளுடைய) வாக்குகளின் ரஸங்களுடைய சேர்க்கையான ரூபமாயிருப்பவளும் (அதாவது, கவிகளுடைய உயர்ந்ததான வாக்குகளால் ஸ்துதி செய்யப்பட்டவளும்), கருணாவிபாக பரிபாடீ - அதிகமான கருணையே உருவெடுத்தாற்போல் இருப்பவளுமான, காமகோடீ: ஸ்ரீகாமாக்ஷியானவள் மம மனஸி - என்னுடைய மனதில், விஹரது - விளையாடிக்கொண்டிருக்கட்டும்.

76. குடிலம் சடுலம் ப்ருதுலம்
ம்ருதுலம் கச நயன ஜகன சரணேஷு |
அவலோகிதம் அவலம்பிதம்
அதிகம்பாதடம் அமேயம் அஸ்மாபி: ||

கச நயன ஜகன சரணேஷு - கூந்தல்களிலும் கண்களிலும் நிதம்ப ப்ரதேசத்திலும் சரணங்களிலும், குடிலம் சடுலம் ப்ருதுலம் ம்ருதுலம் - (முறையே) வளைந்தும் சஞ்சலத்தோடும் பருத்தும் ம்ருதுவாயும் இருக்கிற, அமேயம் - அளவிடமுடியாத (அதாவது, மனதிற்கு எட்டாததான) ஒரு மூர்த்தியானது, அஸ்மாபி:-நம்மால் அதிகம்பாதடம் — கம்பாநதிக்கரையில், அவலோகிதம் — பார்க்கப்பட்டது, அவலம்பிதம் - சரணமடையப்பட்டது.

1. கசங்களில் குடிலமாயும், நயனங்களில் சடுலமாயும், ஜகனத்தில் ப்ருதுளமாயும், சரணங்களில் ம்ருதுளமாயும் அம்பிகையின் ரூபமிருப்பதாக இதில் வர்ணிக்கப்பட்டது. இதேமாதிரி ஸ்ரீ மதாசார்யாளும்

'அராளா கேசேஷு ப்ரக்ருதிஸரளா மந்தஹஸிதே
சிரீஷாபா சித்தே த்ருஷதுபல சோபா குசதடே |
ப்ருசம் தன்வீ மத்யே ப்ருதுருரஸிஜாரோஹவிஷயே
ஜகத் த்ராதும் சம்போர் ஜயதி கருணா காசிதருணா ||'

என்று 'ஸௌந்தர்யலஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

77. ப்ரத்யங் முக்யா த்ருஷ்டியா
ப்ரஸாத தீபாங்குரேண காமாக்ஷ்யா: |
பச்யாமி நிஸ்துலமஹோ
பசேளிமம் கிமபி பரசிவோல்லாஸம் ||

காமாக்ஷ்யா: - காமாக்ஷியினுடைய, ப்ரஸாத தீபாங்குரேண-அனுக்ரஹமாகிற தீபச்சுடரால் (உண்டான), ப்ரத்யங்முக்யா - அந்தர்முகமான, த்ருஷ்ட்யா - பார்வையால், நிஸ்துலம் - இணையற்றதும், பசேளிமம் - பழுத்ததுமான, கிமபி - ஒரு (வர்ணனையிலடங்காத) பரசிவோல்லாஸம் - பரமசிவனுடைய உல்லாஸத்தை (ஸ்வரூபத்தை, அதாவது மோக்ஷானந்தத்தை), பச்யாமி - பார்க்கிறேன்.

1. அம்பிகையின் அனுக்ரஹத்தால் சிவஞானம் ஏற்படுவதாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திலும் 'சிவஞான ப்ரதாயினீ' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

78. வித்யே விதாத்ரு விஷயே
காத்யாயனி காளி காமகோடி கலே |
பாரதி பைரவி பத்ரே
சாகினி சாம்பவி சிவே ஸ்துவே பவதீம் ||

வித்யே - (வித்யா ரூபிணியான) ஸரஸ்வதீ ரூபத்தையுடையவளே, விதாத்ரு விஷயே - (அந்த ஸரஸ்வதீ ரூபத்தில்) ப்ரம்ஹாவின் காந்தையாயிருப்பவளே, காத்யாயனி காளி காமகோடி கலே பாரதி பைரவி பத்ரே சாகினி சாம்பவி சிவே - காத்யாயனீ காமகோடீ, கலா, பாரதீ, பைரவீ, பத்ரா, சாகினீ, சாம்பவீ, சிவா என்ற பெயர்களையுடையவளே, பவதீம் - உன்னை, ஸ்துவே - ஸ்துதி செய்கிறேன்.

1. அம்பிகையானவள் தேவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டி காத்யாயன மஹர்ஷியுடைய ஆச்ரமத்தில் ஆவிர்பவித்து அவரால் தன் பெண்ணாக ஸ்வீகரிக்கப்பட்டதினால் காத்யாயனீ என்று பெயர் ஏற்பட்டது. காளீ என்ற நாமம் அம்பாளுக்கு ஏற்பட்டதற்கு அனேகம் காரணங்களுண்டு. கருப்பு வர்ணமாயிருப்பதையும், காலத்திற்கு அதீதமாயிருப்பதையும் இந்தப் பெயருக்கு இரண்டு காரணங்களாகச் சொல்லலாம். 'கலாத்மிகா' 'கலாநாதா' 'கலாமாலா' 'கலாவதீ' என்ற ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திய நாமங்களின் பாஷ்யத்தில் கலா என்ற பதத்திற்கு அனேக அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளின் ரூபமாக அம்பிகையிருப்பதால் கலா என்ற பெயர் ஏற்பட்டது. வித்யா, விதாத்ருவிஷயா, பாரதீ என்றவை ஸரஸ்வதியின் பெயர்கள். பைரவராகிய சிவனுடைய பத்னியாக இருப்பதாலும், பீருக்கள் (ஸ்த்ரீகள்) ஸமூஹ ரூபமாயிருப்பதாலும் அம்பிகைக்கு பைரவீ என்ற பெயர் ஏற்பட்டது. மங்கள ரூபிணியாயும் மங்கள ப்ரதையாயுமிருப்பதால் பத்ரா என்று பெயர். சாகினீ என்பது மூலாதார பத்மத்திலிருக்கும் (அம்பிகையின் ரூபிணியான) யோகினிக்குப் பெயர். தவிரவும், தேவீ மாஹாத்மயம், தேவீபாகவதம் இவற்றில் சொல்லப்பட்ட (அம்பிகா ரூபிணியான) சாகம்பரீ தேவியைக் குறித்ததாகவும் சொல்லலாம். சாம்பவீ, சிவா என்பவை சம்பு, சிவன் என்ற சிவனுடைய பெயர்களிலிருந்து ஏற்பட்டவை.

79. மாலினி மஹேச சாலினி
காஞ்சீ கேலினி விபக்ஷகாலினி தே |
சூலினி வித்ருமசாலினி
ஸுரஜன பாலினி கபாலினி நமோऽஸ்து ||

மாலினி - மாலினியாயும், மஹேசசாலினி - பரமசிவனுடைய பத்னியாயும், காஞ்சீ கேலினி - காஞ்சீபுரியில் விளையாடிக்கொண்டிருப்பவளாயும், விபக்ஷகாலினி - சத்ருக்களை ஸம்ஹாரம் செய்பவளாயும், சூலினி - சூலத்தை தரித்தவளாயும், வித்ருமசாலினி - பவழம் போன்ற நிறத்துடன் விளங்குகிறவளாயும், ஸுரஜனபாலினி - தேவர்களைக் காப்பாற்றுகிறவளாயும், கபாலினி - கபாலத்தைக் கையில் வைத்திருப்பவளாயுமிருக்கும், தே - உனக்கு, நம: அஸ்து - நமஸ்காரம் (இருக்கட்டும்).

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹூ வைகாசி-மீ 14௳

ப்ராஹ்மண மஹாஸபை.

சில வாரங்களாக எங்கும் நமது ஸநாதன தர்மப்ரசார முழக்கம் அதிகரித்து வருவதைக் கண்டு தர்ம தேவதையின் திருவுள்ளம் திருப்தியடைகின்றது நினைக்கிறோம். சென்னை, புரி, குடந்தை முதலிய பலவிடங்களில் தார்மிகர்கள் கூடி நமது தர்மத்தை ஸம்ரக்ஷிக்கக் கவலையுடன் பல ஆலோசனைகளைச்செய்த விவரம் யாவரும் அறிந்ததே மதத்தலைவர்களான நமது மடாதிபதிகள் இவ்விஷயமாகச் சில வாரங்களுக்கு முன் செய்த அரிய முயற்சிமூலம் ஸநாதன தர்மிகளுக்கு உண்டாயிருக்கும் புதிய ஊக்கத்தையும் சுறுசுறுப்பையும் விளக்காமல் ஸநாதனிகள் மேல்மேலும் தங்களுடைய உரிமைகளையும், கொள்கைகளையும், யாவருமறியும்படி தீவ்ரமாகப் பிரசாரம் செய்ய முன் வந்திருப்பது மிக்க ப்ரயோஜனமுள்ளதாகும். இவ்விஷயமாகச் சென்றவாரமும், இந்த வாரமும் குடந்தையில் நடந்தேறிய ப்ராஹ்மண மஹாஸபைகளின் நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் நமது வாசகர்கள் பத்ரிகைகளில் கவனித்திருக்கலாம். நமது தலைவர் பிரம்மஸ்ரீ நடேச அய்யர் அவர்கள் குடந்தைக்கு வந்து தங்கி 2 வார காலமாகப் பல ஊர்கள் சென்று வெற்றிகரமாக தர்மப்பிரசாரம் செய்துவரும் விவரத்தையும் நேயர்கள் கவனித்திருக்கலாம். இந்தப் பிரசாரங்கள் மூலமாக ஸநாதனதர்மிகளின் முயற்சியானது ஒருவாறு பலப்பட்டு வருவது திருப்தியளிக்கக் கூடியதாயிருக்கிறது.

குடந்தையில் நடந்த இரு ப்ராஹ்மண ஸபையிலும் பல அறிவாளிகள்கூடி மதவிஷயமாயும் ராஜ்ய விஷயமாயும் தீர்க்கமான யோஜனைகளும் விவரமான சர்ச்சைகளும் நடத்தி அநேக விஷயங்களை முடிவுசெய்திருப்பது நமது எதிரிகளால்கூட எளிதாகப் புறக்கணித்துவிடக்கூடியவையல்லவென்பது விளங்கும். விஷயாலோசனைக் கூட்டத்திலும், பஹிரங்க ஸபையிலும் நமது தலைவர்கள், ராஜ்ய, மத விஷயமாகப் பேசிய பேச்சுக்களும் இன்னும் விஸ்தாரமாகப் பிரசாரமடைந்தால், மிகுந்த பலனையளிக்கும்.

முக்யமாக ஸநாதனிகள் ராஜ்யத்தில் ஸம்பந்தப்படவேண்டிய அவச்யத்தையும் பலதரப்பட்ட கான்ஸர்வேடிவ் கக்ஷிகளோடுசேர்ந்து ஒத்துழைக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டதையும்பற்றி பத்திரிகைகளில் பிரபலப்பட்டு அதைப்பற்றி சர்ச்சையுங்கிளம்பிவிட்டதிலிருந்து இது எவ்வளவுதூரம் தேசத்தில் ஒரு உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருக்கிறதென்பது தெளிவாகும். கன்ஸர்வேடிவ், அல்லது விரவஸ்தா வாதிகளின் கக்ஷியொன்றை பலப்படுத்துவதைப்பற்றி ஏற்கனவே நமது பத்திரிகையிலும் சில வியாஸங்கள் வெளிவந்திருப்பதால் அதைப்பற்றி இச்சமயம் நாம் அதிகம் விவரிக்கவேண்டியதில்லை இதைப் பற்றி ஸாதகமாயும், பாதகமாயும் பத்திரிகைகளில் அபிப்பிராயம் வெளிவருவது ஸஹஜமே. அந்த அபிப்பிராயத்தை நாம் அலக்ஷ்யம் செய்யவும் நியாயமில்லை. நம் தேசத்தில் இதுவரையில் யோஜிக்கப்படாத இத்தகைய கக்ஷியொன்றைப்பற்றி பிரஸ்தாபம் ஏற்படுகையில் ஸாதக பாதக அபிப்பிராயங்களும் கிளம்ப வெளிவருவது இயற்கையே. எந்தத் தீர்மானமும் ஆரம்பத்தில் அஸாத்யமாயும், நகைப்பிற்கு இடமாயும் தோன்றுகிறது ஸஹஜமே. காங்கிரஸ் தீர்மானங்களில்கூட இத்தகைய அவஸ்தை முன் காலத்திலும் இப்போதுங்கூட இருந்து வருகிறது. வருஷக்கணக்காகப் பிரசாரம்செய்து ஒரு விஷயத்தை ஜனங்கள் ஏற்கும்படி செய்ய வேண்டியிருப்பதை யோசிக்குங்கால் இந்த கன்ஸர்வேடிவ் கக்ஷி பலனைப் பற்றி இன்றைக்கே ஒரு முடிவான தீர்மானத்திற்கு வருவது விவேகிகளான ராஜ்யவாதிகளுக்கு ஏற்றதல்ல. கன்ஸர்வேடிவ் கக்ஷியென்றால் ஸநாதனிகள் காங்கிரஸைப் போல் ஒரு பெரிய கக்ஷியாக அமைந்து ராஜ்யநிர்வாகம் முதலிய எல்லா வழியிலும் பிரவேசிக்கவேண்டும் என்று நிர்ப்பந்தமில்லை. சட்டசபைகளில் மெஜாரிடி ஸ்தானத்தைப் பிடிப்பதற்காக பெருவாரியான எலக்ஷன் கோலாஹலத்தில் ஈடுபடவேண்டுமென்ற அவசியமுமில்லை.

ஸநாதனிகள் கன்ஸர்வேடிவ் கொள்கையுடன் ஒரு கூட்டமாக இருந்து ராஜ்யவிஷயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென்பது மட்டுமே இந்த தீர்மானத்தின் கருத்தாக இருக்கவேண்டுமென்றே நினைக்கிறோம். சட்டஸபைகளில் இந்தக்கொள்கையுள்ளவர் இரண்டொருவர் இருந்தால்கூட போதும். இந்தக் கொள்கையுடன் அவர்கள் வேலைசெய்வதே முக்யமாகும். வெகு சிறுபான்மையோராக இருந்தால்கூட இவர்களுடைய வோட் பலத்தை இதர கக்ஷியினர் எப்போதும் அபேக்ஷிக்க நேரிடுவது நிச்சயம். அப்போது இதரக் கக்ஷியினரும் இவர்களுடைய அபிப்பிராயத்தை எளிதாக உதாஸீனம் செய்யத்துணியமாட்டார்கள். ஆதலால் ஸநாதனிகள் ஏதோ அஸாத்யமாயும், அநுபவத்திற்கு வாராததாயும் உள்ள ஒரு தீர்மானத்தைச்செய்துவிட்டதாக உண்மையான ராஜீய அறிவு பெற்றவர்கள் நினைக்க இடமில்லை.

இச்சமயத்தில் காங்கிரஸ் வாதிகள் கவனிக்கவேண்டிய விஷயத்தையும் குறிப்பிடவிரும்புகிறோம். குடந்தையில் இரு ஸபைகளிலும் ஸநாதனத் தலைவர்கள் காட்டிய கவலையையும், உணர்ச்சியையும் காங்கிரஸ்வாதிகள் நேரில் வந்து பார்த்திருந்தால் நலம். ஸநாதனிகள் காங்கிரஸை விட்டுத் தனியாக நிற்க மனமில்லாததை பல தடவைகளில் வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ்ஸானது மதஸம்பந்த விஷயங்களில் பிரவேசிக்காமல் இருந்தால் போதுமென்றே நமது தலைவர்களில் பலர் விரும்புகிறார்கள். இந்த விஷயம் குடந்தை பிராம்மண ஸபைகளில் நன்கு வெளிப்பட்டிருக்கிறது. ஆகவே நிலைமையை நன்கு உணராமல் காங்கிரஸ் தலைவர்கள் கண்மூடித்தனமாக நடந்தால் அவர்களுடைய நிலைமை காலக்கிரமத்தில் பாதிக்கப்படுமென்பதை இப்போதுகூட கவனிக்காமலிருப்பதற்கில்லை. பிராம்மண ஸபைத்தலைவர்கள் ஸ்நேஹ உணர்ச்சியுடன் சொல்லிய யோஜனையை காங்கிரஸ் தலைவர்கள் அஹம்பாவ உணர்ச்சியுடன் தள்ளிவிடாமல், மதாசார விஷயத்தில் நடுநிலைமை வஹித்து ஸநாதனிகள் உள்பட எல்லோருடைய பின்பலத்தையும் பெற்றுக் கொள்ளுவது விவேகமாகும். தற்போதிய காங்கிரஸ் தலைவர்களுக்கு இந்த நல்ல புத்தி உதிக்குமா?

குறிப்புகள்.

மற்றொரு ராஜா!

ஸம்ஸ்தானாதிபதிகளில் சிலர் அதர்மத்தை அபிவிருத்தி செய்ய முன்னணியில் வந்திருக்கிறார்கள். திருவாங்கூரைப் பார்த்து ஒருவர் பின் ஒருவராக ஆலயப்பிரவேச அக்ரமத்தைச்செய்யத் துணிவு கொண்டுவிட்டார்கள். ஸம்ஸ்தானாதிபதிகள் யதேச்சாதிகாரிகளாயிருப்பதாயும், ஜன அபிப்பிராயத்தைக் கேட்டு நிர்வாஹம் நடத்துவதில்லையென்றும் காங்கிரஸ் வாதிகள் குறை கூறிவந்தார்கள். சுதேச அரசர்களுடைய அந்த யதேச்சாதிகாரத்தை த்வம்ஸம் செய்துவிடவேண்டுமென்று காங்கிரஸ்ஸைச் சேர்ந்த ராஜ்ய வாதிகள் பாடுபடுகிறார்கள். ஆனால் இப்போது அந்த யதேச்சாதிகாரமானது மத நாச கார்யத்திற்கு உபயோகப்படுவதைக் கண்டு அந்த ராஜ்யத் தலைவர்களே குதூஹலிக்கிறார்கள். ஜனநாயகத்தைவிட யதேச்சாதிகாரமே சிறந்ததென அவர்கள் நினைக்கும்படியாயிருக்கிறது.

உத்தியாவர் ப்ரதேசத்தைச்சேர்ந்த ஸாரின் என்ற ஸம்ஸ்தானாதிபதியான தாகூர் ஸாஹிப் என்ற அரசர் தமது ராஜ்யத்திலுள்ள கோவில்களில் தீண்டாதாரை பிரவேசிக்க அனுமதி கொடுத்து ஓர் உத்திரவு போட்டுவிட்டார். அவருக்கு ஸபாஷ் பட்டம் கொடுத்து காந்திஜி முதலியவர் ஸந்தோஷம் செய்தி அனுப்பியிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. அந்த ராஜா காந்திஜி முதலியவர்களுடைய பாட்டையே கிளிப்பிள்ளை போல் திருப்பிப்பாடியிருப்பதுதான் விநோதமாயிருக்கிறது. ஹிந்துக்களுடைய வேதங்களிலோ, சாஸ்த்ரங்களிலோ தீண்டாமைக்கு ஆதாரமே கிடையாதென்று இந்த ராஜா கண்டுபிடித்துவிட்டாராம்! இதுவரையில் தாம் செய்துவிட்ட பெரிய தவறை இந்த உத்திரவு மூலம் ஸரிப்படுத்தி விட்டாராம்! நமது வேதங்களையும், சாஸ்த்ரங்களையும் பற்றி இந்த மஹாராஜாவுக்கு இவ்வளவு தெளிவான அறிவு இப்போது உதயமாகிவிட்டது விசேஷமல்லவா! சிறிதுசித்த தேவதைகளின் மோஹம் அநுக்ரஹமும் இந்த ராஜாவுக்கு நன்கு பலித்துவிட்டதாகவே காண்கிறது. இவர் செய்யத் துணிந்த அதர்மத்திற்கு வேதசாஸ்த்ர ஆதாரம்கூட வேண்டுமோ?

இந்த அரசர் கோவில் பூஜாரிகள்மீது சீறி விழுகிறார். ஆலயப்பிரவேசத்திற்கு அவர்களே இடைஞ்சலாயிருப்பதாக இவருடைய எண்ணம் போலும்! பூஜாரிகள் ஞானமற்றவர்களாயிருப்பதாயும் அவர்களை நல்ல ஞானம் பெற்றவர்களாகச் செய்யத் தாம் முயற்சிக்கப்போவதாயும் இவர் சொல்லுகிறார். இது பூஜாரிகளை பயமுறுத்தி அதர்மத்தை ஸ்தாபிக்கச் செய்யும் தந்திரமேயாகும். ராஜா சொற்படி தாளம்போடும் பூஜாரிகளைத் தயாரித்துவிட்டால் நல்லதல்லவா! எப்படியும் பூஜாரிகளுக்காக ஏற்படும் பள்ளிக்கூடத்தில் இந்த அரசரும் சேர்ந்து படிப்பது பயனுள்ளதென்று நமக்குத்தோன்றுகிறது.

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Mukkamala, Amalapuram Taluq,
East Godavary Dt.,

தென்னிந்திய பிராம்மண மஹாநாடு.

சென்றவாரம் நமது ஆர்யதர்மத்தில் பிரசுரித்திருந்தபடி மே-மீ 25௳ திங்கட்கிழமை தென்னிந்திய பிராமணர்களின் மஹாஸபை கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் மடத்தில் விசேஷ உத்ஸாகத்துடன் ஆரம்பமாயிற்று. பல ஜில்லாக்களிருந்தும் பிரதிநிதிகள் விஜயம் செய்திருக்கின்றனர்.

மே-மீ 24௳ மாலை 6 மணிக்கு ஆசார்யஸ்வாமிகள் மடத்தின் வாசலில் ஹனுமத் த்வஜாரோஹணம் சாஸ்திரீய முறையில் நடைபெற்றது. ஸ்ரீமான் S. மஹாலிங்கய்யர் அவர்கள் த்வஜத்தை மஹாஜனங்களின் கரகோஷங்களுக்கிடையில் ஏற்றிவைத்தார். ஸ்ரீமான் M. K. வைத்யநாதய்யர் அவர்கள் ராமாநுஜ தாதாசாரியர் அவர்களும் த்வஜாரோஹணத்தைப்பற்றி பேசினார்கள்.

மறுநாள் காலை 7-மணிக்கு மகாஸபை அக்ராஸனாதிபதி செங்காலிபுரம் எஸ். ஸ்ரீநிவாசய்யர் அவர்கள் அவரது ஜாகையிலிருந்து மேளவாத்யகோஷம் வேதகோஷம் இவைகளுடன் ஊர்வலமாக ஸ்ரீ ஆசார்யசுவாமிகளின் மடத்திற்கு அழைத்து வரப்பட்டார். மஹாஸபையின் ஆரம்பத்தில் வேதமந்த்ரங்களால் பிரார்த்தனை செய்யப்பட்டது. அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத் தலைவர் மதுரை ஸ்ரீ N. நடேசய்யர் அவர்கள் மஹாநாட்டை திறந்து வைத்து ஆழ்ந்த கருத்துள்ள ஒரு பிரஸங்கத்தைச் செய்தார், பிறகு வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் அட்வகேட் எம். கே. வைத்யநாதய்யர் அவர்கள் ஸமயோசிதமான விஷயங்களை வெளியிடும் பிரஸங்கத்தைச் செய்து தலைமை ஸ்தானத்திற்கு ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸய்யர் அவர்களை பிரேரித்தார். மஹாநாடு காரியதரிசி ஸ்ரீமான் வைத்யநாதசாமி அய்யர் அவர்கள் அக்ராஸனாதிபதியின் குணவிசேஷங்களைப் புகழ்ந்து ஆதரித்துப் பேசினர். ஸ்ரீமான் எஸ். சாமிநாத சாஸ்திரிகளும் இதை ஆதரித்துப் பேச அக்ராஸனாதிபதி தலைமைஸ்தானத்தில் அமர்ந்தார்.

தலைவர்களுக்கு மாலை சூட்டப்பட்டது. அக்கிராஸனாதிபதி அவர்களுக்கு தேக அசௌகர்யமிருந்ததால் அவர்களுடைய சிறிய முகவுரைப் பிரஸங்கத்திற்குப் பிறகு மஹாநாட்டு கார்யதர்சி, விஸ்தாரமானதும் பல முக்ய ஆலோசனை ததும்பியதுமான தலைவருடைய தலைமை பிரஸங்கத்தைப்படித்தார்.

மாலை 4 மணிக்கு மடத்தில் விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது. திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர், திருச்சி அட்வோகேட் ஜயராமய்யர் அவர்களும் விஜயம்செய்திருந்தனர். பல முக்கிய தீர்மானங்களைப்பற்றி பலமான சர்சைகள் நடைபெற்றன. இரவு 8 மணிக்கு மஹாநாட்டின் பஜனை ஸமாவேசனத்திற்காக ஸ்ரீ T. M. கிருஷ்ணய்யர் அவர்கள் எல்லோரும் பரவசமாகும்படி பக்திரஸம் ததும்பிய திருப்புகழ் பஜனை நடத்தினர். இரவும் விஷயாலோசனைக் கமிட்டிகூட்டம் நடைபெற்றது.

மே 26௳ புதன் கிழமை காலை 8-மணிக்கு மஹாநாடு ஆரம்பமாயிற்று. பொது ஜனங்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். கன்ஸர்வேடிவ் பார்டியை ஏற்படுத்துவது போன்ற பல முக்கிய விஷயங்களைப் பற்றி தலைவர்கள் பேசினார்கள். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதன் முழுவிவரம் அடுத்த வாரம் வெளிவரும். மஹாநாடு நடைபெற்றுவருகிறது. பிரதிநிதிகளுக்கு சாப்பாடு முதலியவைகளுக்கு விசேஷ வசதிகளைச் செய்து மஹாநாட்டை சிறப்பாக நடத்திவருவதற்கு கார்யதரிசி வைத்யநாதசாமி அய்யரை பலரும் புகழ்கின்றனர். (நமது நிருபர்.)

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.)

இருபெரியாரை இழந்தோம்!! வேதராசி எனத்தகும் வாக்குடை ஸ்ரீ சுப்ராம கனபாடி ஸலக்ஷணமாக பாஷ்யத்துடன் பல ராஜாங்கங்களில் பரீக்ஷை கொடுத்து பரீக்ஷகராகவுமிருந்து சென்றவாரம் பூத உடலை நீத்தார். 108முறைக்கதிகமாக யாதொரு ப்ரதிப்ரயோஜனத்தைக் கோராமல் ஸப்தாஹத்தை நடத்திவந்த அபிநவசுக, தருவை ஸ்ரீ லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகளவர்கள் சென்ற ஞாயான்று பரலோகம் சென்றார். இத்தகையோர் இறந்தும் இருந்தும் செய்த உபதேசம் பல பல.

பொய்ப்ரசாரம்? திருவாங்கூர் மன்னரிடம் வேதசாஸ்த்ர விசாரத சிஷ்டவர ப்ரும்மஸ்ரீ ராமேச்வரம் வெங்கடாசல தீக்ஷிதர்வாளது பந்து சொந்த கார்யமாக சென்றபோது ராமேச்வரம் கோயிலையும் சண்டாளருக்கு திறந்து விடுங்கள் என்று மன்னர் கூறினர். அதைக்கொண்டு பத்ரிகை நிருபர் ராமேச்வரம் கோவிலில்விட எல்லோரும் ஸம்மதித்ததாக எழுதிவிட்டார். இதை மறுக்கும்படி ப்ரும்மஸ்ரீ தீக்ஷிதர்வாள் என்னிடம் நேரில் கூறினர்.

பண்டிதபரிஷத்! பணம் பல செய்யும்! சில பண்டிதரை மயக்கி விட்டது. அநியாயமாக தர்மத்தைச் சிதைக்க கலி பற்பலவகையில் முயல்கிறார். அந்தோ என்னென்ன நடக்கப்போகிறதோ அறியோம். ஸரியான காலத்தே ஆர்யதர்மம் செய்த எச்சரிக்கையை சிந்தையில் கொண்டால் சீர்பெறலாம்.

தனிசுதந்தரமெங்கே? தர்மத்தை காக்க முன்னர் ஸமூஹ பஹிஷ்காரம் முதலிய விதிகளிருந்தன. டோர்டேன் என்றவிடத்தே ஓர் தனிநர் தன்மனைவியிருக்க மற்றோர் மனைவியை மணக்க ஆரம்பித்தார். சீர்திருத்த கோஷ்டி கறுப்புக்கொடி ஆர்பாட்டம்செய்து கலைக்க முயல்கிறது. நவநாகரிகக் கொடுமை தனி மனிதசுதந்திரத்தை அழிக்கிறது.

இந்தியருக்கில்லையே!! தேசிய ஸபையில் மஹம்மதியருக்கு மத சுதந்திரமுண்டென உத்கோஷம் செய்கின்றனர். நமக்கோ தன் கன்யகையை ஸத்பாத்ரத்தில் ஸத்காலத்தில ளிக்க சுதந்திரமில்லை! நீச ஸஹவாஸத்தை விலக்க அதிகாரமில்லை. என்னே சுதந்தரம் பேசும் ஸபை.

காலடியில்பீதி! ஸ்ரீ சங்கரஜயந்தி காலத்தில் பற்பல பண்டித ரத்னங்கள் ஆங்கு உபன்யாஸம் செய்தார்கள். ஆனால் மிக ப்ரஸித்தரான சில பண்டிதருக்கு அவகாசமளிக்கப்படவில்லை. காரணமென்னே! ஆலயப்ரவேச விஷயமாக அவர்கள் பேசிவிட்டால் போலீஸ் வந்துவிடுமென்ற அச்சம்போலும்? அல்லது அவகாசமில்லையோ.

ஆமோதநம்! கொச்சி ராஜனது தீரத்தன்மையை, தர்மாபிமானத்தைக் கொண்டாடி நேரில் அவரைக்கண்டு ஆமோதநம் செய்ய ப்ரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் சென்றவாரம் அரசனை பேட்டிகண்டுவந்தார். பலரிங்ஙனம் தார்மிகருக்குத் ஸஹாயமளிக்கவேண்டும்.

சிவராஜுக்கு ஸ்தானம்!

இந்தியா சட்டஸபையில் எம். ஸி. ராஜா வகித்துவந்த ஸ்தானத்திற்கு ராவ்ஸாஹிப் என். சிவராஜ் என்ற தீண்டாதார் தலைவரே வைஸ்ராயால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இவர் பிரபல சுயமரியாதைக் கோஷ்டிகாரர். இந்த ஸ்தாபனம் தீண்டாதாருக்கே ஏற்பட்டதோ!

குரானுக்கு நெருப்பு வைத்ததாக ஒரு ஹிந்து கொல்லப்பட்டார்.

ஷிகார்பூர் என்ற இடத்திலுள்ள மசூதியில் மஹம்மதிய வேதப்புஸ்தகமாகிய குரானுக்கு யாரோ தீ வைத்துவிட்டதாக மஹம்மதியர்கள் ஆத்திரம் அடைந்து பெரும் கூட்டம் கூடிக் கலஹம் செய்தனர். இந்தக் கலஹத்தில் ஒரு ஹிந்து வியாபாரி கொல்லப்பட்டார் போலீஸார் வந்து அமைதியை நிலைநிறுத்தினாராம்!

ராணிகஞ்ச் என்ற விடத்தில் ஒரு மசூதி அசுத்தம் செய்யப்பட்டதாகச் சொல்லி ஹிந்து-முஸ்லீம் மனஸ்தாபம் வலுத்துவிட்டது. போலீஸார் அவ்விடம் சென்று காவல்புரிந்து வருகிறார்களாம்.

காஞ்சீபுரம்.

ஸ்ரீ சங்கரஜயந்தி:— ஈச்வர-ஹூ த்திய ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசங்கர பகவத் பாதாள் ஜயந்தி ஸ்ரீ காமாக்ஷம்பாள் தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சங்கரபகவத் பாதாள் மூர்த்திக்கு 12—5—37 முதல் பிரதிதினமும் மஹாபிஷேகங்களும் விசேஷ பூஜைகளும் மிக விமரிசையாக நடத்தப்பட்டு 23—5—37 பானுவாரம் ஜயந்தி மஹோத்சவம் நான்கு ராஜவீதிகள் வழியாய் ஸ்ரீ காமாக்ஷம்பாள் ஸ்ரீ ஜகத்குரு சங்கர பாதாள் ஊர்வலத்துடன் முடிவுபெற்றது. பிரதிதினமும் ஆலயத்தில் மடம் ஆஸ்தான பண்டிதர் பிரம்மஸ்ரீ வெங்கட்ராம சாஸ்திரிகள் முதலியோரால் ஸூத்ரபாஷ்ய படனங்களும், புராணபடனங்களும் செய்யப்பட்டுவந்தன.

ஸ்ரீ உபநிஷத் பிரம்ம மடத்திலும் ஜயந்தி தினம் பிரம்மஸ்ரீ பிணையூர் மங்களம் சேஷகிரி தீக்ஷிதரவர்களால் கொண்டாடப்பட்டது. 12—5—37ல் பிரம்மவித்யா ஸ்வரூபம் என்னும் விஷயத்தைப்பற்றியும் 13௳ ஞானயோகத்தைப்பற்றியும் 14௳ ஸ்ரீ சங்கர ஜன்ம வைபவத்தைப்பற்றியும் ஸ்ரீ ஆசார்யாள் செய்த அமானுஷமான அநேக அத்வைத கிரந்தங்களைப்பற்றியும் பண்டித பாமர ரஞ்ஜகமாய் மிக்க விமரிசையாக உபன்யாசம்செய்தார்.

கோயம்பத்தூர்.

ஸ்ரீ சிருங்கேரி மடத்தைச் சார்ந்த சிஷ்யர்கள் டை ஊர் ராஜவீதியிலுள்ள ஸ்ரீ மடத்தை நன்கு அலங்கரித்து பிரதி தினம் மஹாந்யாஸ ஏகாதசருத்ரபாராயணத்துடன் திவ்யாபிஷேகம் வேதபாராயணம் ப்ரஸ்தானத்ரய பாராயணம் மாலையில் பிரம்மஸ்ரீ ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா அவர்களின் வேதாந்த உபன்யாசம் ஸ்ரீ பகவத்பாதாசார்யலக்ஷார்ச்சனை, பூர்த்தியன்று பல்லாயிரக்கணக்காக பிராம்மணபோஜனம், சிறுமிகள்கோலாட்டம் வீதிபுறப்பாடு முதலியன மிக விமர்சையாக நடத்தப்பட்டது.

நமது நிருபர்.

ராமேச்வரம்.

சென்றவாரம் யாத்ரைக்காக வந்த பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் பக்தர்களது பிரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீ சிருங்கேரிமடத்தில் ஸநாதனதர்மத்தைப் பற்றி ஓர் உபன்யாசம் செய்து உள்ளூர்ஸபையை சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்துடன் சேர்க்கும்படி கோரினர்.

நமது நிருபர்.

தஞ்சைஜில்லா பிராம்மண ஸபை.

மகா-ா-ஸ்ரீ ராவ்ஸாஹிப் N. நடேசய்யர் அவர்களின் அக்ராஸனப்ரசங்கம்.

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

இப்பொழுதோவெனில் அந்நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஒன்றன்பின் ஒன்றாக இப்பாரதபூமியின் ஆகாசத்தில் காந்திஜி, ராஜாஜி, நேருஜி இன்னும் பல கிரகங்களும் உதயமாகி காங்கிரஸென்கிற மதவிஷயமான கிரகணங்களையும் சமூக விஷயமான கிரஹணங்களையும் பரப்ப ஆரம்பித்துவிட்டன. செந்தாமரைப் புஷ்பம் மூழ்கிக்கொண்டுவிட்டது. ஆம்பல்மலர் ஆரம்பமாகிவிட்டது. இருட்டு விலகும், காலைப்பொழுது தோன்றும், சூரியன் உதயமாகும். மூடின தாமரை விகசிக்கும். ஸ்வதர்மம் தழையும். அடிமைத்தனம் நீங்கும். இனி மதாபிமானமதுவை உண்ணலாம் என்று ஸ்வதர்ம வண்டு யோஜனை செய்துகொண்டு இருக்கும்போது தாமரைத் தடாகத்தில் யானைக் கூட்டம் இறங்கி செந்தாமரைகளை த்வம்சம் செய்துவிட்டது.

रात्रिर्गमिष्यति भविष्यति सुप्रभातं भास्वानुदेष्यति हसिष्यति पंकजश्रीः ।
इत्थं विचिन्तयति कोशगते द्विरेफे हा हन्त हन्त नलिनीं गज उज्जहार ॥

பிராம்மணர்களே ஈன்று, பிராம்மணர்களே வளர்த்து, பிராம்மணர்களே விருத்தி செய்து தங்க வயதுக்கும் நொண்டுவந்த காங்கிரஸ் மஹா ஸபையைத் தாங்களே கொண்டு செலுத்த வேண்டியதாய் இருக்க, பூர்வகர்ம வினையின் பயனாகவோ வேறு எவ்விதமாகவோ அதை பிராம்மணர்கள் பறிகொடுத்து விட்டார்கள். யானைக் கூட்டம் அதில் நுழைந்துகொண்டு அட்டஹாஸம் செய்துவருகிறது. அனேக ஆயிரம் வருஷங்களாக ஈச்வரவாக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த வேதங்களையும் ஸ்ம்ருதி, புராண, இதிஹாஸ ஆகம தந்த்ரங்களையும், தர்மசாஸ்திரங்களையும் குப்பைத்தொட்டிகளுக்கு லாயக்காக கருதித் தள்ளிவிட்டார்கள். ஸ்வராஜ்யத்துக்குப் பாடுபடுகிறோம் என்று சொல்லிக்கொண்டு ஸ்வதர்மத்தை தீபாந்தரங்களுக்கு அனுப்பிவிட்டார்கள். ஸ்வதர்மத்துக்கும், ஸ்வராஜ்யத்திற்கும் நாதனமான அர்த்தங்களைக் கல்பித்துக்கொண்டுவிட்டார்கள். ஸ்வதர்மம் ஸ்வராஜ்யத்தில் அடங்கியிருக்கிறதென்றும், ஸ்வராஜ்யத்திலிருந்து ஸ்வதர்மத்தைப் பிரிக்க முடியாதென்றும், சப்தமும் அர்த்தமும், சூரியனும் வெப்பமும், சிவனும் சக்தியும், அக்நியும் தஹனசக்தியும், சந்திரனும் குளிர்ச்சியும், ஜலமும் தண்மையும் எப்படி அபின்னமாக சேர்ந்திருக்கின்றதோ அவ்வாறே ஸ்வதர்மமும் ஸ்வராஜ்யமும் சேர்ந்திருக்கிறதென்றும் ஆகையால் ஸ்வதர்மத்தை அனுஷ்டித்ததாலே ஸ்வராஜ்யமே ஸ்வராஜ்யம் ஆகுமென்றும் அவ்வித ஸ்வராஜ்யத்திற்கு எப்பொழுதும்போலவே இப்பொழுதும் பாடுபடத் தயாராயிருப்பதாயும் காங்கிரஸ் தலைவர்களுக்குப் பல முறை முறையிட்டும் அரண்யருதிதமாகவே முடிந்துவிட்டது. முன் ஒரு காலத்தில் கிளப்பிவிடப்பட்டு பின்னொரு காலம் கிளப்பிவிடப்பட்டு பின்னால் தலைசாய்ந்திருந்த ஆலயப்ரவேசக் கிளர்ச்சியும், தீண்டாமைவிலக்குக் கிளர்ச்சியும், வெட்ட வெட்ட மறுபடியும் கிளம்பின, ராவணன் தலைகள் போல் கிளம்பவாரம்பித்துவிட்டன. இதுமட்டுமல்ல. ஜாதியை ஒழிக்கிற கிளர்ச்சியும் பொது உடைமை அபேதவாத கிளர்ச்சிகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. சென்ற வாரத்தில் தஞ்சைமாநகரத்தில் நடந்த கல்வி சம்பந்தமான சம்மேளனத்தில் அக்ராஸனம் வகித்துவரும் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரி நிர்வாஹத்தில் பிரதான நோக்கம் வைத்து சுமார் இரண்டு வருஷகாலமாய் காங்கிரஸை விட்டு விலகியிருந்து இவ்வருஷத்தில் நடந்த எலக்ஷனில் அதில் பாதி சேர்ந்துகொண்ட ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் அவர்கள், கொள்கையை பகிரங்கமாக பின்வருமாறு வெளியிட்டார்.

'பஞ்சமர்களுக்கு ஆலயப்பிரவேச உரிமைகொடுத்து அவர்கள் அதில் நுழையும்வரையில் தனக்கு உறக்கமே கிடையாதென்றும் அக்காரியத்தை இப்பொழுதே, இங்கேயே ஆரம்பிக்க வேண்டுமென்றும், கனம் மந்திரி ஸ்ரீமான் ராவ்பஹதூர் M. C. ராஜா அவர்களை சென்னை சட்டசபையில் அது விஷயமான சட்ட மசோதாவை உடனே ப்ரேரேபிக்க செய்யுமாறு தான் அவருக்கு எழுதியிருப்பதாயும் இன்னும் மனம்போனபடி பொதுஜனங்களின் மனதைப் புண்படுத்தும்படியான விஷயங்களையும் அடுக்கடுக்காய் சொற்பொழிவு பொழிந்தனர். இவர் சென்ற 25 வருஷகாலங்களாக எந்த ஆலயங்களிலாவது ஆராதனம் செய்ததாக தெரியவில்லை. விக்ரஹ ஆராதனத்தில் எக்காலத்திலாவது அவருக்கு நம்பிக்கையிருந்ததாகவும் தெரியவில்லை. அவருடைய குருவும் சம்பந்தியுமான ஸ்ரீமான் காந்தியும் மதுரை, ஸ்ரீரங்கம், அனந்தசயனம், காசி முதலான இடங்களுக்கு பலமுறை விஜயம்செய்திருந்தும் அந்தக் கோயில்களிலும் ஆராதனம் செய்யவில்லை என்று தெரிகிறது. இதுமட்டுமல்ல. 'ஆலயங்கள் வேசிகள் க்ரஹங்களுக்கு ஸமானமானவைகளென்று வாய்கூசாமல் வெளியிட்டுள்ளார்.' பாருங்கள், இவர்கள் மூலமாய் இனி நமது அரசாட்சி நடக்கவேண்டியிருக்கிறது. திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்திற்குப் பிறகும் ஆலயங்களில் பிரவேசிக்க தயங்குகின்ற பஞ்சமர்களை இவர்கள் மூலமாயே சரிப்படுத்தவேண்டிய அவசியம் நேரிட்டு இவ்வருஷாரம்பத்தில் இவர்கள் இருவரும் ஒருவர்பின் ஒருவராய் திருவாங்கூர் ஆலயங்கள் சிலதில் ப்ரவேசித்தார்கள். இவர்களுடைய ஆதரவின் பேரிலேயே டாக்டர் கலின்ஸ் என்ற ஒரு ஐரிஷ் சீமான் ஜெயராம் என்ற பேருடன் ஹிந்துவாக மாறினதாகச் சொல்லிக்கொண்டு ஸ்ரீ அனந்தபத்மநாப ஆலயத்தில் பிரவேசித்து ஆராதனம்செய்து இப்பொழுது திருவாங்கூர் மஹாராஜாவைப் பின்பற்றி ஜாவா முதலான த்வீபாந்தரங்களுக்கு போயிருக்கிறார். இன்னம் எவ்விதமான உற்பாதங்களும், தர்ம விப்லவங்களும் ஏற்படுமோ தெரியவில்லை.

7. திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில், இடிவிழுந்ததுபோல் திடீரென்று ஆலயப்பிரவேச விளம்பரம் ஒன்றை மஹாராஜா அவர்கள் பிரசுரம் செய்தார்கள். அவருடைய பிரஜைகள் திடுக்கிட்டு என் செய்வதென்று விளங்காமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். எவரும் விரோதமான கிளர்ச்சியை கிளப்பக்கூடாதாம். விரோதமான பேச்சுக்களையும் பேசக்கூடாதாம். அதை ஆதரிக்கிற கூட்டங்களை மட்டும் கூட்டலாமாம். கீழ்படிந்து நடக்காத தந்திரிகள், போத்திகள் முதலானவர்களை வெளியேற்றிவிடுவோம். அவர்களுடைய உரிமைகளை பறிமுதல்செய்வோம், சம்பளபாக்கியை கொடாமல் நிறுத்திவிடுவோம் இதுமுதலான அநேகவிதமாய்ப் பயமுறுத்தி அவர்களை அதிகாரிகள் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டிருக்கிறார்களாம். பிரஜைகள் ஆலயத்துக்குள் போவதை நிறுத்தி எதிர்பார்த்தபடி போதுமான பஞ்சமர்கள் ஆலயங்களில் பிரவேசியாமல் சுவற்றிலும் தூணிலும் உள்ள பிரதிமைகளைமட்டும் ஆராதிப்பவர்களாகப் போனதிலிருந்து ஸம்ஸ்தான உத்யோகஸ்தர்கள் பிரதி தினமும் ஆலயங்களுக்குச்சென்று தரிசனம் செய்ததாக புத்தகங்களில் பதிவுசெய்து கையெழுத்து போடவேண்டுமென்று ரகஸ்யமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் பேசிக்கொள்கிறார்கள். பத்திரிகைகளும் உதவியாக நின்றுகொண்டு விளம்பரத்தை ஆதரிக்கிற சிற்சிலர்களின் வார்த்தைகளையும் கூட்டங்களையும் மலைமலையாக உயர்த்தியும், எதிர்க்கிற பெரும்பாலர்களுடைய நடவடிக்கைகளை சுருக்கியும் மறைத்தும் வருகின்றனர். குன்னை தள்ளினாலல்லாமல் குழியும் பறிக்கிறதென்ற பழமொழியை அனுசரித்து தகாத அநேக காரியங்கள் ஸம்ஸ்தானத்தில் நடைபெறுகின்றன. புரி தோன்றிய காலம்முதல் விளம்பர காலம்வரை அனுஷ்டிக்கப்பட்டு வந்திருந்த சட்டதிட்டங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் ஆசாரங்களுக்கும் மேற்கண்ட விளம்பரம் விரோதமென்பதை முற்றிலும் மஹாராஜா ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் அடிபிறழ்ந்தபடி சமாதானம் செய்ய முயற்சிக்கிறார்கள். கலிபேதத்தின் தன்மையையும் மாறுபட்டுக் கொண்டுவருகிற ஜனங்களின் நோக்கத்தையும் பிரகிருத ஜனங்களின் கோரிக்கையையும் அனுசரித்து நடந்துகொள்ளவேண்டியது அவசியமென்றும் மந்திரிகளோ ப்ரஜைகளோ மந்த்ராலோசனை ஸபைகளோ கலக்காமல் தானே ஸ்வதந்திரமாக மதசம்பந்தமான விதிகளை மாற்றத் தனக்கு பூர்ண அதிகாரம் இருக்கிறதென்றும் திவான் அவர்கள் மூலமாய் உத்கோஷித்து வருகிறார். அதற்கு ஆதாரமாக சிற்சில நீதி சாஸ்திர வாக்யங்களையும், மஹாபாரத வசனங்களையும் எடுத்துக்காட்டுகிறார். அவைகளை பரிசீலனை செய்வதில் இரண்டு விஷயங்கள் தெளிவாக ஏற்படுகின்றன. வேத வசனங்களும் வாக்யங்களும் அவர்கள் நிர்த்தாரணம் செய்கிற கொள்கைகளுக்கு நேர் விரோதமான கொள்கைகளை ஸ்தாபிக்கின்றன. வேத வாக்யங்கள் எந்தப் பிரகரணத்தில் இருக்கிறது என்பதைக் கவனியாமல் பிரகரண விஷயத்திலிருந்து அவைகளை கிழித்து சம்பந்தப்படாத விஷயங்களில் சேர்த்து அவைகளை வளைத்து, ஒடித்து கஷ்டார்த்தம் செய்துங்கூட அவர்கள் எதிர்பார்க்கிற சித்தாந்தம் வெளிவருவதில்லை.

திருவனந்தபுர ராஜ்யத்திலாவது வேறு எந்த ராஜ்யத்திலாவது ஆகமத்தில் அடங்கியுள்ள விதிகளையாவது, ஸ்ம்ருதிகளையாவது எக்காலத்திலாவது மாற்றினதாக தெரியவில்லை. சக்ரவர்த்திகளாக இருந்த தசரதமஹாராஜாவாவது, ஸ்ரீராமசந்திர மூர்த்தியாவது, தர்மபுத்திரராவது இவ்வித அதிகாரத்தைக்கொண்டு செலுத்தவேயில்லை. சூர்ய வம்சத்தில் உதித்த வேனன் என்ற ஒரு ராஜா சாஸ்திர விரோதமான காரியங்களை செய்யவாரம்பித்ததில் பிராம்மணர்களால் தாக்கப்பட்டு சம்ஹரிக்கப்பட்டதாகவும் இதிகாசங்கள் கூறுகின்றன. ராஜாக்கள் இப்பாரதபூமியில் எக்காலத்திலும் ஸ்வதந்திரர்களாக இருந்ததில்லை. ஒரு ராஜ்யம் ஏழு அங்கங்களோடு கூடினது. அதாவது ராஜா, மந்திரி, சபை, பொக்கிஷம், தேசம், கோட்டை, சைன்யம் இவ்வேழுகளில் ராஜா ஒருவர். ஆனால் சிரஸுக்கு சமானமானவர்.

(தொடரும்)

Registered No. M. 2913.

The Arya Dharmam.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 27th MAY 1937. [No 20.

THE NEED FOR A CONSERVATIVE PARTY.

The resolution adopted at the Brahmana Sabha meeting at Kumbakonam on the 17th instant, calling upon the Sanatanists to take part in politics with a definitely conservative outlook, is of far-reaching importance. Till now, the Sanatanists have been content to declare that their only aim was to secure non-interference in religion by the legislature or the executive. The Queen's Proclamation, the protection afforded to the personal law of the Hindus by Parliamentary Statutes enacted during the Company's regime, and the safeguards through the requirement of prior sanction of the Governor-General for Bills affecting religion or customs under successive Government of India Acts, all now stand abrogated. The Congress is soon to obtain charge of our political destinies. That the Congress wants to use its sway untramelled is clear from its insistence on "assurances" before taking power. It is now the time for all, including the Sanatanists, to take stock of the present and foresee and provide for the future.

The Congress is now oscillating under the pull of two forces. Pandit Nehru who interprets the past (though not *our* past) through the pages of Marx, wants to fashion our future on the preachings of Lenin. He regards religion as a "petty issue," a personal affair. He sees that our salvation lies only in the establishment of a Socialistic state. As for Dharma or religion, they have no place in his scheme of things. A growing section of Congressmen are under the sway of Pandit Nehru's thought and ideals. The other section of the Congress is under the influence of Mr. Gandhi, who is a religious mystic and whose aim is to see humanity converted to a new faith. Indian politics has only furnished a convenient or incidental field for trying his experiments on *Satyagraha* and *Ahimsa*. Mr. Gandhi's *satyagraha* includes things which to the ordinary mind are unconnected, the wearing of Khaddar, the removal of untouchability, Hindu Moslem unity, etc. His followers may say that his temple entry movement is intended for achieving political unity, but to Mr. Gandhi, it is purely a matter of religion.

If one sees through and below all the Congress talk about the substance of Independance, the *Satyagraha* of Council Boycott, the *Dharma* of Council entry, the indispensability of "assurances" for working the constitution to wreck it, etc., he will find that Mr. Nehru is working through the Congress for the establishment of a Socialistic State, and Mr. Gandhi for the spread of a new kind of cult and philosophy.

Are the majority of the people of this country, for either of these creeds? The Sanatanists are undoubtedly right in their belief that neither Hindu India, nor Moslem India, nor Christian India, would subscribe to either Mr. Nehru's Socialism or Mr. Gandhi's creed of Satyagraha. The Sanatanist's duty then is to range himself on the side of conservative forces in the country which will stand for the protection of religion and culture, and which will definitely oppose the forces of social disintegration and political revolution. The crowds who assemble in their thousands to greet Pandit Nehru, do not regard him as a person who is out to destroy and overturn the existing social and economic structure. They do not know that he has the scantest regard for their religious sentiments or social customs and traditions. They see in him only the spear-point of a force which is out to destroy their political subjection and economic thraldom, a leader who has undertaken to abolish their hunger and unemployment.

Now that provincial autonomy has come, and political power can be achieved only through organised agitation, it is necessary that the conservative elements in the country awake to the situation and organise themselves. It is a vain dream of the Sanatanist that he can be with the Congress and yet protect his religion, and culture. He should either be with the Congress and be a radical reformer or revolutionary in matters political, as well as social and religious, or he must speak and act as a conservative, declaring that he stands for the forces of law and order in all fields whether political, social, or religious. If it is true that the Sanatanists have real and fundamental difference with the Socialistic plans of Mr. Nehru, or the Satyagraha religion of Mr. Gandhi, their only course is to make common cause with the conservative elements, which will not, as their enemies might misrepresent, stand for the continuance of the present foreign domination, but which will stand for a genuine Swaraj, which includes the upholding of Swadesi ideals in matters of religion and custom as well as in matters of politics or economics.

"Education for All.":— The cry is for education, free education, more education, compulsory education and so on.

Does it occur to the politicians or the legislature, that along with bringing into existence an increasing class which has merely learnt to read, it would be wise to provide them with reading matter, useful and wholesome, that would teach them the art of moral and happy living?

Is that matter to be left to profit-seekers and speculators in book-trading, and ambitious adventurers who seek individual notoriety or social mastery by pampering appeals to the half-educated? Is the State not to take any care what books or newspapers are supplied to the widening circle of the barely literate who are so helplessly open to the influence of the persuasion, the fascination, the nourishment, or the poison of the printed word?

The Newspaper Habit:— The habit of reading a particular newspaper is a habit very difficult to alter. Most people cling to whatever has become familiar.

Congress is becoming communistic:— The Congress is losing both its national and practical outlook of things and is becoming more and more inter-national and communistic. Some of our young men are making a mess of thing by their ill-learnt and ill-digested communistic ideology and by their anti-national and anti-traditional preachings. *Dr. Varadarajulu Naidu.*

The Power of the Press:— "The Press of today is a branch of commerce. The newspapers are the most potent agents of instability. They have come to be looked upon as organs of commercial profit, like public houses or chain grocery stores. If a mood is likely to be popular, every popular paper will inflame it, so as not to let its rivals go ahead. Never has so potent a machine been used for influencing, moulding and dominating the thoughts and emotions of the crowd."

Hamilton Fyfe.

आचाराद्विच्युतो विप्रो न वेदफलमश्नुते ।
आचारेण तु संयुक्तः संपूर्णफलभाग्भवेत् ॥ २ ॥

A Brahmin who does not follow his rules derives no fruit: he who does, derives it in fullness.

South Indian Brahmin Conference.

Welcome Address by Mr. M. K. Vaidyanatha Iyer, B.A., B.L., Chairman of the Reception Committee.

The Fourth South Indian Brahmin Conference was held at Sri Sankaracharya Swamigal Mutt, Kumbakonam, on 25th May 1937, when the following address was delivered:—

It was a happy idea of the organisers of this conference to convert what was intended to be a sectional gathering of Madhyamas into the wider South Indian Brahmin Conference. Not that sectional Conferences have not their uses for it is much easier to bring together a limited number of people having common aims and purposes in view, but it is more imperative to-day that the Brahmin community as a whole, of which the Madbyamas form a part, should settle what their future is to be and how they should shape it.

Let me thank you all present here on behalf of the organisers and myself for your kindly response and welcome you to this our city and to this our conference. The first Brahmin Conference was held in this town in 1928 under the distinguished presidentship of the late lamented Dewan Bahadur T. R. Ramachandra Aiyar. Rao Bahadur N. Krishnasami Aiyangar was then the Chairman of the Reception committee. Our community is poorer for the loss of these two whose respective places in society is hard to fill.

The Brahmin Community has an ancient and unrivalled heritage. It was the community that reaped the first fruits of English education. It rose to temporal prominence under the foreign Government but with this has come the intellectual and cultural anarchy among the Brahmins of today. The Brahmin has been taught that his religion and culture are not for the present, whatever it had been in times long gone by. He is told that the caste system which is fundamental to his religion is the reason for his political decadence. He has been made to seriously believe that he has to swim only with the current and must go through the great social experiments of the West, whether he likes it or not. His temporal position has been openly attacked during the last 20 years but with a marvellous patience and self-abnegation he has not raised a voice in defence or protest, fondly believing that he should not add to existing difficulties and that he should sacrifice his interest for bringing the country nearer Swaraj.

The English-educated Brahmin has been the worst enemy of his community. It is he that has betrayed its interests, which he ought to have protected and preserved. The educated Mahommadan believes that Mahommad was the last prophet and the Koran is the last word for him. The educated Christian as sincerely believes that Christ is the Saviour and there is to be no improving on the Bible. Both these communities are therefore respected and feared. It is the Brahmin alone that somehow persuades himself that his religion must change to suit the times, age-long customs must be crushed with the weight of the legislature and that, in fact, religion is an unwanted handicap on his onward march to progress. The Brahmin has thus lost faith in himself and no wonder every other man has begun to look down on him. The orthodox Brahmin seeing the downward trend looks aghast and feels helpless, for his own men have forsaken him.

It is this state of things that has necessitated the bringing into existence of the various Brahmana Sabhas in the country. These gatherings have not been convened for any purpose which may antagonise the other communities in this land, Hindu and non-Hindu, or for working against their interests. Their purpose is to preserve their religion and culture from attacks and to preserve all that is good in the Hindu Society from being swept away by alien influences.

The Sarda Act is a most serious infringement of the religious liberty and freedom to act according to their conscience of the Brahmin and certain non-Brahman communities. It was passed in the teeth of opposition and most of the political parties combined to force the Act upon an unwilling people. There can be no greater demonstration of the pain that it has caused than the many betrothals that take place year in and year out in foreign territories where the Act does not operate, and to which families living in British India resort for solemnising their marital alliances. Not one political party has come to our rescue The biggest political party of the day which promises us the millenium coolly chuckles over the severe punishments that are imposed upon the conscientious delinquents. Nay, in many places, Congressmen have figured as prosecutors in Sarda Act cases. These are enough to shake the confidence of the people in the coming democracy.

The danger has not stopped there Our temples, hitherto considered sacred and inviolable, are sought to be thrown open to people for whose worship they were never intended. This is a breach of Agamic rules which control the worship in those institutions and a breach of trust.

Further inroads are sought to be made into the existing marriage and succession laws of the Hindus.

One reason for this is that the political parties controlled and manned by the Hindus have no religious sense about them; a love or respect for religion does not enter into their deliberations or activities.

The elder Nehru has declared "The Sastras have no use for me and I have no use for them." To the younger Nehru, religion is a "petty issue."

Another reason is that the sanatanist and conservative element in the Brahmin and non-Brahmin communities has not fully woke up to the situation or realised the danger ahead. Communism is fast lifting its head and if its course is not checked even now, it is sure to disorganise the existing social fabric and wipe out all that we hold dear and valuable.

The remedy is in our own hands. The forces that vote for the retaining of the family as the nucleus of the state, that recognise rights in private property and freedom of contracts, that love their religion as the *sine qua non* for leading a full, pure and noble life here and for man's emancipation hereafter, should join hands against those who dream of a socialist state, who desire to bring it into being either peacefully or, if necessary, by coercion and subjugation and who feel religion as an unnecessary and harmful appendage. Their voices must be heard in settling affairs of state—shaping of policies or carrying them into execution. This can never, I think, be achieved without forming into a group, political and otherwise, and functioning as such. To this end the sanatanists among the Hindus and those belonging to other religions must join into what may be compendiously termed a Conservative party. This question, I hope, will engage your full attention in this conference.

Another matter that equally deserves our attention is to recall to ourselves the Brahminic mode of life. It is true that it may not be possible for all to lead fully the life of the ancient orthodox Brahmin. It is equally true that many of the items of conduct in the daily routine prescribed for a Brahmin are not impossible of being brought into actual daily life. Where there is the will, there is the way. We cannot deserve well of other communities if we do not live up to our ideal. A cheap gibe for our opponents is the Vydeek Brahmin. He must no longer give room to criticism, well or ill meant. The Loukik must learn from the Vydeek the important portions of our Vedas and Smritis and our philosophy. He must also change his ways of living considerably so that his children and children's children may profit by his example.

I thank you for giving me this pleasant privilege of welcoming you, which must have been accorded to one far worthier than myself and I wish you all godspeed in the work that lies before you.

Madras Provincial Varnashrama Swarajya Sangha.

Propaganda tour in Tanjore District.

Rao Sahib N. Natesa Iyer, President of the M. P. V. S. S. and a party of Sanatanists in Kumbakonam consisting of Messrs. M. K. V. Iyer, S. M. Iyer, G. V. V. Iyer, S. S. Sastri, Agnihotram Ramanuja Thathachariar, have been touring round various places in the District the whole of last week.

Up to now they have visited Tanjore, Umayalpuram, Ganapathi Agraharam, Tiruvady, Tiruvadamarudur, and Mudikondan and started branch Sabhas in most of these places. Further work is being continued. Negapatam and Shiyali may be taken up about the 29th and 30th instants.

S. SWAMINATHA SASTRI,
Organising Secretary for Tj. Circle,
24—5—27.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

திருவடமருதூர்.

மறுநாள் வியாழக்கிழமை மாலை 4மணிக்கு தலைவர் கோஷ்டியார் திருவடமருதூர் விஜயம் செய்தார்கள். உள்ளூர் பிரமுகர் பலரும் தலைவரை வரவேற்றனர். ஸ்ரீமான் நடேசய்யர் அவர்கள் ஸநாதனதர்மமே உலகெங்கும் அநுஷ்டிக்கப்பட்டதென்றும் அது மிகுந்த மஹிமை வாய்ந்ததென்றும் கூறினர். தற்காலத்திலுள்ள மதத்தின் நிலைமை விளக்கி பிரசாரம் செய்யவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினர். பலமுயற்சி செய்தும் காங்கிரஸ் தலைவர் மதத்தை ஸம்ரக்ஷிக்க மறுத்துவிட்டதையும் விளக்கினார். அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசாரியார், பலவழிகளிலும் வ்ய வஸ்தை இப்பொழுது அழிக்கப்படுகிறது என்றும் அதைக் காப்பாற்ற ஸநாதனிகள் முற்படவேண்டுமென்றும் வற்புறுத்தினர். ஸ்ரீமான் மஹாலிங்கய்யர் அவர்கள் ஸநாதநி தற்காலம் ராஜீபத்துடன் கலக்கவேண்டும் என்றும் தைர்யமாக நின்று மதத்தைரக்ஷிக்க போராடவேண்டுமென்றும் கூறினார் ஸ்ரீமான் அய்யரவர்களின் உணர்ச்சி ததும்பியதும் உண்மை நிறைந்த வாதங்களை அடிப்படையாகக் கொண்டதுமான பிரஸங்கம் ஸபையோரிடை மிகுந்த உணர்ச்சியை உண்டுபண்ணிற்று. ஸ்ரீ எம். கே. வைத்யநாதய்யரவர்கள் ஸ்வதர்ம ரக்ஷணத்தை வற்புறுத்தினர். ஆர்யதர்மத்தை ஆதரிக்கவும் வேண்டினார். திப்பிராஜபுரம் வித்வான் சுப்ரமண்யசாஸ்திரிகள் உபசாரம் கூற கூட்டம் முடிவுற்றது. உள்ளூர் தர்மரக்ஷணஸபை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் கிளையாக்கப்பட்டது.

நமது நிருபர்.

மேல்மங்கலம் ஸநாதனதர்ம மஹாநாடு.

என்றும் காணாத உத்ஸாஹத்துடன் ஸநாதன தர்ம மஹாநாடு (3–5–37) ஈஸ்வர-ஞு சித்திரை-மீ 22உ சோமவாரதினம் அதிவிமரிசையாக நடைபெற்றது.

கூடலூர், வீரபாண்டி, பெரியகுளம், கீழ் மங்கலம், வத்தலக்குண்டு முதலிய பலபாகங்களிலிருந்து வித்வான்களும், ஆஸ்திகர்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். கிராம மஹாஜனங்கள் ஒற்றுமையுடன் மஹாநாட்டை மிகவும் அழகாக நடத்திவைத்தனர். மஹாசபைக்காக வாழைமரங்களாலும், மாவிலைத் தோரணங்களாலும் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டு கொட்டகை மிக ரம்யமாயிருந்தது.

அன்று மாலை 5மணிக்கு அக்கிராசனாதிபதி ஊர்வலம் ஆரம்பமாயிற்று பூர்ண கும்பத்துடன், 50 வேதவித்துக்கள் உபநிஷத் கோஷம் செய்ய, மேளவாத்தியத்துடனும், ஸ்ரீ மதாசார்யாள் படத்துடனும் அக்கிராசனாதிபதி அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க அத்யக்ஷரான மதுரை அட்வகேட் பிரம்மஸ்ரீ N. நடேசய்யரவர்கள், ப்ரம்ஹீபூதரான ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் புத்ரரும் சிஷ்யருமான திருநெல்வேலி அட்வகேட் ஆஸ்திக சிகாமணி பிரம்மஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் M.A., B.L., கவிரத்ன பிரம்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள் B.A., B.L., சோளவந்தான் ஆஸ்திக சிரேஷ்டரான பிரம்மஸ்ரீ வெங்கடாசலமய்யர் அவர்கள் B.A., B.L., இவர்கள் மாலையிடப்பட்டு மஹாநாட்டுக் கொட்டகைக்கழைத்துவரப்பட்டார்கள்.

மஹாநாடு வேதகோஷத்துடனும் தெய்வ ப்ரார்த்தனையுடனும் ஆரம்பமாயிற்று. வீரபாண்டி பிரம்மஸ்ரீ K. R. சதாசிவப்ரம்மம் அவர்கள் வரவேற்பு ப்ரசங்கத்தைப் படித்தார்கள். கவிரத்ன பிரம்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள் சநாதனதர்ம ரக்ஷகரான பிரம்மஸ்ரீ N. நடேசய்யரவர்களை அக்கிராசனம் வகிக்க பிரேரேபித்தார். அப்பிரேரேபணையை பிரம்மஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், சோளவந்தான் பிரம்மஸ்ரீ வெங்கடாசலமய்யர் முதலியோர் ஆமோதித்தனர். பலத்த கரகோஷத்துடன் அக்கிராசனாதிபதி மாலை இடப்பட்டு அக்கிராசனத்திலமர்ந்தார்.. அக்கிர சுமார் 1மணி நேரம் தம் பிரசங்கத்தைத் தமிழில் செய்தார்கள். மிக ஆழ்ந்த கருத்துள்ள இப்பிரசங்கத்தை மஹாஜனங்கள் மிகப் பொறுமையுடன் கேட்டனர். மாலை $6\frac{1}{4}$ மணி ஆய்விட்டபடியால் அநுஷ்டானத்திற்காக சபை ஒத்திவைக்கப்பட்டது.

இரவு 7 மணிக்கு மறுபடியும் சபை ஆரம்பமானது. முதலில் அக்கிராசனர் பிரசங்கம் செய்தார். நம் சநாதனதர்மத்தைக் காப்பாற்ற முக்கியமாக குழந்தைகளை, அடிப்படையான மதக் கல்வியுடன் முற்காலத்திலிருந்தபடி கிராமங்கள் தோறும் ஏற்பாடு செய்யவேண்டிய அவச்யத்தையும், இன்னும் ஸ்திரீதர்மம் முதலிய அரிய விஷயங்களையும் உபன்யசித்தார்கள்.

பிறகு அக்கிராசனாதிபதி அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு பிரம்மஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் சநாதன தர்மம் என்னும் விஷயத்தை $1\frac{1}{2}$ மணி நேரம் எளிய தமிழ் நடையில் யாவரும் அறியும்வண்ணம் உபன்யசித்தார்கள்.

பிறகு சோளவந்தான் பிரம்மஸ்ரீ வெங்கடாசலமய்யரவர்கள் ஸ்ரீ பூரி கான்பிரன்ஸின் நடவடிக்கை விபரங்களையும், பரிஷத் விபரங்களையும் விரிவாய் எடுத்துரைத்தார்கள்.

பிறகு கவிரத்ன பிரம்மஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் திருவாங்கூர் 'விளம்பரத்தைக் கண்டித்தும் சநாதனதர்ம வீரர்களான மேன்மைதங்கிய கொச்சி மஹாராஜா அவர்களையும், மேன்மைதங்கிய திருவாங்கூர் ஸீனியர் ராணி அவர்களையும் பாராட்டியும், சாரதாச்சட்டத்தைக் கண்டித்தும் மஹாஜர்கள் அனுப்பவேண்டிய அவசியத்தையும் விளக்கிச் சொன்னார்கள். ஜனங்கள் யாவரும் பண்டிதர்களின் உபன்யாசாம்ருத வெள்ளத்தைப் பருகி ப்ரம்மானந்தத்திலாழ்ந்தனர்.

பிறகு வீரபாண்டி பிரம்மஸ்ரீ சதாசிவப்ரம்மம் அவர்கள் தேவசேவை, தேசசேவை இவைகளின் தத்வங்களை விளக்கி, அக்கிராசனருக்கும், பண்டிதர்களுக்கும் தலைவர்கள் விஜயஞ்செய்யக் காரண பூதரான V. S ராமஸ்வாமி சாஸ்திரிகளுக்கும், சப்யர்களுக்கும் உபசார வார்த்தைகள் கூற சநாதனதர்மத்திற்கு ஜே என்ற கோஷம் வானத்தைப் பிளக்க, தலைவருக்கும், பண்டிதர்களுக்கும் வேதாசீர்வாதத்துடன் மரியாதைகள் வழங்கப்பட்டு சபை இரவு $9\frac{1}{2}$ மணிக்கு இனிது பூர்ணமானது.

தலைவர்களுக்கும், வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்கும் மகா-ா-ா-ஸ்ரீ M. சுப்பிரமணிய தீக்ஷிதரவர்கள் அன்புடன் ஆதித்யம் செய்துவைத்தார்கள்.

சிவராமகணபதி கனபாடிகள்,
மேல்மங்கலம்.

காஞ்சீபுரம்,

ஸ்ரீஸநாதனதர்மஸேவாஸங்கம்.

ஸ்ரீசங்கரஜயந்தி ஸம்பந்தமாய் இச்சபையின் ஆதரவில் 23—5—37 மாலை 4மணிக்கு ஸ்ரீசங்கராசார்ய மடத்தில் ஓர் ஸபை சேர்ந்தது. அச்சபைக்கு பிரம்மஸ்ரீ பிணையூர் மங்களம் சேஷகிரி தீக்ஷிதரவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள்.

ஸ்ரீஜம்புகேச்வரம் ஸ்ரீ ஆசார்யமடம் வித்யாலய அத்யக்ஷர் பிரம்மஸ்ரீ போலகம் ராமசாஸ்திரிகள் சதுர்வித புருஷார்த்தங்களைப்பற்றியும் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாள் பாஷ்யமூலமாய் வெளியிட்டுள்ள பல வேதாந்த ரஹஸ்யங்களைப்பற்றியும், தர்மமாகப்பட்டது யுக்தி முதலிய தால் ஊஹிக்கக்கூடியதுவை யல்லவென்றும் வேதம்தான் பிரமாணமென்றும் அதன் பிரமாணத்தை நிரீச்வரவாதிகளான ஜைமினயாதிகள் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்றும் சிரவணானந்தமாக இரண்டுமணி ஸாவகாசம் உபன்யாஸம் செய்தனர்.

பின்னர் அக்ராஸனர் ஸ்ரீசங்கரர் ஈச்வராவதாரமே யென்றும் தர்ம ஸம்ஸ்தாபனார்த்தமாயும் மத ப்ரவசனத்திற்காகவும் பாஷண்டமத கண்டனத்திற்காகவும் அவதரித்தாரென்றும் அளவற்ற அவருடைய அபூர்வ கிரந்தங்களே அவருடைய தெய்வத்தன்மையை விளக்குகிறதென்றும் அவருடைய உபதேசங்களைப் பின்பற்றுவோருக்கு ஸகல ஸாம்ராஜ்யங்களும் கிடைக்கும் என்றும் கூறிமுடித்தார்.

ஓர் அநுதாபத்தீர்மானம்:— இச்சபை உதவி அக்ராஸனாதிபதியும் ஸ்ரீகாமாக்ஷியம்பாள் ஸ்ரீகார்யம் ஸ்ரீமான் ராவ் பஹதூர் ரிடையர்டு டிப்டி கலெக்டர் அ. துரைஸ்வாமி அய்யர் அவர்கள் 7—5—37ல் காலகதியடைந்ததால் இச்சபைக்கும் ஸநாதன தர்மிகளுக்கும் நேர்ந்த பெரும் நஷ்டத்துக்காக மிக்க வருந்துவதாகவும் மேற்படியாரின் குடும்பத்தாருக்கு இச்சபையின் அனுதாபத்தைத் தெரிவிப்பதாகவும் ஓர் தீர்மானம் நிறைவேறியது.

அக்ராஸனருக்கும் உபன்யாஸகருக்கும் வந்தனோபசார மரியாதைகள் செய்யப்பட்டு ஸபை கலைந்தது.

ஸ்ரீ சுரேச்வராசார்ய கும்பாபிஷேகம்:— 23—5—37 காலை 3நாழிகைக்குள் ஸ்ரீசங்கராசார்ய மடத்தில் ஸ்தாபித்துள்ள ஸ்ரீசுரேச்வராசார்ய ஸ்வாமிகள் சிலாவிக்ரஹத்திற்கு அஷ்டபந்தன சாத்துப்படியும் மஹாகும்பாபிஷேகமும் மிக்க விமரிசையாய் நடத்தப்பட்டது. இது ஸந்தர்ப்பமாக ஸ்ரீ ஆசார்யாள் பரமபக்தையான எசயனூர் கோகிலாம்பாள் அம்மாளால் பிராம்மண சந்தர்ப்பணையும் நடந்தது.

ஸத்யவ்ரதன்.

The V. D. S. Sanskrit College, Kallidaikkurichi.

விளம்பரம்.

இந்த காலேஜானது, மதராஸ் யூனிவர்ஸிடியால், வியாகரண, மீமாம்ஸா சிரோமணி பாடங்கள் கற்பிக்க அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. வியாகரண சிரோமணியில் சேர்ந்து வாசிக்க விரும்பும் மாணவர்களுக்கு போஜனம், இடவஸதி முதலியன இனாமாக அளிக்கப்படும், கோடை ரஜாவிலிருந்து 1937 ஜூன் 10உ காலேஜ் திறக்கிறபடியால், மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 5—6—37-க்குள் இதனடியிற்கண்ட விலாஸத்துக்கு அனுப்பவேண்டும்.

எம். ராமலிங்க அண்ணாவி,
Corresponden[t]
கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா.

217

21586

மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக வ்யவஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

புனா மாருதிகோவில்

புனாவில் இந்த மாருதிகோவில் சம்பந்தமாகத்தான் சென்றவருஷம் பலமான ஹிந்து முஸ்லீம் கலஹம் எழுந்தது. ஹிந்துக்கள் ஆண்மையுடன் தம் உரிமையைக் காத்துக் கொண்டனர். இவ்வருஷம் ராமநவமி உத்ஸவத்தில் மாருதிகோவிலுக்கு உள்ளேயும் மேளக்கச்சேரி வைத்தால் முஸ்லீம்கள் கலகம் விளைவிப்பார்கள் என்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட் தடையுத்தரவு போட்டார். கோவிலுக்கு உத்ஸவம் நடத்தும் முறையில் அதிகாரிகள் குறுக்கிடுவதை வெறுக்கும் ஹிந்துக்கள், சத்யாக்ரஹம்செய்து தடையுத்தரவுமீறி சிறைசெல்லுகிறார்கள்.

இது ஒருபுறமிருக்க காங்கிரஸகாரர் ஒரு தின் முதுகுப் புண்ணை காக்காய் கொத்திய கதையாக ஒரு முயற்சி செய்தார்கள். சில தீண்டாத ஜாதியார்களையும் சேர்த்துக்கொண்டு 'ஜாதி ஹிந்துக்களுடன் சமமாக இவர்களையும் கோவிலுக்குள் விட்டால் சத்யாக்ரஹக்கிளர்ச்சியைப் பலப்படுத்துகிறோம்'' என்றுகூறி டிமாண்டுகளை கேட்டார்கள். உண்மையில் ஹிந்துக்களுடையதொழுகை உரிமையில் முஸ்லீம்கள் குறுக்கிடுவது தவறென்று காங்கிரஸ்காரர் மதித்திருந்தால் இந்த சந்தர்ப்பத்தில் இப்ப்ரச்னத்தை எழுப்பியிருக்கமாட்டார்கள். இப்போது சத்யாக்ரஹம் செய்கிறவர்களுடைய பலத்தைக் கெடுத்து முஸ்லீம்களைத் தீயவழியில் செல்ல தைரியமூட்டும். மற்றொரு பெரிய விஷயம் மறக்கப்படுகிறது. சுதேச சமஸ்தானங்களில் மன்னர்களே சட்டம்செய்ய உரிமையுண்டு. பிரிட்டிஷ் இந்தியாவில் தீண்டாதாரைக் கோவிலுக்குள் விட சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று காந்தி உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொண்டு சட்டம் உண்டாக்கும் முயற்சிக்குத் தம் சீடர்களை ஏவியிருக்கிறார். சட்டசபையில் மசோதா கொண்டுவந்து பிறகு அது நிறைவேறுவதற்காகப் பல சீடர்களும் காந்தியும் பட்டினி ஹடம் கிடக்ககூடும். அப்போது 'வீரமற்ற' சநாதன தலைவர்கள் இந்தப் பழிக்குப் பயந்து ஒதுங்கிவிடுவார்கள் என்றும் காங்கிரஸ்காரர் எதிர் பார்க்கக்கூடும்.

இப்போது புனாவில் நடப்பது வேறு விஷயம். 'ஹரிஜன'ங்களைக் கோவிலுக்குள் விடுவது சட்ட விரோதம். புனா ஹிந்துக்கள் செய்தது சட்டமறுப்பல்ல; ஜில்லா மாஜிஸ்ட்ரேட் 144-வது செக்ஷனைத் தவறான வழியில் உபயோகித்தாரென்று செய்யும் ஆக்ஷேபணையே. இவர்களை சாஸ்திரம் சட்டம் இரண்டையும் மீறுங்கள் என்று காங்கிரஸ்காரர் அழைக்கிறார்கள், அரசியல் காரியங்களில் சட்ட மறுப்பை நிறுத்தி வைத்திருக்கும் போது தர்மநாச காரியத்தில் தார்மிகர்களை சட்டமறுப்பு செய்யுங்கள் என்று கேட்பது காங்கிரஸ் மதம் போலும். அதுவும் ஹிந்து தர்மம் ஒன்றைத்தான் இவர்கள் தாக்க விரும்புகிறார்கள்.

எழுனூர், ஆர். நாராயணஸ்வாமி அய்யர்

ராமாபுரம்.
ஓர் யதீஸ்வரரின் அநாயாஸ ஸித்தி.

மாயவரம் ஜங்ஷன் ரயில்வேஸ்டேஷனுக்கு மேற்கில் சுமார் 1-மைல் தூரத்தில் உள்ளதும் காவேரிநதியின் வடபுறத்தில் உள்ளதுமான ராமாபுரம் என்னும் அக்ரஹாரத்தில் காலஞ் சென்ற ஈச்வர ஹு சித்திரைமீ 20உ ஞாயிற்றுக் கிழமை ஓர் யதீஸ்வரர் தற்செயலாய் அக்ராமத்திற்கு காலை 10-மணிக்கு வந்து மாலை 4-மணிக்கு அநாயாஸமாக ஸித்தியடைந்தவர்களாக ஆகிவிட்டார்கள். அப் பெரியார் சுமார் 80-வயதுள்ளவர், அவர் வைத்திருந்த உபநிஷத் புஸ்தகத்தில், "அகண்ட ஸச்சிதானந்த ஸ்வாமி நாமயதீச்வரர்" என்று நாமதேயம் எழுதப்பட்டிருந்தது. அவர் ஸித்தியடைந்ததும் காவேரி நதிக்கரையிலுள்ள மடத்தின்பின்புறத்தில் ஸமாதி செய்து அன்று முதல் 9-தினங்கள் பூஜா விசேஷங்களும் 10-வது தினம் மஹாபிஷேக பூஜையும் 11, 12. 13, தினங்களில் பாராயணம் ஸ்தோத்ரம், நாராயணபலி ஆராதனை முதலிய வைபவங்கள் யதாப்ரகாரம் பக்தியுள்ள கிராமத்தார்கள் ஆதரவுடன் உள்ளூர்வாஸிகளால் குருசிஷ்ய பாவத்தில் நடத்தப்பட்டது. கடைசி தினமாகிய ஆராதனையன்றுதினம் ஸ்ரீ சங்கரஜயந்தியும் சேர்ந்ததால் அனேக வித்வான்களால் ஆதி சங்கராசாரியாள் அவர்களின் அவதார மஹிமையைப்பற்றியும், ஸநாதன தர்மத்தைப்பற்றியும் பகவத்ஸன்னிதானத்தில் (ஸமாதி முன்னிலையில்) உபந்யாஸங்கள் நடத்தப்பட்டன.

ஒரு நிருபர்.

நாகூர்.
வசந்த உத்ஸவம்.

புண்ணியமான க்ஷேத்திரமாகிய நாகூரில் மேல அக்ரஹாரத்தில் டி. வீராசாமி ஐயரால் ஸ்தாபிக்கப்பட்டும் ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாள் சுவாமிகள் அவர்கள் அனுக்ரஹமும் பெற்று பாதுகையும் பட்டதான ஸ்ரீபஜனைமடத்தில் 13—5—37 வரையில் வசந்த உத்ஸவமும், ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவமும் வழக்கம்போல் அதி விமர்சையாய் நடைபெற்றது. அதில் 13—5—37ல் அகரமாங்குடி அபிநவ பாதராய்ய மஹாரத்தக, கல்யாண பிரம்மஸ்ரீ சிதம்பர பாகவதர் அவர்களால் ஸ்ரீராம ராஜ்ய பட்டாபிஷேகம் கதாகாலக்ஷேபமும் 14—5—37ல் காப்பணமங்கலம் பிரம்மஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் அவர்களால் உபந்யாசமும் 15—5—37 மாலை மல்லியம் வெங்கடரமணய்யர் அவர்களால் பாட்டுக்கச்சேரியும், திருவாரூர் வெங்கட்டராமய்யர் அவர்களால் புஞாட் கச்சேரியும், சாஸ்திரி பிரம்மஸ்ரீ மத்வாசாரியார் அவர்களால் வத்ஸலா கல்யாணம் கதாகாலக்ஷேபமும், 16—5—37ல் மாலை காளியாகுடி பிரம்மஸ்ரீ நடேசசாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் ராமாயணம் ராமஜனனம் முதல் பட்டாபிஷேகம் வரையில் உபந்யாசமும் சாஸ்திரி பிரம்மஸ்ரீ மகாலிங்கசாஸ்திரிகள் அவர்களால் மீனாக்ஷி கல்யாணம் கதாகாலக்ஷேபமும் 17—5—37ல் மாலை முதல் மதுரை பிரம்ம ஸ்ரீனிவாசய்யங்கார், ஸ்ரீ ரெங்கசாமி அய்யங்கார் அவர்களால் பாட்டுக்கச்சேரியும், 18-5-37 வசந்த உத்ஸவமும் 19—5—37 ஆஞ்சநேய உத்ஸவமும், சாஸ்திரி பிரம்மஸ்ரீ மத்வாசாரியார் அவர்களால் சுபத்திரா கல்யாணம் கதாகாலக்ஷேபமும் 20—5—37ல் விடையாத்தி உத்ஸவமும் நடத்தப்பட்டது.

ஒரு நிருபர்.

வீரபாண்டியில் தர்மப்ரசாரம்.

வீரபாண்டி கௌமாரியம்மன் உத்ஸவத்தில் 25-4-37 ஞாயிறு அன்று சதாசிவ ப்ரம்மம் அவர்கள் சொந்த கட்டிடத்தில் ஓர் ஸநாதன தர்மசபை நடந்தது. கலைமுத்தூர் அக்ரஹாரம் கே. ஆர். ராமஸ்வாமிசாஸ்திரிகள் அக்ராஸனம் வகித்தார். பி. என். ஸாமநீச்வர கனபாடிகள், குப்புசாஸ்திரிகள் ஸாமவேத பிரசார நாராயணசர்மாக்கள் முதலானவர்கள் பெரியகுளத்திலிருந்து வந்திருந்தார்கள். மேல்மங்கலம் அப்பு சுப்ரமண்ய சாஸ்திரிகள், சிவராம ச்ரௌதிகள், சிவராம கணபதி கனபாடிகள், கோமடம் சங்கரகனபாடிகள் முதலியவர்களும் வந்திருந்தார்கள். மாலை 4-மணிக்கு சபைகூடியது.

அக்ராஸனாதிபதியின் சபை கூடிய சோக்யப்ரஸ்தாபத்திற்கு பிறகு மேல்கண்ட வித்வான்கள் ஒவ்வொருவரும் ப்ரக்ருதகால திருவாங்கூர் மஹாராஜா நடத்திய பஞ்சமாலயப்ரவேச விஷயத்தைப் பற்றி கண்டித்தும் கொச்சி மஹாராஜா அவர்கள் கூடல்மாணிக்கம் கோவில் முதலிய தமது ராஜ்ய கோவில்களில் ஸநாதன தர்ம பாதுகாப்பை நடத்திவரும் பெருமையைப்பற்றி ஒவ்வொருவரும் தனித்தனிப் புகழ்ந்து பேசிய பிறகு அக்ராஸனாதிபதி அவர்கள் சதாசிவ ப்ரம்மத்தை உபந்யாசம் செய்யும்படி சொன்னார்கள். பிறகு சதாசிவ ப்ரம்மம் அவர்கள் அழகான மங்கள காமனா ச்லோகத்தை சொல்லி உபந்யாசம் செய்தார்.

ஒரு நிருபர்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

4
22

21

3-6-1937

25187

323

215187

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்.

24 JUN 1937

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ஹு வைகாசி-மீ 21௳ 1937-ஹு ஜூன்-மீ 3௳ | வல 21

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு	ரூ.	20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு	அணா	0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு [illegible]

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோமதேவ சர்மா.)

மந்திரியின் அசிரத்தை:—மூன்று ஆசார்யர்கள் ஸ்ரீ மடத்தைச்சார்ந்த பல மடாதிபதிகள் ஒன்றுபட்டு மகுடாபிஷேக காலத்தில் விக்டோரியா ராணியளித்த "மதாக்ஷண சாஸனத்தை" உறுதிபடுத்தும்படி கோரினர். இதன் ஆழ்ந்த கருத்தை கவனித்து சரியான உறுதி கூறும்படி செய்யாதது பிரிடிஷ் மந்திரியைச் சார்ந்ததல்லவா? புதிய மந்திரியாவது கவனிப்பாரா? பார்ப்போம்.

பாக்யமில்லை!! நமது தலைவர் பலவிடங்களில் தர்மப்ரசாரம்செய்து போதாதுபெற்று வருகிறார். சென்னை மாகாண வ. ஸ். சங்கம் தேர்ந்தெடுத்தும் தலைவருடன்கூட செல்ல முடியாமற் பல குடும்பகார்யங்கள் தடுத்தன! பல தர்மவீரர்களது பிரசாரம் நல்ல பலனைத் தருகிறது. மற்றஜில்லாக்களிலும் ப்ரசாரம் செய்து நமது பூர்ணபலத்தைத் திரட்டி ஒன்றுபடுத்த இதேகாலம். இதே வழி!

> முக்கிய கவனிப்பு
> (3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
> அசல் தங்க கைகளைப்போன்ற "கல்யாணாஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" கைகளையே கவனித்து வாங்குங்கள்.
> தயாரிப்பவர்:— என். கல்யாணசாமி பத்தர்.
> பெரியதெரு, கும்பகோணம்.

அந்யாயம்! அதர்மம்!! சென்னை தேசிய பத்திரிகை ஆங்காங்கு நடைபெற்றுவந்த ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவத்தை ஊர் பெயர்களை மாத்ரம் ஓர் மூலையில் பிரசுரித்து, அங்கு சங்கரஜயந்தி நடந்ததாக நமக்கு தகவல் வந்திருக்கிறதென எழுதி, திருமதி நாயக ஜயந்தியை பத்திபத்தியாக பிரசுரிக்கிறது. முதம் மதியர் பிரதாதத்தை ஸம்பாதிக்குமிது சிற்றும் தர்மத்தை கவனியாதது விந்தை!

பயனென்ன? சர்வமாகாண மந்திரிகளையும் ஒன்றுசேர்த்து ராஜப்ரதிநிதி கால்நடை மஹாஸபை கூட்டினர். பலர் பேசினர். மந்திரிகள் ராஜாங்கசெலவில் ஆடம்பர வண்டியில் சென்றிருப்பர். ஸபைக்கு ஆனசெலவைக்கொண்டு ஓர் மாகாணத்திலேனும் பசுக்கள் மேயவும் மற்ற வஸதியும் செய்திருக்கலாம்! அந்தரங்கமாக வேறு ஏதேனும் பயனைப் பெற்றிருக்கலாமிச்சபை. ஆனால் கூடி பேசிய விஷயத்தில் என்ன முன்னேற்றம் என்பதே நமது கேள்வி?

பலபல தீமைகள்!! ஆர்யஸமாஜிகள் ஆவேச ப்ரசாரத்தால் வகுப்புவாதிகள் பிரசாரத்தை சிறிதுகாலம் நிறுத்தியது. பிராமணத்வேஷம் முதலியவைகளை அவர்கள் விருத்திசெய்கின்றனர். ஸரியான ராஜதந்திரியோ மதாபிமானியோ மந்திரியாயிருந்தால் இவர்களது விதவாவிவாஹம் முதலிய ஸகல ப்ரசாரங்களையும் நிறுத்துவார்!

ஸ்மார்த்த பிராமணஸபை!! திருச்சி காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் ஒரு ஸபை ஆரம்பிக்கவேண்டிய அவச்யம் அதன் கொள்கை வேலை முதலியவைகளை வெளியிட்டிருக்கிறார். விசாலமான இதன் கருத்தை ஆமோதிக்காமல் எவருமிரார். ஆனால் விடாமுயற்சியுடன் வேலை செய்து இச்சபையை மற்ற மாகாண அல்லது அகில இந்திய ஸபையுடன் சேர்த்து ஒருமிக்க வேலைசெய்தால்தான் பயனுண்டாம்!

புதிய பிரிடிஷ் மந்திரி ஸபை! புதிதாய் அமைக்கப்பட்டதெனினும் அதன் கொள்கையில் மாறுதல் ஏற்படுமா என்பது தெரியவில்லை. யார் எப்படி மாறினும் தங்கள் சுயநலத்திற்கு ஹானி இல்லாமலே இருப்பர் [illegible] கொண்ட நமது அரசியல்வாதிகள் ஸ்வதேச கல்வி மதம் ஆசாரம் முதலியவைகளை அலக்ஷ்யம்செய்கின்றனர்.

The V. D. S. Sanskrit College, Kallidaikkurichi.

விளம்பரம்.

இந்த காலேஜானது, மதராஸ் யூனிவர்ஸிடியால், வியாகரண, மீமாம்ஸா சிரோமணி பாடங்கள் கற்பிக்க அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. வியாகரண சிரோமணியில் சேர்ந்து வாசிக்க விரும்பும் மாணவர்களுக்கு போஜனம், இடவஸதி முதலியன இனாமாக அளிக்கப்படும். கோடை ரஜாவிலிருந்து 1937 ஜூன் 10௳ காலேஜ் திறக்கிறபடியால், மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 5—6—37-க்குள் இதனடியிற்கண்ட விலாஸத்துக்கு அனுப்பவேண்டும்.

எம். ராமலிங்க அண்ணாவி,
Correspondent
கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி ஜில்லா

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay. Branches:— Madras, Madura.	ரஷீட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co. 56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

T. R. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்.

தென்னிந்திய பிராம்மண ஸம்மேளனம்.

பிரம்மஸ்ரீ செங்காலிபுரம்
S. ஸ்ரீனிவாஸய்யர் B.A., B.L.,
அட்வகேட், அவர்களின்

அக்கிராஸன பிரசங்கம்.

இந்த அக்கிராஸன பதவியை வஹிக்க என்னைக்காட்டிலும் சிறந்தவர்கள் உண்டென்பது எனக்கு நன்றாய் தெரியும். பிரம்மஸ்ரீ P. S. வைத்தினதய்யரவர்கள் சென்ற வருஷம் முதல் மாத்திம பிராம்மணர்கள் கான்பரென்ஸுக்கு அக்கிராஸனம் வஹிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார். இப்பொழுது அதை மாற்றி முக்யமாக பிராமணர்கள் கான்பரென்ஸ் நடத்தவேண்டுமென்று இங்குள்ள பிரமுகர்கள் ஏற்பாடு செய்து என்னை அக்கிராஸனம் வகிக்கும்படி கடைசியாக கேட்டுக்கொண்டார்கள். என்னால் இயன்ற அளவு தேச சேவைசெய்ய நான் எப்பொழுதும் தயாராக இருந்தாலும் இந்த சமயம் எனக்கு உடம்பு அசௌகரியமாகஇருப்பதாலும் டாக்டர்கள் நான் பெரிய சபைகளில் பேசக்கூடாதென்று சொல்லியிருப்பதாலும் என்னைக்காட்டிலும் புத்தியிலும், வயதிலும் படிப்பிலும் பெரியோர்கள் அநேகம் பேர்கள் இருப்பதாலும் நான் இந்தபெருமைக்கு அருகமில்லாதவனென்று பலதடவைகள் மறுத்தும், பிரம்மஸ்ரீ வைத்தனதஸாமி அய்யரவர்களும் மற்றும் என்னுடைய ஸிநேகிதர்களும் வற்புறுத்திச் சொல்லிய வார்த்தையை தட்டக்கூடாதவனாய் நான் இந்த ஸ்தானம் வஹிக்க ஒப்புக்கொண்டேன். இப்படிப்பட்ட பெரிய பெருமையை எனக்கு நீங்கள் அளித்ததற்கு நான் மிகவும் நன்றி பாராட்டி உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். என்னுடைய பிரஸங்கத்திலுள்ள குறைங்களை கிரஹித்து குற்றத்தை தள்ளிவிடும்படி மிகவும் வணக்கமாய் கேட்டுக்கொள்கிறேன்.

முதலாவதாக நம்முடைய பிராம்மண சமூகத்தின் நிலைமையை சற்று கவனிப்போம்:-

சுமார் 80 வருடங்களுக்கு முன் ஆங்கிலப் படிப்பு நமதுதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதிலும் சுமார் 50 வருடகாலமாக நமது பிராம்மண சமூகத்தில் ஆங்கிலப் படிப்பு சிறந்ததென்று, பெரிய சாஸ்திரம் படித்த வைதிக குடும்பங்களில் கூட தோன்றி ஆங்கிலப்படிப்பில் தமது குழந்தைகளைச்சேர்த்துவிட்டனர். ஆதியில் இவ்விதம் பிராம்மணர்கள் நினைத்ததற்கு ஆதாரம் என்னவென்றால் தென்னிந்தியாவில் ஸர், A. சேஷய்யா சாஸ்திரிகள், ஸர், T. முத்துஸாமி அய்யர் இவர்கள் எழ்மையான குலத்தில் பிறந்தாலும் உத்யோகத்தில் உயர்ந்த பதவிக்கு வந்துவிடவில்லையா, நமது புத்திரர்களும் அப்படியே ஆங்கிலம்பயின்றால் உயர்ந்த பதவிகளுக்கு உத்தியோகத்தில் வந்துவிடுவார்கள் என்று நினைத்து அவர்களை ஆங்கிலம் படிக்கவைத்தார்கள். சிறிதுகாலம் சென்றபிறகு அப்படிப்பட்ட பதவி 1 அல்லது 2தான் கிடைக்குமென்றும் தங்களுடைய குமாரர்களுக்கு அதிருஷ்டமில்லையென்றும் மனத்தாங்கலால் பெற்றோர்கள் வருந்தினாலும் ஒரு தாசில்தார் அல்லது முன்சிப் வேலையாவது கிடைக்காதா என்று மனதை திடப்படுத்திக்கொண்டு, ஆங்கிலப்படிப்பை பிராமணர்களுள் அபிவிருத்தி யடையும்படி செய்தனர். பிறகு தாசில்தார், முன்சிப் முதலிய வேலைகளும், ஏராளமாக பெரிய பரீக்ஷை கொடுத்தவர்கள் ஏற்படவே சிலர்களுக்குத்தான் கிடைக்குமென்று தெரிந்து, ஏங்கினவர்களாய் நமது புத்திரர்களுக்கு நம் ஜில்லாவிலேயே ரூ. 15 சம்பளமும் மேல்வரும்படி ரூ 15ம் கிடைக்கக்கூடிய உத்யோகம் ஏற்பட்டால் போதுமென்று சொல்லிக்கொண்டு, சொல்பசொத்துக்கள் இருந்ததையும் விற்று புத்திரர்களை ஆங்கிலம் படிக்கவைத்து நமது பிராம்மண சமூகம் பரம ஏழையாய் போய் இருக்கின்ற நிலைமையில் பிராம்மணர்களுக்கே வேலை கிடையாதென்று அரசாங்கத்தில் உத்திரவு பிறந்து, பிறகு, வேலைகள் காலியேற்படுமானால் 6 தடவைக்கு ஒரு தடவை பிராம்மணர்களுக்கு உத்யோகம் கிடைக்குமென்று இப்பொழுது அரசாங்க அறிக்கை அமுலில் இருந்துவருகிறது.

ஆங்கிலப் படிப்பில் தேறாதவர்களும், தேறி வேலை கிடைக்காதவர்களும் கிராமங்களிலும், நகரங்களிலும், ஆங்கில நடை, உடை, பாவனைகளை அநுசரித்துக்கொண்டும், அவர்களுடைய பெற்றோர்கள் எல்லாரும் "ஐயோ! பிச்சைக்குப் பிச்சையும் கெட்டு, ஒருகாசு நாமக்கட்டியும் போய்விட்டதே" என்று ஏங்கித் தவிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

சிலர் ஏதோ உத்யோகத்தில் பெரிய சம்பளம் வாங்கிக்கொண்டு ஸௌக்யமாக இருக்கவில்லையா என்று கேட்கலாம். ஆம்! இருக்கிறார்கள். அவர்களும் தங்களுடைய மதத்தை மறந்து, தர்மத்தை மறந்து ஆங்கிலேயர்கள்போல் நடை, உடை, ஆகாராதிகள் இவைகளை அவலம்பித்து, வருகிற சம்பளம் செலவுக்குப் போதவில்லையென்று தவிக்கிறார்கள்.

இந்த ஆங்கிலப்படிப்பானது முதலில் எல்லோரையும் நாஸ்திகர்களாக செய்த நிலைமையில் சுமார் 40, 45 வருடங்களுக்கு முன் ஸ்வாமி விவேகானந்தர் அமெரிக்கா சென்று நமது மதத்தையும், நமது சாஸ்திரங்களின் பெருமையையும் Chicago Parliament of religious ல் சிறந்த உபன்யாஸம் செய்து அதைநாய்கள் வாசித்தும் பிறகு அவர் சென்னைக்கு வந்தபொழுது அவருடைய பாண்டித்யமான அரிய பிரசங்கங்களையெல்லாம் நேரில் கேட்டும், ஒருவாறு என் போலொத்தவர்களுக்கு மத விஷயங்களில் மனம் திரும்பி நமது வேதம், சாஸ்திரங்கள் இவைகளின் பெருமையை அறிந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்பேர்ப்பட்ட ஆங்கிலம் படித்தவர்களில் சிலர் இப்பொழுது ஸநாதன தர்மமே மேலானது, புது சீர்திருத்தங்கள் நமக்குத்தகாதென்று கருதி நாம் இத்தகைய கூட்டங்கள் கூட்டி எவ்வளவு விபரீதப் போக்குகள் நிறைந்துள்ள இக்காலத்திலும் ஸநாதன தர்மத்துக்கு ஹானி ஏற்படாமல் காப்பாற்றிக்கொண்டு வரவேண்டியது நமது கடமையாகுமென்று நினைக்கிறார்கள்.

பிராம்மணர்களென்றால் எல்லோரும் வைதிகர்கள். அதாவது வேதத்தை அநுஸரிக்கிறவர்கள் என்பது தான் எனது கொள்கை. இருந்தாலும் ஆங்கிலப்படிப்பில்லாமலும், உத்யோக முதலானதுகள் இல்லாமலும், சாஸ்திரஞானிகளாகவும், வேத வித்துக்களாகவும், குலா சார்யர்களாகவும், இருப்பவர்களை நாம் வைதிகர்களென்று வழக்கத்தில் சொல்லிவருகிறோம். அவர்களுக்கும் ஆங்கிலப் படிப்பில் பிரமை ஜாஸ்தியாக இருக்கிறது. அவர்களுடைய பிள்ளைகளை ஆங்கிலேயம் படிக்கும்படிசெய்து உத்தியோகம் கிடைக்கவேண்டுமென்று ஆசைப் படுகிறார்கள். ஸம்ஸ்கிருதபடிப்பிற்கு கௌரவமில்லையென்று நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நன்றாய் சாஸ்திரம் கற்றவர்களும், சிஷ்டாசாரம் ஒழுங்காய் கவனிக்கிறவர்களுமான பிராம்மணோத்தமர்களின் யோக்யதையும் செல்வாக்கும் எப்பொழுதும், எல்லோராலும் கொண்டாடப்பட்டு வருகின்றன. பிராம்மணர்கள் நன்னடக்கை, பொறுமை, நன்னடத்தை ஸத்தியம், ஸ்வதர்மம், சாந்தி இவைகளை அனுஷ்டித்துக்கொண்டுவந்தால் ஒருநாளும் அவர்கள் பெருமைக்கும் காலக்ஷேபத்திற்கும் குறைவுவருமென்று நினைக்க இடமே இல்லை. இந்த ஆங்கில சகவாஸத்தால் ஏற்பட்ட ஆசையாலும், துராசாரத்தினாலும் நாஸ்திக புத்தியாலும் மனது ஸமாதானப்படாமல் தவிக்கிறோம். இதன் மூலகாரணத்தை வேருடன் அறுத்துத்தள்ளவேண்டும்.

கிராமங்களிலும் டவுன்களிலும் பிராமண சிறவர் சிறுமிகளுக்கு தனிப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி ஸம்ஸ்கிருதம், தமிழ் இந்த பாஷைகளில் முதலாவதாக, புராணாதிகளிலுள்ள கதைகளை கற்கும்படி செய்து பிராம்மண சிறுவர்கள் யாவரும் வேதாத்யயனம் செய்யும்படியாக ஏற்படுத்தி நாஸ்திகம் அணுகாமல் செய்தால் பிராம்மண வாழ்க்கையை புனருத்தாரணம் செய்ததாக ஆகும். மாத்திம பிராம்மணர்கள் முற்றிலும் இதை உணர்ந்தார்கள். மத்தியில் கொஞ்சம் ஆங்கிலம் படிக்க ஆரம்பித்து அதில் பிரயோஜனமில்லையென்று இப்பொழுது தெரிந்துகொண்டு ஒருவாறாக பிராம்மண்யம் நிலைக்கவேண்டிய வழியைத் தேடவேண்டுமென்று நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதுபோலவே மற்ற பிராம்மணர்களும் கருதி தக்க வழிகளைத் தேடினால் பிராம்மணர்களுக்கு ஒரு சிரமமும் ஏற்படாது.

ஆங்கிலம் படித்தவர்களுடைய குடும்பங்களிலும் இன்னும் வெகுவாக ஸ்திரீகள் நடை, உடை, பாவனைகள் மாறாமல் இருக்கின்றார்கள். டவுன்களிலும் சென்னை போன்ற பெரிய நகரங்களிலும் 1000-க்கு ஒருவர் நவநாகரீகத்தில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் கிராமங்களிலும், சிறிய டவுன்களிலும் பெரும்பாலோர் நமது பிராசீன வழிகளை மறக்கவில்லை. சிராத்தாதி கர்மாக்களும் அவர்களுடைய நிர்பந்தத்தினாலாவது ஆங்கிலம் படித்த புருஷர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தற்கால பெண் குழந்தைகளுக்கு இப்பொழுது நாம் கொடுத்துவரும் படிப்பினாலும், நவீன நாகரீக முறையில் நடை, உடை, பாவனைகள் அனுஷ்டித்து வருவதை பார்க்கும்பொழுதும், ஸினிமாவினால் கற்றுக்கொள்ளும் துரப்யாஸங்களிலிருந்தும் ஏற்கனவே இருந்துவரும் ஸ்திரீ தர்மத்துக்கும் பங்கம் வருமோவென்று தோன்றுகிறது.

ஆங்கிலம் படிக்கும் பையன்களோவென்றால் சிகை யக்ஞோபவீதம் முதலிய பிராம்மணர்களுக்குரிய முக்யமான அங்கங்களைக் கூட மறந்து, தங்கள் பெயர்களை ஆங்கிலேயர்கள்போல் தோனும்படி, பெற்றோர்களால் இடப்பட்ட நாமாக்களைச், சேதப்பண்ணி கூப்பிட்டுவருவதோடு, பிராம்மண வாசனையே இருக்கக் கூடாதென்கிற நோக்கத்துடன் நடந்துவருகிறார்கள். இவர்கள் எவ்விதமாக மாறி ஜாதிவித்யாஸமின்றி ஆகாரம் விடவஸ்தைகளை மறந்து நின்றாலும், கவர்ன்மெண்டார் "நீ பிராம்மணன், உனக்கு கவர்ன்மெண்ட் உத்யோகம் கிடைப்பது துர்லபம், பிராம்மணர்களுக்கு 6ல் 1 தடவை தான் கொடுக்கப்படுமென்று" பறையறைவித்து விட்டனர். இது பிராம்மண்ய புனருத்தாரணம் பண்ணுவதற்கு ஈஸ்வரன் கல்பித்த வழியென்று நானும் என்போலொத்த ஸகாதனிகளும் கருதுகிறோம். இந்த சமயத்தில் பிராம்மண யுவ சங்கங்களைப் பெரியோர்கள் கூட்டி அவர்களைக் கண்விழித்துக்கொள்ளும்படி செய்யவேண்டியது நமது முக்கிய கடமையாகும். அவர்களை சரியான வழிக்குக் கொண்டுவந்து, நித்ய கர்மாக்களை செய்யும்படிசெய்து தர்மசாஸ்திரங்களை போதித்து நமது மதத்தை சாஸ்திரம், படித்தவர்களைக் கொண்டு போதிக்கும்படிசெய்து, நன்னடத்தையில் திருப்பிவரும்படி செய்வித்தால் நமது தேசத்துக்கே பெருத்த க்ஷேமமுண்டாகும்.

(தொடரும்)

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(27—5—37 தொடர்ச்சி.)

1. மாலையை தரித்திருப்பதாலும், பஞ்சாசத் வர்ணங்களாலான (அக்ஷரங்களாலான) மாலையை (வர்ணமாலையை) தரித்திருப்பதாலும் (அதாவது அக்ஷர ஸ்வரூபிணியாக இருப்பதாலும்) அம்பிகைக்கு மாலினீ என்று பெயர். அம்பிகை தனது ரூப விசேஷங்களில் சூலம், கபாலம் இவற்றைக் கைகளில்தரித்திருப்பதால் சூலினீ என்றும் கபாலினீ என்றும் பெயர்கள் ஏற்பட்டன. பரமசிவனும் கையில் கபாலத்தை தரித்திருப்பதால் அவருக்குக் கபாலியென்றும் அவருடைய பத்னியாகிய அம்பிகைக்கு கபாலினீயென்றும் பெயர் ஏற்பட்டதாகவும் சொல்லலாம்.

80 தேசிக இதி கிம் சங்கே
தத் தாத்ருக் தவ நு தருணிமோன்மேஷ: |
காமாக்ஷி சூலபாணே:
காமாகம தந்த்ர யக்ஞ தீக்ஷாயாம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷியே! சூலபாணே: - பரமசிவனுடைய, காமாகம தந்த்ர யக்ஞ தீக்ஷாயாம் - காம சாஸ்த்ரத்தை அப்யஸிப்பதாகிய யாகத்திற்கு தீக்ஷை யடைவதில், தவ - உன்னுடைய, தாத்ருக் - அப்பேர்ப்பட்ட (விசேஷமான), தத் - அந்த, தருணிமோன்மேஷ: - யௌவனத்தின் விகாஸமானது, தேசிக: கிம் இதி - குருவா என்ன என்று, சங்கே - ஸந்தேஹப்படுகிறேன்.

81 வேதண்ட கும்ப டம்பர
வைதண்டிக குச பாரார்த மத்யாய |
குங்கும ருசே நமஸ்யாம்
சங்கர நயனாம்ருதாய ரசயாம: ||

வேதண்ட - யானையின், கும்ப - கும்பங்களின், டம்பர - ஆடம்பரத்தோடு, வைதண்டிக - விதண்டாவாதம்போல் போர்செய்யும், குச பாரார்த்த - ஸ்தனங்களின் பாரத்தினால் கஷ்டப்படும், மத்யாய - இடுப்பை உடையவளும், குங்கும ருசே - குங்குமம் (குங்குமப்பூ) போன்ற காந்தியுடையவளும், சங்கர நயனாம்ருதாய - பரமசிவனுடைய நேத்ரங்களுக்கு அம்ருதம் போன்றவளுமான ஸ்ரீகாமாக்ஷிக்கு, நமஸ்யாம் - நமஸ்காரத்தைச்செய்கிறேன்.

82 அதிகாஞ்சித மணிகாஞ்சன
காஞ்சீம் அதிகாஞ்சி காஞ்சித் அத்ராக்ஷம் |
அவனத ஜனானுகம்பாம்
அனுகம்பாகூலம் அஸ்மத் அனுகூலாம் ||

அதிகாஞ்சித - அதிகமாக இழைக்கப்பட்ட, மணி - ரத்னங்களோடுகூடிய, காஞ்சன காஞ்சீம் - தங்க ஒட்யாணத்தையுடையவளும், அவனத ஜனானுகம்பாம் - வணங்கிய ஜனங்களிடத்தில் தயையுடையவளும், அஸ்மத் அனுகூலாம் - நம்மிடத்தில் அனுகூலமாயிருப்பவளுமான, காஞ்சித் - ஒரு ஸ்த்ரீயை, அதிகாஞ்சி - காஞ்சிபுரியில், அனுகம்பாகூலம் - கம்பாநதிக்கரையில், அத்ராக்ஷம் - பார்த்தேன்.

83 பரிசித கம்பாதீரம்
பர்வத ராஜன்ய ஸுக்ருத ஸன்னாஹம் |
பரகுரு க்ருபயா வீக்ஷே
பரமசிவோத்ஸங்க மங்களாபரணம் ||

பரிசித கம்பாதீரம் - கம்பா நதிக்கரையில் இருந்து பழக்கப்பட்டதும், பர்வத ராஜன்ய - பர்வதங்களின் அரசனான ஹிமவானுடைய, ஸுக்ருத ஸன்னாஹம் - புண்யத்தின் ஆவிர்பாவமாயிருப்பதும், பரமசிவோத்ஸங்க - பரமசிவனுடைய மடிக்கு, மங்களாபரணம் - மங்களமான ஆபரணமாயிருப்பதுமான ஒரு மூர்த்தியை, பரகுருக்ருபயா - என் குருநாதருடைய க்ருபையால், வீக்ஷே - பார்க்கிறேன்.

84 தக்த மதனஸ்ய சம்போ:
ப்ரதீயஸீம் ப்ரம்ஹசர்ய வைதக்தீம் |
தவ தேவி தருணிமஸ்ரீ-
சதுரிம பாகோ ந சக்ஷமே மாத: ||

தேவி - தேவியே! மாத: - ஜனனீ! தக்த மதனஸ்ய - மன்மதனை எரித்தவரான, சம்போ: - பரமசிவனுடைய, ப்ரதீயஸீம் - பெரிதாகச் சொல்லப்பட்ட, ப்ரம்ஹசர்ய வைதக்தீம் - ப்ரம்ஹசர்ய நிலைமையின்ப்ராபவத்தை, தவ - உன்னுடைய, தருணிமஸ்ரீ - யௌவனத்திய அழகின், சதுரிம பாகோ - ஸாமர்த்தியத்தின் வைபவமானது, ந சக்ஷமே - பொறுக்கிறதில்லை.

1. காமத்திற்கு அரசனான மன்மதனைக்கூட பரமசிவன் (அவன் வசப்படாமல்) எரித்துவிட்டதால், அவருடைய ப்ரம்ஹசர்ய நியமத்தின் புகழானது எங்கும் பரவத்தலைப்பட்டது. ஆயினும் அம்பிகையின் யௌவனத்தின் ஸௌந்தர்யமானது அதைப் பொருக்காமல் பங்கப்படுத்திவிட்டதின்பேரில் பரமசிவனுடைய புகழானது இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இவ்விதமாக அம்பிகையின் ஸௌந்தர்யத்தையும் பரமசிவன் அம்பிகையிடத்தில் கொண்டிருக்கும் மோஹத்தையும் இந்த ஸ்தோத்ரம் முழுவதிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இதற்குமேல் அம்பிகையின் ரூபவிசேஷங்களைத் தனித்தனியாக வர்ணிக்கப்படுகிறது.

85 மதஜல தமால பத்ரா
வஸனித பத்ரா கராத்ருத கனித்ரா |
விஹரதி புளிந்தயோஷா
குஞ்ஜாபூஷா பணீந்த்ர க்ருதவேஷா ||

மத ஜலதமால பத்ரா-மதஜலத்தால் இடப்பட்டதிலகம் முதலிய அலங்காரத்தையுடையவளும், வஸனித பத்ரா - இலைகளை வஸனமாக (ஆடையாக) தரித்தவளும், கராத்ருத கனித்ரா - மண்வெட்டியை கையில் கொண்டவளும், குஞ்ஜா பூஷா - குந்துமணிகளாலான அலங்காரங்களை உடையவளும், பணீந்த்ர க்ருத வேஷா - ஸர்ப்பராஜங்களை அணிந்து கொண்டவளுமான, புளிந்தயோஷா - வேடஸ்த்ரீயானவள், விஹரதி - விளையாடிக்கொண்டிருக்கிறாள்.

1. இதில் அம்பாளுடைய சபரீ ரூபமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அர்ஜுனன் பாசுபதாஸ்த்ரத்தையுத்தேசித்து தபஸ் செய்யும்போது பரமசிவனானவர் அவனுடைய பக்தியின் அதிசயத்தை அறியவேண்டித் தான் கிராத (வேட) வேஷத்தைதரித்தும், வேடஸ்த்ரீ வேஷம்பூண்ட அம்பிகையுடனும், நாய்கள் வேஷமுடைய நான்கு வேதங்களோடும் மற்றும் கிராதர்களுக்குரிய சின்னங்களோடும் அவ்விடம் ஆவிர்பவித்ததும் அப்போது அவருக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தம்நடந்ததும், பிறகு அவர் அவனுக்கு பாசுபதாஸ்த்ரத்தை அளித்ததும் மஹாபாரதத்திலும் கிராதார்ஜுனீயத்திலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸமயம் அம்பிகை கொண்ட வேடஸ்த்ரீ வேஷத்தை இதில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்பட்ட ஆடையாபரணங்களெல்லாம் வேடஸ்த்ரீகள் வழக்கமாக அணிந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறவை.

2. அம்பிகையின் சபரீ ரூபத்தைப் பின்வருமாறும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'பர்ஹாவதம்ஸயுத பர்பர கேசபாசாம்
குஞ்ஜாவளீக்ருத கனஸ்தன ஹாரசோபாம் |
ச்யாமாம் ப்ரவாளவதனாம் ஸுகுமாரஹஸ்தாம்
த்வாமேவ நௌமி சபரீம் சபரஸ்ய ஜாயாம் ||'
(அம்பாஸ்தவம்)

'ஆடத் குஞ்ஜாஹார ஸ்தனபாரநமன் மத்யலதிகாம்
உதஞ்சத் கர்மாம்ப: கண குணித வக்த்ராம்புஜருசம் |
சிவம் பார்த்தத்ராண ப்ரவண ம்ருகயாகாரகுணிதம்
சிவாம் அன்வர்யாந்தீம் சபரமஹம் அன்வேமி சபரீம் ||'
(ஸகல ஜனனீ ஸ்தவம்)

'மாகந்த த்ரும பல்லவாருணபடம் பூர்ணேந்து பிம்பானனாம்
தேவீம் திவ்யமயீம் ப்ரஸன்ன ஹ்ருதயாம் த்யாயேத்
[கிராதாக்ருதாம் |
பர்ஹாபீத கசாபிராமசிகுராம் பிம்போஜ்வலச் சந்த்ரிகாம்
குஞ்ஜாஹார லதாம்சுஜால விலஸத் க்ரீவாம் மதீரே
[க்ஷணாம் ||'
(ஆகாச பைரவ கல்பம்)

'ச்யாமாம் வன்ஹிகலாப சேகரயுதாம் ஆபத்த பர்ணாம்சுகாம்
குஞ்ஜாஹார லஸத் பயோதரநதாம் அஷ்டாஹிபான்
[பிப்ரதீம்
தாடங்காங்கத மேகலா குணரணன் மஞ்ஜீரதாம் ப்ராபிதான்
கைராதீம் வரதாபயோத்யதகராம் தேவீம் த்ரிநேத்ராம்
பஜே ||'

3. அம்பிகைக்கு இந்த ரூபத்தில் புளிந்தினீ என்றும் பெயர். இந்த ரூபத்திய உபாஸனையானது மிகவும் விசேஷமாகச் சொல்லப்படும்.

4. தமாலமென்றால் நெற்றியிலணிடப்படும் (சந்தனம் முதலிய) ஜாதிக்குறி. பத்ரமென்பது ஸ்த்ரீகள் முகம், ஸ்தனம் முதலிய இடங்களில் செய்துகொள்ளும் அலங்கார விசேஷம்.

86 அங்கே சுகினீ கீதே
கௌதுகினீ பரிஸரே ச காயகினீ |
ஜயஸி ஸவிதேம்ப பைரவ-
மண்டலினீ ச்ரவஸி சங்க குண்டலினீ ||

அங்கே சுகினீ - முன் கையில் கிளியை யுடையவளும், கீதே கௌதுகினீ - ஸங்கீதத்தில் உத்ஸாஹமுடையவளும், பரிஸரே ச - ஸமீபத்திலும் (தன்னைச்சுற்றியும்), காயகினீ - காயகர்களை யுடையவளும் (அதாவது, பாடிக்கொண்டிருக்கும் சந்நிகளால் சூழப்பட்டவளும்), ஸவிதே - பக்கத்தில், பைரவ மண்டலினீ - பைரவர்களுடைய மண்டலங்களையுடையவளும், ச்ரவஸி - காதில், சங்க குண்டலினீ - சங்கினாலான குண்டலங்களையுடையவளுமான, அம்ப - ஹே ஜனனி! ஜயஸி - நீ ஸர்வோத்கர்ஷத்துடன் விளங்குகிறாய்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஹு வைகாசி-மீ 21உ

பண்டித பரிஷத் அசாஸ்திரீயம்.

சென்னையிலுள்ள ஆசாரத்திருத்த கோஷ்டியின் தலைவர்களான சிலர், ஆலயப்பிரவேசம் முதலிய அதர்மங்களுக்கு சாஸ்திர ஆதாரம் தேடுவதற்காக ஓர் பண்டித பரிஷத் நடத்த முயற்சிப்பதை நமது வாசகர்கள் அறிவார்கள். அநுபந்தமாக நேற்று அவர்கள் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தங்களுடைய விபரீத உத்தேசத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். தீண்டாமையை நீக்குதல், தீண்டாதாரை தேவாலயங்களில் அனுமதித்தல், பிறமதம் சென்றவர்களை மீண்டும் ஹிந்துவாக்குதல், விவாஹத்தைச் சீர்திருத்துவது, காலத்திற்கு ஏற்றபடி அநுஷ்டானங்களை ஸங்கோசம்செய்வதுபோன்ற பலவிஷயங்களை அந்தப் பரிஷத் மூலம் தீர்மானிக்க அவர்கள் நிச்சயித்திருக்கிறார்களாம். ஆகவே சிறிதும் ஸந்தேஹத்திற்கு இடமின்றி அசாஸ்திரீயமான விஷயங்களை நிறைவேற்றவே இந்த பரிஷத் கூட்டப்படுகிறதென்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது. பரிஷத் என்ற சாஸ்திரீயமான பெயரை வைத்துக்கொண்டு இத்தகைய காரியத்தைச்செய்ய எவருக்காவது அதிகாரமுண்டா, அது எல்லோரையும் கட்டுப்படுத்துமா? சாஸ்திரப்படி இந்தப் பரிஷத் செல்லும்படியுள்ளதாகுமா இத்யாதி விஷயங்களை இப்போதே நாம் ஆலோசிப்பது யுக்தமாயிருக்கும்.

இவ்விஷயத்தில் குடந்தை ப்ராம்மண ஸபைத் தீர்மானமானது வெகு தெளிவாயும் உறுதியாயும் சாஸ்திர அபிப்ராயத்தையும் ஸநாதன தர்மிகளுடைய கடமையையும் சொல்லுவதுடன், அதைப்பற்றி அங்கு நடந்த பிரஸ்தாபங்களும் யாவருடைய கவனத்திற்கும் அர்ஹமாயிருக்கின்றன. இத்தகைய பரிஷத் ஒன்றைக் கூட்டுவதே அசாஸ்திரீயமென்று அத்தீர்மானம் முதலில் வற்புறுத்துகிறது. நமது சாஸ்திரங்கள், கால தேச, அதிகாரிகளுக்கு ஏற்றபடி முக்ய, கௌண ஆபத்தர்மாதிகள் யாவற்றையும் ஸந்தேஹமற நமக்கு நிச்சயித்து கொடுத்துவிட்டன. அவைகளை நாம் இன்று ஆசரித்தும் வருகிறோம். ஆதலால் வெகுகாலம் முன்பே நிர்ணயிக்கப்பட்டு பல தலைமுறைகளாக நம்மால் ஆசரிக்கப்பட்டுவரும் ஜாதி குல தர்மங்களில் இன்று திடீரென்று ஒருவருக்கும் ஸந்தேஹம் ஏற்பட நியாயமில்லை. பரிஷத்தானது ஸந்தேஹம் ஏற்பட்ட ஒரு புதிய விஷயத்தை நிர்ணயிக்க அவச்யமாயிருக்கலாமேயல்லது இன்றுவரையில் நிர்விவாதமாக தேசமெங்கும் யாவராலும் ஆசரிக்கப்பட்டுவருவதை விசாரிக்க அதிகாரமுள்ளதல்ல. விவாஹம், தீண்டாமை, ஆலயப்பிரவேசத்தடை ஆகிய தர்மங்கள் ஆஸேது ஹிமாசலம் எல்லா தார்மிக குலங்களாலும் ஒரேமாதிரியாக இன்றுகூட ஆசரிக்கப்பட்டு வருகிறவைகளே. மன்வாதி ஸ்ம்ருதிகளாலும், சிஷ்டாசாரத்தினாலும் இந்த தர்மங்கள் நிஸ்ஸந்தேஹமாக ஸ்திரப்பட்டு நிற்கின்றன. தார்மிகர்களுள் இதைப்பற்றி ஸந்தேஹமே தோன்றவில்லை. ஆதலால் தர்ம ஸம்சயம் ஏற்பட்டகாலத்தில் கூட்டும்படி விதிக்கப்பட்டுள்ள பரிஷத்தானது இப்போது கூட்டப்பட சாஸ்திரப்படி ஆதாரமே கிடையாது. ஒருவர், அல்லது ஒரு சிலருக்கு நினைத்த ஸமயங்களிலெல்லாம் தோன்றும் தர்ம மாறுதலுக்காகப் பரிஷத் கூட்டுவதற்கு சாஸ்திரம் அநுமதிக்கவில்லை.

தவிர சீர்திருத்தக்காரர் நிச்சய புத்தியுடனேயே இதைக் கூட்டுகிறார்கள். தர்ம ஸம்சயத்தாலல்ல. 'ஸீதையைக் கொடுக்கக்கூடாது, ராமனையும் கொல்லவேண்டும், இதற்கு ஏற்ற ஆலோசனை கூறவேண்டு'மென்று கேட்கப்பட்டதுபோல் இந்த பரிஷத் பண்டிதர்களும் கேட்கப்படுவார்கள். சீர்திருத்தக்காரர்களைப்போல் தார்மிகர்களும் ஒருவித நிச்சய புத்தியுடனிருக்கிறார்கள். ஆதலால் இருதாப்பாருக்கும் இந்த பரிஷத் அநாவச்யகமே.

மேலும் நமது சாஸ்திரங்கள் ப்ராயச்சித்த விதிகளை நிர்ணயிக்கவே பரிஷத்தைக் கூட்ட விதி செய்திருக்கின்றனவேயன்றி கர்மா தர்ம நிர்ணயங்களைப் புதிதாகச் செய்ய விதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மஹாபாதகாதி மஹாபாபங்களைச் செய்தவர்க்குத் தகுதியான சாஸ்திரீய ப்ராயச்சித்தத்தை பரிஷத்தின் அபிப்ராயப்படி அவன் முன்னிலையில் ஆசரிக்க வேண்டுவதற்காகவே பரிஷத் விதி கூறப்படுகிறது. ஆதலால் சீர்திருத்த வாதிகள் தற்காலம் விரும்புவதுபோல் நமக்கு ஸௌகர்யமான விதிகளைச் செய்துகொள்ள பரிஷத் கூட்டமுடியாது. அம்மாதிரி தர்மத்தைமாற்ற ஒருவருக்கும் அதிகாரம் கிடையாது. இன்று சென்னை சீர்திருத்தக்காரர்களுக்குப் பிடித்ததான மாறுதலுக்கு ஓர் பரிஷத் ஏற்பட்டால், இன்னும் தீவிர நோக்கமுள்ள ஒரு கக்ஷியார் தங்களுடைய இஷ்டத்திற்காக மற்றொரு பரிஷத்தைக் கூட்டலாமன்றோ? அப்போது அதற்கு எல்லையும் வியவஸ்தையும் என்ன?

தவிரவும் ஸ்ம்ருதி விதிகளின்படி பரிஷத் கூட்டுவதாகச்சொல்லிக் கொள்ளுகிறவர்கள், அந்த பரிஷத்தில் அங்கத்தினராக இருக்கவேண்டியபண்டிதர்களையும் அந்த விதிக்குக்கட்டுப்பட்டே பொறுக்கவேண்டும். மனுமுதலிய ஸ்ம்ருதிகள்யாவும் பரிஷத்தில் ஸ்தானம் வஹிக்கவேண்டிய பெரியாரைப்பற்றிச் சொல்லியிருப்பதைக் கவனித்தால் அத்தகைய யோக்யதை உள்ளவர் ஒருவராவது இப்போது கிடைப்பாராவென்பது ஸந்தேஹமே. வைதிக மதவிருத்தமான, 'ஆர்ய ஸமாஜம், பிரம்ம ஸமாஜம், தியாஸபி போன்ற பல அவைதிக ஸ்தாபனங்களில் மஹாமஹோபாத்யாதி பிருதம் பெற்ற அநேக சீர்திருத்தப் பண்டிதர்கள் இருப்பதை நாம் அறிவோம். அவர்களால் நிறப்பப்பட்ட பரிஷத்தானது ஒரு க்ஷணம் கூட சாஸ்திரீயமான பரிஷத்தெனப் பெயர் பெறமுடியாது.

अव्रतानां अमन्त्राणां जातिमात्रोपजीविनां ।
सहस्रशः समेतानां परिषत्वं नविद्यते ॥

என்று மனு பாராசராதி மஹர்ஷிகள் சொல்லுகிறார்கள். 'வ்ரதாநுஷ்டானங்களற்றவர்களும் வேதமந்திரங்களை அறியாதவர்களும் கேவலம் ஜாதிப்பெயரைக் கொண்டு மாத்திரம் பிழைப்பவர்களும், ஆயிரக்கணக்காக பெரிய ஸங்க்யை உள்ளவராயிருந்தாலும், அந்தக்கூட்டத்திற்குப் பரிஷத் என்றபெயர் கிடையா'தென்று ஸ்ம்ருதிகள் சொல்லியிருக்கின்றன. அதாவது தர்மநிர்ணயம் செய்ய அதற்கு அதிகாரமில்லையென்றதாயிற்று. ஆகவே கீழ்கண்ட ஆதாரங்களைக் கொண்டு கவனித்தால் பரிஷத் என்ற பெரிய பொருளுடன் இத்தகைய கூட்டமொன்றைக் கூட்ட வைதிக சாஸ்திர வ்யவஸ்தைப்படி இடமே கிடையாதென்பதை குடந்தை ப்ராம்மண ஸபைத்தீர்மானம் எடுத்துக்காட்டுகிறது. இந்த அடிப்படையான ஆக்ஷேபத்தை அங்காங்கு நம்மவர்கள் பலப்படுத்தி ப்ரசாரம் செய்தால் இந்த பரிஷத் தலைகாட்டவே இடமில்லாமல் போய்விடலாம்.

நாக்கில் ஜலம் ஊறுகிறதாம்!

காங்கிரஸ்வாதிகளுக்குள் பொதுவுடமைப் போக்கு வெகு வேகமாக முற்றிவருவதற்கு அடிக்கடி பல உதாரணங்கள் கிடைத்த வண்ணமாயிருக்கின்றன. எதிர்காலத்தில் காங்கிரஸ் ஒரு பொதுவுடமைச் சபையாக ஆகிவிடுமென்று பல விவேகிகள் பேசிவருவதற்கு அத்தாக்ஷியும் ஏற்பட்டுவருகிறது.

சென்னையில் லக்ஷக்கணக்கான ஏழை ஜனங்கள் வெய்யில் உஷ்ணம் தாங்காமல் பண்டைவறண்டு தவிக்கையில், ஏழை நண்பரான காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் கே. பாஷ்யமும், ஸ்ரீ ஆதிநாராயண செட்டியாரும் உதகமண்டலத்தின் உச்சியிலிருந்துகொண்டு பொதுவுடமைத்தத்வத்தின் ரஸங்களை அநுபவித்து பொதுஜனங்களுக்கு அதைப்பற்றி மாற முன்வந்திருக்கின்றனர். விசேஷமாக ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் ருஷ்யப் பொதுவுடமையைப்பற்றிப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாகக் கட்டுரைகள் வரைந்து வருகிறார். ஆதலால் அந்த தத்வத்தில் அவருக்கு விசேஷ அபிமானமும் நம்பிக்கையுமிருக்கலாம்.

அவரும், ஸ்ரீமான் பாஷ்யமும் பொதுவுடமை தத்வங்களைப்பற்றி அங்கு உபந்யஸித்தார்களாம். ஸ்ரீமான் பாஷ்யம் பேசுகையில் ரஷ்யாவில் நடக்கும் பொதுவுடமை நிர்வாஹத்தைக் கேட்டதும் தமக்கு அதில் அதிக ருசி உண்டாவதாயும், ஜனங்களுடைய ஸொத்து ஸ்வதந்திரங்களையெல்லாம் கவர்ன்மெண்டாரே பெற்றுக்கொண்டு, அதாவது ஜனப்பிரதிநிதிகள் அடங்கிய நிர்வாஹ கோஷ்டியார் வசப்படுத்திக்கொண்டு, நமக்கு வேண்டிய ஸகலச்செலவுகளையும் ஸௌகர்யங்களையும் அவர்களேசெய்துகொடுக்க முன்வந்திருக்கையில் நாம் எதற்காக தனியாக ஸொத்துக்களை வைத்துக்கொண்டு திண்டாடவேண்டுமென்றும், நமது பிள்ளைகுட்டிகளுக்குக்கூட இந்தஸௌக்யம் கிடைப்பதால் நாம் ஏன் வீண்விசாரப்படவேண்டுமென்றும் தமக்கு இந்தப் பொதுவுடைமை முறை மிகவும் பிடித்தமாயிருக்கிறதாயும் சொல்லுகிறார். ஸ்ரீமான் பாஷ்யத்தின் காலத்திற்குள் பொதுவுடமை எப்படியும் வந்துவிடப்போவதில்லை. ஆதலால் இவரை அது பாதிக்காது. பின் ஸந்ததியார் எப்படித் தொலைந்தால் என்ன? பொதுவுடமையால் ஏற்படும் நன்மை அல்லது தீமைகளை அவர்கள்தானே அநுபவத்தில் காணப்போகிறார்கள்?

ஆதலால் இவர் மனம்போனபடி வாய் கொண்டமட்டும் பேசுவதில் கஷ்டமென்ன? குடும்பத்தையும், ஸர்க்காரையும் இவர் ஒன்றாக ஒப்பிட்டுப்பேசுவது விந்தையே. குடும்பத்தலைவன் தன் குடும்ப அங்கத்தினர்களின் தேவைகளை நேரில் அறிந்தவன்.

அவர்களிடம் பிரீதிவைத்தவன், அவர்களுக்கு வேண்டிய நன்மைகளை நேரில் கவனித்துச் செய்யக்கூடியவன். கவர்ன்மெண்ட் இப்படியாகுமா? கோடிக்கணக்கான ஜனங்களின் தேவைகளை கவர்ன்மெண்ட் தலைவன் எப்படி அறிந்துகொள்ள முடியும்? அவர்களிடம் ப்ரத்யேகமான அன்புதான் உண்டாக வழியுண்டா? ஆதலால் ஜனங்கள் ஸர்க்காரின் அடிமைகள் என்ற தோரணையில் நினைக்கப்படுவார்களேயல்லது இவர் நினைப்பதுபோல் குடும்ப அங்கத்தினராக நினைக்கப்பட நியாயமேயில்லை. நம்முடைய ஸொத்துக்களை ஸர்க்காரிடம் கொடுத்துவிட்டு அவர்களிடம் அடிமைபோல் பிச்சைவாங்கிப் பிழைப்பதிலேயே இவர்பேசும் பொதுவுடமை தத்வம்முடியுமேயல்லது வேறில்லை.

இவர்பேசும் தத்வத்தில் இவருக்கு உண்மையான ருசி இருப்பது வாஸ்தவமானால் பொதுவுடமை முறை வரும் வரையில்கூட இவர் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. ஒரு டிரஸ்டி போர்டை ஏற்படுத்தி தமது ஸொத்துக்கள் யாவற்றையும் அதனிடம் ஒப்புவித்துவிட்டு அது கொடுக்கும் பணத்தைக்கொண்டு காலம் தள்ளுவது வெகு இன்பமல்லவா? மேலும் இவருடைய பொதுவுடமை வாதப்படி இவரைப்போல் எல்லோரும் உதகமண்டலவாஸத்தை விரும்ப பாத்யப்பட்டவர்களன்றோ? எல்லா ஜனங்களுக்கும் பக்ஷபாதமின்றி பொதுவுடமை முறைப்படி உதகமண்டலவாசம் ஸாத்யமா? அம்மாதிரி வஸதி செய்துகொடுக்க இவர் பாடுபடுவாரோ? வாய் இருக்கிறதென்று எதையும் பேசிவிடலாமா? காங்கிரஸ்காரர்கள் தேசத்தில் குழப்பம் விளைவிப்பதாக ஸர். கே. வி. ரெட்டி முதலியவர் சொல்லுவதில் பிசகுண்டோ?

தென்னிந்திய பிராஹ்மண மஹா ஸபை நடவடிக்கைகளும் தீர்மானங்களும்.

குடந்தை ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் ஸ்ரீ மடத்தில், சேங்காலிபுரம் அட்வகேட் பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யர் அவர்களுடைய தலைமையில் ஷ்டி மகாஸபை 25உ முதல் மூன்று தினங்கள் நன்கு நடந்தேறியது. இதன் விவரம் சிறிது சென்ற வாரப்பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது.

இந்த ஸபை ஏற்கனவே "மாத்திம பிராமண ஸபை"என்ற பெயரால் மூன்று வருஷங்களாக நடைபெற்று வந்தது. இதைத் தென் இந்திய பிராம்மணர்களின் பொதுசபையாகச் செய்து நடத்த ஸபாதிகாரிகள் தீர்மானித்தது யாவராலும் மெச்சப்படுகிறது. இந்தப் புதுப் பெயருடன் நடத்தப்பட்ட முதல் கூட்டமானது மிக வெற்றிகரமாக நடந்து பூர்த்தியாகியது. இதில் சிரத்தையுடன் உழைத்து வந்த ஸ்ரீமான் வைத்யநாதஸ்வாமி அய்யரின் சிரமத்துக்கு ஸமூஹம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

மூன்று தினங்களிலும் ஸபைக்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து பல பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் ஸபை நன்கு நடைபெற ஆசீர்வதித்து ஸ்ரீமுகம் அனுப்பியதுடன் பிரதிநிதிகளுக்கு ஸ்ரீ மடத்திலேயே ஆஹாராதிவஸதிகள் செய்துகொடுக்கும்படிக்கும் ஆக்ஞை செய்திருந்தார்கள்.

சென்னை ஸ்ரீமான் கே. பாலசுப்ரமணியய்யர் முதலிய பலரிடமிருந்தும் ஆசிச்செய்திகள் வந்திருந்தன. விஷயாலோசனைக் கமிட்டியார் முதல்நாள் மாலை முழுவதும் கூடி பிராம்மண ஸமூஹ முன்னேற்றத்திற்கும் ராஜீயப் பொருளாதாராதிகளுக்கு ஏற்றவையான ஸமயோசித முக்கியதீர்மானங்கள் பலவற்றைத் தயாரித்தனர். அந்தத் தீர்மானங்களின் முழுவிவரமும், அவைகளை பிரேரிப்பித்தும் ஆமோதித்தும் பேசிய கனவான்களின் பெயரும் ஆங்கில அநுபந்தத்தில் விவரமாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஸமூஹ தர்ம முன்னேற்றத்திற்கான தீர்மானங்கள் பல இருக்க, இந்த மஹாஸபையில் செய்யப்பட்டவேறுசிலதீர்மானங்கள் மிகவும் முக்யமாயும் அவஸரமாயும் இருப்பது நன்கு விளங்கக் கூடியது.

ஸினிமாக்களிலும், சில பத்திரிகை, நாவல் முதலியவைகளிலும் பிராம்மணர்களையும் பிராம்மண தர்மங்களையும்பற்றி வேண்டுமென்றே கீழ்ப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் படங்களும், கதைகளும் பிரசுரமாவதைக் கண்டித்தும் அவைகளைத் தடுக்க சட்டரீதியான முயற்சி எடுக்கவேண்டுமென்றும், நம்மைத் தாழ்வுபடுத்தும் ஸினிமாப் படங்களை பிராமணர்கள் பஹிஷ்கரிக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இத்தீர்மானத்தை பிரேரேபித்துப் பேசிய தேவகோட்டை அட்வகேட் ஸ்ரீமான் எஸ். சுப்ரமண்ய அய்யர் அவர்கள் நமது ஸமூஹம் இம்மாதிரி சிரிப்பாணியாக்கப்படுவதை ஸகிக்காதவராய் வெகு வீராவேசத்துடன், ஒவ்வொருவருடைய மனதும் உருகுமாறு பல நியாயமான யுக்திகளைக்கொண்டு இந்த அக்ரமத்தைக் கண்டித்து முக்யமாக அத்தகைய ஸினிமாக்களைப் பார்க்கப் போகக்கூடாது என்றும் வற்புறுத்தினர். இதை அநுஸரித்துப் பேசிய வேறு பலரும் இது முக்கிய விஷயமென்பதை ஸபையோருக்கு எடுத்து உணர்த்தினர்.

இதுபோல், கன்ஸர்வேடிவ் கக்ஷியமைப்பு உறுதிமொழி விஷயம்போன்ற சில முக்ய தீர்மானங்களும் மஹாஸபையில் வெகு விரிவாக விவாதிக்கப்பட்டன. சென்னையில் நடத்த உத்தேசித்துள்ள சீர்திருத்த பண்டித பரிஷத்தானது அநாவச்யகமென்றும் அத்தகைய பரிஷத்தைக் கூட்ட யாருக்கும் அதிகாரமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மஹா ஸபைக் கூட்டத்திற்கு உள்ளூர் காங்கிரஸ் வாதிகள் சிலர் சில ஸமயம் வந்திருந்தார்கள். ஒரு காங்கிரஸ்வாலண்டியர் ஏதோ பேச முயற்சித்தது பெரிய விஷயமாகப் பொருள்படுத்தக் கூடியதல்ல உத்யோகங்களுக்கு வகுப்புவாரியாக நியமனம் செய்யப்படும் வழக்கத்தை ரத்து செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது, இது வேலை இல்லாமல் சிரமப்படும் பிராம்மண சிறுவர்களுக்கு நன்மை செய்யக்கூடியது. கடைசி தினத்தில் பல பண்டிதர்களால் அநேகவிஷயங்களைப் பற்றி உபன்யாசங்கள் நடைபெற்றன.

காரியதரிசி ஸ்ரீமான் பி. எஸ். வைத்யநாதஸாமி அய்யர் அவர்களால் யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை நிர்விக்னமாய் பூர்த்தியாகியது. நமது நிருபர்.

அறிவிப்பு.

இன்று ஆர்யதர்மத்தின் இங்கிலீஷ் அநுபந்தத்தில், கும்பகோணத்தில் நடந்த தென்னிந்திய ப்ராம்மண மஹாநாட்டின் தீர்மானங்கள் பிரசுரமாயிருக்கின்றன. அதை நமது வாசகர்கள் நன்றாக கவனித்து, ஒவ்வொரு ஊரிலும் ப்ராம்மண ஸபைகள்கூட்டி அவைகளில் முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றி கவர்ன்மெண்டுக்கும், நமது பத்திரிகைக்கும் காபி ஒன்று அநுப்பிவைக்கும்படி கோருகிறோம்.

ப்ராம்மண ஸபை காரியதரிசி.

Socialism:—This is how Mr. K. Bhashyam commends Socialism to you. "Communism is most alluring. If there is a Government who takes care of you from birth to death and will provide even for your dependents after death, why should anybody care for private property."

Congress for Revolution:—"The indwelling purpose of the Congress is the creation of militant disaffection, which will not stop with mere wrecking the Constitution Act, but will plunge the country in a revolution that will sweep away a social order evolved through generations of far-sighted policy."

Sir K. V. Reddy, Chief Minister.

முக்ய ஸமாசாரங்கள்.

திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தை ஆக்ஷேபித்து தார்மிகர்களின்கக்ஷியை எடுத்துச்சொல்ல மஹாராஜாவிடம் ஒரு தூது கோஷ்டியை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த தூது கோஷ்டியை ஏற்றுக்கொள்ளுவதாகவும் மஹாராஜா திரும்பியதும் தேதி நிர்ணயிக்கப்படுமென்றும் திவானிடமிருந்து பதில் கிடைத்திருக்கிறது.

புதுச்சேரியில் பால்யவிவாஹத் தடைச் சட்டம் செய்யும் யோஜனை தத்கால மில்லாததால் இப்போது அதுவிஷயமான தூது கோஷ்டி அவச்யமில்லையென்று புதுச்சேரி கவர்னர் ஜனரலிடமிருந்து கடிதம் கிடைத்திருக்கிறது.

மடாதிபதிகள், மதரக்ஷண விஷயமாக மஹாராணி விளம்பரத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று ராஜ சக்ரவர்த்தியருக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பிய மஹஸருக்கு காண்டர்புரி ஆர்ச்சுபிஷப்பிடமிருந்து பதில் வந்திருக்கிறது. மடாதிபதிகளின் கோரிக்கை மிகுந்த சிரத்தையுடன் ஜாக்ரதையாக கவனிக்கப்படுகிறதென்று அவர் கூறியிருக்கிறார்.

பிரிடிஷ் மந்திரிஸபை மாறுதல்.

பால்டுவின் விலகினார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி பிரிடிஷ் முதல் மந்திரியான மிஸ்டர் பால்டுவின் தமது மந்திரிப்பதவியை ராஜிநாமா செய்துவிட்டுப் பொதுவாழ்விலிருந்து விலகிவிட்டார்.

இவருக்குப் பதிலாக மிஸ்டர் சேம்பெர்லேன் என்றவர் பிரதமமந்திரிபதவியை ஏற்று புதிய மந்திரிஸபையை அமைத்துவிட்டார். பெரும்பாலும் ஏற்கனவே இருந்தவர்களே மீண்டும் மந்திரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சில இலாகாவில் மட்டும் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இந்தியா மந்திரியாக இருந்த ஜெட்லண்டு பிரபுவே மீண்டும் அந்த ஸ்தானத்திற்கு வந்திருக்கிறார். உதவி இந்தியா மந்திரி மட்டும் மிஸ்டர் பட்லருக்குப் பதிலாக லார்டு ஸ்டான்லி என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

Mukkamala, Amalapuram Taluq,
East Godavary Dt.,

தஞ்சைஜில்லா பிராம்மண ஸபை.

மகா-ா-ஸ்ரீ ராவ்சாகிப் N. நடேசய்யர் அவர்களின் அக்ராஸனப்ரசங்கம்.

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

8. இப்படியிருக்க சுயேச்சாதிகாரம் செலுத்துவது ஸ்மிருதிகளுக்கும், ராஜதர்மங்களுக்கும், பிரஜாதர்மங்களுக்கும் முற்றிலும் விரோதம். எவ்விதத்திலும் மந்திரிகளையும் மந்திராலோசனை சபைகளையும் கலந்துகொள்ளாமல் பிரஜைகளுக்கு விரோதமாக மத சம்பந்தமான சட்டங்களைமாற்ற எவ்வித அதிகாரமும் எப்பவும் இருந்ததில்லை. இது விஷயங்களை வற்புறுத்தி தூதுகோஷ்டி ஒன்று மஹாராஜா அவர்களுக்கும் ராஜப்பிரதிநிதிக்கும் அனுப்ப ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. மஹாராஜா அவர்கள் மேற்கண்ட விளம்பரத்தினால் ஏற்பட்ட பாபங்களுக்கு பிராயச்சித்தம் செய்துகொள்வதற்காக நவீனமார்க்க தீர்த்தயாத்திரையாக தீபாந்திரங்களுக்கு போயிருப்பதுபோல் த்வனிக்கும்படியாக திருவனந்தபுரத்தைவிட்டு ராஜா அவர்கள் வெளிக்கிளம்பிவிட்டார்கள்.

9. இதன் மத்தியில் திருவனந்தபுரத்திற்கு அடுத்த கொச்சி ராஜ்யத்தில் ஒரு தார்மிக வைபவம் நேர்ந்து இருக்கிறது. திருவனந்தபுரம் ஸமஸ்தானத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிற சட்ட திட்டங்களும் பழக்க வழக்கங்களுமே கொச்சிராஜ்யத்திய சட்ட திட்டங்களும் பழக்க வழக்கங்களும். பஞ்சமர்கள் ஆலயத்தில் பிரவேசிப்பது அசாஸ்திரீயமென்றும் சட்ட விரோதமென்றும் அநாதிகாலமாய் நடைபெற்றுவருகிற சட்டங்களையும் அனுஷ்டானங்களையும் பாதுகாக்கமட்டும் தனக்கும் மற்ற ராஜாக்களுக்கும் அதிகாரமே ஒழிய அவைகளை மாற்ற அதிகாரமில்லையென்றும் ஆலயங்களில் பஞ்சமர்கள் பிரவேசிப்பதால் அவைகள் அபரிசுத்தமாகி தெய்வசாந்நித்யம் விலகிவிடுமென்றும் அவ்வாறு அபரிசுத்தமான ஆலயங்களில் பூஜை செய்கிற தந்திரிகளும் அபரிசுத்தர்களாக ஆகிறார்களென்றும் கொச்சி மஹாராஜா அவர்கள் நிஷ்பக்ஷபாதமாக உத்தரவு செய்துவிட்டார்கள். அவர் வயோவ்ருத்தர், ஞானவ்ருத்தர், ஆசாரஸம்பன்னர். துஷ்டபோஜன, துஷ்டபாஷண, துஸ்ஸங்க, துர்தேசகமன முதலான அதர்மங்களுக்கு கொஞ்சமேனும் உட்படாதவர். அவர்களுடைய செய்கையை கவனித்தாவது திருவனந்தபுரம் மஹாராஜா அவர்கள் திருந்தக்கூடுமென்று ஜனங்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அதுவும் நிராசையாகப் போய்விட்டது. திருவனந்தபுரம் ஆலயங்களில் தந்திரிகளாக வேலைபார்க்கிறவர்களுக்கு பிரதி வருஷமும் திருவனந்தபுரம் ஸமஸ்தானத்திலிருந்து கொடுபட்டு வருகிற சுமார் இரண்டுலக்ஷ ரூபாயை திருவனந்தபுரம் ஆதி விளம்பரத்திற்கு கீழ்படிந்து நடவாத தந்திரிகளுக்கு செலுத்தாமல் பறிமுதல் செய்யப்படும் என்ற கண்டிப்பான உத்தரவை திருவாங்கூர் திவான் அவர்கள் உடனே வெளிப்படுத்திவிட்டார். இந்த உத்தரவிலிருந்து மற்றொரு அம்சம் ஊகிக்கத்தக்கதாயிருக்கிறது. அதாவது சில பண்டிதர்களும் வித்வான்களும் தந்திரிகளும் திருவனந்தபுரம் ராஜா அவர்கள் விடுவித்த விளம்பரம் சாஸ்த்ரீயமென்று ஒப்புக்கொண்டிருப்பதாக பத்திரிகைகளில் வெளியான விஷயம் நிர்ப்பந்தத்தின்பேரிலும் திரவ்ய நாசபயத்தினாலும் என்று ஏற்படுகிறது. மாக்ஷிமைதங்கிய இந்தியா சக்ரவர்த்திக்கே இல்லாத அதிகாரத்தை திருவனந்தபுரம் ராஜா செலுத்துகிறார்போலும்.

10. இது நிற்க. மற்றொரு அநியாயமான வைபவம் French Indiaவில் தோன்றி இருக்கிறது. British Indiaவில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு மிருதப் பிராயமாயிருக்கிற சாரதா ஆக்ட் பிரிட்டிஷ் இந்தியாவிலேயே மிகுந்த வெறுப்பையும் துக்கத்தையும் தர்ம பங்கத்தையும் விளைவித்துவருகிறது என்பதை கொஞ்சமேனும் தெரிந்துகொள்ளாமலும் அது முற்றிலும் அசாஸ்திரீயமென்றும் அநேக ஆயிர வருஷங்களின் அனுஷ்டானத்திற்கு விரோதமானதென்றும் அதனால் ஏற்படக்கூடியதாகக் கருதப்படுகிற கிஞ்சித் நன்மை அந்த சட்டத்திலிருந்து கிளம்பிவருகிற தீங்குகளுக்கு உறைபோடக்கூடாததாக இருக்கிறது என்பதையும் கவனியாமலும் சில அதார்மிகர்களுடைய வார்த்தைக்கு இணங்கி French Indiaவிலும் அதேமாதிரியான சட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர பிரபலமான பிரயத்னங்கள் நடந்துவருகின்றன. இப்பொழுதே தீவிரமான கிளர்ச்சிகள் செய்து களைந்துவிட புதுச்சேரி முதலான இடங்களுக்குச்சென்று பிரசாரம் செய்யும் French அதிகாரிகளுக்கு தூதுகோஷ்டி அனுப்பியும் அதை சட்டம் ஆக்கவொட்டாமல் செய்யவேண்டியது நமது இன்றியமையாத கடமையாக இருக்கிறது.

11. மற்றொரு விஷயம் சென்னையில் முளைத்து ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்து இருக்கிறது. இரண்டு மூன்று தினங்களுக்கு முன் அசாஸ்திரியமானதும் நம் தேசத்தினுடைய உன்னத பதவியை வேரோடு நாசம் செய்யக்கூடியதுமான செய்கைகளை செய்துவரும் அதார்மிகர்களில் சிலர் ஒரு பண்டித பரிஷத்கூட்டி ஆலயப்பிரவேசம், தீண்டாமைவிலக்கு முதலானவைகள் சாஸ்த்ர சம்மதங்கள் என்றும், சாஸ்த்ர சம்மதமானவைகள் அல்லவென்று ஏற்பட்டாலும்கூட, சாஸ்த்ரங்களைமாற்ற பரிஷத்துக்களுக்கு அதிகாரங்கள் உண்டென்றும், யுகந்தோறும் அவ்வித மாறுதல்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றனவென்றும் வாய்கூசாமல் கர்ஜித்துக்கொண்டு அதற்கு வேண்டிய பிரயத்னங்களை செய்யவாரம்பித்து இருக்கிறார்கள். கடுக்காய் எவ்வளவு நீளமென்றுகேட்க, அது பத்து முழ நீளமென்று பதில் சொன்ன ஒருவன், அது எப்படியென்று மறுபடியும் கேழ்க்கப்பட்ட கேள்விக்கு உத்தரம் அளித்தது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கலாம். வாய் எதற்காக ஏற்பட்டது? இப்பேர்பட்ட பதில் அளிப்பதற்காகவே என்பது அவர் கொள்கை. மேற்கண்ட பிரமுகர்களின் வார்த்தையும் அதுபோலிருக்கின்றது. இந்த பரிஷத் கூடுவதற்கு முன்னமேயே நாம் எல்லோரும் பிரசாரம் செய்து சாஸ்திரங்களை குருமுகமாக கற்றுணர்ந்து சுயம் அநுஷ்டித்து வருகிற வித்வான்களை சாங்கோபாங்கமாய் அவைகளை புனராவலோகனம் செய்யும்படி செய்து ஷை பரிஷத்தில் அவர்களை ஏராளமாக சேர்த்து வஸ்துஸ்திதியை வெளிப்படுத்தி ஷை பிரமுகர்களுடைய அபிப்பிராயங்களுக்கு சாஸ்திரங்கள் கொஞ்சமேனும் இடம் கொடுக்கமாட்டா என்பதை ஸ்தாபிக்க வேண்டியதாக இருக்கிறது.

இந்த விஷயங்களையெல்லாம் கவனித்து நம்முடன் சேர்ந்து பாடுபடுவதில் அக்கறையுள்ள நம்முடைய பிராம்மணோத்தம சகோதரர்கள் அவ்வாறு பாடுபட முன்வராமல் உதாசீனமாக இருந்துவருகிறார்கள். இந்த விஷயங்கள் சம்பந்தமாக அவர்களுக்கும் நமக்கும் கொஞ்சமேனும் அபிப்பிராய பேதம் இல்லாமலிருந்தும் யாது காரணம் பற்றியோ தீவிரப்ரசாரத்தில் தலையிட்டுக்கொள்ளாமல் அவர்கள் மௌனம் சாதித்துவருகிறார்கள். அதைப்பற்றியே நாம் தனித்த ஒரு பிராம்மண மஹாஸபை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டு சென்ற 7, 8-வருஷங்களாக நடத்திவருகின்றோம். பிராம்மண மஹாஸபை என்ற பேர் வைத்திருந்தாலும் அதின் லக்ஷ்யம் பொதுஜனங்கள் யாவர்களுடைய முன்னேற்றமும் சௌக்யமுமே. தங்களுடைய க்ஷேமத்திற்காக மட்டுமல்ல என்பதை மீண்டும் வற்புறுத்துகிறோம். ராஜீய விஷயங்களில் காங்கிரஸ் மஹாஸபை முதலானவைகளோடு சேர்ந்து உழைப்பதை இந்த மஹாஸபை நிறுத்தப்போவதில்லை. மதவிஷயங்களிலும் ஸமூஹ விஷயங்களிலும் புதுத்து மாறுதல்களை ஏற்படுத்தாமல் அவர்கள் நடந்து கொள்ளவேண்டியதென்பதே இச்சபையின் முக்கிய நோக்கம். இந்த லக்ஷ்யத்தை நாம் நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆரம்பத்தில் நாம் பிரார்த்தித்துக்கொண்டபடி திருமூர்த்திகளுடையவும் அஷ்டதிக் பாலர்களுடையவும் அனுக்ரஹம் நமக்கு அத்யாவசியமானது. ஈஸ்வர பலமில்லாமல் ஒரு காரியமும் நிறைவேறாது. இதற்கு உதாஹரணம் காங்கிரஸ் மஹாஸபையார் மந்திரி பதவியை அடையாமற் போனதே போதுமானது. வெண்ணை எடுக்கும் சமயம் தாழி உடைந்ததுபோன்ற வசனத்திற்கு ஏற்ப இந்த சம்பவம் உண்டாயிருக்கிறது. ஏன் இப்படி என்றால், காங்கிரஸ் தலைவர்களில் பெரும்பாலோர்கள் தீவிர ஈச்வரபக்தியை அற்றவர்களாயும் சாஸ்திர விஹிதமான ஸ்வதர்மானுஷ்டானத்தை கைவிட்டவர்களாகவும் போனதே முக்கிய காரணம். ஆகையால் நாம் பிரவர்த்திக்கும் ஒவ்வொரு காரியங்களிலும் ஈச்வர அனுக்ரஹத்தை முதலில் சம்பாதித்துக்கொள்ளவேண்டும். அத்துடன் நம்முடைய புத்தி சக்தியையும் ஆத்மசக்தியையும் வ்ருத்திசெய்துகொள்ளவேண்டும். அதற்கு மார்க்கம் தெளிவாக இருக்கிறது. வேதாந்தங்களும் யாகாதிக்ருதுக்களும் ஜபஹோமங்களும் சாந்தி பௌஷ்டிக கர்மாக்களும் தேவதாராதனங்களும், ஆலயபூஜைகளும், நாம் எதிர்பார்க்கும் பூர்ணபலன்களை இப்பொழுது அவ்வளவாக தருகிறதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஏன் வேதாத்யயனம் கிரமப்படி நடைபெறுவதில்லை? கர்மாக்களை சிரத்தையுடனும், நம்பிக்கையுடனும், ஏகாக்ர சித்தத்துடனும் செய்கிறதில்லை. கேவலம் பிரதிஷ்டாகாமர்களாக மட்டும் செய்கிறோம். ஜபஹோமாதி கர்மாக்களில் நம்மால் வரிக்கப்படும் ருத்விக்குகள் மனதை ஒருமைப்படுத்திக் கொள்ளாமல் பல விஷயங்களில் சிதறவிட்டு வாயினால் மட்டும் உச்சாரணம் செய்துகொண்டு சம்பந்தப்பட்ட தேவதைகளை அநுஸந்தானம் செய்யாமல் ஜபித்து வருகிறார்கள். கர்த்தாவும் விஷயம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளாமல் புரோஹிதர்கள் சொல்வதை கிளிப்பிள்ளைகள் போல் சப்தித்துவருகிறார்கள். ஒவ்வொரு கர்மாவிலும் "மனஸ்ஸமாதீயதாம்".

முதலான வாக்யங்களை கர்த்தா சொல்லுகிறார், ருத்விக்குகளும் கேட்டுவருகிறார்கள், ஆனால் எவ்வளவு தூரம் அவ்வித உணர்ச்சி ஏற்படுகிறதென்பதை விஸ்தரிக்க வேண்டியதில்லை. அதனாலே தான் மந்த்ரங்கள் வீர்யமற்றதாகவும் கர்மாக்கள் பூர்ணபலம் இல்லாதவைகளாகவும் முடிகின்றன. ஈச்வராராதனமும் அப்படியே. பூஜாசமயங்களில் தேவதா அநுஸந்தானம் பெரும்பாலும் கிடையாது. மனது எங்கேயோ சஞ்சரிக்கிறது. ஆலயங்களில் விசேஷங்களையும், அலங்

(தொடரும்.)

Registered No. M. 2913

The Arya Dharmam.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 3rd JUNE 1937. [No 21

RESOLUTIONS ADOPTED AT THE SOUTH INDIAN BRAHMINS CONFERENCE HELD AT KUMBAKONAM,

On the 25th, 26th and 27th May, 1937.

1. (a) That this Conference places on record its sorrow at the demise of respected leaders of the community such as Diwan Bahadur T. R. Ramachandra Aiyar, Rao Bahadur N. Krishnaswamf Aiyangar, and T. R. Krishnaswsmi Aiyar, who were a tower of strength to the community.

(b) This Conference places on record its sense of the great loss sustained by the Hindu community, by the demise of the Maharaja of Alwar, who was a prominent and religiously-minded leader of the Hindu community.

2. That in view of the fact that the Varasulka system in marriages is causing great harm to the community, this conference condemns the same and exhorts the community to stop the practice altogether.

Proposed by Brahmasri Vaithinathaswamy Aiyar, Supported by Brahmasri Vembu Sastrial.

3. (a) That with a view to preserve the Dharma and improve the economic conditions of the Brahmin Community, Brahmana Sabhas should be formed in every town and village in South India which should all be affiliated to the Madras Provincial Varnashrama Swarajya Sanga (or the All India Brahmana Maha Sabha).

(b) This Conference is of opinion that there should be a Sanskrit Patasala in each Brahmin village for imparting cultural and religious instruction to boys and girls, and VEDADYAYANA classes be permanently conducted in each village so that all Brahmanas may learn to recite at least the essential portions of their respective VEDAS and that this aim may also be sought to be reached by utilising the existing institutions. Whereever possible.

Proposed by Mr. S Swaminatha Sastri
Supported by Mr. Vaithinathaswami Aiyar
" Mr. G. V. Lakshmana Sastrial.

4. This Conference accords its hearty support to journals like "Dharmarajya" "Marga Bandhu", "Arya Dharmam", "Dharmic Hindu", "Truth" and others which are conducted for advancing the cause of Sanathana Dharma, and exhorts all Sanatanists to accord to them their fullest support in all possible ways.

Starting a Conservative Party:

5. This Conference is of opinion that it is very essential for the attainment of the Sanatanists' objective of the preservation of Hindu religion and culture, that all Sanatanists should, while co-operating with all organisations for the attainment of Swaraj, work in a body for strengthening the elements of conservatism and oppose the forces working for disintegration and revolution in matters religious, social, and political.

Moved by Brahmasri T. M. Krishnaswami Aiyar, Advocate, Madras.

Seconded by Pandit Agnihotram Gopaladesikachariar.

Supported by Mr. M. K. Vaithinatha Aiyar, Advocate.

Propaganda through Pouranikas:

6. This Conferneo is of opinion that the Sanatanists should make all Puranic discourses an organic part of their propaganda by developing intimate associations with *Pouranikas* all over the country. and training them to stand as bulwarks to our religion and culture against the reformist onslaughts and exhorts the local Brahmin public of each village to arrange for the permanent maintenance of at least one pandit for teaching and maintaining the traditions of Sanatana Dharma.

Moved by Mr. S. Mahalinga Aiyar,

Seconded by Brahmasri Ramayanam Vembu Sastrial.

7. (a) This Conference is of opinion that the Travancore Temple Entry Proclamation is against the injunctions of the Sastras and the Agamas and the immemorial religous usages and traditions governing temple worship, and prays that His Highness the Maharaja of Travancore may be pleased to withdraw the same.

Moved by Brahmasri Pandit Rangaswami Sastrial.

Seconded by Brahmasri Pandit K. V. Subramania Sastrial of Madura.

(b) This Conference expresses its deep admiration and thankfulness to the Maharaja of Cochin for his boldly upholding Dharma and *Sishtachara* in respect of the worship in the Koodalmanikkam Temple.

8. (a) This Conference reiterates its condemnation of the Sarda Act and requests all political parties who recognise freedom of religion and conscience as a fundamental right of citizenship to work and press for the early repeal of the said Act.

(b) This Conference records its protest against the move in French India to enact legislation there similar to the Sarda Act and accords its full support to the proposed deputation to the French Governor in connection with this matter.

Proposed by Mr. G. V. Venkatarama Aiyar, Advocate.

Seconded by Mr. R. Swaminatha Aiyar, Retired Head Master.

Supported by Mr. R. Venkataramani Aiyar, Advocate.

9. This Conference exhorts the Brahmins to live up to the true ideal of the Brahmin by living the life of high thinking and simple living, and observing, to the maximum extent possible, their ancient Acharas in their daily life.

Moved by Brahmasri Brahmaratnam Sri Nilakanta Bharathi Sarada Doss of Kivalur.

Seconded by Mr. R. Radhakrishna Aiyar, Advocate, Tanjore.

10. That this Conference forms a Committee consisting of the following gentlemen for the purpose of carrying on propaganda throughout South India in order to bring into effect all the resolutions passed at this Conference.

Brahmasri T. L. Subba Aiyar, (Convener).
Brahmaratnam Neelakanta Barathiar,
Mr. S. Swaminatha Sastrial.
Mr. P. S. Vaithinathaswami Aiyar.

Anti-Brahmin Fiction, Drama and Cinema condemned:

11. (a) This Conference calls the attention of the Brahmin community to the immense moral and material injury inflicted on it by the persistent vilifying propaganda against Brahminical ideals, culture, and home life, now carried on by a certain section of the press, and through some vernacular books of fiction and trama and some cinema films, and calls upon the leaders of the community to take suitable counter - measures by convening public meetings and sending protests to the Government and the Board of Censors of films, and, wherever possible, by taking legal action.

(b) This Conference

(1) condemns the introduction with the obvious intent of scandalising and vilifying the Brahmin community, of irrelevent episodes in certain film stories, holding up to ridicule and contempt the Brahmins as individuals and as a community.

(2) declares that the Brahmins who have taken part in the production of such stories as authors or producers or actors are doing the greatest disservice to their community, and

(3) exhorts the members of the Brahmana Community, both men and women to, at least, boycott witnessing such films as a sign of their disapproval.

Moved by Mr. S. Subramania Aiyar, Advocate of Devakottah.

Seconded by Brahmasri Saram Rangachriar.

12. This Conference is of opinion that the Communal G. O. is a negation of the principle of efficiency as the test for entering pnblic services and therefore urges its early repeal.

Moved by Brahmasri V. Jayaram Aiyar, Advocate, Trichinopoly.

Seconded by Brahmasri R. Swaminatha Aiyar.

Proposed Pandits' Parishad:

13. This Conference is of opinion that no useful purpose can be served by holding a Conference in the manner contemplated by some Madras leaders, "of Pandits and others interested in the subject of reforms and changes in our social and religious practices" as the holding of such Conference will be *unsastraic* and will only aggravate the already existing disorganised and anarchic state of the Brahmin community.

Moved by Mr. S. Mahalinga Aiyar,

Seconded by Brahmasri T. L. Subba Aiyar,

Supported by Brahmasri Jagadiswara Sastrial,

Supported by Brahmasri Thathu Desika Thathachariar.

14. This Conference condemns the order of the local authorities banning the ringing of bells in the Poona Maruthi Temple and deeply regrets that the All-India political leaders have not protested against this infringement of the fundamental civic rights of Hindus concerning their religious worship and not co-operated with the Poona Hindu community for getting the order withdrawn.

Moved by Mr. G. V. Venkatarama Aiyar, Advocate.

Seconded by Mr. M. Rama Rao, Assistant, T. H. School, Kumbakonam.

Supported by Pandit Bhuvarahachari.

15. This Conference places on record its appreciation of the great munificence of Brahmasri Aiyu Aiyar of Paiamaneri now residing at Kumbakonam who has made a princely donation of over Rs. 65,000/- for the starting and running of an Advita Patasala at Kumbakonam and hopes that his noble and lofty example will be followed by other wealthy members of the Brahmin community.

Moved by Brahmasri S. Swaminatha Sastrial.

Seconded by Pandit Sivarama Sastrial.

16. This conference approves of the work that has been done for the past four years by the Madhyama Brahmin Association formed by the late lamented Diwan Bahadur T. R. Ramachandra Aiyar and accepts the request of the General Secretary of the Association that the same be in future amalgamated with the Varnashrama Swarajya Sanga organisation.

Agnihotram Ramanujathathachariar gives notice of the following resolution.

Brahmins, a minority community, should be a separate Political party.

17. (a) This Conference is of opinion that in view of the special hardships and inequities to which they are subjected the Brahmins of South India should organise themselves *as a minority community* to protect their religious, cultural, and economic interests *by functioning as a distinctive political group in the public life of the country*, but co-operating with all other communities for the promotion of the common interest of the country as a whole.

(b) This conference is of opinion that in view of the peculiar position of the Brahmana Community in South India which has been, and is liable to be, subjected to injustice and oppression by the majority political parties in the matter of their religious, cultural and economic interests, this Conference prays that His Excellency the Governor of Madras should not give the 'assurance' demanded by Congress regarding special powers vested in him for the protection of minorities.

Mr. G. V. Venkatrama Aiyar moves an amendment "that in view of the fact that the resolution raises important issues, opinions on the same may be invited by the President from important Brahmin leaders and that meanwhile the consideration of the resolution proposed may stand adjourned."

Seconded by Brahmasri Bhuvarahachariar. Amendment Carried.

18. That this conference resolves that in all Municipalities of this Presidency the authorities concerned be requested to provide suitable burial ground for the final ceremonies of Brahmins who die after taking to Sanyasaashramam and remove the difficulties experienced in the matter by the families and Sishyas of Brahmeebuthas and Samnyastas.

Moved by Mr. S. Swaminatha Sastrial

Seconded by Mr. R. Swaminatha Aiyar.

The Muslims and the Congress.

In a very recent speech, Mr. Abdul Hamid Khan, former Mayor of Madras and a member of the Muslim League is reported to have made the following important pronouncement.

"It is the non-political activities of the Indian National Congress, such as the pratically communal activities of Mr. Gandhi's Harijan movement, and the Hindi-Hindustani activities of Mr. Gandhi which have engendered suspicion among Muslims, ... If, today, all Congress Leaders gave up their non-political activities, I am sure that Muslims would not stand away from the Congress and would join the Congress in its fight for independence."

These words of Mr. Hamid Khan deserve very careful thinking on the part of all—Congressmen and Sanatanists alike. That the Congress pursues non-political activities is a complaint shared by the Sanatanists also but the reason therefor is quite different from that in the mind of Mr. Hamid Khan. Sanatanists hold very strongly the opinion that the Congress is only a political organisation and has no power or jurisdiction to interfere with the religious and socio-religious beliefs and practices of the Hindus, which, according to them, are immutably based on Sanatana Dharma. As for Mr. Nehru, the reason for his placing only the main political issue before himself is not that religion occupies a secondary place in his estimation but that for him, it is nowhere in the picture at all.

If we are to take Mr. Hamid Khan as the spokesman of the Muslims, we have to conclude that the Muslims are one with the Congress as regards political aims and methods and are prepared to co-operate fully with the Congress if the latter is prepared to abandon the Harijan movement and the Hindi propaganda, which are the only two items specified by Mr. Hamid Khan as the non-political activities of the Congress. Whether such co-operation would be forthcoming from Sanatanists also if Congress gave a similar assurance of abstention from non-political activities is a matter which requires close examination. There are fundamental differences between Sanatanists and the Congress in the ideas underlying individual, family, social and corporate life, which cannot be ignored and in spite of statements recently made that the aim of the Congress and of the Sanatanists are the same in political matters, it is time to enter a caveat against such unqualified statements, reserving the matter for fuller discussion on another occasion.

We shall now examine the two items of non-political activities of the Congress objected to by Mr. Hamid Khan. The Hindi-Hindustani question resolves itself, even on a superficial analysis, as the Hindu Muslim question, when we find the cause of Urdu championed by the Hon'ble Mr. Khalifulla Sahib, a gentleman of the Tamil districts, the Muslim residents wherein are, most of them, innocent of the Urdu language. The objection of the Muslims to the Harijan activities is more insidious in charactor and affords a prominent indication of the Muslim mentality.

"Harijans" is the name given by Mr. Gandhi to those persons in the Hindu fold who do not belong to the four castes. These were called the Panchamas, the untouchables, the depressed classes and by other names, till Mr. Gandhi, out of his clever phrase-making capacity, sanctified them by the appellation 'Harijans'. They were the special objects of solicitude for successive Social Reform Conferences, till the Congress after Mr. Gandhi's advent, opened out its bosom to them and made their cause its own. The present aim of the Congress is to ameliorate their condition, remedy 'the age-long wrongs done to them 'by the four Castes and, in short, to enable them to occupy their position in Hindu Society to which, according to the Congress, they were till now refused admission.

With regard to this section of Hindu society, the Sanatanists differ profoundly from the Congress as regards their requirements and the r e m e d i e s. Be that as it may, the avowed aim of Mr. Gandhi and his followers is to retain them within the Hindu fold. Now this is exactly what the Muslims and the zealots of other proselytising religions do not like. The 'Harijans' have been for generations the happy recruiting ground for them in their search for converts and if by any effort, this poaching is obstructed, it is hard to see how there can be any legitimate grievance. Yet, this is, surely, the only reason for Mr. Hamid Khan pointing it out as one of the objectionable non-political activities of the Congress.

Judging from the past history of the Congress, one can easily say that assurance on both these points will ultimately be given, in the futile pursuit of Hindu Muslim unity. The Congress Hindus have ever and anon, yielded every demand of the Muslims, regardless of the sacrifice they make. As one Congress speaker said at the same meeting, the Congress was prepared, once complete independence was achieved, to yield not only the 14 points of Mr. Jinnah but even 55 points.

Now, Sanatanists wish to know for whom these Cogressmen are talking and why they are talking so. Is there nothing in Hindu Society to be proud of, nothing in Hindu religion to exalt, that there should be this excessive tenderness and solicitude for the feelings of the Muslims. *They* are a community, highly class-conscious and are prepared to repel, even at the price of their lives, the slightest attempt at interfering with their religious and social life. Nay, they are always ready to take the offensive, given the slightest occasion therefor, real or imagined. The ringing of a temple bell upsets their religious absorption and there result murders in open daylight in the public thoroughfares. [This intrusion on meditation seems to be the peculiar fault of the Hindu temple bells; the bells of Christian Churches are not objected to at all by Muslims, probably because they belong to the religion of the governing power.] As against this aggressive and militant attitude it is highly lamentable to see the Congress Hindu leaders assume an apologetic mentality and truckle to the slightest wish of the Muslims or remain discreetly silent, as they are doing in the case of the Sonia Maruthi temple incident. They are prepared to sell the pass by submission or inaction. Is it not time for us to awaken to a sense of this danger, before our rights are bartered away? Do we not deserve our separate social and religious existence and is it not worth making any sacrifice for?

Socialist a Snob:—The Socialist is a snob. He allows the sight of the rich to unbalance him. Religion can cure him of his snobbery. Through religion he can learn that there are higher values than worldly goods.

आचारः परमो धर्मः श्रुत्युक्तः स्मार्त एव च ।
तस्मादस्मिन्सदा युक्तो नित्यं स्यादात्मवान्द्विजः ॥

An ordered life is the greatest of duties, prescribed by scripture. Every Brahmin, therefore, who has his senses under control, should conform to this precept.

331

பைபிளும் சதபதப் பிராம்மணமும்

அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர்.

கடந்த சில நூற்றாண்டுகள் ஹிந்துமத சரித்ரத்தின் துரதிர்ஷ்டம் வாய்த்ததினங்கள். மேனாட்டிலிருந்து வந்த பாதிரிகள் ஹிந்து மதத்தை பல வழிகளிலும் துன்பப்படுத்தி விட்டனர். ப்ரஸங்கமேடைகளிலும், சந்து பொந்துபிரசாரங்களிலும் அவர்கள் ஹிந்துமத க்ரந்தங்களையும் ஆசாரங்களையும் தூஷித்து துருபதேசம்செய்துவந்ததை ஹிந்துமதம்என்றும் மறக்காது. பாதிரிகளின் ஆர்பாட்டங்களால் வமார்ந்த சிலர் கிரிஸ்தவ மதக்ரந்தங்கள் உயர்ந்தனவென்று ப்ரமம்கொண்டுவிட்டனர். ஆனால் வைதிக க்ரந்தங்களை விமர்சம் செய்த மேனாட்டினர் நமது க்ரந்தமே உலகில் மிகவும் ச்ரேஷ்டமானதென்றும் நமது ஆசாரங்களே ஸயன்ஸுக்கு விரோதமில்லாதவை என்றும் பலமாக நிரூபிக்கலானார்கள். இதனால் பாதிரிகளின் கொண்டாட்டம் சிறிது அடங்கலாயிற்று. மேலும், அவர்களுடைய பைபிள் வேதத்தையும் நம் வேதங்களையும் ஒருங்கே ஒப்பிட்டுப்பார்த்தால் நமது க்ரந்தங்களுக்கு ஏற்படும் அஸாதாரணமானமேன்மை எந்த மேதாவியினாலும் மறுக்க முடியாததாகும்.

பைபிளில், நமது கர்மகாண்டங்களில் காணும் உயர்ந்த லக்ஷ்யம் உள்ள கர்மாக்களைப்போன்ற கர்மாக்கள் ஒன்றும் காணவில்லை. நமது உபநிஷத்துக்களில் போன்ற உயர்ந்த பாவமும், அழகான அத்யாத்ம விசாரமும் அங்கில்லை. தேவதா ஸ்தோத்ரங்களில் நமது யந்த்ரங்களில் காணும் பரந்த நோக்கமும் உயர்ந்த கவித்வமும் பைபிளில் இல்லை. வைதிக இதிஹாஸபுராணங்களிலோ, அர்த்தவாதங்களிலோ வெளியிடப்படும் முறையில் தேவதை முதலியவைகள் ஸம்பந்தித்த கதைகளை பைபிளில் நாம் காணமுடியாது. அதுமட்டுமில்லாமல் அநேக இடங்களில் ஜாடையாகவும் நேராகவும் வைதிக க்ரந்தங்களிலுள்ள விஷயங்கள் காப்பியடிக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ப்ரளய ஸம்பந்தமான ஒரு கதையை எடுத்து நிரூபிப்போம். இக்கதை நமது சதபதப்ராஹ்மணத்திலுள்ளது. பைபிளும் அதே நோக்கத்துடன் சற்றேறக்குறைய அதேமாதிரியாக உள்ள கதையை நிரூபிக்கிறது. இதை விவரிப்போம்.

நமது வேதங்களில் மந்த்ரம் ப்ராஹ்மணம் என இரு பிரிவுகள் உண்டு. அவைகளில் மந்த்ரபாகம் தேவதைகளை ஸ்தோத்ரம் செய்ய ஏற்பட்டது. தேவதைகளை ஸ்தோத்ரம் செய்வதென்பது அவர்களிடமுள்ள குணங்களை வெளிப்படுத்துவதே. அதனால் அந்த பாகங்களில் அந்தந்த தேவதைகளின் அந்தந்த ஸமயங்களில் செய்த பலவித செய்கைகள் மூலம் பல குணங்கள் வெளியாக்கப்படுகின்றன.

அவ்விதமே ப்ராஹ்மண பாகம் கர்மாக்களை விதிப்பதற்கேற்பட்டது. விதிக்கப்பட்டவைகளில் மனிதனுக்கு ருசிஉண்டாக்குவதற்காக தேவதைகள், ரிஷிகள், அரசர்கள் இவர்கள் ஸம்பந்தித்த பலவித கதைகள் அங்குசொல்லப்படுகின்றன. ஸ்மிருத்யதிகரணந்யாயப்படி மஹாபாரதாதிகளான இதிஹாஸபுராணங்கள் மேற்கூறப்பட்ட இருவிதபாகங்களிலுமுள்ள கதைகளையே அடிப்படையாகக்கொண்டு ஏற்பட்டன என்பது ஸ்பஷ்டமாகிறது.

லோகத்தில் மஹாபாரதாதிகளில் உள்ள புராணேதிஹாஸங்கள் பலமான ப்ரசாரத்தை அடைந்திருக்கின்றன. ஸாக்ஷாத்தாகவே வேதத்திலுள்ள இதிஹாஸங்கள் அடியோடு மறைந்துகிடக்கின்றன. இவைகளை நாம்நன்கு பரிசீலித்தால் பாரதாதிகளிலும் காணாத பல விஷயங்களை அறியலாம். வைதிக நாகரீகத்தின் தோற்றங்கள் அங்கு ப்ரதிபலிக்கின்றன. புராதனமான பல நம்பிக்கைகள் வெளியாகின்றன. வைதிக ஸமூஹத்தின் நிலை பலவிடங்களில் நன்கு அறியப்படுகிறது.

மநு, மனிதர்களுக்கு ஆதிபுருஷர் என்பது வேதத்திலுள்ள ஒரு நம்பிக்கை. அநேக இடங்களில் மநு பிதாவென்றே சொல்லப்படுகிறார். யாஉயவ..ாஉநாவஹி தா ! (ரிக், ஸம், ம 1—ஸூ. 80 யவஹாயாரஉநாவஹி தா (ஸா—ஸம் 1-355) உாநவஹ் ஹ்ஜா உஹெதெ தை = ஸம்1—5—1)

வைதிகமான இந்த நம்பிக்கை இந்தியர்களிடைமட்டு மில்லாமல் வெளிதேசத்தாரிடமும் காணப்படுகிறது. ஈஜிப்ட் தேசத்தார் Menes என்பவரையும் கிரேக்கர்கள் Minoos என்பவரையும் ஹீப்ருஜாதியினர் Moses என்பவரையும் ரோமர்கள் Nu-ma (manu) என்பவரையும் தங்களுடைய புராதன புருஷராகச் சொல்லுகின்றனர். ஜர்மினியர்களும் மநுவின் பெயரைப்போன்றபெயரைஉடைய பூர்வ புருஷரை ஒப்புக்கொள்ளுகின்றனர். ancient Grete ஐச் சேர்ந்தவர்களும் Minas என்பவரை புராண புருஷராக ஒப்புகின்றனர். இங்கு மநு என்ற பெயர் சிறிதே மாறுபடுவது கவனிக்கத்தக்கது.

இந்த நம்பிக்கையை விளக்குவதற்காக வேதத்தில் ஒரு கதை சொல்லப்படுகிறது. சற்றேறக்குறைய அதே போன்ற கதை பைபிள் பழைய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது.

சதபத ப்ராஹ்மணத்தில் (1—8—1) கீழ் கண்டவாறு கதை காணப்படுகிறது.

ஒரு ஸமயம் காலையில் மநு கைகளை சுத்தம் செய்ய ஜலம் கொண்டுவரப்பட்டது. மநுவும் அவைகளால் கைகளை சுத்தம் செய்ய ஆரம்பித்தார். கைகளில் சுத்தம் செய்ய ஜலம் எடுக்கப்படுகையில் ஒரு சிறுமீன் மநுவின் கைகளை அடைந்தது. அது மநுவிடம் பின்வருமாறு சொல்லிற்று

"ஹே மநுவே! நான் இப்பொழுது மிகச்சிறியதாக இருக்கிறேன். சிறிய மத்ஸ்யங்களை பெரிய மத்ஸ்யங்கள் தின்னும் வழக்கம் உண்டு. இந்நிலையில் சிறியோனான என்னை இப்படியே ஜலத்தில் விட்டுவிட்டால் பெருமீன்கள் என்னைத் தின்றுவிடுவது நிச்சயம். ஆகவே என்னை இவ்வாபத்திலிருந்து காப்பாற்றும். என்னைக் காப்பாற்றினால் உம்மை நான் காப்பாற்றுவேன்" என்றது. இதைக்கேட்ட மநு 'எந்த ஆபத்திலிருந்து என்னைக்காப்பாற்றுவாய் என்று கேட்டார். அதற்கு சிறுமீன் 'மஹத்தான ஜலப்ரவாஹம் உண்டாகப்போகிறது. அப்பிரவாஹம் இவ்வுலகிலுள்ள ஜந்துக்களை அடித்துக்கொண்டு போகப்போகிறது. அவ்வாபத்திலிருந்து உம்மைக் காப்பாற்றுகிறேன்'' என்று பதிலளித்தது. உடனே மநு உன்னை எவ்விதம் காப்பாற்றுவது என்று கேட்டார். அதற்கு மீன் முதலில் குடத்தில் வைத்து என்னைக் காப்பாற்றும். அதற்கு அதிகமாக நான் பெருத்துவிட்டால் சிறிய ஊற்றை வெட்டி அதில் பிறகு என்னை விட்டுவிடும். ஊற்றுக்கும் அதிகம் பெருத்துவிட்டால் என்னை ஸமுத்ரத்தில் சேர்த்துவிடும். அப்பொழுது யான் ஆபத்துக்களிலிருந்து விடுபட்டு விடுவேன் என்றது. உடனே அந்த மீன் பெருமீனாகிவிட்டது. ஒரு வருஷத்தின் ஒரு தினத்தைக் குறிப்பிட்டு 'அன்று பிரவாஹம் வரப்போகிறது. அப்பொழுது ஒரு கப்பலை தயார் செய்துவிட்டு என்னை த்யானம் செய்யும். பிரவாஹம் வந்த உடன் கப்பலை நீவிர் அடைந்துவிடும். பிறகு நான் அவ்வாபத்தில் காப்பாற்றுகிறேன்'' என்று மநுவிடம் சொல்லிற்று. மநுவும் மத்ஸ்யம் சொல்லியபடியே அதைக் காப்பாற்றினார். கடைசியாக ஸமுத்ரத்தில் கொண்டுவிட்டார். மத்ஸ்யம் சொல்லியபடியே மஹத்தான பிரவாஹம் வந்தது. மநுவும் ஒரு கப்பலைத் தயார் செய்துகொண்டு மத்ஸ்யத்தை உபாஸித்தார். மநு கப்பலை அடைந்துவிட்டார். மத்ஸ்யமும் கப்பல ஸமீபம் நீந்திக் கொண்டு வந்தது. அதன் இரண்டு கொம்புகளிலும் கப்பலின் கயிற்றை மநு கட்டினார். உடனே மத்ஸ்யம் வடக்கேயுள்ள ஹிமய மலைப்பக்கம் நீந்திற்று. மநுவிடம் பின வருமாறு சொல்லிற்று.

"ஓ! மநுவே! உம்மை நான் காப்பாற்றி விட்டேன். இங்குள்ள சிகரத்தில் கப்பலை கட்டிவிடு. நீ மலையின் மீது இருக்கும்வரை ப்ரவாஹத்தால் யாதொரு ஆபத்தும் உமக்கு ஏற்படாது. ஜலம் வடிய வடிய கீழ் இறங்கலாம் என்று கூறியது. அவ்விதமே மநுவும் செய்தார். அதனாலேயே வடக்கிலுள்ள ஹிமயமலைக்கு "மநோரவஸர்ப்பணம்" என்று பெயர். பிறகு மநு பலவித ப்ரஜைகளை 'இடா' மூலமாக ஸ்ருஷ்டித்தார்.

பைபிளில் பழைய ஏற்பாடு ஆதியாகமம் 6-7-8 அதிகாரங்களில் காணப்படும் கதைகளின் சுருக்கம் பின் வருமாறு:—

மனிதன் பூமியில் கணக்கற்ற அக்ரமங்களை செய்வதையும், பொல்லா எண்ணங்களையே எண்ணுவதையும்கண்டு கர்த்தர் விசனப்பட்டார். தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட மநுஷ்ய மிருக பக்ஷிகளை நிக்ரஹம் பண்ண முடிவு செய்தார். நோவா என்பவரை மட்டும் க்ருபை கூர்ந்து கடாக்ஷித்தார். நோவாவிடம் பின் வருமாறு தெரிவித்தார். "பூமி கொடுமையால் நிறைந்து விட்டது. மனிதனுடன் பூமியை அழிக்கப்போகிறேன். நீ மட்டும் கொப்போர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை 300 முழ நீளத்தில் 50 முழ உயரத்தில் தயார் செய். பேழைக்கு ஒரு ஜன்னலை மேல் தட்டுக்கு ஒரு முழம் கீழில் உண்டு பண்ணு. ஸகல ஜந்துக்களையும் அழிக்க ஜலப் பிரளயத்தை உண்டு பண்ணுவேன். பூமியிலுள்ளயாவும் மாண்டுபோம். ஆனால் நீயும் உன் குமாரரும் உன் மனைவியும் பிள்ளையின் மனைவியும் பேழைக்குள் பிரவேசியுங்கள் ஸகல ஜாதிகளையும் சேர்ந்த பசு பக்ஷிகளையும் உன்னிடம் அடக்கம் செய்துகொள். எல்லோருக்கும் வேண்டிய ஆஹாரங்களையும் தேடிக்கொள் என்று கூறினார். நோவாவும் அவ்விதமே செய்துமுடித்தான். ஏழு நாட்கள் சென்ற பிறகு நாற்பது நாட்கள் இரவும் பகலும் மழை பெய்யும்படி கர்த்தர் செய்தார். அப்பொழுது நோவாவிற்கு 600 வயது. நோவா தனது குடும்பத்துடன் பேழைக்குள் பிரவேசித்தார். நோவாவின் 600 வயதின் இரண்டாம் மாதம் 17உ மழை ஆரம்பத்தது. நோவா அவன் குமாரர்கள் பசு பக்ஷிகள் இவைகளைப் பேழைக்குள் விட்டு கர்த்தா கதவை அடைத்தார். மழையால் ஜலம் பெருகி பேழை கிளம்பிற்று பூமிக்கு மேல் மிதந்தது. மழையால் எல்லா மலைகளும் ஜலத்தில் மூழ்கிவிட்டன. ஸகல ஜந்துக்களும் மாண்டன. பேழையிலிருந்த உயிர்கள் மட்டும் காப்பாற்றப்பட்டன. நூற்றைம்பது நாள் ஜலம் பிரவஹித்துக் கொண்டிருந்தது. அவைகள் நினைத்து தேவன் காற்றை வீசப்பண்ணினார், ஜலம் அமர்ந்தது. பூமியின் ஊற்றுக்கண்களும் வானத்தின் மதகுகளும் அடைபட்டு மழை நின்றுவிட்டது. நூற்றைம்பது நாட்களுக்குப் பிறகு ஜலம் வடிந்தது. 7-வது மாதம் 17உ மிதந்து வந்த பேழை "அராத்" என்ற மலைகளின் மீது தங்கிற்று. பத்து மாதம் மட்டும் ஜலம் வடிந்துகொண்டே வந்தது. 16-ம் மாதம் முதல் தேதியிலே மலைச் சிகரங்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

215187



அநாவசியமாக - -

- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

குழந்தை

குடல் ஈரல் கட்டிகளுக்கு

ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள

மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்

மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசம் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.

ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.

டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் காணப்பட்டன, பிறகு (9-19) நோவாவின் ஸந்ததி வ்ருத்தியாயிற்று.

சில வித்யாஸங்கள் வேதத்திற்கும் பைபிளுக்கும் இங்கு காணப்பட்டாலும் கொள்கையளவில் இரண்டிலுமுள்ள கதைகளும் மிகவும் ஒற்றுமையுள்ளவைகள் என்பது தெளிவாகிறது. ஜலப்ரளயம் வந்ததென்பதும் அதனால் ஸகலஜீவராசிகளுக்கும் நாசம் என்பதும், ப்ரளயத்தில் மிதந்த பேழை அல்லது கப்பல் ஒரு மலை மீது தங்கிற்றென்பதும், இந்த ப்ரளயத்திற்குப் பிறபாடு உண்டான ஸந்ததிகளுக்கு இவர்கள் மூல புருஷர்கள் இவர்கள் பின் ஸந்ததிகளை உண்டுபண்ணினார்களேயன்றி ஸ்ருஷ்டிக்கவில்லை. நோவாவோ மநுவோ தங்களைக் காட்டிலும் உயர்ந்த சக்தியுள்ள வேறொன்றால் காப்பாற்றப்படுகிறார் என்பதும் இரு கதைகளுக்கும் பொதுவாக இருப்பது முக்கியமாக கவனிக்கத் தக்கது. கதைகளின் போக்கில் மாறுதல் இல்லாத ஒற்றுமையை பலப்படுத்துகிறது.

இவைகளில் எது முந்தியது? மேனாட்டுச் சரித்ரக்காரர்களின் நிர்ணயப்படியும் பைபிளுக்கும் முந்தியதே சதபதம். இதனால் சதபதக் கதையை பைபிளிலிருந்து எடுக்கப்பட்டதாக ஊஹிக்க இடமில்லை. ஆராய்ச்சிக்காரர்கள் ப்ரளயஸம்பந்தமான கதை வேதத்திற்குப் புதிதானதென்றும் பாபிலோனிய ஸம்பிரதாயத்திலிருந்து வேதத்தில் புகுந்ததென்றும் கூறுகின்றனர். இவ்வபிப்ராயம் உண்மையானால் இருவித கதைகளும் பாபிலோனியக் கதை மூலமானவை என்றேற்படும்.

கர்னல் ஆல்காட், டாக்டர். பெஸண்ட் இவர்கள் போன்றவர்கள் நாகரீகமுள்ள ஈஜிப்ட், பாபிலோனியா முதலிய எத்தேசத்திலும் இந்தியாவிலிருந்து வெளியேறிய ஆர்யர்களாலேயே கல்வி பரப்பப்பட்டதாகக் கூறுகின்றனர். மநுஸ்ம்ருதி முதலிய வைதிக மதக்ரந்தங்கள் இவ்வபிப்ராயத்தையே ஊர்ஜிதப்படுத்துகின்றன. ஸிந்து முதலிய பதங்கள் பாபிலோனிய க்ரந்தங்களில் இருப்பதை கவனித்தாலும் ப்ரளயக் கதை பாபிலோனிய க்ரந்தங்களிலிருந்தே பிற்காலத்தில் ஏற்பட்ட வைதிக க்ரந்தங்களில் புகுத்தப்பட்டதெனக் கூற இயலாது. மேலும் ஜலத்தால் பிரளயம் ஏற்படுவதான கதைகள் பாபிலோனிய க்ரந்தங்களில் இருப்பதாகத் தெரிந்தாலும் கீழ் நாம் குறிப்பிட்டபடி ஒற்றுமையைத் தெரிவிக்கும் ஒரு கதையும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே பைபிள் கதை சதபதத்தை மூலமாகக் கொண்டேற்பட்டதென்பதே நிச்சயம்.

வைதிக க்ரந்தங்களை தூஷிக்கும் பாதிரிகள் நோவா கதையை பார்க்கட்டும். அவர்கள் தூஷிக்கும் வேதக்ரந்தங்களே அங்கு கையாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

சினிமாச்சபலம்.

நவீன சம்லக்ஷணங்கள் பலவற்றுள் சினிமாவும் ஒன்று. இதனால் நம் நாட்டினில் நாளுக்குநாள் பற்பல விசித்திரங்கள் தோன்றுகின்றன. பெரும்பாலும் நம் தமிழ்நாட்டினில் பிராமணர்களே இத்தொழிலில் அதிக சிரத்தை காட்டிவருவதினால், நிகழும் விசித்திரங்களும் அவர்களிடமே தான் உண்டாகின்றன. அதைச் சிறிது கவனியுங்கள்.

குடந்தையில் 42 தினங்கள் வரையில் வெற்றிகரமாய் ஓடியதும் சுமார் 60,000 ஜனங்களுக்குமேலாகக் கண்டுகளிக்கப்பட்டதுமான "பாலயோகினி" என்ற தமிழ்படத்தை நகரில் பெரும்பாலோர் பார்த்திருக்கலாம். அதன் கதைப்போக்கு அவ்வளவு இயற்கையும், அர்த்தபுஷ்டியும் இல்லாதது யிருந்தபோதிலுங்கூட, ஒவ்வொரு நடிகரின் (முக்கியமாய் அதிபால்ய நடிகர்களின்) நடிப்பும், வெகு இயற்கையாகவும், பார்ப்பவர் மெச்சத்தக்க விதத்திலும் அமைந்திருப்பது உண்மையே. அந்நடிகர்களில் நாம் சொல்ல விரும்பும் விதவையும் ஒருவராவர்.

இவர், இப்படத்தில், ஜானகி அம்மாள் என்ற பெயருடன் சப்கலெக்டரின் சகோதரியாகத் தோன்றுகிறார். ஒரு பிராமண விதவை முதன் முதலாக சினிமாமோகம் கொண்டு நடிக்க முன்வந்தது இப்படத்தில்தான் எனக்கூறலாம்.

போகட்டும்: விதவைவிதவைநடிப்பைக்கொண்டதாயினும் அவ்வளவு மோசமாகத் தெரியவில்லை. ஆனால் இதே அம்மாள், 'ஜயதேவர்' என்ற ஒரு பக்தனின் படத்தில், ராணியாகத் தோன்றி, பௌடர், டோபா, தலைசாமான்கள், புஷ்பம் இன்னும் இதர சகல ஆபரணங்களுடனும், அலங்கரித்துக்கொண்டு நடிப்பதுதான் மிகவும் முக்யமான ஒரு விஷயம். பார்த்தீர்களா பண ஆசையின் போக்கை!

இதுபோலவே 'தியாகராஜா' என்ற தமிழ் படத்தில், கனபாடிகளான ஒரு பெரியார், 'ஒரு வாழைக்கொலையை' திருட்டுக்கொல்லியின் மூலம் திருடுவதுபோலும், அதற்காக கழுதைமீது ஊர்வலம் (தண்டனை) வருவது போலும், ஒரு காக்ஷியில் நடிக்கிறார். இன்னும் இதுபோல் படச்சபலத்தால் எவ்வளவு குடும்பஸ்திரீகள், குடும்பத்தை மறந்து ஓடி நடித்தும், நாடகபடங்களைப் பார்த்தும் கெட்டழிந்து வருகின்றனர் தெரியுமா?

ஒரு நிருபர்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்கப்ரசாரம்
தஞ்சை ஜில்லா.

முடிகொண்டான், நாகூர், நாகப்பட்டணம்

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத் தலைவர்கள் மதுரை ராஜ்ளாறுதிப் நடேசய்யரும் தஞ்சைஜில்லா Organsing Secretary எஸ். சுவாமிநாதசாஸ்திரிகளும், கும்பகோணம் எஸ். மஹாலிங்கய்யர் அவர்களும், எம். கே. வைத்யநாதய்யர் முதலியவர்களும் இந்த வாரம் ஸங்கப்ரசார விஷயமாய் முடிகொண்டான், நாகூர், நாகப்பட்டணம் முதலியவிடங்களுக்குப் போய் விரிந்த உபன்யாசங்கள் செய்து கிளைச் சங்கங்கள் ஏற்படுத்திவந்தனர். சென்ற 15-நாளாய் இப்படி அநேக இடங்களில் தர்மப்ரசாரம் நடந்துவருகிறது. ஆஸ்திக ஜனங்கள் எல்லோருக்கும் ஊக்கத்தையும் ராஜீய உணர்ச்சியை வ்ருத்திசெய்து பலனடைகிறது. விவரம் அடுத்த ஸஞ்சிகையில்.

நமது நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A, Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்
ஊ
4 22
22
10-6-1937

215188

215188

Registered No. M. 2913

ஆர்யதர்மம்.

Hon. Editor:
G. V. Ganesa Iyer, B.A., B.L.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

24 JUN 1937

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ௐ வைகாசி-மீ 28உ 1937-ௐ ஜூன்-மீ 10உ | ஸ 22

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு [illegible]

நடத்தினர். மதாசாரியர் முன்பாக தம்பதிகள் மண்டிபோட்டு மதச்சடங்குகளை செய்து கொண்டனர். இருவரும் உறுதிமொழி கொடுத்துக்கொண்டனர்.

இந்த விவாஹவிஷயமான மதச்சடங்குகளை நடத்திவைக்க பிரஞ்சுதேசப் பாதிரிகளுக்கு அதிகாரம் கிடையாதென்று இங்கிலாந்துப் பாதிரிகள் ஆக்ஷேபம் எழுப்பினர்.

[illegible]

வேலையற்றவர்களின் கஷ்டம்.

ஸத்யாக்ரஹ யோஜனை.

லாகூரில் படித்து வேலைகப்படாமலிருப்பவர்களின் ஸங்கமானது பெரிய கிளர்ச்சி செய்ய முற்பட்டிருக்கிறது. வைஸ்ராய் அல்லது கவர்னர்களுடைய பங்களாவின் [illegible]

தென்னிந்திய பிராம்மண ஸம்மேளனம்.

பிரம்மஸ்ரீ செங்காலிபுரம் S. ஸ்ரீநிவாஸய்யர் B.A., B.L., அட்வகேட், அவர்களின் அக்ராஸன பிரசங்கம்.

(சென்றவார தொடர்ச்சி)

இந்த சந்தர்பத்தில் பிராம்மணர்களின் விவாஹ ஸம்ஸ்காரமானது சீர்கெட்டிருக்கிற நிலைமையை சற்று விசாரிப்போம். விவாஹங்களில் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் வரசுல்கமானது பிராம்மண சமூகத்தையே எவ்விதத்திலும் அழித்துவிடக்கூடியதாக இருக்கிறது. பழயகாளில் இருந்த பந்தப்பிரியம் மாறி, ஆங்கிலப் படிப்பினால் கடனாளியாகப் போனவர்களும் பேராசை பிடித்தவர்களும் கணக்கில்லாமல் வரசுல்கம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தக் கொடிய பழக்கம் அசாஸ்திரியமாக இருப்பதோடு சமூக வாழ்க்கையையே நாசம்செய்துவிடும். இதனால் சம்பந்திகளுக்குள் ஏற்படும் சச்சரவுகளையும் நாம் தினந்தோறும் கண்களால் பார்க்கிறோம். இதை நிறுத்தவேண்டுவது நமது முதல் கடமையாகும். ஆங்காங்கு பெரியோர்களைக் கொண்டு இதன் கெடுதல்களை பிரசாரம் பண்ணும்படி செய்து நமெடங்கும் சாஸ்த்ரோக்தமான பிராம்ம விவாஹம் செய்யும்படி போதிக்கவேண்டியது அத்யாவச்யமாகும். ஏழைகள் முதல் பணக்காரர்கள் உள்பட அவரவர்கள் அந்தஸ்துக்குமேல் வரசுல்கம் சீர் முதலியவைகளில் பணச்செலவு செய்து வலுப்படுத்தி இன்னும் பல கெடுதல்களும் நேரும்படியும் செய்துவருகிறார்கள். ஆங்கிலப் படிப்பின் பலகெடுதல்களில், இதுவும் ஒன்று. ஆங்கிலப் படிப்பில்லாதவர்களிடத்திலும் அவர்கள் சேர்க்கையாலும் வாசனையாலும் இந்த கெட்டவழக்கங்கள் ஊன்றியிருக்கின்றன.

ஆனால் கல்வி விஷயத்தில் பிராம்மணர்களுக்கு ஆங்கிலப்படிப்பே வேண்டாமென்று சொல்லிவிடலாமா வென்று ஒரு பிரச்னை ஏற்படலாம்; அதை வேண்டாமென்றே சொல்லிவிடலாம். ஆனால் அது அனுஷ்டானத்தில் நடைபெறாத காரியம். மிகுந்த புத்திசாலிகளாய் இருப்பவர்கள் I. C. S. முதலிய பரீக்ஷைகளில் தேறி ராஜாங்கத்தில் உயர்ந்த உத்யோகங்கள் கிடைக்குமென்று, விசேஷமாக பிராம்மணர்கள் சீமைக்குப்போய் படித்துவிட்டு பெருத்த உத்யோகங்கள் பெற்று நமது ராஜாங்கத்தில் நிர்வாகிகளாக இருக்கக்கூடியவர்களை தடை செய்வது யுக்தமில்லையென்று யாவரும் சொல்லுவார்கள். பொதுவாக ஆங்கிலப் படிப்பினால் ஏற்படுகிற கெடுதல்களில் முக்கியமானது வருஷா வருஷம் அபரிமிதமான பிராமண சிறுவர்கள் B. A., M. A., B. L., முதலிய பட்டங்களைப்பெற்று விட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பார்க்கும்பொழுதும் பிராம்மணர்களுக்கு வேலைகிடைக்காதவிதமாய் கவர்ன்மெண்டார் பண்ணி இருக்கிற சூழ்ச்சியையும், நமது சிறுவர்கள் அறிவில்லாதவழியில் ஆசாரம், நடை, உடை, பாவனைகள் எல்லாவற்றிலும் கெட்ட பாதைகளில் ஈடுபட்டு மதத்தை மறந்து நாஸ்திக வாதங்கள் செய்து அவர்கள் ஏற்கனவே பெரிய ரிஷிகள் வம்சத்தில் பிறந்தவர்கள் என்பதையும் மறந்து இப்பொ [illegible]

பிரச்னைகளுக்கு சரியான பதில்களையளித்து காங்கிரஸிலேயே ஸநாதனிகளின் பாகம் என்று ஒரு பிரிவு ஏன் இருக்கக்கூடாதென்று நான் தீவிரமாக நினைத்ததுண்டு. இப்பவும் நினைத்துக்கொண்டு தானிருக்கிறேன். நாம் காங்கிரஸ் கக்ஷியிலேயே இருந்துகொண்டு நமது மத சம்பந்தமான விஷயங்களில் நமக்கு விரோதம் ஏற்படும் விஷயங்களை தலைவர்களுக்கு எடுத்துரைத்து நமது தேசமும் மதமும் சகல விதத்திலும் முன்னேறவேண்டிய விதமாக சமாளமான முறைகளை கையாண்டு அதற்கு வேண்டிய உண்மையான போதனைகளையும் பிரசாரங்களையும் செய்யவேண்டியது நமது முக்ய கடமையாகும். இதைப்பற்றி நம்முடைய தீவிர பிரசாரங்களை செய்வதற்கு இதுவே தக்க காலம். ஸ்ரீமான் ராவ் ஸாஹிப் N. நடேசய்யரவர்கள் மிக கௌரவமாகவும், சரியான ஆங்கிலப்பதங்கள் போட்டும் அவருடைய ஸ்ரீ உபந்யாஸத்தில் பண்டித ஜவஹர்லாலின் அபிப்பிராயங்களுக்கு தக்கபதில் அளித்திருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் ராஜாங்கத்தில் மந்திரிஸ்தானங்களை ஏற்றுக்கொண்டு மாதம் ரூ. 500 சம்பளமே வாங்கிக்கொண்டு உத்யோகங்கள் ஏற்கப்போகிறோம் என்றும் மற்ற உயர் உத்யோகஸ்தர்களின் சம்பளங்களையும் குறைப்போம், நிலவரியைக் குறைப்போம், குடியை முற்றிலும் ஒழித்து அந்த இலாகாவையே இல்லாமல் எடுத்துவிடுவோம் என்று பல விதத்திலும் பொதுஜனங்களுக்கு தெரிவித்துவிட்டு, சந்தர்ப்பம் வந்தபொழுது ஒருவருடைய ஆக்ஞையினால் மந்திரிஸ்தானம் வஹிக்க மறுத்துவிட்டது பெரியதாக எதிர்பார்த்திருந்த ஜனங்களுக்கு இதனால் காங்கிரஸிடம் பற்றுதல் விட்டுப்போகுமே என்று சந்தேகிக்கும்படி ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூக பஞ்சசதீ'

(3—6—37 தொடர்ச்சி.)

1. இதில் மந்த்ரிணீ ரூபமாக அம்பாளை வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மந்த்ரிணியானவள் லலிதாம்பிகைக்கு ப்ரதான மந்த்ரீ. அம்பிகையானவள் தனது ஸமஸ்த ராஜ்யபாரத்தையும் அவளிடம் ஒப்புவித்திருப்பதாகச் சொல்லப்படும். ஸங்கீதத்திற்கு அதிஷ்டான தேவதை. கையில் கிளியை தரித்திருப்பவளாகவும் ஸங்கீதத்தோடு கூடிய சக்தி ஸமூஹங்களால் சூழப்பட்டவளாகவும் த்யானிப்பது வழக்கம். மந்த்ரிணிக்கு சுக ச்யாமளையென்றும், ராஜ ச்யாமளை யென்றும், ஸங்கீத ச்யாமளை யென்றும், இன்னம் அநேகம் பெயர்களுண்டு.

'ஸங்கீதயோகினீ ச்யாமா ச்யாமளா மந்த்ரிநாயிகா |
மந்த்ரிணீ ஸசிவேசானீ ப்ரதானேசீ சுகப்ரியா ||
வீணாவதீ வைணிகீ ச முத்ரிணீ ப்ரியகப்ரியா |
நீபப்ரியா கதம்பேசீ கதம்பவனவாஸினீ |
ஸதாமதா ச நாமானி ஷோடசைதானி கும்பஜ ||'
(லலிதோபாக்யானம்)

2. ச்யாமளையின் ஆவரண தேவதைகளில்
'அஸிதாங்கோ ருரு: சண்ட: க்ரோதோன்மத்தோ பயங்கர: |
கபாலீ பீஷணச்சைவ ஸம்ஹாரீ த்யஷ்ட பைரவா: ||
என்ற பைரவாஷ்டகமடங்கிய பைரவமண்டலமானது ஐந்தாவது ஆவரணத்திலிருப்பதாகச் சொல்லப்படும்.

3 ச்யாமளையின் காதில் சங்ககுண்டலம் தவிர தாளீபலாச தாடங்கம் (பனையோலைச்சுருள்) இருப்பதாகவும் வர்ணிக்கப்படும்.

87. ப்ரணத ஜனதாபவர்கா
க்ருதரணஸர்கா ஸஸிம்ஹ ஸம்ஸர்கா |
காமாக்ஷி முதித பர்கா
ஹதரிபுவர்கா த்வமேவ ஸா துர்கா ||

ப்ரணத ஜனதா (அ) பவர்கா - நமஸ்கரிக்கும் ஜனக்கூட்டங்களுக்கு மோக்ஷத்தைக்கொடுப்பவளும், க்ருதரணஸர்கா - யுத்தத்து [illegible] பரமசிவனை ஸந்தோஷிக்கச் செய்தவளும், ஹதரிபுவர்கா - சத்ரும் கூட்டங்களை நாசம் செய்தவளுமான, ஸா துர்கா - அந்த துர்கையானவள், காமாக்ஷி - ஹே காமாக்ஷி! த்வமேவ - நீ தான்.

1 இதில் அம்பிகையை துர்கா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. துர்காதேவியின் ஆவிர்பாவம், பராக்ரமம், அனுக்ரஹம் முதலியவற்றைப்பற்றி தேவீ மாஹாத்ம்யம், தேவீ பாகவதம் முதலியவற்றில் பார்க்கவும்.

88. ச்ரவண சலத் வேதண்டா
ஸமரோத்தண்டா துதாஸுரசிகண்டா |
தேவி கலிதாந்த்ரஷண்டா
த்ருத நரமுண்டா த்வமேவ சாமுண்டா ||

தேவி - ஹே காமாக்ஷி! ச்ரவண சலத் வேதண்டா - யானைகள் ஆடும் காதுகளையுடையவளும், ஸமரோத்தண்டா - யுத்தத்தில் பயங்கரமாயிருப்பவளும், துதாஸுர சிகண்டா - அஸுர சிரேஷ்டர்களை ஸம்ஹாரம் செய்தவளும், கலிதாந்த்ர ஷண்டா - குடல்களின் கொத்துக்களை (வாயில்) உடையவளும், த்ருத நரமுண்டா - மனிதர்களின் முண்டங்களை (மாலையாக) அணிந்தவளுமான, சாமுண்டா - சாமுண்டாதேவியும், த்வமேவ - நீயே.

1. இதில் அம்பிகையை சாமுண்டா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சண்டன், முண்டன் என்ற இரண்டு அஸுரர்களை ஸம்ஹாரம் செய்ததால் காளிகாதேவிக்கு சாமுண்டா என்று பெயர் ஏற்பட்டது. காளிகா தேவியைப்பற்றி தேவீமாஹாத்ம்யம், காளிகா புராணம் முதலிய க்ரந்தங்களில் பார்க்கவும்.

89. உர்வீதரேந்த்ர கன்யே
தர்வீபரிதேன பக்தபூரேண |
குர்வீம் அகிஞ்சனார்த்திம்
கர்வீ குருஷே த்வமேவ காமாக்ஷி ||

உர்வீதரேந்த்ர - பர்வதராஜனான ஹிமவானுடைய, கன்யே - பெண்ணே! காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தர்வீபரிதேன - (உன் கையிலுள்ள) கரண்டி நிறைந்ததான, பக்தபூரேண - அன்னத்தை நிரம்பக்கொடுப்பதால், குர்வீம் அகிஞ்சனார்த்திம் - அகிஞ்சன (ஒன்றுமேயில்லாதவனுடைய,பரம ஏழையினுடைய) மிகக்கொடியதான (தாரித்ரியத்தின்) கஷ்டத்தை, த்வமேவ - நீயே, கர்வீ குருஷே - குறைத்துவிடுகிறாய் (போக்கடித்து விடுகிறாய்).

1. இதில் அம்பிகையை அன்னபூர்ணா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அன்னபூர்ணா தேவியானவள் இடது கையில் அன்னம் நிறைந்த பாத்ரத்தையும், வலது கையில் கரண்டியையும் வைத்துக்கொண்டு பக்தர்களுடைய பசியை (தாரித்ரியத்தை)போக்குவதாகச் சொல்லப்படுவாள்.

'ஆதாய தக்ஷிணகரேண ஸுவர்ண தர்வீம்
துக்தான்ன பூர்ணமிதரேண ச ரத்னபாத்ரம் |
அன்னப்ரதான நிரதாம் நவஹேமவர்ணாம்
அம்பாம் பஜே கனகபூஷண மால்யசோபாம் ||'

அன்னபூர்ணா தேவியைப்பற்றி 'நித்யானந்தகரீ வராபயகரீ' என்று ஆரம்பிக்கும் அழகிய ஸ்தோத்ரமொன்று ஸ்ரீ மதாசார்யாளால் செய்யப்பட்டிருக்கிறது.

90. தாடிதரிபுபரி பீடன-
பயஹரண நிபுண ஹலமுஸலா |
க்ரோடபதி பீஷண முகீ
க்ரீடஸி ஜகதி த்வமேவ காமாக்ஷி ||

தாடித - அவமானப்பட்ட (தோற்கடிக்கப்பட்ட), ரிபு - சத்ருக்களுடைய, பரிபீடன பய - உபத்ரவத்தின் பயத்தை, ஹரண - போக்குவதில், நிபுண - ஸாமர்த்யமுள்ள, ஹல முஸலா - கலப்பையையும் உலக்கையையும் கைகளில் வைத்துக்கொண்டிருப்பவளும், க்ரோடபதி - மஹத்தான வராஹத்தின், பீஷணமுகி - பயங்கரமான முகத்தையுடைவளுமான வாராஹி ரூபத்துடன், த்வமேவ - நீயே, ஜகதி க்ரீடஸி - உலகத்தில் விளங்குகிறாய்.

1. இதில் அம்பிகையை வாராஹீ ரூபிணியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. வாராஹியானவள் லலிதாம்பிகையின் சதுரங்க ஸைன்யங்களுக்கு யஜமானி. துஷ்டநிக்ரஹத்திற்கும் சிஷ்டானுக்ரஹத்திற்கும் பூர்ணமான அதிகாரம் கொடுக்கப்பட்டவள். வாராஹியின் பெயர்கள் பின்வருமாறு:—

'பஞ்சமீ தண்டநாதா ச ஸங்கேதா ஸமயேச்வரீ |
ததா ஸமயஸங்கேதா வாராஹீ போத்ரிணீ சிவா ||
வார்த்தாளீ ச மஹாஸேனாப்யாக்ஞா சக்ரேச்வரீ ததா |
அரிக்னீ சேதி ஸம்ப்ரோக்தம் நாமத்வாதசகம் முனே ||'
(லலிதோபாக்யானம்)

2. வாராஹீதேவியின் அனுக்ரஹ சக்தியைப்பற்றியும் நிக்ரஹ சக்தியைப்பற்றியும் இரண்டு அஷ்டகங்கள் இருக்கின்றன.

91. [illegible]
மன்மத ஹேலாவிலாஸ மணிசாலா |
கனகருசி சௌர்யசீலா
த்வமம்ப பாலா கராப்ஜ த்ருதமாலா ||

அம்ப - தாயே! ஸ்மரமதன - பரமசிவனை, வரண சீலா - பாணிக்ரஹம் செய்துகொள்வதில் பரபரப்புள்ளவளாயும், மன்மத - மன்மதனுடைய, ஹேலாவிலாஸ - ச்ருங்கார விலாஸங்களுக்கு இருப்பிடமான, மணிசாலா - ரத்னக்ருஹமாயிருப்பவளும், கனகருசி - சௌர்ய சீலா - ஸ்வர்ணத்தின் காந்தியை அபஹரிப்பதில் ஸாமர்த்தியமுள்ளவளாயும்; கராப்ஜ த்ருத மாலா - தாமரஸ புஷ்பம் போன்ற கையில் மாலையை தரித்திருப்பவளுமான, பாலா த்வம் - குமாரீ நீதான்.

1. இதில் அம்பிகையை ஸ்வயம்வராவாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது இந்த ரூபத்திய த்யானம் பின்வருமாறு:—

பலார்க்காயுத ஸுப்ரபாம் கரதலே லோலம்பமாலாகுலாம்
மாலாம் ஸந்ததீம் மனோஹாரதனும் மந்தஸ்மிதோத்யன்
[முகீம் |
மந்தம் மந்தமுபேயுஷீம் வரயிதும் சம்பும் ஜகன்மோஹினீம்
வந்தே தேவமுனீந்த்ர வந்திதபதாம் இஷ்டார்த்ததாம்
பார்வதீம் ||

92. விமலபட கமலகுட
புஸ்தக ருத்ராக்ஷ சஸ்த ஹஸ்தபுட |
காமாக்ஷி பக்ஷ்மளாக்ஷீ
கலித விபஞ்சீ விபாஸி வைரிஞ்சீ ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! விமலபட - வெண்மையான வஸ்த்ரத்தை யுடையவளும், கமலகுட - தாமரஸ புஷ்பத்தை வாஸஸ்தானமாக உடையவளும், புஸ்தக ருத்ராக்ஷ சஸ்த ஹஸ்தபுடம் - புஸ்தகம், ருத்ராக்ஷமாலை இவைகளையுடைய அழகிய கைகளையுடையவளும், பக்ஷ்மளாக்ஷீ - அழகிய (இமையிர்களோடு கூடிய) கண்களையுடையவளும், கலிதவிபஞ்சீ - வீணையை (கைகளில்) உடையவளுமான, வைரிஞ்சீ - (ப்ரம்ஹ பத்னியான) ஸரஸ்வதியாக, த்வமேவ - நீயே, விபாஸி - விளங்குகிறாய்.

1. இதிலும் இதனடுத்துவரும் இரண்டு ச்லோகங்களிலும் முறையே ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் ப்ரதானமாயிருக்கும் அம்பிகையின் மூன்று ரூபவிசேஷங்கள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ச்லோகத்தில் அம்பிகையை சாரதா ரூபிணியாக வர்ணிக்கப்பட்டது.

தஞ்சை ஜில்லா பிராம்மண ஸபை.

மகா-ா ஸ்ரீ ராவ்சாகிப் N. நடேசய்யர் அவர்களின் அக்ராஸனப்ரசங்கம்.

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

அலங்காரங்களையும் பார்ப்பதற்காகவே முக்யமாக நாம் போகிறோம். நாம் தர்சனம் செய்கிற மூர்த்திகளில் சில புத்தியை உண்மையாகத்தள்ளி ஈச்வரபாவனையை செய்கிறவர்கள் மிகவும் சொல்பம். அக்நி காரியங்களிலும் அவ்வாறே நடந்துகொள்கிறோம். ஈச்வரபிம்பத்திற்கு தன் கண்களைப் பிடுங்கி வைத்த கண்ணப்பன்போலும், பத்மபாதாசாரியாருக்கு நரஸிம்ஹத்தை ஒணங்கொடியால் கட்டி ஆஜர் செய்த வேடனைப்போலும், அலக்ஸாண்டர் சக்ரவர்த்தியையும் அவருடைய சைன்யங்களையும் தன்னுடைய பிர்ம்மசர்ய அனுஷ்டானத்தினால் கைகால் அசையவொட்டாமல் ஸ்தம்பிக்கும்படிச் செய்த பிராம்மண மாணவனைப்போலும், பிதா மாத்ரு பக்தியால் மஹம்மதிய சக்ரவர்த்தியும் அவருடைய மந்திரியும் செய்துவந்த கபடபக்தியை வெளிப்படுத்திய பிராம்மணோத்தமரைப் போலவும், பர்த்ரு பக்தியின் சித்தியாக மதுரை மந்திரி நீலகண்ட தீக்ஷிதரவர்கள் பூஜாகாலத்தில் மனதை, அறந்த செருப்பைத் தைக்கக் கொடுத்திருந்த சக்கிலியினிடம் செலுத்தியிருந்ததை வெளிப்படுத்திய அவருடைய புத்ரியைப்போலவும், கொக்கை எரித்த பிராம்மணபுத்ரரிடம் பர்த்ரு சுச்ரூஷா ப்ரபாவத்தையும், மாதா பிதாக்கள் சுச்ரூஷைப் ப்ரபாவத்தையும் ஸ்தாபித்த பிராம்மண பத்னி தர்மவியாஸர் முதலானவர்போலும், நாம் நடந்துகொள்ளாமல் இருப்பது தான், பிராம்மணர்களுடைய இப்பொழுதிய துர்தசைக்கு முக்கிய காரணம்.

உத்யோகங்களை சம்பாதிப்பதற்கு கடுமையான போர் இனி உண்டாகக் கூடுமென்று தோன்றுகிறது. அந்த யுத்தத்தில் பிராம்மணர்களுக்கு இனி ஜெயம் கிடைப்பது துர்லபம். பலாத்காரமாக பஞ்சமர்கள் ஆலயங்களில் பிரவேசிப்பதற்கு முன்னும், தனவான்களிடமிருந்தும், நிலச்சுவாந்தார்களிடமிருந்தும் தனத்தையும், நிலத்தையும், பொது உடமை கோஷ்டி பிடுங்கிக்கொள்ளும் முன்னும் அவர்களுக்கும் பிரித்துக்கொடுத்து விடும்படிக்கும் காந்திஜியும், நேருஜியும் சொல்லிவருகிறார்கள். இதுபோல் பிராம்மணர்கள் தாங்களாகவே உத்யோக சம்பாதன முயற்சிகளை க்ரமேவிட்டுவிட்டு அவரவர்களுடைய ஸ்வதர்மானுஷ்டானங்களைக்ரமமாக செய்துவந்தால் அவர்களுடைய பிர்மதேஜஸும், பிர்ம்ம வர்ச்சஸும் அதிகரித்து முன்போலவே சமஸ்த ஜனங்களுக்கும் ஐஹிக, ஆமுஷ்மிக சுகங்களை மென்மேலும் விருத்தி செய்து சர்வேச்வரனால் அவர்களுக்கு அனுக்ரஹிக்கப்பட்டிருக்கிற ஸாத்விக உன்னத பதவியை நிச்சயமாய் அடையக்கூடும் என்பது நிச்சயம்.

சட்டஸபை மெம்பர்கள். 1500 ரூ. சம்பளம்.

மாகாணச் சட்டஸபையிலுள்ள மெம்பர்களுக்கு போக்குவரத்துப் படிச்செலவு வகைறாக்களுக்காக வருஷத்தில் 1500 ரூ. சம்பளமாகக் கொடுத்துவிடலாமென்று பஞ்சாப்பில் கமிட்டியொன்று கூறியிருக்கிறது. இந்த அபிப்பிராயத்தை மற்ற மாகாணங்களும் அங்கீகரிப்பதாகத் தெரிகிறது.

வாரக் குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா.)

எங்கெங்கு புகுந்தது கலி!! பூனாவில் ஆனே தலைமையில் ஓர் ஸாதுமஹாஸபை கூடிற்று. ஸாதுவேஷம் பூண்டு ஸத்குணமில்லாதாரை சீர்திருத்தல் முதலிய கார்யங்களில் ஈடுபடின் ஆனே தலைமையின் பலனென்ன? ஹரிஜனங்களைக்காக்க தீர்மானிக்கப்பட்டது கலி யார் யார்மூலம் எங்கெங்கு புகுந்து வேலைசெய்கிறது.

மததீரர் வாழி! வாழி!! ஸ்ரீ வானமாமலை ஜீயர்ஸ்வாமிகளவர்கள் மத ரக்ஷணத்திற்கு முன்வந்து லோகானுக்ரஹம் செய்கிறார்கள். ஸமீபத்தில் சிகை இல்லாதாருக்கு "ஸமாச்ரயணம்" செய்துவைக்க மறுத்தார்கள். பெரும்பாலும் கிருப்பை ஆதரிக்குமிக்காலத்தே பல ஆசார்யர்கள் "இது நிருத்தாது. சொன்னால் கார்கிட்டே வரமாட்டார்கள்" என்றிருக்க, துணிந்து "ஆசாரேஸ்தாபயத்யபி" என்ற ஆசார்ய லக்ஷணத்துடன் தர்மப்ரசாரம் செய்யுமிப்பெரியார் வாழி!!

கௌபீனத்துடன் ராஜாவை காண்பரா? லௌகிகர் குற்றத்தைச் சிறிது கடுமையாக கண்டித்தால் மற்ற லௌகிகருக்கு கோபம் வருகிறது. தக்ஷிணதேசத்து பிராம்மணர்களில் பிரஸித்தர்களில் ஒருவரான மஹாகனம் சாஸ்திரிகள் பண்டிதஸபையில் பேசிய குருட்டு வேதாந்தம் கைப்புக்கிடமாயிருக்கிறது. குடுமி முக்யமல்ல, பிராம்மணதர்மம் பெரிதாம்! தேச கார்யமும் ராஜ்ய தந்த்ரமும் தானே முக்யம்? உடுப்பில்லாமல் இவர் ராஜாவை காண்பரா? முடியுமா?

இவரை அழைத்தவரே குற்றவாளி!! நெருப்புக்கு அழைப்பு. அது ஒருவகையில் உபகாரி. வழிபடும் தைலம் என்று அதை மடியில் வைக்கலாமா? இத்தகையோரை பேசச்சொன்னால் வேறென்ன பேசுவார்? கழுகு உயரப்பறந்தாலும் அதன் கண்ணில் நல்லது படுவதில்லை!! இனியேனும் பண்டிதரும் மற்றோரும் ஏமாறாதிருப்பாரா?

வழிதேட வேண்டியதுதான்!! வெள்ளையர் தோலைத்தவிர மற்றதெல்லாம் இந்தியரவை யூரோப்பாக்கி வருகின்றனர். அவர் காட்டுவதற்குமுன் உத்தம சிஷ்யரான இந்தியரும் இதைப்பிடித்துக்கொண்டு தன்மயமாகி விடுகின்றனர். அந்த முறையில் வேலையில்லா திண்டாட்டமும் வரவேண்டியதுதானே அக்கூட்டத்தலைவர் ராஜப்ரதிநிதி வாயலில் பட்டினிகிடக்க ஆரம்பிக்கிறார். நம் நாட்டு பொருளை கல்விக்காக இழந்து தவிப்பதைவிட நமது தர்மத்தைவிட்டு தவிப்பதற்கே வருந்துகிறோம்

இது அவ்வளவு பிரதானமா? கல்வியறிவூட்டும் தொழிலை பல பத்திரிகைகள் மறந்துவிட்டன. கேவலம் பணம் தேடுவதே முக்ய நோக்கமாய் பற்பல அநுசித அஸப்பத்த விஷயங்களை மிகப்பெரிய எழுத்தில் பத்திபத்தியாக எழுதுகின்றன. எட்வர்ட் அரசைத்துறந்ததும், அச்சமயம் விவாஹ ரத்தும் மிக ப்ரதானமே. இச்சமயம் அவள் முகம் இப்படி இருந்தது, கப்பிரக்குறலில் பேசவில்லை, முதலியன பெரும் எழுத்தில் போட அவச்யமென்ன? இவைதாவது மாஜி அரசனைலாம்! இதைப்போன்ற பலவிஷயங்களால் பத்திரிகையை நிரப்புவதைவிட பக்கத்தைக் குறைக்கலாம்.

வம்பால் விளையுந் தீமை!! கிருஸ்தவர்கள் படித்த இந்தியரைத் தன்மதத்தில் சேர்க்க பற்பலவழிகள் கண்டனர். அதில் ஒய் எம். ஸி ஏ. ஸங்கமொன்று. சென்னையில் வாக்தவாமல் ஒருவரை ப்ரெஸிடெண்டாக வைத்து 'பார்லிமெண்ட்' போல் வாதம் நடத்துகின்றனர்

இந்த வீண் வம்பால் பற்பல அனாசாரங்கள் வளர்கின்றன. இந்த வலையில் சிக்கிய ஓர் இளம் வக்கீல் சென்றவாரம் படக்காக்ஷியைப்பற்றி பேசி அன்யபுருஷருடன் அன்ய ஸ்த்ரீ ஸதிபதிகளாக நடிக்கும்படி வேண்டினார். என்னே விபரீதம்!

வரவேற்கிறோம்! ஸ்ரீ வித்யா விஷயக்ஞானம் பெற்றோர் அதிகமில்லை. அதிலும் நமது ஆசார்யாள் காட்டிய வழியைப் பின்பற்றி பிரும்மவித்யையுடன் ஒத்து அனுஷ்டிப்பவர் மிகமிகக்குறைவு. வைதிக சாஸ்திர விரோதமில்லாமல் அதன் தத்துவத்தை அனுஷ்டித்து உபதேசிப்பவர் அதிதுர்லபம். பக்தானுபாக்யத்தால், 'பிரும்மவித்யா விமர்சினி' என்ற ஸபை தோன்றி அதில் ஸ்ரீவித்யா பிர்ம்மவித்யா ரஹஸ்யங்களை எடுத்துரைக்க மூர்த்தியும் பரிபூர்ண யோக்யதையுள்ள பிரும்மஸ்ரீ என் சுப்ரமண்ய ஐயர் முன்வந்துள்ளார். வரிவஸ்யாரஹஸ்யம் முதலிய அரிய நூல்களைத் தமிழுரையுடன் வெளியிடுமிச்சபையை வரவேற்கிறோம்.

நிர்வாணிகளுக்குத் தடை.

ஷாஜஹான் பூரில் ஜைனமதத்தைச் சேர்ந்த பல ஸாதுக்கள் நிர்வாணிகளாகப் பொதுஸ்தாக்களில் நடமாடக்கூடாதென்று 144-வது பிரிவுப்படி தடைபோடப்பட்டிருக்கிறது. அங்கு நிர்வாணிகள் ஏராளமாக வந்திருக்கின்றனராம்.

திருப்பதி மலைக்கு ரயில்.

திருப்பதிமலைக்கு ரயில்போடும் விஷயமாக உதகமண்டலத்தில் 3உ யன்று அதிகாரிகள் மீண்டும் கூடி யோசித்தார்கள். திருப்பதி தேவஸ்தானக் கமிட்டி ... ரயில்மூலமாகத் திண்டாமை ... திருப்பதிமலைக்குவந்துவிடாமல் தடைசெய்ய வேண்டுமென்பது தேவஸ்தானத்தின் கோரிக்கை. இம்மாதிரி ஜாதி ஹிந்துக்களை மட்டும் ரயிலில் அனுமதிப்பதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆக்ஷேபிக்கின்றனர். இந்த விவாதத்தினாலேயே இந்த விஷயம் தடைப்பட்டு நிற்கிறது. இப்போதும் விவாதம் முடியாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

80 லக்ஷம் முகமூடிகள்.

பிரிட்டனில், யுத்தகாலத்தில் ஜனங்களை விஷவாயு உபத்திரவத்திலிருந்து காப்பாற்றுவதற்காக 80 லக்ஷம் முகமூடிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சத்ருக்கள் விஷவாயுவைப் பிரயோகிக்கும் காலத்தில் இந்த முகமூடியை உபயோகிக்கவேண்டுமென்று கிராமங்களிலும், நகரங்களில் பிரசாரம் செய்யப்படுகிறது.

கைதிகள் விடுதலை.

வங்காளத்திலும் வேறுபலவிடங்களிலும் பந்தோபஸ்துக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் வங்காளச் சிறைகளில் ஆயிரம் பேர்களை விடுதலைசெய்துவிட வங்காள ஸர்க்கார் யோசனைசெய்து வருகிறார்கள். இவர்களுக்குப் பிழைப்புக் கிடைக்கும்வரையில் கவர்ன்மெண்டார் படிப்பணம் கொடுத்து வருவார்களாம்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க ரேகைபோன்ற "கன்னூஸ் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே வாங்கி வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— எம் கன்னுசாமி பத்தர். பெரியதெரு. கும்பகோணம்.

காங்கிரஸ்மீது நீண்டாதார்கோபம்.

சென்னை மாகாணத்தில் நீண்டாதாருக்கும் காங்கிரஸ்காரருக்கும் விரோதம் வலுத்துவருகிறது. காங்கிரஸ் வாதிகள் நீண்டாதார் நன்மைக்காக எவ்வளவோ பாடுபடுவதாகப் பெருமை சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் நீண்டாதார் தலைவர்கள் இதை ஒப்பவில்லை. ஸமயம் நேரும்போது நீண்டாதார் காங்கிரஸை லக்ஷ்யம் செய்யாமல் கவர்ன்மெண்டாருடன் சேர்ந்து காங்கிரஸை தூஷிக்கவும் பின்வாங்குவதில்லை. சென்னையில், காங்கிரஸ் தீர்மானத்திற்கு எதிராக ஸ்ரீமான் எம். ஸி. ராஜா மந்திரி பதவி ஏற்றார். இதைக் காங்கிரஸ்காரர்கள் கண்டித்துக் கோபித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஸ்ரீமான் ராஜா தாம் செய்ததே ஸரியென்றும், காங்கிரஸ் செய்தது பிசகென்றும் காங்கிரஸைக் கண்டித்து பிரசாரம் நடத்துகிறார். காங்கிரஸிடம் ஜனங்களுக்கு மதிப்புக் குறைந்துவிட்டதாக வும் அவர் பறை சாற்றுகிறார். இந்த ஸந்தர்ப்பத்தில் சிதம்பரம் நந்தனார் பாடசாலைக்கு கடலூர் ஜில்லா போர்டார் கொடுத்துவந்த பணஉதவியைக்காங்கிரஸ் கக்ஷியார் நிறுத்திவிட்ட விஷயமாகப்பத்திரிகைகளில் சண்டை நடக்கிறது. இதைமுன்னிட்டு ஸகஜானந்த சாமி காங்கிரஸின் தவறுகளைப் பத்திரிகைகளில் அடுக்கடுக்காக வரைந்து வருகிறார். காங்கிரஸ்காரர்களோ, ஸகஜானந்தரின்மீது குற்றங்களைச் சாட்டி அந்த நந்தனார் பாடசாலையின் நிர்வாஹம் வெகு மோசமாயிருப்பதாயும் பணங்கள் துர்விநியோகமாவதாயும் அதற்கு ஸஹஜானந்தரே காரணமென்றும் ஸ்பஷ்டமாக எழுதுகிறார்கள். நீண்டாதார் தலைவரான ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாஸன் என்பவர் இதுதான் ஸமயமென்று காங்கிரஸ்காரரைப் பலமாகத் தாக்க முன்வந்து நிற்கிறார். காங்கிரஸ்காரர் மந்திரிபதவி ஏற்கும்படி விடக்கூடாதென்று அவர் பாடுபடுகிறார். காங்கிரஸ் கேட்கிறபடி எவ்வித உறுதிமொழியும் கொடுக்கக்கூடாதென்று சென்னை கவர்னருக்கு அவர் தந்திகொடுத்தார். காங்கிரஸ்காரர் ஆக்ஷியில் சிறுபான்மையோரான நீண்டாதாரின் நன்மைக்கு பந்தோபஸ்து இருக்காதென்று இவர் பகிரங்கமாகக் கூறுகிறார். இதற்கு நந்தனார் பள்ளிக்கும் கொண்டு கொண்டுப்பதைக் காங்கிரஸ் வாதிகள் நிறுத்தியதையே உதாஹரணமாகக் காட்டியிருக்கிறார். நீண்டாதாருக்குக் காங்கிரஸ் இதுவரையில் ஒன்றும் நன்மை செய்ததில்லையென்றும், இனியும் செய்யப்போவதில்லையென்றும் பலவிடங்களில் பேசிவருகிறார். அந்தோ! பரிதாபம்!! காங்கிரஸ்காரர்கள் எந்த நீண்டாதாரைத் தங்களுடைய நண்பர்களாகநினைத்தார்களோ, எவர்களுக்காக தர்மத்தைக்கூட அழிக்க முற்பட்டார்களோ, அவர்களே இப்போது காங்கிரஸ் வாதிகளைக் கைவிட்டதுமன்றி ஸர்க்காருடனும் சேர்ந்து காங்கிரஸை பாதாளத்தில் அழுத்திவிட முயற்சிப்பதை காங்கிரஸ் தலைவர்கள் எப்படி ஸஹிப்பார்கள்? காங்கிரஸ் காரர்களின் பரிதாப நிலைக்கு யார்தான் வருந்தமாட்டார்கள்? பரிதாபி.

நாகப்பட்டணத்தில் ஸ்ரீ சங்கர ஜயந்தி.

சென்ற வைகாசி முதல் தேதி (14-5-37) சுக்ரவாரத்தன்று ஸ்ரீஆசார்ய கைங்கர்ய சபாவின் ஆதரவில் ஸ்ரீ சங்கரஜயந்தி மகோத்ஸவமானது வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. அன்றயதினம் வழக்கம்போல் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் ஸ்வாமி, அம்பாள், சட்டநாத குருமூர்த்தி சந்நதிகளில் விசேஷவேதபாராயணத்துடனும் மஹந்யாஸ பூர்வகமாகவும் அபிஷேகஆராதனங்கள் நடத்தப்பட்டு ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுடையதிருஉருவப்படத்திற்கு பூஜை ஆராதனங்களும் பிரும்மஸ்ரீ சேதுராமதீக்ஷிதர் அவர்களால் நடத்தப்பட்டு ஸ்ரீ பகவத்பாதாளுடைய அவதார கட்டமானது பிரவசனம் செய்யப்பட்டது. அன்று மாலையில் குருமூர்த்திக்கும் அபிமுகமாக ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுடைய திருவுருவப்படத்திற்கும் நான்குவீதிகளிலும் ஊர்வலமானது வெகு விமரிசையாய் நடத்தப்பட்டது. அன்று ராத்ரி முதல் ஒரு வாரம் கீழ்வேளூர் பிரும்மஸ்ரீ வி. கே. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களால் 'ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுடைய சரித்திர வைபவங்களும் அத்வைத சித்தாந்தங்களின் பெருமையும்' வெகு அற்புதமாகவும் பச்சமரத்தில் ஆணி அடிப்பதுபோல் எல்லோருடைய மனதிலும் நன்கு ஊன்றி படும்படியாக உபன்யசிக்கப்பட்டது. பிறகு 24-5-37 திங்கட்கிழமை ராதாமங்கலம் தர்க்க சிரோமணி பிரும்மஸ்ரீ நாராயணசாஸ்திரிகள் அவர்கள் 'ஈச்வரஸ்வரூபம்' என்ற விஷயத்தைப் பற்றி வெகு அருமையாக ஓர் உபன்யாசம் செய்தார்கள். பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள் திருவானைக்காவல் வித்யாஸ்தானத்தில் வேதாந்த சிரோமணிக்கு தன்னைத் தயார் செய்துகொண்டிருக்கும் ஸ்திதியிலேயே இவ்வளவு பெரிய விஷயத்தை மிகவும் லலிதமாகவும் அழகாகவும் பிரவசனம் செய்தது மிகவும் சிலாகிக்கத்தக்கது. கடைசியாக 28-5-37 சுக்ரவாரத்தன்று ஷை பிரும்மஸ்ரீ வி. கே. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள் 'சிருஷ்டியும் சிருஷ்டிகர்த்தாவும்' என்றவிஷயத்தைப்பற்றி 4 மணி நேரம் வெகு விசேஷமாக உபன்யசித்து ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்சவத்தை பூர்த்தி செய்தார்கள்.

N. சாம்பசிவய்யர்.

கொச்சி.

கோச்சி மஹாராஜாவின் படம் வைத்து ஊர்வலக் கொண்டாட்டம்.

கொச்சி மஹாராஜாவின் ஸநாதனதர்ம பரிபாலனத்தைக் கண்டு சந்தோஷித்தும், இரிஞாலக்குடை கூடல் மாணிக்க க்ஷேத்திரத்தில் சாஸ்திரத்துக்கும் முன்ஆசாரத்திற்கும் விரோதமாக திருவாங்கூர் க்ஷேத்திரத்தில் பூஜை செய்த சாந்திக்காரர்களும் தந்திரியும், பூஜை செய்யக்கூடாதென்று உத்திரவு பிறப்பித்ததைக் கண்டு சந்தோஷித்தும். மஹாராஜா அவர்களிடத்திலும் ராஜ குடும்பத்தாரிடத்திலுமுள்ள பக்தி விசுவாசத்தையும் சந்தோஷத்தையும் எல்லோரும் சேர்ந்து அனுபவிக்கவேண்டி இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. கொச்சி மஹாராஜாவின் படம் வைத்து ஊர்வலம் இதுவே முதல் தடவையென்று சொல்லலாம். இந்தக் கொண்டாட்டத்தை ஆய்க்கன் பரமேசுவரன் நம்பூரி முதன்மையாயிருந்து அதிவிமர்சையாய் நடத்தி வைத்தது கொண்டாடத்தக்கது. திருவாங்கூரில் க்ஷேத்திரப் பிரவேச உத்திரவு பிறப்பித்தது முதல் கொச்சி ராஜகுடும்பத்தாரின் குலதெய்வமாகிய பழயனூர் பகவதி க்ஷேத்திரத்தில் ஆய்க்கன் பரமேசுவரன் நம்பூரியால் விசேஷ வழிபாடுகளும் திருப்பணித்துறை ராம வாரம் கொண்டு பாடகம் என்ற கதாப்ரஸங்கமும் நடத்தப்பட்டு வருகிறது. ஸங்கமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது

23—7—37ல் 9 மணிக்கு பட்டணப் பிரவேசத்திற்கென்று புதிதாய் தயார் செய்த கொச்சி மகாராஜாவின் படத்தை முல்லை புஷ்பங்களால் அலங்கரித்து பார்ப்பவர் எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும்படி மோட்டாரில் உன்னதஸ்தானத்தில் வைத்து, மேளவாத்தியத்துடன் ஊர்வலத்திற்குப் புறப்பட்டதும் ஜனக்கூட்டம் ரொம்பவும் ஜாஸ்தியாய்க் கூடிவிட்டது. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும். கம்பெனி உத்தியோகமல்லாதவர்களும் விவசாயிகளும் வியாபாரிகளும் வக்கீல்களும் பெரியோர்களும் சிறியோர்களும் பண்டிதர்களும் பாமரர்களும் அந்தரங்க ராஜபக்தியுடன் புறப்பட்டுவிட்டார்கள். வாலண்டியர்கள் பலவித ஜயகோஷங்கள் செய்துகொண்டு முன்சென்றார்கள். ஜனங்கள் கொச்சி மகாராஜாவின் படத்தைக்கண்டு மகிழ்ந்து படமெழுதியவன் கைத்திறமையை சிலாகித்தும் மஹாராஜாவின் தார்மிக குணங்களைப்பற்றி புகழ்ந்து பேசிக்கொண்டும் வாத்தியகோஷத்தைக் கேட்டுக்கொண்டும் அதிக குதூகலமாய்ச் சென்றார்கள் ஸ்திரீகள் அவர்களுக்கு உசிதமான இடங்களிலிருந்து கண்டு ஆனந்தித்தார்கள். போலீஸ் இனிஸ்பெக்டர் முதலிய போலீஸார்கள்.மஹாராஜா எழுந்தருளும் சமயத்தில் எவ்வித முறையில் நடந்து கொள்வார்களோ அதே முறையில் கடைசி வரையில் இருந்து நடத்திவைத்தார்கள். போலீசாரால் பந்தோபஸ்து செய்து கொள்ளப்பட்டது. சந்திரிகையின் வெளுச்சம் ஒரு புறம், ரோடு முழுவதும் எலக்டிரிக் வெளிச்சம் ஒரு புறம், அலங்கரிக்கப்பட்ட கியாஸ்லைட்டின் வெளிச்சம் ஒரு புறம். கடைவாசல் வீடு வாசல்களிலுள்ள வெளிச்சம் ஒரு புறமிருக்க ஜனங்களின் மன வெளிச்சம் எல்லாவற்றிலும் மேலாகப் பிரகாசித்தது. யாவரும் கண்டுகளிக்க வாணவேடிக்கைகளும் ஏராளமாய் நடந்தது.

கொச்சி மஹாராஜாவின் பட்டாபிஷேக தினத்தில் நடந்த பட்டணப் பிரவேசவைபவத்தைக் காட்டிலும் இந்த ஊர்வலம் சிறந்து விளங்கியதென்பது நேரில்கண்டவர்களுக்கும். இதை மனக்கண்ணால் பார்க்கும் ஆஸ்திக புத்தியுள்ள ஆர்யதர்ம வாசகர்களுக்கும்தெரியவரும். ரு. கணேச சாஸ்திரிகள், கொச்சி.

சித்திர ராமாயணத்திறப்பு விழா.

கும்பகோணம் பெரியகடைத்தெருவில் ஸ்ரீ ராமன் ஸந்நிதியில் சுவர்களில் மூன்று வரிசைகளில், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணஸாரம், க்ஷீராப்தி சயனம்முதல் பட்டாபிஷேகம் உள்பட 220 கட்டங்கள், அழகான வர்ணப் படங்கள் ரூபமாக அமைந்துள்ளன. வெகு நேர்த்தியாய் அமைந்த பட்டாபிஷேக கட்டம் பார்க்கப் பதினாயிரம் கண் தேவை. சித்திரங்களைத் தொடாமல் இருக்கப் பாதுகாப்பு வேலி அடைப்புகளும், முடிந்து விட்டன. சில்லரை வேலைகளும் சீக்கிரம் முடிவு அடைந்துவிடும்.

இதுவரையிலும் வரவு ரூ 2400-3-0 இன்னும் வேண்டியது ரூ 800—0—0. கணக்குகள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. கடைசியில் கணக்குகள் அச்சில் வெளிவரும். 1937 ஹு ஜூலை 12 ம் உ திங்கட்கிழமை, ஸ்ரீராம பட்டாபிஷேக உற்சவ ஸமயம், பெரிய திருமஞ்சனம் (மகாபிஷேகம்) ததியாராதனம் (மகா ஸமாராதனை) ஹரிகதை முதலியவைகள் ஸ்ரீராமன் கண்டு அருள்புரியும்படி பிரார்த்திக்கிறோம். ஸ்ரீராமனது கிருபைக்குப் பாத்திரர்களாக வேண்டுமென்பது பிரார்த்தனை. இக்கைங்கர்யத்துக்கு உதவி செய்ய விரும்புவோர், அடியேனுக்கனுப்பி ஒரு ரூபாய் முதல் ரசீது பெற விரும்புகிறேன்.

வி. விஜயராகவாச்சாரி, சித்ராமாயண கைங்கர்யபரன், 57, பெரியதெரு, கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-வூ வைகாசி-மீ 28உ

சாஸ்திரியாரின் அலக்ஷ்யப் பேச்சு.

மைஸூர் ஸம்ஸ்தான ஸம்ஸ்கிருத பண்டிதர்களின் மஹாநாட்டில் மஹாகனம் ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் நமது தேசப் பண்டிதர்களையும் அவர்களுடைய வித்யா, வேஷ, ஆசாரங்களைப்பற்றியும் அலக்ஷ்யமாயும் பரிஹாஸமாயும் பேசியிருப்பது மிகவும் ஆக்ஷேபிக்கத்தக்கதாயிருக்கிறது. சாஸ்திரியாருடைய பிரஸங்கமானது மேலுக்கு ஸாதுவாகத்தோன்றிய போதிலும் அது உள்ளூரத்வேஷம் கலந்ததாக இருப்பதை மறைக்க முடியாது. மைசூர்ப் பண்டிதர்கள் கனம் சாஸ்திரியாரிடமிருந்து எத்தகைய ப்ரயோஜனத்தை எதிர்பார்த்து அவரை அழைத்தார்களோ நாம் அறியவில்லை. ஆயினும், அந்தப்பண்டிதர்கள் இவரிடமிருந்து, கிணற்றுத் தவளைகளென்றும், மூட ஆசாரம் நிரம்பியவர்களென்றும், ஸமூஹ அந்தஸ்து இல்லாதவர்களென்றும் பலவிதத்தில் அவரிடமிருந்து வசைமொழிகளை வாங்கிக் கட்டிக்கொண்டதே மிச்சமாகியது. லௌகிக வித்யாப்ரவீணர்களைவிட எவ்விதத்திலும் தாழ்ந்தவர்களல்லாத நமது பண்டிதர்களைப்பற்றி கனம் சாஸ்திரியார் வாய்கொண்ட மட்டும் அலக்ஷ்யம் செய்து பேசியதற்கு நமது பண்டிதர்களின் ஸாத்விக குணமே காரணமாகும். சாஸ்திரியார் போன்றவர்கள் காங்கிரஸ்வாதிகளையோ, அபேத வாதிகளையோ, ஜஸ்டிஸ் போன்றவர்களையோ இம்மாதிரி பஹிரங்கக் கூட்டத்தில் இலேசாகப் பேசத் துணிவு கொள்வார்களா? ஸாதுக்களான பண்டிதர்களை எவ்வளவு வேண்டுமாயினும் அவமதித்துப் பேசலாமல்லவா?

சாஸ்திரியாருக்கு வெகுகாலமாகவே பண்டிதர்களைக்கண்டால் வெறுப்பு உண்டு. இவர்களைப்பிய ருதுமதி விவாஹம் போன்ற அநாசாரத் திருத்தங்களுக்குப பண்டிதர் இணங்காததில் இவருக்கு மிகுந்த கோபமுண்டு. அதனால்தான் ஸமயம் நேர்ந்தபோதெல்லாம் இவர் ஏதாவதொருவிதமாய்ப் பண்டிதர்களைத் தாக்கிப் பேசத்தவறுவது கிடையாது. இந்தியா தேசத்தின் உண்மையான நாகரிகத்திற்கும், கலாக்ஞானநிகளுக்கும் பொக்கிஷம்போல் விளங்கிவரும் நமது பண்டிதர்களை இவ்வாறு அவமதித்துப் பேசுவது தகுமா?

சாஸ்திரியார் பண்டிதர்களுக்குப்பல அரிய உபதேசங்களைச் செய்யமுற்பட்டிருக்கிறார். பண்டிதர்கள் 'என்னைத் தீண்டாதே' என்று மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி நின்று உலக விஷயத்தையே அறியாமலிருக்கிறார்களாம். உண்மையை நோக்கினால் இவரைப் போன்ற புத்திப்போக்குப் படைத்தவர்களே பண்டிதர்களைப் பொது விஷயங்களில் கலந்துகொள்ளாதபடி ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். பண்டிதர்கள் என்றாலே அவர்கள் உலகத்திற்கு உபயோகப் படாதவர்களென்ற துர்ப்புத்தி வெகுநாளாக புதுப்படிப்புச் செருக்குள்ளவர்களிடம் ஊறியிருக்கிறது. பள்ளிக்கூடங்களிலும், காலேஜிகளிலும் மற்ற உபாத்தியாயர்கள், தாங்களே சிறந்த மேதாவிகளென்றும், தங்களுடைய ஆங்கிலப்படிப்பே மேலானதென்றும், அன்னிய பாஷாப்யாஸ இறுமாப்பினால் தேசபாஷா பண்டிதர்களை அலக்ஷ்யம் செய்துவருவது யாரும் அறிந்ததல்லவா? அப்படியிருக்க, பண்டிதர்கள் மற்றவர்களுடன் கலவாமல் ஒதுங்கி யிருப்பதாகக் கூறுவது உண்மையா?

கனம் சாஸ்திரியார், வெளிவேஷம் அல்லது தோற்றம் அநாவச்யகமென்றும், உள்ளம் சுத்தமாக இருக்கவேண்டியது முக்கியம் என்றும் பேசுகிறார். ஆனால், இவரே பண்டிதர்கள், [illegible] போல் நவீனரீதியில் தலைப்பாகையும், சட்டை முதலிய வேஷங்களும் தரிப்பது அவச்யமென்று பேசுகிறார். பண்டிதர்களுடைய உடுப்பு வேஷம் கர்நாடகமாயும் பரிஹாஸாஸ்பதமாயும் இருப்பதாக இவர் குறைசொல்லுவது என்ன நேர்மை? வெளித் தோற்றங்கள் முக்கியமானவையல்லவென்று வாதிப்பது எந்த தேசத்தாராலும் ஒப்பக்கூடியதல்ல. உலகில் ஒவ்வொரு தேச ஜனங்களும், ஒவ்வொரு மாதிரியாக உடுத்தவும் வேறு அடையாளம் தரிக்கவும் வைத்துக்கொண்டிருக்கிறார். இந்தியாவில் மகம்மதியர், கிறிஸ்தவர் போன்றவர் இன்னமாதிரியில் தான் உடை தரிக்க வேண்டுமென்றும், சிகை முதலிய வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் வ்யவஸ்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது தங்களுடைய மதச்சின்னமென்றும் கருதுகிறார்கள். ஒரு மகம்மதியனோ கிறிஸ்தவனோ ஹிந்துவைப் போல் உடையும் சிகையும் தரிக்கும்படி கனம் சாஸ்திரியார் செய்யமுடியுமா? இந்நாட்டிலுள்ள ஐரோப்பியன் வெளுவது சட்டை நிஜார் அணிவதை விட்டு, இந்துவைப்போல் கச்சத்தையோ மகம்மதியனைப்போல் கைலியையோ அணிகிறானா? தன் புத்தியைப்பறிகொடுத்த இந்துவைத்தவிர வேறு யாராவது அந்நியர் ஆசாரத்தில் ஆசை கொள்ளுகிறார்களா? ஹிந்து மதத்திற்கு, சிகை புண்ட்ரம், வஸ்திரம் முதலியவை அஸாதாரண சின்னங்கள். தேசாபிமானம் வேண்டும் என்று உபதேசிக்கும் சாஸ்திரியார், அந்த தேச தர்மங்களை உத்லங்கனம் செய்து பிறஜாதிகாரியங்களைக் கைப்பற்றி நிற்கும்படி சொல்லுவது குலத்ரோகமல்லவா?

தென்னிந்தியாவிலுள்ள பிரஸித்திபெற்ற மகான் ஒருவர், இந்துக்களில் 'கிராப்' அதிகமாய்விட்டதைக் குறித்து சாஸ்திரியாரிடம் வருந்தினாராம். இது இவருக்குப் பெரிய அதிசயத்தை உண்டுபண்ணி விட்டதாம். எவ்வளவோ பெரிய முக்கிய விஷயங்களிருக்கையில், வெகு அல்பமான இந்த 'கிராப்' வழக்கத்தைப் பற்றி இவ்வளவு பெரிதாக அந்தப் பெரியவர் நினைத்தது தமக்கு வேடிக்கையாய் இருந்ததாக சாஸ்திரியார் வாதிக்கிறார்.

ஹிந்து மதத்தில் சிகாதாரணம் ஒரு முக்ய அம்சமென்பதை இவர் அறியவில்லை. ஹிந்துக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள, தேவ, பித்ரு கர்மாக்கள் எல்லாவற்றிலும் சிகைக்கு மத சம்பந்தமான உபயோகமிருப்பதை இவர் எப்படி அறிவார்! சௌளம் என்பது ஓர் வைதிக ஸம்ஸ்காரமாக அமைந்திருக்கவில்லையா? இதையெல்லாம் அறியாமல் கிராப்பை இவர் ஆதரிப்பது அன்னிய நாகரிக வாஸனையின் பயனேயன்றி ஸ்வாபிமானமாகாது.

சாஸ்திரியார் போன்றவர்கள்மனம்போனபடியெல்லாம் பண்டிதர்களைக் குழந்தைகள் போல் நினைத்து அலக்ஷ்யம் செய்வதற்குக் காரணம் நமது பண்டிதர்களின் உதாஸீன நிலைமையேயாகும். இவர்கள் தங்களுடைய நிலைமையைப் பொது ஜனங்கள் அறிந்துகொள்ளக் கூடிய வழியில் பிரசாரம் நடத்திவந்தால் இவர் இப்படிப் பேசியிருக்கமாட்டார். கனம் சாஸ்திரியாரின் பேச்சு நமது பண்டிதர்களின் உணர்ச்சியையும் ஒற்றுமையையும் உண்டுபண்ணத் தூண்டுமானால் அதற்கு நாம் சந்தோஷிப்போம்.

குறிப்புகள்.

இது என்ன தந்திரமோ?

கொச்சி மஹாராஜா கூடல்மாணிக்கம் கோவில் விஷயமாக எடுத்துக்கொண்ட நடவடிக்கையைப்பற்றி ஸ்ரீமான் காந்தி தமது ஹரிஜனப்பத்திரிகையில் "அறிவுக்கும் அறியாமைக்கும் போர்" என்றதலைப்பின்கீழ்ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். இந்தத்தலைப்பைப்பார்த்தாலே அந்த வியாஸத்தின் போக்கும் அதில் காந்திஜி சொல்லியுள்ள விஷயமும் என்னவென்பது வாசகர்களுக்கு எளிதில் புலப்படக்கூடியதே.திருவாங்கூர்செய்கையை அறிவாகவும், கொச்சியின் செய்கையை அறியாமையாகவும் காந்திஜி வர்ணிப்பது அவருடைய ஸ்வரூபஸ்வபாவங்களுக்கு ஏற்றதாயிருப்பதால் அதைப்பற்றி தார்மிகர்கள் லக்ஷ்யம் செய்யவேண்டியதில்லை. ஆனால் இந்த வியாஸத்தில் காந்திஜி கையாண்டிருக்கிற தந்திரத்தையே ஈம்முக்கியமாக வெளியிடவிரும்புகிறோம்.

கொச்சிராஜா, திருவாங்கூருக்கு எதிராக எடுத்துக்கொண்ட காரியம் மிக்க அநீதியானதாம். இதைக்கண்டிக்க தேசம் முழுவதும் கூட்டங்கள் நடத்தவேண்டுமாம். கொச்சியிலுள்ள பொதுஜனங்களுடைய மனோபாவம் தமக்குத்தெரியுமாம். அங்குள்ளவர்யாவரும்

ஆலயப்பிரவேசத்தை விரும்புகிறவர்களாம். பிரஜைகளின்எண்ணத்திற்கு விருத்தமாகவே அரசர் நடக்கிறாராம். ஆதலால் எங்கும் கண்டனக்கூட்டம்போடவேண்டுமென்று காந்தி தூண்டிவிடுகிறார். கொச்சி பிரஜைகளின் அபிப்ராயம், அந்தஅரசனைவிட தமக்கு அதிகம் தெரியுமென்று காந்திஜி வாதிப்பதை புத்திமான் எவரும் ஏற்கமாட்டார்கள். இம்மாதிரி காந்திஜி சொல்லுவது நகைப்புக்கு இடமானதே. ராஜ்யவாதிகள் இம்மாதிரி வேற்றுமையுண்டாக்கிப் பேசுவது அவர்களுடைய தந்திரங்களில் ஒன்றல்லவா?

காந்திஜி இத்துடனோடு நிற்கவில்லை. கொச்சியைக் கண்டிக்கக்கூடும் கூட்டங்களில் ஆலயப்பிரவேசத்திற்கு எதிராக உள்ள வைதிகர்கள் கூட கலந்துகொள்ளவேண்டுமென்று காந்திஜி கட்டளையிடுகிறார். இதன் தாத்பர்யம் நமக்கு விளங்கவில்லை. இது என்ன தந்திரமென்பதும் புரியவில்லை. திருவாங்கூரின் உரிமையில் கொச்சி பிரவேசிக்கக் கூடாதென்ற ஸாமான்ய தர்மத்தை வைதிகர்கள்கூட ஸ்தாபிக்கவேண்டுமென்பது காந்திஜியின் விருப்பமாகக் காண்கிறது. அப்படியானால் தார்மிகர்களின் உரிமையில் அதார்மிகர்கள் பிரவேசிப்பதைத்தடுக்க காந்திஜி உதவி செய்வாரா? இது என்ன வாதமென்பது புலப்படவில்லை. மேலும் ஓர் நிஷ்பக்ஷபாதமான பண்டிதபரிஷத்தைக் கூட்டி திருவாங்கூர்–கொச்சித்தகராறைத் தீர்க்கவேண்டுமென்று காந்திஜி யோசனை கூறுகிறார்.

பண்டிதர்களிடமும், அவர்களுடையதீர்மானத்திலும் காந்திஜிக்கு இப்போது புதிய நம்பிக்கை ஏற்பட்டு விட்டதா? திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரத்தை ஆக்ஷேபித்து, தேசம் முழுவதும் கிளர்ச்சி நடந்தபோது இந்த பண்டித பரிஷத் யோஜனை காந்திஜிக்கு உதயமாகாதது ஏனோ? திருவாங்கூர் அரசர் செய்த பெரிய காரியம் கொச்சி உத்திரவால் கவிழ்ந்து விட்டதென்று காந்திஜிவருந்துகிறார். அதர்மம் என்றைக்காவது வீழ்ச்சியடைய வேண்டியதுதானே!

"திலகர் கொள்கையை அழிக்கவே திலகர்நிதி ஏற்பட்டது."

பம்பாய் மந்திரியான ஸ்ரீமான் யமுனாதாஸ் மேட்டா மந்திரிபதவி ஏற்றதைப்பற்றி காங்கிரஸ்வாதிகள் வெகு தீவிரமாகக்கண்டித்து வருகிறார்கள். ஆனால் ஸ்ரீமான் மேட்டா இந்தப் பூச்சாண்டிக்குப் பயப்படாமல் காங்கிரஸின் நோக்கங்களை வெளியிட்டுப் பதில்சொல்லி வருகிறார். கூர்ஜரத்தில் ஸ்ரீ திலகரின் கொள்கையை அநுஸரிப்பவர்களே அதிகமென்பதுதெளிவு. இப்போதும் அங்கு தற்போதிய காங்கிரஸிடம் அபிமானம் குறைந்துவிட்டது நன்கு வெளியாகி வருகிறது. ஆதலால் ஸ்ரீமான் மேட்டாவுக்கு அங்கு ஆதரவு இருந்து வருகிறது. ஜனநாயக ஸ்வராஜ்யக் கக்ஷியாரும் ஸ்ரீமான் மேட்டாவை ஆதரித்து நிற்கிறார்கள்.

சில தினங்களுக்குமுன் நடந்த ராஜ்யக் கூட்டத்தில் ஸ்ரீமான் மேட்டா தற்கால ராஜ்ய நிலைமையையும் புதிய அரசியலையும்பற்றி ரஸமாகப் பேசியிருக்கிறார். புதிய அரசியல் சட்டமானது ஏற்கத்தக்கதாயில்லையென்றும், அதில் கணக்க குறைகள் இருப்பனவாகவும், புதியவரி போடாமல் ஏழைகளுக்கு எந்த நன்மையையும் செய்ய முடியாதென்றும் அவர் சொன்னார்.

மேலும், தற்காலம் காங்கிரஸின் கொள்கையை கூர்ஜரவாஸிகள் ஏற்கமுடியாதென்றும், அவர்கள் ஸ்ரீ திலகரிடம் பக்திவைத்தவர்களென்றும், திலகருடைய உபதேசத்திலேயே அவர்களுக்கு நம்பிக்கையிருப்பதாயும் ஆகலால் அந்த வழியிலேயே தாமும் செல்வதாயும், தாம் தேசவிரோதமான காரியம் செய்வதாகக் காங்கிரஸ்காரர் கூச்சல் போடுவது நியாயமில்லை என்றும திலகருடைய கொள்கையைக்கொல்லவே, அவர் பெயரால் கோடிரூபாய்வஸூலித்து 'திலகர்நிதி' என்ற பெயர் தற்கால காங்கிரஸ் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்டதாயும் தற்கால காங்கிரஸ் முற்றிலும் ஸ்ரீ திலகர் கொள்கைக்கு விருத்தமாயிருப்பதாயும், தாம் திலகர் வழிப்படி நடப்பதாயும் ஸ்ரீமான் மேத்தா பேசினார்.

காங்கிரஸ்வாதிகள் இந்த உண்மையை மறைப்பது சிரமமே. மஹாஜர் தீர்மானத்தில் உபயோகமில்லையென்று கண்டு நேரடியான காரியத்தில் இறங்கி அதற்காக ஜெயில்வாசத்தையும் ஏற்க முதலில் முன் வந்தவர் தீரர் திலகரே. பலதடவை அவர் ஜெயில் வாஸத்தை ஏற்றார். ராஜ்ய உலகில் காந்திஜியின் பெயர் வெளிவாராத காலத்திலேயே ஜெயில் வாஸத்தில் ஜனங்களுக்கு தைர்யத்தைக்கொடுத்து தீவிர உணர்ச்சியை ஸ்ரீ திலகரே உண்டாக்கினார். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையிலும் ஸ்ரீ திலகரைவிட ச்ரத்தைகொண்டவர் அரிது. இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வந்தால் ஜனாப் ஜின்னா போன்ற மகம்மதியர்களிடமே தாம் ஸந்தோஷமாக தேசத்தை ஒப்பிவிக்கத் தயார் என்று ஸ்ரீதிலகர் ஒரு தடவைசொன்னார். இத்தகைய வரை விட தேசாபிமானி யார் இருக்கமுடியும்? ஆனால் அவருடைய கொள்கை அழிக்கப்பட்டுவருவதை ஸ்ரீமான் மேட்டா குறிப்பிட்டதை ஒருவரும் மறைக்க முடியாது என்பது அவருடைய கருத்து.

புதியகக்ஷி தோன்றுமாம்!

காங்கிரஸ் வாதிகள் அபேதவாதம் போன்ற புரக்ஷிக்கொள்கைகளைப் பரப்பி தேசத்தில் குழப்பம் விளைவிப்பதாகவும், புதிய அரசியலை அழிக்கும் நோக்கத்துடன் உத்யோகம் ஏற்க மறுப்பதாயும், ஜனங்களுக்கு நன்மைசெய்ய நேர்ந்த ஸந்தர்ப்பத்தைத் தந்திரமாக நழுவ விட்டதாயும் எங்கும் ஒரு பேச்சுக் கிளம்பி விட்டதை மறுக்கமுடியாது. இந்தக் காரணங்களை ஆதாரமாகக்கொண்டு இந்தியாவில் காங்கிரஸுக்கு எதிராகப் புதிய ராஜ்யக்கக்ஷியொன்றை அமைக்கப் பெரிய விடங்களில் யோஜனை நடப்பதாகத் தெரிகிறது. பெரிய விடத்துத் தூண்டுதலும் இதற்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவில் காங்கிரஸ்காரரல்லாத பெரிய மனிதர்களை இதற்காக ஒன்றுகூட்டவும் முயற்சி நடக்கிறது. சென்னையிலுள்ள ஜஸ்டிஸ்கக்ஷித் தலைவர்களான பொப்பிலி ராஜா முதலியவர்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களாம். ஸ்ரீமான் எம். ஸி ராஜா ஸமீபத்தில் ஸிம்லா போயிருந்தபோது இதைப்பற்றி அங்கு பேச்சு வார்த்தை நடத்தியதாயும் தெரிகிறது. இக்கக்ஷி யேற்படுமா, அது நிலைத்து நிற்குமா என்பதைப்பற்றி இப்போது ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

ஆயினும் இக் கக்ஷியை அமைக்க வெளிப்பட்டிருக்கும் காரணம் யாவராலும் கவனிக்கத் தக்கது. மதவிஷயத்தில் புரக்ஷி காமான கொள்கை தேசத்தில் பாவி வந்தும் அதை ஒருவரும் கவனியாமல் 'நமக்கென்ன' என்று அலக்ஷ்யமாயிருந்தார்கள். ஆனால் பணம், சொத்து, விஷயத்திலும் புரக்ஷிக்கொள்கை தேசத்தில் உண்டாகிவிட்டபிறகுதான் இவர்களுக்கு உறைசல் கொடுத்திருக்கிறது. 'நம்முடைய, சொத்துக்களிலும் பணத்திலும் பிறர் பாத்தியம்கொண்டாடுவது அதர்மம்' என்ற உணர்ச்சி உண்டாக ஆரம்பித்துவிட்டது. ஆதலால் இவர்கள் இப்போது அபேதவாதத்தை எதிர்க்க வரிந்துகட்டிக்கொண்டு ஒரு கக்ஷியை ஸ்தாபிக்கப்பாடுபடுகிறார்கள். நாம் அடிக்கடி சொல்லிவருவது போல ஸமூஹ வ்யவஸ்தைகளை அப்படியேகாப்பாற்றுவதாலேயே அபேதவாதத்தைத் தடுக்க முடியுமென்ற நிச்சயத்தாலேயே இந்தப் புதிய கக்ஷி ஏற்பட நியாயமிருக்கிறது ஆகவே இப்புதிய கக்ஷி ப்ராசீன வ்யவஸ்தையை அப்படியே காப்பாற்றவேண்டுமென்ற அடிப்படையான நோக்கத்துடனேயே ஸ்தாபிக்கப்படப்போவதாகத் தெரிவது விசேஷமே. சொத்து விஷயத்தில் இக் கொள்கையைக் கொண்டவர்கள் மதவிஷயத்திலும் இதைக் கொள்ளாமல் முடியாது.

தஞ்சை ஜில்லா பிராம்மண ஸபையானது தீர்க்காலோசனைசெய்து "கன்ஸர்வேடிவ்,,கக்ஷியேற்படவேண்டுமென்று சொல்லியதற்குக் காரணமிதுவே. பழயவ்யவஸ்தையைக்காக்கப் பிரியப்படும். எல்லாஜாதி மதஸ்தர்களும் இந்த கொள்கையின்கீழ் ஒன்றுபடமுடியுமென்றும் ஒன்றுபட வேண்டியது அவச்யமென்றும் நம்மைப்போல் வேறுபல ராஜ்யவாதிகளும் தற்போதுநினைக்க முற்பட்டுவிட்டது விசேஷமே. இந்த நிலைமையைக்காங்கிரஸ் தலைவர்கள் இனியும் அலக்ஷ்யம்செய்யாமல் கவனிப்பதே விவேகமாகும்.

காவிரியில் புதிய ஜலம் வரும்தேதி.

மேட்டூர் அணையிலிருந்து காவேரி ஆற்றுக்கு ஜலம் விடுவதைப்பற்றி சர்க்கார் அறிக்கை வெளியாயிருக்கிறது. அதன்படி வைகாசிமீ 27உக்குச் சரியான ஜூன்மீ 9உ யன்று அணை திறக்கப்பட்டு ஆறுகளில் ஜலம் விடப்படும். 16உக்குள்ளாக ஜலம் எல்லாவிடங்களிலும் எட்டும்படி செய்யப்படும். சென்ற வருஷத்தை விட இவ்வருஷம் 2-பங்கு அதிகமான ஜலம் விடப்படுகிறது. ஆதலால் விவசாயிகள் ஆங்காங்கு வேலைகளைத் துவக்கலாம்.

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
Mukkamala, Amalapuram Taluq,
East Godavary Dt.,

சென்னை.

6—6—37 சந்தாச்ரமத்தில் முத்தியால்பேட்டை வர்ணாச்ரம சாகாசங்கத்தின் ஆதரவில் ஓர் கூட்டங்கூடி சென்னையில் கூட்டப்போகும் பரிஷத்தைக்கண்டித்து நமது சக்ரவர்த்தி மதாக்ஷண வாக்குறுதி கொடுக்காததற்கு வருந்தியும் காங்க்ரஸ் கன்னர்வேடிவ் கக்ஷியொன்று உடனே ஆரம்பிக்கும்படி தலைவர்களை வேண்டியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஸ்ரீவத்ஸ சர்மா முதல் பல தலைவர்கள் பேசினார்கள்.

ஸ்ரீசங்கரோபதேசம்:- 2—6—37 மாம்பலம் பஞ்சனத பவனத்தில் பிரும்மஸ்ரீ ஸோம தேவசர்மா அவர்கள் ஸ்ரீமதாசார்யாளது உபதேசத்தில் 'உபதேச பஞ்சகம்' என்பதைப் பற்றி உபன்யஸித்தார். பக்தர்களது பிரார்த்தனையின்படி ப்ரதி புதவாரத்திலும் விவேக சூடாமணி முதலிய ப்ரகரண க்ரந்தங்கள் உபன்யஸிக்கப்படும்.

புராணாரம்பம்!! பதினெண்புராண ப்ரவசந ஸபை தலைவர் யாத்ரையிலிருந்து திரும்பி வந்து 7உ முதல ஸ்ரீசங்கர மடத்தில் ஸ்ரீமஹாஸ்காந்தம், மாம்பலத்தில் ஸ்ரீகர்க்க ஸம்ஹிதை மைலாப்பூரில் ஸ்ரீபாகவதம். பவழக்காரத்தெருவில் அநுகீதை முதலிய உபந்யாஸங்களை ஆரம்பிப்பார்.

அநுதாப பஜனை:- வைகுண்டஞ் சென்ற ஸ்ரீதருவை லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகளது தியாபகார்த்தமும் அவர் குடும்பத்திற்கு அநுதாபங்கூறவும் திருவல்லிக்கேணி பாண்டுரங்க நிலயத்தில் ஓர் பஜனை நடந்தது. 6உ பஞ்சநத பவனத்தில் அஷ்டபதி பஜனை நடந்தது. இடையே சில பக்திரஸ ப்ரதான உபன்யாஸமும் நடைபெற்றது.

நயம் நிருபர்.

வேத உலகிற்கே பெருநஷ்டம்.

வர்தவாசி தாலூக்காவில் வாக்குடை ஸோமப்ராம கனபாடிகள் எனும் மஹானை வைதிக உலகில் அறியாதாரிலர். அன்னார் பால்யத்தில் பாணூர் ஜடாவல்லபாரிடம் ஸலக்ஷணமாய் வேதத்தை ஓதி வர்ணக்ரமம் முடிய தேர்ச்சியடைந்து, வேதபாஷ்யங்களைப் பல தடவை அவலோகனம் செய்து அதிற் கூறியபடி நடையிலும் இருந்தார். கத்தவால் வனப்பருத்தி, ஆத்மகூர் முதலான நைஜாம் ஸமஸ்தானத்திலுள்ள ஆஸ்தானங்களில் பரீக்ஷாதிகாரியாகவும் ஸமஸ்தான வித்வானாகவும் இருந்தவர்.

இப்பெரியார் சென்ற சித்திரைமீ 19உ ஸ்திரவாரம் நடுப்பகலில் ஆன்ஹிகத்தை முடித்துக்கொண்டு போஜனம் செய்யப் போகுமுன் ஹ்ருதய ஸ்போடகத்தால் விண்ணுலகிற்கேகினர். வேதமே அன்னார் பெருமையை அறிந்து அழைத்து சென்றதோ? அன்றேல் தேவனே அவர் வேதத்தைக் கேட்கக்கூட்டிச் சென்றாரோ? ஆ! ஆ!!

வி உமாமகேச்வர சாஸ்திரிகள்.

அகரமாப்படுகை.

பட்டாபிஷேகம்:—நெடுநாளாக நடந்திவந்த ஸ்ரீமத் வால்மீகி ராமாயணமென்ற இதிஹாஸத்தில் பட்டாபிஷேகபட்டமானது வைகாசி மீ 14உ குருவாரத்தன்று சிறந்த ப்ராமண போஜனத்துடன் பாராயணபூர்த்தி ஸ்ரீராமனுடைய பூஜையும் நடந்தேறியது அன்றய தினம் இரவு மணி 7 முதல் 10வரையில் ஷடி மங்கள சரித்திரமானது பிரும்மஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸ சர்மா அவர்களால் அழகாகவும் ஜனங்களுடைய மனசுக்கு ஆனந்தத்தை உண்டு பண்ணியும் உபந்நியசிக்கப்பட்டது

நெரூர் ஸ்ரீ ஸதாசிவப்ரம்மேந்திராள் ஆராதனை வைபவம்.

ஆதி கரூவூர் என்று விளங்கும் கெர்ப்பபுரி க்ஷேத்ரத்தைச் சேர்ந்த நெரூரில் தக்ஷிணவாஹினியாக அமைந்திருக்கும் காவிரி தீரத்தில் அதிஷ்டான வாசியாக இருந்து கொண்டு பக்தர்களுக்கு சர்வாபீஷ்டப்ரதராய் பிரகாசித்துக்கொண்டுமிருக்கிற பரமஹம்ஸாசாரியாளான ஸ்ரீ ஸ்தாசிவப்ரம்மேந்திராளுக்கு ப்ரதி வருஷத்திலும் உத்ஸவம், ஆராதனை, அர்ச்சனை, பிராம்மணசந்தர்ப்பணைமுதலிய விமரிசைகள் வெகு காலமாக நடந்து வருகிறதென்பது ஜனத் ப்ரஸித்தமான விஷயம்.

நாளது ஈச்வரஹு வைகாசிமீ 1உக்கு 14-5-37 வைசாகசுத்த பஞ்சமி வெள்ளிக்கிழமையன்று வழக்கம் போல் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவமும், ஆரம்பிக்கப்பட்டு அதிஷ்டானத்தில் லக்ஷார்ச்சனை பிராமணசந்தர்ப்பணமும், ஆரம்பிக்கப்பட்டு அடியிற்கண்ட பிரகாரம் உத்ஸவம் இனிது நடந்தேறியது.

ஈச்வரஹு வைகாசிமீ 1உ (14-5-37) வெள்ளிக்கிழமை பஞ்சமி ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவமும், பாகவதகோஷ்டியுடன் கிராம பிரதக்ஷிணமும், மஹன்யாஸபூர்வகம் அபிஷேகம், சங்கரவிஜய பாராயணம், அதிஷ்டானத்தில் லக்ஷார்ச்சனை ஆரம்பம், உத்ஸவாரம்பம், பிராம்மணஸந்தர்ப்பணை.

வைகாசிமீ 2உ (15-5-37) சனிக்கிழமை பாகவதகோஷ்டியுடன் மஹன்யாஸபூர்வகம் அபிஷேகம், லக்ஷார்ச்சனை, பிராம்மணஸந்தர்ப்பணை.

ஷை மீ 6உ (19-5-37) புதன்கிழமை வைசாகசுத்தசமி ஸ்ரீ ஸதாசிவப்ரம்மேந்திராள் ஆராதனை. லக்ஷார்ச்சனை ஸமாப்தி பக்தகோடிகள் செய்யும் கைங்கர்யங்கள் கணக்கிலடங்கா. பல கிராமங்களிலிருந்தும் அநேக ஆஸ்திகர்கள் ப்ரம்மேந்திராளின் ஆராதனை விஷயங்களில் கலந்துகொள்ள விஜயம் செய்திருந்தனர்.

ஷை மீ 7உ (20-5-37) வியாழக்கிழமை ஏகாதசி பாகவத கோஷ்டியுடன் கிராம பிரதக்ஷிணம். மஹந்யாஸபூர்வகம் அபிஷேகம். பிராமணசந்தர்ப்பணை இரவு பாகவத கோஷ்டியாரால் பவலக்ஷாம பஜனை. டிஜனை முடிவடைந்தவுடன் பாகவதகோஷ்டியுடன் கிராமப் பிரதக்ஷிணம்.

ஷை மீ 8உ (21-5-37) வெள்ளிக்கிழமை துவாதசி ஆதி சங்கரரள் ஆராதனை. பாகவதகோஷ்டியுடன் கிராம பிரதக்ஷிணம். அபிஷேகம், பிராம்மண ஸந்தர்ப்பணை இரவு சித்ரான்ன போஜனம். உத்ஸவ ஸமாப்தி.

மேல்கண்ட உத்ஸவதினங்களில் ஸ்ரீவிகவநாதர் விசாலாக்ஷியம்மனுக்கு மேற்கண்ட ப்ரகாரம் விமரிசையாக அபிஷேகங்களும், ஸஹஸ்ரநாமார்ச்சனைகளும் நடைபெற்றன. இத்துடன் கீழ்க்கண்ட வித்வான்களின் உபன்யாசங்களும் சங்கீதகச்சேரியும் கதாகாலக்ஷேபமும் கீர்த்தனமும் நடந்தன.

சேங்காலிபுரம், வைத்யநாத சாஸ்திரிகள். போலகம், ஸ்ரீகாந்தசாஸ்திரிகள். குழுமணி, ஸீதாராமசாஸ்திரிகள். வில்வாரண்ய சமுத்திரம், வெங்கடராமசாஸ்திரிகள். கிருஷ்ணராஜபுரம், வெங்கடராமசாஸ்திரிகள். பழமானேரி சுப்ரமண்யசாஸ்திரிகள். சேலங்காவேரி, ராமச்சந்திர சாஸ்திரிகள்.

நெரூர். கணபதி சுப்ரமணியய்யர் அவர்கள் (சங்கீதக் கச்சேரி) திருச்சி, மீனாக்ஷி சுந்தர பாகவதர் (கதாகாலக்ஷேபம்) காணியநல்லூர் அனந்தபத்மநாபசர்மா கம்பராமாயணம், விபீஷணசரணாகதி, வாலிவதம்.

இரவு திவ்யநாம பஜனைகளில் பண்டரீபுர கீர்த்தனம் மிகப் பாராட்டத் தக்கது.

23-5-37 ஞாயிற்றுக்கிழமை இரவு 7½ மணிக்கு நரஸிம்ம ஜயந்தி வைபவம் கொண்டாடப்பட்டது. அது போழுது வில்வாரண்ய சமுத்திரம் பிரும்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகளால் "நரஸிம்மமூர்த்தி விஜயம்" எனும் விஷயம் உபன்யசிக்கப்பட்டது. உபன்யாசம் முடிந்தவுடன் வந்திருந்த பக்தர்களுக்கு, சந்தனம், பானகம், நீர்மோர், சுண்டல், பலாச்சுளை, இவைகள் அளிக்கப்பட்டன.

இவ்விதம் நெரூரில் அதிஷ்டானவாசியான ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்திராள் ஆராதனை உத்ஸவம் வெகு விமரிசையாக நடந்தேறியது, என நெரூர், கே. ஜீ வெங்கட கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

தஞ்சை ஜில்லா பிராம்மணமஹாசபை விண்ணப்பம்.

ஹிந்துக்களுக்கு பொதுவாயும், பிராம்மணர்களுக்கு விசேஷமாயும் சமீப சம்பவங்களால் இடையூறுகள் அதிகமாகி வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் குடும்பகஷ்டங்களும் அதிகரித்துவருகின்றன. இனி மேலாவது ப்ராம்மணர்கள் தங்கள் காரியத்திற்கு பிறரை எதிர்பார்க்காமல் தங்கள்சமூகபலத்தை நிடப்படுத்திக்கொண்டு தங்களுடைய இரைபர சௌகர்யத்திற்கு வேண்டிய ஸகல காரியங்களையும் தாங்களே தான் சிரமப்பட்டு நியாகம் செய்து ஸாதித்துக்கொள்ள வேண்டும் என்பது நன்கு வெளியாய் விட்டது. இப்படி "ப்ராம்மண ஸமூகத்தை" புனருத்தாரணம் செய்ய ப்ரசாரகர்களும், பண உதவியும் தேவை என்பது தெளிவான விஷயமே. அதற்காக சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த பிராம்மண வருஷாந்தரக் கூட்டத்தில் 'ப்ராம்மண மஹாசபை ப்ரசார நிதி' ஒன்று மதுரை ஸ்ரீமான் அட்வகேட் நடேசய்யர் மூலம் ஆரம்பிக்கப்பட்டு ப்ரசாரவேலையும் ஆரம்பித்து இந்த ஜில்லாவில் பல இடங்களில் நடந்துவருகிறது. இந்தக் காரியம் மேன்மேல் நடப்பதற்காக ஆஸ்திக பிராமணர்கள் அனைவரும் கொஞ்சம் கொஞ்சம் பண உதவி செய்யும்படி பாரம்மண மஹாசபை நிர்வாகக் கமிட்டியார் இதன் மூலம் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

எஸ். ஸ்வாமிநாதசாஸ்திரிகள் செக்ரடரி, தஞ்சைஜில்லா பிராம்மண மஹாசபை.

உறுதிமொழித் தகராறு. காந்திஜியின் அறிக்கை.

டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை நிருபருக்குப் பேட்டிகொடுத்த ஸமயம் காந்திஜி உறுதிமொழித்தகராறு விஷயமாகச் சொல்லியுள்ள அபிப்பிராயம் சிறிது இணக்கம் காட்டுவதாயும் ஸமரஸ தோரணையிலிருப்பதாயும் நினைக்கப்படுகிறது. அபிப்ராய பேதமேற்படும் ஸமயத்தில் மந்திரிகளை கவர்னர் தள்ள வேண்டுமென்பதற்குப் பதிலாக, அவர்களை விலகவேண்டுமென்று கேட்டால் போதுமென்று காந்திஜி இப்போது திருத்தம் வெளியிட்டிருக்கிறார்.

வைஸ்ராய் இவ்விஷயமாக ஏன் ஸஜீ முயற்சிசெய்யக்கூடாதென்றும் காந்திஜி கோரியிருக்கிறார். இவ்விஷயங்களை யோஜிப்பதற்காக வார்தாவில் கூடிய சீக்கிரத்தில் காரியக்கமிட்டி கூடுவார். பார்லிமெண்டில் இந்தியாமந்திரி பேசுகையில் காங்கிரஸ் காரர்கள் சீக்கிரத்தில் பதவியேற்று ஸஜீய நெருக்கடியைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

Registered No. M. 2913.

The Arya Dharmam.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 10th JUNE 1937. [No 22

THE PANDITS' PARISHAD.

It is reported in the Press that some leading gentlemen of Mylapore are taking steps to convene a Conference of Pandits and others 'interested in social and religious reform.' Sir P. S. Sivaswami Aiyar, who presided at the meeting at the Ranade Hall, informed the public that Pandit Kumara Thathachariar who was "progressive minded" was the prime organiser of the meeting. He referred *to the holding twenty* five years ago of two Parishads, the first at Conjeevaram, and the second at Trivadi, for considering the question of post-puberty marriage. The results of *those* Parishads were "to a considerable extent encouraging." The promoters of the present Parishad are hopeful that a Conference of Pandits and others interested in the subject of social *reform* would *yield equally favourable* results.

Diwan Bahadur V. Bashyam Aiyangar moved a *resolution* that "this meeting of Hindu citizens considers it desirable to arrange for and organise a Parishad or Conference of Pandits and others interested in the subject of *reforms* and *changes* in our social and religious practices for the purpose of eliciting opinions as to the necessity and desirability of introducing such changes and reforms.

Though Sir Sivaswami Aiyar and *Diwan* Bahadur V. Bashyam Aiyangar speak *in* general of social and religious *reform*, they *obviously mean the reform* of Hindu Society and especially of certain *Acharas* of the *Brahmin* Community. The Parishad is to be called for the purpose of "educating public opinion." Its conclusions are not to be binding on anybody. Sir Sivaswami Aiyar is reported to have said "before they (social *reformers*) resorted to legislatures, they generally considered advisable to educate public opinion so *that it might support the demand for any legislative interference*."

A Parishad called for the purpose of furthering a preconceived opinion or for promoting a particular object in view can be no Parishad. To constitute a *Parishad* of "Pandits and others *interested in the subject of reform* and changes in social and religious practices" demanded by the time-*spirit, is a mis-nomer.*

The Pandits of our Presidency have to be warned, so that they may not unwittingly make themselves the instruments of promoting harm to *Dharma and Acharas* and thereby *to the* Hindu and the Brahmin Community.

The *Conjeevaram* and Trivadi Parishads *furnish a serious lesson and a warning.* The Pandits *who* were invited *to them* did not realise with what design the were called to *those* Parishads, The reformer wanted to obtain somehow or other from those Pandits at least an indirect approval of post-puberty marriage. The *reformer* did not state that it was *his* desire to get pre-puberty *marriages* declared as *unsastraic* or sinful. *He know* that the Pandits would have stood aghast if even a *suggestion* like that were *placed* before them. The *reformer* later pushed on his work. and as a result of his endeavours we now have the Sarda Act, which has *made* pre-puberty marriage a crime punishable with imprisonment.

What do those Pandits *who* participated in the two *former* Parishads. and gave qualified approval to post-puberty marriage only as GAUNA OR APATHKALPA, now think? Do they not realise that they have to share the responsibility *for the* stangulation of Dharma which *followed* their innocent exercise of Sastraic exegetics which they indulged in at the invitation of designing reformers?

It is a matter of regret that a person of the eminence of Sir P. S. Sivaswami Aiyar has stated that the *Conjeevaram* Conference declared itself in *favour* of post puberty marriage, and that at the Trivadi Conference also "resolutions were passed by Pandits and others in favour of post puberty marriage." The *fact* as shown by the official report *is that* at the Conjeevaram Parishad, out of seventy one Pandits, only eight Pandits stated that the Sastras proscribe post puberty marriage for Brahmins, At the Trivadi Parishad, the question *whether* the Sastras were *in* favour of post puberty marriage was *not* directly raised at all. It was raised *only* in this form—

> "Is the postponement of the marriage of Brahmin girls in Kaliyuga till *after* puberty owing to the difficulty of securing suitable bridegrooms, opposed to the teaching of Parasara Smrithi?"

The Pandits assumed that pre-puberty marriage was the proper *Achara,* and took it that they were asked to consider *only* if any exceptions could be *made* to it under circumstances of difficulty. Thirty Seven Pandits gave the answer that the marriage of Brahmin girls after puberty in the circumstances indicated is not opposed to Parasara Smiriti, but fifty one Pandits answered that it was opposed to the teachings of Parasara Smiriti.

Again, to the question whether the Sastras *ordain* that the Brahmin girls should be married only after puberty, only *nine Pandits out of one hundred and twelve* gave the answer in the affirmative.

In these circumstances, Sir Sivaswam Aiyar's statement that Pandits and others passed resolutions in favour of post puberty marriage at Trivadi is hardly correct.

It behoves the Dharma-bound Hindu and Brahmin public to take warning and ponder well before deciding to take part or promote the objects of the projected Parishad,

WHAT WE SHOULD DO.

The following message was (sent *to the* recent Brahmins' Conference at Kumbakonam, by *Diwan Bahadur* K. S. Ramaswami Sastriar, B.A., B.L., retired District and Sessions Judge).

It is a *matter for pride and* congratulation *that the* Brahmins are organising themselves so that they might attain greater communal unity and *coherence* and fit themselves better for serving India and guiding the world. On the one hand we *find a striving* towards unity. On *the other* hand, the schism-forming tendencies are increasing. It is not *proper that* as soon as *we find a slight difference* of opinion we *should* get into sub-groups and hurl thunders at one other while paying lip-homage to unity. We have also to reckon with the mighty social *forces* in upheaval all around and *not* merely hide our heads like ostriches in the sand. We have had a great history and tradition behind us and *we are* "the ancients *of the* world and in *the morning* of the times". We must preserve our loyalty to universal Atma Gunas as well as our loyalty to purifying Samskaras. We have to fight compulsory social legislation which *is* destructive of fundamental rights. We have to fight confiscatory economic legislation. The *tripod of welfare* is individual *discipline,* pure family life and social *distinctiveness* combined with social *harmony.* We have to take a referendum to find out whether we can best achieve our object by *being* a conservative pary within the Congress or by being a separate party. This will have to be *decided by the* commonsense of *the majority of our* community. I am afraid *that* the word "Sanatanism" is fast *degenerating* into denoting the *groove of* thought of a dwinding group whereas it really means the *broad* national, nay, *universal,* attitude of the Hindus as a whole. Above all, let us learn *to* pay real

homage to our source-books in spirit as well as in letter and let us not have the attitude of mind which hugs the small and the trivial and let go the great and the glorious. Sri Krishna says in the Gita. "That is the tamasic type of mind which is causelessly wedded to a fraction as if it were the whole and which does not realise the truth and which takes a narrow view".

THE TEMPLE-ENTRY PROBLEM.

The temple entry problem is taking a rather serious turn and we have yet to watch and see how destiny is going to shape its end. One thing is clear that the hand of God is in every movement that pops its head in the world, some for the proper of spreading of the dharmic truths and principles, some for the purpose of inculcating in the minds of the on-lookers the difference between dharmic and adharmic principles and others to rouse up the spirit which is lying dormant without enthusiastic upheaval.

We see in this holy land of Bharathavarsha huge temples rising to the clouds too numerous to count and too magnificent to understand. Every village which is considered a unit is possessed of such symbols of divine sovereignity, pro-claiming the protecting hand of Lord Vishnu on the one side and the punishing hand of Lord Siva on the other. It does not, however, mean that the protecting Lord has no other function or that the punishing Murthy is devoid of other functions. He who protects has also the right to punish and He who punishes has also the privilege of showering His Grace. On the other hand, a close study of the Puranas will tell us that when once Sree Vishnu is provoked the punishment will be severe and He will even resort to strategems to mete out his punishment. At the same time, the punishing deity when once raised up to pleasant moods by devotion forgets himself in showering his gifts on the bending head of the devotee.

When we compare the flimsy buildings that are built now-a-days with these abodes of the presiding deities, we are exalted by the grandeur of the construction and the apparent ease with which those temples are standing the wasting influences of thousands of years. We are inclined to think that the Gods have themselves caused these to be constructed by their skilled engineer Viswakarma. The majestic power of the Omnipotent Almighty is focussed in the deities in the various *murthies* for the purpose of conferring blessings on the worshippers and enabling them to see Him through them. The Murthis so installed wield their power and influence only if maintained according to the rules of the Agamas which are the *shastras* governing temple worship. It is no good saying that the Lord makes no difference between man and man, that the temple is a public place where no sort of difference should exist and so on. That may be true in the case of religion as expressed by the Adwaitha doctrine, where the wise do not see any difference between man and woman, between stone and gold, between his child and his neighbour's child and are able to see nothing else but Him, formless, nameless, devoid of space and time, omnipresent and omnipotent, and roam about unable to see the world but as a whole. But, so long as the representative deity is installed in the temple as a different entity from the worshipper who is interested in seeing that the deity gets the necessary power by means of the rules and method prescribed by the Agamas, the rules have to be strictly followed if the sanctity and purity of the temple have to be maintained and developed.

Another argument that is advanced is that these rules must be changed with the changing times and that the King has got a right to change it. That the King has got a right to change rules does not apply to such Kings or to such matters. The saying is based on the principle that the King is the person who is interested in the common welfare of his subjects and that he, counselled by people who have got the authority to speak upon particular matters, has got a right to issue edicts suited to the times. It does not confer a right to a King on whom political pressure is brought to bear for the issuing of a proclamation. Further, he who arrogates to himself the right to change an Agamic rule must possess the knowledge of the principles on which the rules are based and the particular circumstances that at the present day exist which entitle him to make the change. The desire for social reform will not confer on the King the right to change the Agamic law. I see the same hand that enunciated the Agamic law for being followed in respect of the abodes of Gods in days when people had naturally a religious instinct and abiding faith in our shastras, now influencing the Maharaja of Travancore to issue the proclamation just to enervate the atmosphere and the same hand of the Lord also rousing up the burning spirit of the Maharaja of Cochin to stick to his convictions with fear of God and without fear of man. Let us watch His developing hand wherever it goes, ourselves doing our humble mite by way of duty that has to be done, for our power is limited and the final destiny is only in His hands.

N. Sambasivan, B.A., B.L., Negapatam.

AN UNCHIVALROUS ATTACK.

The Rt. Hon'ble Mr. V. S. Srinivasa Sastriar, in opening the Pandits Conference at Bangalore on 3rd June, 1937, attacked the aloofness and unworldliness of Pandits. He has spoken in a patronising tone and made several caustic remarks. The general trend of his speech was to show that the Pandit is not as high or good as he claims, and the English educated men are not as low or bad as might be supposed. The Pandits are a poor lot, with no influence or position comparable to the English educated aristocracy for whom Mr. Sastriar seems to speak. No Pandit has the prominence which official or non-official position gives, or the public press can confer. The uncalled-for attack on such a class of men by Mr. Sastriar, one of the finest representatives of English culture, is a painful puzzle. Mr. Sastriar cannot say that the Pandits either as a class or as individuals have given any provocation for this rude rejoinder. Probably, Mr. Sastriar's plea is that the Pandit thinks of himself and of others in the way he (Mr. Sastriar) represents. Even if it be so, Mr. Sastriar was hardly justified in delivering the taunting speech which he did to the Pandits who invited him to preside over their function, especially when he knew that the Pandits would not retaliate. Construing the Pandit's learned silence and Sastra-bound outlook as disdainful self-sufficiency, Mr. Sastriar has entered into an elaborate self-defence and made his attack upon the alleged superiority of the old-world Pandit. But the Pandit will still remain unperturbed, showing that he is a true aristocrat of culture.

THE LAND OF SOCIALISM.

"Her leaders realised that, *whatever the cost* it was vital for Russia to transform the bankrupt agricultural economy into a modern industrial State. Then followed the New Economic Policy of Lenin and the push of the Five-Year plans to establish a heavy basic industry in the shortest possible time, to free the dictatorship of the proletariat from dependence on the factories and machines of hostille capitalistic countries. These were hard, brutal years; and *the leaders found it necessary to divorce the nation from the old ties of family sentimentality and personal relationship.*

Naturally, therefore, *in the interest of the State, family was sacrificed; divorces were made easy.* And there grew up within the Soviet Union *a constantly shifting, rough-hewn taughfibred, nomadic population.*"

Dr. J. M. Kumarappa, in the 'Hindu' 30-5-37.

A Dilemma:—Mr. Gandhi is on the horns of a dilemma as he will very soon be called upon to make up his mind to sink or swim with Pandit Jawarlal Nehru or to break away from him. The Congress remains united so long as it is in opposition. The moment it takes up office there will be a split in its ranks and the socialist wing will separate under the leadership of Pandit Nehru.

Sir H. S. Gour.

Absolute Power:—"In India, the next step is a change over of power, and when this change over takes place, there can be no compromise about it, because you cannot have two groups of authorities holding power."

(Pandit Nehru at Ipoh.)

"You may talk ever more of socialism and equality. But the strong and clever would sooner or later use the simple and weak there and everywhere, and classes would rise again out of the natural inequality of men."

341

வெளியூர்ச் செய்திகள்.

ஆழ்வார் திருநகரி.
முதல் தீர்த்த தாவா
144 தடை உத்திரவு பிரயோகம்.

(நமது விசேஷ நிருபர்)

ஆழ்வார் திருநகரி ஸ்ரீஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்தில் வைகாசி மஹோத்ஸவம் 15—5—37 வைகாசி 2-ந் தேதி துவஜாரோகணமாய் அதிவிமர்சையாய்நடந்து முடிவெய்தியது. இம்மஹோத்ஸவத்தில் ஸ்ரீவைஷ்ணவ மடாதிபதிகளான ஜீயர்ஸ்வாமிகளுக்கு விசேஷ ஸ்பெஷல் மரியாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்ரீவானமாமலை மடாதிபதி ஜீயருக்கு 8, 9, 10-ம் உத்ஸவங்களில் மரியாதை தினமாகும். இவ்வருடத்திய உத்ஸவத்துக்கு ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள் விஜயமானார். விசேஷ திருநாள் மரியாதைகள் சிறப்பாக நடைபெற்றது. புதிதாக நியமனமான ஜீயர் ஸ்வாமி முதல் தடவையாக இவ்வருடமே விஜயம் செய்ததால் பட்டணப்ரவேச ஊர்வலம் வைபவங்களும் நடைபெற்றன. நம்மாழ்வார் கோஷ்டியில் முதல் தீர்த்தம் யாருக்கு என்பது விஷயமாய் பெரியசிவில்கேஸ் ஒன்று நடைபெற்று வருகிறது.

இந்த உத்ஸவம் சம்பூர்ணமானதும் ஸந்நியவில் வானமாமலை ஜீயர் ப்ரவேசம் செய்யக்கூடாதென திருநகரி ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் தூத்துக்குடி சப்கலெக்டரிடம் தாவா செய்து துடங்கி ஓர் 144 பிரயோகிக்குமாறு செய்ததாகத் தெரிகிறது. தற்போது நடைபெறும் பிரதான முதல் தீர்த்தக்கேஸில் ஸ்ரீ வானமாமலை மடம் திருக்குறுங்குடி. வானமாமலை [illegible] ஸ்ரீ [illegible] கிளையும் ஸ்ரீஎம்பெருமானார் ஜீயர்ஸ்வாமி வாதியெனவும் தெரிகிறது.

ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமிகள்.
நவதிருப்பதி யாத்திரை
கிருத்தலையர்களுக்கு சமாஸ்ரயணம்
செய்ய மறுப்பு.

(நமது விசேஷ நிருபர்)

ஸ்ரீ ஜகத்குரு வானமாமலை மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகள் ஆழ்வார் திருநகரி வைகாசி மஹோத்ஸவத்தையொட்டி நவதிருப்பதி மங்களா சாஸன நிமித்தம் சிஷ்ய பரிஜனங்களுடன் விஜயம் செய்கையில் ஒவ்வொரு சோதிலிலும் விசேஷமரியாதைகள் சிறப்பாக நடைபெற்றதுடன் நகரெங்கும் ஜீயர்ஸ்வாமி பட்டணப்ரவேச வைபவாதிகளும் நடைபெற்றன. தென் திருப்பேரையில் சிஷ்யர்களுக்கு சமாஸ்ரயணம் நடைபெறுகையில் கிருப் வைத்துக்கொண்டுள்ளவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமி சமாஸ்ரயணம் செய்ய மறுத்துவிட்டதாயும் அதன் மேல் கிருப்பை ஸ்வீகரித்து தலைத்து வந்து மன்னித்து க்ஷமிக்கவேண்டுமென பிரார்த்துக் கொண்டதன் பிறகு சமாஸ்ரயண உபதேசாதிகள் செய்யப்பட்டதாயும் தெரிகிறது.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

அரிய உபன்யாசம்:— 16—5—37௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணி முதல் 6-30 மணிவரை திருவல்லிக்கேணி ஸ்ரீ வானமாமலை மடத்தில் ஸ்ரீ உ. ப. வே. புரிசை நடாதூர் வரதாச்சார் ஸ்வாமி 'பக்திரசம்' எனும் விஷயம் பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தார். ஸ்ரீமான் - யன். டி. சாமண்ணா, வாகீச ஜம்மண்ய பாரதி முதலியோர் வந்திருந்தனர்.

ஸ்ரீ நரஸிம்ம ஜயந்தி — 25—5—37௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிமுதல் 6மணிவரை திருவல்லிக்கேணி ஸ்ரீவானமாமலை மடத்தில் ஸ்ரீநரஸிம்ஹ தத்வம்' எனும் விஷயத்தை ஸ்ரீஉ.பவே அட்வொகேட் ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி அழகாக உபந்யசித்தார்.

நம்மாழ்வார் மஹோற்சவக் கொண்டாட்டம்:— அடியிற்கண்ட விபரப்படி சங்கக் காரியாலயத்தில் மாலை 6-30மணிமுதல் 8-30 9மணிவரை இடைவிடாது பத்து தினங்கள் உபந்யாசங்கள் நடந்தன.

ஸ்ரீஉபவே அட்வகேட் ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமியால் 24, 25, 31 இம்மூன்று தினங்களில் முறையே சடகோப தத்வம், ஆழ்வாரும் வள்ளுவரும், ஆழ்வாரும் தமிழும் உபந்யஸிக்கப்பட்டன.

ஸ்ரீமான் கம்பராமாயணம் ஆர். சந்தான கிருஷ்ணய்யங்கார் அவர்களால் 'ஆழ்வாரும் கம்பரும்' 'திருவாய் மொழியும் கம்பராமாயணமும்' பண்டித திருவாலி ராமாநுஜாச்சார், குறிச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாச்சார் ஸ்வாமி, பகவத் விஷயம் சேனூர் நரஸிம்மாச்சார் ஸ்வாமி, சங்கவித்வான் ஸ்ரீஉபவே ஸ்ரீரங்கம் சடகோபாச்சார்ஸ்வாமி, ஸ்ரீமான் உ.ஸ். லக்ஷ்மி நரஸிம்மாச்சார் ஸ்வாமி இவர்களால் முறையே ஆழ்வாரும் பிராட்டியும், ஆழ்வாரும் திருமங்கை மன்னனும், ஆழ்வாரும் எம்பெருமானும்.

திருவள்ளுவர் திருநாள்:— 25—5—37௳ செவ்வாய்க்கிழமை சங்கக் காரியாலயத்தில் திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்டம் நடைபெற்றது. காரியதரிசியும் தலைவரும் முறையே 'வள்ளுவர் பெருமை' வள்ளுவரும் ஆள்வாரும் என்ற விஷயங்களைப்பற்றி உபந்யாசம் செய்தனர்.

திருஞான சம்பந்தர் திருநாள்:— 28—5—37 வெள்ளிக்கிழமை சங்கக் காரியாலயத்தில் ஸ்ரீமான் கே. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் 'திருஞான சம்பந்தர் பிரபாவம்' என்பது பற்றி மிக விளக்கமாக அழகியதோர் உபந்யாசம் செய்தார். அட்வகேட் கே.எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் விஜயஞ் செய்திருந்தார்.

உபதலைவர் அறுபதாண்டு நிறைவுவிழா:— 31—5—37௳ சங்க உபதலைவர் பகவத்விஷயம் அட்வகேட் வி. நரஸிம்மாசார்யஸ்வாமி அறுபதாண்டு நிறைவுவிழா சங்கக் காரியாலயத்தில் நடந்தது. செய்யுளிலும் வசனத்திலும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. சங்கத்தலைவர், காரியதரிசி, ஸ்ரீநிவாஸ வேதாந்தசார், திருவாலி ராமாநுஜாச்சார், லக்ஷ்மி நரஸிம்மாச்சார் ஸ்ரீரங்கம் சடகோபாச்சார் முதலியோர் அவரது குணங்களை வியந்து கூறினர்.

ப. ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி.

திருப்பாதிரிப்புலியூர்.

வைசாகோத்ஸவமும் வேதபாராயணமும்.

சமயகுரவர்களால் பாடல்பெற்றதும், பிணகினீ நதியின் தென்கரையிலுள்ளதுமான பாடலிபுரத்தில் விளங்கிவரும் ஸ்ரீபிருஹந்நாயிகா ஸமேத ஸ்ரீபாடலீபுரீச்வரருக்கு இவ்வருஷம் உத்ஸவம் அதிக விமர்சையாக நடந்தேறியதில் முக்கியமான வேதபாராயண வைபவம் குறிப்பிடத்தக்கது. ஆஸ்திகோத்தமர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருநாள் நான் முன்னே நான் முன்னே என்று அநுகூலவையோடு அன்னமளித்தனர்.

ஃருஷ்யக்ஞ உமாமகேச்வர சாஸ்திரி.

மேல் மங்கலம்.
ஆஸ்திக மஹாஜனசபை.

ஈச்வரஹு வைகாசிமீ 14௳ (27-5-37) குருவாரம் மாலை 4½-மணிக்கு சபை கூடிற்று மதுரையிலிருந்து கவிரத்ன பிரும்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள், பிரும்மஸ்ரீ எம். என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலியவர்களும் பக்கத்து ஊரிலுள்ள ஆஸ்திகர்களும் உள்ளூர் மஹா ஜனங்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர்.

பெரிய குளம் வேதவிலாஸ் பிரும்மஸ்ரீ பி. எஸ் வைதீச்வர கனபாடிகள் கவிரத்னம் வி. எஸ் ராசாமிசாஸ்திரிகள், எம் என். சுப்ரமணிய சாஸ்திரிகள் முதலியோர் அக்ராசனம் வகிக்கக் கேட்டுக்கொண்டனர். அதை எம். எஸ் சுந்தரேசய்யர் அவர்கள் ஆமோதித்தார். பிறகு அக்ராசனர் சபை கூடியநோக்கத்தையும் சபை என்னும் விஷயத்தையும் எளிய தமிழ் நடையில் விரிவாய்பேசினார்கள்.

பிறகு அக்ராஸனரால் பிரேரேபிக்கப் பட்ட சபையோரின் ஆமோதிப்புடன் மதுரை பிரும்மஸ்ரீ எம். என் சுப்ரமணிய சாஸ்திரிகள், ஸ்வதர்மம் என்னும் விஷயத்தையும் தக்காலம் நமது மதத்துக்கு ஏற்பட்டிருக்கும் இடையூறுகளையும் அதை விலக்க சபைகள் ஏற்படவேண்டிய அவசியத்தையும், ஏற்கனவே இருக்கும் இவ்வாஸ்திக மகாஜன சபையை மதுரைஜில்லா வர்ணாச்ரம ஸ்வாராஜ்யசங்கத்திற்கு கிளைச்சபையாக ஸ்தாபிக்க வேண்டுமென்றும் பேசினார்கள். அதை சிவராமசாஸ்திரிகள் வியாகரண சிரோமணி எம். எஸ் மீனாக்ஷிசுந்தரசாஸ்திரிகள் முதலியோர் ஆமோதித்தனர். அத்தீர்மானத்தை சபையில் ஒட்டுக்கு விடப்பட்டு ஏராளமான ஒட்டுக்களால் நிறைவேறி இவ்வாஸ்திக மஹா [illegible] வர்ணாச்ரம ஸ்வராஜ்யசபையுடன் சேர்த்துக்கொள்ளும்படி அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவரால் ராவ்சாஹிப்என்.நடேசய்யர்அவர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் மஹாகனம் கொச்சி மகாராஜாவைப் பாராட்டி ஒரு மகஜர் சபையின் சார்பாக அனுப்பப்பட்டது.

சிவராமகணபதிகனபாடிகள்.

ஆலங்குடியில் ஸ்ரீ சங்கர ஜயந்தி.

காசியாரண்ய க்ஷேத்ரம் என்னும் ஆலங்குடி என்பது 'இரும்பூளை' என்ற பாடல்பெற்ற ஸ்தலம். நால்வராலும் பாடப் பெற்றது. தக்ஷிணாமூர்த்திஸ்தலம். இந்த ஸ்தலத்தில் ஆலயத்தில் ஸோமஸ்கந்தமூர்த்திக்கு இடது பக்கத்தில் ஒருமுழம் உயரத்தில் ஓர் உலோக விக்ரஹம் இருக்கிறது. அதை பரிசோதித்துப் பார்த்ததில் அது ஸ்ரீ ஆதி சங்கராசாரியாரது உருவமாகத்தான் இருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஏனென்றால் ஷை ஸ்தலபுராணம் 12 13 அத்யாயங்களில் சங்கராரண்யயோகி என்ற சரித்திரம் ஆசார்யாளைப் பற்றியது, விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. தவிர, நால்வர்களுடைய உருவங்களைப் போல் இல்லாமலும் அறுபத்துமூவர்களுள் ஒருவர் எனவும் ஊஹிக்க இடமில்லை. ஆனதுபற்றி இந்த விக்ரகம் ஸ்ரீ ஆசார்யாளுடையதே என்றதை முடிவாக அறிந்து அதை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி உத்ஸவ விக்ரகமுன்னிலையில் எழுந்தருளப்பண்ணி கற்பூர நீராஜனம் செய்யப்பட்டது. சென்ற சங்கரஜயந்தியன்றைக்கு மறுதினம் அவ்வூரில் ஏற்பட்டிருக்கும் ஸத்ஸங்கசபையின் ஆதரவில் இந்த வருஷம் ஸ்ரீசங்கரஜயந்தி கொண்டாடப்பட்டது. அடுத்த வருஷம் முதல் அந்த விக்ரஹத்திற்கு பூஜை ஆராதனைகள், புறப்பாடு விநியோகம் முதலானவை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீநிவாஸசாஸ்திரி.

215188

349

மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

தர்ம சாஸ்திர சந்தேகம்.

ஓர் ஸ்திரீ, வாரிஸ் ஒருவரும் இல்லாதபடியால் தகப்பனருக்கு உத்திரக்கிரியை செய்ய அதிகாரம் பெற்றுள். அதன் வருஷ பத்தியில் மேடி ஸ்திரீ பிரஸவித்துவிட்டாள். பிரஸவித்த 18வது நாளில் மேடி தகப்பனரின் ஆப்திகம் வருகிறது. அப்பொழுது மேடி ஸ்திரீ தன் பித்ரு ச்ராத்தத்தை மேடி 18 நாளில் செய்வதா? அல்லது பண்டாள்பர்சம் ஆனபின் செய்வதா? எப்படி செய்வது சாஸ்திர சம்மதம்? இது விஷயத்தை நமது பண்டிதர்கள் தக்கப் பிரமாணங்களுடன் நமது ஆர்யதர்மம் மூலம் அறிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ராஜகோபாலதீக்ஷிதர், கும்பகோணம்.

ரித்விக்கு வேண்டும்.

தனது விட்டோடிருந்து தனது அக்னிஹோத்ரத்தையும் இஷ்டிகளையும் செய்யத் தக்க சிஷ்டரான ரித்விக்குகள் இருவருக்கு மாதம் 15 ரூ கொடுப்பதாகவும் வருபவர் இந்த விலாஸத்திற்கு கடிதமெழுதும்படியும் வேண்டுகிறார்கள்.

T. நாராயணஅய்யர்,
மஹாக்னிசித்பாக தீக்ஷிதர்,
154 தம்புசெட்டி வீதி சென்னை.

வாந்தேஹும்.

சிவாலய ஸேவாபத்ததி என்ற நூல் எந்த பாஷையில் எங்கு கிடைக்குமென தெரிவிப்போருக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஸர்மா.

ரொக்கப்பரிசு ரூ. 1300.

நெ. 10 சயமகள் போட்டி முதற் பரிசு சரியான விடை ரூ 700 ... 1 ... விடை ... 300

பிரவேசக்கட்டணம் அணா 4 தான். முடிவு தேதி 20—6—37.

நெ	வார்த்தைகள்.
1	அம—
2	—ரி
3	பா—
4	—மரி
5	வி—யை
6	மா— —

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— இதில் காட்டப்பட்டிருக்கிற சயமகள் பெயர் 16. அதிலிருந்துதான் 6 வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கோடிட்ட இடங்களில் எழுத்துக்களைச் சேர்த்தால் சரியான விடைவரும். ஒவ்வொரு விடைக்கும் அணா 4 வீதம் தனித்தனியே விடைகளைச் சுத்தமாக எழுதி பிரவேசக் கட்டணத்துடன் M. O. சீட்டையும் சேர்த்து 20—6—37க்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். எழுத்துக்கு எழுத்துச் சரியானவிடைக்கு முதற் பரிசும் ஒருதப்புள்ள விடைக்கு இரண்டாவது பரிசும் பல சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை முறையே பகிர்ந்து அளிக்கப்படும்.

சயமகள் ஜாபிதா.

1. ஆரி.
2. மாகாளி.
3. வீரி.
4. மாலினி.
5. விசயை.
6. சமரி.
7. மாகேசி.
8. விசையை.
9. மாரி.
10. பாரதா.
11. கௌரி.
12. அமரி.
13. மாமாயி.
14. சௌரி.
15. மாதவி.
16. குமரி.

நெ. 11 பாலர்கள் போட்டி. சரியான விடை ரூ. 300.

நெ	வார்த்தைகள்.
1	தா—ம்
2	—தம்

இதில் காட்டப்பட்டிருக்கிற பெயர் 17 இதிலிருந்துதான் 2 சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கோடிட்ட இடங்களில் எழுத்துக்களைச் சேர்த்தால் சரியான விடை வரும். ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக்கட்டணம் அணா 4 வீதம் தனித்தனியே விடைகளைச் சுத்தமாக எழுதி M. O. சீட்டையும் சேர்த்து 20—6—37க்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைவந்தால் பரிசுத்தொகை முறையே பகிர்ந்து அளிக்கப்படும்.

பெயர்களின் ஜாபிதா.

1. பதம். 2. அதம். 3. தாலர். 4. வாதம். 5. தாபம். 6. சதம். 7. தாவம். 8. ஏதம். 9. தானம். 10. பாதம். 11. தாதம். 12. இதம். 13. தாரம். 14. தாகர். 15. தாடம். 16. தானம். 17. தாமம்.

நெ. 10 நெ. 11 இவ்விரண்டு போட்டிகளுக்கும் மொத்தமாய் விடையெழுதி அனுப்புவர்கள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனிக் காகிதத்தில் வரிசைக்கிரமமாய் எழுதியனுப்பலாம்.

மானேஜரின் சரியான விடைகள் சீல்போட்ட கவரில் தேவகோட்டை காட்டுக்கோட்டையார் பாங்கில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

இரண்டு போட்டிக்கும் பரிசுத்தொகை 30—6—37க்குள் அனுப்பப்படும். பரிசு அளிக்கும் சகல விஷயங்களிலும் மானேஜர் தீர்ப்பே முடிவானது.

மானேஜர் நாக. வெ. ராம நாச்சியப்ப செட்டியார்,
கார்த்திகேயன் நிலையம், தேவகோட்டை,
(இராமநாதபுரம் ஜில்லா).

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

4/22 23

17-6-1937

215189

1316

25187

353

Registered No. M. 291[illegible]

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ஸு ஆனி-மீ 4உ 1937-ஸு ஜூன்-மீ 17உ | வ 23

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை, 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

தர்மப் பிரசாரம்.

கொச்சியில் ஆலயப்பிரவேசத்திற்கு எதிராகக் கிளர்ச்சிசெய்ய அத்தேச வாஸிகளான பிராம்மண-பிராம்மணரல்லாதாரான ஸநாதனிகள் முடிவுசெய்திருக்கிறார்கள். இதை உத்தேசித்துப் பலவிடங்களில் பொதுக்கூட்டம் நடக்கிறது. மஹாமஹோபாத்யாய ஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள் உள்பட பிரபல நம்புதிரிப் பண்டிதர்கள் சேர்ந்த ப்ரசாரக் கமிட்டியொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஆல்வார் மஹாராஜாவின் சரீரம்.

பாரிஸில் இறந்த ஆல்வார் மஹாராஜாவின் சரீரம் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. பம்பாயிலும் ஆல்வாரிலும் அதற்கு மிகுந்த மரியாதைகள் செய்யப்பட்டன. மதஸம்பிரதாயங்களையொட்டி ராஜமர்யாதைகளுடன் சரீரம் தஹனம் செய்யப்பட்டது. ஆல்வார் ஸம்ஸ்தானத்திலுள்ள பிரஜைகள் யாவரும் இந்த துக்க அறிகுறியாக க்ஷவரம் செய்து கொண்டார்களாம்.

இதாலியில் பிரஜா உத்பத்திக்கு ஆதரவு.

இதாலியில் பிரஜா உத்பத்தி குறைந்துவருவதைத் தடுத்து அதை விருத்திசெய்வதற்காக அந்த அரசாங்கம் விசேஷ முயற்சி எடுத்துக் கொண்டுவருகிறது. கர்ப்பிணி ஸ்திரிகளுக்கு எல்லாப் பொது ஸ்தலங்களிலும் விசேஷ சலுகையும் மரியாதையும் காட்டி அவர்களை ரக்ஷிக்கத்திட்டம் போடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பிரஸவ உதவிக்காக விசேஷ வஸதிகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம். அந்நிய நாடுகளில் வஸிக்கும் இதாலிய கர்ப்பிணி ஸ்திரீகளை சர்க்கார் செலவில் இதாலிக்கு அழைத்துச்சென்று ஸௌகர்யம் செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம். குழந்தையுள்ளவர்களுக்கு வஸிக்க வாடகை வீடு கொடுக்க மறுப்பவர்களை தண்டிக்கவும் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ருஷ்யாவிலும் பிரஜாவிருத்தி ஏற்பாட்டைச் செய்ய [illegible].

பஞ்சாப் அபேதவாதிகள் கூட்டத்தில் அடிதடி.

பஞ்சாப் மாகாண அபேதவாதிகளின் கூட்டம் அமிர்தஸரஸில் ஸ்ரீமான் பேடி என்றவர் தலைமையில் சென்றவாரம் நடைபெற்றது. இரு பிரிவினருக்கும் சச்சரவு ஏற்பட்ட காரணமாக பலமான அடிதடி மேற்படிக் கூட்டத்தில் நடந்ததாம்.

மந்திரிகள் கூட்டம்.

பம்பாயில் நடந்த மாகாண பொக்கிஷ மந்திரிகளின் மஹாநாடு எவ்வித முடிவும் செய்யாமல் கலைந்துவிட்டது. இக்கூட்டத்திற்கு 5 மாகாண மந்திரிகளே வந்தனராம். கடன் வாங்காமல் மாகாண நிர்வாஹத்தில் ஏழைகளுக்கு நன்மை செய்ய முடியாதென்றும், புதியவரிகள் விதித்தாலொழிய பண வருமானத்திற்கு வேறு வழியில்லையென்றும் இந்தக் கூட்டத்தில் அபிப்பிராயம் வெளியிடப்பட்டதாம். சென்னை மந்திரிகள் இதற்குப் போகவில்லையாம்.

குடியரசின் குறும்பு.

ஏசுநாதரைத் திட்டுகிறது.

ஈரோட்டிலிருந்து வெளிவரும் 'குடி அரசு' என்ற நாஸ்திகப் பத்திரிகையில் ஏசு நாதரைப் பற்றி விகாரமாகத் தூஷித்து எழுதியிருப்பதைக் கண்டிக்க [illegible] வாகள் கூட்டம் நடத்திவருகிறார்கள். அந்தப் பத்திரிகையின்மீது கோர்ட் நடவடிக்கை எடுக்கவும் முயற்சி நடக்கிறதாம்.

Books by Dewan Bahadur
K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

		Rs.	A.	P.
1.	Kalidasa's Heroes	0	6	0
2.	The service of the soul	1	8	0
3.	Manu, the friend of Man	0	8	0
4.	Sandilya Bakthi Sutras	0	4	0
5.	The Gospel of Gita	0	3	0
6.	The future of Brahmin	0	2	0
7.	The Gita ideal of Devotion	0	4	0

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S & Co.,
மேலான T. T. M. A. மிஸ்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரதிட் ஜெம்வேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டென்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்

பண்டித ஸமாஜத்தில் பண்டித நிந்தை.

ஒரு மான்ய பண்டிதர் எழுதுகிறார்:—

மைசூர் ஸம்ஸ்தான பண்டித மஹாநாட்டில் மஹாகனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரவர்கள் நம் நாட்டு ஸம்ஸ்கிருத வித்வான்களையும் அவர்களது நடையுடைபாவனைகளையும் வெகு அழுத்தமாய் இகழ்ந்து நிந்தித்திருப்பதை ஊன்றி கவனித்தவர் வெகு சிலரே யிருப்பார்களென்று நினைக்கிறேன். சாஸ்திரிகளின் சப்தப்ரயோகம் ஸுகுமாரமாக இருந்த போதிலும், அர்த்தம்மட்டும் அர்த்தசந்திர பாணம்போல் அறிவாளிகளின் அந்தக் கரணத்தை அறுக்கத்தக்கதாயிருக்கிறது.

நமது தேசத்து ஸம்ஸ்கிருத வித்வான்கள் கிணற்றுத் தவளைகளென்று கனம்சாஸ்திரிகள் ஏளனம் பண்ணுகிறார். ஸம்ஸ்கிருத வித்வான்கள் கிணற்றுத் தவளையானால் கனம் சாஸ்திரிகள் போன்றவர்கள் ஸமுத்ரத் தவளைகள் போலும், எப்படியானாலும் தவளை தவளைதானே? ஸமுத்ரத்தவளை திமிங்கலமாக முடியுமா? தவளை குணம் போகுமா? ஸமுத்திரத்தவளைக்கு ஸமுத்திரத்தின் காம்பீர்யாதி விசேஷங்கள் யாவும் தெரியுமா? கிணற்றுத் தவளை கிணற்றை நன்றாய் தெரிந்துகொண்டு அதை சுத்தப்படுத்துகிறது. ஸமுத்திரத் தவளைச் சிலைக்குச்சென்று அங்குள்ள அழுக்கு ஆபாஸங்களை அதிகமாகச் சுமந்து கொண்டு இங்குவந்து ஆபாஸமாக்கிற்று எந்தத் தவளைத் தேவலை!

பண்டிதர்களை மூடக்கொள்கையைப் பின்பற்றுபவர்களென்றும், ஜன ஸமுதாயவாதத்தில் கலவாமல் தனித்து வாழ்வை நடத்துகிற [illegible] மொழிகளை வாரி இறைக்கிறார். இம்மாதிரி இவர் பண்டித ஸதஸ்ஸில் பண்டிதர்களை அவமதித்துப் பேசுவதற்கு பண்டிதர்களனைவரும் வாயை மூடிக்கொண்டு கேட்டுக்கொண்டிருப்பதுதான் முக்கிய காரணம். ஸம்ஸ்கிருத வித்வான்களை திட்டுவதுதான் இவருக்கு இலகுவாக இருக்கிறது. மற்றவர்களிடம் வசைச்சொல்வரிசையை இவர் ஆரம்பித்தாரேயானால், உடனே பதிலுக்குப்பதில் கிடைத்துவிடும். வாயில்லாப் பூச்சிகளாயும், பரம சாத்விகர்களாயுமுள்ள பண்டிதர்களை நிந்திப்பது வெகு சுலபமல்லவா? பண்டிதர்களின் பழய ஆசாரங்கள் மூடங்களாம். வெள்ளையர்களின் துராசாரங்கள் மூடங்களில்லையாம். வெள்ளைக்கார தேவதோபாஸனைசெய்து வெள்ளைக்கார தாதாத்ம்யம் பெற்று விளங்கும் கனம் சாஸ்திரிகளின் விபரீத புத்திவ்யாமோஹத்தை என்னென்று வர்ணிப்பது? நமது தேசத்து புராதந ஆசாரங்களைத் தூஷிக்குமிவரை எவ்வளவு கொண்டாடமுடியும்? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம், ஸ்வஜனாபிமானம், குலாபிமானம் முதலியன கொஞ்சமுமில்லாதவரிடம் நாம் எதற்காக மரியாதை காட்டவேண்டும்?

ஸ்வஜனத்ரோகிகளாயிருக்கிற கனம் சாஸ்திரிகள் போன்றவர்கள், ஆங்கில பாஷையிலும் ஆங்கிலேய ஆசாரத்திலும் எது முதல் பரம ப்ரீதியடைந்தார்களோ, அது முதல் ஸம்ஸ்க்ருத பாஷைக்கும், அதை வாசித்தவர்களுக்கும் கௌரவம் குறைந்துவிட்டது. இதனால் ஸம்ஸ்கிருத வித்வான்கள் ஒதுங்கி நிற்கும்படி நேர்ந்துவிட்டது. பண்டிதர்கள் ஒதுங்காமல் உலகத்துடன் கலந்து செய்ய வேண்டிய கார்ய மென்னவென்று கனம் சாஸ்திரிகள் கருதுகிறார்? அந்தக் கார்யத்தைக் கனம் சாஸ்திரிகள் போன்றவரே ஏன் செய்துவிடக் கூடாது? இதற்காக அனாவசியமாய் ஸம்ஸ்க்ருத வித்வான்களை ஏன் திட்டிக்கொட்டவேண்டும். இங்கிலீஷ் வாசித்தவர்களைப் போல் ஸம்ஸ்க்ருதம் வாசித்த வித்வான்கள் வஸ்த்ரம் முதலியன தரிப்பதில்லை என்று இவர் பேசுகிறார். வைதிகர்களின் ஆடம்பரமற்ற வஸ்திரதாரண முறையின் சௌகரியம் இவருக்குப் பிடிக்குமா? ஆடம்பரவாழ்விற்கு அவர்களிடம் ஆஸ்திகிடைப்பதல்லவா? வெள்ளைக்காரனைப்போல் ஆடை அணியவேண்டுமென்று இவர் நினைப்பதும் தவறு. ஒவ்வொரு தேசத்தாருக்கும் ஆடை அணியும் முறைத் தனித் தனி மாதிரியாய் இருக்கிறதுபோல், நமக்கும் இருப்பதை இவர் ஏன் நிந்திக்கவேண்டும்.

பின்பு கிராப் செய்துகொள்வதைப் பற்றி இவர் புகழ்ந்து சிலாகித்துப் பேசுகிறார். யாரோ வேறொரு மஹான் கிராப் க்ஷவரத்தை அங்கீகரிக்காமலிருந்ததற்காக இவரையும் அலக்ஷ்யமாக அவமதிக்கிறார். என்னே! விபரீதம். இப்படி சிகாதாரணம் முதலியவற்றை எல்லாம் தூஷணை செய்வதற்கு வெள்ளைக்கார தூர்வாஸனையே காரணமாதலால் இவர் மீது குற்றமில்லை. இவ்வளவு அழுத்தமாக ஸம்ஸ்க்ருத வித்வான்களையும், அவர்களது ஆசாரங்களையும் தூஷிப்பதற்கும் பண்டிதர்கள் இவருக்கு என்ன அபகாரம் செய்தார்களோ தெரியவில்லை. பண்டிதர்கள் இவருடைய ருதுமதீ விவாகக் கக்ஷிக்கு ஆதாரம் இல்லை என்றது ஒரு காரணமாயிருக்கலாம். கனம் சாஸ்திரிகளிடம் தன் நிந்தையை ச்ரவணம் செய்வதற்காகவே மைசூர் ஸம்ஸ்க்ருத வித்வான்கள் இவரை மஹாநாட்டிற்கு வரவழைத்து உபசரித்தார்கள் போலும். இவருடைய விஷமப் பேச்சைக் கேட்ட பிறகாவது இவரிடம் த்வேஷ உணர்ச்சி கொள்ளாமல் இருப்பது விந்தையாயிருக்கிறது. பண்டிதர்களே! கனம் சாஸ்திரியார் போன்றவர்கள் உங்களை இனிமேல் தூஷித்தால் நீங்கள் பேசாமல் இருப்பது தவறு. இதுவரையில் நீங்கள் பேசாமல் இருந்ததே இம்மாதிரி நிந்தா சிரவணத்திற்கு ஹேது என்பதைக் கவனியுங்கள்.

> यस्मिन्यथावर्तते योमनुष्यः
> तस्मिंस्तथावर्तितव्यं सधर्मः।
> मायाचारो माययावर्तितव्यः
> साध्वाचारस्साधुनाप्रत्युपेयः ॥

என்ற வசனத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். கனம் சாஸ்திரியார் புதிதாக நம்மை நிந்திக்கவில்லை. காங்கிரஸ்காரர் முதலியோரும் நம்மைத்தான் லக்ஷ்யம் வைத்துச் சொல்லுகிறார்கள். எல்லோருக்கும் நிந்தாபாத்ரமாக பண்டிதர்கள்தானிருக்கிறார்கள். அவ்வகாரண நிந்தாமூலமாக வாவது பண்டிதர்கள் விழித்துக்கொண்டு தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கோருகிறேன்.

கிய தர்மாசாரத்திற்கு சாக்ஷி.

பால்ய விவாஹம் சாஸ்திரீயமென்பது நம் கக்ஷி. அதற்கு பலப்ரமாணங்களுடன் ஸதாசாரமும் பக்கபலம்: அனுஷ்டானம் பலமில்லாதமற்ற கக்ஷி ஆலயப்ரவேசமறப்புப்பால்ய விவாகமும் அசாஸ்திரீயமென்று கூற முடியாது. மத சரித்தை கவனித்தால் விவாதம் எந்தக் கக்ஷியையும் ஸ்தாபிக்க முடியாது எனத் தெரிகிறது.

'மீமாம்ஸகர்கள் ஸ்மிருதி ப்ராமாண்யம் கூறப்போது சிஷ்டரை வர்ணித பரிக்ரஹத்தை முக்யமாகக் குறிப்பிடுகின்றனர் ஆகயின் ஆலயப்ரவேசம், ப்ரௌடா விவாஹாதி துராசாரங்களுக்கு எந்த பலமுமில்லை. ஆபத் தர்மாதிகளிலும் நிஷித்த தர்மங்களிலும் இச்சபை வாய்வைக்க வழிஇல்லை. ஆதலால் இப்பரிஷத் கூட்டவேண்டிய அவச்யமேயில்லை." என்று அவர் பேசி முடித்தபின் ஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்கள் அதை ஓர் தீர்மானமாக்கிப் பேசினார். நமது நிரூபர்.

பரிஷத் கூட்டுவது அஸாத்யம்.

ஓர் கண்டனக்கூட்டம்.

சென்னை முத்யால்பேட் வர்ணாச்ரம ஸ்வராஜ்யசங்கத்தினாதரவில் 13உ காலை 8 மணிக்கு ஸ்ரீராமாநுஜம் செட்டி ஸ்கூலில் ஓர் கூட்டம் கூடியது. குடந்தை வேத, பாஷ்ய ஸ்மிருதிப்ரவீண உ. வே. பிரும்மஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசார்யஸ்வாமிகள் தலைமை வஹித்து நீண்டஉபன்யாஸஞ்செய்ததாவது:-

தீவ்ர சீர்திருத்தவாதிகளும் அவர்களைப் பின்பற்றும். ஸ்ரீமான் குமார தாதாசார்யரும் பரிஷத் கூட்ட முயற்சிக்கின்றனர். ஸநாதனதர்மத்தில் பல ஆசார சீர்திருத்தங்களைச்செய்யவேண்டுமென அவர்கள் ஆவல். அதை நிறைவேற்றவே பரிஷத் கூட்டப்படுகிறது. பரிஷத் என்றால் என்ன, அதனால் ஸாதிக்கக்கூடியதென்ன? என்பதை கவனிக்க வேண்டும்.

வைதிக மதசரித்தை ஊன்றி கவனித்தால் தர்மாதர்மங்களை நிர்ணயம் செய்வதற்கு ச்ருதி ஸ்மிருதி ஆசாரங்களையே ப்ரமாணங்களாக கொள்கின்றனர். ஆசாரங்களில் ஸந்தேஹம் நேரிடின் மேற்கண்டவைகளையே நாடவேண்டும். பரிஷத் என்பது வேத ப்ரமாணங்களிற் சேர்ந்ததன்று. ச்ருதி ஸ்மிருதிகளில் உள்ள ஆசாரங்களில் ஸந்தேஹமேற்பட்டு அதை நிர்ணயம் செய்வதென்பது வைதிகமத சரித்திரத்திலேயே காணவில்லை.

ஸ்மிருதிகளில் ச்ருதி ஸ்மிருத்யாதி ப்ரமாணங்களால் கிடைக்காத ஆசாரங்கள் தர்மமா என்று நிர்ணயம் செய்யவே பரிஷத்கூட்ட அனுமதி இருக்கிறது. பரிஷத்தில் வேதாதிர்தவன், நையாயிகன், தார்க்கிகன் நிருக்தாதிக்தவன் ஆகியோர் அங்கத்தவராயிருக்கவேண்டும், வேதாந்த ஸம்ஸ்காரமில்லாதவரும் ஸப்ராயச்சித்தமாக வேதாத்யயனம் செய்யாதவரும் கூடும் ஸபை பரிஷத்தாகாது. இத்தகைய கடுமையான நியமம் விசேஷ தாத்பர்யமுள்ளதே.

ஆபஸ்தம்பர் "ஸ்மிருதிகளில் கூறப்பட்டவை அனைத்தும் வேத வாக்யங்களிலிருந்து எடுக்கப்பட்டவை" என்கிறார். பட்டகுமாரிலாதிகள் அர்த்தவாத பாகமே வைதிக ஆசாரத்திற்கு மூலமென உத்கோஷிக்கின்றனர். இந்நிலையில் வைதிக தர்மாசாரங்களை நிர்ணயம் செய்யவே வேதாங்களை முழுவதும் உணர்ந்தவரன்றோ வேண்டும்? வைதிக அர்த்தவாதங்களை நன்கு பரிசீலனை செய்து ஸதா அதில் ஈடுபடுபவர் அதையே மூலமாகக் கொண்டு எளிதில் தர்ம நிர்ணயம் செய்வார்.

இன்றோ வேதம் குறைந்துவருகிறது. ஸம்ஹிதை அல்லது பிராஹ்மணம் மட்டில் உபயுக்த அத்யயனம் அன்று. வேதத்தின் ஓர் சகலமே கற்கப்படுகிறது. அதிலும் வேதாந்த விசாரம் மிகக் குறைவு. ஆதலால் சாஸ்திரீயமான பரிஷத்தைக் கூட்ட முக்யமாக வேண்டிய யோக்யதை உள்ளோர் எங்கே? சாஸ்திரீயமான பரிஷத்தைக் கூட்ட முடியாவிடினும் பண்டித சபையேனும் கூடுவதாகவைத்துக்கொண்டு அதனால் ஸாதிக்கக் கூடியது யாதென விசாரிப்போம்.

தர்மாதர்மங்கள் பொது ஜனங்களுடைய க்ஷேமத்திற்காக ஏற்பட்டவை. இகலோக வாழ்க்கைக்கும் அவச்யமானவை. வாழ்க்கை எங்கும் எக்காலத்தும் ஒரேமாதிரியிருக்க முடியாது. காலத்தினால் மாறும். அதை அறிந்தே சாஸ்திரங்கள் முக்யம் கௌணம். ஆபத்தர்மம், யுகதர்மம் என காலப்போக்கில் ஸ்வபாவமாக வரக்கூடிய மாறுதல்களையும் நிர்ணயித்து விட்டனர். ஆகவே எக்காலத்திலும் உசித தர்மத்தை வேதஸ்மிருதிகளிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். ஆகவே தமக்கு உசிதமான தர்மத்தைச்செய்ய ஸபை எதற்காக? அவனவன் மனச் சாக்ஷியே முக்

(2-வது பக்கம் பார்க்க.)

வாரக் குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா.)

எதற்கு வரி போடுவது:— பம்பாயில் கூடிய மந்திரிகள் நம் தேசத்திற்கு கலம்புரிய 12-வகையான புதிய வரி விதிப்பதாக தீர்மானித்தனர். உள் நாட்டில் எந்த வகையான வரியை விதிக்கவோ உள்ளதை உயர்த்தவோ இடமில்லை அன்யதேசத்திலிருந்து வரும் சாமான்களும் பயன் படுத்தும்பொருளுக்கு வரி விதித்தல் எளுமையுடன் நேராக அது வரி போடுவதாம். ஆதலின் மோட்டார் சாராயம், பீடி, குதிரைப் பந்தயம் முதலியவைகளுக்கு வரி விதித்தல் சாலவும் நன்று! செய்வாரா?

வங்க கவர்னர் பெருந்தன்மை:— 1934-கவர்னரை சுட்ட முயன்றதாக ஒரு வாலிபருக்கு தூக்குத்தண்டனை விதிக்க, கவர்னர் தனது அதிகாரத்தைக் கொண்டு தீவாந்தர சிக்ஷையாக மாற்றினார். ஸமீபத்தில் அக் கைதி இங்கிலாந்தில் படிக்க விரும்ப கவர்னர் அதற்கு உத்தரவு கொடுத்தார். நம் நாட்டுப் பண்டை ப்ரபுக்களின் உதாரணத்தைக் கைகொண்ட அவரை அதிகாரிகள் பின்பற்றுவாரா?

மன்னிப்பு கேட்பாரா! முத்யால்பேட்டை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய (சாகா) சங்கத்தினாதரவில் ஓர் கண்டனக்கூட்டம் கூடி, சென்னையில் மஹாகனம் சாஸ்திரிகள் பண்டிதர்களை இழிவுபடுத்தியதைக் கண்டித்தது உடனே மன்னிப்புக் கேட்கும்படியும் இல்லையேல் பண்டிதரை தங்கடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியும் தீர்மானம் செய்தது. இதர பண்டிதரையும் தக்க முயற்சி எடுத்துக்கொண்டால் இனியும் இத்தகைய பேச்சை எவரும் பேசத்துணியார்!

தங்களைப் புனருத்தாரணம் செய்யட்டும்! சென்னை வர்புரவைரஹிம்யமதத்தைப் புனருத்தாரணம் செய்ய பண்டிதபரிஷத் கூடுவதை ஆதரித்து தாளம்போடுகிறதாம்? இவர்கள் யார்? ஹிந்து மதத்தை எந்த எந்த குருவிடம் எவ்வளவு காலம் கற்றனர்? ஹிந்துமதம் எத்தகைய புனருத்தாரணத்தைக் கோருகிறது? புனருத்தாரணம் செய்தவர்களை இவர்களறிவார்களா? எத்தனைய உத்தாரணம் நடக்கும்? இவைகளை அறியாது நாஸ்திகப்படுகுழியிலே விழுந்த தங்களைமுன்னே உத்தாரணம் செய்து கொள்ளட்டும்! பின்பு மதத்தைப் பற்றிப் பேசலாம்!!

ஆட்டப்படும் பொம்மைகளா? இச்சபை ப்ரேரிதமாக இருந்து முடிவு கூறிய கமிட்டி ஸம்மதித்தே வேதத்தைக்கொண்டு இந்த பண்டித பரிஷத்தைக் கொண்டு காலம் செய்யப்போகிறார் என்று ஸ்பஷ்டமாக கூறிவிட்டார். அங்கு பலர் பலவகையாகப் பேசியதைக் கேட்டபின் தர்மாபிமானி பண்டிதர், கிட்டே அனுகார். 'பேச தைர்யமிருந்தால், அவர் கக்ஷியாயமானால் ஏன் ஸநாதனிகள் இங்கு வரக்கூடா'தென்று கூறிவிட்டு தன் கார்யத்தைச் சாதிக்கவே இது முயல்கிறது!

என்ன செய்யலாம்? இச்சமயத்தில் நமது எதிர்ப்பை உலகமறியும்படி காட்டவேண்டும்! இன்னும் சாஸ்திரமயமாக போக இந்தியா தயாரில்லை என்று இவ்விஷமிகள் அறியும்படி செய்யவேண்டும். எல்லா பண்டிதர்களையும் ஆஸ்திகர்களையுமழைத்துச் சென்று அச்சபையில் அவர்களுக்கு ஆதரவில்லையெனக் காட்டி நாம் தர்மநிர்மானம்செய்வது அறிந்துணாதஸம் போல் காணப்படினும் பலமுள்ளதாக இருக்கும்! அல்லது பணம் பத்திரிகை பெரியமனிதர் பலமுள்ள இதை எப்படி சிதைக்கலாமென ஒன்றுகூடி நாம் ஓர் முடிவு சீக்ரம் செய்யவேண்டும்.

உறவாடி ஊரைக் கெடுக்கவா? ஜைந ஸ்வாமி 'தர்மமே தலைகாக்கும்' என்று சென்னைக்கருகே பேசினார். அங்கு ராஜாஜீ அதுவாதம் செய்தார். ஸ்வாமி எந்த தர்மமென்று கூறினால் ஸம்மதமாயிருக்குமென அறிந்து ராஜாஜியை அவர் அடிபோடி திர்த்தார். 'விஷயம் மனிதர் இவர்களைக்கொண்டு நம்மதத்தைக் கெடுக்கவே இத்தவற்பாடு; இருவரும் பீடி பிடிக்கலாமென வாயால் கூறினதோர் சிறிய தவறிவந்த தர்ம ஸஹாயம்!

ஓர் தார்மிகர் ஸ்வர்க்கஞ் சென்றார்! ஐஞ் முதலம்ஸ்வாமி அய்யர் குடும்பத்தைச் சார்ந்தவரும் போலீஸ் டிப்டி கமிஷனராக இருந்து எங்கும் நல்மதிப்பு பெற்றவரும், காஞ்சி ஸர்வதோமுக யாகத்தைக் காசிகளிடமிருந்து காத்தவரும் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளது அவ்யாஜ பந்தயம் தனது பெயர் வெளியில் வாராமல் பல்லாயிரம் ஸ்ரீ தர்மம் செய்தவருமான மகா-ள-ஸ்ரீ A. K. ராஜாவய்யர் 11உ பகலில் தனது கிருஹத்தில் அகாயாஸ மரணமடைந்தார். இத்தகைய தார்மிகர் யாதொரு குறையுமின்றி ஸ்வர்க்கதி பெற்றாலும் இதர தார்மிகருக்கு நஷ்டமே!

சென்னை.

மைலாப்பூரிலும், முத்யால் பேட்டையிலும் குடந்தை வேத பாஷ்ய ஸ்மிருதி ச்ரௌத ப்ரவீணரான பிரும்மஸ்ரீ உ. வே. அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசார்யஸ்வாமிகள், பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் நடத்திவைத்த யாத்ராத்தம் நின்றிருந்த ஸ்ரீமத் பாகவத காலக்ஷேபத்தை ஆரம்பம் செய்து வந்து [illegible] குறிப்பிடும்போது [illegible] குறிப்பிட்டு ஸாத்விக உபந்யாஸங்களையே கேட்கும்படி வற்புறுத்தினார்.

நமது நிரூபர்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

தஞ்சை வட்டம்.

ஏற்கனவே ஆர்யதர்மத்தில் வெளியிட்டிருக்கிறபடி. சென்ற பதினைந்துநாளாய் மதுரை ராவ்சாஹிப் நடேசய்யரும் கும்பகோணம் வாசாதிகளும் தஞ்சை ஜில்லாவில் அநேக இடங்களில் வர்ணாச்ரம ஸங்கப்ரசாரம்செய்து, பல இடங்களில் கிளை சபைகளும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தர்மப்ரசாரவிஷயம் இனி இடைவிடாமல் தஞ்சை, திருச்சி, கடலூர், சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் மேன்மேல் நடப்பதற்காக 'அங்கங்கே தர்மாபிமானிகளாயிருக்கிற ஆஸ்திகர்களை கிளை சங்கங்கள் ஏற்படுத்தி ப்ரசாரவிஷயமாய் வேண்டிய உதவிகளுக்கு கடிதம் மூலமாய் கும்பகோணத்தில் மேலக்காவேரிக்கரை திண்ணை இருக்கிற பிரம்மஸ்ரீ S. ஸ்வாமிநாதசாஸ்திரிகளுக்கு தெரிவித்துக்கொண்டால் அகில பாரத வர்ஷிய வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்க தலைவர் அவர்களுக்கு எழுதி சுற்றுப்பிரயாணம் ஏற்பாடு செய்யப்படும். ப்ரசாரத்திற்கு சகாயம்செய்ய விருப்பமுள்ளோர்களும் அவர்களால் இயன்றவரையில் பண உதவியை ஆர்கனைஸிங் ஸெக்ரட்ரிக்கு அனுப்பினால் இந்த ஸநாதன தர்மப்ரசார வைபவங்கள் மேன்மேலும் சிறப்புடனும் ஓங்கி வளரும். ஹிந்து மதாபிமானிகள் அனைவரும் இதில் காலதாமதமின்றி ச்ரத்தை எடுத்து காரியங்களை தலைக்கட்டி ஸபலமாக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

S. ஸ்வாமிநாத சாஸ்திரிகள்.
ஆர்கனைஸிங் ஸெக்ரட்ரீ.

காக்கழனி.

ஸ்ரீஞானாம்பிகா சங்கம்.

இச்சங்கத்தின் மூன்றாவது வருடபூர்த்தி கொண்டாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8மணிக்கு மகா ள ள ஸ்ரீ கே எஸ். வெங்கிட்டராமையர் தலைமையின்கீழ் நடந்தேறியது கடவுள் வாழ்த்துபாடப்பட்டு முந்திய நடவடிக்கைகள் கணக்குகள் வாசிக்கப்பட்டன. இந்த சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற புத்தியஓட்டத்தின் ப்ரைஸ்கள் கொடுக்கப்பட்டன. சரஸ்வதி உருவப்படமும் இச்சங்கத்து ஸெக்ரேடரியாயிருந்த காலம்சென்ற M.R.V கணேசன் உருவப்படமும் திறந்து வைக்கப்பட்டது. ஷை சங்கத்துக்கு 1937-38ம் ஹூ த்திற்கு M R S மகாலிங்கய்யர் அக்ராசனாதிபதியாயும் M R சுந்தரேசய்யர் உபஅக்கிராசனாதிபதியாயும் M R R சந்தானம் காரியதரிசியாகவும் M R N ராஜகோபாலன் M.RR வெங்கட்ராமன் ஸெக்ரேடரியனாகவும் நியமிக்கப்பட்டு மெம்பர்களும் சேர்க்கப்பட்டனர். அக்ராசனாதிபதி இச்சங்கத்தின் வளர்ச்சியைப்பற்றிக்கூறினர். வந்திருந்த மகாஜனங்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு தாம்பூலம் முதலியவைகள் வழங்கி கூட்டம் இனிது கலைந்தது. ஆர். சங்கரன். ஸெக்ரெட்ரீ.

ராஜாபாடசாலை.

கும்பகோணம் ராஜா வேதபாடசாலையில் இவ்வாண்டில் நடத்த சென்னை கவர்மெண்டு பிரவேசப் பரீக்ஷையில் சென்ற மூன்று மாணவர்களில் ஒருவர் எல்லா பாகங்களிலும் தேறியதாய் தெரிகிறது ஒரு நிரூபர்.

ஸ்ரீமத்ராமாயண பாராயண மஹோத்ஸவம்.

ஈச்வர-ஹூ வைகாசி மாதம் 29 தேதி 11—6—37 வெள்ளிக்கிழமை முதல் புதுக்கோட்டை டவுன் ராமச்சந்திரபுர அக்கிரஹாரத்தில் மாயவரம் பிரும்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் குமாரர் பிரும்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத்ராமாயண பாராயணப்ரவசனம் செய்யப்பட்டுவருகிறது. ஷை ப்ரவசனம் 25-6-37 வெள்ளிக்கிழமை பூர்த்தி அடைகிறது. காலையில் மூலபாராயணமும் மாலையில் உபந்யாஸமும் நடைபெறுகிறது. பல ஆஸ்திகர்கள் திரளாக வந்து மிக்க ச்ரத்தையுடன் ச்ரவணம் செய்கிறார்கள். G. மலையப்ப சாஸ்திரிகள்.

ஸந்தேஹ நிவர்த்தி.

10-6-37 ஆர்யதர்மம் 12-வது பக்கத்தில் குர்ப்பகோணம் ஸ்ரீ ராஜகோபாலதீக்ஷிதர் எழுதிய தர்மசாஸ்திர சந்தேஹத்திற்குபதில்.

[illegible]

இந்த வசனங்களாலே பாண்டஸ்பர்ஸமான பிறகு தான் பித்ருச்ராத்தம் பண்ணவேணும் என்று தெரியவருகிறது. அதாவது, ஸ்திரீயாய் ஜனித்தால் 40-வது நாளும், பும்ப்ராஜை ஜனித்திருந்தால் 31-வது நாள் பித்ருச்ராத்தம் பண்ணவேணுமாய்த் தோன்றுகிறது. கோதண்டராம தீக்ஷிதர்.

தர்மத்தை மாற்ற அரசனுக்கு அதிகாரமுண்டா?

சுக்ரநீதியின் கருத்து.

(அக்நிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியர்.)

சென்னை ஆர்யமதஸபாவினால் பிரசுரம் செய்யப்படும் "பாரத தர்மம்" என்ற மாதப் பத்திரிகையின் ஜூன்மீ இதழில் "Was the cast siystem periodically Revised in ancient India" என்றதொரு வ்யாஸம் காணப்படுகிறது. அங்கு "அரசனே ஸமூகத் தலைவன், அவன் இஷ்டப்பட்டால், இருக்கும் ஜாதி முறையில் புதிய ஏற்பாட்டை செய்யலாம்" என்ற கொள்கை வற்புறுத்தப்படுகிறது. இதற்கு சரித்திர மூலமாகவும் சாஸ்திர மூலமாகவும் ஆதாரங்களை அந்த வியாசம் எழுதியவர் சொல்லுகிறார். அந்த ஆதாரங்கள் அவருடைய கக்ஷியை ஸ்தாபிக்க உதவுமா என்ற விஷயத்தை நாம் இப்பொழுது முழுவதும் பராமரிசிக்கப் போவதில்லை. ஆனால் முக்யமாக ஒரு விஷயத்தைப் பற்றி சுக்ரநீதியும் அங்கு பிரமாணமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த வியாஸக்காரர்கொண்ட மனோபாவத்திற்கு அவரெடுக்கும் சுக்ரநீதிபிரமாணமாகுமா, என்பதை மட்டும் இங்கு சிறிது விசாரிப்போம்.

"அரசன் தர்மாதர்மங்களை சிக்ஷிப்பதால் புதிய யுகத்தை உண்டுபண்ணுகிறான்" "அரசனுடைய அநுமதி பெறாமல் புதிய ஸமாஜ நியமங்களை நிர்ணயிக்கலாகாது" என்று சுக்ராசாரியர் தமது நீதிசாஸ்திரங்களில் சொல்லுகிறார். இதையே "பாரததர்ம" வியாஸக்காரர் தமக்கு பிரமாணமாக எடுக்கிறார்.

இதை நாம் விசாரிக்கப்புகுமுன் சுக்ராசாரியர் தர்மாதர்ம விஷயங்களில் அரசனுக்கு எவ்வித அதிகாரத்தைக் கொடுக்கிறார் என்பதை கவனிப்போம். வைதிக மதத்தில் தர்மா தர்ம நிர்ணயத்தில் மனிதனுக்கு ஸ்வாதந்த்ர்யம் கிடையாது. பிராம்மணர், க்ஷத்ரியர் இவர்கள் தர்மாதர்மங்களை காப்பாற்றவே ஏற்பட்டார்கள் என்பதே நிலையான கொள்கை.

ஸ்வயம் ஸமுபார்ஜிதம் ... (4—1—9) ... (4—1—11) ... (4—1—50) ... (3—39)

என்றுள்ள சுக்ரநீதிவிதிகளைக் கவனித்தால் அங்கும் தர்மாதர்ம ரக்ஷணசிக்ஷணங்களை அரசனிடம் கொடுக்கப்பட்டிருப்பது வெளியாகும். மேலும் தர்மா தர்மங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. அவைகளை அனுஷ்டிப்பதாலேயே ஜனங்கள் ச்ரேயஸ்ஸை அடைய முடியும். ஜனங்கள் தர்மாதர்மங்களை அறிந்து ஸ்வபாவமாகவே அதன்படி நடந்துகொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஜனங்கள் தர்மத்தை அநுஷ்டிக்கச் செய்யவும், அதர்மத்தை விலக்கச்செய்யவும் இஹலோகத்தில் தண்டநீதியே அவசியமானது. அதனாலேயே,

"ஜாயதே ... (சுக் 4—1—48) என்றும் ... (4—1—52) ... என்பது போலவும் மஹாபாரதாதிகளில் தர்மரக்ஷணம் தண்டநீதியால் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது ... என்று அந்த தண்டநீதி க்ஷத்ரியனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதனால் தண்டநீதிமூலம் தர்மாதர்மங்களைக் காப்பாற்றும் அதிகாரமே க்ஷத்ரியனிடம் கொடுக்கப்பட்டிருப்பது ஸ்பஷ்டமாக வெளியாகிறது. சுக்ரநீதிப்படியும் தர்மாதர்ம விஷயங்களில் அரசனுக்குள்ள அதிகாரம் இவ்வளவே. தமதிஷ்டப்படி தர்மா தர்மங்களை நிர்ணயிக்கும் உரிமை அரசனுக்கு எந்த ஸ்ம்ருதியிலும் கொடுக்கப்படவில்லை.

இனி இந்த நிர்ணயத்துடன் "புதிய யுகத்தை உண்டுபண்ணுகிறான்" என்ற சுக்ரநீதி வசனத்தை எடுத்துக்கொள்ளுவோம். இந்த வசனம் நான்காம் அத்யாயம் முதல் ப்ரகரணத்தில் உள்ளது. இந்த ப்ரகரணத்தில் தண்டம் ப்ரசம்ஸை செய்யப்படுகிறது. இங்கு ... ।

அரசன் தர்மாதர்மங்களை சிக்ஷிப்பதின் மூலம் யுகங்களை பிரவர்த்திப்பவனாக ஆகிறான். ஆகவே ... ஏற்படும் தோஷங்கள் யுகங்களையோ, பிரஜைகளையோ சேர்ந்ததை அன்று. ஆனால் அரசனுடையதே" என்று சொல்லப்படுகிறது. இதனால் 'தர்மாதர்மங்களை அரசன் சிக்ஷிக்க வேண்டும். அவனுடைய சிக்ஷணத்திற்கு அனுகுணமாகவே குணதோஷங்கள் உண்டாகின்றன. அதனாலேயே யுகங்களும் உண்டாகின்றன. சில யுகங்களில் அரசனுடைய ஸாமர்த்யக் குறைவினாலோ வேறு காரணங்களினாலோ தர்மா தர்ம ரக்ஷணத்தில் குறைவு ஏற்பட்டு தோஷங்கள் உண்டாகுமானால் இதற்கு அரசனே பொறுப்பாளி" என்ற விஷயமே இங்கு விளக்கப்படுகிறது. இதற்கு முன்னும் அரசன் தர்ம பூர்ணனாக இருந்ததால் க்ருதயுகத்தில் தண்டமே இல்லையென்று ஆரம்பித்து க்ருதாதி யுகங்களை அனுஸரித்து ஏற்படும் தண்ட பேதமும் சொல்லப்படுகிறது.

காலதேசங்களை அனுசரித்துப் புதிய ஜாதி வியவஸ்தைகளை ஏற்படுத்தலாமென்பதற்கு இது எப்படிப் பொருந்தும்? இதனால், சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு ஜனங்கள் அநுஷ்டிக்கும் தர்மாதர்மங்களின் சிக்ஷணமூலமாக அரசன் புதிய யுகத்தை உண்டுபண்ணுபவனாகிறான் என்றே ஏற்படுகிறது. ஸ்வதந்த்ரமா தர்மத்தைக்கல்பித்து ... அதைப்புகுத்தி அரசன் புதிய யுகத்தை உண்டுபண்ணலாம் என்பது இந்த வசநத்தின் போக்கிற்கு முற்றிலும் முரண்பட்டதாகாதா? மநுஸ்ம்ருதி, மஹாபாரதம் முதலியவைகளிலும் அரசனுடைய நடவடிக்கையாலேயே க்ருதாதியுகம் மாறுவதாக

க்ருதா த்ரேதாயுகம் சைவ த்வாபரம் கலிரேவ ச । ராஜ்ஞோ வ்ருத்தாநி ஸர்வாணி ராஜா ஹி யுகமுச்யதே ।

(மநு 9-301)

க்ருதம் த்ரேதா த்வாபரம் ச கலிச்ச ... ராஜவ்ருத்தாநி ஸர்வாணி ராஜைவ யுகமுச்யதே ॥

(மஹா. சாந். 91-6) என்று சொல்லப்படுகிறது. ஆகவே ஸ்வபாவமாக அரசனுடைய நடவடிக்கையால் தர்மாதர்மங்களில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு க்ருதாதி யுகங்கள் ஏற்படுவதால் அரசனையே யுகமாக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இது விதிரூபமானதன்று. இதனால் அரசன் தன் இஷ்டப்படி நடந்து யுகங்களை உண்டுபண்ண வேண்டுமென்று அர்த்தமாகாது. இவ்விதமே,

ராஜா காலஸ்ய காரணம்

என்ற வசனமும் அரசனுடைய நன்னடத்தையால், நல்ல காலமும் கெட்ட நடத்தையால் கெட்டகாலமும் ஏற்படுவதால் காலத்திற்கு அரசனே காரணம் என்று சொல்லுகிறது. இதை சுக்ரர் தமது நீதியில் (1-21-22) நன்கு விளக்கிச் சொல்லுகிறார். "அரசன் ஸதாசாரங்களை நியமிக்க ஏற்பட்டவன். அவனுடைய நடத்தையால் காலம் மாறுபடுகிறது. அரசனுடைய நடத்தையே காரணம்" என்று சொல்லுகிறார். இந்த வசனங்களால் அரசனுக்குப் புதிதான எந்த அதிகாரமும் ஸ்ருஷ்டிக்கப்படவில்லை. ஆகவே ஜாதி தர்மங்களை தன் இஷ்டப்படி வ்யவஸ்தை செய்ய அரசனுக்கு இவ்வசனங்கள் ப்ரமாணமாகா.

அடுத்தாப் போல்

நவஸமாஜநியமம் 'அரசனுடைய அநுமதியின்றி புதிய ஸமாஜங்களின் நிர்ணயங்களை செய்யலாகாது' என்றுள்ள வசனத்தை எடுத்துக் கொள்வோம். இந்த வசனம் ஒரு புதிய ஸபை ஏற்பட்டால் அதற்கான நியமங்களை அல்லது சட்டங்களை அரசன் அநுமதி பெற்றே செய்யவேண்டும் என்று கூறுகிறது. இங்குள்ள ஸமாஜசப்தம் ஸபையையே குறிப்பிடுகிறது.

ஸபா ஸமாஜ ...

என்று ஆபஸ்தம்பாதிகளும் ஸமாஜ சப்தத்தை ஸபாவிசேஷத்திலேயோ ஜனங்களுடைய மைத்ரி ஸங்கங்களிலேயோ பிரயோகிக்கின்றனர். புதிதாக அரசன் ஜாதிவ்யவஸ்தைகளை ஏற்படுத்த இது எப்படி பிரமாணமாகும்? ஜாதி, ஸமாஜம் இரண்டும் ஒன்றாகுமா? எப்படியும் ஜாதி வியவஸ்தைகளைப் பற்றின விசாரத்தில் இது அடியோடு பொருத்தமற்றது. ஆகவே ஸமாஜங்களின் சட்டதிட்டங்களைச் செய்ய அரசனுக்கே அதிகாரமுண்டென்று இது வசனம் சொல்லுகிறது. இதனால் ஜாதி வியவஸ்தை ஏற்படுத்த அரசனுக்கு அதிகாரம் கிடைக்காது.

ஸ்ம்ருதிகளில் கணக்கற்ற வசனங்கள் காணப்படுகின்றன. மஹாபாரதாதிகளிலும் ஏராளமான உபாக்யானங்கள் சொல்லப்படுகின்றன. ஓரிடத்திலாவது அரசன் தன் இஷ்டப்படி ஜாதிவியவஸ்தைகளை மாற்றலாம் என்று வ்யக்தமாகசொல்லும் ஒரு வசன லேசமும் கிடையாது. இந்நிலைமையில் ஒரு அப்ரஸித்தமான விஷயத்திற்கு அடியோடு ஸம்பந்தமில்லாவசனங்களை வைத்துக்கொண்டு யன் இம்மாதிரி குழப்பமுண்டுபண்ணவேண்டுமோ?

கொச்சியில் விஷம ப்ரசாரம்.

ஆலயப்ரவேச விஷயமாகக் கொச்சி ஜனங்களைத் தூண்டி அத்தேசத்தில் கிளர்ச்சி நடத்த அகில இந்திய ஹரிஜன ஸங்கத்தில் அநுமதியின் பேரில் அங்கு ப்ரசாரம் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)
அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னாஸ் ப்லேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.
தயாரிப்பவர்:— என் கன்னுசாமி பத்தர் பெரியதெரு, கும்பகோணம்.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூக பஞ்ச சதீ'

(10—6—37 தொடர்ச்சி)

93 குங்குமருசி பிங்கம் அஸ்ருக்-
பங்கில முண்டாலி மண்டிதம் மாத: |
ஜயதி தவரூபதேயம்
ஜபபட புஸ்தக வராபயாப்ஜகரம் ||

மாத: - தாயே! குங்குமருசிபிங்கம் - குங்குமம் போல் சிவந்த நிறத்தையுடையதும், அஸ்ருக் பங்கில - ரத்தம் வழிந்து அழுக்கானதுமான, முண்டாலி மண்டிதம் - (தலை) முண்டங்களின் வரிசையால் அலங்கரிக்கப்பட்டதும், ஜபபட புஸ்தகவராபயாப்ஜகரம் - ஜபமாலை, புஸ்தகம், வரமுத்ரை, அபயமுத்ரை இவைகளையுடைய கராப்ஜங்களுடையதுமான, தவ ரூபதேயம் - உன்னுடைய ரூபமானது, ஜயதி - ஸர்வோத்கர்ஷமாக விளங்குகிறது.

1. இதில் அம்பிகையின் த்ரிபுரா என்ற ரூபவிசேஷமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூபத்தைப் பற்றி 'ப்ரபஞ்ச ஸாரத்தில் சொல்லப்பட்டிருப்பது பின் வருமாறு:—

'ஆதாம்ரார்க்காயுதாபாம் கலித சசிகலா ரஞ்ஜிதப்ராம் த்ரிநேத்ராம்
தேவீம் பூர்ணேந்து வக்த்ராம் வித்ருத ஜபவடீ புஸ்தகாபீத்யபீஷ்டாம் |
பீனோத்துங்க ஸ்தனார்த்தாம் வலிவலித விலக்னாமஸ்ருக் பங்கராஜன்
முண்டஸ்ரங் மண்டிதாங்கீம் அருணதர துகூலானுலேபாம் நமாமி ||

94 கனக மணி கலித பூஷாம்
காலாயஸ கலஹ சீல காந்திகலாம் |
காமாக்ஷி சீலயே த்வாம்
கபால சூலாபிராம கரகமலாம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! கனகமணி கலித பூஷாம் - தங்கம், ரத்னங்கள் இவையாலான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், காலாயஸ கலஹசீல - எஃகுடன் சண்டை செய்யக்கூடிய (அதாவது, எஃகின் நிறத்தைத் தோற்கடிக்கும்), காந்தி கலாம் - காந்தியை உடையவளும், கபால சூலாபிராம கரகமலாம் - கபாலம், சூலம் இவற்றுடனிருக்கும் கரகமலங்களையுடையவளுமாக த்வாம் சீலயே - உன்னை த்யானிக்கிறேன்.

1. இதில் அம்பிகையின் ப்ரத்யங்கிரா ரூபமானது வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதர்வண வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் பத்ரகாளிக்கு ப்ரத்யங்கிரா என்று பெயர்.

95 லோஹிதிம புஞ்ஜ மத்யே
மோஹித புவனாம் முதா நிரீக்ஷந்தே |
வதனம் தவ குசயுகளம்
காஞ்சீஸீமாம் ச கேபி காமாக்ஷி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! லோஹிதிம புஞ்ஜ மத்யே - சிகப்பின் ராசிபோன்றதான அனாஹத சக்ரத்தில் (அதாவது, மனதில்) மோஹித புவனம் - உலகத்தை மோஹிக்கச் செய்யும், தவ - உன்னுடைய, வதனம் - முகத்தையும், குசயுகளம் - இரு ஸ்தனங்களையும், காஞ்சீ ஸீமாம் ச - காஞ்சீ ப்ரதேசத்தையும், கேபி - சில புண்யவான்கள் மட்டும், முதா - ஆனந்தத்துடன், நிரீக்ஷந்தே - பார்க்கிறார்கள்.

1. இதில் அம்பிகையின் காமகலாரூபம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் ரஹஸ்யமானதாய் இருந்தபோதிலும் சில விபரங்கள் கீழே சொல்லப்படும். அதிகமாகத் தெரிந்துகொள்வதானால் ஸௌந்தர்யலஹரி, காமகலா விலாஸம், ஆர்தர் ஏவலனுடைய கிரந்தங்கள் இவற்றைப் பார்ப்பதோடு குருமுகமாகத் தெரிந்துகொள்ளவேண்டியது அவச்யம்.

2. இந்த ரூபமானது துரீயஸ்வரூபமானது. அதில் முகத்தை ஒரு பிந்துவாகவும், இருஸ்தனங்களை இரண்டு பிந்துகளாகவும், அவற்றிற்குக் கீழாக குஹ்யப்ரதேசத்தையும் த்யானிக்க வேண்டும். அவற்றை இங்கு முறையே வதனம், குசயுகளம், காஞ்சீஸீமா என்று சொல்லப்பட்டது.

'பிந்தும் க்ருத்வா முகம், பிந்துத்வயேன குசௌ,
[ஸபரார்த்தேன யோனிம்
க்ருத்வா காமகலாம் இதி த்யாத்வா |
(பரசுராம கல்பஸூத்ரம்)

'முகம் பிந்தும் க்ருத்வா குசயுகம் அதஸ்தஸ்ய தததோ
ஹரார்தம் த்யாயேத்யோ ஹரமஹிஷி தே மன்மதகலாம் |'
(ஸௌந்தர்ய லஹரீ)

3. காஞ்சீஸீமா என்றால் காஞ்சி (மேகலை, ஒட்டியாணம்) தரிக்குமிடம், அதாவது யோனி ப்ரதேசம் என்று அர்த்தம். இதேமாதிரி யோனியை ரசனாஸ்பதமென்று கீழே கண்ட காமகலா த்யானத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

'அக்ரபிந்து பரிகல்பிதானனாம்
அன்யபிந்து ரசிதஸ்தனத்வயீம் |
நாதபிந்து ரசனாகுணாஸ்பதாம்
நௌமி தே பரசிவே பராம் கலாம் ||

4. இம்மூன்று பிந்துக்களின் ஸமஷ்டியானகாமகலா ரூபிணியாக அம்பிகையை த்யானிக்கும் பக்தனே லோகங்களை எல்லாம் மோஹிக்கச் செய்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸ ஸத்ய: ஸங்க்ஷோபம் நயதி வனிதா இத்யதிலகு
த்ரிலோகீமப்யாசு ப்ரமயதி ரவீந்துஸ்தனயுகாம் ||"
(ஸௌந்தர்யலஹரீ)

ஆகவே அம்பிகையின் காமகலா ரூபத்தை 'மோஹித புவனம்' என்று இங்கு சொல்லப்பட்டதின் காரணம் சொல்லத்தேவையில்லை.

96 ஜலதி த்விகுணித ஹுதவஹ
திசா தினேச்வர கலாச்விநேயதலை: |
நளினைர் மஹேசி கச்சஸி
ஸர்வோத்தர கர கமலதளம் அமலம் ||

மஹேசி - மஹேச்வரியாகிய ஹே காமாக்ஷி! ஜலதி, த்விகுணிதஹுதவஹ, திசா, தினேச்வர, கலா, (ஆ) ச்விநேய தலை: - முறையே 4, 6, 10, 12, 16, 2 தளங்களையுடைய, நளினை: - கமலங்கள் (சக்ரங்கள்) மூலமாக, அமலம் - பரிசுத்தமானதும், ஸர்வோத்தர - எல்லாவற்றிற்கும் மேல்பட்டதுமான, கரகமலதளம் - ஸஹஸ்ரதள கமலத்தை, கச்சஸி - அடைகிறாய்.

1. இங்கு குண்டலினீ ரூபிணியான அம்பிகையானவள் ஷட்சக்ர பேதனம் செய்து ஸஹஸ்ரார கமலத்திற்குப் போவதைச் சொல்லப்பட்டது. இதைப் பற்றி ஸ்ரீமதாசாரியாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில்

'மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதமாகாசமுபரி |
மனோபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ||'

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வரிசையை அனுஸரித்து ஷட் சக்ரங்களை (அவற்றின் தளங்களுடைய கணக்கைச் சொல்லி) இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

2. இந்த (ஷட்) சக்ரங்களை கமலங்களென்றும் சொல்லுவது வழக்கம். அப்படிச் சொல்லுகையில் மூலாதாரத்திற்கு நான்கும் மணிபூரகத்திற்கு ஆறும், ஸ்வாதிஷ்டானத்திற்குப் பத்தும், அனாஹதத்திற்கு பனிரண்டும், விசுத்திக்கு பதினாறும், ஆக்ஞாவுக்கு இரண்டும், தளங்களிருப்பதாகச் சொல்லப்படும்.

3. ஜலதியென்றால் ஸமுத்ரம் என்று அர்த்தம். ஸமுத்ரங்களை ஸாதாரணமாக (சதுஸ்ஸாகர, சதுஸ்ஸமுத்ர என்று, நான்கு என்று சொல்லப்படுவதால் ஜலதி என்பது நான்கைக் குறிக்கும். ஹுதவஹ - அக்னி அக்னியானது கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி, என்று மூன்றாகையால், ஹுதவஹம் என்பது மூன்றைக் குறிக்கும். அதை த்விகுணிதமாகச் செய்தால் (இரண்டால் பெருக்கினால்) ஆறு. திக்குகள் பத்து என்று சொல்லப்படுவதால் திசா என்ற பதமானது பத்தை குறிக்கும். தினேசர்கள் (ஸூர்யர்கள், ஆதித்யர்கள்) பனிரண்டு பெயர்களென்று சொல்லப்படுவதால் தினேச என்ற பதமானது பன்னிரண்டைக் குறிக்கும். அச்வினீ தேவர்கள் இருவர்களாகையால் ஆச்விநேய என்ற பதமானது இரண்டைக் குறிக்கும்.

97 ஸத்க்ருத தேசிக சரணா:
ஸபீஜ நிர்பீஜயோக நிச்ரேண்யா |
அபவர்க ஸௌத வலபிம்
ஆரோஹந்த்யம்ப கேபி தவக்ருபயா ||

அம்ப - ஜகன்மாதாவே! ஸத்க்ருத தேசிக சரணா:— குருநாதருடைய பாதங்களைப் பூஜித்தவர்களான, கேபி - சில பாக்யசாலிகள் ஸபீஜ நிர்பீஜ யோக நிச்ரேண்யா - ஸபீஜயோகம், நிர்பீஜயோகம் என்ற மாடிப்படிகள் வழியாக, அபவர்க ஸௌத வலபிம் - மோக்ஷமென்ற மாளிகையின் உச்சிமாடிக்கு தவக்ருபயா - உன்னுடைய அனுக்ரஹத்தினால் ஆரோஹந்தி - ஏறுகிறார்கள்.

1. இதில் பக்தர்கள் யோகாப்யாஸத்தின் மூலமாக அம்பிகையை உபாஸித்து பரம புருஷார்த்தமான மோக்ஷத்தை யடைவதைச் சொல்லப்பட்டது. அதற்கு முக்யமான ஸாதனமானது குருவின் உபதேசமாதலால் அதை இங்கு 'ஸத்க்ருத தேசிக சரணா:' என்று சொல்லப்பட்டது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஞூ ஆனி-மீ 4உ

புராண ப்ரவசனமும் ஸநாதன ப்ரசாரமும்.

குடந்தையில் நடந்த ப்ராஹ்மண ஸம்மேளனத்தில் நமது ஸநாதன தர்மப்ரசார விஷயமாக ஸ்வல்பஸாத்யமாயும், கார்யகரமாயும் உள்ள தீர்மானமொன்று செய்யப்பட்டிருப்பதைப் பத்திரிகைகளில் பலரும் படித்திருக்கலாம். சில வருஷங்களாக நம்மால் நடத்தப்பட்டுவரும் தர்மப்ரசாரத்திலிருந்து நமக்கு சில அநுபவங்கள் உண்டாகியிருக்கின்றன. கூட்டத்தை ஏற்பாடு செய்கிறவர், நோடீஸ், இடம், ஜனக்கூட்டம், ஆகிய பல ஸௌகரியங்களுக்கும் பிறரை எதிர்பார்க்காமல் ஸநாதன தர்மப்ரசாரம் சுலபமாக எங்கும் நடந்துகொண்டு வருவதற்கு ஏற்றபடி அந்த தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. நாஸ்திக்ய வாஸனை மிகுந்துள்ள இந்த துஷ்காலத்தில் கூட ஜனங்களுக்கு புராணச்ரவணத்தில் சிரத்தையும் நம்பிக்கையுமிருந்து வருவதைக்காண்கிறோம். புராண ப்ரவசனம் நடக்குமிடங்களில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் ஆஸ்திக்யத்தால் தூண்டப்பட்டு வந்து கூடுவதை எங்கும் காணலாம். இத்தகைய ஸந்தர்ப்பங்கள் நகரங்களிலும், கிராமங்களிலும் பல இடங்களில் அதிகமாயும், நிரந்தரமாயும் இருந்துவருகின்றன. இருந்தாலும் இவைகளைப் பௌராணிகர்களும் ஸநாதனப்ரசாரகர்களும் பரஸ்பரம் உபயோகித்துக்கொள்ளாமலிருந்து வருகிறார்கள். இந்த இரண்டிற்கும் ஸம்பந்தமில்லை போல் நினைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலைமையை மாற்றி இரண்டையும் ஒன்றுபடுத்தும் உத்தேசத்துடனேயே ப்ராஹ்மண ஸம்மேளனம் ஒரு தீர்மானத்தை வெளியிட்டிருக்கிறது. புராண ப்ரவசனம் என்பதும் ஸநாதன தர்மப்ரசாரத்தின் ஓர் அம்சமென்பதும், ஆதலால் அது, தர்மப்ரசாரத்தையும் தன்னுள் ஐக்யப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், பௌராணிகர்களும் ஸநாதன ப்ரசாரகர்களும் ஒன்றுபடவேண்டும் என்றும், எங்கும் புராண ப்ரவசனத்தை விருத்தி செய்து பௌராணிகர்களுக்குப் பல வழிகளிலும் ஆதரவு காட்டவேண்டுமென்றும் அந்தத் தீர்மானம் வற்புறுத்துகிறது. இந்தத் தீர்மானத்தின் கருத்தையும் ப்ரயோஜனத்தையும் நாம் அதிகம் விவரிக்கத் தேவை இல்லை.

வேதங்களிலும், ஸ்ம்ருதிகளிலும் விதிரூபமாக அமைந்துள்ள தர்ம தத்வங்களை எல்லா ஜனங்களும் சுலபமாக அறிந்துகொள்வது ஸாத்யமன்று. ஆதலால் நம் முன்னோர்கள் எளிதில் யாவரும் தர்ம தத்வங்களை அறிந்துகொள்வதற்காகவே புராணங்களைச் செய்துள்ளார்கள். புராண ப்ரவசனத்தில் கதை சொல்வதும், ஸங்கீதம்பாடுவதும் உத்ஸாககரமான பேச்சுப் பேசுவதும் ஜனங்களின் ஹ்ருதயத்தை ஆவர்ஜனம்செய்து தர்ம தத்வத்தைப் போதிக்கும் முக்கிய ப்ரயோஜனத்தையே நோக்கமாகக் கொண்டது என்பதில் ஸந்தேகமில்லை.

ஆகவே, புராணப்ரவசனமென்பது முற்றிலும் தர்மப்ரசார கார்யத்தையே அஸ்திவாரமாகக்கொண்டது. இந்த தத்வத்தைப் பல பௌராணிகர்கள் உணர்ந்திருக்கிறார்களாயினும், இன்னும் பலர் இதைக் கவனிக்க வேண்டுமென்று இத்தீர்மானம் கேட்டுக்கொள்ளுகிறது. சாதுர்யமாயும், பிறர்மனம் நோகாமலும், நவீனகாலத்தில் ஏற்பட்டுள்ள மனப்போக்கை அநுஸரித்தும் ஜனங்களுடைய புத்தியை தர்மத்தில் நிலைக்கச்செய்ய வேண்டியது பௌராணிகர்களின் கடமையாகும். புராணங்களில் எந்தெந்த இடங்கள் ஜனங்களின் மனதைத் தற்கால நிலைமைக்கேற்றபடி ஆவர்ஜனம் செய்யக்கூடியவைகளோ அவைகளை நமது பௌராணிகர் விஸ்தாரமாக ப்ரவசனம் செய்வது நலம். அதற்கேற்றபடி தற்கால நவீனவாதங்களையும் அறிந்துகொண்டு அவைகளுக்கு ஸரியான பதில் கொடுக்கவும் இவர்கள் தங்களைத் தயாராக்கிக்கொள்வது நலம். இதற்குவேண்டிய தகவல்களை ஸநாதன ப்ரசாரகர்களிடமிருந்து அறிந்துகொள்வதும் அவச்யம். புராணங்களில் தற்கால நிலைமைக்கு ஏற்றதாயில்லாத சில விஷயங்களோ, வர்ணனைகளோ இருப்பதாக நம்மவர்களிலேயே சிலர் நினைப்பவர் இருக்கலாம். அத்தகைய இடங்களைப் பௌராணிகர்கள் வற்புறுத்தாமல்விட்டுவிடக்கூடுமானால் அப்படிச் செய்வது நல்லதே. எந்த வழியிலும் தர்மதத்வங்களை விட்டுக் கொடுக்கவேண்டிய அவச்யமே இல்லை.

ஸநாதனப்ரசாரகர்களும் நம் தலைவர்களும், புராணங்கள் நடக்குமிடங்களுக்குப்போவதை ஓர் கடமையாகக் கொள்ளவேணும். பௌராணிகர்களுக்குப் பல வழியிலும் உதவிபுரிந்து அவர்களுடன் ஒத்துழைப்பதை ஸநாதன ப்ரமுகர்கள் ஒரு முக்ய வேலையாகக்கொள்ள வேணும். இவ்வாறு செய்தால் புராணப்ரவசனம் நடக்குமிடம் ஒவ்வொன்றும் ஸநாதன தர்ம பிரசாரக் கூட்டமாக ஆகிவிடுவது நிச்சயம். இதனால் ஏற்படும் பயனும் சீக்கிரமாயும் அதிகமாயுமிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. சிரமமின்றியும், தட்டுத்தடையின்றியும் ஸநாதனப்ரசாரம் தேசம் முழுவதும் ஸ்வல்பமாக நடந்துகொண்டிருக்கும். இந்த விஷயத்தில் ஸநாதனத்தலைவர்களே முதலில் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். பௌராணிகர்களுக்கு யோஜனை சொல்லியும், அவர்களுக்கு அதிக உதவிபுரியும்படி ஜனங்களைத் தூண்டியும் உடனே இந்த ஸ்வல்பமான ப்ரசாரத்தை எங்கும் ஆரம்பித்துவிடலாம்.

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

Mukkamala, Amalapuram Taluq,
East Godavary Dt.,

காலஞ்சென்ற ஸ்ரீமான் ஜி. வி. கணேசய்யர்.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் கௌரவ ஆசிரியராக இருந்துவந்த ஸ்ரீமான் ஜி. வி. கணேசய்யர் பி. ஏ., பி. எல்., அவர்கள் 15—6—37 செவ்வாய்க்கிழமை காலை காலஞ்சென்றுவிட்ட துக்க ஸமாசாரத்தைக் குறிப்பிட மிக மிக வருந்துகிறோம். ஸ்ரீமான் அய்யர் சென்றவாரத்தில் கூட நல்ல ஆரோக்யத்துடனேயே இருந்து நமது கார்யாலயத்தில் கார்யங்களைக் கவனித்து வந்தார். 5, 6 தினங்களாகக் கடுமையான ஜ்வரம் ஏற்பட்டு எவ்வளவோ ப்ரயாஸத்துடன் சிகித்ஸைகள் செய்யப்பட்டும் ப்ரயோஜனப்படாமல்போய்விட்டது. ஸ்ரீமான் அய்யரின், ஞானம், மதச்ரத்தை முதலியவைகளைப்பற்றி நமது வாசகர்களுக்கும் மற்றவருக்கும் நாம் விவரித்துச் சொல்லவேண்டியதில்லை. இவர் ஆங்கிலக் கல்வியிலும் முக்யமாகச் சட்டவிஷயத்திலும் ஆழ்ந்த ஞானம் பெற்றவரென்று பலராலும் மதிக்கப்பட்டவர். இத்துடன் ஜர்மன், பிரெஞ்சு முதலிய பாஷைகளிலும் நல்ல பரிசயம் உள்ளவர். ஸம்ஸ்கிருத பாஷையில் சொந்த உழைப்பினால் விசேஷ ஞானம் பெற்றிருந்தார். எப்போதும் ஏராளமாகப் புஸ்தகங்களைப் படிப்பதிலும் புதிய விஷயங்களை அறிந்து அறிவை விசாலப்படுத்திக் கொள்வதிலும் விசேஷ உத்ஸாஹமுள்ளவர். படிப்புக்குத் தகுந்த விநயமும், அடக்கமும் உள்ளவர். தஞ்சையில் வக்கீலாக இருந்த காலத்திலும், இப்போது குடந்தையில் அந்தத் தொழில் நடத்திவந்ததிலும் பலருடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

இவருடைய படிப்புக்கேற்ற ஞானத்தினால் பொது உபகாரமும் பல கிடைத்திருக்கின்றன. 'ஸௌந்தர்யலஹரீ' என்ற ஸ்ரீ ஆசார்யாளுடைய க்ரந்தத்தை அருமையான தமிழில் மொழி பெயர்த்து பண்டித பாமரஸாதாரணமாகப் பெரிய உபகாரம் செய்திருக்கிறார். இத்துடன் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தைத் தமிழில் வெகு அழகாகவும் எளிதாகவும் மொழிபெயர்த்து, நமது ஆர்யதர்மத்தில் அவர் வெளியிட்டு வந்ததைப் பலரும் அறிவார்கள். அந்த மொழிபெயர்ப்பில், அவர் பத, பதார்த்தங்களின் தாத்பர்யங்களை வெகு நன்றாக விளக்கி இதரக் கிரந்தங்களிலிருந்து எடுத்த கணக்கற்ற ப்ரமாணங்களைக் கொண்டு விவரணம் செய்திருந்ததைக் கண்டு ஆச்சர்யப்படாத பண்டிதர்களில்லையெனலாம். இப்போது அவர் வெளியிட்டுவரும் 'மூகபஞ்ச சதியிலும் இவ்விதமே அநேக அபூர்வ விவரணங்களைப் பார்க்கலாம்.

ஸ்ரீ வித்யா தத்வத்தில் இவர் ஆழ்ந்த பக்தியுள்ளவர். அந்த வித்யா விஷயமாக இவர் படித்துள்ள புஸ்தகங்களும், செய்துள்ள ஆராய்ச்சிகளும் மிக அதிகம். ஸர் ஜான் உட்ராப் போன்ற ஆங்கிலேயர்கள் இந்த ஸ்ரீவித்யா மஹிமையைப் பற்றி எழுதியுள்ள புஸ்தகங்களைஎல்லாம் இவர் நன்கு பரிசீலனம்செய்தவர். ஸ்ரீ அம்பாளிடம் ஆழ்ந்தமான பக்தி செலுத்தி அநவரதம் அர்ச்சனை, ஸ்தோத்ராதிகள், செய்துவருபவர். ஸநாதன தர்ம ச்ரத்தையும் ஸதாசாரமும் நிரம்பியவர். குடந்தையில் நடக்கும் ஸநாதன இயக்கத்திற்கு இவருடைய அரிய உதவி குறைந்துவிட்டது ஒரு பெரிய துரதிருஷ்டமே. முக்கியமாக நமது ஆர்யதர்மம் பத்திரிகை ஒரு சிறந்த ஊழியனை இழந்துவிட்டது. ஸ்ரீமான் அய்யருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய மூத்த ஸஹோதரரான ஸ்ரீமான் ஜி. வி. வெங்கட்டராமய்யர் அவர்களுக்கும் நமது மனப்பூர்வமான வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஸ்ரீஜனார்த்தன அச்சுக்கூடமும், ஆர்யதர்மம் கார்யாலயமும் அன்று மூடப்பட்டன.

கனம் சாஸ்திரியார் உலகப்போக்கை அநுஸரிக்கிறாரா?

உலகப்போக்கு நிச்சயப்பட்டிருக்கிறதா?

ஒரு விமர்சனம்.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் மைஸூரில் நடந்த பண்டித கான்பரன்ஸில் தலைமை வகித்து மனம்போனபடி பேசியிருப்பதைப் பலரும் படித்திருக்கலாம். அவர் நமது பண்டிதர்களை அலக்ஷியம் செய்து பேசியதுடன் நிற்காமல் நமது மதிப்பிற்கு இடமான மதாசாரியஸ்தானங்களையும் ஏளனம்செய்து பேசியிருப்பது பெருங்குற்றமாக இருக்கிறது. நமது மடாதிபதிகள் காலதேசங்களுக்கு ஏற்றபடி உலகப்போக்கை அறிந்து நடக்காமல் கர்நாடக வழியிலேயே காலம் கழித்து வருவதாகக் குற்றம் சாட்டுகிறார். பற்பல மனோபாவம் படைத்த பொது ஜனங்களுடனும் சிஷ்யர்களுடனும் நெருங்கிப்பழகி வரும் மடாதிபதிகளுக்குத் தற்போதிய உலகப்போக்கு தெரியாதென்று நினைக்கும் சாஸ்திரியாரின் போக்குத்தான் கர்நாடகமாயிருக்கிறதென்று நாம் திருப்பிக்கூறத் தடையில்லை. மடாதிபதிகளுக்கு உலகப் போக்குத் தெரியாதென்றால் கனம் சாஸ்திரியார் போன்றவர்களுக்கும் அது உண்மையாகத் தெரியாது தான்.

மடாதிபதிகளையும், பண்டிதர்களையும், ஸநாதனதர்மிகளான வேறு பலரையும் "உலகப்போக்கை அறியாதவர்கள்" என்று தற்கால சீர்திருத்தவாதிகள் எண்ணி நகையாடுவது எங்கும் ஸாதாரணமாகக் காணப்படுகிறது. இது நவீன சீர்திருத்தக்காரர்களுடைய அறியாமையையும் அஹம்பாவத்தையும் வெளிப்படுத்துகிறதேயல்லது ஒரு சிறிதாவது இந்த அபத்தப்பேச்சுக்கு அர்த்தமிருக்கிறதாவென்று நாம் ஆராய விரும்புகிறோம்.

இப்போது கனம் சாஸ்திரியார் போன்றவர்கள் குறிப்பிடும் 'உலகப்போக்கு' என்பது என்ன? அது எத்தகைய ஸ்வரூபமுள்ளது? உலகம் முழுவதும் எல்லா நாகரிக மனிதர்களும் ஒரேமாதிரியாக அநுஸரிக்கும்படி இந்த உலகப்போக்கு ஒருவழியில் அமைந்திருக்கிறதா? கனம் சாஸ்திரியார் போன்றவர்கள் அது இன்னதுதான் என்று நிர்ணயித்து விட்டார்களா? அபிப்ராய பேதமின்றி இதில் ஒரு முடிவு ஏற்பட்டிருக்கிறதா? உலக ஜனக்ஷேமார்த்தமாக இன்னவழிதான் சிறந்ததென்று ஒற்றுமையான அபிப்ராயம் எங்கேயாவது எவ்விஷயத்திலாவது இருப்பதாக கனம்சாஸ்திரியார் காட்டமுடியுமா? இந்தியாவில் இருக்கும் லக்ஷக்கணக்கானவர்கள் ஒவ்வொருவரும் தம் தம் மனதில் தோன்றுவதுதான் உலகக்ஷேமகரமென்றும் அதைத்தான் எல்லோரும் பின்பற்றவேண்டுமென்றும் நினைக்கிறார்களே! இம்மாதிரி ஆயிரக்கணக்கான சீர்திருத்தம் வெளிவந்தவண்ணமாயிருக்கின்றன. இவைகளில் எது உலகக்ஷேமகரமான உலகப்போக்கென்று சாஸ்திரியார் சொல்லுவாரா? உலகக்ஷேமகரமான கார்யமென்னவென்பதில் தற்போது நவீனர்களுள் தோன்றியிருக்கும் குழப்பத்தைப் போல் இதற்குமுன் நம்தேசத்தில் ஒருகாலத்திலும் இவ்வித நிலை ஏற்பட்டிருக்க நியாயமில்லை. தலைக்குத் தலைதர்மம் பேசுகிறார்கள். எல்லோரும் தம்வழியே சிறந்ததென்று பறைசாற்றுகிறார்கள். இவ்வித தான்தோன்றியான நிலைமை ஏற்பட்டிருக்குமிக்காலத்தில் நமது மடாதிபதிகளும் பண்டிதர்களும் எவருடைய அபிப்ராயத்தை அநுஸரித்து முற்போக்காளர்களாக ஆவது? இதை சாஸ்திரியார் முதலில் நிர்த்தாரணம் செய்யட்டும்.

ராஜீய விஷயத்திலோ, ஸமூக விஷயத்திலோ இப்போது எங்காவது ஒற்றுமையான எண்ணமோ கார்யமோ இருக்கிறதா? ஜனநாயகமே சிறந்ததென்று சில மேதாவிகள் நினைத்தால், ஏகதேசசாதிகாரமேசிறந்ததென்று பேசுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். எல்லாவற்றையும் விட பொதுவுடைமையே உயர்ந்ததென்று வேறுசிலர் நினைக்கிறார்கள். இந்தக் கொள்கைகளை முன்னிட்டு பெருங்குழப்பம் உலகில்தோன்றியிருக்கவில்லையா? இதில் உலகப்போக்கு நிச்சயப்பட்டு விட்டதா? இந்தியாவில், காங்கிரஸ், மிதவாதிபோன்ற ராஜீயக்கொள்கைகள் பல இருக்கின்றனவே. இவைகளில் எதை அநுஸரிப்பது? காங்கிரஸைவிட, மிதவாதமே சிறந்ததென்று சாஸ்திரியார் ஏன் நம்பவேண்டும்? இந்தியா முழுவதும் காங்கிரஸுக்கு விசேஷ செல்வாக்கு இருப்பது தெரிந்தும் கனம் சாஸ்திரியார் உலகப்போக்கை அநுசரித்து காங்கிரஸின் வழியை ஏன் பின்பற்றாமல் நிற்கிறார்? உலகப்போக்கை அநுசரித்து நடக்கவேண்டும் என்று நமக்குப் போதிக்க முன்வந்த சாஸ்திரியார் அபேதவாதம், [illegible] மறுப்பு வரி மறுப்பு போன்ற முற்போக்கான கொள்கையை ஏன் அநுசரிக்கவில்லை என்று நாம் கேட்கிறோம். சாஸ்திரியாரை கர்நாடக மனிதரென்றும் உலகப்போக்கை அநுசரியாதவரென்றும், காங்கிரஸ் வாதிகள் பரிஹஸிக்கவில்லையா? இவையெல்லாம் முற்போக்கல்ல என்றோ, அனர்த்தம் விளைவிக்குமென்றோ, இவைகளை அநுசரிக்கவேண்டியதில்லையென்றோ சாஸ்திரியார் நினைப்பாரானால் அதே காரணத்தால் தற்கால உலகப்போக்கை தார்மிகர்களும் கைப்பற்ற இஷ்டமில்லாமல் இருப்பதில் என்ன தவறு?

ராஜீய விஷயம் இப்படியிருக்க, ஸமூகவிஷயத்திலும் உடை, உடுத்தல், உணவுபோன்ற எந்த ஒருவிஷயத்திலாவது உலகில் ஒருமித்த கொள்கையுண்டா? நவீன நாகரீகப்படி ஸ்திரீகள் ஸகல அங்கங்களையும் திறந்துவைத்து உடைதரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த முறைதான் சிறந்ததென அவர்கள் நினைக்கிறார்கள். அதிகமேன்? தற்போதிய உலகப்போக்கில் நிர்வாணமாயிருப்பதுகூட ஒருநாகரிகமாகிவிட்டது. நிர்வாண இயக்கத்தினர் ஸங்கம் கூடி, பத்திரிகையில் எழுதி தங்களுடைய கொள்கையையே பொதுஜனங்கள் பின்பற்றவேண்டுமென்று பிரசாரம் செய்கிறார்கள். கனம் சாஸ்திரியார் இந்த உலகப்போக்கை நாமும் ஆசரிக்கவேண்டுமென்கிறாரோ? விவாஹமேவேண்டாமென்று நவீன காலப்போக்கு இருக்கிறது. விவாஹரத்து உரிமை அவசியமென்று ஒருசாரார் நினைக்கிறார்கள். மற்றொருசாரார் அது அசிங்கமென்கிறார்கள். பிரஜா உற்பத்திக் கட்டுப்பாடு, கர்ப்பத்தடைமுதலிய நவீனங்களிலும் கணக்கற்ற கக்ஷியும் அபிப்பிராய பேதமும் குழப்பமும் இருப்பதைப் பார்க்கிறோம். இப்படி எதைத் தொட்டாலும் உறுதியான நிலையில்லாமல் பலத்த குழப்பமே எங்கும் காணப்படுகிறது. அந்தந்த கக்ஷியைச் சேர்ந்தவர்கள் தங்கள் அபிப்பிராயமே உயர்ந்ததென்றும்மற்றவை உலகக்ஷேமத்திற்குதவாதவையென்றும் நிச்சயமாகப் பேசுகிறார்கள். இவ்வளவு ஆபாஸமாகத் தலைகாலில்லாமல் நவீன நாகரீகம் உருவற்றுக் கிடப்பது ப்ரத்யக்ஷமாயிருக்கையில் கனம் சாஸ்திரியார் மேற்சொன்ன அவ்யவஸ்தையான உலகப்போக்கை நமது பண்டிதர்களும் மடாதிபதிகளும் அநுஸரித்து நடக்கவேண்டுமென்று சொல்வதில் அர்த்தமிருக்கிறதா? கனம் சாஸ்திரியார், ஒன்றைக்குறிப்பாகக் காட்டி 'இதுதான் உலகப்போக்கு' என்று நிர்ணயித்துச் சொல்லுவாரா? அப்படிச் சொல்லமுடியாமல் இருக்கையில் வெறும் வாயளவில் செப்பிடு வித்தைசெய்து, பேசுவது வெறுக்கத்தக்கதேயாகும்.

நமது மடாதிபதிகளும், பண்டிதர்களும், சாஸ்திரியார் நினைப்பது போல் உலகப்போக்கை அறியாதவர்களன்று. சாஸ்திரியார்போன்றவர்கள் தீர்க்காலோசனையின்றி வழிதவறி தேசத்திற்கு இழைத்துவரும்தீமைகளை நமது பண்டிதர்கள் நன்கு அறிந்தவர்களே! இந்த துராசாரங்களால்தேசக்ஷேமம் ஏற்படாதென்றும், தேசம் உருத்தெரியாமல் அழிந்துவிடுமென்றும் நினைத்தே நம்மவர்கள் நவீன உலகப்போக்கை விரும்பாததுடன் அதை எதிர்க்கவும் முற்பட்டிருக்கிறார்கள். இதில் சாஸ்திரியாருக்கு வருத்தமும், பயமும் இருப்பதையேதான் அவருடைய வார்த்தை வெளிப்படுத்துகிறது. மடாதிபதிகளும் பண்டிதர்களும் மிகுந்த படிப்பாளிகள், அதனால் விசாலமான மனப்போக்குப் படைத்தவர்கள். ஜனங்களுடைய ஹிதாஹிதங்களை திருத்தக்காரரைவிட நன்கு அறிந்தவர்கள். அத்தகைய பெரியோர்களுக்கு இக்காலத்திய சீர்திருத்தக்கார சுண்டைக்காயர்கள் உபதேசிகளாகப் புறப்படுவதும், தங்கள் வார்த்தைப்படியே நமது பெரியோர்கள் நடக்கவேண்டுமென்று கட்டளையிடுவதும், எவ்வளவு கேவலம்? தங்கள்தான் ப்ருஹஸ்பதிகளென்றும் தாங்கள் சொல்லும் வழிதான் தேசக்ஷேமகரமென்று இந்த முரடர்கள் நினைப்பது எவ்வளவு பேதமை? இவர்களுடைய விபரீதக் கொள்கையால் இன்றுவரை நம் தேசத்திற்குக் கிடைத்த நன்மை என்ன? ஒன்றாவது விரல் விட்டுச் சொல்லமுடியுமா? அவ்யவஸ்தையும், குழப்பமும், துராசாரமும், தரித்ர நிலைமையும், சீக்கிர மரணமும்தான் இந்த நவீனக் கொள்கையால் கிடைத்த பலனென்பதில் தடையில்லை. ஆதலால்தான் நமது மடாதிபதிகளும், பண்டிதர்களும் தங்கள் மதத்தை காத்து அதன் மூலம் தேசக்ஷேமத்தை உண்டுபண்ண முயற்சிக்கிறார்களென்பதை கனம் சாஸ்திரியார் அறிவாராக. இவர் காட்டும் உலகப்போக்கு நம்மவர்களுக்கு வேண்டியதேயில்லை. உலகமறிந்தோன்.

ராஜீய நிலைமை.

சில மாகாணங்களில் காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவி ஏற்பதற்கான பக்குவ நிலைமை தற்போது ஏற்பட்டிருப்பதாக நினைக்கப்படுகிறது. பார்லிமெண்டில் இதைப்பற்றி சில தினங்களுக்கு முன் நடந்த விவாதத்தில் உதவி இந்தியா மந்திரி பேசுகையில் காங்கிரஸ்காரர்களுடன் கவர்னர்கள் கலந்து பேசுவதற்கான ஸந்தர்ப்பம் ஏற்படுமென்றும் கூறினார். சட்டஸபைகளை சீக்கிரம் கூட்டுவதற்கான ஏற்பாட்டைக்குறித்து வைஸ்ராய் கவர்னர்களுடன் கலந்து பேசிவருகிறதாயும் அவர் குறிப்பிட்டார். ராஜிநாமாவுக்கும் நீக்குதலுக்கும் அதிக வித்யாஸமில்லை ததாலும், காங்கிரஸ் கோரிக்கைக்கு ஸர்க்கார் பெரும்பாலும் இணங்கிவிட்டதாலும் உடனே காங்கிரஸ்காரர் மந்திரி பதவி ஏற்பது அவச்யமென்று ஹிந்து, சுதேசமித்திரன் பத்திரிகைகள் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கின்றன. இந்த நிலைமையை யோசிக்க சீக்கிரம் கார்யக்கமிட்டி கூடுமாம். ஸ்ரீமான் நேரு மட்டும் உத்யோக மேற்பதை எதிர்த்துப்பேசியிருக்கிறார்.

தென்னிந்திய பிராம்மண ஸம்மேளனம்.

பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் S. ஸ்ரீனிவாஸய்யர் B.A., B.L., அட்வகேட், அவர்களின் அக்கிராஸன பிரசங்கம்.

(சென்றவார தொடர்ச்சி)

ஏதோ பெரிய தீங்கு சமூகத்தில் ஏற்பட்டு விட்டதுபோல் பாவனைசெய்துகொண்டு சாஸ்திர ஸம்மதமில்லாத காரியங்களில் அனாவசியமான சண்டை சச்சரவுகளுக்கும் கக்ஷிப்ரதிகக்ஷிகளுக்கும் ஹேதுவாக இருக்கிற இந்த விஷயங்களை மிகவும் வற்புறுத்தாமல் இருப்பது நலமென்று தோன்றுகிறது. தீண்டாதாரிடையே பல வித்யாசங்கள் உண்டு. ஒருவருக்கொருவர் கொள்வன கொடுப்பன கிடையாது. தவிரவும், கிராமங்களில் இருப்பவர்கள் நகரங்களில் இருப்பவர்களுடன் சம்பந்தம்செய்ய இஷ்டப்படுவது இல்லை. பட்டணங்களில் இருப்பவர்கள் கிராமங்களிலிருப்பவர்களை ஒத்தை வேஷ்டிக்காரர்கள், நாகரிகமில்லாதவர்கள் என்று ஏளனம் செய்வதும் கிராமங்களிலுள்ளவர்கள் நகரங்களிலுள்ளவர்களை பலவிதத்திலும் தூஷணைகள் செய்வதுமாக இருந்துவருகிறது. இவைகளையெல்லாம் திடீரென்று ஒரே காலத்தில் மாற்ற யாராலும் முடியாத காரியம். தீண்டாதார்களின் வாழ்க்கைக்கு யாதொரு குறைவும் கிடையாது. அவர்களுக்கு வேண்டிய செளகரியங்களையெல்லாம் கிராம பிரமுகர்கள் செய்துவருகிறார்கள். அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டிய காரியங்கள் படிப்படியாய் நடந்து வருகின்றன. ஒவ்வொரு படியாகத்தான் மேல் படியையடைய வேண்டும். நமது ஆலயங்கள் ரிஷிப்ரோக்தமாய் ஆகம சாஸ்திர விதிகளின்படி ஏற்படுத்தப்பட்டவைகள். அவைகளில் தீண்டாதார்கள் பிரவேசிக்கக் கூடாதென்று வெகு காலமாக பழக்கத்தில் இருந்துவருகிறது. அதை திடீரென்று மாற்றுவது முடியாத காரியம். குருவாயூரில் வேண்டிய பிரயத்னம் நடந்தது. அது மத சம்பந்தமில்லை என்று சொல்லிப் பார்த்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. சமீப காலத்தில் திருவாங்கூர் மகாராஜா தன்னுடைய திவானின் பேச்சைக் கேட்டுக்கொண்டு தீண்டாதார் ஆலயப்பிரவேசம் செய்யும்படி போட்ட உத்திரவானது அந்த ஸமஸ்தானத்திலும் மற்றவிடங்களிலும் பல்வேறு அபிப்பிராயங்களையும் வீண் சச்சரவுகளையும் கிளப்பிவிட்டிருக்கிறது. திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள கோயில்களில் பூஜை செய்வோர்களை தங்கள் கோயில்களில் அநுமதிக்கக் கூடாதென்று கொச்சி மஹாராஜா உத்திரவு பிறப்பித்துவிட்டார். இப்படிப்பட்ட அபிப்பிராய பேதமும் ஒருவருக்கொருவர் மனஸ்தாபம் ஏற்படக்கூடியதான காரியம் இரு ஸம்ஸ்தானங்களுக்குள் ஏற்பட்டிருப்பதானது வருந்தத்தக்க விஷயம். இந்தியாவிலுள்ள ஸநாதனிகள் எல்லாரும் திருவாங்கூர் மஹாராஜாவின் செய்கையை கண்டித்தும் கொச்சி மஹாராஜாவின் செய்கையை ஆதரித்தும் வருகிறார்கள். சில தினங்களுக்கு முன் கொச்சி மஹாராஜாவின் பெருமையைப் பாராட்டி தஞ்சைஜில்லா பிராம்மண சபையிலிருந்து ஒரு பெருத்த ஸநாதனிகள் கூட்டத்தில் நிறைவேறின தீர்மானத்தை யாருமறிந்திருப்பீர்கள். இதிலிருந்து திருவாங்கூர் மஹாராஜாவும் தன்னுடைய கொள்கையை சீக்கிரத்தில் மாற்றிவிடுவார் என்று ஸநாதனிகள் நினைக்க இடமுண்டு.

சட்டஸபைகளில் தேசீய கக்ஷிக்காரர்கள் எல்லோரும் நேற்று கிளம்பின ஜனநாயக கக்ஷி உள்பட, நமது மதத்திற்கும் ஆசாரத்திற்கும் விரோதமான மசோதாக்களை எப்பொழுதும் கொண்டுவருவதற்கு தயாராக இருக்கிறார்கள். M. C. ராஜா தீண்டாமை விலக்குச் சட்டம் கொண்டுவந்துவிடுவதாக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார். ஸநாதனிகள் தூங்காமல், கிராமங்கள் தோறும் சபைகள் ஏற்படுத்தி கூட்டங்கள் கூட்டி அப்படிப்பட்ட சட்டங்கள் ஏற்படாமல் இருப்பதற்குவேண்டிய பிரசாரங்கள் செய்யவேண்டும்.

சாரதா சட்டத்துக்கு இன்னும் பலமான திருத்த மசோதாக்கள் வந்துவிடும். பிரஞ்ச் இலாகாக்களிலும் மேற்கண்ட சட்டம்போல் ஒன்று ஏற்படுத்திவிடவேண்டுமென்று பெரு முயற்சி நடந்துவருகிறது. இவைகளைத் தடுக்க வேண்டியது ஸநாதனிகளின் கடமை. ஸநாதனிகள் எலெக்ஷன்மூலமாக சட்டசபைகளுக்கு வரவில்லையே என்று ஒருவித ஏக்கம் இருந்தாலும், இப்பொழுது அவர்களுடைய கிளர்ச்சி எங்கும் ஏற்பட்டிருப்பதை தூங்கவிடாமல் ஒழுங்காக நடத்திவந்தால் சீர்திருத்தக்காரர்களுக்கு அதுவே ஒரு பெரிய முட்டுக்கட்டையாக இருக்குமென்பதில் தடை இல்லை. இந்த சீர்திருத்தக்காரர்களை ஸ்வாமி விவேகானந்தர் "Mushtached Babies" அதாவது மீசை முளைத்த குழந்தைகள் என்று சொல்லியிருக்கிறார். அது பொய் அல்ல. மநு, யாக்ஞவல்க்யர் முதலான தீர்க்கதரிசிகளான ஸ்மிருதிக்காரர்கள் சொல்லுவது சரியல்ல, தாங்கள் சொல்லுவது தான் சரியென்று சீர்திருத்தக்காரர்கள் பறையறைவித்து பத்திரிகைகாரர்களின் உதவியால் தங்கள் கொள்கைகளை நிறைவேற்ற முயலுகிறார்கள். இதை அப்போதைக்கப்போது தடுத்துவிட்டால் இவர்களுடைய சீர்திருத்தத் தீயானது பரவாமல் நிறுத்திவிடலாம்.

நமது சிறுவர்களுக்கு ஓர் எச்சரிக்கை: வருங்கால பிராம்மண சமூஹத்தின் பெருமை அவர்கள் கையில் இருக்கிறது. அவர்கள் ஆங்கிலம் படித்தாலும் ஸம்ஸ்கிருத பாஷையை மறவாமல் உபநயனமானதும் கொஞ்சகாலமாவது வேதாத்யயனம் செய்து திரிகால ஸந்தியாவந்தனத்தை ஒழுங்காக செய்துகொண்டு பெற்றோர்களிடத்திலும், ஆசார்யாளிடத்திலும் மரியாதையாய் நடந்துகொண்டும், தன் நடத்தையை ஒழுங்கான முறையில் செலுத்திக்கொண்டும் பெரியோர்களுடைய ஸத்ஸஹவாஸம் செய்துகொண்டும் வந்தால் மேன்மேலும் பரீக்ஷைகளில் முதலாவதாக தேறுவதோடு பெரிய உத்தியோகங்களும் கிடைக்கும். வயது ஆக ஆக நம்முடைய தர்மங்களையும் அநுஷ்டித்துக்கொண்டு லோகத்திற்கு க்ஷேமகரமான காரியங்களையும் செய்துகொண்டு ப்ராம்மண்யத்தையும் காப்பாற்றுவார்கள்.

நமது ஸ்திரீகளும் இப்பொழுது அவர்கள் நடந்து வரும் வழிகளிலிருந்து மாற்றப்பட வேண்டும். குடும்பத்தை வகிக்கும்படியான படிப்பு அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். அவர்களுடைய ஸ்திரீ லக்ஷணத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடாது. ஆடவர்கள் போல் அவர்களும் படித்து உத்தியோகங்களுக்கு ஆசைப்பட்டு வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் ஜாஸ்திப் படுத்தக்கூடாது. ஆண்பிள்ளைகளோடு சேர்ந்து மேல் வகுப்புகளில் படிக்கிற வழக்கத்தை உடனே நிறுத்த வேண்டும். அதனால் உண்டாகும் கெடுதல்களை இதர தேசங்களில் பார்க்கிறோம். மேல் நாட்டிலுள்ள அறிவில் சிறந்த பல பெரியோர்கள் நமது நாகரிகம் நடை, உடை, பாவனைகளை சிறந்ததென்று தெரிவிக்கிற காலத்தில் நாம் மூடத்தனமாய் அவர்களுடைய நடை, உடை பாவனைகளை அநுஷ்டித்து வருகிறோம். இதை முற்றிலும் நிறுத்திவிடவேண்டும். நமது புராணங்களிலுள்ள பல பதிவ்ரதா ரத்னங்களின் சரித்திரங்களை அவர்களுக்குப் புகட்டவேண்டும். ஒரு சீதாதேவி தமயந்தி, சாவித்ரி, அநுசூயை, முதலானவர்களின் சரித்திரத்தை பிரபலமாக தமிழில் எழுதி நம் ஸ்திரீகள் படிக்கும்படி செய்ய வேணும்.

இப்பொழுது கன்னியாகுமாரி முதல் ஹிமவத்பர்வத பரியந்தம் ஸநாதனதர்மக் கிளர்ச்சி ஏற்பட்டு இருப்பதால் அவர்களுக்கு ஒரு விதமான பலமும் இல்லை. லோகம் முழுவதும் ஸுகமாக இருக்கவேண்டுமென்கிற பிரார்த்தனை பிராம்மணர்களுக்கு இருக்கும் வரையில் அவர்களுக்கும் ஒரு கெடுதலும் வராது. நம்முடைய தபஸ்களும் நாளுக்கு நாள் விருத்தியாக வேண்டும். பிராம்மணர்களில் சிலர் எவ்வளவு கெட்டுப்போனாலும் அநேகர் வேதசாஸ்திரம் கற்ற ஸத்பிராம்மணர்களாக இருக்கிற படியால் பிராம்மண்யம் ஒருநாளும் அழிந்துவிடாது. எங்கும் நிறைந்த ஈசுவரன் காப்பாற்றுவார்.

நான் மேற்சொல்லிய பிரசார வேலைக்கு தினசரிப் பத்திரிகைகள் இருந்தால் நலம். இப்பொழுது தேசீய தினசரிப் பத்திரிகைகள் ஸநாதநிகளிடம் ஸ்நேகபான்மை பாராட்டுகிறவைகளாக இல்லை. ஸநாதநிகளின் கொள்கைக்கு எதிர் பிரசாரமே செய்துகொண்டு சீர்திருத்தக்காரர்களை ஆதரிக்கின்றன. ஸநாதநிகளை ஆதரிக்கும் பத்திரிகைகளாக இருக்கும் வாரப்பத்திரிகைகளான ஆரியதர்மம், தர்மராஜ்யா, மாதப்பத்திரிகையான மார்க்கபந்து இவைகள் மிகவும் நம்முடைய பிரசாரவேலைக்கு உபயோகமாக உள்ளன. என்பதை யாவரும் அறிவார்கள். இவைகளுக்கு ஆதரவு இப்பொழுது குறைவாக இருக்கிறது. இவைகள் மேல் மேல் விருத்தியாகி தினசரிப் பத்திரிகைகளாக ஆவதற்கு வேண்டிய திரவிய சகாயம் நாம் எல்லோரும் சேர்த்து செய்தால் நாம் அவலம்பித்து இருக்கிற காரியம் செவ்வனே கைகூடும் என்பதில் சந்தேகம் இல்லை. அத்தகைய உதவிசெய்யும்படி நான் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிராம்மணோத்தமர்களே! ஏதோ என் சிறு புத்திக்குப்பட்ட அளவு இந்த பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறேன். எனக்கு அவகாசக் குறைவினாலும் சரீரநிலைக்குறைவினாலும், விளம்பரமாக சொல்லமுடியவில்லை. நாம் ஒத்துழைத்து நம்முடைய ஸ்வராஜ்ய தர்மத்தைப் பாதுகாத்து लोकास्समस्तास्सुखिनो भवन्तु என்கிற ப்ராசீனமான கொள்கையை மறவாமல் நடந்துகொண்டு வந்தால் பிராமணர்கள் ஸ்ரேயஸ்ஸை அடைவதோடு மற்றவர்களும் க்ஷேமத்தை அடைவார்கள். "நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை"

வியாபாரக்குறிகளில் ஸ்வாமி படங்கள்.

வியாபார ஸங்கத்தின் கண்டனம்.

இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் சாக்குகளிலோ, அல்லது இங்கு உற்பத்தி செய்யப்படும் சாக்குகளிலோ வியாபாரக்குறியாக ஹிந்து தைவங்களின் உருவங்களை அமைக்கக்கூடாதென்று சட்ட மூலமான தடை ஏற்படுத்தவேண்டுமென்று இந்திய வியாபார ஸங்கமானது பம்பாய் கவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது.

Registered No. M. 2913.

The Arya Dharmam.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 17th JUNE 1937. [No 23

THE NEED FOR A CONSERVATIVE PARTY.

(By Mr. N. Sambasiva Iyer.)

With reference to your memorandum dated 27-5-1937, I have great pleasure in sending herewith my considered opinion on the resolutions passed by the Fourth Indian Brahmin Conference and the statement issued along with it.

"The very fact that the Sanatanist stand point does not appeal to the majority of the Hindu public is proof of its greatness and unique character. It goes without saying that the Sanatanists should unite as a strong conservative party at this moment. That the conservative view is always the same view and one that will ultimately triumph has been well proved by the recent abdication of Edward VIII, an event which recently happened in the most modern and highly civilized country. That the royal blood should be zealously guarded and preserved was the basic stone upon which the strong structure of the forced abdication was built by the Prime Minister. Who is there that would not advise the very strong attitude taken by the Prime Minister, when he refused to budge an inch and would not allow the Sovereign to exercise his fundamental birth right of choosing his own wife, and how severely the most independent Sovereign that adorned the throne of England was made to feel that he had no other alternative but to sacrifice his Kingdom for marrying the woman he loved. That proves beyond doubt the strong conservative feeling that is lying dormant in the minds of the English people and how forcefully it begins to work when the occasion arises. Are we not bound to display the same conservative spirit when our women are sought to be thrown down from the high ethical pedestal by the introduction of the Sarda Act. Is not the Sarda Act interfering with the very frame-work of our society which had hitherto been preserved by our women who was the Queen in the family and a goddess to the public? Had not the period between marriage and consummation devised by the great Smrithi-Karthas of the Hindu code the high object of preserving the mind of the girl before it got scattered and distracted and focussing it upon the husband and the other members of the family? Does not experience show that the girl who gets introduced into a family after the age of 12 has very little love to bestow upon the members of the family, for the mind has already lost its softness and coolness by the varied ramblings in this hot clime? If we would only compare the ancient India with its beautiful joint family system embellished by the high principles of Varnashrama Dharma with the modern individualistic tendencies poisoned by the contact with the bad points alone of the Western civilization, are we not compelled to shed tears of blood when we gaze at the high pedestal wherefrom we have fallen and with a heaving sigh we fear we may not be able to reach again. The joint family system was keeping the families strong and buoyant and the nation brave and cheerful. The modern political wave is throwing to the winds the greatness of our ancient civilization which was built upon Dharma as its foundation. Till now the structure alone was being sought to be demolished but now attempts are being made with gigantic strength to dig the foundation itself. Though we may be laughed at by people who may not be able to see eye to eye with us, it is the imperative duty of the Sanatanists to range themselves into a strong conservative party and proclaim from the house tops that our ancient civilization was built not by ordinary feeble persons like us but by experts who had divine vision and, if we want to preserve its greatness it, we should be careful to avoid digging at the foundation and make as strong an effort as possible to reconstruct the ancient structure in its ethical form. Socialism can never take root in this land which has built its civilization on the law of Karma. However much attempts may be made to destroy our ethical fabric, it is a matter of unshakeable belief with us that the fabric of Sanatana Dharma can never fail and at the proper moment the Lord will keep his promise that he will himself appear at the proper moment when Dharma looses strength and Adharma begins to raise its head. Let us realise that we are responsible only so far as we have to do our duty and let us not be over-awed by the hugeness of the modern wave which will be nothing to His all-embracing hand when He begins to raise it. Let us feel proud to be called the conservative woollen bag which will shine with golden fringe when softly touched by the Lord when He emerges from his temporary Yoga Nidra. We should unite to make ourselves strong and felt. We are one with the Congress in that we want Swaraj to reconstruct our fallen structure upon Dharma. We want Swaraj only as a means to an end and not as an end by itself. But we are unable to co-operate with the Congress as we differ fundamentally with some of its creeds. It will be really humiliating to co-operate with the Government which is only trying to divide and rule and ever attempting to keep alive its own domination and our own subjection. We should therefore range ourselves into a separate conservative troup and make ourselves as much felt as possible on both sides.

Religion, Riches and Poverty.

Religion pools wealth in the hands of the rich. It irrigates the poor through permanent channels from the rich.

The rich feel religion a hindrance to their keeping all to themselves. The poor are taught to hate religion, because it fences wealth from trespass.

By removing religion, the source of wealth itself will be dried up.

The rich must know that ownership is rooted in a religious dogma, from which grew the social convention and the legal sanction against taking away of property.

If there is no religion, the strong will take from the weak. Religion alone can tame the strong, and teach the rich to share with the poor.

THE RIGHT HON'BLE Mr. SASTRI AND THE PANDITS.

(Mr. B. S. Vydianatha Aiyar.)

In his very interesting and thought provoking address to the Pandits of Mysore Mr. Srinivasa Sastri good humouredly pointed out to them several of their defects and the points where they seemed to differ from other modern teachers with whom they claimed equality with regard to status and emoluments.

But his wholesale condemnation of the whole Pandit class, who are the preservers of the ancient Sanskrit learning as impractical men without character or knowledge, without proper sense of values and incapable of achieving anything useful, will not be accepted as fair or just by any man of knowledge either European or Indian. Mr. Sastriar must realise that from remote antiquity, plain living, high thinking, voluntary poverty and intense devotion to acquisition of knowledge ethical and spiritual culture and practices were the aims and objects of the Pandit class. Brahmin Pandits of old and now are mostly poor not on account of their incompetency, but on account of the restrictions voluntarily placed by themselves on the methods of acquisition of wealth and on account of the devotion of the greater part of their time in acquiring things of greater essential value even at the sacrifice of material and personal comforts. But however, whenever occasions required, the Pandits never lagged behind

and have always shown their mettle in all walks of life.

The Great Pandit Sayanacharya, the famous commentator of all the Vedas, without any Western course of education had bravely assumed the command of the armies of his king, fought several battles successfully, won victory after victory against fierce disciplined mohamedan hordes and brought extensive dominions and glory to his King Bhukka Raya who was made an emperor. He also founded and built the great City of Vizianagar in honour of the great victories won by him for his King. The Great Mauryan Empire of Chandragupta was founded and established under the guidance of the great warrior, statesman, politician, and Pandit Chanakya also known as Kautilya, the author of the famous Arthasastra (Political and economic science.) It was during the 11th Century A. D. that the great Sri Harsha, the Brahmin Emperor of Kashmere ruled over the Indian Empire and performed great Aswamedha (Horse Sacrifice) for the last time. There were several such Empires and Kingdoms, won and established by the Military genius of the Brahmin warriors, wisely ruled by the political wisdom of the Brahmin administrators and statesmen in accordance with their old musty traditional principles of Varnasrama Dharma of the pre-historic antiquity.

From the very earliest times, the Hindu States in India maintained concord among all classes and different nationalities who had been coming and settling in large numbers from the various parts of the world for purposes of trade, commerce, travel, education &c., and complete harmony among the diverse elements, races, sects, creeds, castes and religions was scrupulously maintained. Contemporary historians and travellers from various countries such as Greece, Roman Empire, China, Arabia, Egypt & c will bear ample testimony to the health, wealth, peace, prosperity and culture of the people and the wisdom, ability, strength and skill of the rulers and their devotion to the interests of their subjects. Even today a disciplined Pandit, well versed in his lore will be found quite competent with very little extra training to undertake any responsibility entrusted to him and discharge his duties with efficiency and skill, whether it be in the executive, judicial, financial, military or any other department.

As regards the statement of Mr. Sastri that the Pandit's learning was divorced from science and that they are very old and out of the date, the Pandits would like to point out that the principles and laws embodied in their sastras are as eternal as the physical, chemical, biological and other scientific laws which were always there even before any one discovered them and taught them for the benefit of humanity. The great Oriental Scholars like Professor Max Muller and others have recorded that "Religion and science went hand in hand in ancient India. While religious tenets of other nation have been proved to be in conflict with the teachings of modern science, the Hindu Sanatana Religion alone stood vindicated and supported by science."

SAPTA SARGA PARAYANA.

(Mr. N. K. Venkatesam.)

Mr. P. P. S. Sastri has argued in "The Hindu" of 10—4—37, that because the Sundara Kanda in the Ramayana of the Sage Valmiki cannot be completed in nine days at the rate of seven chapters a day, as the Sundara Kanda has sixty eight chapters, the Sundara Kanda should have had originally only 63 chapters. He says he is devising means to edit the Sundara Kanda in 63 chapters to be suitable for one course of parayana in nine days. He gives other grounds also for his position. We know he has been engaged in editing critical texts of our Epics etc. It appears to me that the arguments of Mr. Sastri are not based on a correct reading of the method and the purpose of the Sapta Sarga Parayana theory. The Sapta Sarga Parayana of the Sundara Kanda alone is only on the analogy of the Sapta Sarga Parayana of the whole Ramayana. For convenience' sake, in these days of hurry and desire for quick fruits, we think that the Sapta Sarga Parayana of the Sundara Kanda is prescribed in the place of that of the whole Ramayana. If the Sapta Sarga Parayana of the Sundara Kanda has to be made owing to our inability to do the Sapta Sarga Parayana of the whole Ramayana, it does take and it must take 68 days for doing the Sapta Sarga Parayana of the 68 Sargas. The mystic value is in reading the 68 Sargas for 68 days at the rate of seven each day. It works out thus:—

7 x 9, 7 x 10, 7 x 10,
7 x 9, 7 x 10, 7 x 10,
7 x 10.

68 days.

For the Sapta Sarga Parayana of the Ramayana, only six Kandas, ending with the Pattabhisheka, (the Uttara Kanda not being intended for parayana by a householder for obvious reasons) the rule is:—

7 sargas a day,	7 times,	in 537 days.		
8	do.	8	do.	do.
10	do.	10	do.	do.
13	do.	13	do.	do.
25	do.	25	do.	do.
40	do.	50	do.	do.
5	do.	5	do.	do.
537 sargas,	108 times in 7 x 537 days, i.e., 3759 days.			

The six Kandas have 77, 119, 75, 67, 68, 131 i.e, 537 sargas.

108 times mean 108 Pattabhishekas of Sri Ramachandra.

3759 days would give ten years and 10 x 10 x 9 days, calculating the year at 365 days.

The mystic significance consists in regarding 537 saragas in each turn in 537 days, the whole study being completed in 108 rounds, performing 108 Pattabhishekas.

There is also another method of Parayana for those who cannot contract with Sri Ramachandra and his biographer for a long period like 3759 days in one's life-time. That method is:—

Bala Kanda 22, 28, 27 i.e., 77 in 3 days.
Ayodhya Kanda 15, 19, 19, 21, 23, 22 i.e., 119 in 6 days.
Aranya Kanda 24, 25, 26 i.e., 75 in 3 days.
Kishkindha Kanda 19, 20, 28 i.e., 67 in 3 days.
Sundara Kanda 13, 21, 18, 16 i.e., 68 in 4 days.
Yuddha Kanda 12, 17, 27, 11, 12, 17, 18, 17 i.e., 131 in 8 days.

6 Kandas 537 Sargas in 27 days, i.e., a stellar month.

Devotees who desire to read the Ramayana with a view to Moksha have to follow the above courses. Men like us who have not much time in these days of stress and strain may read one sarga a day or even one sloka a day, provided we do so with true devotion, and not for critical purposes or with sceptical minds. The smallest thing done with true devotion is worth more than volumes produced with critical scholarship, without faith in the sanctity of the Text.

All India Varnashrama Swarajya Sangha.

An Announcement.

M. R. Ry. S. Swaminatha Sastrigal Retd. Engineer, Kumbakonam, Organising Secretary, Tanjore Circle, Varnashrama Swarajya Sangha, Madras has been authorized to receive, on behalf of the Sanga, Sambavanas on all auspicious occasions and festivities ....like the Vivahams, Grahapravesams, Brahmopadesams, Garbadanams, Pumsavana, Seemanthams, Abdhapoorthies etc. The funds so collected will be solely utilised for carrying out the objects of the Sanga, including propaganda work, in all the places within the circle. The Tanjore circle comprises the districts of Tanjore, Trichy, South Arcot, Salem and Coimbatore.

All Hindu gentlemen are requested to make large Sambavanas and enable the Sanga to carry out its objects effectively and successfully.

I am glad to announce that a sum of Rs. 30/- has been given this month as Sambavana on the occasion of the marriage of the daughter of M. R. Ry. Ganapathisubramaniya Aiyer Avl., of Kaliakudi with the son of M.R.Ry. S. Raghupathy Aiyer Avl., Kunnam, Shiyali.

Camp: Shiyali, 30—5—1937. (Sd). N. Natesa Aiyar, President, A.I.V.S. Sanga.

Our Pandits:- In contrast to the opinion of Right Hon'ble V. S. Srinivasa Sastriar on our Pandit class, we quote the opinion of Sir Mirza Ismail, the Dewan of Mysore.

"The Pandits represent the secular forces of conservatism and stability. They are the inheritors of traditional learning which connotes *depth and thoroughness.* They are the custodians of *national scholarship and culture.* The preservation and transmission of the cultural life of the country are in their hands."

An eminent French savant has said that "The Hindu Revelation is of all Revelations the only one whose ideas are in complete harmony with the modern science."

திருக்கொள்ளம்பூதூர் கும்பாபிஷேகம்.

க்ஷேத்திர வரலாறு.

திருக்கொள்ளம்பூதூர் ஆலயஜீர்ணோத்தாரண திருப்பணி, நற்சாந்துப்பட்டி பெ. ராம. இராமன் செட்டியாரவர்கள் குடும்பத்தார்களால் செய்துமுடிவடைந்து ஸ்ரீமகாகும்பாபிஷேகம் நாளது ஆனிமீ 14உ நடைபெறவிருக்கிறது. ஸ்தலம் பாடல் பெற்றது விருத்தாந்தம் பின்வருமாறு:- முன் காலத்தில் சுமார் 1500 வருஷங்களுக்கு முன் சீர்காழியிலவதரித்த ஆளுடைய பிள்ளையார் என்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாண்டியநாட்டில் சமணரைவென்று சைவம் நிலைபெறச்செய்து பதிகங்கள் பாடி சோழநாட்டு ஸ்தலங்களை தரிசனம் செய்து வருங்கால் பட்டீசுரம் அடைந்து முத்துச்சிவிகைமுதலியன சிவபெருமான் திருவருளால் பெற்று காசியாரண்ய க்ஷேத்திரம் — திருஇரும்பூளை — வனத்தில் ஸ்ரீஜகத்குரு தக்ஷிணாமூர்த்தியை தரிசித்து அடியார்களுடன் திருவாரூர் செல்லும் மார்க்கத்தில் அகஸ்த்தியகாவேரி என்ற வெட்டாற்றங்கரை அடைந்தனர். நம்பர் கோயில் என்ற இடத்து — வெட்டாறு என்றமுள்ளியாறு வெள்ளப்பெருக்கெடுத்து கடந்துசெல்ல முடியாதபடி இருந்தது. ஞானஸம்பந்தர் அவ்விடத்து சிவபெருமானைத்துதித்து அக்கரையில் கொள்ளம்பூதூர்கோபுரம் கண்டு தரிசிக்க ஆவல்கொண்டனர். ஓடங்கள் பற்றுக்கோல்களுக்கு நிலையாமை கண்டு ஓடம் செலுத்துவோர்கள் கரையில் கட்டிவிட்டுப்போயினர். கொள்ளம்பூதூர் ஈசனை தரிசிக்க ஆவல்கொண்ட ஆளுடையபிள்ளையார் அடியார்களுடன் ஓடங்களில் ஏறி அவிழ்த்துவிட்டு சிவபெருமானை துதித்து பதிகம் பாடுவாராயினர் பதிகமும் முடிந்தது. ஓடமும் அக்கரை சேர்ந்தது. அடியார்கள் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து சம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள் நாவன்மை ஈசன் திருவருள் இவற்றை துதித்து கொள்ளம்பூதூர் ஈசனை தரிசித்து ஆரூர் சென்றனர்.

பின்னர் சுந்தரமூர்த்திசுவாமிகள் காசியாரண்யம் — திருஇரும்பூளைவனம் — ஆலங்குடியிலுள்ள ஸ்ரீஜகத்குரு தக்ஷிணாமூர்த்தியை தரிசிக்கவேண்டி கோணபுரம் என்ற கொள்ளம்பூதூருக்கு வடபால் 1 மைல்வந்து அகஸ்திய காவேரி—முள்ளி—என்றவெட்டாறு மிகுந்த பிரவாகத்தோடிருந்ததைக்கண்டு சிவபிரான் சம்பந்தருக்கு ஓட்டம்விட்டு தவியதுபோல் தமக்கும் அருளுவாரென எண்ணி ஓடத்தை தேடுவாராயினர். அப்போது சிவபெருமானே ஓர் ஓடம்கொண்டு வேடரூபத்துடன் அவர்முன் நின்று நீண்டதோர் பற்றுக்கோல் பற்றி அன்பர் குழாத்தை அங்கரையுடன் அக்கரை சேர்க்க ஒத்துக்கொண்டனர். சுந்தரர் அவனுக்கு விசேஷமாக பொன்கொடுத்ததை ஓடக்காரன்பெற்று அதைஓரிடத்தில் வைத்துவிட்டு அடியார்களை ஏற்றி ஓர்நொடிப்பொழுதில் அக்கரை சேர்த்துவிட்டான். அதுகண்டுவியந்த சுந்தரர் அவன்வல்லமைக்குமெச்சிஅவனுக்கு பீதாம்பரங்கள் பரிசுதந்து தாமும்சில அடியார்களும் தோணியேறினர். ஓடக்காரன் அவரை தன்பற்றுக்கோலால்பெற்று ஓர் மரப்பொந்தில் வைத்துவிடு ஓடத்தை கடத்த—பாதிஆறு கடந்ததும்ஓர்சுழலில்பற்றுக்கோலை நழுவவிட்டுஅதைஎடுப்பவர்போல் நீரில்மூழ்கி பிரவாகத்தில் விழுங்கப்பட்டு ஆற்றுடன் தோணி பின்வர —செல்லாதுநித்தவித்தான். இதனால்— சுந்தரர் முதலானோரும் வருந்தி கலக்கமுற்று திருக்கொள்ளம்பூதூரடைந்ததும் ஸ்ரீவில்வவனேச்வரரை துதிக்கசிவபெருமான் சுந்திரர்க்கு காக்ஷி தந்து காத்தருளுவதாய் சொல்லி மறைந்தனர். அடியார்கள் ஆச்சரியத்துடன் துதித்தனர். ஓடக்காரன் மற்றொரு சுழலில் அகப்பட்டு தவித்து உயிரிழக்கும் தருவாயிலிருக்கக்கண்டு ஓலமிட்டலர, படகும் ஓர்சுழலில் அகப்பட்டு அமிழ்த்தீச்சுரம் என்னுமிடத்தில் அமிழ்ந்தது. அடியார்கள் நீரிலகப்பட்டு ஆற்றோடு ஓடக்காரனைப்போல் ஆனார்கள். கரையில் மோதுண்டு ஓடமும் சிதைந்தது. ஆற்றின் வேகத்தால் இழுக்கப்பட்ட சுந்தரர் முதலான அடியார்கள் சுழல்களில் அகப்பட்டு சுழன்று திகைத்து தள்ளாடி ஆலாகைப்பத்தூர் என்னும் க்ஷேத்திரத்தில் கிருபாநிதியாகிய கடவுள் அருள்சுரந்துதன்து நீண்டகைகளால் அடியார்களைக்கைப்பற்றி கரை சேர்ந்தருளினர்.

கரை சேர்ந்த சுந்திரர்—அடியார்களுடன் துதிக்க பரமசிவன்முன்தோன்றி வரமளித்து கிலீனபுரம் (திருவாங்கல்லூர் குமுதக்குடிக்குவடக்கு) என்றயிடத்தில் மறைந்தனர். ஓடமும் கீழ்சமுத்திரம் அடைந்தது. நாலவாகினி என்ற ஓடம்போக்கி என்று வழங்கலாயிற்று

பின்னர் காசியாரண்யம்சென்று குருதக்ஷிணாமூர்த்தியை வழிபட்டு துதித்தனர். ஸ்ரீ குருவின் அருளால் 32லக்ஷணங்கள் பொருந்தியதும் 25பேதங்கள் உள்ளதுமான பஞ்சாக்ஷரமகிமை உணர்ந்து சிலகாலம்தங்கிபின்ன ஆரூர் சென்றார் என்று காசியாரண்யக்ஷேத்ரமகாத்மியம் 5,6,7,8 அத்யாயங்கள் கூறுகின்றன.

N.B இந்தஅருமையான க்ஷேத்ரபுராணம் கிரந்தலிபியில் இருக்கிறது. இதைசுத்தப்படுத்தி, சோதித்து அச்சிட்டு வெளியிட உத்தேசித்திருக்கிறேன். ஆதலின் சிவநேயச்செல்வர்களும், தனதனவான்களும் தங்களாலியன்ற பொருளுதவி செய்யுமாறு வேண்டுகிறேன். இக்கைங்கர்யத்துக்கு உதவுவோர் கீழ்கண்ட விலாஸ காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளவாம்.

இப்படிக்கு, தங்கள் கா. ஸ்ரீனிவாச சாஸ்திரி S.S. ராமன் காரியதரிசி ஆரியதர்மம் ஆபீஸ் கும்பகோணம்.

திருச்சினப்பள்ளி.

ஸ்ரீ சங்கர ஜயந்தி

மேற்படியூர் அத்வைதசபையின் ஆதரவில் இருப்பதாவது வருஷத்திய ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம் 11-5-37உ முதல் 14-4-37 வரை அத்வைதசபா மண்டபத்தில் குருபக்த கோடிகளால் ஆரம்பிக்கப்பட்டு பிரதிதினமும் காலையில் வேதபாஷ்ய பாராயணங்கள் மஹான்யாஸபுரஸ்ஸர ஏகாதசருத்திரத்துடன் அபிஷேகம், ஆராதனை முதலியவைகள் நடந்தன.

11—5—47முதல் 13—5—37உ வரை முறையே ஸ்வதர்மம், ஸந்நியோபாசனம், ஆத்மஞானம் என்பவைபற்றி மாலை 7 மணி முதல் 8½ மணிவரை பிரம்மஸ்ரீ போலகம் சுந்தரேச சாஸ்திரிகளவர்கள் வெகு அழகாக உபன்யஸித்தார்கள்.

14—5—37உ ஸ்ரீ சங்கரஜயந்தி தினம் சபையோர்கள் அழைப்புக்கிணங்கி குன்னக்குடி ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் பிரம்மஸ்ரீ V. சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் பூஜைசெய்து அபிஷேகம் ஆராதனைகள் செய்தது ஜனங்கள் மனதை கவர்செய்தது.

பூஜை முடிந்ததும் ஷை சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் வழக்கமாய் போட்டுவரும் தர்ம உண்டியலை பிரம்மஸ்ரீ போலகம் சுந்தரேச சாஸ்திரிகள் அவர்களைகொண்டு உடைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அதில் தாது-வூ சித்திரை-மீ 14உ முன் வருஷம் ஸ்ரீ சங்கரஜயந்திதினம் குன்னக்குடியில் உடைத்தபோது விநியோகம் செய்தது நீக்கி இருப்பு இருந்தது ரூ (7-4-0)ம் அப்பால் சேர்ந்தது ரூ (43-8-7)ம் சேர்ந்து மொத்தம் ரூ (50—12—7) இருப்பு இருந்தது.

உண்டியலில் போட்டிருந்த சீட்டுப்படி தர்ம விநியோகம் செய்ததும் விதை தானம் பூரி குடுத்ததுகளும் நீக்கி இருப்பு (22-2-7) உதைதைஉண்டியலிலேயேசேர்க்கப்பட்டது.

நமது நிருபர்.

சிதம்பரம்.

ஸ்ரீ அஷ்டபதிகானம்.

'சிவாஷ்டபதி, ராமாஷ்டபதி' பிரசுரகர்த்தா ஜகத்குரு ஸேவாதுரந்தர பிரம்மஸ்ரீ கா. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி விஜயம் செய்து சிதம்பரம் கீழவீதி மஹாமஹோபாத்யாய தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் பாடசாலையில் இன்று மாலை 2-30 மணி முதல் 5-30 மணி வரையில் சிவாஷ்டபதி, ராமாஷ்டபதி முதலியவைகளை கானம் செய்தார்கள். பிரமுகர்கள் விஜயம் செய்து சாஸ்திரிகள் கானத்தைக்கேட்டு அவர்கள் செய்த பிரசாரத்தை மெச்சிக்கொண்டதுடன் அஷ்டபதி கிரந்தங்களை பலர் சேர்ந்து கானம் செய்யக் கற்றுக்கொண்டு உத்ஸவங்களில் கானம் செய்யும்படியாக ஏற்பாடு செய்வதாக தீர்மானித்தார்கள். ஷை சாஸ்திரிகள் அவர்களால் பிரசுரம் செய்யப்பட்ட ஸ்ரீசங்கரப்கவத்பாதர் தமிழ் நாடகப் பிரதிகளும் அஷ்டபதி கிரந்தங்களும் வழங்கப்பட்டன.

மஹாமஹோபாத்யாய தீக்ஷிதர் அவர்கள் சாஸ்திரிகள் அவர்களை இதுபோல் அடிக்கடி இந்த க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து கானம் செய்து அஷ்டபதிகளை செவ்வனே கானம் செய்யும்படி சொல்லிக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஒருநிருபர்.

சீக்ர ரேகா.

என்கிற தமிழ் சுருக்கெழுத்து முறை.

பல சுருக்கெழுத்துமுறைகள் ஆங்கிலத்தில் இருந்தபோதிலும் அவையாவும் நம் தாய் பாஷையாகிய தமிழுக்கு சரியாக வழங்கக் கூடியனவாக இல்லை சுலபமாக ரொம்பவும் சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளுமாறு கா. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் ஷை முறையை கண்டுபிடித்துள்ளார். அந்த முறையை யாவரும் எளிதில் கற்றுக்கொள்ளுமாறு சென்ற 12-6-37 முதல் குடந்தை ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகளவர்கள் மடத்தில் தினந்தோறும் காலை 8 முதல் 10 வரை ஷை யார் குமாரன் S. சந்தானராமனால் இலவசமாக ஒரு வகுப்பு நடத்தப்பட்டுவருகிறது. விருப்பமுள்ளயாவரும் அங்குசென்று எளிதில்கற்று பயனடையலாம். ஒரு நிருபர்.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள், ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

215187



அநாவசியமாக ஏன் - -

- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்தி ரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது

அமிர்தாஞ்சனம்

சிமிழி ஹோமயாகம்.

சென்ற வைகாசிமீ 2உ முதல் 15-5-37 முதல் 20-5-37 வரையில் பரிக்கியூர் வைத்ய நாத சாஸ்திரியாளுக்கு கிராமத்தில் நடத்தி வைத்தஸோமயோகத்திற்குதிருக்கருக்காவூர் பிரும்மஸ்ரீ சுப்பயயர்வாள், மதுரை அட்வ கேட் மகா-ா-ஸ்ரீ நடேசய்யர் அவர்களும், திருவாதி சாஸ்திர ரத்னாகரம் பிரும்மஸ்ரீ விசு வநாதசாஸ்திரியவர்கள், திருவானைக்காவல் ஸ்ரீஜகத்குரு வேதாந்தபாடசாலாஉபாத்தியா யர் பிரும்மஸ்ரீ போலகம் ராமசாஸ்திரிகளவர்கள், புதுக்கோட்டை மகாராஜர் காலேஜ் ஹெட்மாஸ்டர் பிரும்மஸ்ரீ ராகவசாஸ்திரிகளவர்கள், சேங்காலிபுரம் பிரஸங்கபானு பிரும் மஸ்ரீ வைத்தினாதசாஸ்திரிகளவர்கள், ஷடி ஊர் உபந்யாஸ ரத்னம் பிரும்மஸ்ரீ அனந்த ராம தீக்ஷிதவர்கள், மணக்கால் பிரும்மஸ்ரீ முத்துச்ரௌதிகள், கல்லிச்சேரி சிரௌதபூஷணம் பிரும்மஸ்ரீ ராமநாத ச்ரௌதிகள் முதலிய அனேக வித்வத் சிகாமணிகள் வந்து யாகத்தை ஆதரித்துநடத்திவைத்ததும் அந்த வித்வத்ஸபையை கிராமாபிமானிகள் ஆதரித்ததும், பார்த்த ஜனங்கள் கேழ்க்கும் ஜனங்கள் இவர்களுக்கு அளவற்ற ஆனந்தத்தை அளித்து வந்தது. ஒரு நிருபர்

ஓர் ஸந்தேஹம்.

நமது தேசத்தில் ப்ராம்மணர்கள் நடத்திக் கொண்டுவரும் விவாஹமானது கிருஹஸ்தாச் ரமத்துக்கு பாயமூலமான முக்யமான ஒரு ஸம்ஸ்காரமென்பது யாவரும் அறிந்ததே. ப்ரதம விவாஹத்தை மட்டிலும் உத்தராயணத்திலும் த்விதீயாதிவிவாஹத்தை இரண்டு அயனங்களிலும் நடத்தி வருகிறார்கள். ப்ரதம விவாஹத்தையும் அதுபோலவே தக்ஷிணாயனத்திலும் செய்யலாமென்று சில பண்டிதர்கள் கருதுகிறார்கள். ஆஸ்திகர்கள் ராஜகீயமான சில நிர்ப்பந்தத்தால் தக்ஷிணாயனத்திலேயே செய்யவேண்டியதான வயதின் கிரமம் வருகிற விவாஹ விஷயத்தில் ரொம்ப மனக்கலக்கமடைகிறார்கள். அப்படிப்பட்ட ஸமயங்களில் ப்ரதம விவாஹத்தை தக்ஷிணாயனத்தில் செய்ய சாஸ்திர ஸம்மதமுண்டா என்பதை பண்டிதமணிகள் தர்மசாஸ்திர பர்யாலோசனைசெய்து அடுத்து வருகிற ஆர்யதர்மம் மூலமாய் தெரிவிக்கும்படி பண்டிதமணிகளை மிக வணக்கத்துடன் விஞ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

பின்னும் தக்ஷிணாயனத்தில் செய்வதானால் விருதஸமாவர்த்தனங்களையும்தக்ஷிணாயனத்திலேயே செய்யலாமா அல்லது உத்தராயணத்திலேயே செய்யவேண்டுமா. இவ்விருஷயம் ஆவணி ஒருமாதம்தான் உத்தராயணமிருப்பதால் சீக்கிரமாகத் தெரியவிரும்புகிறேன்.

ஓர் ஆஸ்திகன்.

ரொக்கப்பரிசு ரூ. 1300.

நெ. 12 மரங்கள் போட்டி முதற் பரிசு சரியான விடை ரூ. 700 2வது பரிசு 1 தப்புள்ள விடை ரூ. 300.

பிரவேசக்கட்டணம் அணு 4 தான். முடிவு தேதி 10—7—37.

நெ.	வார்த்தைகள்.
1	வா—
2	—ல
3	—த்து
4	— —கு
5	—லா
6	—ன்னை

விடைகள் கண்டுபிடிக்கும் விதம் :—இதில் காட்டப்பட்டிருக்கிற மரங்கள் பெயர் 17. அதிலிருந்துதான் இப்போட்டிக்கு 6 சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கோடிட்ட இடங்களில் எழுத்துக்களைச் சேர்த்தால் சரியானவிடைவரும். ஒவ்வொரு விடைக்கும் அணு 4 வீதம் தனித்தனியே விடைகளைச் சுத்தமாக எழுதி பிரவேசக்கட்டணத்துடன் M O. ரசிதையும்சேர்த்து 10—7—37-க்குள் வந்துசேரும்படி அனுப்ப வேண்டும். எழுத்துக்கு எழுத்து சரியானவிடைக்கு முதற்பரிசும் ஒரு தப்புள்ள விடைக்கு இரண்டாவது பரிசும் பல சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை முறையே பகிர்ந்து அளிக்கப்படும்.

மரங்கள், பெயர்கள் ஜாபிதா.

1. அத்தி.
2. தெங்கு.
3. கொன்னை.
4. ஆல.
5. நொங்கு.
6. பிலா.
7. சத்தி.
8. புன்னை.
9. கொக்கு.
10. பால.
11. தென்னை.
12. இத்தி.
13. தேக்கு.
14. பலா.
15. நாக்கு.
16. முன்னை.
17. வாகை.

கூட்டல் போட்டி. சரியான விடை ரூ. 300.

●
●
●
●
18

● இந்த இடத்தில் 1 முதல் 15 வரை ஒவ்வொரு எண் வீதம் போட்டுக்கூட்டினால் 18 வரவேண்டும். வந்த எண் வாலாம் பூஜ்யம் வரக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை வந்தால் பரிசுத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும். 10—7—1937 க்குள் வந்துசேரும்படி விடைகளை அனுப்பவேண்டும். 12 நெ. போட்டிக்கும் கூட்டல்போட்டிக்கும் மானேஜரின் சரியான விடைகள் சீல்போட்ட கவரில் தேவகோட்டை நாட்டுக்கோட்டையார் பாங்கில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. 12 நெ. போடிக்கும் கூட்டல் போட்டிக்கும் பிரவேசக்கட்டணத்தை ஒரே மணியார்டரில் அனுப்பலாம். விடை கூபன்களையும் ஒரே கவரில் அனுப்பலாம். இரண்டு போட்டிகளுக்கும் பரிசுத்தொகை 20—7—1937-க்குள் அனுப்பப்படும்.

மானேஜர் நாக. வெ. ராம நாச்சியப்ப செட்டியார்,
கார்த்திகேயன் நிலையம், தேவகோட்டை,
(இராமனாதபுரம் ஜில்லா).

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்
ன
24
4
22
24-6-1937
215190

1317
1317
215190
367

Registered No. M. 2913.

ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம் கலி 5039 ஈஸ்வர-ஹு ஆனி-மீ 11உ 1937-ஹு ஜூன்-மீ 24உ | வ 24

ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

நிலவரி விசாரணைக் கமிட்டி.

சென்னை மாகாண நிலவரி முறையைத் திருத்தியமைக்கும் உத்தேசத்துடன் மிஸ்டர் மார்ஷ்பாங்க் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டியானது சாச்வதமாகச் செய்ய வேண்டிய தன்மைகளைப்பற்றி யோஜிக்காதென்றும், அதை சாச்வத மந்திரி ஸபையே தீர்மானிக்கும்படி விட்டுவிடுமென்றும், தாற்காலிகமாக கவர்ன்மெண்டார் வஜா செய்ய உத்தேசித்துள்ள 75 லக்ஷத்தை எந்த வழியில் விநியோகம் செய்யலாமென்பதையே இக்கமிட்டி யோஜிக்குமென்றும் 1914ம் ஹு த்திலிருந்த விகிதத்தை ஆதாரமாகக்கொண்டு வரிமுறையைத் சீர்திருத்தலாமென்று கமிட்டி நினைப்பதாயும் தெரிகிறது.

அப்துல்காபர்கான் பஞ்சாபில் வரக்கூடாது.

எல்லைபுற காந்தியென அழைக்கப்படும் அப்துல்காபர்கான் பஞ்சாப் மகாணத்திற்குள் வரக்கூடாதென்ற தடையை ரத்துசெய்யும்படி பஞ்சாப் சட்டசபையில் மெம்பர்கள் கேட்டுக்கொண்டனர். முதல் மந்திரியான ஸர். ஸிகந்தர் ஹயாத்கான் இதற்குப் பதில் கூறுகையில் காபர்கான் அபாயமனிதரென்றும், அவருடைய வரவால் அமைதிக்குப் பங்கம் ஏற்படுமென்றும் சொன்னர்.

பதவியேற்பு விஷயம்.

எம் என். ராய். ஆதரவு.

ஐக்யமாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஸ்ரீமான் எம். என். ராய். காங்கிரஸ்காரர் எவ்வித உறுதிமொழியையும் கோராமல் மந்திரி பதவி ஏற்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்போகிறார்.

இவர் பிரபல அபேதவாதி என்பது கவனிக்கத்தக்கது.

சீக்கிய முஸ்லீம் கலகம்.

அமிர்தஸரஸுக்கு ஸமீபமான அலா என்ற இடத்திலுள்ள சீக்கக் கோவில் ஊழியரான சுந்தரசிங் என்றவரை மகம்மதியர்கள் கொன்றுவிட்ட துக்கத்தைக் காட்டிக் கொள்வதற்காக அமிர்தஸரஸிலிருந்து சீக்கியர் ஊர்வலம் ஒன்று புறப்பட்டது. இதைத் தடுத்து மஹம்மதியர்கள் கலகம் செய்தனர். இருதரப்பினருக்கும் பலமான சண்டை. போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அநேகர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். பிரிட்டிஷ் ராணுவம் வந்திருக்கிறது. கோர்ட்டுகளும் கடைகளும் மூடப்பட்டிருக்கின்றன.

"ஹிட்லர்" நாமதேயம்.

ஜர்மனியின் ஸர்வாதிகாரியான ஹிட்லரின் பெயரையோ, கோரிங், கபில்ஸ், இவர்களுடைய பெயரையோ ஜர்மனியில் ஒருவருக்கும் வைக்கக் கூடாதென்று ஸர்க்கார் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

துஷ்டர்களின் அடாத செய்கை.

விக்ரஹங்களின் கதி.

கராச்சியில் ஒரு மசூதிக்கு சமீபத்திலுள்ள ஹிந்து கோவிலுக்குள் சில துஷ்டர்கள் புகுந்து தெய்வ விக்ரஹங்களைத் தூக்கிக்கொண்டு போய் கக்கூஸில் போட்டுவிட்டார்கள். அந்த விக்ரஹங்களின் மீது ஆபாஸமும் செய்யப்பட்டிருந்ததாம். கோவில் நகைகளும் மற்ற சாமான்களும் திருட்டுப்போய் விட்டன. ஹிந்துக்கள் மிகுந்த வருத்தமடைந்து போலீஸுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

குடி வெறியால் வந்தவினை.

மதுரைக்கு சமீபமான குறுந்தாம்பட்டி கிராமத்தில் அழகன் என்ற பஞ்சமன் குடித்துவிட்டு, தாறுமாறாக ஜாதி ஹிந்துக்களைத் திட்டியும், பாட்டுப்பாடியும் கலஹம் செய்ததாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக ஏற்பட்ட தகராறில் அவன் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இவன் நீண்டகாலமாக விலக்கு விஷயமான பாட்டுக்களைப் பாடியதற்காக ஜாதி ஹிந்துக்களால் கொல்லப்பட்டது போல் பத்திரிகைகள் ஆர்பாட்டம் செய்கின்றன.

வேஷ்டி உடை.

வங்காள ஸர்க்கார் அங்கீகாரம்.

வங்காளிகள் கச்சத்துடன் வேஷ்டி தரிப்பதே அத்தேச வழக்கமாயிருக்கிறது. ஸர்க்காரில் பெரிய உத்யோகங்களில் இருப்பவர்கள் கூட இந்த மாதிரி உடையையே தரிக்கவும், இதை ஸர்க்கார் உடையாக அங்கீகரிக்கவும் மந்திரி ஸபையார் ஸம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷீட் ஜெய்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட் பெரியதெரு, கும்பகோணம்

பரதநாட்டுப் படிப்பும் மேல்நாட்டுப் படிப்பும்.

ஈசுவர ஹு வைகாசிமீ 25உ நடந்த வீரபாண்டி ஸநாதனதர்ம ஸபையில் (7-6-37) ஸ்ரீசிவப்ரும்மம் அவர்கள் அக்ராஸனம் வகித்து உபன்யாசம் செய்ததாவது:—

நமது பரதநாட்டில் பிள்ளைகளுக்கு ஐந்தாவது வயதில் எழுத்து ஆரம்பிக்கும்போதே தங்க ஊசியால் அரிசியில் முதலில் "ஹரி: ஓம் நமோ நாராயணாய" என்று எழுதி பிறகு அகாராதி க்ஷகாராந்தம் வரை எழுதிப் பிறகு பசுவின் பாலிலும் அந்தப்படி தாய் தந்தை சுற்றத்தார் முதலிய பெரியோர்களும் தனித் தனியே எழுதி அந்தப் பாலை கீழே சிந்தாமல் சாப்பிடச் செய்து பிறகு பனை ஓலையில் எழுத்துக்களை எழுதி பிள்ளையின் விரலைக் கொண்டு தொடச் செய்து சொல்லிவைப்பது வழக்கமாய் இருந்துவந்தது. வருகிறது. கிரந்த எழுத்து "ஓம் நமோ நாராயணாய" என்றும், தெலுங்கு எழுத்து 'ஓம் நமசிவாய' என்றும் மலையாள எழுத்து "ஹரி ஸ்ரீ கணபதயே நம:" என்றும், இப்படி எல்லா தேசபாஷைக்காரர்களும் முதலில் மங்களகரமாக ஆரம்பிப்பதே பரதகண்டவாசிகளின் வழக்கமாக வந்திருக்கிறது.

எழுத்தும் மனதில் பதிந்து பிள்ளைகளுக்குப் படிக்கும் திறமை வந்தகாலத்தில் கிரந்தத்தில் மூஷிக வாஹனம் என்ற விநாயக ஸ்தோத்ரம் முதலியதும், தமிழில் அக்ஷரமாலிகையாக விளங்கும் ஆத்திசூடி முதலியதும், பக்தி விவேகங்களுக்கு அடிப்படை நூலாகவும் பரலோகஸாதனங்களுக்கு யோக்யமாகவும் ஏற்பட்டிருந்தது. கிரந்தத்தில் ஸாஸ்வதி ஸ்தோத்திரம், நவக்ரஹஸ்தோத்ரம், சந்த்ரசேகராஷ்டகம், ராகவாஷ்டகம் கோவிந்தாஷ்டகம், நீதிஸாரம், அமரம் முதலியதும், தமிழில் கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை நல்வழி முதலிய நூல்களும் பையன்களுக்கு சிறிய வயதில் கற்பிப்பதால் தகுந்த வயதில் எந்த வழியிலும் எந்தத் தொழிலிலும் புத்தி செல்லும்படிக்கும் நன்னடத்தைப் பிடிபடுவதற்கும் அடிப்படை நூலாக இருந்து வந்தது. மேலும் எண்சுவடி குழிமாரல், பிரபவாச்சுவடி என்னும் சோதிடச் சுருக்கம், இவைகள் படித்துவிட்டால் பிறகு அந்தப் பிள்ளை படித்த படிப்புடன் நின்றுவிட்டாலும் சரி, அல்லது மேலேபடித்தாலும் சரி அப்பிள்ளை நிச்சயமாக குலதர்மத்தினின்றும், தேசபக்தியினின்றும், பிசகவே மாட்டான். இது அநுபவஸித்தமாக எல்லோருக்கும் தெரிந்தது தான்.

மேனாட்டுப் படிப்புப் படித்து மேன்மைக் கெட்டுப் பணத்தையும் இழந்து பரிதபிக்கும் பிள்ளைகளை நாம் வீடுகள்தோறும் பார்க்கிறோம். பரதநாட்டுப்படிப்பில் இன்னொருவிசேஷம் இருக்கிறது. 10-வயதில் பள்ளிக் கூடப் படிப்பு முடிந்துவிடும். பிறகு பையன்கள் புத்திக்குத் தகுந்தபடி ராஜாங்க, வியாபார, சங்கீத, சில்ப, வேதசாஸ்திர, விவசாய முதலிய அனேக தொழில்களில் அந்தந்த குருவை அடைந்து பூர்ண பாண்டித்யம் பெற்று வந்தார்கள். பணச் செலவு கிடையாது. தற்காலம் இம்மாதிரி லக்ஷக்கணக்கான பணச்செலவும், கட்டடங்களும், சம்பள உபாத்தியாயரும் அப்போது இல்லை. கூடிய சீக்கிரம் படித்த பிள்ளைகள் சம்பூர்ணமான யோக்கியதையும் அடைந்து பரம்பரையை அநுசரித்து வித்வானாகவும் இருந்துவந்தார்கள். இக்காலம் மாதிரி நாற்றுக்குப் பத்துப் பேர் பாஸ் என்பது அக்காலத்தில் கிடையாது. அக்ரஹாரங்கள் பாழானதற்குக் காரணம் அன்னியநாட்டுப் படிப்பை நாம் கைகொண்டதே.

தக்ஷிணதேசத்தில் ஸர் ஏ. சேஷய்யாசாஸ்திரிகள், ஸர் டி. முத்துஸாமி அய்யர் முதலியவர்கள் ஆதியில் ஏழையாயிருந்து படிப்பால் முன்னுக்கு வரவில்லையா என்று கேழ்க்கலாம், அதைச் சற்று கவனிப்போம். அக்காலத்தில் சம்பளம் கொஞ்சம். ஏழைப்பையன்களை ஸ்கூலில் அதிகமாக எடுத்துக்கொள்வார்கள். கிளப்புகள் அதிகமில்லை. பிரபுக்களும் சாப்பாடு போட்டுப் பணஉதவி செய்தும் பையன்களை ஆதரித்தும் வந்தார்கள். ராஜாங்கத்திலும் புத்திசாலித்தனத்தையும், பரீக்ஷையையும் அநுசரித்து வேலைகொடுத்து வந்தார்கள். இன்னஜாதிக்குத்தான் வேலை, இன்ன ஜாதிக்கு, படித்துப் பாஸ்பண்ணினாலும் வேலை கிடையாது என்கிற சட்டம் அப்போது இல்லை. உத்தியோகஸ்தர்களும் தங்களுக்கு ஏற்பட்ட ராஜாங்க வேலைகாலம் தவிர பாக்கி சமயங்களில் குலாசார வழக்கம், சரீர அடையாளம், நடை, உடை பாவனைகள் தவறாமல் அநுஷ்டித்து வந்தார்கள். மேலும் அந்தக்காலத்தில் உத்தியோகத்துக்கு கௌரவமிருந்தது. அது எப்படி? தேச சரித்திரத்தைக் கவனிப்போமாகில் மகம்மதிய ராஜாங்கத்துக்கு முன் அனேக சிற்றரசர்களால் இந்த தேசம் ஆளப்பட்டுவந்தது. ஒவ்வொரு ராஜாங்கத்திலும் பிராம்மணர்களே முக்கிய மந்திரியாக இருந்துவந்தார்கள். கவுரவமான ஸ்தானமே தவிர சம்பளம் கிடையாது. பிறகு மகம்மதியராஜ்யம் ஏற்படவே பிராமணர்களில் சிலர் மாதச்சம்பள உத்தியோகத்துக்குப் போனார்கள், அக்காலத்தில் அவர்களுக்கு நியோகிகள் என்று பெயர் வந்தது. பிறகு பிரிட்டிஷ் ராஜாங்கம் வரவே இங்கிலீஷ் கற்றுக்கொண்டார்கள்.

இம்மாதிரி இங்கிலீஷ் படித்து பெரிய கவுரவமான வேலையிருந்து வாழ்நாட்களைப் பெருமையாகக் கடத்திவிட்டார்கள். தற்காலத்திலோ பசியாமல் சாப்பிடக்கூடியதும், பரம்பரையாகப் பெரியோர்களால் காப்பாற்றி வந்ததுமான நஞ்சை நிலத்தை விற்றுப் பிள்ளைகளைப் படிக்கவைத்துப் படிப்புவராமலும், படித்தாலும் பாஸ் இல்லாமலும், பாஸ் ஆனாலும் வேலை கிடைக்காமலும், வேலைகிடைத்தாலும் விவேகமில்லாமலும், விவேகமிருந்தாலும் வெருங்கையாகவும் அதாவது கிடைக்கும் வரும்படி சிலவுக்கே போதாமல் தத்தித்தடுமாறியும் குடும்பங்கள் அனேகமிருக்கின்றன.

டாக்டர் டி. என். சர்மா, வீரபாண்டி

அஞ்சுவதும் அஞ்சாமையும்.

(ப. ரே. திருமலை அய்யங்கார்)

உலகின்கண்ணுள்ள அறிஞரால் போற்றப்படும் திருவள்ளுவநாயனார் 'அஞ்சுவதும் அஞ்சாமையும்' என்ற விஷயமாகக் கூறுவதைக் கேண்மின். இது தற்காலம் மிகவும் அறிய வேண்டியது ஒன்றாகையால் இக்குறளையும் அதற்குப் பரிமேலழகர் கூறிய உரையும் ஈண்டு தருதும்.

'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்;

அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்; அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதலறிவார் தொழிலாம். அஞ்சாமை - எண்ணாது செய்து நிற்றல், அஞ்சுதல் - எண்ணித் தவிர்தல், அது காரியமன்றென்று இகழப்பட்டார் தென்பார். 'அறிவார் தொழில்' என்றார். இங்கு இவர் அஞ்சுதல், அஞ்சாமை என்னும் இருபதங்கட்குக் கூறும் பொருள் நன்கு நோக்கற்குரியது. அஞ்சாமை என்றால் எண்ணாது அதாவது முன்பின் ஆலோசியாது செய்து நிற்றல், தான்பிடித்த முயலுக்கு இரண்டே கால் என சாதித்தல். அஞ்சுதல் என்றால் தீர்க்கமாக ஆலோசித்து தன்னுடைய ஆலோசனைக்கு அநுகுணமாக காரியத்தைச் செய்யாது விடுதல். அஞ்சுவதை அஞ்சாமை பேதமை என்றும், அஞ்சுவதஞ்சல் அறிவார் தொழில் என்றும், கூறியது மிக அநுபவித்தர்குறியது. துண்ணிய கருமம் எண்ணித் துணி என்றபடி எக்கருமத்தையும் எண்ணியே துணிக. ஏனெனின் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு. மேலும் செய்யத் தக்க அல்ல செயக்கெடும்; செய்யத்தக்க செய்யாமையானும் கெடும். இவையெல்லாம் பொருட்பால், அரசியற் பகுதியில் கூறப்பட்டிருக்கின்றன, அரசனுக்கு இயல்பாவது அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இந்நான்கும் எப்பொழுதும் குறையாது நிற்றல் வேண்டும் என்று இறைமாட்சி என்ற அதிகாரத்தில் கூறி இங்குஅவ்வேந்தர் அஞ்சப்படுவதனை அஞ்சவேண்டும் இடம் சொல்லிப் போந்தார்.

இக்குறளுக்கு இலக்கியவர் திருவிதாங்கூர் மஹாராஜாவும் கொச்சி மகாராஜாவும், முன்னவர் அஞ்சாமையைக் கைக்கொண்டார். பின்னவர் அஞ்சுதலைக் கைக்கொண்டு கலியுகதர்மரானார். இதனை நன்கு உய்த்துணர்க

எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின் அஞ்சாமை அல்லால் துணை வேண்டார். ஒருவனை வஞ்சிப்பதோரும் அவா. அஞ்சுவதோரும் அறனே. அறனை மறவேல். அஞ்ச வேண்டாதவைகளுக்கு அஞ்சுபவன் பகைவரால் வெல்லப்படுதற்கு மிக எளியவனாவான். வாளொடு என்வன் கண்ணர் அல்லார்க்கு? நூலொடென் நுண்ணவை அஞ்சுபவர்க்கு. தீவினை யென்னுஞ் செருக்கு தீவினையார் அஞ்சார், விழுமியார் அஞ்சுவர். தீயவை தீயபயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும். மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை. பாவம், பழி, கேடு முதலியவற்றிற்கு அஞ்சுவதே அறிவார் தொழில், என கொச்சி மஹாராஜா செய்தமையைப் பேதமையாக்கி திருவிதாங்கூர் காரியத்தை அறிவுடைமையாகக் கொள்ளார் அறிவுடையோர்.

பிரிட்டிஷ் பத்திரிகையில் குறும்பு.

இந்தியராஜாமீது அவதூறு.

ஆண்டு என்ற ஸம்ஸ்தான ராஜா தமது ஸம்ஸ்தானத்திலுள்ள ஸ்திரீகளுக்கு ஸூர்ய நமஸ்கார முறையை தேகாப்யாஸப் பயிற்சியாக ஏற்படுத்தியிருப்பதை "ஸண்டேரெபிரீ" என்ற பத்திரிகை குறிப்பிட்டு, அந்த ஸ்திரீகளுக்கும் ராஜாவுக்கும் அவமானம் விளைவிக்கக் கூடிய வழியில் அபிப்பிராயம் வெளியிட்டதற்காக அதன்மீது அந்த ராஜா நடவடிக்கை எடுத்தார். அதனால் அது நிபந்தனையின்றி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இரண்டாயிரம் பவுன் நஷ்டமும் கொடுத்தது.

மிலட்டூர் ப்ரஹ்லாத சரித்திர நாடகம்.

பரத சாஸ்திர முறைப்படி தஞ்சைஜில்லா மிலட்டூரில் வெகு காலமாய் நடந்துவரும் நாடகங்களில் முக்கியமானதும் பக்திரஸப்ரதானமானதுமான ப்ரஹ்லாத சரித்திர நாடகம் மிலட்டூர் ஸ்ரீ வரதராஜஸ்வாமி ஸன்னதியில் (24-6-37) இரவு 8-மணிக்கு ஆரம்பித்து பிராசீன ஸம்ப்ரதாயப்படி பரதசாஸ்திர முறையையொட்டி பாவாபிநயங்களுடன் அபிநயித்துக் காட்டப்படும்.

ஆர். ஸீதாராமசர்மா.

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

'மூகபஞ்சசதீ'

(17—6—37 தொடர்ச்சி.)

2. ஸௌதமென்றால் பல மாடிகளையுடைய மாளிகையென்றர்த்தம். வலபீ என்றால் அப்பேர்ப்பட்ட மாளிகையின் மாடிகளில் எல்லாவற்றிற்கும் மேலான மாடியென்றர்த்தம். மோக்ஷத்தைப் பல மாடிகளுடைய மாளிகையாக 'அபவர்கஸௌத' மென்று இங்கு சொல்லப்பட்டது. மோக்ஷமென்பது ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம், கைவல்யம் என்று மேம்மேலான ஐந்து மாடிகளில் எல்லாவற்றிற்கும் மேலானதான கைவல்ய மோக்ஷத்தை 'அபவர்கஸௌதவலபீ' என்று இங்கு சொல்லப்பட்டது.

3. இப்பேர்ப்பட்ட மாளிகையிலுள்ள மாடிகளை ஏறுவதற்காக ஏற்பட்ட (நிச்ரேணி) மாடிப்படிகளாக யோகத்தைச் சொல்லப்பட்டது. யோகமானது ஸோபானக்ரமமானதாக (படிப்படியானதாக) சொல்லப்படும். அப்படி படிப்படியாக ஏறிவரும்போது முடிவாக ஸபீஜயோகமென்ற ஸம்ப்ரக்ஞாத ஸமாதியானது ஏற்படுகிறது. பீஜமென்பதினால் பூர்வ கர்மாக்களின் ஸம்ஸ்கார வசத்தால் ஏற்படும் வ்ருத்தியானது குறிப்பிடப்பட்டது இது ஸம்ப்ரக்ஞாத ஸமாதிகாலத்திலுமிருப்பதால் அதை ஸபீஜயோகமென்று சொல்லப்பட்டது. அதற்கு மேலாக அவ்விதமான வ்ருத்தியும் அற்றுப்போய், கர்ம ஸம்ஸ்காரங்கள் இருந்தும் மனதானது நிராலம்பனமானதாகவும் நிர்விகல்பமாகவும் இருப்பதானது அஸம்ப்ரக்ஞாத ஸமாதியென்றும் நிர்பீஜயோகமென்றும் சொல்லப்படும். இந்த நிலையில்தான் கைவல்ய முக்தி யேற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (இந்த விஷயங்களைப்பற்றி அறியவேண்டுமானால் பதஞ்ஜலிமஹர்ஷியின் யோகஸூத்ரங்களையும் ராஜயோகத்தைப்பற்றிய புஸ்தகங்களையும் பார்க்கவும்.)

4. இப்படி யோகாப்யாஸத்தினால் எவ்வளவு முயன்றாலும் மோக்ஷம் கிடைப்பதானது அம்பிகையின் அநுக்ரஹத்தைப் பொருத்ததாக இருப்பதால் அதையும் இங்கு 'தவக்ருபயா' என்று குறிக்கப்பட்டது.

98 அந்தரபி பஹிரபித்வம்
ஜந்துததேரந்தகாந்த க்ருதஹந்தே |
சிந்தித ஸந்தானவதாம்
ஸந்ததமபி தந்தனீஷி மஹிமானம் ||

அந்தகாந்தக்ருத் - அந்தகனுக்கு (யமனுக்கு) அந்தத்தை (மரணத்தை) உண்டுபண்ணின (அதாவது, மார்க்கண்டேயருக்காக காலனை ஸம்ஹாரம் செய்த) பரமசிவனுடைய, அஹந்தே - அஹங்கார ரூபிணியாயிருக்கும், த்வம் - நீ, ஜந்துததே: - ஸகல ப்ராணிகளுக்கும், அந்தரபி - உள்ளிலும், பஹிரபி - வெளியிலும் இருந்துகொண்டு, சிந்தித ஸந்தானவதாம் - இடைவிடாத த்யானத்தையுடைய பக்தர்களுக்கு, ஸந்ததமபி - எப்போதும், மஹிமானம் - மேன்மையை, தந்தனீஷி - அதிகரிக்கச் செய்கிறாய்.

1. நிருபாதிக ஸம்வித் ரூபமாயிருக்கும் பரப்ரஹ்மத்திற்கு அத்துடன் அபின்னமாயிருக்கும் சக்தியினால்தான் அஹம் என்ற உணர்ச்சியானது ஏற்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது ப்ரகாச ரூபமானது விமர்ச ரூபமான கண்ணாடியில் தன் ப்ரதிபிம்பத்தைப் பார்த்தவுடன் அது யாரென்ற ஸந்தேஹம்தோன்றி தான் தான் (அஹமஹம்) என்ற உணர்ச்சியானது ஏற்படுகிறது.

'பரசிவ ரவிகரநிகரே ப்ரதிபலதி விமர்சதர்பணே விசதே |'
(காமகலாவிலாஸம்)

இதிலிருந்துதான் ஜகத் ஸ்ருஷ்டி ஏற்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத்
ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம
ததைக்ஷத, ஸோஹம் தேவதாக்ஷத
ப்ரம்ஹ வா இதமக்ர ஆஸீத்
ததாத்மானமேவ வேதாஹம் ப்ரம்ஹாஸ்மீதி
ஸ ஈக்ஷத இமான் லோகான் ஸ்ருஜே' (ச்ருதி)

2. இப்படி ஸகல ஜகத் ஸ்ருஷ்டிக்கும் காரணமான பரமசிவனுடைய அஹம் பாவத்திற்கு அம்பிகை காரணமாயிருப்பதால் அம்பிகையை அவருடைய அஹந்தா ரூபிணியென்றும் அஹங்கார ரூபிணியென்று சொல்வது வழக்கம்.

'புரஸ்தாத் ஆஸ்தாம் ந: புரமதிதுராஹோ புருஷிகா |'
(ஸௌந்தர்யலஹரீ)

'அஹந்தாம் ஆலம்பே க்ருடதாம் அஹந்தாம் பசுபதே: |'
(நீலகண்டவிஜயம்)

99 கலமஞ்ஜுள வாகனுமித-
கல பஞ்ஜர சுகக்ரஹௌத்கண்ட்யாத் |
அம்ப ரதனம்பரம் தே
பிம்ப பலம் சம்பராரிணா ந்யஸ்தம் ||

அம்ப - தாயே! கல மஞ்ஜுள - அத்யந்தம் இனிமையான, வாக் - குரலிலிருந்து, அனுமித - ஊஹிக்கப்பட்ட, கள பஞ்ஜர - கழுத்தாகிற கூட்டிலிருக்கும், சுக - கிளியை, க்ரஹௌத்கண்ட்யாத் - பிடிக்கவேண்டுமென்கிற ஆசையினால், சம்பாரிணா - மன்மதனால், ந்யஸ்தம் - வைக்கப்பட்ட, பிம்பபலம் - கோவைப்பழம் போல், தே - உன்னுடைய, ரதனம்பரம் - உதடு (தோன்றுகிறது).

1. அம்பிகையின் உதடானது கோவைப்பழம்போலிருப்பதை இதில் வெகு அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அம்பிகையின் குரலானது அவளுடைய கழுத்திலிருந்து வெளிவருவதைக் கேட்ட மன்மதனவன் அந்தக் கழுத்தாகிற கூண்டிற்குள் ஒரு கிளி இருந்து பேசுவதாக நினைக்கலானான். அதன்பேரில் அதைப் பிடிக்கவேண்டுமென்ற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. ஸாதாரணமாக கிளிகளைப் பிடிப்பதற்கு அவற்றிற்குப் பிரியமுள்ள ஒரு ஸாமானை அவற்றினெதிரில் வைத்து அதைத்தின்க அவை வரும்போது பிடிப்பது வழக்கம். கிளிகளுக்கு கோவைப்பழத்தில் ப்ரியமதிகமென்று மன்மதனுக்குத் தெரியுமாகையால் அம்பிகையின் உதடாகிற கோவைப்பழத்தை வைத்து அந்தக் கிளியைப் பிடிக்க மன்மதன் ஏற்பாடு செய்ததாக இங்கு வர்ணிக்கப்பட்டது. அம்பிகையின் கழுத்தை கிளிக்கூட்டுக்கும், குரலை கிளியின் குரலுக்கும், அதரத்தை கோவைக்கனிக்கும் உபமிக்கப்பட்டிருக்கிறது.

2. சம்பராஸுரன் என்ற மிகவும் மாயாவியான அஸுரனை ஸம்ஹாரம் செய்ததால் மன்மதனுக்கு சம்பராரியென்று பெயர். இப்படி எல்லாரையும் விட மாயாவியாயும் ஸகல ஜனங்களுடைய மனதையும் மயக்கிக் கலக்குகிறவனுமான மன்மதனே அம்பாளுடைய குரலின் இனிமையைப்பார்த்து மயக்கமடைந்தானென்றால் அதைப்பற்றி அதிகமாக வர்ணிக்கவேண்டியது அனவச்யம். மேலும், அப்பேர்ப்பட்டவன் வைக்கும் கோவைப்பழமானது ஸாமான்யமானதாக இருக்கக்கூடியதல்லவாகையால் அம்பிகையின் அதரத்தினழகைப்பற்றியும் அதிகம் சொல்லத்தேவையில்லை.

3. ரதனம் என்றால் பல் அதற்கு மூடியாக இருப்பது ரதனம்பரம் - உதடு.

4. அம்பிகையின் கழுத்து, குரல், அதரம் இவற்றினழகைப் பற்றி ஸ்ரீமதாசார்யாளும் மிகவும் விசேஷமாக 'ஸௌந்தர்யலஹரீ'யில் வர்ணித்திருப்பதையும் பார்க்கவும்.

100 ஜய ஜய ஜகதம்ப சிவே
ஜய ஜய காமாக்ஷி ஜய ஜயாத்ரிஸுதே |
ஜய ஜய மஹேசதயிதே
ஜய ஜய சித்கன கௌமுதீ தாரே ||

ஜகதம்ப - ஜகன் மாதாவே! சிவே - பரமசிவனுடைய பத்னியே! ஜயஜய - ஸர்வோத்கர்ஷமாக (என்முன்) விளங்கிக்கொண்டிருக்கவும், காமாக்ஷி - ஹே காமாக்ஷி! அத்ரிஸுதே - பர்வதராஜன் பெண்ணே! (ஜயஜய), மஹேசதயிதே - பரமேச்வரனுடைய பத்னியே! (ஜயஜய), சித்கன கௌமுதீதாரே - சித் என்ற ஆகாசத்திலிருந்து பெருகும் நிலவின் தாரையாயிருப்பவளே! (ஜயஜய).

இதுவரையில் அம்பிகையைப்பற்றிப் பலவிதமாக வர்ணித்திருந்தும் த்ருப்தியடையாத கவியானவர் அம்பிகையைப் பல பெயர்களாலழைத்துத் தன்னை அனுக்ரஹிக்கவேண்டி, எப்போதும் தன் முன்பாக ஜயத்துடன் விளங்கிக்கொண்டிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார். ['ஜயஜய' என்று அம்பிகையை ஜயத்தோடிருக்க வேண்டுமென்று ஆசீர்வதிப்பதானது ஸ்தோத்ரம் செய்வதில் ஒரு விதம்.]

இத்துடன் சதகம் முடிந்தது. அடுத்த ச்லோகமானது பல ச்ருதியை (இதைச் சொல்வதினால் உண்டாகும் அம்பிகையின் அநுக்ரஹத்தை) சொல்லுகிறது.

101 ஆர்யா சதகம் பக்த்யா
படதாம் ஆர்யா கடாக்ஷேண |
நிஸ்ஸரதி வதனகமலாத்
வாணீ பீயூஷதோரணீ திவ்யா ||

பக்த்யா - பக்தியுடன், ஆர்யாசதகம் - இந்த ஆர்யா சதகத்தை, படதாம் - வாசிப்பவர்களுக்கு, ஆர்யா கடாக்ஷேண ஜகதம்பிகையின் கடாக்ஷத்தினால் (அனுக்ரஹத்தினால்), வதனகமலாத் - அவர்களுடைய முகாரவிந்தங்களிலிருந்து, திவ்யா வாணீ - திவ்யமான (மிகவும் உயர்ந்த) வாக்கானது, பீயூஷதோரணீ - அம்ருததாரை போல், நிஸ்ஸரதி - வெளிவருகிறது. (ப்ரவஹிக்கிறது).

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஸூ ஆனி-மீ 11உ

அலக்ஷ்யமான பதில்!

சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கக்கார்யதர்சியான ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமி அய்யருக்கும் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியாருக்கும் ஸமீபத்தில் நடந்த கடிதப்போக்கு வரத்து விவரம் இன்று நமது ஆங்கிலப் பிரசுரத்தில் வெளியாகியிருக்கிறது. அதைக் கவனித்தால் ஸ்ரீமான் ஸி. ரா. ஆசாரியாரின் விபரீத மனப்போக்கு நன்கு வெளியாகும். மஹம்மதியர்கள் காங்கிரஸில் சேரும் விஷயமாக நேருஜிக்கும், ஜின்னாவுக்கும் தகராறு நடந்தது. காங்கிரஸ் மகாஸபை ஒரு ராஜ்ய உருவமேயாகுமென்றும் இதில் மதப்பிரச்னைகளுக்கு இடமில்லையென்றும், அவரவர்களுக்குப் பிடித்தமான மதக்கொள்கையை அநுஷ்டிப்பதில் காங்கிரஸ் பிரவேசிக்காதென்று காரச்சித் தீர்மானமிருப்பதால் இத்துடன் ஜின்னா முதலிய மஹம்மதியர்கள் திருப்தியடைந்து விடுவதுதான் நியாயமென்றும் நேருஜி சொல்லியிருந்தார். இந்த ஸந்தர்ப்பத்தை முன்னிட்டே மேற்கண்ட கடிதப்போக்குவரத்து நடந்திருக்கிறது. இதில் ஸ்ரீமான் நேரு கொடுத்துள்ள வாக்குறுதியளவுக்குக் கூட ராஜாஜீ ஸம்மதிக்காமல் பதில் கூறியிருப்பதுதான் மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. ஜின்னாவுக்கு நேருஜி அம்மாதிரி விடுத்த வாக்குறுதி அறிக்கை தமக்குத் தெரியாதென்றும், காங்கிரஸ் ஒரு ராஜ்ய உருவமென்பது உண்மையாயினும் ராஜ்யமில்லாத சில கார்யங்களையும் அதில் சேர்த்து நடத்தவேண்டியது அவச்யமாயிருப்பதாயும், தீண்டாமை விலக்கு வேலையும் ராஜ்யத்தில் அடங்கியிருப்பதாகத் தமது கருத்தென்றும், ஸநாதநிகளுக்காக இந்தக் காரியத்தைக் காங்கிரஸ் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லையென்றும், திருவாங்கூர் விளம்பரம் மிக நியாயமானதென்றே தாம் இன்னும் நினைப்பதாயும் ஆசாரியர் அசட்டையாகப் பதில் கூறியிருக்கிறார். இதிலிருந்து காந்திஜி, நேரு முதலியவர்களைவிட ஸ்ரீமான் ஆசாரியரின் மனோபாவம் மிகவும் விபரீதமாக இருப்பது நன்கு விளங்குகிறது. தீண்டாமை விலக்குப் போன்ற சீர்திருத்த விஷயமாகக் காங்கிரஸோ, வேறு எவரோ எது செய்தாலும் அதைக்கடைசி வரையில் எதிர்த்துப் போராட நம்தேசத்திலுள்ள தார்மிகர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள். ஆதலால் ஆசாரியாரின் பதிலைப்பற்றி ஒருவரும் பயப்படப் போவதில்லை. ஆயினும் ஒரு நல்ல ஸந்தர்ப்பத்தை முன்னிட்டுக் காங்கிரஸைப் பலப்படுத்தவும், அதன் பிரதிநிதித்வயோக்யதையை விசாலப்படுத்தவும், ஸநாதநிகள் சொல்லும் யோஜனையை இவ்வளவு எளிதாயும் அலக்ஷ்யமாயும் இவர் உதறித்தள்ளிப் பேசியது மிகவும் வருந்தத்தக்கது. காங்கிரஸின் எதிர்கால நிலையையும், அதில் தம்முடைய நிலைமை எப்படியாகப் போகிறதென்பதையும் கவனிக்காமலே இவர் இவ்வாறு அதிகார தோரணையில் பதில் சொல்லுகிறார். ராஜாஜி, காந்திஜிபோன்றவர்களுடைய வாளையே உதவாதென்று கூறும் காங்கிரஸ் அபேதவாதிகள் கர்ஜித்துக்கொண்டிருப்பதை இவர் நினைத்துப் பார்க்கவில்லை. அவர்கள் காங்கிரஸைப் பிடித்துக்கொண்டு ஸ்ரீமான் காந்தி, ஆசாரியார் போன்றவர்களை வெளியேற்றிவிடச் செய்யும் முயற்சி பலித்துவிடும் காலம் நெருங்கிவருகிறது. காந்திஜியும், ராஜாஜியும் விரும்புபவர்க்குக்கூட மதம் உதவாதென்றும் அதை அடியோடு தொலைத்துவிடவேண்டுமென்றும் அத் தீவ்ரவாதிகள் முயன்று வருகிறார்கள். இந்த நிலைமையில் ஸ்ரீமான் ஆசாரியர், காங்கிரஸ் என்னவோ தன் கையிலிருக்கும் ஸபைபோல் நினைத்து ஸர்வாதிகாரி தோரணையில் நமக்குப் பதில் கொடுப்பது விந்தையாயிருக்கிறது. இவருடைய நிலைமை இன்று இருப்பதுபோல் சாச்வதமாக நிற்கக் கூடியதில்லை. சறுக்கிவிழக்கூடிய ஒரு அபாயஸ்தலத்தில் தாம் நின்றுகொண்டிருப்பதை நினைத்திருந்தால் இவர் இம்மாதிரி பதில் சொல்லத் துணிந்திருக்கமாட்டார். எந்த விஷயத்திலும் ஒற்றுமை உணர்ச்சிகாட்டிப் பேசுவதே தலைவர்களின் லக்ஷணமென்பதை இந்தத் தலைவர் மறந்துவிட்டார்.

காங்கிரஸில் "தேசியம்" என்ற அம்சம் இருப்பதை முன்னிட்டு, அது தேச க்ஷேமகாமென்று கருதும் மதச் சீர்திருத்த விஷயத்திலும் பிரவேசிக்கலாமென்று ஸ்ரீமான் ஆசாரியார் நினைப்பதாகத் தெரிகிறது. நம் தேசத்தில் மகம்மதியர், கிறிஸ்தவர்போன்ற அனேக மதஸ்தர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸிலும் இவர்களில் சிலர் சேர்ந்திருக்கிறார்கள். ஆகலால் தேசியம் என்ற பாத்யத்தை முன்னிட்டு தேசத்தார் மீது காங்கிரஸ் ஆதிக்யம் செலுத்த பாத்யப்பட்டிருந்தால் மகம்மதியர் மதாசார விஷயத்திலும் அது பிரவேசிக்கப் பின்வாங்கக் கூடாதல்லவா? ஸ்ரீமான் ஆசாரியர் காங்கிரஸ் பெயரைச் சொல்லிக்கொண்டு ஹிந்துக்களிடம் உபத்ரவம் செய்யலாமேயன்றி மகமதியரிடம் இவருடைய ஜம்பம் சாயுமா? மகமதியமதச்சீர்திருத்த விஷயத்தையும் காங்கிரஸ் கவனிக்கும்படி இவர் செய்ய தைர்யம்பெற்றிருக்கிறாரா? அது செய்யாதவரையில் காங்கிரஸில் "நேஷனல்" என்ற பதத்திற்கு உண்மையான அர்த்தமிருப்பதாக இவர் சொல்லமுடியாது. எல்லா ஸமூஹத்தாரிடையிலும் மத ஆதிக்யத்தைச் செலுத்த தைர்யமில்லாதவரையில் ஹிந்துக்களிடம் மட்டும் தன் கைவரிசையைக் காங்கிரஸ் காட்டிவருமென்பது பயங்கொள்ளித்தனமும், அநீதியும் நிறைந்த கார்யமென்பதை இவர் உணரவில்லை. ஸ்ரீமான் ஆசாரியருடைய பதிலில் நேர்மையென்பதே காணக்கிடைக்கவில்லை. அஹம்பாவமும், அலக்ஷ்யமுமே நிறைந்திருக்கிறது. 'ஸநாதநிகளையும் ஒரு பொருட்டாக நினைத்துப் பதில் சொல்லுவதா, என்ற மனோபாவமே இத்தப்பதிலில் காணப்படுகிறது. இத்தகைய இறுமாப்பு நிலைமை மாறும் காலம் அதிக தூரத்திலில்லை. கக்ஷி பலத்தைக்கொண்டு ஆகாசத்தில் பறந்த பலதலைவர்கள் இன்று எவ்விதச் செல்வாக்கு மற்று மங்கி மூலையில் கிடக்கும் உலகசரித்திர ஸம்பவங்களையும், நம்தேச ஸம்பவங்களையும் ஸ்ரீமான் ஆசாரியார் மறக்காமல் மனதில் வாங்கிக்கொள்வது ஸமயோசிதமாகும்.

குறிப்புகள்.

முத்துரங்க முதலியாரின் மயக்கம்?

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக விளங்கிவரும் ஸ்ரீமான் முதலியார் காரைக்குடியில் தீண்டாதார் இல்லத்திறப்பு வைபவத்தில் ஸநாதநிகளுக்குச் சாஸ்திரம் சொல்லிக்கொடுக்க முற்பட்டது அஸந்தர்ப்பமாயிருக்கிறது. தீண்டாதாருக்குப் படிப்பும், நாகரிகமும் கற்றுக்கொடுத்து முன்னேற்றுவதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லையென்பது தெளிவு. சாஸ்திரமோ சம்பிரதாயமோ இதைத் தடுக்கவில்லை.

ஆனால் தீண்டாமைவிலக்கு, ஆலயப்பிரவேசம் என்பவை வேறு. இந்த இரண்டையும் ஸம்பந்தப்படுத்தாமல் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு நமது பெரியோர்கள் கூடப் பாடுபட்டிருக்கிறார்களென்பதே உண்மை. ஆனால் ஸ்ரீமான் முதலியார் இவ்விரண்டையும் குழப்பிப்பேசுகிறார். காரைக்குடியில் தீண்டாதாருடைய படிப்பு முதலிய ஸௌகர்யத்திற்காகக் கட்டிடத்தை இவர் திறந்துவைத்தார். அப்போது அவர்களுடைய பொதுவான முன்னேற்றத்தைப்பற்றியே இவர் பேசுவது பொருத்தமாயிருக்கும். அப்படியிருந்தும் இவர் அங்கு ஜாதிபேதம், ஆலயப்பிரவேசம் முதலியவைகளைப்பற்றி சாஸ்திரமும், ஸம்பிரதாயமும் பேசப் புறப்பட்டது அதிகப் பிரஸங்கமாகவே காண்கிறது. பிறப்பினால் ஜாதிபேதம் இல்லையென்று கீதையில் பகவானே சொல்லியிருப்பதாக ஸ்ரீமான் முதலியார் பேசுகிறார். இந்த விஷயத்தை இவரிடமிருந்து ஸநாதனிகள் நிர்ணயித்துக் கொள்ளவேண்டிய அவச்யமில்லை.

தீண்டாமை விலக்கு இயக்கத்தை காந்திஜீயே ஆரம்பித்து தர்மத்தை நாசமாக்கி வருவதாக ஸநாதனிகள் கூறுவது பிசகென்றும், ஸநாதனிகளின் ஆசார்யர்களாக விளங்கும் ஸ்ரீ ராமாநுஜர், அப்பர்ஸ்வாமி முதலியவர்களே இவ்விஷயத்தை நம் தேசத்தில் ஆரம்பித்தவர்களென்றும் ஸ்ரீமான் முதலியார் சொல்லுகிறார். தீண்டாதாருக்கு ஞானம் கொடுத்து அவர்களை பகவத்பக்தி உள்ளவர்களாக நம் பெரியோர்கள் செய்தார்களென்று ஸ்ரீமான் முதலியார் சொல்லுவதை நாமும் பெருமையுடன் அங்கீகரிக்கிறோம். ஆனால் அவர்களைக் கோவிலுக்குள் பிரவேசிக்க நம் ஆசார்யர்கள் அனுமதித்ததாக இவர் கூறுவது சாஸ்திரத்திற்கோ ஸம்ப்ரதாயத்திற்கோ ஏற்றதல்ல. இந்த குதர்க்க வாதத்தை இன்றுவரை ஆசார்யர்களில் ஒருவரும் அங்கீகரித்ததில்லை. தீண்டாமை முதலியவைகள் சரீரத்தைப் பற்றிய தோஷங்கள். அந்த சரீரமுள்ள அளவும் அவைகளை மாற்ற முடியாது என்று ஸ்ரீ ராமாநுஜரே பலவிடங்களில் நிர்ணயித்திருப்பதை ஸ்ரீமான் முதலியாரோ, இவருடைய சீர்திருத்தக் குருக்களோ எங்ஙனம் அறிவர்? ஆத்மாவைப் பற்றியவரையில், எல்லா மனிதர்களும், எல்லாப் பிராணிகளும் ஸமமென்ற ஸித்தாந்தத்தையே சைவ, வைஷ்ணவப் பெரியோர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வித்யாஸத்தை அறியாமலும் முன்னோர்களுடைய புஸ்தகங்களை நன்கு படிக்காமலும், ஒருவர் சொல்லிக்கொடுத்த அபத்தத்தையே முதலியார்போன்ற மற்றவர்களும் கண்மூடித்தனமாகத் திருப்பி ஒப்புவித்துக்கொண்டிருப்பது எவ்வளவு அறியாமை என்பதை நாம் விவரிக்க வேண்டிய

ஸி. ரா. ஆசாரியாரின் தூண்டுதலே!

ஹிந்துமத புனருத்தாரணத்திற்காக ஒரு பண்டித பரிஷத் கூட்டவேண்டுமென்று சீர்திருத்தவாதிகள் முயன்றுவருவதைப்பற்றிய பேச்சு அதிகரித்து வருகிறது. சென்னையிலுள்ள ஒரு தர்க்கஸபையில் இதைப்பற்றி நடந்த சர்ச்சையில், முதன் மந்திரியாக வரப்போகிற ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியர் சில அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். அதைக் கவனிக்கையில் இந்தப் பரிஷத் கூட்டும் யோஜனையானது இவருடைய தூண்டுதலாலேயே உண்டாயிருக்கவேண்டுமென்று நினைக்க இடமாயிருக்கிறது. டாக்டர், சுப்பராயன் ஸ்ரீமான் ரங்கய்யர் இவர்கள் மூலமாக ஆலயப்பிரவேசச் சட்டத்தை செய்துவிட இவர் படாதபாடுபட்டவரல்லவா? அத்தகையவர் இப்போது தமக்குக் கிடைத்திருக்கும் ஒரு நல்ல ஸந்தர்ப்பத்தை ஏன் விணாக்கவேணும்? தமது கையாள்களைக் கொண்டு அந்தச் சட்டத்தை நிறைவேற்ற இவர் நிச்சயித்திருக்கிறார். எலெக்ஷன் காலத்தில் பலர் வாக்குறுதிகேட்டும் இவர் அதைக் கொடுத்துத் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள மறுத்தும்விட்டார். அதோடு, உடனே ஒரு சிறந்த ஆலயப்பிரவேச மசோதாவைக்கொண்டுவந்து நிறைவேற்றும்படி தஞ்சையில் பேசியிருக்கிறார். ஆதலால், தாம் செய்ய நிச்சயித்துள்ள வேலைக்கு பின்பலமாகப் பண்டித பரிஷத்தின் அபிப்பிராயமும் இருக்கவேண்டுமென்று இவர் விரும்புகிறார். இதை அவர் சென்னை தர்க்க ஸபையில் ஸ்பஷ்டமாக வெளியிட்டிருக்கிறார்.

சட்டசபைக்கு இத்தகைய மசோதாவைக் கொண்டு வர அதிகாரம் கிடையாது என்று சிலர் வாதிப்பதாயும், ஆனால் தமது அபிப்பிராயப்படி சட்டசபைக்கு ஆலயப்ரவேச சட்டம் செய்ய அதிகாரம் உண்டென்றும், அதற்குப் பின் பலமாகப் பண்டித பரிஷத்தின் ஸாதக அபிப்பிராயமும் இருந்தால் வெகு சுலபமாகச் சட்டம் செய்துவிடலாமென்றும் இந்த ஸௌகர்யத்திற்காகவே பரிஷத் யோஜனை செய்யப்பட்டிருக்கிறதாகவும் அவர் பேசியிருக்கிறார். பண்டிதர்கள் நிஷ்பக்ஷபாதமான மனதுடன் பரிஷத்திற்குப் போய் அபிப்பிராயம் சொல்லவேண்டுமென்றும் இவர் வாதிக்கிறார். பரிஷத்தை நடத்த முன்வந்திருப்பவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆலயப் பிரவேசாதி சீர்திருத்தத்திற்காகவே பரிஷத் நடத்துவதாக வ்யக்தமாய் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்க பண்டிதர்கள் பக்ஷபாதமற்ற மனதுடன் அங்கு போகவேண்டுமென்று விதிப்பது விரோதமாய் இருக்கிறது. "ராமனையும் கொல்ல வேண்டும் ஸீதையையும் விடக்கூடாது, இதற்கு ஏற்றபடி யோஜனை சொல்ல வேண்டு"மென்று ராவணன் கேட்டது போலவே சீர்திருத்த வாதிகள் பண்டிதர்களைக் கேட்கப் போவதாக வெளியிட்டிருக்கிறார்களல்லவா? இந்த யோஜனைக்கு நிஷ்பக்ஷபாதிகளான பண்டிதர்களை ராஜாஜீ எதற்காக அழைக்கிறார்?

பற்பல ஜாதிமத ஆசாரங்கள் உள்ள ஒரு மாகாணத்தின் நிர்வாக அதிகாரியாக வரக்கூடிய ஸ்ரீமான் ஆசாரியர் இவ்வாறு ஒரு பெரிய வகுப்பாருக்குத் தீங்குசெய்து நீண்ட கால வழக்கத்தையும் த்வம்ஸம் செய்து குழப்பம் விளைவிக்கும் மனப்போக்கு உள்ளவராய் இருப்பது நியாயமா? இவருடைய நிர்வாகம் நிஷ்பக்ஷபாதமாய் இருக்குமா?

சர்க்காரிடம் இவர் உறுதிமொழி கேட்பது நியாயமானால், இவரிடம் தார்மிகர்கள் உறுதி கேட்பதும், அது கொடுக்கப்படாதவரையில் இவருடைய நிர்வாகத்தில் ஸந்தேகமும் பயமும் கொள்வதும் ஆக்ஷேபிக்கக்கூடி

வியாபாரக்குறியில் தெய்வ பிம்பங்கள்.

பம்பாய் வியாபாரஸங்கத்தார் கவர்ன்மெண்டாருக்கு மேற்கண்ட விஷயமாக முக்யமான வேண்டுகோள் ஒன்றைச்செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் உற்பத்திசெய்யப்பட்டும், அன்னிய தேசங்களிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டும், வருகிற வியாபாரப்பொருள்மீது நமது தெய்வபிம்பங்களை வியாபாரக்குறியாகப் போடுவதைச் சட்டப்படி தடைசெய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதனால் வரும் தீமைகளை இவர்கள் நன்கு அறிந்துகொண்டு இவ்வித முயற்சி எடுத்தது பாராட்டத்தக்கதே. அதற்கு மற்ற மாகாணத்திலுள்ள பொது ஜனங்களும் வியாபாரஸ்தாபனங்களும் பின்பலமாயிருக்கவேண்டியது அவச்யமாகும்.

இப்போது இந்தியாவில் காணப்படும் வியாபாரக்குறிகளில் பெரும்பாலும் ஹிந்துக்களுடைய தெய்வ பிம்பங்களே காணப்படுகின்றன. மஹம்மதியர் கிறிஸ்தவர் போன்றவர்களுடைய தெய்வ பிம்பங்களோ, பெரியோர்களின் சின்னமோ, பெயரோ எங்கும் காணப்படவில்லை. "விநாயகர் சுருட்டு" "கிருஷ்ணன்மார்க் பீடி, ஹநுமான்மார்க் சோடா" இத்யாதிகளான பல ஆபாஸங்கள் கடைத்தெருவெங்கும் காணப்படாத இடமேயில்லை. வியாபாரக்குறிகளில் தங்கள் தெய்வங்களையோ, மதப்பேச்சுக்களையோ உபயோகப்படுத்தக்கூடாதென்று மஹம்மதியர்கள் கிளர்ச்சிசெய்து வெற்றியடைந்து விட்டார்கள். ஹிந்துக்களாகிய நாமோ இதன் அனர்த்தத்தை இன்னும் உணரவில்லை. நம்முடைய தெய்வங்களும், மத தத்வங்களும் அபசாரப்படுத்தப்படுவதை நம்மவர்கள் கவனிக்கவேண்டாமா? ஆபாஸ வஸ்துக்களின் மீது நம் தெய்வசின்னங்கள் வரையப்படுவது நமக்கு உறுத்தவில்லையா? ஆகையால் இந்த வழக்கத்தைத் தடுக்க ஹிந்துக்கள் யாவரும் சேர்ந்து முயற்சிசெய்து நம் தெய்வங்களின் ஸௌரவத்தைக் காப்பது அவச்யமாகும்.

தெய்வ பக்தன்.

வைஸிராய் அறிக்கை.

காங்கிரஸ்கார் மந்திரிப்பதவியை ஏற்கும் விஷயமாக நடந்துவரும் தகராறைப்பற்றி கனம் வைஸிராய் நீண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். ஏற்கனவே இந்தியாமந்திரி அறிக்கையாலும் காந்திஜியின் வியாக்யானத்தினாலும் அபிப்ராயபேதங்கள் அநேகமாக மறைந்து, ராஜிநாமாவா, டிஸ்மிஸ்ஸா, என்ற சர்ச்சையே பிரபலப்பட்டு நிற்கிறது. இவ்விஷயங்களைப்பற்றிராஜப்பிரதிநிதி அறிக்கையில் நீண்ட விமர்சனம் செய்து இரண்டுக்கும்வித்யாஸமில்லையென்பதை நிரூபணம் செய்திருக்கிறார். புதியஅரசியல் சட்டப்படி மாகாண நிர்வாஹம் பூராவும் மந்திரிகள் வசம்விடப்பட்டுவிட்டதென்றும் இதில் கவர்னர்கள் குறுக்கிட அவகாசமேயில்லையென்றும், விசேஷாதிகாரங்கள், மிகுந்த ஸங்கடகாலத்தில் ஏதோ சில விஷயங்களுக்காகவேவைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனவென்றும் அந்தவிசேஷாதிகாரங்களை உபயோகிக்கவேண்டிய ஸந்தர்ப்பமே நேராதென்றும், ஆதலால் புதிய அரசியல் சட்டத்தையாவரும் பிரீதியுடன் ஏற்று அமுல்நடத்தி வைக்கவேண்டுமென்றும் கோரியிருக்கிறார். ஆதலால் வைஸிராய் அறிக்கையில் பொதுவாகப்புதிய அம்சமொன்றுமில்லை. ஏப்ரில் மாஸம் முதல் தேதியில் ஏற்பாடாகியிலை [illegible]

இருந்துவருகிறது. இந்த அறிக்கையால் எவ்வித மாறுதலும் இல்லை. இனிகாங்கிரஸ்காரர்களே இதில் முடிவுகூறவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஸர்க்காரைப்பற்றிய முடிவுதீர்ந்துவிட்டது. ஜூலைமாதம் 5உ காங்கிரஸ் கார்யக்கமிட்டி கூடி இதைப்பற்றி ஆலோசிக்கும்.

வாரக் குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா.)

இஃதன்றோ தேசீய உணர்ச்சி:— வங்காளிகள் தேசாபிமானத்திலும் சிறந்தவர். சமீபத்தில் அவர்கள அணியும் பஞ்சகச்சவேஷ்டியே உத்யோகர்களுக்கு ஏற்ற உடுப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கவர்னரை வேண்டிற்று. அவரும் அதை ஏற்கும் நிலையாயிருக்கிறார். நமது தக்ஷிண தேசத்திலோ வெய்யில் காலத்திலும் படுக்கையிலும் கூட சிலர் சொக்காய் அணிகின்றனர். உத்யோகமில்லாமலிருந்தும் ஸ்வல்ப சம்பள உத்யோகத்திலும் நஜார் ஹேட் முதலிய தூராசாங்களைக் கைக்கொள்கின்றனர். அந்தோ!!

பரீக்ஷை பலி:— S. S L. C. பரீக்ஷையிலும் அதற்கு குறைந்த இதாவகுப்பிலும் தோதமானவர் அவமானமல்லது பயங்காரணமாக எத்தினைபேர் ஒவ்வோர் ஆண்டுக்கும் தற்கொலை செய்து கொள்கின்றனர். அல்லது வீட்டைவிட்டு ஓடுகின்றனர் என்பதைக் கணக்குப் பார்த்தால் மனித ஸமூக நன்மையை நாடுவோர் பரீக்ஷை ஸம்ப்ரதாயத்தையே எடுத்துவிட கிளர்ச்சி செய்வர். ஒன்றுமில்லாத விஷயத்தில் ஆர்பாட்டம் செய்வோர் இதை கவனிப்பாரா,

நல்ல நிருபர் வேண்டும்:— திருவாங்கூரில் கொச்சியிலும் நடக்கும் தர்மப்ரசாரம் அரசாங்கபீதியாலும் சீர்திருத்தக்காரநிருபர்களாலும் வெளிவருவதில்லை தவறி எவரேனும் எழுதிவிட்டாலும் தேசிய பத்திரிக்கைகள் அதை பிரசுரிப்பதில்லை. ஆதலின் தர்மாபிமானமுள்ள ஆஸ்திகநிருபர் நமது ஆர்யதர்மத்தில் அவைகளை ப்ரசுரப்படுத்த வேண்டுகிறோம்.

உண்மையானால் கண்டிப்போம்:— மதுரைக்கு அருகில் ஒரு அந்த்யஜர் "தீண்டக்கூடாதாம்" என்று பாடியதற்காக ஜாதி ஹிந்துக்களால் கொல்லப்பட்டாரென நிருபர் எழுதுகிறார். இவரும் ஆத்திரமுண்டாகும்படி ஏதேனும் செய்திருக்கலாம். கொலை செய்பவரும் கோபியாக இருக்கலாம். இருந்தாலும் இதுமாத்ரம் கொலைக்குக் காரணமாகத் தோற்றவில்லை. எப்படியாயினும் கொலை கூடாதென்பதுடன் இந்த பாட்டே கொலைக்கு ஹேதுவானால் கொலையை நிச்சயமாக கண்டிக்கவேண்டும். பரஸ்பர வெறுப்பை கிளப்பிவிட்ட புண்யம் காந்திஜியையும் காங்கிரஸையும் சாரும்.

புனயுத்தசபை:- மாருதிகோவிலில் வாத்யம் வாசிக்கக் கூடாதென்று அரசாங்கம் ஒருதலைபக்ஷமாக செய்த உத்தரவை மீறி பலர் இந்துக்கள் உரிமையை நிலைநாட்டினர். அடுத்த வருஷமும் இத்தகைய வழக்கு நேரிடின் ஸேவைபுரிய ஸித்தமாக இருக்கும் ஓர் சபை ஷி பெயரால் அழைக்கப்படுகிறது. அவர்களது தைர்யத்தை மெச்சினாலும் யுத்தம் என்ற பெயரை (எக்காரணத்தால் வைத்தாரோ) மாற்றலாம்.

ஸ்ரீஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
Jagannathapuram
Maruter
East Godavary Dt.,

வரதக்ஷிணைக் கொடுமை.

(நாகூர் N. நாராயணசாமி அய்யர்)

குணம் நிறைந்த நமது பிராமண சமூகம் தற்சமயம் குறைகொண்டு உலகத்தவர் ஒருமிக்க சேர்ந்து நம்மை தூஷிக்கக்கூடிய காலம் ஏற்பட்டிருப்பதானது நமது நடத்தையையும் நம்முள் ஒற்றுமை இல்லாததையும் தான் குறிக்கா நிற்கும். நம்மிடமுள்ள ஒற்றுமையில்லா வாழ்வை நிரூபணம் செய்ய போதிய சான்றுகள் அனேகமிருப்பினும் ஈண்டு முக்கியமாக நமது சமூகத்தில் பரவி அனேகவிதமான இடுக்கண்களை விளைவித்து வரும் 'வரசுல்கம்' என்னும் ஒரு விஷயம்பற்றி மட்டில் ஆராய்வோம்.

'லௌகிக நிர்பந்தம் ஏற்படாத முற்காலத்திலேயே ஒரு கன்னிகையுண்டானால் தகப்பனுக்கு மிக்க கஷ்டமேயன்றி சுகமென்பது கிஞ்சிற்றேனும் இல்லை. இவ்வித கஷ்டத்தில் 'வரதக்ஷிணை' என்ற தீய லௌகிக நிர்ப்பந்தமும் ஏற்பட்டு உச்சஸ்தாயிலிருந்தால் கன்யாபிதாக்களின் கதி என்னவாகுமென்பதையும் ஆகியிருக்கிறதென்பதையும் நினைக்குந்தோறும் மனம் திகிலடைகின்றது. ஓர் கன்யாபிதா புலம்புகின்றார்:—"என்ன ஐயா நமது சமூகம். என் குழந்தைக்கு வயது 15 நிறைந்து 16-ம் பிராயம் நடக்கின்றது. வரனுக்கு நான்கு ஐந்து வருடகாலமாய் அலையாத இடம் கிடையாது. ஆகாசத்தில் அரைகுழி நிலங்கூட இல்லாதவர்களும், அறைவயிற்று கஞ்சிக்கு சம்பாதிக்க வழி தெரியாதவர்களும் வரதக்ஷிணை கேட்டு வாங்கி முடிந்து வைக்க வாயைப் பிளந்துகொண்டிருக்கிறார்களென்றால் மற்றவர்களைப்பற்றி கேட்கவும் வேண்டுமா. எனது அந்தஸ்துக்கு தக்கபடி நான் பார்த்த வரன்களில் ஒருவராவது வரதக்ஷிணையில் ரூ. 500க்கு குறைந்து கேட்டவர்களல்ல. அதோடு நில்லாது ஜாப்தாவேறு போட்டு கொடுத்து அதின்படி சீர் செய்ய வேண்டுமென நிர்பந்திக்கிறார்கள். கையில் இருந்தால் கேட்கிறபடி கொடுத்துவிடலாம். வஞ்சனை இல்லை. என் குழந்தைக்கு செய்ய எனக்கு ஆசையில்லையா. ஒருவர் சொல்லித்தானா செய்யவேண்டும் என்ன நிர்பந்தம் ஐயா இது. ஒருவேளை ரூ 500 இருந்து கேட்கிறபடி கொடுத்து விடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். அத்துடன் பிள்ளை வீட்டார் திருப்தி யடைந்து விடுகின்றார்களோவென்றால் ஒருபோதுமில்லை. ஆடி என்றும், ஆருமாதம் என்றும், தீபாவளி என்றும், சாந்தி என்றும், பெண்வீட்டார்கள் கழுத்தை அறுத்துவிடுகின்றார்களையா. செய்ய மறுத்தால் முடிவு பெண்தலையில் வந்து விழுந்து, புருஷன் மனைவிக்கு தீராப்பகையை விளைவிக்கிறது. என்ன காலம்! மாதம் இருபது ரூபாய் சம்பளத்தில் மானமாய் குழந்தை குட்டிகளை வைத்துக்கொண்டு காலக்ஷேபத்துக்கு போதும் போதாததாய் குடித்தனத்தை நடத்திவரும் யான் எத்தவிதமாய் மிச்சப்படுத்துகிறது. ஏதோ எனது சம்சாரத்தின் காதில் கழுத்தில் உள்ள நகைகளை விற்று, குழந்தையின் காது கழுத்து மூக்குக்கு பங்கமாயில்லாமல் செய்து, எனது அந்தஸ்துக்கு தக்கவாறு ஒன்றும் ஒளிக்காமல் சீர்வகையறு செய்து, சாஸ்திர விதிப்படி கொஞ்சமேனும் வழுவுதலில்லாது நான்கு நாள் கல்யாணம் செய்வது என்பது எனது மனப்பூர்வமான எண்ணமாகும்.

குழந்தையை வைத்து அன்பாக ஆதரிக்கக் கூடியவனும், நற்குடியில் பிறந்தோனும், பகவத்பக்தியில் ஈடுபட்டு நல்லஆசாரத்தோடு கூடிய ஓர்வரன் மாதம்1-க்கு ஐந்துரூபாய் சம்பாதித்தாலும் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன். அதற்கும் காலம் இடங்கொடுக்கவில்லை, துரிதமாகப் பார்த்துக் கொடுப்போமென்றாலோ, எனக்கு வயது 40- ஆகிறது. எனக்கு வரும் மாப்பிள்ளை என்னைவிட வயதில் மூத்தவராக இருப்பது என்ற சங்கை முன் நிற்கிறது. இவ்விஷயத்தில் பார்வைக்கு தாத்தாவாக இருக்கும் ஒருவரிடமா குழந்தையை கிளியை வளர்த்து பூனை கையில் கொடுப்பதுபோல் கொடுப்பது என்ற எண்ணம் மேலோங்கி மனமிடங்கொடுக்கவில்லை. முப்பது வயதுக்குள் துரிதமாக ஒன்றுமில்லையா என்று கேட்டால் இருக்கின்றது. அதற்கு ஒவ்வொன்றுக்கும் குழந்தை குட்டிகள் 4, 5 வரனர் வரதக்ஷிணையில் குறைய மறுக்கிறார். இதை வாங்கித்தானே எனது பெண்ணுக்கு அடுத்த வருஷமாவது கல்யாணம் செய்யவேண்டும் என்கிறார். ஐயோ பாவம்! என்னடி இது 15-வயது வரைப் பெண்ணை குதிர்மாதிரி வச்சண்டிருக்கா! விழுந்தவன் காலில் விழுந்தாவது தலைகட்டி விடாமல் நன்னா வச்சண்டிருந்தா! என அக்கம் பக்கத்தார் தனது பேத்திகளையும்; பெண்களை 18-வயது வரை வச்சண்டு இருந்து போன மாதம்தான் விவாஹம் செய்துகொடுத்ததையும் மறந்து அறையும் அபவாதச் சொற்களை தாங்க முடியவில்லை. ருதுமதி விவாகம் சாஸ்திர ஸம்மதமாகாது. குலக்ஷயம் ஏற்பட ஹேதுவாகும் என்பதை நன்குணர்ந்து நான் படாதபாடெல்லாம் பட்டும் எல்லாம் விழலுக்கிறைத்த நீர்ப்போலாகியது. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற முதுமொழி என் விஷயத்தில் பலனளிக்கவில்லை. என் செய்வது. எம்தலன் அருகிருக்க அம்பை சேர்வதின் கருமமென்ன.

வரதக்ஷிணை கேட்கும் பிள்ளை வீட்டார்களுக்கு தனக்கு ஒரு பெண் இருந்து கானம் வறுமையில் ஈடுபட்டு மானம் மரியாதைக்கு அஞ்சுபவர்களாயிருந்தால் என்ன கஷ்டத்தை அடைவோம். அதைப் போலத்தானே அன்னியரும் என்ற ஞானம் கிஞ்சிற்றேனும் இருக்குமேயாயின் ஸத்நெறியினின்றும் தவறி நடவார்களன்றோ. எங்குடி எக்கேடு கெட்டாலுமென், நம் காரியம் ஆனால் சரி என்ற சுயநலம் வேரூன்றியவர்களாகி சற்றேனும் மனங்கூசாமல் பிறர் துன்பம் நோக்காது கொடுமை புரிகின்றார்கள். நம் சமூகத்தின் ஒற்றுமை இதுதானோ? ஸத்திய நெறியில் முதல் ஸ்தானம் பெற்றுள்ள நம் சமூகத்தின் விபரீதப்போக்கு இதுதானோ? குலம் கோத்ரம் ஒன்றும் வேண்டாமாம். ஸத் ஆசாரம் வேண்டாமாம். ஸத்யநெறி வேண்டாமாம். பணமிருந்தால் போதுமாம். பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே போனும். 'இன்றைக்கு ஆளுவார் நாரி, நாளைக் கையிலெடுப்பார் ஓடு' உடல் ஒன்றுக்கும் உதவாக்கூடு, அதை உற்றுப்பார்த்தால் வெட்கக் கேடு என்ற வசனத்தை இவர்கள் அறியார்போலும். நமது உயரிய சமூகத்தின் கண்ணே ஒற்றுமையும் கட்டுப்பாடுமிருப்பின் நமது புத்திரியின் சிறப்பு இப்படியாகுமா, எல்லாவற்றிற்கும் கடவுள்தான் இருக்கின்றார்" என்று சொல்லிமுடித்தார்.

தனது குற்றங்குறைகளை வாய்விட்டுச் சொன்னாலாவது ஒருவாறு நீங்காதா என்ற எண்ணத்துடன் தெரிவித்த அந்தணோத்தமர் எல்லாம் தெரிந்தவராயும் அறிவிற் சிறந்தும் வயதில் முதிர்ந்து விளங்கினனும், அன்னவர்களின் துயரமொழிகளை செவிசாய்த்துவிட்டு ஏதாவது ஆறுதல் வார்த்தைகள் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஆகவே அடியில் கண்டவாறு சொல்லலுற்றேன்.

ஓர் காலத்தில் பார்வதி மஹாதேவனைப் பார்த்து நாதா! சச்சிதானந்தத்தை அடையும் மார்க்கம் யாது என்று வினவிய காலத்தில் "நம்பிக்கை" என்றார் மஹாதேவர். ஆகவே தங்களுக்கு கடவுளின்பேரிலிருக்கும் திடமான நம்பிக்கைக்கும், தங்களின் பரிசுத்த மனதுக்கும், சீரிய ஒழுக்கத்துக்கும், அக் கருணாநிதி கருணை செய்யாமலிரான். எதுவரினும் வருக. நம்பிக்கையும் தைரியத்தையும் மட்டும் இழக்கக் கூடாது. கடவுளின் சித்தமன்றி யாம் ஒன்றும் செய்வது இயலாது. தங்களின் மனக் குறைகளின் எல்லாவற்றையும் எல்லாம்வல்ல பரந்தாமன் அறிவினாலினிற் சூரியனைக்கண்ட பனிபோல் போக்கப்போகின்றான். அவற்றினை நாம் பிரத்தியக்ஷமாக சீக்கிரத்தில் அனுபவிக்கலாம். என்னமோ யான் சிறியனாயிருந்து சொல்லுகிறேன் என்று எண்ணவேண்டாம். வரதக்ஷிணை என்பது மகத்தான கொடிய வழக்கந்தான். இவ்வழக்கம் என்று அடியோடு ஒழிந்து நம்முள் சகோதரபாவம் ஒற்றுமை ஏற்படுகிறதோ அன்று தான் நமது சமூகத்துக்கு விமோசன காலமாகும். இவ்வரதக்ஷிணை என்னும் கொடிய பழக்கத்தின் காரணமாய் எவ்வளவு குடும்பங்கள் தத்தளித்து கடன்கொண்டு தவிக்கின்றதென்பதும் தவித்தது என்பதும் கணக்கிட முடியாததாகும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல் என்னும் நற்கொள்கைகளை நாம் அனுஷ்டிப்பது இவ்விதந்தானோ! என்ன விந்தை! நமது சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் சாபம் போதும். தங்கள் வாக்கினால் ஒன்றும் சொல்ல வேண்டாம். நம் சமூகம் மெய் நடையை ஆஸ்ரயித்து பண்டைய பெருமையுடன் வாழ மட்டில் அனுக்கிரஹம் செய்ய செய்யவேண்டுமென வேண்டிக்கொண்டேன். அன்னாரும் அப்படியேயாகுக என்று அன்பு ததும்பும் அருமை மொழிகளால் அனுக்ரஹம் செய்து போயினர்.

திருக்கியில் கலஹம்.

ஜாதி சீர்திருத்தம் காரணம்.

திருக்கியில் டேக் என்ற பிரதேசத்தில் கூர்து ஜாதியாரிடையில் ஸர்க்கார் சில சீர்திருத்தங்களைச் செய்ய முயன்றனர். இதனால் ஆத்திரமடைந்த அந்த ஜாதியினர் பெரும் கலஹம் செய்தனர். ஸர்க்கார் அவர்களை எதிர்த்துப் போராடினர். இந்தக் கலகத்தில் இருதரப்பிலும் 500-பேர் காயமடைந்தும் ஸர்க்கார் தரப்பில் 13-பேர்களும், எதிரி தரப்பில் 18-பேர்களும் கொல்லப்பட்டுப்போனதாகத் தெரிகிறது.

உயர்ந்த புஸ்தகங்கள்.

மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் எழுதப்பட்டன.

	ரூ அ.
மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்—பாகம் 1	2—0
” ” 2	2—0
உதயணன் சரித்திரம்	1—0
மணிமேகலைக் கதைச்சுருக்கம்	0-10
புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்	0-12
நான் கண்டதும் கேட்டதும்	0—6
புதியதும் பழையதும்	0—9
கனம் கிருஷ்ணையர்	0—8
கோபாலகிருஷ்ண பாரதியார்	0—8
மஹா வைத்திநாதய்யர்	0—6
திருவள்ளுவரும் திருக்குறளும்	0—3

கிடைக்குமிடம்:— ஸ்ரீஜனார்த்தன பிரிண்டிங் வொர்க்ஸ், (லிமிடெட்), கும்பகோணம்.

முக்கிய கவனிப்பு
(3 வருஷத்திற்கு உத்திரவாதம் உள்ளது)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூராஸ் ப்லேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர்:— என். கன்னூசாமி பத்தர். பெரியதெரு. கும்பகோணம்.

375

Registered No. M. 291

The Arya Dharmam.

ENGLISH SUPPLEMENT.

Vol. 22] KUMBAKONAM, THURSDAY 24th JUNE 1937. [No. 24

Congress and Hindu Religion.

C. Rajagopalachari refuses to give Assurance of neuturality.

Full text of Correspondence.

Madras, 28th April 1937.

After reading the statement made by Pandit Jawaharlal Nehru, which is much to be appreciated, I have issued open letters to the press requesting you and Mr. Gandhi to make similar statements.

Please find enclosed herewith my open letter to you, which is being issued today to the press.

(Sd.) T. S. Ramaswamy Iyer.

Madras, 28th April 1937.

You have asked the Nationalist press to shut its eyes to the Kudalmanikkam temple situation, but I believe it has opened their eyes more than ever to the impending crisis between the two sister States of Travancore and Cochin.

You know full well that the vast majority of the people of British India as well as the people in the Native States including Travancore and Cochin are against the Temple Entry Proclamation. It will be sheer folly, whatever your ideas may be in the matter, to pursue the Proclamation any further. It had better be repealed immediately.

You might have noticed Pandit Jawaharlal's latest statement that the Congress is purely a political organization. We hope that you will follow up the lead given by the Indian National Congress President and issue a similar statement now at least. Nor is that enough. You should go a step further and try in all possible ways that lie in your power to avert the impending crisis between the two sister States, by working for the repeal of the Travancore Temple Entry Proclamation, which has neither done the Congress any good, nor the Harijans any good, nor the two States any good, but which has only served to create untold trouble and worry for all people. In the interests of public weal, we trust, Sir, that the great patriot you are, you will leave no stone unturned to see that out of the present confusion, complete calm is evolved and the Travancore Temple Entry Proclamation is repealed.

(Sd.) T. S. Ramaswamy Iyer.

Madras, 3rd May 1937.

I still consider that the Travancore Temple Entry Proclamation is a good and noble act and will serve Hinduism as nothing else has done in modern times. I hold this opinion in spite of what the Cochin Durbar has done. I did hope that the Koodalmanikkam quarrel would subside in favour of civilization if we ignored it, but I find that Orthodoxy is not in a mood to allow it. I am afraid now that I must give up my hopes in that matter and the public will have to examine the situation and take steps to condemn the Cochin attitude.

Pandit Jawaharlal's opinion that the Congress is a purely political organization is quite right and does not affect the situation as regards what Hindus should do as Hindus and lovers of Hinduism. Some of us are not only Congressmen. We have also other interests in life besides politics. Moreover the contribution that Hindus should make to politics is inextricably mixed with their attitude towards a better ordering of Hindu society. I thank you for calling me a great patriot. What little merit I have in that direction urges me to hope and pray that friends like you may take up a better attitude in this matter.

(Sd.) C. Rajagopalachari.

Madras, 7th May 1937.

I thank you, on behalf of my Sangha, for your letter of the 3rd instant, but I regret to have to note that you should still think the Travancore Temple Entry Proclamation a good and a noble act.

I am glad, at any rate, you agree with Pandit Jawaharlal that the Congress is a purely political organization. That being so, what objection can you possibly have, as one of the accredited leaders of the Congress, for issuing a statement that the Congress is purely a political organization, and as such, has got nothing to do with religion, much less any intention to interfere in religious or socio-religious matters.

People do have other interests in life, besides politics, and that is why politics should be kept above our other sympathies. We have no objection to reformists of any group or school of thought, trying their best as reformers to introduce reform in Hinduism and into Hindu society. What I and my Sangha strongly object to is that the premier political party of the country, the Indian National Congress, should involve itself in any social and religious reform, or openly support any religious or socio religious enactment brought forward by some body.

I think the position will now be quite clear to you that by its very own constitution the Congress cannot partake or openly support any religious or socio-religious measure, the Congress being primarily a political party, created with the sole object of fighting for India's political redemption.

Further, I would like on behalf of my Sangha to point out that in the event of your issuing a stament that the Congress, I mean, the Indian National Congress, will not interfere in religious or socio-religious matters, I would be in a position to persuade my Sangha to close up our differences with the Congress and join its ranks immediately and lend their every support in its noble struggle for the political emancipation of the country. Like many, we too have our objects in life besides politics, and the moment you can persuade yourself to issue a statement similar to that of Pandit Jawaharlal Nehru we are one with you politically, our ambitions remaining the same as those of the Congress, while we claim our patriotism as second to none.

I shall be very thankful to you if you will issue a statement to that effect to the press.

(Sd.) T. S. Ramaswamy Iyer.

Madras, 12th May 1937.

I have not seen the statement of Pandit Jawaharlal you refer to. If he has issued a statement that satisfies you, there is no necessity for anyone else to issue a similar statement.

If you want the Congress to give up the programme of the removal of untouchability or give an undertaking not to agitate for reform or justice in regard to matters which touch religion as well as social and political issues, such an undertaking cannot be given. So long as Congress is a national and political organisation, it must deal with all matters touching politics and cannot exclude any matter on the ground that it touches also religion or social structure.

The limitations and scope of Congress cannot prevent leaders of the Congress from giving the weight of their support to causes touching religion or society. I am not aware that you have any grievance in regard to the official activities of the Congress as such.

I am very glad to note that your Sangha is inclined to join the ranks of the Congress and lend its support in the political struggle. But no statement on my part should be necessary for carrying out such a good object. I have explained above the position as clearly as I can.

(Sd.) C. Rajagopalachari.

(Continued in next page.)

Madras, 3rd June 1937.

I am in due receipt of your letter of the 12th ult.

The statement that I refer to is the one issued by Pandit Jawaharlal Nehru on the 26th ult. (Vide Hindu, page 10 column 3 & 4 of Tuesday the 27th April) In the statement he says *Inter alia* as follows:—

'The Congress is a political organization dealing also inevitably with economic problems, for these problems affect the masses of India more than anything else. The objective of the Congress is political independence that is, capture of power by the people of India, irrespective of their religion. Every Indian of the hundreds of millions who inhabit this country must be a sharer in this power and must benifit by the new order that we strive for. For, ultimately, it is this order which removes our crushing poverty and unemployment which we work for. Subjection and poverty are the common lot of Indians, whatever their religion might be. Freedom and economic and cultural betterment must also be the common lot of all of us. In its struggle to obtain this the Congress offers a common platform to all and because it thinks in terms of the masses and their betterment, it goes to them, organises them advises them and seeks strength and guidance from them.

'The Congress being a political organization does not concern itself with religion or connected matters, but religion and culture being important matters in the life of many individuals, it is right that they should want to know how these are viewed by the Congress. Therefore, the Congress declared at Karachi and subsequently in the clearest language that the fundamental and basic right of all Indians must contain provisions for free exercise of religion, for freedom of conscience, for protection of the culture, language and script of the minorities and further that all citizens, whatever their religion or caste or sex, were equal before the law and in regard to public employment, office, trade or calling, the franchise must be on a basis of universal adult suffrage.

"This assurance has been repeated in the Congress election manifesto and is the basis of all Congress policy. It applies to all majorities and minorities alike and it is unthinkable that the Congress will ever vary it.

"Having given this solemn assurance, the Congress has nothing further to do with religion or cultural matters and it pursues its political struggle........"

In the Madras Mail of the 21st ultimo, page 9, last column, you will find a report about the League Parliamentary Board given by the Allahabad Correspondent of the Pioneer. Under the heading "What Muslims will demand," he reports as follows:—

"In this connection, it is understood, Muslims will ask the Congress to reiterate its Karachi resolution on fundamental rights which laid down that "The culture language and script of the minorities and of different linguistic areas shall be protected."

"Another demand of Muslims will be an assurance that the Islamic SHARIAT (personal law) law will not be interfered with by the majority community. The protection of the Urdu language and script will also be demanded.

'It is understood that the Congress President has shown his readiness to accept these demands, which he considers are legitimate and just.'

From the above it will be clearly seen that the Congress is a purely political body, and as such, is out of place in interfering in matters external to politics.

The reason why I have requested you to issue a similar statement is because that you happened to be the leader of the Congress organization in this Presidency and are in charge of its future course of action. In addition, you are the leader of the Congress majority party in the legislature, and it is desirable that you clearly appreciate and reiterate the view of the Congress towards religion, and not bring about any measures which contravenes the aims and objects of the Congress

In view of the extracts of statements of the Congress President given above, you will understand that your statement that the Congress cannot give up the programme of the removal of untouchability or give an undertaking not to agitate for reform or justice in regard to matters which touch religion, amounts to nullify the statement of the Congress President.

I may make it plain to you that I do not stand in the way of leaders of the Congress from giving the weight of their support to causes touching religion or society in their personal capacity. But I do not see any justification for the Indian National Congress, which is purely a political body, to take part officially and interfere in religious or socio-religious matters. I may mention here, for instance, that all the Congress organizations in the country are passing resolutions supporting the Temple Entry Proclamation and other purely religious issues which are directly opposed to the statements made by the President and quoted above. As religious and social matters are outside the purview of the Congress, as a purely political body according to Pandit Jawaharlal Nehru, and as the Congress is taking part in religious issues, we, as Sanatanists, second to none in our patriotism, hesitate to join the premier political body in the country, which interferes and is liable to interfere with religious and personal law against its avowed principles.

In view of the above, I trust that you would appreciate the necessity of issuing, in your official capacity, a similar statement that the Congress does not contemplate to interfere in religious or socio-religious matters.

(Sd.) T. S. Ramaswamy Iyer.

Madras, 4th June. 1937

I have read your letter of 3rd June. I have given very careful attention to the extracts you have quoted from Pandit Jawaharlal Neheru's statement. I see, however, nothing in it to alter my attitude or that of the Congress organization of this province in regard to untouchability and the Harijan problems. Kindly take this correspondence as closed.

(Sd) C. Rajagopalachariar.

Madras, 10th June 1937.

I have your letters of the 4th inst. I regret that you should have disposed of my letter summarily without meeting my various arguments in detail in your eagerness to close the correspondence.

I propose therefore to release our correspondence to the press as it concerns a matter of public interest. I trust you will have no objection for the same.

(Sd) T. S. Ramaswamy Aiyer.

Madras, 11th June 1937.

Yours of 10th June, No. 118/37. You are at liberty to publish my letters to you provided that the full letter in every case is published and not only a part. And please publish this also.

(Sd.) C. Rajagopalachariar.

LATE Mr. G. V. GANESA IYER.

An Appreciation.

Mr. N. K. Venkatesam Pantulu, M.A., L.T., Retired Lecturer, Government College, Anantapur, writes:—

I am extremely sorry to hear of the premature demise of Mr G. V. Ganesa Iyer. Until I saw the obituary notice, I did not know that he was the brother of Mr. G. V. Venkatarama Iyer of Tanjore, a good friend of ours. We have lost a useful member of the fold of Sanatana Dharma. His Lalita Sahasranama rendered into Tamil in the columns of Arya Dharma, I read with great interest and I learnt much from the series. I am now reading with great interest his masterly rendering of Muka Panchasati. In fact while I was just thinking of taking up the translation of this great devotional work into Telugu or Tamil, this appeared in Arya Dharma. I hope you will use his manuscript and continue the series in his hallowed memory. You have lost a good and useful collaborator in your hard editorial work of this unique journal, in the starting of which I had a very humble and insignificant share in those old days.

Sanatanists and Politics:—It may matter little whether the Sanatanists join the Congress or keep aloof from politics so long as the aim of the Congress is not to disturb the essential structure of society. The position becomes different when the question upon which the Sanatanists differ from the Congress go to the very roots of human and social relationships, and the entire basis of our living together in society comes within the area of dispute.

The Sanatanists can save their Dharma only if they learn the art of influencing politics. How can they forget that Congress which is divorced from Dharma, is every moment adversely affecting their life and ideals.

குடந்தை ஸ்டடி கிளப்.

நமது நகர் ஸாது சேஷய்யா லைப்ரெரி ஸ்டடி கிளப்பின் ஆதரவில் 12—6—37 சனிக்கிழமை மாலை டவுன் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீமான் எம். ராமராவ் அவர்களின் தலைமையில் கம்பராமாயணகேஸரி ஸ்ரீமான் வி. எஸ். முத்துஸ்வாமி அய்யர் அவர்களால் கைகேயியின் உத்தம குணங்கள் என்பதைப்பற்றி அரியதோர் உபந்யாஸம் செய்யப்பட்டது. ஸ்ரீமான்கள் ஆர். ஸ்வாமிநாத அய்யர், எஸ். மஹாலிங்கய்யர், எஸ். ஸ்ரீநிவாஸய்யர், முதலிய பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான் முத்துஸ்வாமி அய்யர் கைகேயியின்மனது முதலில் பரிசுத்தமாயிருந்தும் பிறகு மாறினதற்குக் காரணம் அவள் ஸ்ரீராமன் மீதும், ராவணனிடம் துன்புறும் தேவர்களின் மீதும், தண்டகாரணிய வாஸிகளான ரிஷிகளின் மீதும் உள்ள கருணைதான் என்றும் தசரதனையும் ஸத்யம் தவறுமற்செய்து சூரியகுல வழியாக சிறந்த லோகங்களை அடைவிக்கச் செய்ததும் அவளுடைய பாக்ய லோகத்தைத் தெரிவிக்கிறதென்றும் இதற்கு மேற்கோளாகவுள்ள பல கம்பராமாயணப் பாட்டுகளின் நயத்தையும் எடுத்துக் காட்டி ஒரு மணி நேரம் பேசினார். அக்கிராஸனரின் விருப்பத்திற்கிணங்க ஸ்ரீமான்கள் ஸ்வாமிநாத வைத்தியநாதர் எச். சுப்புரமும் ஆதரித்துப் பேசினர்கள்.

தலைவர் முடிவுரையில் ஸ்ரீமான் எம். ராமராவ் வால்மீகி ராமாயணத்தில் பல விடங்களில் கைகேயியின் கெட்ட குணங்களே வர்ணிக்கப்பட்டு ஓர்இடத்தில்தான் 'கைகேயீச யசஸ்வினீம்' என்று புகழப்பட்டிருக்கவதால் அவளுடைய உத்தம குணங்களைக் கூற முன் வந்த உபந்யாஸகர் போன்ற பெரியோர்களின் பெருமையை அறிவிக்கிறதென்றும், கைகேயியின் பரிசுத்த மனது அவளுக்கு பால்யத்தில்ஏற்பட்ட ஓர்பிராம்மண சாபத்தால்தான் மாறியது என்றும் துஷ்டர்களைக் காண்பதும் அவர்களோடு சம்பாஷிப்பதும் ஸாதுக்களின் இயற்கை குணத்தை (காட்டுத்தீயினால் எரிக்கப்பட்ட பிரம்பு விதைகள் பிரம்புச் செடிகளை மீண்டும் உண்டுபண்ணாமலே வாழைமரங்களையே உண்டுபண்ணுவதுபோல)மாற்றி கொடியவழிகளிலும்செலுத்திவிடும் என்பதற்கு மந்தரையுடன் சம்பாஷித்ததே போதியசாக்ஷி எனினும் கைகேயியின் உத்தம குணத்தால் தசரதரின் புத்ரவாத்ஸல்யம்,பரதனின் பெருமை,ஹனுமாரின் பௌருஷம், சுக்ரீவ ஸக்யம், லக்ஷ்மணனின் பக்தி, ஸீதையின் பதி விரதம், ராமனின் புஜபல பராக்கிரமம், சத்ருக்களான அரக்கர்களின் நாசம் முதலியன வெளிப்பட்டனவென்றும் கூறினார். ஸ்ரீமான் R. ஸ்வாமிநாதய்யரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இனிது முடிந்தது.

நமது நிருபர்.

காட்டுமன்னார் கோவில் ஸ்ரீ மரகதவல்லிநாச்சியார் ஸம்ப்ரோக்ஷண வைபவம்.

ஸ்ரீ நாதமுனி ஸ்ரீ ஆளவந்தார் இவ்விருவருடைய அவதாரத்தால் பெருமை பெற்ற இத்தலத்தில் நாளது ஈசுவர ஹு வைகாசிமீ 9௨ ஸ்ரீ மரகதவல்லி தேவியாருடைய ஸம்ப்ரோக்ஷண வைபவம் அதிக விமரிசையாக நடந்தேறியது. சென்னையிலுள்ள யதீந்திர ப்ரவண செட்டியார் தர்மத்திலிருந்து நாலு நாள் முன்னதாகவே வேத பாராயணம், திவ்யப்ரபந்தம், ஸ்ரீபாஷ்யம், இதிஹாஸம், புராணம் இவைகளுடைய பாராயணத்திற்கு விஜயம்செய்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ததியாராதனம் செவ்வனே நடத்திவைக்கப் பட்டது, பல திவ்ய தேசங்களிலிருந்து அனேக அத்யாபகர்களும் ப்ரபல பண்டிதர்களும் வந்து அருள் புரிந்தனர். நான்கு நாட்களிலும் பண்டிதர்கள் உபன்யாஸமிருதத்தை வர்ஷித்தனர். ஆயிரக் கணக்கான பக்தகோடிகள் முந்தின இரவே கண்கொட்டாமல் காத்திருந்து அதிகாலையில் நடைபெற்ற ஸ்நாபி அபிஷேகத்தைத் தரிசித்து தாயை வணங்கி ஜன்மஸாபல்யம் பெற்றனர். இந்தியாவில் ஒவ்வொரு பரமாணுதோறும் ஊடுருவிச் சென்றிருக்கும் தெய்வ பக்தியைப் போலிமங்கள் போக்கப் பாடுபடினும் "ஸ்வபாவோ மூர்த்தனிவர்த்ததே" என்கிறபடி இயற்றைவிலகாது.

உபந்யாஸ விவரம்.

8-6-37 மாலை 3½-முதல் அடியேன் பிரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீபெரும்பூதூர் அஷ்டகோத்திரம் ஸ்ரீ உ. வே. கல்யாணவெங்கடாசாரியார் ஸ்வாமிகள் தேவாலய தத்வம் என்னும் விஷயம் பற்றி நன்று உபன்யஸித்தார். திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ உ.வே. பாஷ்யம் ராமாநுஜாசார்யாளால் ஸம்ப்ரோக்ஷண தத்வத்தை விளக்கி உபஸம்ஹாரம் செய்யப்பட்டது.

9-6-37 மைசூர் ஸ்ரீ உ.வே. கோவிந்தய்யங்கார் ஸ்வாமிகளால் ஸ்ரீ நாதமுனி வைபவம் உபந்யஸிக்கப்பட்டது.

10-6-37 காரப்பங்காடு ஸ்ரீ உ-வே. தேசிகவரதாசாரியார் ஸ்வாமிகளால் ஸ்ரீ நாதமுனிகள் அவதாரமும் ஸ்தலவைபவமும் இனிமையாக பசுமரத்தாணிபோல் படியுப்படி விளக்கப்பட்டது

பிறகு தனது சிஷ்யகோடிகளுடன் வேத பாராயண கைங்கர்யத்தை நடத்திவைக்கப் பிரஸன்னமாயிருந்த காஞ்சீபுரம், பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீ ஆளவந்தார் பெருமையை உரையாடி அனைவரையும் ஆனந்தக் கடலில் ஆழ்த்தினர். பலவிடங்களிலிருந்து அனேக தனவான்களும், வைதிகர்களும், ஸேவார்த்திகளும் வந்து கண் களித்து செவிக்குணவு பெற்று சிறப்புற்றேகினர்.

திருவஹீந்த்ரபுரம் சி. உமாமஹேச்வர சாஸ்திரிகள்.

திருவள்ளூரில் காற்றின் லீலை.

த்வஜஸ்தம்பம் தூக்கப்பட்டது.

(நமது விசேஷ நிருபர்)

சென்றவாரம் திருவள்ளூர்ப் பக்கங்களில் காற்றும் மழையும் ஜாஸ்தியாயிருந்ததாயும் பலமாகச் சுழல்காற்றடித்து ஸ்ரீவீரராகவஸ்வாமி தேவஸ்தானத்தின் முன் உள்ள த்வஜஸ்தம்பத்தை பீடத்தை விட்டு அலக்காய்த் தூக்கி தரையில் வைத்துவிட்டதாயும் தெரிவதுடன் ஸ்தம்பத்தில் சேதமில்லாத நிலையில் தூக்கி வைத்தது ஆச்சர்யகரமெனவும் இனி மேல் விசேஷ ஸம்ப்ரோக்ஷணம் ப்ரதிஷ்டை வைபவாதிகள் நடத்தியே த்வஜஸ்தம்பம் நிறுத்தவும் ஏற்படுத்தவேண்டுமெனவும் சொல்லப்படுகிறது. திருவள்ளூர் தேவஸ்தானம் ஜகத்குரு அஹோபிலமடாதிபதி ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் ஆதீனத்திலுள்ளதாகும்.

திருநெல்லிக்காவல்.

ஈசுவர ஹு சித்திரைமீ 16௨ புதன்கிழமை திருநெல்லிக்காவல் ஸ்ரீமங்களாம்பிகா ஸமேத ஸ்ரீநெல்லிவனநாத ஸ்வாமிக்குரூ 5000 வரையில் திருப்பணி செய்தும் மகாகும்பாபிஷேகமும், அன்று மகாபிஷேகமும், மண்டலாபிஷேகம் ஏகாதசி ருத்திரத்துடனும் பிராம்மண சந்தர்ப்பணையும் ஸ்ரீசந்திரசேகரஸ்வாமி வீதி புறப்பாடும் விமரிசையாய் நடந்தது

மன்னார்குடி தாலுகா சேந்தமங்கலம் ஸ்ரீ தர்மசாஸ்தாவுக்கு திருப்பணியும் செய்து ஈசுவர ஹு ஆனிமீ 4௨ குருவாரதினம் கும்பாபிஷேகம் நடந்தும் பிராம்மணசந்தர்ப்பணையும் மஹாபிஷேகமும் நடந்தேறியது.

நாகப்பட்டணம் தாலுகா மாலூர் ஸ்ரீமான் ராமச்சந்திரய்யர்வாள் சாஸ்திரப்ரகாரம் ஆற்றங்கரையில் ஸ்தாபனம் செய்து ஆராதனம் நடத்திவந்த ஸ்ரீகணேசரை ஷை மாலூர் கிராமத்தையும் கிரகமுள்பட வாங்கிய திருவாரூர் ஸ்ரீமான் ஆர். எஸ். சர்மா அவர்கள் திறமையான பாலஸ்போல் வேலைசெய்ததால் ஷை ஸ்ரீகணேசரை எடுத்தும் ஷையார்நண்பர் எழுளூர் சுப்பராய வாத்தியார் குமாரர் விசுவநாதய்யரின் பூர்ண பிரயத்தனத்தால் இடித்து அப்புறப்படுத்திய கொரடாச்சேரி ஸ்ரீமான் வெங்கிட்டருமய்யரையும் சேர்த்துக்கொண்டும் ஷை ஸ்ரீமான் ஆர். எஸ். சர்மா அவர்களின் பொருளுதவியினால் வெட்டாத்தங்கரையின் தென்பாகத்தில் ஸ்ரீமகாகணபதி ஆலயமும் கட்டி. ஈசுவர ஹு ஆனிமீ 5௨ சுக்கிரவாரதினம் சாஸ்திரமுறைப்படி அஷ்டபந்தன கும்பாபிஷேகமும் பிராம்மண சந்தர்ப்பணையும் மஹாபிஷேகமும் மங்களகரமாக நடந்தேறியது. நாளது ஆனிமீ 6௨ முதல் மண்டலாபிஷேகமும் தினசரி பூஜையும் நடந்தேறவும் ஸ்ரீஜெகத்குருவின் பூர்ண அனுக்கிரஹம் பெறவும் அநேககோடி நமஸ்கார புரஸ்ஸரமாக வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என். எஸ். ராமச்சந்திரய்யர்.

சென்னை.

ஏன் கிராப்பு கூடாது? முத்யால்பேட் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா தலைமையில் ஓர் விவாதம் நடைபெற்றது. பலர் யுக்தி யுக்தமாகவும் சாஸ்த்ரோக்தமாகவும் பேசினர். இவ்வாதத்தைக் கேட்கவே பல கிராப்புள்ளவரும் பேச இடமளிக்கப்பட்டது. சிலர் தங்கள் தவறுதலை நேராக ஏற்றுக்கொண்டு காரணங்கூட முடியாமல் தங்களிடம் புகுந்ததை வர்ணித்தனர். சிலர் சௌகரியமென வாதித்தனர். முடிவில் ஓர் மனதாக நிறைவேறியது

ராமாயணங்கள். தெருத்தெருவாக பிராமணர்,ஸ்திரீகள், சூத்ரர் சூத்ரஸ்திரீகள் அனைவரும் ஜீவனார்த்தம் கதை சொல்லுகின்றனர். யதார்த்தமான கதையும் தர்மமும் மருந்துக்குங் கூட கிடையாதென ஆஸ்திகர் பலர் வருவதில்லை. தார்மிகர் ஆதரவும் கிடையாது பாமர ஜனங்கள் மனத்தையும் தனத்தையும் இழுக்க தற்கால நிலைக்கேற்றபடி பேச்சு விஷயம் பாவனைகளும் சிலரால் கூறப்படுகிறது. கன்யமுள்ளோர் இத்தொழிலைவிட வேண்டியகாலமாய் விட்டது. இத்தகைய முறையில் சொந்த முயற்சியாலுமே தான் வருவாய். நமது நிருபர்.

காமாக்ஷியம்மன் கோயிலில் களவு.

காஞ்சியில் சில தினங்களுக்கு முன் ஸ்ரீகாமாக்ஷியம்மன் மூலஸ்தானம் அம்மனுக்கு சாத்தியிருக்கும் திருமங்கல்யம் திருடுபோய்விட்டது மிகவும் துக்கிக்கத்தக்கது. இந்த முக்ய ஆபரண கைங்கர்யத்தை உடனே யாராகிலும் செய்வார்களாக.

ஸத்யவ்ரதன்.

215190

மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

அரிய உபந்யாசம்:—6—6—37உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4—45 மணி முதல் 6—45 வரை திருவல்லிக்கேணி ஸ்ரீவானமாமலை மடத்தில் திருப்பதி சம்ஸ்க்ருத காலேஜ் புரொபஸர் ஸ்ரீ-உ-வே. புரிசை ஆநந்தான் பிள்ளை கிருஷ்ணமாச்சார்ஸ்வாமி "ஸ்ரீவிசிஷ்டாத்வைதம்" எனும் விஷயம் பற்றி மிக அரியதோர் உபந்யாசம் செய்தார். 'விற்பெருவிழவும்' என்ற பாசுரவ்யாக்யானம், த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் இவற்றின் தத்துவங்கள், ச்ருதி ஸ்மிருதிகளில் கூறப்பட்ட பான்மை, ஸ்ரீ பாஷ்யப்ரக்ரியை, ஆழ்வார் கையாண்டது முதலியதுபற்றி நன்கு உபந்யஸித்தார். அநேகர் கேட்டு மகிழ்ந்தனர்.

ஆசார்யர் திரு நக்ஷத்திரம்:—சங்கக்கமிட்டி மெம்பரான ஸ்ரீமான் யஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் ஸ்ரீ அஹோபிலமடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த பரமஹம் ஸைத்யாதி 39வது பட்டம் அழகியசிங்கர் திரு நக்ஷத்திரத்தை 6—6—37உ தம்முடைய நுங்கம்பாக்கம் பங்களாவில் வெகு அழகாக நடத்தினார். முதல் நாளே இயல் முதலிடன ஆரம்பித்து திரு நக்ஷத்திரத்தன்று சம்ப்ரமமாக சாற்றுமறை நடந்தது.

பெரிய மஹானின் பிரிவு:—பரமபதித்த பிரம்மஸ்ரீ தருவை லக்ஷ்மீ நாராயண சாஸ்திரியளின் பிரிவாற்றுமையைக் குறித்து சங்கம், அகில இந்திய பிராஹ்மண மஹாஸபை இவற்றின் ஆதரவில் ஸ்ரீரங்க விலாஸத்தில் 13-6-37 மாலை 5 மணிக்கு ஒருஸபை நடந்தது. அதில் அப்பெரியாரிடம் ஈடுபட்டுள்ள பலர் அன்னாரின் ஆத்மகுணங்களைப்பற்றி மிகவும் விரிவாக எடுத்துரைத்தனர். ஒவ்வொருவரும் கூறுங்காலை கண்கள் நீர் ததும்ப கேட்டவர் உருகுமாறு பேசினர். பெரியார் மஹோற்சவமாக வருடம் ஒருமுறை பத்துநாள் நன்கு பாகவத உபந்யாச சகிதம் கொண்டாடுவதென்றும் மாம்பலத்தில் நடத்த உத்தேசித்திருப்பதுடன் கலந்து செவ்வையாய் நடத்துவதென்றும் ஏகமனதாய் முடிவு செய்யப்பட்டது.

வகுளமாலை:— மாதந்தோறும் வெளிவரும் சங்கப் பத்திரிகை வருடச்சந்தா ரூபாய் ஒன்றே. பத்திராசிரியர் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் யம். ஏ, பி. யல், அட்வகேட். கிடைக்குமிடம் 42. வெங்கடரங்கம் பிள்ளை தெரு திருவல்லிக்கேணி. அனைவரும் ஆதரிக்கவேண்டுவதவசியம்.

ப. ரெ. திருமலை ஐயங்கா

ரொக்கப்பரிசு ரூ. 1300.

நெ. 12 மரங்கள் போட்டி முதற் பரிசு சரியான விடை ரூ. 700 2வது பரிசு 1 தப்புள்ள விடை ரூ. 300.
பிரவேசக்கட்டணம் அணா 4 தான். முடிவு தேதி 10—7—37.

நெ.	வார்த்தைகள்.
1	வா—
2	—ல
3	—த்தி
4	— —கு
5	—ள
6	—ன்னே

விடைகள் கண்டுபிடிக்கும் விதம் :—கீழே காட்டப்பட்டிருக்கிற மரங்கள் பெயர் 17. அதிலிருந்துதான் இப்போட்டிக்கு 6 சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கோடிட்ட இடங்களில் எழுத்துக்களைச் சேர்த்தால் சரியானவிடைவரும். ஒவ்வொரு விடைக்கும் அணா 4 வீதம் தனித்தனியே விடைகளைச்சுத்தமாக எழுதி பிரவேசக்கட்டணத்துடன் M O. ரசீதையுஞ்சேர்த்து 10—7—37-க்குள் வந்துசேரும்படி அனுப்ப வேண்டும். எழுத்துக்கு எழுத்து சரியானவிடைக்கு முதற்பரிசும் ஒரு தப்புள்ள விடைக்கு இரண்டாவது பரிசும் பல சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை முறையே பகிர்ந்து அளிக்கப்படும்.

மரங்கள், பெயர்கள் ஜாபிதா.

1. அத்தி.
2. தெங்கு.
3. கொன்னே.
4. ஆல.
5. நொங்கு.
6. பிலா.
7. சத்தி.
8. புன்னே.
9. கொக்கு.
10. பால.
11. தென்னே.
12. இத்தி.
13. தேக்கு.
14. பலா.
15. நாக்கு.
16. முன்னே.
17. வாகை.

கூட்டல் போட்டி. சரியான விடை ரூ. 300.

● இந்த இடத்தில் 1 முதல் 15 வரை ஒவ்வொரு எண் வீதம் போட்டுக்கூட்டினால் 18 வரவேண்டும். வந்த எண் வரலாம் பூஜ்யம் வரக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை வந்தால் பரிசுத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும். 10—7—1937 க்குள் வந்துசேரும்படி விடைகளை அனுப்பவேண்டும். 12 நெ. போட்டிக்கும் கூட்டல்போட்டிக்கும் மானேஜரின் சரியான விடைகள் 18 சில்போட்ட கவரில் தேவகோட்டை நாட்டுக்கோட்டையார் பாங்கில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. 12 நெ. போடிக்கும் கூட்டல் போட்டிக்கும் பிரவேசக்கட்டணத்தை ஒரே மணியார்டரில் அனுப்பலாம். விடை கூபன்களையும் ஒரே கவரில் அனுப்பலாம். இரண்டு போட்டிகளுக்கும் பரிசுத்தொகை 20—7—1937-க்குள் அனுப்பப்படும்.

மானேஜர் நாக. வெ. ராம நாச்சியப்ப செட்டியார்,
கார்த்திகேசன் நிலையம், தேவகோட்டை,
(இராமனாதபுரம் ஜில்லா).

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.